ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்

உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்

ஆய்வுச்
சிக்கல்களும்
தீர்வுகளும்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600113.

Bibliographical Data

Title	: āyvuc cikkalkaḷum tīrvukaḷum
Publisher & Copy right	: International Institute of Tamil Studies, C.I.T. Campus, Tharamani, Madras-600 113.
Publication No.	: 215
Language	: Tamil
Date of Publication	: December 1995
Edition	: First
Paper used	: 16 kg. Creamwove
Size	: ⅛ Demmy
Printing types	: 10 point
Price	: **Rs. 85/-**
No. of Copies	: 1000 Copies
No. of Pages	: 384 + 8
Printers	: Pavai Printers Private Limited.,
Artist	: P. JEGAN
Subject	: Research Problems and Solutions

வெள்ளி விழா வெளியீடு

பதிப்புரை

''பதினேழு ஆண்டுகளுக்கு முன்னர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைத் தொடங்கிய தமிழ்ச் சான்றோர்கள் வகுத்தளித்த நெறிமுறைகளுள் 'தமிழாராய்ச்சிச் சிக்கல்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்' என்ற கருத்தும் இடம் பெற்றிருந்தது. அந்த அடிப்படையில், நிறுவனம் இந்த நோக்கில் கருத்தரங்கை நடத்தலாம் என்று தீர்மானித்துள்ளது'' (செய்திக் கதிர். உ.த.நி. சுடர். 1. கதிர் 10-11).

அதன் விளைவாக 6.4.88 முதல் 14.3.90 வரை சென்னை, தேவநேயப் பாவாணர் நூலகத்தில் ('தமிழாராய்ச்சிச் சிக்கல்கள்' என்ற) தொடர்க் கருத்தரங்கு நடைபெற்றது. 25 கட்டுரைகள் அங்குப் படிக்கப்பட்டன. இவற்றுள், டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள் இயக்குநராக இருந்தபொழுது நடத்திய கருத்தரங்குகள் 14. அவரது மறைவுக்குப்பின் இயக்குநர் பொறுப்பு ஏற்ற டாக்டர் அன்னிதாமசு இத்தொடர்க் கருத்தரங்கை நடத்தினார்.

இக்கருத்தரங்கில் இடம்பெற்ற அறிஞர்கள், அவ்வத் துறைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். பலரும், தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றவர்கள். எனவே அந்தந்தத் துறைகளில் உள்ள சிக்கல்களைத் தங்கள் பட்டறிவு மூலம் தெரிந்து, அவற்றிற்குரிய தீர்வுகளையும் சொல்லிச் சென்றிருக்கிறார்கள். எனவே தான் 'தமிழாராய்ச்சிச் சிக்கல்கள்' என்ற இக் கருத்தரங்கத் தலைப்பு, இங்கு 'ஆய்வுச் சிக்கல்களும் தீர்வுகளும்' என்று மாற்றி அமைக்கப்பட்டது. இந்தத் துறைகளில் மேலும் ஈடுபாடுகொண்டு ஆய்வுச் செய்யப் புகும் ஆய்வாளர்க்கு இக்கட்டுரைகள் மிக்க பயன் தருபவை. எனவே இதன் பயன் கருதி வெள்ளிவிழா வெளியீடாக, இந்நூல் இப்போது வெளிவருகிறது.

இக்கருத்தரங்கைத் தொடங்கி இத்தகு பயன்மிகு கட்டுரைகள் வெளிவர அடிப்படையாக அமைந்த டாக்டர் க. த. திருநாவுக்கரசு அவர்கள், என்றும் நினைவுக்குரியவர். இக்கருத்தரங்கை அவருக்குப் பிறகு தொடர்ந்து நடத்திய டாக்டர் அன்னி தாமசு அவர்களுக்கும் நன்றி.

சிக்கல்களை நுணுக்கமாகத் தெரிந்துகொண்டு, அவற றிற்குரிய தீர்வுகளையும் சிறப்பாகத் தம் கட்டுரைகளின் வழி வெளிப்படுத்திய கட்டுரையாளர்கள் அனைவரும் போற்று தற்குரியோர்.

நிறுவன நூல்கள் வெளிவர ஆக்கமும் ஊக்கமும் காட்டுகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி அமைச் சர் மற்றும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறைச் செய லாளர் ஆகியோர்க்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

நூலினை அச்சிடுங்கால் அச்சுப் பிழைகளைத் திருத்தம் செய்து உதவிய பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை அவர் களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி.

இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த பாவை அச்சகத்தினர்க்கு நன்றி.

இயக்குநர்

உள்ளுறை

பக்கம்

1. அணி இலக்கணம் 1

முனைவர் இ. சுந்தரமூர்த்தி,
இணைப் பேராசிரியர், தமிழ்மொழித்
துறை, சென்னைப்பல்கலைக்கழகம்.

2. இக்கால இலக்கணம் 15

முனைவர் பொன். கோதண்டராமன்,
தலைவர், தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப்பல்கலைக் கழகம்,

3. ஊர்ப்பெயராய்வு 28

முனைவர் கு. பகவதி,
உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

4. ஒப்பிலக்கியம் 45

முனைவர் அ. அ. மணவாளன்,
தலைவர் தமிழ் மொழித் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

5. களப்பிரர் வரலாறு 54

முனைவர் நடன. காசிநாதன்,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை.

6. காரைக்காலம்மையார் படைப்புகள் 64

முனைவர் வி. சி. சசிவல்லி,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

7. கிறித்தவத் தமிழ் 76

முனைவர் சூ. இன்னாசி,
கிறித்தவத் தமிழ் இலக்கியப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழக்ம்.

8. குழந்தை இலக்கியம் 84

புலவர் அ. அஹ்மது பஷீர்,
கல்லெட் மேனிலைப் பள்ளி, சென்னை.

9. குறுந்தொகை 105

முனைவர் தி. லீலாவதி,
முன்னாள் பேராசிரியர்,
இராணி மேரிக் கல்லூரி, சென்னை.

10. சங்ககால வேந்தர் 117

முனைவர் அரங்க. இராமலிங்கம்,
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
அஞ்சல்வழிப் பள்ளி,
சென்னைப் பல்கலைக்கழகம்

11. சாத்திர நூல்கள் 128

முனைவர் பழ. முத்தப்பன்,
முதல்வர், கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச் சிவபுரி.

12. சுவடிப்பதிப்பு 140

முனைவர் பூ. சுப்பிரமணியம்,
ஆசியவியல் நிறுவனம்.

13. தமிழ் 168

முனைவர் க. த. திருநாவுக்கரசு,
முன்னாள் இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நறுவனம்.

14. தமிழ் நெடுங்கணக்கு 192

முனைவர் க. த. திருநாவுக்கரசு,

15. தமிழும் மலையாளமும் 201

முனைவர் க. த. திருநாவுக்கரசு,

16. திருக்குறளின் காலம் 224

முனைவர் கு. மோகனராசு,
திருக்குறள் மையம்,
சென்னைப்பல்கலைக்கழகம்.

17. திருஞானசம்பந்தர் தேவாரம் 252

முனைவர் பி. எஸ். சோமசுந்தரம்,
துணைமுதல்வர், தமிழ்த்துறைத் தலைவர்,
து. கோ. வைணவக் கல்லூரி, சென்னை.

18. திருமந்திரம் 261

முனைவர் கே. ஆர். நஞ்சுண்டன்,
இயக்குநர் (ஓய்வு), தத்தவ மையம்,
தமிழ்ப்பல்கலைக் கழகம், காஞ்சிபுரம்.

19. திருமுருகாற்றுப்படை 276

முனைவர் மொ. அ. துரையரங்கனார்,
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
மதுரைப்பல்கலைக்கழகம்.

20. திருவாசகம் 295

முனைவர் க. இராசசிங்கம்,

21. நாட்டுப்புற இயல் 307

முனைவர் மா. கோதண்டராமன்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
அஞ்சல் வழிக் கல்வி,
சென்னைப் பல்கலைக்கழகம்

22. நாலாயிரத் திவ்வியபிரபந்தம் 316

முனைவர் ந. சுப்புரெட்டியார்,
தமிழ்ப் பேராசிரியர் &
துறைத் தலைவர் (ஓய்வு),
திருவேங்கடவன் பல்கலைக்கழகம்.

23. புதுக் கவிதை 329

முனைவர் க. அரங்கராசு,
முதுநிலை விரிவுரையாளர்,
அரசுக் கலைக் கல்லூரி,
கோயம்பத்தூர்

24. புனைகதை 346

முனைவர் வி. அரசு,
விரிவுரையாளர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

25. மருதத்திணை 365

முனைவர் வெ. தெ. மாணிக்கம்,
பேராசிரியர், தமிழ்த் துறைத் தலைவர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

1. அணி இலக்கணம்

இ. சுந்தரமூர்த்தி

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பகுக்கப்பெற்றுள்ள ஐவகை இலக்கணங்களும் மொழித் திறனை வளர்க்கப் பயன்படுவன. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் 'உவமவியல்' என்னும் இயலுள் அணியிலக்கணத்தின் இன்றியமையாமையை வற்புறுத்துகின்றது. வேறு சில இடங்களிலும் அணி இலக்கண நுட்பத்தைத் தொல்காப்பியர் கூறுவதைக் காணலாம். உள்ளுறை, இறைச்சி போல்வன அகப்பொருளுக்குரியதாக வரையறைப் படுத்திக் கூறும் நுட்பத்தைக் காணுகின்றோம். பிற்காலத்தே, இதனை அணி வகையினுள் அடக்கினர். ஆனால் தொல்காப்பியர் இதனைப் புலப்பாட்டு நெறியாகவே கொண்டார். தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள ஐவகை இலக்கணக் கூறுகளும் காலப்போக்கில் பெரும் வளர்ச்சியும் மாற்றமும் பெற்று ஒவ்வொரு வகையிலும் பல்வேறு இலக்கண நூல்கள் தோன்றின.

உவமையின் அடிப்படையில் அணியிலக்கணம் தோன்றியதெனினும் வடமொழி மரபின் தாக்கத்தால் அணியிலக்கண நூல்கள் தமிழிலும் பல்கிப் பெருகின. பேராசிரியர் உவமை இயலில், 'இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்கள் சில வற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருட்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல் செய்தாருமுளர் (தொல். உவம. 37 உரை) என்று கூறும் விளக்கம் எண்ணத்தக்கது.

வடமொழியில் தோன்றிய அலங்கார நூல்கள் பலவும் பிற்காலத்தே தோன்றிய தமிழணியிலக்கண நூல்களுக்கு அடிப்படையாய் அமைந்தன. போஜன் என்பவர் இயற்றிய (கி.பி. 1018-1054) **சரஸ்வதிகண்டாபரணமும்**, மம்மபட்டர் (கி.பி. 1100) எழுதிய **காவ்யப்பிரகாசமும்**, இராசன காருய்யன் (கி.பி. 1100-1150) இயற்றிய **லாசித்ய மீமாஞ்**

சையும், வித்யாதரன் (கி.பி. 1282-1327) எழுதிய **ஏகா வளியும்**, ஜயதேவன் (கி.பி. 1200-1300) உரைத்த **சந்திராலோகமும்....**, விசுவநாதன் (கி.பி. 1300-1388) இயற்றிய **சாகித்யதர்ப்பணமும்**, அப்பைய தீட்சிதர் (1520-1593) எழுதிய **சித்திரமீமாஞ்சை, குவலாயனந்தம்** முதலிய நூல்கள் பலவும் தமிழின் அணியிலக்கணக் கோட்பாடு களுக்கு உறுதுணை புரிந்தன என்பர். இவையனைத்திற்கும் முன்னர் தொல்காப்பிய உவமவியல் தோற்றம் எண்ணு தற்குரியது.

அணி நூல்களின் அடிப்படை

தமிழ் அணியிலக்கண நூல்களுள் வீரசோழியம் காலத் தால் முற்பட்டது (கி.பி. 11-ஆம் நூ.). ஐந்திலக்கணம் கூறும் இந்நூலுள் அலங்காரப்படலம் அணியிலக்கணத்தை எடுத்துரைக்கின்றது. தண்டியாசிரியர் கூறிய வண்ணமே இப்படலத்தைக் கூறியுள்ளார் என்பதை 'தண்டி சொன்ன கரைமலி நூலின்படியே உரைப்பன்' (அலங். படலம் 1) என்னும் கூற்று விளக்கும். கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்கார்ம் காவ்யதர்சத்தின் மொழி பெயர்ப்பாகும். காவ்யதர்சத்தைத் தழுவித் தமிழில் தண்டி யலங்காரம் தோன்றியது போன்றே கன்னடத்தில் 'கவிராஜ மார்க்கம்' என்னும் நூலும், சிங்களத்தில் 'ஸிய-பஸ்லகார' என்னும் நூலும் எழுந்தது என்பர். காவ்யதர்சத்தின் மொழிபெயர்ப்பாயினும் தண்டியலங்கார நூலின் சிறப்புப் பாயிரம் இந்நூல் தொல்காப்பிய நெறிகளைப் பின்பற்றி யும், 'வடநூன் வழிமுறை மரபினின் வழாதும்' இயற்றப் பெற்றது என்று கூறும்.

அணியிலக்கணக் கோட்பாடுகளுள் இருவகை நெறிகள் இருந்தமை புலனாகின்றது. ஒன்றினை வடமொழி நூல் களுக்கு முன்னே தோன்றிய தொல்காப்பியக் கோட்பாடு எனக் குறிக்கலாம். பிந்தியதனை வடநூல்களின் அடிப்படை யில் தோன்றிய தண்டியாசிரியர் முதலானோர் கோட்பாடு எனக் குறிக்கலாம். தண்டியாசிரியரின் அணியிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியரைத் தழுவியதாகவும் இருக்க லாம் என்பது அவர்தம் கூற்றாலும் புலனாகின்றது.

உவமை: சொல்லாய்வு

உவமை எனும் சொல் 'உபமா' எனும் வடசொல்லின்

திரிபு என்று சிலர் கருதுவர். உவமை எனும் சொல் குறித்து ஆராய்ந்த அறிஞர் இளையபெருமாள், 'ஒத்தல்' என்பதன் அடி 'ஒவ்' என்பதாகும். இந்த 'ஒவ்' என்னும் அடியானது அகரச்சாரியையும் 'மை' விகுதியையும் பெற்று 'ஒவமை' என ஆகும். பின் இது இரண்டு அம் சாரியைகள் பெற்று 'ஒவமம்' எனத் திரிந்து அதன்பின் ஒகர உகரத் தடுமாற்றத்தால் 'உவமம்' என வழங்கப்பெறும் என்பார். பேராசிரியர் மு.வ. அவர்கள், 'ஒத்தல்' என்ற வினைக்கு ஒவ்வுதல் என்ற வினை அடியும் உண்டு. ''ஒவ்வாயாயுள (பாடல் 75, 167, வகை) என்று புறநானூற்றிலும், பலரிவண் ஒவ்வாய் (பாடல் 75) என்று ஐங்குறுநூற்றிலும் காணப்படும் எதிர் மறை வினையும், ஒக்கும் என்ற பொருளில் வரும் ஒவ்வம் என்ற சொல்லும் இதனை விளக்கும். மை விகுதியும் பெற்று 'ஒவமை' என்ற வடிவத்தையும் ஒருகாலத்தில் பெற்றிருக்க வேண்டும். இகர எகரத் தடுமாற்றத்தில் குறிப்பிட்டதுபோல் ஒதை, ஒடம்பு, ஒணர்வு, ஒதவி, ஒரல், ஓலை, ஒறவு என்ற வடிவங்கள் உகர முதனிலை வடிவங்களாகத் திருத்தப்பட்ட போது ஒவமம் ஒவமை ஆகிய சொற்களும் உவமம் உவமை ஆகிய வடிவத்தைப் பெற்றுப் பிழையற்ற வழக்காக எண்ணப் பட்டிருத்தல் வேண்டும் என்கின்றார் (மு.வரதராசன் 'அணி இலக்கணம்', Prof. Sundaram Pillai Commemoration Volume p. 220). 'உபமா' என்னும் சொல்லினின்றும் தோன்றியது என்பதைவிட ஒப்புமை என்ற சொல்லின் வழியாகப் பிறந்தது என்பதுவே கொள்ளத்தக்கது எனலாம்.

உவமை ஓர் அளவை

உவமை அணியின் கூறு என்று சொல்வதைக் காட்டிலும் தாம் கூற விரும்பும் கருத்திற்காகப் பயன்படுத்தும் ஒரு புலப் பாட்டு நெறி என முன்னையோர் கொண்டனர் போலும். பொருளின் உண்மைத் தன்மையை அறிவதற்கு உவமை அளவைகள் பயன்பட்டன.

''காண்டல் கருதல் உவமம் ஆகமம்
ஆண்டைய அருந்தா பத்தியோடு இயல்பு
ஐதிகம் அபாவம் மீட்சி ஒழிவறிவு
எய்தியுண்டாம் நெறி என்றிவை தம்மால்
பொருளின் உண்மை புலங்கொளள வேண்டும்''

என்று மணிமேகலை (27:9-13) கூறும். அளவையிலக்கணம் கண்ட சிவஞான சித்தியார் சுபக்கமும் இக்கருத்தினை வலியுறுத்திக் கூறுவது காண்க (அளவை 1). உவமையின் பயன் குறித்து எண்ணிய உரையாசிரியர்களும் இரு வகைக் கோட்பாட்டினைக் கொண்டுள்ளனர். (1) உவமையால் புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்பார்க்கு இன்பம் பயத்தலும் இதன் பயன்கள் என்பர். எனவே, உவமை பொருளை விளக்குதற்குப் பயன்பட்ட அளவையாயும் விளங்கியது; மொழியின் முருகியலை உணர்த்தும் அணியாகவும் விளங்கியது என்பது புலனாகும்.

அணியின் தொன்மை

தொல்காப்பியருக்கு முன்னரேயே அணி பற்றிய சிந்தனைகள் இருந்திருக்கக்கூடும் என்பதற்கு அணி இலக்கண மரபுகளைக் கூறும் நூற்பாக்களே 'என்ப', 'மொழிப' எனச் சுட்டுவதைச் சான்று கூறலாம் (தொல். உவம. 2, 4, 24). வடமொழியில் ரிக் வேதத்தில் சொல்லை அழகுபடுத்திக் கூறும் நெறிகளை ஓசையணிகள் (சப்தம்) பொருளணிகள் (அர்த்தம்) எனப் பாகுபடுத்தி உரைப்பதைக் காட்டுவர். பறவைகளை வீழ்த்தியபோது எழுந்த மன உணர்ச்சியை வால்மீகி முனிவர் உணர்த்திய திறமே அணியலங்கார ஆய்விற்கு வழிகோலியது என்பர். யாஸ்கர் உவமையணியின் சொற்களையும் தொகுத்துக் காட்டியுள்ளார். பாணினியும் உவமையின் உறுப்புகளைப் பாகுபடுத்திக் காட்டுகின்றார். இச்செய்திகள் அனைத்தும் மொழி மரபில் நீண்டகாலம் விளங்கிவரும் அணியின் தொன்மையைக் காட்டுவனவாகும்.

அணி மரபு

இடைக்காலத்தே வடமொழியின் தாக்குதலால் அணியிலக்கணம் வகுக்க முனைந்த பலரும் தமிழின் மரபிற்கு ஏற்றவாறு அணயிலக்கணம் வகுக்காது வடநூற் கருத்துக்களை அவ்வாறே தமிழிலும் தந்தனர். எனவே, தமிழ் இலக்கிய மரபோடு இவ்வணியிலக்கண நூல்கள் பொருந்தி வரவில்லை. சான்றாக வீரசோழியம், தண்டியலங்காரம், மாறனலங்காரம் முதலாய நூல்களைக் குறிப்பிடலாம். தமிழ் மரபிற்கு ஏற்றவாறு அணியிலக்கணத்தை அமைத்துக்கொள்ள

முடியாததால் இந்நூலில் காணலாகும் பல மேற்கோள் செய்யுட்களையும் ஆசிரியரே படைத்துக்கொள்ள நேர்ந்தமை இதனை நன்கு வலியுறுத்தும். உவமையொன்றினையே அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் நெறியினின்றும் பிறழ்ந்து காலப்போக்கில் பலநூறு அணிகளைக் கொண்டதாக இவை அமைந்தன. அணி வளர்ச்சிப் போக்கினைப் பின்வருமாறு அமைத்துக்காட்டலாம்.

எண்	நூல்	காலம்	அணிகள் பொருள்	அணிகள் சொல்
1.	தொல்காப்பியம்	கி.மு. 3 அல்லது 4	உவமை, மெய்ப்பாடு	
2.	வீரசோழியம்	கி.பி. 11	35	7
3.	தண்டியலங்காரம்	கி.பி. 12	35	2
4.	மாறனலங்காரம்	கி.பி. 16	64	2
5.	இலக்கணவிளக்கம்	கி.பி. 17	35	2
6.	தொன்னூல்விளக்கம்	கி.பி. 18	30	30
7.	முத்துவீரியம்	கி.பி. 19	58	14
8.	சுவாமிநாதம்	,,	31	23
9.	சந்திராலோகம்	,,	100	2
10.	குவலயாநந்தம்	,,	120	

சுவையணி

இவற்றுள்ளும் தொல்காப்பியர் தனியே ஓர் இயலாக அமைத்த மெய்ப்பாட்டியலைப் பின்னர் வந்த அணி நூலார் சுவையணி எனச் சுருக்கி அமைத்தமை கருதுதற்குரியது. பலவகை அணிகளுக்குள்ளே ஒன்றாக இதனைச் சுருக்கி அமைத்தது குறித்துப் பேராசிரியர் மு.வ. அவர்கள் பின்வருமாறு கூறுவர். "மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியல் என்று தனியே ஓர் இயல் வகுத்து அதன் பல்வகைப் பாகுபாடுகளையும் தெளிவாகக் கூறியிருக்க, இடைக்கால அணியிலக்கண நூலார் அவை அனைத்தையும் ஒருசிறிதும் விளக்காமல் அதற்கு நேர்மாறாகச் சுவையணி என்ற ஒருசிறு அணியாக அடக்கிச்

சுருக்கிக் கூறியதேயாகும்''. இக்கருத்தினால் முறையாகப் பிற்காலத்தே வளர்ந்து விளங்கியிருக்க வேண்டிய மெய்ப்பாட்டியல் கோட்பாடு இடைக்காலத்தே குன்றியமை புலனாகின்றது. சுவை பற்றிய ஆராய்ச்சியும் தமிழியல் ஆய்வில் இன்னும் சரியாக நிகழ்த்தப்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சீவகசிந்தாமணியின் சுவை பற்றிய ஆராய்ச்சியை அறிஞர் வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள் விரிவாக எழுதியிருப்பதாகவும் ஆனால் அவை இன்னும் முழுமையும் வெளிவராமல் இருப்பதாகவும் கூறுவர். இவற்றுள் சில கட்டுரைகள் ஞானசம்பந்தம் இதழில் வந்துள்ளன என்பர் (ம. ரா. போ. குருசாமி, தமிழ் நூல்களின் குறிப்புப் பொருள்: பக். viii).

கலித்தொகைக்கு உரைகண்ட நச்சினார்க்கினியரின் மெய்ப்பாட்டுச் சிந்தனைகள் அந்நூல் முழுவதும் பொதிந்துள்ளதை உரையாசிரியரின் நுட்பத்தால் உணரமுடிகின்றது. தொல்காப்பியத்தில் இவ்வியலுக்கு நச்சரின் உரை கிட்டாத நிலையில் இச்சிந்தனைகள் குறித்து மேலும் ஆராய்வது மெய்ப்பாட்டு அணியியலின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதாகும் (காண்க: இ. சுந்தரமூர்த்தி, நச்சினார்க்கினியரின் மெய்ப்பாட்டுச் சிந்தனைகள், ஆய்வுக்கோவை). கவிதைக்கு மிக இன்றியமையாததான இம்மெய்ப்பாட்டியலைத் தொல்காப்பியர் உவமவியலுக்கு முன்வைத்துப் போற்றினார். சுவையுணர்வு பாடல்களுக்கு உயிர்நாடி போன்றது. சிறப்பாகக் கூத்து நூலிலும் நாடக நூலிலும் இவ்வணியை நன்கு போற்றினர். ஆனால் பிற்காலத்திய அணி நூலோர் சுருங்க உரைத்தனர். வடநூலார் 'ரசம்' எனப் போற்றியுரைக்கும் இதனை மிகச்சுருக்கமான அளவில் தமிழ் அணி நூல்கள் உரைத்தமை குறித்து ஆராய்தல் வேண்டும். மெய்ப்பாட்டியலையும் வடநூலாரின் ரஸக் கோட்பாட்டினையும் இணைத்து ஆராய்வது அணியிலக்கண ஆராய்ச்சியில் சில புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் என்பது திண்ணம். இதுகுறித்துப் பேராசிரியர் பெ. திருஞானசம்பந்தம் அவர்களின் ஆய்வுக்கட்டுரை பெரிதும் குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். (A Study of Rasa — Tolkappiyar and Bharata; Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, 1966, Vol. II).

சொல்லணி

அணிகளுள் பிற்காலத்தே பெருவளர்ச்சியுற்று விளங்கியது சொல்லணியாகும். ஆனால் சொல் விளையாட்டுகள் பொருந்திய இம்மரபு இக்காலத்தே பெரும் வீழ்ச்சியுற்றது என்றே கூறலாம். தண்டியலங்காரம் மாறனலங்காரம் முதலிய அணி நூல்கள் விளக்கியுரைக்கும் கோமுத்திரி, கூடசதுக்கம் முதலிய சித்திரகவிகள் வழக்கிழந்தன. தொன்னூல் விளக்கம் என்னும் நூலினையாத்த வீரமாமுனிவர் இவற்றையெல்லாம் வழக்காற்றில் வழங்காச் சொல்லணிகள் (நூ. 324 உரை) என்றே குறிப்பிடுவது உளங்கொளத்தக்கது. அணியதிகாரத்தில் சில அணிகளை விலக்கி உரைத்திருப்பதும் எண்ணுதற்குரியதாகும்.

தொன்னூல் விளக்கமும், முத்துவீரியமும் முதலில் சொல்லணியையும், பின்னர் பொருளணியையும் விரித்துரைக்கின்றது. வேண்டாத அளவிற்குப் பிற்காலத்தே இவ்வகை அணிகளை அணிநூலார் விரித்துரைத்துள்ளனர். இவ்வணிகளின் பெருக்கத்தை ஆராயும்போது நமக்குப் பல செய்திகள் தெரியவருகின்றன. சிலர் அணிகளைப் பெருக்கியும் சுருக்கியும் உரைத்துள்ளனர். தண்டியலங்காரம் கூறிய 35 பொருளணிகள் மாறனில் 64 ஆகவும் சந்திராலோகத்தில் 100 அணிகளாகவும் குவலயாநந்தத்தில் 120 ஆகவும் விரிகின்றன.

தண்டியாசிரியர் கூறிய நுட்பம் என்னும் அலங்காரம் 'பரிகரத்துள்' அடங்குதலால் அதைக் குறைத்தார். சொல்லிலக்கணத்திலும், பொருளணியிலும், புறத்திணையியலில் கூறியுள்ளதுமான மற்ற அணி நூல்களில் கூறப்படாதனவுமாகிய 'பூட்டுவில்', 'இறைச்சிப் பொருள்கோள்', 'பொருண்மொழி' என்னும் மூன்றையும் செய்யுட்கு அணிசெய்தலால் இவற்றையும் அணியுடன் சேர்த்து மிகுத்தார். வகை முதலடுக்கு, இணையெதுகை, உபாயம், உறுசுவை, புகழ்வதினிகழ்தல் முதலியனவும் அழகு தருவதாயிருத்தலாலும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயங்கும் முறையாலும் இவற்றையும் அணி வகையாக விரித்துரைத்தார். தண்டியாசிரியர் உவம விரியுள் சேர்த்தும், ஏனையோர் வேறு வேறாக இணைத்துமிருக்கின்ற ஐயம், தெரிதரு தேற்றம், பொதுநீங்

குவமை என்பவற்றுள் ஐயத்தையும், தெரிதருதேற்றத்தையும் பிறிதோரணியாக்கிக் கூறியுள்ளார். தன் கோட்கூறலென்னும் உத்தியாலும், தன்குறியிடுதல் என்னும் உத்தியாலும், பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி முடிக்கும் வழி நூலிலக்கணம் பற்றியே இவர் இவ்வாறெல்லாம் விரித்துரைப்பர் என்று கருதுவர் (மாறனலங்காரம், முன்னுரை, பக். 13).

உவமையும் பிற அணிகளும்

தொல்காப்பியர் கூறிய உவமை பிற்காலத்தே வளர்ந்த நிலையை ஆராயும்போது அவ்வுவமையினுள்ளே ஏனைய அணிகளை அமைத்துக்காட்ட முடிகின்றது.

தொல்	தண்டி
வினை பயன் மெய் உரு *(1)*	பண்பு, தொழில், பயன். பண்பினுள் மெய்யும் உருவும் அடங்கும் *(30)*
சுட்டிக் கூறா உவமம் *(7)*	தொகையுவமம் *(31)*
பொருளே உவமம் செய்தனர் மொழியினும் மருளறு சிறப்பின் அஃது உவமமாகும் *(9)*	விபரீத உவமை *(31)*
உவமப்போலி *(24)*	ஒட்டணி *(51)*
வேறுபட வந்த உவமத் தோற்றம் *(32)*	உவமையின் வகை *(31)*
தடுமாறுவமம் *(35)*	ஐயவுவமை, இதரவுவமை *(31)*
அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே *(36)*	சந்தான உவமை *(38)*
நிரனிறுத்தமைத்தல் நிரனிறை *(37)*	நிரனிறையணி *(66)*

எனவே தொல்காப்பியர் புலப்பாட்டு நெறியாகக் கருதும் உவமையே காலந்தோறும் பல்வேறு அணிகளாக விளங்கின என்பது போதரும். அவ்வாறே 'வேறுபடல்' என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கங்களே பிற்காலத்தே உவமை

களாகத் தோற்றம் கொண்டன என்பதைத் தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு ம.நா. சோமசுந்தரம்பிள்ளை எழுதிய குறிப்புரைகள் நன்கு விளக்கும்.

'வேறுபடல்' என்பதற்குப் பேராசிரியர் தரும் விளக்கமும் அதற்கு இணையான உவமைகளும் வருமாறு:

1.	உவமைக்கும் பொருளுக்கும் மாறுபடக்கூறுதல்	விரியுவமை
2.	ஒப்புமை மறுத்துப் பொருளை நாட்டிக் கூறுதல்	உண்மையுவமை
3.	ஒப்புமை மறுத்த வழிப் பிறிதோருவமை நாட்டுதல்	மறுபொருளுவமை
4.	உவமையும் பொருளும் முற்கூறி நிறீஇப் பின்னர் மற்றைய ஒவ்வாவென்றல்	தடையுவமை
5.	உவமைக்கு இருகுணங்கொடுத்துப் பொருளினை வாளாது கூறுங்கால் உவமையினை இரண்டாக்கி ஒன்றற்குக் கூறிய அடை ஒன்றற்குக் கூறாது கூறுதல்	உம்மையுவமை
6.	ஒப்புமை குறைவுபட உவமித்து மற்றொரு குணங்கொடுத்து நிரப்புதல்	இசையுவமை
7.	ஒவ்வாக் கருத்தினால் ஒப்புமை கோடல்	கருத்துவமை
8.	உவமத்திற்கன்றி உவமத்திற்கு ஏதுவாகிய பொருட்குச் அடை கூறி அவ்வடையானே உவமிக்கப்படும் பொருளைச் சிறப்பித்தல்	மோகவுவமை
9.	உவமானத்தினை உவமேயமாக்கியும் அது விலக்கியும் கூறுதல்	விலக்குவமை
10.	இரண்டு பொருளானே வெவ்வேறு கூறியவழி ஒன்று ஒன்றற்கு உவமையென்பது கொள்ள வைத்தல்	வேற்றுப்பொருள் வைப்பு

மேற்கூறிய கருத்துக்களினால் தொல்காப்பியர் உவமையைப் புலப்பாட்டு நெறியாகவே கொண்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது. பேராசிரியர் உவமத் தோற்றம் என்ப

தற்குத் தரும் விளக்கம் எண்ணத்தக்கது. 'உவமத்தை அணி என்றல் கூடாது. சாத்தனிடமிருந்து அவன் அணியும் அணிகளைப் பிரித்துக் காண்பது போலப் பாடல்களிலிருந்து உவமத்தைப் பிரித்துக்காண்டல் இயலாது ஆகலான்' என்னும் அவர் தரும் விளக்கம் தொல்காப்பியர் காலத்தே உவமம் புலப்பாட்டு நெறிகளுள் ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது எனலாம்.

தொல்காப்பியர் உவமையைப் பொருள் புலப்படுத்தும் நெறியாகக் கொண்டதைப் போலவே உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றையும் ஒரு சிறப்புமிக்க கூறாகவே எடுத்துரைத்தார். ஆனால் பிற்காலத்தே ஏனைய அணிகள் பெருவிளக்கம் பெற்றது போல உள்ளுறை இறைச்சி ஆகியவற்றை அணிநூலார் போற்றியுரைக்கவில்லை. குறிப்புப்பொருள் கூறும் இவ்விலக்கணத்தைப் பின்னையோர் போற்றி யுரைக்காதது குறித்து மு.வ. பின்வருமாறு குறிப்பார்.

> ''இடைக்காலத்தில் தமிழில் இலக்கணச் செல்வத்தை வளர்த்துத் தொண்டாற்ற முனைந்தவர்கள் இந்தக் குறிப்புப் பொருள் பற்றி விளக்கி எழுதியிருந்தால் அது பயன்மிகுந்த தொண்டாக விளங்கியிருக்கும்.
>
> .... அவர்களின் தொண்டு தக்க வகையில் அமைந்திருப்பின் இன்று வடமொழி மாணவர் ரசமும் தொனியும் பற்றிப் பல நூல்களின் துணைகொண்டு ஆய்ந்து மகிழ்தல் போல், தமிழ் மாணவர்கள் சுவையும் குறிப்பும் (மெய்ப்பாடும் இறைச்சியும்) பற்றி விரிவாக ஆராய்ந்து மகிழ வாய்ப்பும் அமைந்திருக்கும்''

(Prof. P. Sundaram Pillai Commemoration Volume: 1957)

அணியிலக்கண வரலாற்றில் உள்ளுறை, இறைச்சி குறித்துக் காலந்தோறும் பல்வேறு ஆய்வுரைகள் தோன்றியுள்ளன. உரையாசிரியர்களின் சிந்தனைப் போக்குகளும் பல்வேறுபட்ட வகையினதாக விளங்குகின்றன. தொல்காப்பியர் சொற்களின் பொருண்மை உணர்த்தும் நெறி குறித்து எடுத்துரைக்கும்போது அவை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் இருவகை நெறியில் உணர்த்தும் என்பார் (சொல். பெயரியல் 3). இவற்றின் வளர்ச்சி நிலையே உள்ளுறையும், இறைச்சியும் எனலாம். கால வளர்ச்சியில் சொல் தனக்

குரிய ஒரு பொருளையேயன்றி வேறு பொருளையும் உணர்த்தும். இதனை வடநூலார் 'தொனி' என மிகவும் போற்றியுரைத்து இலக்கணம் செய்துள்ளனர். காப்பியத்திற்கு உயிர் நாடியே இக்குறிப்புப் பொருள் (வியங்கியம்) என்பர்.

''உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்
கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே''

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையாசிரியர்கள் தந்த விளக்கங்கள்தாம் ஆய்வுலகில் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவித்தன. 'உட்புறத்திருப்பது உள்ளுறை' எனவும் 'புறத்திற் கிடப்பது இறைச்சி' எனவும் இதனை மிக எளிமையாக்கிக் கூறுவார் அறிஞர் எஸ். கே. இராமராசன் (தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள் தந்துரை). இதனைப் பிறிதொரு நூலுக்கு வழங்கிய முன்னுரையாலும் அறியமுடியும்.

''வெளிப்படத் தெரியும் **மெய்ப்பாட்டினையும்**
ஒளித்தவண் மணக்கும் **உள்ளுறைத்** திறனையும்
கவிதைக் கப்பால் காணும் பொருளையும்
கண்டு சுவைத்தல் கற்றவர் கடனே!

முத்தினில் ஒளிபோல் முகிழ்த்தசொற் பொருளையும்
மலரினில் மணம்போல் வயங்கும் **உள் நெறையையும்**
மணியினில் ஒலிபோல் மருவும் **தொனியையும்**
கரும்பினுட் சுவைபோல் கலந்தலட் சியத்தையும்
கண்டும் நோக்கியும் கணித்துப் பார்த்தும்
தேறுதல் கடினம்! செப்புதல் அரிதே!

(மு. மு. இஸ்மாயில்: மும்மடங்கு பொலிந்தன நூல் முன்னுரை)

உள்ளுறை, இறைச்சி குறித்த ஆய்வுச் சிக்கல்களைத் தெளிவு படுத்திய தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள் என்னும் நூலும் (ம. ரா. போ. குருசாமி) குறிப்பிடத்தக்கதாகும். இயற்கைக் காட்சி வருணிப்பதைப் போலக் காட்டி, நுட்பமான கருத்தினைக் குறிப்பாகச் சுட்டுகின்ற இலக்கிய உத்திகளே உள்ளுறையும் இறைச்சியும் என்ற அளவிலே நிறுத்திவிட்டால் சிக்கல் எதுவும் இல்லை. ஆயின் உள்ளுறையில் வரும் இயற்கைக் காட்சிக்கும் இறைச்சியில் வரும் இயற்கைக் காட்சிக்கும் வேற்றுமை என்ன என்னும் எண்ணம் எழும் போதுதான் சிக்கல் எழுகின்றது. இச்சிக்கலுக்குரிய தீர்வினை உரையாசிரியர்கள் தொடங்கி இக்காலத் திறனாய்

வாளர் வரை பலரும் ஆய்ந்துள்ளனர். ஆனாலும் ஒரு முடிந்த முடிபினுக்கு இன்னும் வரவில்லை என்பதனை மனத்துள் கொள்ள வேண்டும். ஆனாலும் காலந்தோறும் இச்சிக்கல் பற்றிய ஆய்வுரைகள் இப்பொருளின் நுட்பத்தைக் காட்டும்.

> ''உள்ளுறையுவமமாவது—ஒருவர், தாம் கூறக் கருதிய பொருள் 'இதனோடு ஒத்து முடிதல் வேண்டும்' என்று உட்கொண்டு அதற்கு வேண்டுபவற்றை (கருப்பொருளாக) உள்ளுறுத்தக் கூறுவது. உள்ளுறையுவமம் கருப்பொருள்களுள் தெய்வம் ஒழிந்த பிறபொருள் நிலமாக வரும்; இதனோடு ஒத்துப் பொருள் முடிகென உள்ளுறுத்துரைப்பது என்றதனால் உள்ளுறையானன்றி ஆண்டைப் பொருள் முற்றுப்பெறாது.''
>
> ''இறைச்சியாவது—சொற்பொருளுக்குப் புறத்தாயிருக்கும் பொருள் என்பது... அஃதாவது சொற்பொருளுக்குப் புறத்தே தோன்றும் குறிப்புப்பொருள் இறைச்சி என்பதும் சொற்பொருட்குப் புறத்தே பின்னும் ஒரு பொருள் தோன்றுதல் யாங்கனம் கூடும் எனின், மணியடித்தால் மணியோசையின்பின் நுட்பமாகிய தோரோசை உண்டாதல் போல, கூடும் என்க''

(ரா. வேங்கடராசுலு ரெட்டியார் : தமிழ்ப்பொழில் : 1938)

எனும் மேற்கோள்களைக் காட்டி அவற்றின் வழியே அமைதி காண்பர். இங்ஙனம் இப்பொருள் பற்றிய ஆராய்ச்சி இன்றும் தொடர்ந்து வருவது அதன் நுட்பத்தையும் சிக்கலையும் காட்டும்.

இதுகாறும் கூறியவற்றால்,

அணி நூல்களின் தோற்றம் தொல்காப்பிய நெறியினின்றும் மாறி வளர்ந்த போக்கினைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. பொருள் புலப்பாட்டு நெறியினின்றும் மாறி வெறும் அலங்கார நிலைக்குச் சென்றதால் சொல்லணிகள் முதலாயின காலப்போக்கில் வழக்கு வீழ்ந்தன என்பதும் தெளிவாகும். உவமை எனும் சொல்லாட்சியின் நிலை குறித்தும் காணப்பெற்றது.

முன்னையோர் போற்றி வளர்த்த 'சுவையணி' பிற்காலத்தே போற்றுவாரின்மையினால் வடநூலாரிடம்

இன்று புகழ் பெற்று விளங்கும் 'ரஸம்' கோட்பாடு விரிவாக வளர்ச்சி பெறவில்லை.

உள்ளுறை இறைச்சி ஆகிய தொல்காப்பியரின் சிந்தனையும் நன்கு போற்றிப் பாதுகாக்கப்பெறவில்லை. வடமொழியில் 'தொனி' இலக்கணம் வளர்ச்சிபெற்ற அளவிற்கு இச்சிந்தனை மேலும் தமிழ் நூல்களில் இலக்கண நெறிகளாகக் கொள்ளப்பெறவில்லை. இவைபற்றி இன்னும் ஆராய்வதற்குரிய காலங்கள் நிறையவுள்ளன என்பதனை ஆய்வாளர் மனத்தில் நிறுத்தி மேலும் ஆய்ந்து 'அணியை' அணிபெறச் செய்தல் வேண்டும்.

பயன்பட்ட அணி நூல்கள்

அணியிலக்கணம், விசாகப்பெருமாளையர், கழகம், 1970.

அறுவகை இலக்கணம், தண்டபாணி சுவாமிகள், பேரூர்த் தமிழ்க்கல்லூரி, 1978.

இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர், தாமோதரம் பிள்ளை பதிப்பு, 1889.

உவமான சங்கிரகம், இ. சுந்தரமூர்த்தி, சென்னை, 1981.

குவலயாநந்தம், சங்கர நாராயண சாஸ்திரிகள் (மொ.பெ.), சென்னை, 1895

சந்திராலோகம், முத்துசாமி ஐயங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கம், 1900.

சுவாமிநாதம், செ. வை. சண்முகம், அண்ணாமலைப் பல் கலைக்கழகம், 1975.

தண்டியலங்காரம், கு. சுந்தரமூர்த்தி, திருவிடைமருதூர், 1967.

தண்டியலங்காரசாரம், தி. ஈ. ஸ்ரீநிவாசராகவாசாரியன், 1889.

தண்டியலங்கார வினா-விடை, வ. தங்கையா நாடார், பாளையங்கோட்டை, 1953.

தொல்காப்பியம், பொருள் — பேராசிரியம், கனகசபாபதிப் பிள்ளைப் பதிப்பு. 1935.

தொன்னூல் விளக்கம், வீரமாமுனிவர், சென்னை, 1801.

தொனிவிளக்கு, பிசா சுப்பிரமணிய சாஸ்திரி, திருச்சி, 1944.

மாறனலங்காரம், திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மதுரை, 1889.

முத்துவீரியம், முத்துவீர உபாத்தியாயர், சென்னை, 1929.

வீரசோழியம், கா. ர. கோவிந்தராச முதலியார் பதிப்பு, கழகம், 1970.

பிற

குருசாமி, ம.ரா.போ., **தமிழ் நூல்களில் குறிப்புப்பொருள்**, கோவை, 1980.

சுந்தரமூர்த்தி, இ., **திருக்குறள் அணிநலம்**, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971.

Sankaran, *Some Aspects of Literary Criticism in Sanskrit or the theories of Rasaau Dhvani*, University of Madras, 1973.

Proceedings of the First International Conference Seminar of Tamil Studies, Vol. I, IATR, 1969.

Prof. P. Sundaram Pillai Commemoration Volume, 1957.

2. இக்கால இலக்கணம்

பொன். கோதண்டராமன்

பழைய இலக்கணங்களை ஆசிரியர் உதவியோடும் உரைகளோடும் படித்துப் புரிந்துகொள்கிறோம் என்ற நிலைமை மாறி இலக்கணங்களை ஆராய்கின்ற ஒரு புதிய சூழல் இக்காலத்தில் நிலவி வருகிறது என்பது நாம் மகிழ்ச்சியோடு குறிப்பிடத்தக்க ஒரு செய்தி. இலக்கணங்களை ஆராய்ச்சி செய்ய முற்படுகின்ற இந்தக் காலகட்டத்தில் நாம் பழைய இலக்கணங்களை நன்றாகப் புரிந்துகொள்கின்ற ஒரு வாய்ப்பு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அப்படி இலக்கணங்களைப் புரிந்துகொள்ளும் பொழுது மொழிக்கு எவ்வெவ் காலத்தில் இலக்கணங்கள் தேவைப்படுகின்றன என்பதையும் நாம் உணர்ந்து கொள்கிறோம். வாழ்வில் நாம் பயன்படுத்துகின்ற பொருள்களும் நாம் மேற்கொள்ளுகின்ற பழக்க வழக்கங்களும் நம்முடைய பல்வேறு நடைமுறைகளும் காலந்தோறும் மாறி வருவது போலவே மொழியும் மாறிவருகிறது என்பதை நாம் இப்போது நன்கு உணர்ந்து கொள்கிறோம். நன்னூல் என்றவொரு இலக்கணம் தோன்றிய பிறகு மொழியில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை நாம் எண்ணிப் பார்க்கும்பொழுது இந்தக் காலகட்டத்தில் நமக்கு ஒரு இலக்கணம் தேவை என்பதையும் நாம் உணருகிறோம். இன்றைய நிலையில் இன்றைய தேவைக்கேற்ப ஒரு முழுமையான இலக்கணம் நமக்கு அமையவில்லை என்பதை இப்போது பலரும் உணர்ந்திருக்கிறார்கள். இன்றைக்குத் தேவையான இலக்கணத்தைப் பற்றி நாம் ஆராயும்பொழுது அதில் நாம் எண்ணிப் பார்க்க வேண்டிய சில சிக்கல்களைப் பற்றி இங்கே குறிப்பிட இருக்கிறோம்.

1. எழுத்து நிலை

எழுத்து நிலையில் தமிழில் எத்துணை எழுத்துகள் இருக்கின்றன என்பதைப் பற்றி நம்முடைய மரபிலக்கணங்கள் குறிப்பிட்டிருக்கின்றன. தொல்காப்பியர் உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு, ஆய்தம், குற்றியலிகரம், குற்றிய

லுகரம் ஆகிய சார்பெழுத்துகள் மூன்று என்று எழுத்துக் களை வரிசைப்படுத்தித் தமிழில் முப்பத்து மூன்று எழுத் துகள் உள்ளன என்று குறிப்பிடுகிறார். அதன்பின் வந்த இலக்கணங்கள் எழுத்துகளைப் பல்வேறு முறைகளில் குறிப் பிட்டிருந்தாலும்கூட நாம் இன்றுவரை ஆளுகின்ற வரிவடிவ எழுத்துகள் இருநூற்று நாற்பத்தேழு என்ற அந்த அடிப் படைக் கணக்கு மாறவில்லை என்பதை இங்கே குறிப்பிட லாம். ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ முதலான எழுத்துகள் தமிழ் மொழியில் இடம்பெற்றுப் பயின்று வந்திருந்தாலுங்கூட இலக்கணங்கள் இந்த எழுத்துகளைத் தமிழ் எழுத்துகளாக ஏற்றுக்கொள்ளவில்லை. பல்வேறு மொழியாளர்களும், பல்வேறு நாட்டினரும், பல்வேறு பண்பாட்டாளர்களும் நெருங்கி உறவாடும் இக்கால கட்டத்தில் நாம், ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ முதலான எழுத்துகளைத் தவிர்க்க இயலாத வகை யில் பயன்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். மக்கள் பெயர்களையும் நாட்டின் பெயர்களையும் மொழியின் பெயர்களையும் எழுதும்பொழுது இந்த எழுத்துகள் தவிர்க்க இயலாத நிலையில் ஆளப்பெற்று வருகின்றன. இன்றைய தமிழுக்கு இலக்கணம் படைக்கும்பொழுது இந்த எழுத்து களுக்கும் நாம் உரிய இடம் தர இருக்கிறோமா இல்லையா என்பதைப் பற்றி ஆராய வேண்டியிருக்கிறது. அப்படி இவற்றுக்கு நாம் இடந்தருவோமானால் நம்முடைய மர பிலக்கண முறையில் உள்ள மெய் மயக்கங்கள், மொழி முதல் நிலை, மொழியிறுதிநிலை ஆகியவற்றிலெல்லாம் குறிப்பிடத்தக்க அளவுக்கு மாற்றங்கள் ஏற்படும். அந்த மாற்றங்களைப் பற்றி விரிவாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

2. சந்தி இலக்கண நிலை

சந்தி இலக்கணங்களைப் பொறுத்தவரையில் இன்றைய தமிழில் ஒரு குழப்ப நிலையே உருவாகியிருக்கிறது என்று குறிப்பிடவேண்டும். செய்தித்தாள்களிலும், மாத இதழ் களிலும், வார இதழ்களிலும் வருகின்ற கதைகள், கட்டுரைகள் முதலான எழுத்துகளைப் பார்க்கும்பொழுது சந்தி இலக் கணத்தில் ஒரு குழப்பநிலை இருக்கிறது என்பதை நாம் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். இப்படிக் குழப்பநிலை இருந்தாலுங்கூட தமிழில் எழுதுவோர்க்குச் சரியான வழக்கு எது என்பதைத் தெரிந்துகொள்ள ஆவல் இருக்கிறது என்

பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். தவறில்லாமல் எழுத அவர்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். அவர்களுக்குத் தவறில்லாத வழியில் எழுதுவதற்குரிய வழிகாட்டிகள் இப்பொழுது இல்லாததால்தான் அவர்கள் சந்தி இலக்கணத்தில் இப்படிப்பட்ட பிழைகளை நிகழ்த்துகிறார்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இது ஒருபுறமிருக்க இக்காலத் தமிழுக்கேற்ற சந்தி இலக்கணத்தை நாம் அவர்களுக்கு அறிவிக்க வேண்டியிருக்கிறது. பழங்காலத் தமிழுக்குரிய சந்தி இலக்கணத்தை நாம் இன்றைக்கு வற்புறுத்திப் புகுத்த முடியாது. வழக்கிழந்து போன பழைய சந்தி விதிகளை நாம் விலக்கிவிட்டு இன்றைய தமிழுக்கேற்ற எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தி விதிகளை முறையாக அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அந்த நோக்கத்தில் சந்தி இலக்கணம் அமையும்பொழுது சந்தி இலக்கணத்தில் ஒரு ஒழுங்கு நிலவ வாய்ப்பு ஏற்படும். சிஃறாழிசை, பஃறாழிசை முதலான தொடர்களிலுள்ள சந்தி விதிகளை இக்காலத்தில் நாம் பயன்படுத்த முடியாது. கஃறீது, முஃடீது முதலான தொடர்களில் உள்ள சந்தி விதிகளையும் இக்காலத்தில் நாம் பயன்படுத்த முடியாது. தவிர்க்க இயலாதனவாகவும் தெளிவாக உணர்ந்து கொள்ளத் தக்கனவாகவும் அமைந்துள்ள புதுச்சந்தி விதிகளை முறைப்படுத்தி நாம் வழங்க வேண்டும்.

இந்தச் செய்திகள் ஒருபுறமிருக்க தொகைகளில் நாம் பொதுவிதிகளை உருவாக்க முடியும் என்றாலும் இக்காலத்தில் தோன்றியுள்ள சில புதிய தொகைகள் அந்த விதிகளுக்கு இடந்தராமல் சிக்கல்களை உருவாக்குகின்றன. எடுத்துக்காட்டாக 'மக்கள் தொகை' என்ற தொடர் இலக்கண விதிகளின்படி 'மக்கட் டொகை' என்று ஆகவேண்டும். ஆனால் இன்றைய தமிழில் இப்படிப்பட்ட சந்தி விதியைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடு இருக்கிறது. இதனால் சிலர் 'மக்கட் தொகை' என்று எழுதுவதையும் நாம் பார்க்கிறோம். 'மக்கட்தொகை' என்று எழுதுவதை நாம் அனுமதித்தால் டகர தகர மயக்கத்தை மெய்மயக்கத்தில் அனுமதிக்க வேண்டும். அத்தகைய மெய் மயக்கத்துக்குத் தமிழ் மொழியில் இடமில்லை. எனவே, இப்படிப்பட்ட சூழலில் நாம் 'மக்கள் தொகை' என்பதை எவ்வித சந்தியும் இல்லாமல் எழுத

அனுமதிக்க வேண்டும். இப்படிப்பட்ட சிக்கல்களுக்கு அமைதியாக எண்ணிப்பார்த்துத் தீர்வு காண வேண்டியுள்ளது.

3. சொல்லிலக்கண நிலை

சொல்லிலக்கண நிலையில் ஆராயவேண்டிய எல்லைகள் பல இருப்பினும் எடுத்துக்காட்டுக்கு இங்கே சிலவற்றை மட்டும் குறிப்பிட இருக்கிறோம். தமிழில் உள்ள பால் பகுப்பு முறையைப் பற்றி இங்கே சற்று விரிவாக எண்ணிப் பார்க்கலாம். பழந்தமிழில் உள்ள பால் பகுப்பு முறை நம் எல்லோருக்கும் தெரியும். பால் பகுப்பு முறையில் ஆண் பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐந்து பால்களைப் பற்றி நமது மரபிலக்கணங்கள் பேசியிருக்கின்றன. இந்தப் பால் பகுப்புக்குரிய அடிப்படையை நாம் விளங்கிக்கொண்டால்தான் காலப்போக்கில் பால் பகுப்பில் மாற்றம் ஏற்பட்டால் அதற்கு ஏற்றவாறு பால் பகுப்பை நாம் செம்மை செய்ய வாய்ப்பு ஏற்படும். பழந் தமிழில் இப்படிப் பால் பகுப்பில் ஐந்து வகை அமைத்த தற்குக் காரணம் என்ன? இரண்டு அடிப்படைகளில் இப்படிப் பால் பகுப்பை அமைத்திருக்கிறார்கள். 1. எழுவாய்ப் பயனிலை இயைபுக் கொள்கை. 2. பதிலிடு மாற்றக்கொள்கை. இந்த இரண்டு கொள்கைகளையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். படர்க்கைப் பெயர்கள் எழுவாயாக வரும் பொழுது எந்தப்பெயர் எழுவாயாக வந்தாலும் அதற்கு ஏற்றபடி அமைகின்ற பயனிலைகள் எல்லாவற்றையும் ஒருங்கு தொகுத்துப் பார்த்தால் அந்தப் பயனிலைகள் ஐந்து விதமான விகுதிகளைக் கொண்டு முடிகின்றன. அந்த விகுதிகள் ஆன், ஆள், ஆர், அது, அன என்பனவாம்.

எ-டு.

அவன் இங்கு வந்தான்.
கண்ணன் இங்கு வந்தான்.
அவள் இங்கு வந்தாள்.
மங்கை இங்கு வந்தாள்.
அவர் இங்கு வந்தார்.
புலவர் இங்கு வந்தார்.
அது இங்கு வந்தது.

கிளி இங்கு வந்தது.
அவை இங்கு வந்தன.
மாடுகள் இங்கு வந்தன.

மேற்கண்ட தொடர்களில் நாம் மேலே குறிப்பிட்ட விகுதிகள் பயனிலையில் அமைந்துவரக் காண்கிறோம். தன்மை முன்னிலை தவிர தமிழிலுள்ள எல்லாப் பெயர்களுக்கும் இந்தப் பயனிலை விகுதிகளையே நாம் பயன்படுத்துகிறோம். இதை நாம் எழுவாய்ப் பயனிலை விகுதி என்று குறிப்பிடுகின்றோம். எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அமைய வேண்டும். எழுவாய்க்கு ஏற்ற பயனிலை விகுதி அமைய வேண்டும். இங்கே காணும் இயைப்பை நாம் எழுவாய்ப் பயனிலை இயைபு என்று கூறுகிறோம். இந்த இயைபில் ஐந்து வகையான பகுப்பைக் காண்கிறோம். இந்த ஐந்து வகைக்கு ஏற்றபடியே ஐந்து வகைப் பால்களை நாம் பிரித்திருக்கிறோம்.

பால் என்பதற்குப் பொருள் பகுதி. தமிழில் பால் என்றாலே பகுதி என்று பொருள். இருக்கின்ற பெயர்களையெல்லாம் ஐந்து பகுப்பாக நாம் பிரித்திருக்கிறோம். தமிழில் உள்ள சுட்டுப்பெயர்கள் அவன், அவள், அவர், அது, அவை; இவன், இவள், இவர், இது, இவை என்பன. இந்தச் சுட்டுப்பெயர்கள் படர்க்கைப் பெயர்கள் எல்லாவற்றையும் பதில் மாற்றம் செய்யத்தக்கனவாக அமைந்துள்ளன. அவன் என்ற சொல்லால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் எல்லாம் ஒரு குழுவாகச் சேர்த்து எண்ணத்தக்கன. அதுபோலவே அவள் என்ற பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்க எல்லாப் பெயர்களும் இன்னொரு குழு. அவர் என்ற பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்க பெயர்கள் மூன்றாவது குழு. அது என்ற பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்கவை நான்காவது குழு. அவை என்ற பெயரால் பதில் மாற்றம் செய்யத்தக்கவை ஐந்தாவது குழு. இப்படி அமைந்துள்ள இந்த ஐந்து குழுக்களுக்கும் நாம் பெயர் கொடுக்கும்பொழுது, ஆண் பால், பெண் பால், பலர் பால், ஒன்றன் பால், பலவின் பால் என்று பெயர் கொடுத்திருக்கிறோம். இப்படித் தமிழில் உள்ள பால் பகுப்பு முழுக்க முழுக்க இலக்கண அடிப்படையில்தான் அமைந்திருக்கிறது. இப்படி அமைந்த இந்த இலக்கண அடிப்படை எதிர்பாராத வகையில் இயற்கைப் பால் பகுப்போடு பெரிதும் ஒத்து விளங்கக் காண்கிறோம்.

இந்த அடிப்படையை நாம் விளங்கிக்கொண்டு இக் காலத் தமிழில் உள்ள பால் பகுப்பு பற்றி ஆராயவேண்டும். இக்காலத் தமிழில் சுட்டுப் பெயர்களில் நாம் ஆறு வகையான பெயர்களைக் காண்கிறோம். அவன், அவள், அவர், அவர் கள், அது, அவை. அதைப்போலவே இவன், இவள், இவர், இவர்கள், இது, இவை. இந்தச் சுட்டுப் பெயர்கள் மூலம் படர்க்கைப் பெயர்கள் எல்லாவற்றையும் நாம் பதில் மாற்றம் செய்ய முடியும். இந்தச் சுட்டுப்பெயர்களுக்கு ஏற்றபடியே பயனிலையிலும் விகுதிகள் அமைந்திருக்கின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதைத் தெளிவுபடுத்தும்.

அவன் இங்கு வந்தான்.
கண்ணன் இங்கு வந்தான்.
அவள் இங்கு வந்தாள்.
மங்கை இங்கு வந்தாள்.
அவர் இங்கு வந்தார்.
புலவர் இங்கு வந்தார்.
அவர்கள் இங்கு வந்தார்கள்.
மாணவர்கள் இங்கு வந்தார்கள்.
அது இங்கு வந்தது.
கிளி இங்கு வந்தது.
அவை இங்கு வந்தன.
கிளிகள் இங்கு வந்தன.

இங்கே காட்டிய இந்த எடுத்துக்காட்டுகளின் மூலம் நாம் ஒரு இன்றியமையாத செய்தியை விளங்கிக்கொள்ள வேண் டும். அவர்கள் என்ற சொல்லாட்சி இக்காலத் தமிழில் புதிதாக வந்து சேர்ந்துள்ளது. அவர் என்ற சொல்லுக்குப் பழந்தமிழில் பன்மைப்பொருள் இருந்தது. அவர்கள் என்ற சொல் தொல்காப்பியர் காலத்தில் இல்லை. இன்றைய வழக்கில் அவர் என்ற சொல்லுக்குப் பன்மைப்பொருள் இல்லை: ஒருமைப்பொருள் மட்டுமே உண்டு. பன்மைப் பொருளுக்கு உரிய சொல் அவர்கள் என்பது. நாம் மேலே குறிப்பிட்ட அடிப்படைகளை மனத்தில் கொண்டு இன்றைய நிலையில் இன்றைய தமிழுக்குப் பால் பகுப்பை அமைத் தால் அந்தப் பால் பகுப்பு பின்வருமாறு அமைய வேண்டும்.

ஆண்பால்
பெண்பால்

உயர்பால்
பலர்பால்
ஒன்றன்பால்
பலவின்பால்

அவர், புலவர், ஆசிரியர், அமைச்சர், செயலர் முதலான சொற்களையெல்லாம் நாம் இன்றைய நிலையில் உயர்பால் என்று கொள்ள வேண்டும். பழந்தமிழ் பலர்பாலுக்கே உரியதாக விளங்கிய அவர் என்ற சொல் உயர்வு கருதிச் சில வேளைகளில் ஒருமைக்கும் பயன்பட்டிருக்கிறது. திருக்குறளில் இப்படிப்பட்ட ஆட்சியை நாம் மிகுதியாகக் காண்கிறோம்.

அவர் நெஞ்சு அவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே
நீயெமக் காகா தது

என்பன போன்ற ஆட்சிகளைத் திருக்குறளில் காண்கிறோம். இவ்வாறே இக்காலத் தமிழிலும் அவர்கள் என்ற பலர்பாலுக்குரிய சொல் சில வேளைகளில் உயர்வு ஒருமை கருதி ஒருமைப் பொருளிலும் ஆளப்படுவதைக் காண்கிறோம். இங்கே நாம் கூறிய இந்தச் செய்திகள் எல்லாம் இக்கால இலக்கியத் தமிழுக்கு மட்டுமே உரியன. இக்காலப் பேச்சுத் தமிழுக்கு இந்தப் பால்பகுப்பு பொருந்தாது. இலக்கியத் தமிழில் உள்ள பால்களைவிட பேச்சுத் தமிழில் மிகுதியான பால்களை நாம் குறிப்பிட வேண்டியிருக்கும்.

வினைத்திரிபு

வினைச் சொற்களைப் பொறுத்தவரையில் பழந்தமிழில் இறந்தகாலம் இறப்பு அல்லாத கர்லம் என்ற இரண்டு காலங்களை மட்டுமே நாம் காண்கிறோம். இடைக்காலத் தமிழிலும் பிற்காலத் தமிழிலும் இறப்பு, எதிர்வு, நிகழ்வு ஆகிய மூன்று காலங்களுக்கும் தனித்தனியே இடைநிலைகளை நாம் காண்கிறோம். இக்காலத் தமிழில் இப்படிக் காலங்கள் மூன்றாக அமைந்திருப்பதோடு வேறுசில வினைத் திரிபுகளையும் நாம் காண்கிறோம். துணை வினைகளின் பயன்பாடுகளைக் கொண்டு வினைத்திரிபுகள் வளர்ந்து பெருகியிருப்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இரு, விடு, தொலை முதலான துணை வினைகள் செய்

தென்னும் வினையெச்சத்தோடு சேர்ந்து வந்திருந்தான், வந்து விட்டான், வந்து தொலைந்தான் என்பன போன்ற வினைத் திரிபுகளை உருவாக்குகின்றன. இப்படிப்பட்ட வினைக்கிளவிகளை வினைக் கூறுபாட்டுக் கிளவிகள் என்று குறிப்பிடலாம்.

போ, பார், வேண்டு, கூடு முதலான துணை வினைகள் செயவென் எச்சத்தோடு சேர்ந்து வரப்போகிறது, ஓடப் பார்த்தான், பாடவேண்டும், படிக்க முடியாது முதலான கிளவிகளை உருவாக்குகின்றன. இத்தகைய வினைக் கிளவிகளை நாம் வினை நோக்குக் கிளவிகள் என்று குறிப்பிடலாம். வினைக் கூறுபாட்டுத் துணை வினைகளையும் வினை நோக்குத் துணை வினைகளையும் நாம் விரிவாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒருசில குறிப்பிட்ட துணைவினைகள் மட்டுமே வினைக் கூறுபாட்டுத் துணை வினைகளாகவும் வினை நோக்குத் துணை வினைகளாகவும் பயன்படுகின்றன. எல்லா வினைகளும் இப்படிப் பயன்படுவதில்லை. இந்த வினைகள் இப்படிப் பயன்படும்பொழுது அவற்றுக்குச் சில தனிப்பட்ட இலக்கணப் பொருள்கள் தோன்றி வளர்ந்துள்ளன என்பதை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். இவற்றைப் பற்றி நாம் முழுதாக ஆராய்ந்து வகைப்படுத்தி அவற்றுக்குப் பெயரிட வேண்டும்.

சொல் வகைப்பாடு

நமது மரபிலக்கணங்கள் தமிழிலுள்ள சொற்களை நான்காக வகைப்படுத்தியிருக்கின்றன. பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைகளில் தமிழிலுள்ள எல்லாச் சொற்களையும் அடக்கிக்கொள்ள முடியும் என்ற நிலையில் மரபிலக்கணங்கள் தமிழ்ச் சொற்களை நான்காக வகைப் படுத்தின. இன்றைய நிலையில் அந்த நான்கிலேயே நாம் எல்லாச் சொற்களையும் அடக்கிவிட முடியுமென்று தோன்ற வில்லை. இக்காலத் தமிழுக்கு ஏற்ற வகையில் நாம் புதிய முறையில் சொல் வகைப்பாட்டை அமைக்க வேண்டியிருக் கிறது.

4. தொடரிலக்கண நிலை

தொடரிலக்கணத்தைப் பற்றி ஆங்காங்கே சில குறிப்புகள்

மட்டும் நம்முடைய மரபிலக்கணங்களில் காணப்படுகின்றன. முழுமையான தொடரிலக்கணத்தை நம் மரபிலக்கணங்களில் காண இயலவில்லை. தொடரிலக்கணம் தொடர்பான செய்திகள் இருக்கின்றன என்பதை நாம் மறுக்கவியலாது. ஆனால் முழுமையான தொடரிலக்கணம் அமைந்திருக்கிறது என்று நாம் கூற இயலவில்லை. தொடரிலக்கண ஆராய்ச்சி அண்மைக்காலத்தில் மிக விரிவாக வளர்ந்திருக்கிறது. தமிழ் மொழிக்கு விரிவான தொடரிலக்கணம் அமைய வேண்டுமென்பது ஒருபுறமிருக்க, தொடரிலக்கணத்தில் காணும் சிக்கல்களுக்கு நாம் தீர்வு காணவேண்டும் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

எனக்கு அவரைத் தெரியும்.
அவனுக்குக் கால் வலிக்கிறது.
அவருக்கு என்மேல் கோபமாக இருக்கிறது.

மேற்கண்ட தொடர்களில் எல்லாம் இலக்கண நோக்கில் பார்க்கும்பொழுது எழுவாயைக் காணவில்லை. எழுவாயாக எந்தவொரு சொல்லையும் இங்கே குறிப்பிடுவது பொருந்தாது. இப்படி எழுவாய் இல்லாத தொடர்கள் நமக்கு ஒரு வியப்பை உண்டாக்குகின்றன. இந்தத் தொடர்களை நாம் முழுமையாக ஆராய்ந்து பார்க்கும்பொழுது இலக்கணத்தில் எழுவாய் இல்லாத தொடர்களுக்கு நாம் இடம்தர வேண்டும். இந்தத் தொடர்களில் எழுவாய் இல்லாத நிலைக்கும் தோன்றா எழுவாய் என்ற கோட்பாட்டுக்கும் தொடர்பு இருப்பதுபோலத் தோன்றினாலும் இந்தத் தொடர்களையெல்லாம் தோன்றா எழுவாய்க்குரிய தொடர்கள் என்று கொள்ள முடியாது.

கண்ணன் இங்கு வந்திருந்தார்.
உங்களைப் பார்த்துப் பேச விரும்பினார்..

ஆகிய தொடர்களில் உங்களைப் பார்த்துப் பேச விரும்பினார்' என்ற தொடரில் எழுவாய் காணப்படவில்லை. அதற்கு முன்னுள்ள தொடரிலுள்ள கண்ணன் என்ற எழுவாயே இந்தத் தொடருக்கும் எழுவாயாக அமைகிறது. இந்தத் தொடரில் காணும் இந்த எழுவாயை நாம் தோன்றா எழுவாய் என்று குறிப்பிடுகிறோம். ஆனால் 'எனக்கு அவரைத் தெரியும்' என்ற தொடரில் தோன்றா எழுவாயாக

எந்த எழுவாயையும் குறிப்பிட முடியாது. இங்கே எழுவாய் இல்லாத தொடர்கள் என்று இவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றைப் பற்றி விரிவாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

அல்ல என்ற சொல்லாட்சி

அல்ல என்ற சொல் இக்கால வழக்கில் ஐம்பால் மூவிடப் பொதுவினையாக ஆகிவிட்டது. வேறு, இல்லை, உண்டு முதலான வினைகளைப் போல்வே அல்ல என்பதும் ஐம் பால் மூவிடப் பொதுவினையாக ஆகியுள்ளது.

இந்தப் பாடலை எழுதியது அவனல்ல
இந்தப் பாடலை எழுதியது அவளல்ல
அவர் அழைத்தது உங்களை அல்ல
அவர் கொடுத்தது உங்களுக்கல்ல

மேறகண்ட தொடர்களிலெல்லாம் அல்ல என்பது எவ்வித மாற்றமும் பெறாமல் வேறு இல்லை உண்டு ஆகிய வினை களைப் போலவே பயன்பட்டு வந்துள்ளது. இக்கால வழக் கில் அல்ல என்பதை ஐம்பால் மூவிடப் பொது வினை யாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிக் கொள்ளாமல் அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல ஆகிய திரிபு வடிவங்களை நாம் இப்போது பயன்படுத்த விரும்பினால் அவர்கள் என்ற எழுவாய்க்கு ஏற்றபடி ஒரு வடிவத்தை நாம் உருவாக்க வேண்டும். அப்போது அவர்கள் அல்லர்கள் என்று ஒரு தொடரை உருவாக்க வேண்டும். அந்தத் தொடர் ஏற்றுக்கொள்ளத்தக்க தொடராக இல்லை.

அவன் அல்லன்
அவள் அல்லள்
அவர் அல்லர்
அது அன்று
அவை அல்ல

ஆகிய தொடர்கள் இலக்கியங்களில் நமக்குப் பழகிப்போன தொடர்கள். ஆனால் அவர்கள் என்ற எழுவாய்க்கு ஏற்பப் பயனிலையை அமைக்க வேண்டுமானால்,

அவர்கள் அல்லர்கள்

என்று அமைக்க வேண்டும். இங்கே நாம் வேறொரு செய்தி

யையும் எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. மேற்காட்டிய தொடர்களிலெல்லாம் அவன், அவள், அவர், அவர்கள், அது, அவை முதலானவை எழுவாயாகக் கொள்ளத்தக்கவை தானா என்பதும் ஆராய வேண்டிய செய்தி.

5. இலக்கணமும் மொழிப் பயன்படுத்தமும்

சரியாகவும் தெளிவாகவும் இலக்கணத்தைப் புரிந்து கொண்டு இலக்கணப் பிழை இல்லாத தொடர்களை உருவாக்கத் தெரிந்துகொண்டாலுங்கூட அவற்றை உரிய சூழலில் உரிய முறையில் சரியாகப் பயன்படுத்தினால்தான் தொடர்களால் செய்தியை அறிவிக்க இயலும். கருத்துப் பரிமாற்றம் அப்பொழுதுதான் சரியாக நிகழமுடியும். அப்படியில்லையானால் கருத்துப் பரிமாற்றம் சரியாக நிகழாது. 'இங்கு வந்தது யார்' என்ற வினாவுக்குப் பதில் சொல்லும் பொழுது 'இங்கு வந்தது கண்ணன்' என்ற தொடர் பதிலாக அமையலாம். 'இங்கு வந்தது கண்ணனா' என்று வினா அமைந்தால், 'இங்கு வந்தது கண்ணன்தான்' என்ற தொடர் பதிலாக அமைய வேண்டும். 'இங்கு வந்தது கண்ணன்' என்பதும், 'இங்கு வந்தது கண்ணன்தான்' என்பதும் இலக்கண அமைதிப்படி மிகச் செம்மையாக அமைந்த தொடர்கள்தான் என்றாலும் 'இங்கு வந்தது கண்ணன்' என்ற தொடரை இங்கே பயன்படுத்த வேண்டும். 'இங்கு வந்தது கண்ணன் தான்' என்ற தொடரை எங்கே பயன்படுத்த வேண்டும் என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டால்தான் மொழியைத் திறம்பட ஆள முடியும்.

தனித்தனியே தொடர்களை இலக்கணப் பிழை இல்லாமல் உருவாக்கத் தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. ஒரு தொடருக்கும் அடுத்த தொடருக்குமுள்ள இசைவையும் இயைபையும் உணர்ந்துகொண்டு சரியான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுதுதான் கருத்துப் பரிமாற்றம் சரியாக நடக்க முடியும். ஒரே பொருளில் நான் கைந்து தொடர்கள் அமைக்க முடியும் என்ற சூழலில் எத்தகைய தொடர் எத்தகைய சூழலில் பொருந்தும் என்பதைத் தெரிந்துகொண்டு அந்தத் தொடரைத் தேர்ந்தெடுக்கவும் சரியான இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தவும் தெரிந்து கொண்டு கட்டுக்கோப்பாகச் செய்தியை வழங்கும்பொழுது மொழியை நாம் சரியாகப் பயன்படுத்தியவர்களாகிறோம்.

அப்படியில்லையென்றால் தனித்தனித் தொடர்கள் வெளிப் பட்டிருக்குமே தவிர முழுமையான செய்திப் பரிமாற்றம் நடந் திருக்காது. இப்படிப்பட்ட செய்திகளைக் கற்பிக்கின்ற வகை யில் இலக்கணம் அமைவது பயனுடையதாக இருக்கும். இந்த நோக்கில் மொழிப் பயன்படுத்தம் பற்றி விரிவாக ஆராய்ச்சி நிகழ வேண்டும். அந்த ஆய்வு முடிவுகளைப் பயன்படுத்தி இலக்கணம் அமைந்தால் அந்த இலக்கணம் பயன்பாட்டு நோக்கில் பெரிதும் வரவேற்கத் தக்கதாக இருக்கும்.

6. தரப்படுத்தம்

ஒரே பயன்பாட்டுக்கு அல்லது ஒரே கருத்துக்கு இருவேறு சொற்களை அல்லது இருவேறு தொடர்களைக் காண நேரலாம். அத்தகைய சூழலில் ஒரு தொடர் அல்லது ஒரு சொல்லே சரியென்று கருதப்படக்கூடிய சூழல் அமையும். ஆனால் எல்லா நேரங்களிலும் இரண்டு தொடர்களில் ஒன்றைச் சரியென்றும் ஒன்றைத் தவறு என்றும் கொள்ள முடியாது. இரண்டு தொடர்களும் அல்லது இரண்டு சொற் களுமே கூடச் சரியானவையாக இருக்கலாம். அந்த இரண் டில் எதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவது என்பதற்கு நாம் சரியான வழிமுறைகளைக் கற்பிக்க வேண்டும். எடுத்துக் காட்டாக,

ஊரை	ஊரினை
ஊரால்	ஊரினால்
ஊருக்கு	ஊரினுக்கு

இந்தத் தொடர்களில் எதை நாம் தேர்ந்தெடுத்துக்கொள் ளுவது? ஊரை என்பதும் ஊரினை என்பதும் சரியான சொற்களே. இருப்பினும் இவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டுமானால் எந்த அடிப்படையில் தேர்ந் தெடுத்துக் கொள்ளுவது? இப்படிப்பட்ட சூழல் ஒருபுற மிருக்க, ஒரே சொல்லுக்கு இருவேறு எழுத்துகள் அமைகின்ற நிலையையும் நாம் காண்கிறோம். பழந்தமிழில் இப்படிப் பட்ட சூழலைப் 'போலி' என்பதன்கீழ் அடக்கினார்கள். அன்னை, அஞ்ஞை முதலான சொற்கள் இவற்றுக்கு எடுத்துக் காட்டுகளாகக் காட்டப்படும்.

பழைய இலக்கணங்களிலேயே உறழ்ச்சி முடிபு என்ற ஒரு முடிபைப் பற்றிப் பேசியிருப்பதை நாம் அறிவோம்.

பூஞ்சோலை, பூச்சோலை ஆகிய இரண்டுக்குமே இலக்கணத்தில் இடம் உண்டு. இப்படிப்பட்ட இருவேறு தொடரமைப்புகளை நாம் பார்க்கும்பொழுது இக்கால நிலைக்கேற்ப ஒன்றை நாம் தரப்படுத்த வேண்டியிருக்கும். அல்லது இரண்டையும் ஏற்றுக்கொண்டாலும் ஒருவர் எழுதும்பொழுது ஒரே நெறியை மேற்கொள்ள வேண்டியிருக்கும். நடை நயம் காரணமாகவும் யாப்பு நோக்கிலும் இருவேறு நடைகளை அவ்வப்பொழுது ஒருவரே மேற்கொண்டாலுங்கூட அதை நாம் குறையாகக் கருத முடியாது. இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டு தரப்படுத்தம் செய்ய வேண்டும்.

7. இலக்கண எல்லைகள்

தொல்காப்பியர் காலத்தில் எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம் என இலக்கணம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. பிரிவுகள் மூன்றாக இருந்தாலும் இந்த இலக்கணத்தில் எழுத்திலக்கணம், சந்தியிலக்கணம், சொல்லிலக்கணம், தொடரிலக்கணம், யாப்பிலக்கணம், பொருளிலக்கணம், அணியிலக்கணம், மெய்ப்பாட்டிலக்கணம், பாட்டியலிலக்கணம் ஆகிய எல்லாமே இடம்பெற்றிருந்தன என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இக்கால நோக்கில் இந்த இலக்கணங்கள் எல்லாவற்றையும் இலக்கணத்தில் கொடுக்க வேண்டுமா அல்லது அந்த எல்லையை நாம் மாற்றியமைக்க வேண்டுமா என்பதைக் கருதிப் பார்க்க வேண்டும். மாற்றியமைத்தாலுங்கூட இக்காலச் சூழ்நிலைக்கேற்ப மொழிப் பயன்படுத்தம், மொழிநடை, தரப்படுத்தம் முதலான எல்லைகளையும் இலக்கணத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமா என்பதையும் நாம் ஆராய்ந்து பார்த்து இலக்கண எல்லைகளை முடிவு செய்துகொண்டு ஒரு செம்மையான இலக்கணத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது.

இக்கால மொழி நிலைக்கும் இன்றைய தேவைக்கும் நம்முடைய தமிழ் மக்களின் பயன்பாட்டுக்கும் ஏற்ற வகையில் ஒரு விரிவான இலக்கணம் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமில்லை.

3. ஊர்ப் பெயராய்வு

கு. பகவதி

தமிழாய்வு இந்நூற்றாண்டில் மிகச் சிறப்பாக வளர்ந்து வருகிறது. வளர்ந்து வருகின்ற ஆய்வு, முறைமையும், தோற்ற நிறைவும் பெறவேண்டும் என்ற எண்ணத்தை யுணர்ந்த தமிழர், 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்' என்ற முறையில் இதற்கும் இலக்கணம் வகுக்க முற்பட்டனர். இந்நிலையில் பிறப்புற்றனவே பல தமிழாய்வு நெறி முறைகள் நூல்கள்.

இவ்வாய்வு நெறிமுறைகள் நூல்களில் ஆய்வுப்பொருள் குறித்த எண்ணம் முதன்மையிடம் பெறுகிறது. அறிஞர், பொருள் பற்றிப் பேசும்போது ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப் பொருள் என்று சுட்டுவதுடன், ஆய்வுச் சிக்கல் எனவும் சுட்டுதல் நோக்குதற்குரியது.[1] ஆய்வுகள் ஓரளவிற்குப் பரவலாகச் செய்யப்பட்டு வருகின்ற நிலையில், சிக்கல்களுக்கு இனிமேல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், சிக்கலைத் தலைப்பாக்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்து, ஆய்வில் மேலும் நுணுக்கமும் பயனும் மிகுதிப்பட வேண்டும் எனக் கருதிய மனநிலையில், பிறந்த எண்ணமெனலாம். இங்கு ஒருவினா எழுகிறது. முதுகலை பயின்றவர்கள், அல்லது எம்.பில் அல்லது முனைவர் பட்ட ஆய்வுக்கு என வரும்போது சிக்கலை இனங்காணுதல் இயலுமா? ஒரு துறையில் ஆழ்ந்து பயிலும் போது தானே அதனுள் சிக்கல்கள் இருப்பதை உணர்ந்து கொள்ளுதல் இயலும். எனவே புதியதாகப் படித்து வருகிறவர்கள் இச் சிக்கலைத் தலைப்பாக எடுத்து ஆராய்வது என்பது எந்த அளவிற்கு இயலக் கூடியது என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம். இந்நிலையில் இந்தத் தமிழாய்வு குறித்த சிக்கல்களின் தொடர்க் கருத்தரங்கம் இத்தகைய ஆய்வுத் தொடர்பான நோக்க நிறைவேற்றலுக்கு உதவுவதாக அமையலாம். எனவே, இதுவரையிலும் நடைபெற்ற இக்கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு, தமிழாய்வுச் சிக்கல்கள் குறித்த அறிஞர்களின் கருத்துகளுடன் விடுவிக்கப்பட

வேண்டிய சிக்கல்கள். சிக்கல்கள் விடுவிக்கப்படின் என்னென்ன பயன் விளையலாம் என்பனவற்றையும் தெரிந்து கொள்ள வழிவகுக்கும். இத்தொடரில் தமிழாய்வுத் துறையில் புதியதாக இடம்பெற்று, வளர்ந்துவரும் ஊர்ப்பெயராய்வுச் சிக்கல்கள், இங்குச் சுட்டப்பட இருக்கின்றன.

'வரலாற்றின் எத்துறையும் இத்துறையின்றி முழுமையுறாது' என அறிஞரால் சுட்டப்படும் பெருமைக்குரியன ஊர்ப்பெயர்கள்.[2] வரலாற்றை வெளிப்படுத்தும் குறியீடுகளாக, வரலாற்றுத் தெளிவிற்கு உதவும் வழிகாட்டிகளாக, கருத்துக் களஞ்சியங்களாகக் காணப்படுபவை ஊர்ப்பெயர்கள். சான்றாக, வெளிநாட்டில் காணப்படும் தமிழ்ச் சொல்லால் ஆகிய ஊர்ப்பெயரொன்றினைக் காணும்போது முதலில் நமக்குள் தோன்றும் எண்ணம், தமிழனுக்கும் அவ்வூர்ப் பெயருக்குமுரிய தொடர்பு என்ன என்பதே. பின்னர் அப் பெயர் அங்கு வரக் காரணம் யாது? யார் அப்பெயரை இட்டனர்? எப்போது? அதனருகேயுள்ள பிற பெயர்கள் அப்பெயருடன் தொடர்பு கொண்டனவா? போன்ற அனைத்தையும் ஆராய, தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று செய்திகளும் உண்மைகளும் நமக்குள் நிறைகின்றன. எனவே ஊர்ப்பெயர்கள் மனித வாழ்வோடு தொடர்பு கொண்டவை; இவற்றை அடையாளமாகக் கொண்டு ஆராயின் செய்திகள் கிடைக்கும் என்பது உண்மையாகிறது. அறிஞர் பலரின் கருத்துகளும் இவ்வெண்ணத்திற்குச் சான்றாக நிற்பதையும் நாம் காண்கிறோம்.

ஊர்ப்பெயராய்வு பிற நாடுகளில் மிகச் செழித்து வளர்ந்து உள்ளதை அறிஞர் பலரும் சுட்டுகின்றனர். குறிப்பாக, டாக்டர் கி. நாச்சிமுத்து தம்முடைய இடப்பெயராய்வு நெறிமுறைகள் எனும் கட்டுரையுள், இடப்பெயராய்வு குறித்த மிகச் சிறந்த முன்னுரையைத் தந்துள்ளார். தமிழ்நாட்டில் ஊர்ப்பெயராய்வு எனக் காணின், குறிப்பிட்டுச் சொல்லும் நிலையே தவிர, சிறப்பாகச் சொல்லும் நிலையை இன்னமும் எட்டவில்லை.

தமிழகத்தின் ஊர்ப்பெயர் வரலாற்றைக் காண, கட்டுரைகளில் சி.எம். இராமச்சந்திர செட்டியாரின் கட்டுரை, நூல்களில் இரா.பி. சேதுப்பிள்ளையின் நூல், எம்.பில் பட்ட ஆய்வேட்டில் டி.ஏ. சொக்கலிங்கத்தின் ஆய்வேடு,

முறையான ஆய்வு என்ற நிலையில் எஸ். ஞானமுத்துவின் நூல், முதல் பி.எச்.டி. பட்ட ஆய்வேடு என்ற நிலையில் கி. நாச்சிமுத்துவின் ஆய்வேடு ஆகியன முதன்மையானவையாக அமைகின்றன.[4] தொடர்ந்து மதுரை காமராசர் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் ஆர்வம் காட்டிய காரணத்தினால் பல எம்ஃபில் ஆய்வேடுகளும் நூல்களும் வெளிவந்தன. குறிப்பாக, தாலுகா, மாவட்டம் என்ற நிலையில் இவை அமைந்துள்ளன. தமிழ்க்கல்வி இயக்கத்தின் சார்பில் வெளிவந்த நூல் தமிழக ஊர்ப்பெயர்கள். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மேலும் சிறிது விரிவான பரப்பில், ஒப்பியல் நோக்கில் ஆய்வினைச் செய்து கொண்டு வருகின்றது.

இவ்வூர்ப்பெயராய்வு பற்றி பேசும்போது சிறந்த ஆய்வு, இதுவரையிலும் தொடப்படாத துறை, அறிவியல் சார்பிலான ஆய்வு எனப்பல அறிஞர் சுட்டிச் செல்கின்ற நிலையிலும், இது எதிர்பார்த்த மதிப்பைப் பெறாமைக்குரிய காரணம் என்ன? பல அறிஞர்கள் இத்துறையை நாடாமைக்குரிய காரணம் என்ன? இத்துறை மிகுதியாக வளராமைக்குரிய காரணம் என்ன? எந்தச் சிக்கல் இதன் வளர்ச்சிக்குத் தடையாக உள்ளது. வளர்ச்சியின்மையுடன் ஊர்ப்பெயர்களை ஆய்வு செய்வது ஓர் ஆய்வா? என்ற வினாக்களும் அறிஞர்களிடையே காணப்படுகின்றன. இவ்வாய்வு பற்றிய தெளிவின்மையும், இதன் எளிமைத் தோற்றமும், எத்துறை சார்புடையது இவ்வாய்வு என்று முடிவிற்கு வரவும் தடையாக உள்ளது.

ஊர்ப்பெயராய்வின் புறத்தே இச்சிக்கல்கள் அமைய, ஆய்வினுள் நுழையும் போது நம்மை வரவேற்கும் சிக்கல்கள் மிகுதியாக அமைகின்றன. இடப்பெயராய்வு நெறிமுறைகளாக ஊர்ப்பெயர்களைத் தொகுத்தல், செய்திகள் சேகரித்தல், அடையாளம் காணுதல், விளக்குதல், வெளியிடுதல் என்பவற்றைச் சுட்டுவர். இந்த ஒவ்வொரு படியிலும் நாம் செல்லும்போது, நம்மைச் சூழ்வன பல ஐயங்கள். இவற்றை ஒவ்வொன்றாக ஆராய்ந்து அச்சிக்கல்களை நாம் விலக்க வேண்டியவர்களாக அமைகின்றோம். அப்போதுதான் நாம் எண்ணிய எண்ணம் நிறைவேற வாய்ப்பு அமையும்.

புறத்தேயும், அகத்தேயும் உள்ள சிக்கல்களை அகற்றிவிட்டு, மேலும் செல்லும்போது இப்பெயர்கள் நமக்குத் தந்த

உண்மைகளைத் தெளிவாக இனங்காட்டும் போதும், ஊர்ப் பெயர்களைத் திட்டமிடும்போதும் மேலும் பல சிக்கல்கள் அமைகின்றன. இங்குச் சுட்டப்பட இருக்கும் சிக்கல்களைத் தவிர, ஊர்ப்பெயர்கள் தொடர்பான மேலும் ஆழமான ஆய்வு மேலும் பல சிக்கல்களை இனங்காட்டலாம். இங்கு ஒருசில சிக்கல்கள் இனங்காட்டப்பட்டு, அவற்றை நீக்கு தலுக்குரிய சில எண்ணங்களும் சுட்டப்படுகின்றன.

1. சரியான மதிப்பு பெறாமை இத்துறை வளராமைக் குரியதொரு காரணம். இச்சிக்கலைத் தீர்ப்பது எவ்வாறு என்ற வினா முதற்சிக்கல். இங்குத் திரு. கி. நாச்சிமுத்துவின் கருத்தைக் காணுதல் தேவை. 'கற்றவரிடமும் கல்லாதவரிட மும் இடப் பெயராய்வினைப் பற்றித் தவறான கருத்துகள் உள்ளன. இடப்பெயராய்வு என்பது ஒரு பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே அதனை விளக்க, சொற்பொருள் விரிப் பதோ கதை சொல்வதோ செய்யும் சாதாரண வேலை என்று நினைக்கிறார்கள். இரண்டாவது இப்பெயராய்வு பெரும்பயனற்ற பொழுதுபோக்கும் சொல் விளையாட்டு என்றும் நினைக்கிறார்கள். இத்தப்பெண்ணங்களுக்குக் கார ணம் இவ்வாய்வில் இதுவரை ஈடுபட்டிருந்த பொழுதுபோக்கு ஆய்வாளர்களின் செயல்களால் இவ்வாய்வு தந்த எளிமைத் தோற்றமும் இவ்வாய்வின் முறைகளைப் பற்றிய அறிவின்மை யும் ஆகும்' என்கின்ற போது இவ்வாய்வு சிக்கலுக்குரிய தொரு காரணம் கிடைக்கிறது. இடப்பெயராய்வின் பயன் பற்றிய தெளிவு இன்மை ஒரு காரணம் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது; ஊர்ப்பெயராய்வாளர்கள் சரியாக ஈடுபடவில்லை என்பதும் ஓரளவிற்கு உண்மை. எனினும் முழுமையான தவறு அவர்களுடையது என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது அன்று. ஏனெனில், இவ்வாய்வு தனி மனிதனால் குறுகிய காலத்தில் செய்யப்படக் கூடியது அல்ல.[5] செய்யினும் முழுமையான முடிவுகளைத் தரும் அளவிற்கு எளிதாகச் செய்யக்கூடியது அல்ல; வாய்ப்பும் வசதியும் இன்மை, முழு நிலையான பயன்களைத் தர இயலாமல் செய்து விட்டிருக்கலாம். இருப்பினும், ஆய்வாளர்களும் சிறிது தீவிரமாக ஆராய்வது தேவை. தொகுப்பாக அல்லது ஊர்ப்பெயர் விளக்கம் மட்டுமே சொல்லிச் செல்லாது இவ்விளக்கம் தரும் உண்மைகள் தமிழரின் வாழ்வியலைப் பற்றியோ, தமிழகத்தைப் பற்றியோ, தமிழ் மொழி பற்

றியோ இருக்கலாம். அவை என்னென்ன என்ற கோணத்தில் தம் கருத்துகளை இறுதியில் தரவேண்டும். இவ்வாறு ஊர்ப்பெயராய்வாளர் அனைவரும் தரும்போது அவற்றைத் தொகுத்து, சில முடிவுகளைக் கொள்ளுதல் இயலலாம். இவற்றைக் கொண்டு பல துறைகளையும் இத்துறை வெளிப்படுத்தும் பாங்கினையும் உலகுக்குத் தெரிவிக்கவியலும்.

2. இவ்வாய்வின் எளிமைத் தோற்றம், இவ்வாய்வினை எத்துறையில் இணைப்பது என்ற முடிவினைக் கூடச் செய்ய விடாமல் ஆக்கியுள்ளதைக் காண்கிறோம். வரலாற்றை, பண்பாட்டை, மக்களின் சமூகவியலை, வாழ்வியலை, நிலவியலை, மொழியியலை வெளிப்படுத்தும் நிலையில், இது வரலாற்றுத் துறையினதா, சமூகவியல் சார்புடையதா, பண்பாட்டுத் துறைச் சார்புடையதா, புவியியல் துறையினதா என்ற கேள்வி எழுகிறது. பிற நாடுகளில் மொழித் துறையிலும், தனித்துறையாகவும் இப்பெயராய்வு நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலும் பெரும்பாலான ஆய்வுகள் இலக்கியத் துறையின் சார்பில் வெளிவந்துள்ளதைக் காண்கிறோம். புவியியல் துறையின் சார்பில் அண்மையில் ஓர் ஆய்வேடு வெளிவந்துள்ளது.[6] மேலும், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள தமிழியல் ஆய்வு நூலில், முனைவர் பட்ட எம்ஃபில் ஆய்வேடுகள் தொகுக்கப்பட்டு, வகைப்படுத்தப் பட்டு வெளியிடப்பட்டுள்ளன. எம்.ஃபில். பட்ட ஊர்ப் பெயராய்வுகளும், முனைவர்பட்ட ஆய்வேடுகளும் பெயராய்வு என்னும் பகுப்பில் சுட்டப்பட்டுள்ளன. எனவே, பல துறையையும் இவ்வாய்வு வெளிப்படுத்தும் பாங்கு படைத்த காரணத்தால் பிற நாடுகளில் தனிப்பட்ட முறையில் இயங்கும் பெயராய்வுத் துறை போன்று இங்கும் தனித்துறையாகக் கருதப்படும்போது, இத்தகைய சிக்கல் மறைந்து இதன் மதிப்பும் புலனாகும்.

3. கடினமான உழைப்புத் தேவைப்படும் தன்மையை உணராது இப்பெயராய்வினை எளிமையாகக் கருதும் தன்மை. அதுவே இதன் இன்னொரு சிக்கலாக அமைகிறது என்றும் கூறலாம்.

தெளிவான ஊர்ப்பெயர் ஒன்றினை மேலோட்டமாகப் பார்க்க, அதன் பொருள் தெளிவாகத் தெரியும் நிலையில்,

அது வரலாற்றுக்கு உதவும் தன்மை எளிதில் புலனாவது இல்லை. ஆயின் அப்பெயரை ஆழமாக நோக்க, அதன்பல கோணங்களும் பார்க்கப்பட வேண்டிய சூழ்நிலை ஆய்வின் அருமைப்பாட்டை விளக்கும் அதே நேரத்தில், புதிய உண்மை களை இனங்காட்டவும் வல்லதாக அமைவதைக் காணலாம். சான்றாக 'இலங்கை' என்ற பெயரை எடுத்துக் கொள்ளும் ஆய்வாளர்கள் இலங்குதல் அல்லது தீவு என்ற பொருளில் இப்பெயர் அமைந்ததாக எளிதில் சுட்டிச் சென்று விடுவர். ஆயின் இப்பெயரின் தோற்றம், இத்தீவின் பிறபெயர்கள், இப்பெயர் தமிழ்ப்பெயரா வடமொழிப் பெயரா? வடமொழிப் பெயர் எனில் எப்போது வந்தது; தமிழகத்துக்கு அருகில் உள்ள இத்தீவின் முதன்மை பெயர்கள் என்னென்ன போன்ற பல செய்திகளை நோக்கும் சிந்தனை எழும்போது இதன் அருமையும், இத்தீவின் முதல் பெயர், அது காட்டும் பிற செய்திகள் அனைத்தும் புலனாகும். எனவே, கி. நாச்சி முத்து கூறுவது போன்று ஊர்ப்பெயரை மேம்போக்காகப் பார்த்து, அதைப்பற்றி எழுதும்போது அது சொல் விளை யாட்டு போன்றே தோற்றம் தரும். ஆயின் அப்பெயரை வரலாற்று நோக்கில் ஆயும்போது அதன் ஆழம் மிகை யானது. எனவே ஆய்வாளர்கள் உண்மை காணும் முயற்சி யில் இறங்கி ஆயும்போது இப்பெயராய்வின் சிறப்பு வெளி வர வாய்ப்பு அமையும்.

4. ஊர்ப்பெயர் ஆய்வு முறைகளுள் முதலில் தொகுத் தல் அமைகிறது. எந்த மூலங்கள், தொகுத்தலுக்கு உதவும் என்பதை அறிஞர் தெளிவாகவும் விளக்கமாகவும் சுட்டிச் சென்று உள்ளனர்.[8] களப்பணி இன்றியமையாத இடம் வகிக்கும் நிலையில், தமிழகத்தின் ஆய்வாளர் ஆய்வில் முழுமையடைய இயலாத நிலைக்குக் காரணம் சரியான ஆதரவு இன்மை, பொருளாதாரப் பற்றாக்குறை இவையே யாகும். அனைத்து மூலங்களும் ஒவ்வொரு ஊர்ப் பெயராய் வுக்கும் தேவைப்படும் தன்மை சுட்டத்தக்கது. மேலும், உதவி யாளர் கூட இல்லாத ஆய்வாளர்களும், ஊக்குவிப்பு இல் லாத ஆய்வாளர்களும் திரு. கி. நாச்சிமுத்து கூறுவது போன்று ஆழமான ஆய்வினை எண்ணுவது இயலக்கூடியதா என்ற எண்ணம் எழுகிறது. 'கள ஆய்வாளராக'ப் பலர் வேண்டு மானாலும் ஒத்துழைக்கலாம்; இன்ன தகுதியுடையார் என வரம்பு ஒன்றுமில்லை. எடுத்துக்காட்டாக, ஸ்காட்டிஷ்

இடப்பெயர் அளவை யாய்வில் 'பல்கலைக் கழகத் துணை வேந்தர், தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உழவர்கள், வன அதிகாரிகள், வீட்டுப் பெண்கள், வங்கியாளர்கள், பள்ளிக் குழந்தைகள், காவல் துறையினர் முதலிய 116 பேர் மிகத் திறமையாக ஈடுபட்டு உதவுகின்றனர். அவரவர் ஆர்வம், உழைப்பு, கூர்த்த அறிவு இவற்றிற்கேற்ப இவர்கள் திரட்டும் செய்திகளின் தன்மை சிறந்து விளங்குகிறதே ஒழிய இவர்களின் சமூக அந்தஸ்திற்கும் கள ஆய்விற்கும் யாதொரு தொடர்புமில்லை'[9] என்கின்ற இவரது எண்ணம், தனிமனித சாதனைக்கு அப்பாற்பட்டது இவ்வாய்வு; கூட்டு முயற்சியே இதனை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்ல வல்லது. எனவே இதன்மேல் மேலும் பல அறிஞர்களின் பார்வை படும்போதே இத்துறை மேலும் முன்னேற்றமடைதல் என்பது இயலக்கூடியது என்பதைச் சுட்டுவதாக அமைகிறது.

5. நெறிமுறைகளில் இரண்டாவதாக அமைவது ஊர்ப் பெயர்களை விளக்குதல் என்பதாகும். ஊர்ப்பெயர் தொடர்பான செய்திகள் அனைத்தையும் தொகுத்து விட்டு, பின்னர் விளக்குதலுக்கு வரும்போது அவை தொகுப்பாக அமையக் கூடாது. உண்மையை அலசி ஆராய்ந்து, பின்னர் தோற்றக் காரணம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை ஆய்வாளர் புரிந்துகொண்டு செயற்பட வேண்டும். ஊர்ப்பெயர்களுக்குக் கற்பனை, புராணச் சார்பு காட்டுதல், மேலோட்டமான பொருட் சுட்டுதல் இவை களையப்பட வேண்டும். அவ்வூர் அமைந்திருக்கும் இடம், சூழல், தோற்றக் காலம், சமயம், மக்கள் அனைத்தையும் உற்றுநோக்க வேண்டும். கல்வெட்டுச் செய்திகள், நோக்கப்பட வேண்டும். பின்னரே அப்பெயரின் தோற்றக் காரணம் குறித்த முடிவுக்கு வரவேண்டும். பல பெயர்களைக் கொண்ட ஊர்ப்பெயர் எனில் எது முதல் பெயர், பிற பெயர்கள் எப்போது, எவ்வாறு தோற்றம் பெற்றன போன்ற அனைத்தையும் சுட்ட வேண்டும். ஊர்ப்பெயரில் தொகுத்த செய்திகள் அனைத்தையும் சுட்டாது எந்தெந்த செய்திகள் ஊர்ப்பெயர்த் தோற்றக் காரணத்திற்கு விளக்கம் அளிக்கின்றதோ அவற்றைப் பற்றி மட்டும் விளக்கினால் போதுமானது. சான்றாக ஒரு சில ஊர்ப்பெயர்களைக் காணலாம். கண்ணார் கோயில் என்று பக்தி இலக்கியங்களில் சுட்டப்பட்ட ஊர் குறுமாணக்குடி

என்ற பெயரில் இன்று வழங்கப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர் இது. இவ்விரு பெயர்களில் எது முதல் பெயர் ஏன் இப்பெயர்கள் பெற்றது என்ற கேள்விகட்கு இலக்கியம், கல்வெட்டுகள், செவிவழிச் செய்திகள் சில விளக்கங்களை அளிக்கின்றன.

இந்திரன் சாபம் நீங்கப் பெற்றத் தலம். இறைவன் கண்ணாயிரநாதர், தீர்த்தம், இந்திர தீர்த்தம் போன்ற எண்ணங்கள் இத்தலத்துடன் இந்திரனுக்குரிய தொடர்பு காட்டும் நிலையில் அமைகின்றன. மேலும் மாவலிபால் சென்று மூவடி மண் கேட்ட வாமன மூர்த்தி ஆகிய குறுமாணி வழிபட்டமையில் பெற்ற பெயர் என்றும் அறிகின்றோம். இதனை நோக்க, திருக்கண்ணார் கோயில் என்பது சிவன் கோயில் சிறப்புக்காரணமாக ஊர்ப்பெயராக அமைந்தது. எனினும் இதன் பழம்பெயர் இப்போதைய பெயரே எனத் தோன்றுகிறது. இப்பெயர் பற்றி நோக்கும் போது இன்று குருமாணக்குடி எனச் சுட்டப்படினும், கல்வெட்டில் குருவாணியக் குடி என்ற பெயர் காணப்படுவதை நோக்க வாணியர்கள் நிறைந்த இடம் என்ற பெயரில் அமைந்த வாணியக் குடி என்ற பெயர் சிறு கிராமத்தைக் குறிக்கும் நிலையில் குறுவாணியக்குடி என்றழைக்கப்பட்டு, குறுமாணக் குடி என்று திரிந்து வழங்கப்படுகிறது எனல் பொருந்தும்.'10

இக்கருத்துகள் ஓரளவிற்குச் செய்திகள் கிடைத்த நிலையால் அமைந்தவை. மேலும் இவ்வூர்ப் பற்றிய செய்திகள் ஆழமாக ஆராயப்படும்போது இன்னமும் இவ்வூர்ப்பெயர் பற்றிய விளக்கம் கிடைக்கலாம். எனினும் புராணக் கதைகளும், கற்பனைகளும் மேலும் ஆய்விற்குரியன என்பது புலப்படும் ஒரு கருத்தாகும். மேலும் விளக்கம் என்னும் பகுதியில், ஆய்விற்குரியனவாக அமைவன அமைப்பு முறைகள், ஊர்ப்பெயர்களில் பொதுக்கூறு சிறப்புக்கூறு இணைந்த பெயர்களுடன், முன் அடை பின் அடை இணைந்த பெயர்களுடன், தனிப் பெயர்களாகவும் பல உள. இப்பெயர்களுள் தனிப் பெயர்களாக அமைகின்றனவற்றைக் காண இவை தனியே தோற்றம் பெற்றும், மருவியும் வழங்கும் நிலை காணப்படுகின்றன. எனவே இப்பெயர்களின் உண்மை காணுதல் அரிதான செயலாக அமைகிறது. எனினும் இவ்வூர்ப் பெயர்கள் வழங்கப்படும் முறைகள், வரலாறு முதலி

யன கொண்டு உண்மை உணர முற்படுதல் முறையானது. சான்றாக இலங்கையின் இன்னொரு பெயரான ஈழம் என்பது எவ்வாறு பெயர் பெற்றது. மதுரை ஈழம் என்று சுட்டப் படும் பெயரில் அமையும் ஈழம் என்பது எந்த இடத்தைக் குறிப்பது? போன்ற எண்ணத்தை நோக்கலாம்.

இலங்கையின் மற்றொரு பெயராக அமையும் ஈழம் என்பது நெல், பொன், கள், ஈழு என்னும் மொழி, போன்ற பல காரணங்களால் பெயர் பெற்றதாகச் சுட்டுவர்.[11] எனவே இது தமிழ்ப் பெயர் என்பது பரவலாக அறிஞர் சுட்டும் எண்ணம். இப்பெயர் தமிழகத்தில் காணப்படும் போது இதற்கு விளக்கம் அளிக்கும் அறிஞர்கள் 'மதுரை ஈழத்துப்பூதன் தேவனார்', மதுரையில் வாழ்ந்த ஈழநாட் டைச் சார்ந்த பூதன் தேவனார் எனப்•பொருள் கூறுவதைக் காண்கிறோம். எனவே ஈழம் இங்கே இலங்கையைக் குறிக் கும் என்பது அறிஞர் தரும் விளக்கம்.[12] ஆயின், ஒரே ஊர்ப்பெயர் பல இடங்களில் இருக்கும்போது அவற்றைத் தனிப்படுத்துவது அதன் அருகாமையில் உள்ள பெரிய நகரைக் கொண்டுதான் என்பது ஊர்ப்பெயர் வரலாறு காட்டும் உண்மை. இன்று பாலக்காட்டு சித்தூர், ஆந்திர சித்தூர் என்றும், திருநெல்வேலி குற்றாலம், தஞ்சாவூர் குத்தாலம் என்றும், வேறுபடுத்துவது போன்று அன்று இலங்கை ஈழம் மதுரை ஈழம் என வேறுபடுத்தியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. 'இலங்கை ஈழத்துக் கலந்தரு செப்பு' என்பது பெருங்கதை தரும் எண்ணமாகும்.

எனவே மதுரை ஈழம் மதுரையில் இருந்த ஓர் ஊரின் பெயர் என்பது மேலும் பொருத்தமாகலாம். மேலும் இலங்கை என்ற பெயர் தமிழகத்தில் மாவிலங்கை என்ற ஊர்ப் பெயரில் இருப்பது போன்று ஈழம் என்ற பெயரும் தமிழகத் தில் இருக்க வாய்ப்பு உண்டு.

ஈழம் என்னும் கூறு பிறநாடுகளில் இருப்பதாகவும் அறிகின்ற போது[13] தமிழகத்திலும் இப்பெயர் இருந்திருக்க வாய்ப்பு அமைகிறது. எனவே இன்னமும் இந்தக் கோணத் தில், அதாவது மதுரையில் இப்போது ஈழம் என்ற பெய ருடைய ஊர் இருக்கின்றதா? மதுரை ஈழம் என்று சொல் வதை இன்று அடையாளம் காணமுடியுமா? எருக்காட்டூர் ஈழம் என கல்வெட்டு சொல்லும் குறிப்பு ஒன்றினைக்

காண, இது இந்த இரண்டு ஈழத்தினின்றும் வேறுபட்டதா என்ற நிலையில் ஆராயலாம். அதனால் ஈழம் என்பது தமிழ்ப் பெயர்; தமிழகத்தில் வழங்கப்பட்ட பெயர் என் பதும் தெரிவாகலாம்.

6. பொதுக்கூறு சிறப்புக் கூறுடைய பெயர்கள் சிறிது ஏதோ விளக்கத்தைத் தர, பல மரூஉப்பெயர்களும் தனிப் பெயர்களும் எந்தவித தெளிவு தரலையும் காணவியல வில்லை. சான்றாக, 'சிறப்புக் கூறு, பொதுக்கூறு என்று பிரிக்க வியலாத நிலையில் காணப்படும் மதுரை, குயிலை, களந்தை, காகம், முசிறி, உழலை, நிகமம், கொழுமம், பிரமியம் போன்ற பெயர்கள் முன்பு இருகூறுகளையுடைய பெயர்களாக இருந்து பின்திரிபுகளால் ஏற்பட்ட மரூஉப் பெயர்களாகும். இவ்வகை மரூஉப் பெயர்கள் மிகத் தொன்மையுடையனவாகும்' என்ற கருத்தைக் காண்கிறோம்.[14] இவற்றுள் மதுரையை எடுத்துக்கொண்டால் இதற்கு அறி ஞர் பல விளக்கத்தைத் தருகின்றனர். மருதத்துறை, மது, மதுரா என்னும் வடநாட்டுப் பெயர் போன்ற பல காரணத் தைச் சுட்டுகின்றனர். வரலாற்றின் தொடக்கத்திலேயே 'மதுரை' என்னும் பெயரே தெரிய வருகின்றது. எனவே இப்பெயர் எதனால் வந்தது என்பது தெளிவில்லாமல் அமைகிறது. அடியார்க்கு நல்லார் கடல் கொண்ட குமரிப் பகுதியில் உள்ள பகுதிகள் சுட்டும் போது 'ஏழ் மதுரை நாடு' என்று சுட்டிச் செல்லும் தன்மை இம்மதுரையினின் றும் இப்போதுள்ள மதுரை பெயர் பெற்றது என்று சொல்ல வழி வகுக்கின்றதே தவிர, 'மதுரை' பெயர்க் காரணம் புரிந்து கொள்ளுமாறு இல்லை. எனினும் இவ்வெண்ணம் உறுதிப்படுமாயின் வடமதுரை, மது இரண்டு எண்ணங் களும் வலிமை இழக்க வாய்ப்புண்டு. தமிழகத்தில் முதல் ஊர்ப்பெயர்கள் பெரும்பான்மை இயற்கைச் சார்புடைய தாக அமைய, மருதத்துறை மதுரை என வழங்கியிருக்க வாய்ப்பு மிகுதிப்படுகிறது. இவ்வாறு ஒருசில சூழல்களும் வரலாறுகளும் ஒருசில தெளிவைப் பெற வாய்ப்பு தருகின் றதே தவிர, உறுதியாக உண்மையை யுணர்ந்து கொள்ளல் இயலாத ஒன்றாக அமைகிறது. ஆயின் பல பெயர்கள் எந்தவித ஊகத்தையும் எண்ணவிடாது செய்யும் நிலையில் அமைகின்றன. ஒரு சிறிது திரியும் போது அதனை ஓரள வுக்கு ஊகிக்க இடமுண்டு. சான்றாக இரணசிங்க நல்லூர்

இரணியலாயிற்று. ஆயின் பழைய ஜெயங்கொண்டம் பழைய சங்கடம் என்று மருவும்போது[15], இப்பெயரின் உண்மைப் பெயரை எவ்வாறு ஊகித்தல் இயலும். எனவே இத்தகைய ஊர்ப்பெயர்கள் பல வரலாறுகள் கல்வெட்டுகள் மூலம் மிகுந்த ஆய்விற்குரியவையாக அமைகின்றன. மேலோட்ட மான ஆய்வு எந்தப் பயனையும் இப்பெயர்களைப் பொறுத்த வரையிலும் தரல், இயலாத ஒரு நிலையாக அமைகிறது.

இவ்வூர்ப் பெயர்களை எவ்வாறு ஆராய்வது என்பது மற்றொரு சிக்கல், தனித்தனிப் பெயர்கள், தனித்தனி வட் டங்கள், மாவட்டங்கள், மாநிலங்கள் என்ற பல நோக்குகள் அமைகின்றன. ஒரே நேரத்தில் ஒரு ஊர் எனில் மிகுதியான காலம் தேவைப்படும். மாநிலமாக மாவட்டமாக எனில் தனித்தனியே செய்தல் இயலாது. பலரின் துணை வேண் டும். எனவே, ஒரு சிறு குழுவாக, மாநிலத்தின் ஒரு குறிப் பிட்ட ஒரு பகுதி குறிப்பாக ஒரு வட்டம் எடுத்துக்கொண்டு முதலில் ஊர்ப் பெயர்களை, அக்குழுவினரில் ஒருவர் களப் பணி, ஒருவர் இலக்கியம், ஒருவர் கல்வெட்டு என மூலங் கள் மூலம் தொகுக்கலாம். பின்னர் செய்திகள் முழுவதை யும் திரட்டலாம். பின்னர் செய்திகள் பரிமாற்றத்தின் மூலம் எழுதலாம். இவ்வாறு ஒவ்வொரு பகுதியாக எழுதி முடிக்கும்போது எல்லா பகுதிகளும் முழுமையாக நோக்கப் பட்டு, இறுதியில் ஆய்வு செய்யப்படலாம். அல்லது ஆய் வில் முழுமை பெறல் இயலாது.

7. ஊர்ப்பெயர்க் களஞ்சியம் அமைத்தல்

இவ்வாறு ஒவ்வொரு பகுதியாக ஆராயும்போது செய்தி கள் திரட்டப்படலாம். முடிவுகள் சுட்டப்படலாம். எனினும் தமிழகம் தமிழ், தமிழர் என்ற முப்பெரும் வரலாறுகள் பற்றிய முடிந்த ஆய்வுகள் வெளிப்பட இவற்றில் இடம் இல்லை. எனவே ஊர்ப்பெயர்க் களஞ்சியம் ஒன்று அமைப் பது தேவைப்படுகிறது. இங்கும் வளர்ச்சி அமைய வேண்டும். உரியியலாக நிகண்டாக அகராதியாக பின்னர் களஞ்சிய மாக வளர்ந்த நிலை போன்று, ஊர்ப்பெயர்க் களஞ்சியத் தில் வெளிப்படும் சிந்தனைகள் இறுதியில் தொகுத்து உரைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு களஞ்சியம் அமைத்தலிலும் பல சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

தமிழக ஊர்ப்பெயர்க் களஞ்சியம் எனும்போது, தமிழகத்தில் இன்று காணப்படும் ஊர்ப்பெயர்கள் மட்டும் சுட்டப்பட வேண்டுமா? அல்லது தமிழகத்தில் வரலாற்றுக் காலம் தொட்டே தெரியவரும் ஊர்ப்பெயர்கள் அனைத்தையும் தொகுத்து இடம்பெறச் செய்ய வேண்டுமா என்பது முதல் சிக்கல்.

அடுத்து, இப்பெயர்களை அகரவரிசைப்படி அமைக்கலாமா? அல்லது கால வரிசைப்படி அமைக்கலாமா? என்பது அடுத்த சிக்கல்.

ஒரே ஊர்ப்பெயர் பல பெயர்களையுடையதாக அமைகிறது. அன்று முதல் இன்று வரை ஒரே பெயரையுடையதாக விளங்குவன பல ஊர்ப் பெயர்கள் (மதுரை) பல பெயர்களைக் கொண்டு இயங்குவன புல ஊர்ப் பெயர்கள். (சீர்காழி—பன்னிரு பெயர்களையுடையது) அன்று ஒரு பெயர் இன்று ஒரு பெயர் கொண்டவை பல ஊர்ப்பெயர்கள். (ராஜராஜபுரம்—இன்று தாராசுரம்). இன்று பல பெயர்களால் சுட்டப்பட்டுவரும் ஊர்கள் உண்டு. (மதராஸ், சென்னை) பிறமொழிப் பெயர்களால் சுட்டப்படும் ஊர்கள் பல உள. இவ்வாறு பல விதங்களில் சுட்டப்பட்டு வரும் பெயர்களில் ஊர்ப்பெயர்க் களஞ்சியத்திற்கு எந்த பெயரைப் பயன்படுத்துவது என்பது இன்னொரு சிக்கல்.

இங்கே அறிஞர்களின் இரண்டு எண்ணங்கள் கருதத்தக்கனவாக அமைகின்றன. இப்போது மக்கள் வழக்கில் வழங்கப்படும் ஊர்ப் பெயர்களைக் கொண்டு அகர வரிசையினை அமைத்துக்கொள்ளலாம் என்பர் ஒருசில ஊர்ப் பெயர் அறிஞர்.[16] அடுத்து, திட்டமிடுதல் என்ற திட்டத்தைப் பற்றிய அறிஞர் எண்ணங்களும் சுட்டத்தக்கனவாக அமைகின்றன.[17] ஊர்ப் பெயர்களைத் திட்டமிட்டு அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து, ஒரே ஊர்ப்பெயர் பல வடிவங்களில் மாற்றப்படும்போது அல்லது மாறும் போது அல்லது திரியும்போது ஏற்படும் பல சிக்கல்கள் காரணமாகத் தோற்றம் பெற்ற கருத்தாக அமை்கிறது. எனவே இத்திட்டமிடல் ீன்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். எனினும் இது எப்போது அமையும்? ஊர்ப் பெயர்கள் முழுவதையும் ஆராய்ந்து அதன் சரியான அல்லது தோற்றப் பெயரினைக் கொண்டு திட்டமிடப்பட

வேண்டுமா? சான்றாக மயிலாடுதுறை மாயூரம் ஆகி, இன்று மீண்டும் மயிலாடுதுறை ஆனது போன்று, மீண்டும் ஆய்வு செய்து அதன் முதல் பெயர் அல்லது தோற்றப் பெயர் இடுதல் சிறந்ததா, இது எல்லா ஊர்ப்பெயர்க்கும் பொருத்த மாக அமைதல் இயலுமா எனப் பார்க்கலாம். இல்லை என்றால், இன்றைய வழக்கில் அமையும் பெயர்களை, சரி செய்து அவற்றைச் சரியாக மக்கள் பயன்படுத்தச் செய்யல் இயலுமா? சான்றாக, திருவனந்தபுரம் திருவந்தபுரம் என வும், Trivandrum எனவும் மக்கள் வழக்கில் சுட்டப்படும் போது திருவனந்தபுரம் எனப் பயன்படுத்தச் செய்ய இய லுமா? இவ்வாறு எழுத்தில் ஒன்று பேச்சில் ஒன்று ஊர்ப் பெயர் வழங்கும்போது மொழியின் நிலை என்னவாகும்? ஊர்ப்பெயரினைத் திட்டமிடுதல், ஊர்ப்பெயர் தோற்றக் காரணம் கொண்டு உண்மையான வரலாறுத் தெளிவுக் கருதி எனில், அதன் முதல் பெயர் சரியானது. காலந் தோறும் வழங்கும் அதன் பிற பெயர்கள் பற்றிய உண்மை களை அப்பெயரின் அடியில் கொடுக்கலாம். மேலும் காலந் தோறும் வளர்ந்தும், மாறியும் வரும் இயல்பான வளர்ச்சி யில் 'திட்டமிடுதல்' என்பது தடையாக இருக்குமா? சான் றாக, ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறைகள் எனக் காண ஒரு சொல் தனிப்பெயராக (காஞ்சி) இரண்டு கூறுகளின் இணைந்த பெயராக (முல்லைத் தீவு), முன் அடை இணைந்த பெயரோடு (திருவாவினன் குடி) பின் அடை இணைந்த பெயராக (காஞ்சிரோடு தெக்கின்கர) மட்டுமல்லாது, தலை யெழுத்து கொண்டும் (ம. கண்ணனூர்) எண்கள் இணைவு பெற்றும் (மேல்மாந்தை 2/3) ஊர்கள் பெயரிடப்பெற்று வருவதைக் காண்கின்றோம்.[18] இப்பெயர்களைத் திட்டமிட வேண்டும் என்னும்போது, இப்பெயர்களை உள்ளது உள்ள படியே திருத்தமாக வெளியிடலாமா? அல்லது அனைத் திலும் ஓர் முறைமை வேண்டும் என எண்ணின், மேற் சுட்டிய பெயர்களை எவ்வாறு அமைத்துக் கொள்வது போன்ற பல வினாக்கள் எழுகின்றன.

இதற்குப் பல அறிஞர்கள் பல விளக்கங்களைக் கொடுத் தாலும் இது நடைமுறைப்படுத்தப்படும் பொழுது எந்த அளவிற்கு ஒருமைப்பாடும் தெளிவும் கொண்டதாக விளங் கும் என்பதும் சிந்திக்கத்தக்கது.

''பல பெயர்கள் இருக்கும்போது ஒன்றை ஆட்சிக்குரிய தாக எடுத்துக் கொள்ளலாம்.''[19] ஆயின் எதனை ஏடுத்துக் கொள்வது என்பது சிக்கலானது என்ற கருத்தையும் காண் கின்ற போது, இக்களஞ்சியம் முழுமையாக நோக்கப்படும் பொழுதுதான் இக்குழப்பங்களுக்குத் தீர்வு முடிவு செய்யப் படும் எனத் தோன்றுகிறது.

இச்சிக்கல்களை எல்லாம் தீர்த்து, ஊர்ப்பெயர் ஆய்வுக் களஞ்சியம் ஒன்று அமைப்பது பெரும்பயனைத் தரவல்லது என்பது மறுக்க முடியாத உண்மை. இதனை அறிஞர் பலரும் சுட்டுகின்றனர்.

''மேல் நாட்டறிஞர்கள் ஊர்ப்பெயர் முதலியன குறித் துச் செய்துள்ள ஆராய்ச்சி முறையை நாம் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும். இங்கிலாந்தில் ஊர்ப்பெயர்க் கழகம் வெளியிட்டுள்ள நூல்கள் மிகுதியும் பயன்படுவன. இவற்றைப் பின்பற்றித் தக்கபடியாக ஆராய்ச்சிகள் நன்கு நிகழ்தல் வேண்டும். இவை பெரிதும் நிகழ்ந்த பின்பு ஊர்ப் பெயர் அகராதி ஒன்று தொகுத்து வெளியிடுதல் மிகவும் பயன் தருவதாகும்—ச. வையாபுரிப்பிள்ளை.''[20]

ஊர்ப் பெயராய்வு குறித்து மேற்கண்ட சிக்கல்களுடன், இன்னமும் ஆழமாகச் செய்யப்படும் போது எதிர்ப்படும் சிக்கல்களும் களையப்பட்டு, இப்பெயராய்வினை மேற் கொள்ளின், ஊர்ப்பெயர்கள் மிகச் சிறந்ததொரு வர லாற்று மூலமாகத் திகழும் என்பது திண்ணம்.

குறிப்புகள்

1. ஆய்வியல் அறிமுகம், பக். 33.
2. Historical. Cultural and Linguistic studies cannot be said to be complete without the application of the results of place name studies.... It is unfortunate that an important subject like this, which provides source materials for many a branch of knowledge has been very much neglected in India, where as splendid work is being done in the west from the beginning of the last century.

   President's note, Studies in Indian Place Names, Vol. I, p. 5.

3. Every village name got a meaning behind it—either expressed or disguised. It must have a history—Perspectives in Place Name Studies—Every place name is a fossilized philological fact'' p. 21.

So far, no one has utilised the study of toponomy in this way, so let us wish that we reconstruct the ancient geography, history and anthropology with the help of Toponomy''—p. 132.

4. Topmomy of Tamil Nadu—M. Nainar, Perspective in Place Name Studies, p. 123-127.

5. For cultivating it to a high academic level, the establishment of place name Societies all over India and coordinating their activities by mutual support of the acadamicians and financial support by private, individuals and the state are needed. Place names and understanding the past, 'Studies in Indian Place Names'.

6. A Study of Place Names in Tiruchirappalli District—C. D. Sekar, Department of Geography, University of Madras, 1985.

7. தமிழியல் ஆய்வு, பக். 231-239.

8. தமிழ் இடப் பெயராய்வு, பக். 12-17.

9. ,, ப.38.

10. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி-2, பக். 80-81.

11. ஈழநாட்டு இடப்பெயர்களில் தமிழின் ஆளுமை—தி.க. இராசேசு வரன், 5-ஆம் உலகத் தமிழ் மாநாடு விழா மலர், ப. 223.

12. ஈழத்தைச் சேர்ந்த பூதன் என்பவருடைய மகனான தேவனார் (ஈழத்துப் பூதந்தேவனார்) இலங்கையிலிருந்து தமிழ்ச்சங்கம் சிறப்புற்று விளங்கிய மதுரைக்கு வந்து பெரும் புகழோடு வாழ்ந்துள்ளார். அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும், குறுந்தொகையிலும், நற்றிணையிலும் இடம்பெற்றுள்ளதைக் கண்டோம். இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, ப. 54.

13. ஈரான் என வழங்கும் 'பேர்சியா' நாட்டிலும் ஈழம் மற்றும் ஊர் ஆறு இல் என்னும் விகுதியுடைய பல பெயர்கள் காணப்படுகின்றன. ப. 222.

14. தமிழ் இடப்பெயராய்வு, ப. 116.

15. ,, ப. 80.

16. As for the vocabulary the names of places as they are pronounced by the native speakers are to be retained. As far as possible the adopted and anglized formers are to be eliminated and the old forms are to be retained.

— Standadisation of Places and Names, Dr. Puthusery Ramachandran, Perspectives in Place Name Studies, p. 238.

17. Standadisation of Place Names is very important and urgent due to many reasons. First place names as an identifactory label should serve their purpose effectively. Variation in the use of it may lead to confusion and anarchy.

— Standadisation of Place Names, p. 250.

When we think of the standadisation of place names we have to bear in mind that they are not mere words, but labels of identity stuck on them for years telling the story and history of the places.

Standadisation of Place Names — Dr. Puthussery Ramachandran, p. 236.

The Dictionary of Language and Linguistics defines the standadisation in Language as the official acceptance by at least some groups within a speech community of certain general patterns of pronounciation / Grammar / orthography and vocabulary.

— " — p. 237.

18. தமிழக ஊர்ப்பெயர்கள், பக். 23, 24, 26.

19. First when a place has more than one name, only one loan be taken as the official name. In many cases this

type of problems are solved at the local level itself.... The multilingual areas this may assume more complexities.

20. தமிழ் இடப்பெயராய்வு, ப. 161.

பயன்பட்ட நூல்கள்

1. ஆய்வியல் அறிமுகம், தமிழண்ணல் இராம பெரிய கருப்பன், எம். எஸ். இலக்குமணன், மீனாட்சி புத்தக நிலையம், சென்னை, 1977.
2. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள் தொகுதி—1, ஆர். ஆளவந்தார், உல்கத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.
3. இலக்கியத்தில் ஊர்ப்பெயர்கள், தொகுதி—2, டாக்டர் கு. ப்கவதி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1904.
4. தமிழ் இடப்பெயராய்வு, டாக்டர் கி. நாச்சிமுத்து, கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம், 1927.
5. தமிழக ஊர்ப்பெயர்கள், டாக்டர் கு. பகவதி, உலகத் தமிழ் கல்வி இயக்கம், சென்னை, 1986.
6. தமிழியல் ஆய்வு—தமிழண்ணல் இராமபெரியகருப்பன், இ. முத்தையா பதிப்புத்துறை, மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம், 1983.
7. A Study of Places Names in Tiruchirappalli District, C.D. Sekar, Department of Geography, Madras, 1985.
8. Perspectives in Place Name Studies, Place Name Society, Trivandrum, 1987.
9. Studies in Indian Place Names, Vol. I, III, VIII, Geetha Book House, Mysore, 1979, 1982, 1986.

4. ஒப்பிலக்கியம்

அ. அ. மணவாளன்

இலக்கிய ஒப்பாய்வுத் துறையில் எழும் சிக்கல்களை இரு வகையாகப் பாகுபடுத்திக் காணலாம். ஒன்று, இலக்கிய ஒப் பாய்வுக் கல்வியில் நேரும் சிக்கல்கள். அதாவது இலக்கிய ஒப்பாய்வுப் பாடத்தைத் தமிழ் முதுகலை மாணவர்கட்குக் கற்பிக்குங்கால் ஏற்படும் சிக்கல்கள். மற்றொன்று, இலக்கிய ஒப்பாய்வியல் பார்வையில் செய்யப்படும் ஆராய்ச்சிகளில் நேரும் சிக்கல்கள். அதாவது, ஒப்பாய்வியல் பார்வையில் ஆய்வு செய்யப்புகும் ஆய்வாளர்களும் ஆய்வு வழிகாட்டி களும் சந்திக்கும் சிக்கல்கள் எனப் பாகுபடுத்தி ஆராயலாம்.

இவ்விருவகையான சிக்கல்களுக்கும் அடிப்படையான காரணம், இலக்கிய ஒப்பாய்வியல் என்றால் என்ன என்று சிந்திக்கத் தோன்றும் வரையறைதான் என்று அறிகிறோம். இன்றைய இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டின் கல்விச் சூழலில் இந்த வரையறைகளைச் சிந்தித்தால் மேற்கூறிய இருவகைச் சிக்கல்களும் எழுவதன் காரணத்தை எளிதில் உணர்ந்துகொள்ள இயலும்.

இலக்கிய ஒப்பாய்வியல் என்னும் தொடர், இலக்கியங் களை ஒன்றோடொன்று ஒப்புநோக்கி ஆயும் ஆய்வுத் துறை என்று பொருள் தருவதாக உணர்ந்து கொள்ளப்பட்டுள் ளது. ஒரு மொழி இலக்கியங்களை ஒப்பீடு செய்வது ஒரு மொழி ஒப்பீடு என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பல மொழி இலக்கியங்களை ஒப்பிட்டாய்வது பன்மொழி ஒப்பீடு என் றும் இவ் ஆய்வு பிரித்து உணரப்பட்டு வருகிறது. உலகளா விய ஆய்வுலகக் கருத்தின்படி, இலக்கிய ஒப்பாய்வியல் இருபதாம் நூற்றாண்டில் மலர்ந்த புதுத் துறைகள் பலவற் றுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இலக்கியத்தை இலக்கியத் தோடு ஒப்பிட்டாய்வது—ஒரு மொழி ஒப்பீடாயினும் சரி— பன்மொழி ஒப்பீடாயினும் சரி—மானுட அனுபவத்தின்

மிகப் பழைய செயற்பாடாகக் காணப்படுகிறது. தமிழிலக்கிய வரலாற்றை நோக்கினால் தொல்காப்பியர் காலந் தொட்டே ஒப்பாய்வுப் பழக்கம் இருந்திருப்பதை உணரலாம். ''ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியன்'' என்னும் தொடர் இதனை விளக்கும். திருக்குறள் ஒப்பாய்வுப் போக்குடையது என்பதை, ''நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'' என வருவனவற்றால் தெளியலாம். இவையெல்லாம் ஒருமொழி ஒப்பீடாகவும் இருக்கலாம்; பன்மொழி ஒப்பீடாகவும் இருக்கலாம். பக்தி இலக்கியமும் உரையாசிரியர்களின் உரைகளும் பன்மொழி ஒப்பீடு நம்மிடையே பின்பற்றப்பட்டு வந்தமையை விளக்கும். இக்கருத்து உலகின் எல்லாப் பண்டைய இலக்கியங்கட்கும் பொருந்தும். எனவே, இத்தகைய ஒப்பீடுகளை இலக்கிய ஒப்பாய்வியலில் வரையறையாகக் கொண்டால் இருபதாம் நூற்றாண்டின் புதிய துறை என்னும் கூற்றுப் பொருந்தாமற்போகும்.

இனி, ஒப்பாய்வியல் என்னும் ஆய்வுக்கூறு எவ்வாறு புதுத்துறை என்னும் நிலையை அடைந்தது என்று காண்போம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் போக்குவரத்து, உயிரியல், உளவியல், மொழியியல் என்னும் துறைகளுள் பல இன்றியமையாத புரட்சிமயமான கண்டுபிடிப்புகள் நிகழ்ந்தன. போக்குவரத்தில் ஏற்பட்ட புரட்சியின் விளைவால் நாடுகள், கண்டங்கள் நாடோறும் சென்றுவரத் தக்கனவாக மாறின. விளைவாக அரசாளுநரும், அறிஞர்களும், தொழிலாளர்களும் இனம், மொழி, நிறம் என்னும் தடைகளைக் கடந்து பழகுதல் அன்றாட நிகழ்ச்சியாயிற்று. இதனால் ஆராய்ச்சி என்பதே நாடு தழுவியதாக இருந்த நிலை மாறி உலகந் தழுவியதாகி வளர்ந்தது. இந்நிலையில்தான் சார்லஸ் டார்வினின் பரிணாமக் கோட்பாடு உலக உயிர்களின் பொதுத் தன்மையினை உறுதிசெய்து மனிதன் உலகப் பொதுமைப் பண்புடையவன் என்பதை நிறுவியது. உடலியக்க நிலையில் டார்வின் கண்ட இப் பொதுமையைப் பிராய்டு, ஸ்பென்சர் ஆகிய இரு உளவியல் அறிஞர்களும் மனவியக்க நிலையில் உறுதி செய்தனர். இதனையடுத்துப்

புளூம்பீல்டு போன்ற மொழியியல் அறிஞர்கள் மொழி யென்பது மானுடப் படைப்பே; பிற விலங்குகளின் ஒலிக் குறிகள் மொழிகளல்ல என்றும், பெரும்பாலும் எல்லா மொழிகளும் அடிப்படைக் கூறுகளில் ஒத்த தன்மையின என்றும் ஆய்வு முடிவினை வெளிப்படுத்தினர். இவ்வாறு, உயிரியல், உளவியல், மொழியியல் என்னும் துறைகள் மனிதனின் உடல், உள்ளம், உரை ஆகியவற்றின் பொதுத் தன்மைகளைக் கண்டு அறிவியல் அடிப்படையில் நிறுவின. இதனைத் தொடர்ந்து, மொழி என்பது மானுடப் படைப் பாயின், மொழியினால் இயற்றப்படும் இலக்கியமும் மானுடப் படைப்பே; அதாவது மனிதன் மட்டுமே இலக்கியத்தைப் படைக்க இயலும்; எனவே உடலாலும் உள்ளத்தாலும், மொழியாலும் அடிப்படையில் ஒற்றுமையுடைய மனிதன் படைக்கும் இலக்கியமும் அடிப்படைப் பண்புகளுள் ஒன் றாகவே இருக்க வேண்டும் என்னும் கருதுகோளை இலக்கிய ஆய்வாளர்கள் முன்னிறுத்தி உலக இலக்கியங்களை ஒப் பிட்டு அறிவியல் அடிப்படையில் ஆராயத் தொடங்கினர். இது ஒப்பிலக்கிய ஆய்வின் தொடக்க கால நிலை. 1940 வரை நிகழ்ந்த மேலைநாட்டு ஆய்வுகள் பல இத்தன்மை யின.

இவை ஒருபுறம் இருக்க, பிராய்டு, சஸ்யூ, காரல் மார்க்ஸ் ஆகியோரின் ஆய்வு முடிபுகள் ஆய்வுலகில் மற்றுமொரு புரட்சியைத் தொடங்கி வைத்தன. இதனைச் சற்று விளக்க மாகக் காணலாம். சிக்மண்ட் பிராய்டு என்னும் உளவியல் அறிஞர் மனித மனம், அடிமனம், அறிமனம் என இருகூறு களை உடையது; அறிமனம் மானுடப் பிறப்பு, வளர்ப்புச் சூழலால் உருவாவது, எனவே சமுதாயத்துக்குச் சமுதாயம் வேறுபடுவது; அடிமனம் பாரம்பரியமாக வருவது, பெரும் பாலும் நாடு, மொழிக் கூறுகளால் வேறுபடாமல், பண் பாட்டுக் குழு அடிப்படையில் ஒன்றுபட்டும் வேறுபட்டும் அமைவது; இந்த அடிமனப் பகுதியின் செயற்பாட்டை அறிந்துகொள்ள அறிமனப்பகுதிதான் துணை செய்யும் என்று கண்டறிந்து கூறினார். பெர்டினான் டி. சஸ்யூ என் னும் மொழியியல் அறிஞர், மொழி, புதை வடிவம், புற

வடிவம் என்னும் இருவகை அமைப்புகளை உடையது; புதை வடிவத்தை ஒரு மானுடக் குழந்தை பிறந்த 60 மாதங்கட்குள் கற்றுக் கொள்கிறது. புறவடிவத்தை, அதாவது எழுத்து வழியான மொழியினைப் பள்ளிக்குச் சென்று கற்றுக் கொள் கிறது. புறவடிவங்கள் சமுதாயச் சூழலால் பலவாக மலரி னும், புதைவடிவம் ஒன்றாகவே இருக்கும்; புதை வடிவ ஆராய்ச்சியைப் புற வடிவங்களின் துணைகொண்டே செய்ய இயலும் என்று கண்டறிந்தார்.

காரல் மார்க்ஸ் என்னும் பொருளாதார அறிஞர், ''தனக்கு வேண்டிய உணவைத் தானே படைத்துக்கொள்ளும் உயி ரினமே மனிதன்'' என்ற அற்புதமான வரையறையை மனித னுக்குத் தந்தவர். அவர் கருத்தின்படி சமுதாயம் என்பது வரலாற்றுப் படைப்பு; கோட்பாடுகள், நடைமுறை என்னும் இருவகை அமைப்புக்களை உடையன; கோட்பாடு ஒன்றாக வும் நடைமுறை பல வடிவாகவும் பரிணமிக்கும் தன்மை யின. அதாவது ஒரு சமுதாயம் வெளிப்படுத்தும் கலைகள் அல்லது ஒழுகலாறுகள் பலவாயினும் அவை யாவும் ஒரே கோட்பாட்டின் அடிப்படையில் மலரும் இயல்பின. எனவே, அகவடிவமான அக்கோட்பாட்டினை அறிய அதன் வெளிப் பாடுகளான புறவடிவங்களை ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்வது அடிப்படைத் தேவையாகிறது என்று விளக் கினார்.

மேலே கண்ட முப்பெரும் ஆய்வுகளின் கூட்டு விளைச் சலைத்தான் அமைப்பியல் ஆய்வு (Structuralism) என்று கூறுகின்றனர். இந்த நூற்றாண்டின் 40-க்குப் பின்னர் மேலை நாடுகளின் இவ் ஆய்வு முறை முதலில் உயிரியல், மானுடவியல், மொழியியல், சமுதாயவியல் போன்ற துறை களில் பின்பற்றப்படலாயிற்று. இவ் ஆய்வுமுறையின் பயன் பாட்டைக் கண்ட அறிவியல் அறிஞர் பலர் இலக்கியப் படைப்பினையும் தம் ஆய்வுக்கு உட்படுத்தினர். அதாவது சமுதாயச் செயற்பாடுகளின் வடிவங்களில் ஒன்றாகிய இலக்கியத்தையும் ஆராய்ந்தால், பிற கலைகளால் தெளி வடையாத பல ஆய்வுச் சிக்கல்கள் விடுபட வழி பிறக்கும் என்று நம்பி இலக்கிய ஆய்வில் நுழைந்தனர். இந்த ஆய்வு

அணுகுமுறையே அமைப்பியல் அணுகுமுறை (Structuralistic appraoch) என்றழைக்கப்பட்டது. இதனால் இசை, சிற்பம், ஓவியம், பொருளாதாரம், வரலாறு, மானுடவியல், தத்துவம், உளவியல், சமயம் போன்ற பல துறைகளுடன் இலக்கியத்தை ஒப்பிட்டு ஆராயும் நிலை தோன்றியது. இத்தகைய ஒப்பீட்டைத்தான் இலக்கிய ஒப்பாய்வியல் என்று இக்காலத் திறனாய்வாளர்கள் கூறுகின்றனர். அதாவது, இலக்கியத்தை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதற்குப் பிற இலக்கியங்களோடு பொருத்திப் பார்ப்பதோடு அமையாமல், பிற மானுட அறிவுத் துறைகளோடும் பொருத்தி ஒப்பிட்டுப் பார்ப்பது இலக்கிய ஒப்பாய்வியல் என்று வரையறுத்தனர். இத்தகைய அணுகுமுறையினால்தான் இத்துறை இந்த நூற்றாண்டின் புதுத் துறைகளில் ஒன்று என்னும் நிலையை அடைந்தது.

எனவே ஒப்பிலக்கியம் அல்லது இலக்கிய ஒப்பாய்வியல் என்றால் இலக்கியத்தைப் பிற துறைகளுடன் பொருத்திப் பார்ப்பது என்பது தெளிவாகிறது. இது அணுகுமுறை பற்றிய விளக்கம். இனி ஆய்வுமுறையிலும், முன்னைய திறனாய்வுக் கோட்பாடுகளை மட்டும் மேற்கொள்ளாமல், அறிவியல் ஆய்வுமுறைகளையும் அடிப்படையாகக் கொள்வது என்னும் புதிய ஆய்வு மரபு தோன்றியது. அதாவது, இலக்கியத்தை ஆராய்வதாயினும் முன்னைய சுருக்க முறைமையை அறிவியல் அடிப்படையோடு சேர்த்து அமைத்த புதியதொரு ஆய்வுநெறியை—இலக்கியம் தவிர்ந்த பிற துறைகள் பின்பற்றும் ஆய்வு நெறிகளை உட்படுத்திய பல்துறை ஆய்வு முறையினை (inter-disciplinary) ஒப்பிலக்கிய அறிஞர்கள் பின்பற்றி வருகின்றனர். ஆக, அணுகுமுறை, ஆய்வுமுறை இரண்டிலும் இத்தகைய வரையறுத்த கோட்பாடுகளை உடையதாக இருப்பதால் இலக்கிய ஒப்பாய்வியல் இருபதாம் நூற்றாண்டின் புகழ்துறைகளுள் ஒன்றாக விளங்குகிறது.

ஒப்பிலக்கியக் கல்வியில் சிக்கல்கள்

இதுவரை கண்ட விளக்கத்திலிருந்து அணுகுமுறை, ஆய்வு நெறிமுறை ஆகிய இருவகையிலும் இலக்கிய ஒப்பாய்வியல்

இந்தியாவில் நடைமுறையில் இருக்கும் நிலையினின்று வேறுபட்டது என்பது விளங்கும். இதற்கேற்ப ஒப்பிலக்கியக் கல்வி மேலைநாட்டுப் பல்கலைக் கழகங்களில் எவ்வாறு அமைந்துள்ளது எனக் காண்போம்.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் எம்.ஏ., ஒப்பிலக்கிய வகுப்பில் சேர்வதற்குரிய தகுதிகளாவன :

1. தாய்மொழி அல்லது தான் பயின்ற மொழி இலக்கியத்தில் பி.ஏ., அளவில் புலமை
2. தாய்மொழி அல்லாத ஒரு மொழியில் இலக்கியப் பயிற்சிக்குரிய புலமை
3. இலக்கியம் அல்லாத ஒரு துறையில் இளங்கலை அளவில் புலமை
4. இலக்கியக் கொள்கைகள் / மொழி பெயர்ப்பியல்—செய்முறைப் பயிற்சிகளுடன்

மேற்கண்ட தகுதிகளுடன் எம்.ஏ., வகுப்பில் சேர்ந்த மாணவர் இரண்டாண்டு படிப்பில் பயிலவேண்டியன :

1. தாய்மொழி அல்லது தான் பயின்ற இலக்கியத்தில் சிறப்புப் பாடம்
2. தாய்மொழியில்லாத இரண்டாவது பிறமொழியில் இலக்கியப் பயிற்சி
3. இலக்கியமில்லாத இரண்டாவது பிற துறைப் பயிற்சி—முதுகலை அளவில்
4. இலக்கியக் கொள்கைகள் : சிறப்பு நிலை
5. பல்துறை ஆய்வுமுறை
6. ஆய்வேடு—ஒப்பாய்வு முறை அல்லது மொழி பெயர்ப்பு

இன்று உலக அளவில் ஒப்பிலக்கியப் பாடநூல்கள் மேற்கண்ட பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப் படுகின்றன. ஒப்பிலக்கியக் கல்வியை நம்முடைய கழகங்களில் பாடமாக வைத்திருப்பதால் வகுப்பறையில் பாடம் சொல்லுமிடத்து மாணவர் ஆசிரியர் இருவர்க்கும் நேருஞ் சிக்கல்கள் பலப்பல. முதலாவதாக எம்.ஏ., தமிழ் வகுப்பில் சேரும் மாணவர்களின் தகுதிகளாக இன்று நடைமுறையில் இருப்பன :

1. பி.லிட்., பயின்றவர்கள்
2. பி.ஏ., பயின்றவர்கள் — பெரும்பான்மை
3. பி.ஏ., பொருளாதாரம் அல்லது வரலாறு பயின்றவர்கள் — சிறுபான்மை

441568

இத்தகைய மாணவர்கட்குத் தமிழ் தவிரப் பிறமொழி தெரியாத நிலை. இலக்கியம் தவிர நம் நாட்டு வரலாறுகூடத் தெரியாத நிலை. பிற மொழியறிவோ, பிறதுறை அறிவோ அறவே இல்லாத நிலை. எனவே இலக்கிய ஒப்பாய்வில் கோட்பாடுகளைப் பாடஞ்சொல்ல இயலாத நிலை. ஆசிரியர் நிலையிலும் ஒரு சிலரைத் தவிரப் பெரும்பான்மையினருக்குப் பிற மொழிப் பயிற்சியோ பிறதுறை அறிவோ இல்லாத நிலை. எனவே பாடம் சொல்ல இயலாத நிலை. விளைவு, அச்சிடப்பட்ட பாடநூல்களைத் திரும்பத் திரும்பப் படித்து விளக்குவது அல்லது இலக்கிய ஒப்பீடாக வெளி வந்த நூல்களின் கருத்துகளை விளக்குவதோடு வகுப்பறைப் பணி முடிவடையக் காண்கிறோம். ஒப்பிலக்கியம் பற்றிய நல்ல மூலநூல்கள் எல்லாம் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் உள்ள காரணத்தாலும், நம் நாட்டில் கிடைக்காத காரணத்தாலும் ஆசிரியர்கள் பலர் இவற்றைக் கண்டதே இல்லை. கண்டாலும் படித்துணர்ந்துகொள்ள இயலாத நிலை. தமிழில் வந்துள்ள இரு நூல்களில் ஒன்று மிகவும் அரிச்சுவடி நிலை; மற்றது தமிழன் படித்தால் புரியாதது.

891.42 INT

இவ்வாறான நம் சூழ்நிலையில் இலக்கிய ஒப்பாய்வுக் கல்வியைப் பாடமாக வைப்பது பொருத்தம்தானா என்று எண்ணிப் பார்க்க வேண்டியுள்ளது. ஒன்று ஆசிரியர், மாணவர்களின் நிலைமை மாற வேண்டும். அல்லது இப் பாடத்தைத் தவிர்க்க வேண்டும். இல்லையேல், ஒரு கல்விப் பாடம் கொச்சைப்படுத்தப்படும் நிலை உருவாகிறது. வான்கோழி மயிலைப் பழிக்கும் அல்லது மயிலுக்குச் சவால் விடும் நகைப்பிற்கிடமான அவலநிலை உருவாக நேரிடு கிறது. மாணவர், ஆசிரியர் நிலைகளை உயர்த்த முயல்வதே வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

ஒப்பிலக்கிய ஆய்வில் சிக்கல்கள்

'ஒப்பிலக்கியக் கல்வியில் நேரும் சிக்கல்களின் தொடர்ச்

சியாக ஒப்பிலக்கிய ஆய்விலும் சிக்கல்கள் தோன்றுகின்றன. பெரும்பாலும் இவ்ஆய்வில் ஈடுபடுபவர்கள் இருமொழி ஒப்பீட்டுப் பொருண்மையை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுப் பொருளைத் தேர்ந்தெடுக்கின்றனர். ஆய்வுக்குரிய இரண்டு மொழிகளிலும் புலமை பெற்று நேரடியான அவ்வம்மொழி நூல்களைப் படித்து ஆய்வு செய்பவராக இருந்தால் பன்மொழி ஒப்பீடாக அமையும். பல நல்ல ஒப்பாய்வுகள் இவ்வகையில் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக வெளிவந்துள்ளன. எனினும் பெரும்பாலானவை மூலமொழியினை அறியாமல் மொழி பெயர்ப்பு வழியாக மேற்கொள்ளப்பெற்ற ஆய்வாக இருக்கக் காண்கிறோம். எல்லா மொழிகளையும் ஒருவர் பயில்வது இயலாதது எனினும் மேற்கொண்ட ஆய்வுப் பொருளுக்கு அடிப்படையான மொழியினையாவது ஆய்வாளர் கற்றிருப்பது நல்லது.

அடுத்து, இத்தகைய ஆய்வுகள் ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முற்பட்ட திறனாய்வுக் கோட்பாடுகளை அடியொற்றியதாக அமைந்துவிடுகின்றன. அதிலும் திறனாய்வு மூல நூல்களை நேரே அணுகாது பிறர் கூற்றாக எடுத்தாளும் மரபுதான் பெரும்பான்மை வழக்காக்க் காண்கிறோம். எனவே, இக்காலத் திறனாய்வுக் கண்ணோட்டமும் இல்லாமல், இக்கால இலக்கியக் கோட்பாடுகளையும் அறிந்து கொள்ளாமல் செய்யப்படுவதால் இத்தகைய ஆய்வுகள் இளைய தலைமுறைக்கும் வழிகாட்டியாக அமையவில்லை; தமிழிலக்கிய மரபுகளின் பெருமைகளையும் உலகுக்கு உணர்த்துவதாக இல்லை.

மேலும், இலக்கியத்தைப் பிறதுறைப் பொருள்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் ஒப்பாய்வு நம் நாட்டில் பெரும்பாலும் மேற்கொள்ளப்பெறவில்லை என்றே கூறலாம். காரணங்கள் இருவகையின: ஒன்று, பிறதுறை அறிஞர்கள் இலக்கியத்தின் மீது ஆர்வம்கொண்டு அதனைத் தம் ஆய்வுக் களமாக மேற்கொள்ளவில்லை; இரண்டாவது, தமிழ் அறிஞர்கள் அல்லது ஆய்வாளர்கள் பிற துறைகளைக் கற்றுத் தேர்ந்தவராக இல்லை. இதற்குக் காரணம் மேலே கூறியவாறு நம்முடைய கல்வித் துறையில் உள்ள குறைபாடு

என்று அறிகிறோம். தமிழ் அறிஞர்கள் இடையில் ஒப்பிலக்கிய ஆய்வு பற்றிய மிகுதியான ஆர்வம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. எனினும் அவர்களை அதற்குரியவராக்குவதற்குரிய சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை. தமிழாசிரியர்களும், தமிழ்த் துறைகளும் இவ்வகையான சூழ்நிலை தோன்றுவதற்கு ஆவன செய்ய வேண்டும். தமிழ் இலக்கியம் கற்க வரும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் தமிழ்ப் பாடத் திட்டங்களை வகுப்பதிலும் அதிகக் கவனம் செலுத்துவது இன்றியமையாதது.

அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் ஒப்பிலக்கிய ஆய்வு (பிஎச்.டி.,) செய்ய விரும்புவோர்க்குரிய நுழைவுத் தகுதிகளாவன :

1. தாய்மொழி இலக்கியப் புலமை
2. தாய்மொழி தவிர்ந்த இரண்டு பிறமொழிகளில் இலக்கியப் பயிற்சி
3. இலக்கியம் தவிர்ந்த இரண்டு பிற துறைகளில் பொது அறிவு
4. இக்கால இலக்கியக் கொள்கைகள் / ஒப்பிலக்கியக் கோட்பாடுகள் பற்றிய சிறப்பறிவு

இத்தகைய இலக்கினை நாம் உடனடியாக அடைய இயலாதெனினும், இந்த இலக்கினை நோக்கி நம் ஆய்வு நகர இப்போதே முயன்றால் வருகின்ற ஆய்வுத் தலைமுறையாவது ஆய்வுத் துறையில் முன்னணியில் நிற்க வாய்ப்பேற்படும். தமிழிலக்கியத்தின் வளமும், தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பும் உலக அரங்கில் எல்லோராலும் அறிந்து பாராட்டப்பெறும் நிலை அப்போதுதான் எளிதில் கைகூடும்.

5. களப்பிரர் வரலாறு

நடன. காசிநாதன்

களப்பிரர் வரலாற்றில் காணப்பெறும் சில சிக்கல்களைக் கீழ்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1) களப்பிரர் ஒருவரா? அல்லது ஒரு குலமா?

2) கள்வர்-களப்பிரர்-களப்பாழர்-களப்பாளர் ஒரே குலத்தவரா?

3) களப்பிரர் தாயகம் எது?

4) எப்பொழுது தமிழகம் வந்தனர்?

5) தமிழகத்தின் அனைத்துப் பகுதியும் அவர்களது ஆட்சியின் கீழ் இருந்ததா?

6) களப்பிரரும் முத்தரையரும் ஒரு குலத்தவரா?

7) கூற்றனார் (அ) கூற்றுவநாயனார் களப்பிரரா?

8) களப்பிரர் காலம் இருண்ட காலமா?

1.1. தமிழ்நாட்டில் களப்பிரர் ஆட்சி நிலவியது என்பதே வேள்விக்குடிச் செப்பேடு கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் தெரியவந்தது. அந்தச் செப்பேட்டில்,

> ''அளவரிய ஆதிராஜரை யகல நீக்கி யகலிடத்தைக்
> களப்ரனென்னும் கலியரைசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
> படுகடன் முளைத்த பருதிபோல பாண்டியாதிராஜன்
> ...... கடுங்கோன்'' வெளிப்பட்டான் என்று காணப்

படுகிறது.[1] அச்செப்பேட்டிலேயே,

> ''பல்யாக முதுகுடுமிப் பெருவழுதியென்னும் பரமேச்வரனால் வேள்விகுடி யென்னப்பட்டது 'கேள்வியிற் றரப்பட்டதனைத் துளக்கமிலாக் கடற்றானையாய் களப்பிரராலிறக்கப்பட்டது''[2]

என்றும் எழுதப்பட்டுள்ளது.

முதலில் கூறப்பட்டுள்ள வாசகத்தில் 'களப்ரனென்னும் கலியரைசன்' என்று ஒருமையிலும், பின்னால் கூறப்பட்

டுள்ள வாசகத்தில் 'களப்பிரரால்' என்று பன்மையிலும் 'களப்பிரர்' அழைக்கப்பட்டுள்ளனர்.

தளவாய்புரம் செப்பேட்டில்,

''கடிநாறு கவினிலங்கல் களப்பாழர் குலங்களைந்தும்'' என்றும்[3]

''கற்றறிந்தோர் திறல் பரவக் களப்பாழரைக்'' என்றும்[4] பன்மையிலேயே கூறப்பட்டுள்ளனர்.

தனியொரு அரசனைக் குறிப்பிடுகையில் களப்பிரன் என்று ஒருமையிலும் களப்பிரர் குலத்தையே குறிக்கையில் 'களப்பிரர்' என்று பன்மையிலும் குறிக்கப்பட்டுள்ளது.

1.2. களப்பிரர் என்பது ஒரு குலத்தின் பெயராகும். சோழநாட்டில் வாழ்ந்த புத்ததத்தர், அச்சுதவிக்கிராந்தனைக் 'களப' குலத்தைச் சார்ந்தவன் என்று குறிப்பிடுகின்றார்.[5] தளவாய்புரச் செப்பேடு 'களப்பாழர் குலம் களைந்தும்' என்று கூறுகிறது.[6] பல்லவ மன்னர்களின் செப்பேடுகள் களப்பிரர்களை, சோழர், பாண்டியர், மழவர் ஆகியவர் களோடு சேர்த்து அழைக்கிறது.[7] ஆதலால் களப்பிரர் பாண்டியர், சோழர், மழவர் போன்ற ஒரு குலத்தவர் என்பது உறுதியாகிறது.

2.1. கள்வர், களப்பிரர், களப்பாழர் அனைவரும் ஒரே இனத்தவரா அல்லது வெவ்வேறு இனத்தவரா என்பதில் சிக்கல் எழுந்தது. சங்க காலத்தில் வேங்கட மலையை ஆட்சி செய்த புல்லி என்னும் மன்னன் 'கள்வர் கோமான்' என்று அழைக்கப்படுகிறான்.[8] வேங்கடமலை தமிழ்நாட்டின் வட எல்லையாக விளங்கிய பகுதி என்றும்; அதனை ஆட்சி செய்த புல்லி களப்பிரனாக இருக்க முடியாது என்றும் மு. அருணாசலம் அவர்கள் கருதுகிறார்கள். கள்வர் கோமான் என்பதற்குத் 'திருடர்களின் தலைவன்' (Robbers Leader) என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார். மேலும் ''கள்வர்' என்னும் தமிழ் வார்த்தை வடமொழியில் 'களப்பிரர்' என்று ஆகியிருக்க முடியாது என்றும், 'கள்வர்' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு 'ஸ்தேய' என்பதுதான் வடமொழிச் சொல் ஆதலால் கள்வர், களப்பிரர் ஆகி யிருக்க முடியாது என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறு கிறார்.[9]

செந்தலைக் கல்வெட்டில் முத்தரைய மன்னன் சுவரன் மாறன் 'கள்வர் கள்வன்'[10] என்று குறிப்பிடப்பட்டுள்ளான். கள்வர்களுக்குக் கள்வன் என்பது அதன் பொருள். அதாவது களப்பிரர்களை வென்றவன் என்று பொருளாகும்.

அதேபோன்று கோயம்புத்தூர் மாவட்டம் பொன்னிவாடியில் கிடைத்துள்ள களப்பிர மன்னன் ஸ்ரீகோக்கண்டன் இரவியின் கல்வெட்டு 'கலி நிருப கள்வனாயின ஸ்ரீ கோக்கண்டன் இரவி' என்று தெரிவிக்கிறது. 'கலிநிருப' என்னும் வடமொழிச் சொல்லுக்குக் 'கலி அரசன்' என்பது தமிழ்ச் சொல்லாகும். 'களப்ரனென்னும் கலி அரசன்' என்று வரும் வேள்விக்குடிச் செப்பேட்டு வாசகத்தின் மறுவடிவமே 'கலிநிருப கள்வன்' என்பதாகும். ஆதலால் களப்ரர், கள்வன் என்று அழைக்கப்பட்டது தெரியவருகிறது. புல்லியைக் 'கள்வர் கோமான்' என்று குறிப்பிட்டது களப்ர அரசன் என்று குறிப்பிடுவதின் தமிழ் வடிவமே ஆகும்.

களப்பிரர், களப்பாழர் ஒருவரா என்னும் சந்தேகம் தளவாய்ப்புரச் செப்பேடு கிடைக்கப்பெற்றவுடன் தீர்ந்துவிட்டது. 'கள்பாழர் குலங்களைந்தும்' 'களப்பாழரைக் களைகட்ட' என்ற சொற்கள் ஐயத்திற்கிடமின்றி, களப்பிரரைக் குறிப்பிடுவதால் இச்சிக்கல் தீர்ந்துபோன ஒன்றாக ஆகிவிட்டது.

2.2. 'களப்பிரனென்னும் கலி அரசன்' என்பது களப்பிர குலத்தைச் சார்ந்த கலி அரசன் என்று பொருள் கொள்ளப்படுகிறது. கலி அரைசன் என்பதில் காணப்பெறும் 'கலி' என்னும் சொல் கலி என்ற அரசனின் பெயரைச் சுட்டுகிறதா அல்லது களப்பிரர் குலத்தைச் சுட்டுகிறதா என்பதில் சிக்கல் ஏற்படுகிறது. 'கலி' என்ற முதல் மன்னனின் பெயரைச் சுட்டுவதாகக் கொள்ளலாம். ஏனெனில் பொன்னிவாடி கல்வெட்டில் 'கலிநிருப கள்வனாயின ஸ்ரீகோக்கண்டன் இரவி' என்று பிற்கால மன்னனது பெயரைத் தனியாகத் தெரிவிப்பதாலாகும். 'கலி' என்ற குலத்தைக் குறிக்கிறது எனில் களப்பிரர் என்ற குலத்தோடு கலி குலம் என்று மற்றொரு குலத்தையும் குறிப்பதாக ஆகும். அது ஏற்க இயலாது.

இந்தியா முழுவதுமாக வழங்கி வந்த கலியப்தம் அல்லாது 'கலி ஆண்டு' என்று ஒரு ஆண்டு கருநாடகத்தில் வழக்கில் இருந்தது கன்னட கல்வெட்டால் உணரப்படுகிறது. அவ்வாண்டு கி.பி. 383-இல் தொடங்கியுள்ளது. 'கலி' என்ற பெயரையுடைய ஒரு. களப்பிர மன்னனால் இவ்வாண்டு தொடங்கப் பெற்றிருக்கலாம். ஆதலால் களப்பிர மன்னர்களனைவரையும் இக்கலியின் வழி வந்தவர்கள் என்று சுட்டுவதற்காகக் 'கலி அரசன்' அல்லது 'கலி நிருபன்' என்று கூறுவதாகக் கொள்ளலாம்.

மு. அருணாசலம் அவர்கள் 'கலி' என்பதற்குக் கொடூரம், கொடுங்கோன்மை, கர்வம் என்று பொருள் கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். எந்த மன்னனும், தம்மைக் கொடூரமானவன், கொடுங்கோன்மையன், கர்வமுடையவன் என்று கூறிக்கொள்ள மாட்டான். வேள்விக்குடிச் செப்பேட்டில் 'கொற்கைக் கிழான் நற்கொற்றனின்' வழி வந்தவன் களப்பிரரைக் குறிப்பிடுகையில் 'களப்பிரனென்னும் கலி அரைசன்' என்று கூறியுள்ளான். அவன் கூறுவதாக வருமிடத்தில் வேண்டுமெனில் கொடூரமான களப்பிரன் என்ற பொருள் சரியாகத் தோன்றலாம். ஆனால் பொன்னிவாடிக் கல்வெட்டில் 'கலிநிருப கள்வனாயின ஸ்ரீ கோக்கண்டன் இரவி' என்று கூறப்படுமிடத்தில், களப்பிர மன்னனின் ஆளுகைக்குக் கீழ் உள்ள ஒருவன் அளிக்கும் கொடையைத் தெரிவிக்கும்போது தம் மன்னனைக் கொடூரமானவன் என்று குறிப்பிடுவானா? இருக்க முடியாது. ஆதலால் மேலே கூறியுள்ளது போன்று கலி என்ற மன்னனின் வழி வந்தவர்கள் என்பதைக் குறிப்பதாகக் கொள்வதே ஏற்புடையதாகும்.

3.1. களப்பிரர் தாயகம் எது என்பதில் சிக்கல் எழுந்துள்ளது. சிலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் களப்பிரர் என்கின்றனர். சிலர் களப்பிரர் வெளிநாட்டவர் என்றும், களப்பாளர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்றும் கூறினர். வேறு சிலர் களப்பிரர் மைசூர்ப் பகுதியிலுள்ள சிரவண பெலகொள என்னும் இடத்திலுள்ள சிக்கபெட்டா என்ற மலைப்பகுதியிலிருந்து வந்தவர்கள் என்றும் கூறுகின்றனர்.

வட்டாரதனே என்னும் சமண நூல் மௌரியப் பேரரசனாகிய அசோகனின் பாட்டன் சந்திரகுப்த மௌரியன்

தம் பௌத்தக் குருவான பத்திரபாகு முனிவருடன் தென்னாட்டுக்கு வந்து களபப்பு நாட்டில் உள்ள களபப்பு மலையில் தங்கினான் என்று தெரிவிக்கிறது. தற்போதுள்ள சிரவணபெலகொள பிரதேசமே பழைய களபப்பு நாடு என்பதாகும். தற்போதுள்ள சந்திரகிரி மலை அல்லது சிக்கபெட்டாவே களபப்பு மலையாகும். இக்களபப்பு என்னும் பெயர் தமிழ்ப் பெயரான களவெற்பு என்பதின் கன்னட மொழிபெயர்ப்பாக இருக்கலாம். வெற்பு என்றால் மலை என்று பொருள். 'களவெற்பு' என்பது கன்னடத்தில் 'களபெற்பு' என்று ஆகி, பின்னர் 'களபப்பு' என்று வழங்கியிருக்கலாம். களவெற்பு என்பதற்குப் பொருள் களப்பிரரின் மலை என்பதாகும். ஆதலால் முதலில் இப்பகுதியிலிருந்துதான் களப்பிரர் தமிழகத்தின் வடபகுதியான வேங்கடத்துக்கு வந்திருக்க வேண்டும். கி.மு. 3-2-ஆம் நூற்றாண்டிலேயே களப்பிரர் மலை என்று இருந்திருக்கிறதென்றால் களப்பிரர் அந்தக் காலம் தொட்டே ஒரு நாடோடி இனமாக (Tribes) இருந்து பின்னர் ஆட்சியைப் பிடித்திருக்கிறார்கள் என்று உணரலாம்.

4.1. கி.பி, முதல்-இரண்டு நூற்றாண்டு அளவில் தமிழகத்தின் வடபகுதியில் புல்லியின்கீழ் களப்பிர அரசு ஏற்பட்டுவிட்டது. புல்லிக்குக் கன்னடமும் தெரிந்திருக்கும்; தமிழும் தெரிந்திருக்கும். மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் தம் நூலில் களப்பிரர் வேறு; கள்வர் வேறு என்று கூறி, களப்பிரர் கன்னடம் பேசினர், கள்வர் தமிழ் பேசினர் என்று கூறியுள்ளார். பல்லவர்களின் தாய்மொழி வடமொழிதான். தமிழகத்தை ஆட்சி செய்கையில் தமிழையே ஆட்சிமொழியாகக் கொண்டிருந்தனர். ஆதலால் திரு. சீனி. வேங்கடசாமி அவர்கள் கருத்து ஏற்க இயலாது உள்ளது.

5.1. கி.மு. முதல் நூற்றாண்டளவில் தமிழகத்துக்கு வந்து, கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டளவில் வேங்கடமலையை ஆட்சி செய்யும் குறுநிலத் தலைவராகக் களப்பிரர் ஆகிவிட்டனர். முதலில் மழபுலத்தை வென்று தம் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தினர். பின்னர் சோழ நாட்டையும், அதன் பின்னர் பாண்டிய நாட்டையும், இறுதியில் கொங்குப் பகுதியையும் வென்று ஆட்சி புரிந்துள்ளனர் என்பதற்குப் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

சோழ நாட்டில் ஆட்சி புரிந்துள்ளனர் என்பது சோழ நாட்டில் வாழ்ந்த புத்த தத்ததேரரின் நூலான வின்யவினிச் சயம் என்னும் நூலிலிருந்து புலனாகிறது. இவர் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். அச்சுத விக்கந்தன் என்னும் களபகுல மன்னனின் வேண்டுகோளுக் கிணங்க இந்நூலை இயற்றியதாகக் கூறியுள்ளார்.

இந்தச் சமயத்திலிருந்தோ அல்லது இதற்குச் சிறிது காலம் முந்தையதிலிருந்தோ பாண்டிய நாட்டில் களப்பிரர் கள் ஆட்சி புரிந்துள்ளனர் என்பதற்கு இராமநாதபுரம் மாவட்டம் பூலாங்குறிச்சியில் கிடைத்துள்ள கோச்சேந்தன் கூற்றன் கல்வெட்டும், கூற்றுவ நாயனார் புராணமும், வேள்விக்குடிச் செப்பேடும் சிறந்த சான்றுகளாகும்.

5.2. பூலாங்குறிச்சிக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் ஆண்டு இன்னமும் பெரும் புதிராகவே உள்ளது. இதில் வரும் ஆண்டு பெரும் வழக்கிலிருந்த சக ஆண்டா, விக்ரம ஆண்டா, அல்லது கொல்லம் ஆண்டா என்று பார்த்தால் அக்கல்வெட்டின் எழுத்தமைதிப்படி எந்த ஆண்டுக்கும் ஒத்து வரவில்லை. ஒருவேளை இந்த ஆண்டு சிரவணபெல கொள பகுதியில் களப்பிரரால் பயன்படுத்தப்பட்ட கலி ஆண்டாக இருக்கலாமோ என்று ஆய்ந்தால் அதுவும் இருக்க முடியாது என்று ஆகிறது. ஏனெனில் இக்கலி ஆண்டு கி.பி. 383-இல் தொடங்குகிறது. பூலாங்குறிச்சி கல்வெட்டு 192-இல் எழுதப்பட்டுள்ளது. 383 உடன் 192-ஐக் கூட்டினால் 575 ஆகிறது. அதாவது கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்குச் செல்கிறது. கி.பி. 550-இலேயே கடுங் கோன் களப்பிரர்களைத் தோற்கடித்து விட்டான். அவ் வாறு இருக்கையில் கி.பி. 575-இல் களப்பிர மன்னர் தன் பெயரில் கல்வெட்டை வெட்டியிருக்க முடியாது. ஆதலால் தமிழகத்துக்குக் களப்பிரர் வந்த நாளிலிருந்து இந்த ஆண் டைக் கணக்கிலெடுத்துக் கொள்ளலாமா என்ற எண்ணம் ஏற்படுகிறது.

5.3. கடுங்கோனால் தோற்கடிக்கப்பட்ட பிறகு கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து—கொங்குப் பகுதி யிலிருந்து பல்லவர்களைக் களப்பிரர்கள் எதிர்த்து வந்திருக் கின்றனர். பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு காலம் முதல்

இராஜசிம்மன் காலம் (கி.பி. 700 முதல் 730 முடிய) வரை களப்பிரர் பல்லவர்களுக்கு நீங்கா இடையூறு செய்தவண்ணம் இருந்திருக்கின்றனர்.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கொங்குப் பகுதியில் தனி ஆட்சி புரிந்துள்ளனர் என்பதற்குப் போதிய கல்வெட்டுச் சான்றுகள் கிடைத்துள்ளன. சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வரை களப்பிர மன்னன் ஒருவன் பெயர் கூடத் தெரியாமல் இருந்தது. இக்கட்டுரையாளர் முதன் முதலில் களப்பிர மன்னர்கள் சிலரது பெயரைக் கண்டறிந்து வரலாற்று உலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

கண்டன், அவர் மக்கள் கண்டன் வீர நாராயணன், கண்டன் இரவி; இரவியின் புதல்வர்கள் இரவி கண்டன், இரவி கோதை; வரகுண பராந்தகன் போன்ற களப்பிர மன்னர்கள் முதன் முறையாக இனம் கண்டு கொள்ளப் பட்டனர். இவர்களது கல்வெட்டுகள் கோவை மாவட்டம் பொன்னிவாடி, வெள்ளலூர், கீரனூர் மற்றும் பழநி, ஈரோடு, பரமதேசம், பேரூர் ஆகிய இடங்களிலும் கிடைத்துள்ளன.

கோக்கண்டன் வீரநாராயணன் என்பவன் களப்பிர மன்னனாக இருக்கலாம் என்று ஊகத்தால் இக்கட்டுரையாளரின் நூலில் எழுதப்பட்டது. இதை மெய்ப்பிக்கும் வகையில் அண்மையில் வெள்ளலூரிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ள வீரநாராயணன் கல்வெட்டில் அவன் மற்ற களப்பிர மன்னர்கள் பிற கல்வெட்டுகளில் குறிக்கப்படுவது போன்றே சந்தராதித்ய குல திலகன் விர்வபௌமன் ஸ்ரீ வீரநாராயணன் என்று எழுதப்பட்டுள்ளான். ஆதலால் இம்மன்னனும் களப்பிர மன்னன்தாம் என்பது உறுதியாகி விட்டது. களப்பிரர்கள் கொங்கு நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிவரை ஆட்சி புரிந்துள்ளனர். அதற்குப் பின்பு சோழர்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதியையும் ஆட்சி செலுத்தத் தொடங்கியதும் களப்பிரர்களில் சிலர் அரசு அலுவலர்களாகச் சோழர் அரசில் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

6.1. களப்பிரரும் முத்தரையரும் ஒரே குலத்தவரா அல்லது வெவ்வேறு குலத்தவரா என்பதில் இன்னமும் விவாதம் இருந்துகொண்டே உள்ளது. இக்கட்டுரையாளர் தம் நூலில்

களப்பிரரும் முத்தரையரும் வெவ்வேறு குலத்தவர் என்பதற்குப் பல காரணங்களை எடுத்துக்காட்டியுள்ளார். இருப்பினும் இன்னமும் சிலர் அவர்கள் இருவரும் ஒரு குலத்தவரே என்று வாதிடுகின்றனர். ஆராய்ச்சியாளர்கள் தான் தீர்ப்புக் கூறுதல் வேண்டும்.

களப்பிரர் முத்தரையர் வெவ்வேறானவர் என்பதற்குக் கீழ்வரும் காரணங்களைக் கூறலாம்.

1) முதலாம் நரசிம்மவர்மன் காலத்தியக் கல்வெட்டு ஒன்றில் முத்தரையர் பல்லவ மன்னனுக்கு அடங்கிய சிற்றரசராகக் காணப்படுகிறான். ஆனால் நரசிம்மவர்மன் களப்பிரரை எதிர்த்துப் போரிட்டதைப் பல்லவர் செப்பேடுகள் கூறுகின்றன.

2) இரண்டாம் நந்திவர்மன் பல்லவமல்லனை அரியாசனத்தில் அமர்த்தியவர்களில் காடகமுத்தரையன் என்று ஒருவனும் குறிக்கப்படுகிறான். ஆனால் இம்மன்னனின் கால்களில் வீழ்ந்து வணங்குவதற்குச் சமயத்தை எதிர்பார்த்து இருந்த மன்னர்களில் களப்பிரனும் ஒருவனாகக் குறிக்கப்படுகிறான்.

3) செந்தலைக் கல்வெட்டில் குறிக்கப்பெறும் முத்தரைய மன்னர்கள் 'கலி அரசர்' என்றோ, 'சந்த்ராதித்ய குல திலகன்' என்றோ குறிக்கப்படவில்லை. அதே போன்றே களப்பிரர்களும் ஒரு கல்வெட்டில்கூட 'முத்தரையர்' என்று அழைக்கப்படவில்லை.

4) 'கள்வர் கள்வன்' என்ற செந்தலைக் கல்வெட்டில் குறிக்கப் பெறுவதைக் கள்வர்களாகிய களப்பிரர்களுக்கு எதிரானவன் என்றே பொருள் கொள்ள வேண்டும். மல்லர் மல்லன், கண்டர் கண்டன் போன்ற சொற்களை உதாரணங்களாகக் கூறலாம்.

7.1. கூற்றுவ நாயனார் களப்பிரர் என்பதிலும் சிக்கல் எழுந்துள்ளது.

"நாதன் திருவடியாகக் கவித்து நல்ல
போதங் கருத்திற் பொதிந்தமை யாலது கை கொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலமெல்லாம் ஒரு கோலின் [வைத்தான்
கோதை நெடுவேற் களப்பாளனாகிய கூற்றுவனே"

இப்பெரிய புராணப் பாடல் கூற்றுவரைக் களப்பாளர் என்றும் கோதை நெடுவேல் என்றும் கூறுவதிலிருந்தே, இவர் களப்பிரர்தான் என்பதில் ஐயமில்லை.

இக்கூற்றுவனார், சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத் தொண்டத் தொகையில் ''ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைகோன்'' என்று குறிப்பிடப்படுகிறார். பூலாங் குறிச்சி கல்வெட்டானது 'சேத்தங்கூற்றர்' என்ற மன்னரைக் குறிப்பிடுகிறது. அதனால் கூற்றர்தான் இச்சேந்தங்கூற்றர் என்பது உறுதியாகிறது. சேந்தங்கூற்றனில் உள்ள சேந்தன் என்னும் பெயர் கூற்றனின் தந்தையைக் குறிப்பிடுகிறது என்று கொள்ளலாம்.

7.2. இக்கூற்றர் களந்தைகோன் என்று பேசப்படுகிறார். களந்தை எங்குள்ளது என்பதில் பலவிதமான கருத்துக்கள் எழுந்துள்ளன. மயிலை சீனி. வேங்கடசாமி சோழ நாட்டில் உள்ளது என்று தெரிவித்துள்ளார். டாக்டர் கே.கே. பிள்ளை களந்தை தொண்டை நாட்டைச் சேர்ந்தது என்று கூறி யுள்ளார். இக்கட்டுரையாளர் பாண்டி நாட்டில் உள்ளது என்று தம் நூலில் எழுதியுள்ளார். அதற்கு ஆதாரம் சேந்தங்கூற்றன் கல்வெட்டு பாண்டிய நாட்டுப் பகுதியில் கிடைத்தமையும், பாண்டி நாட்டுக் களந்தை முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் பல உயர் அரசு அலுவலர்களை வழங்கியுள்ளமையாலும் ஆகும்.

8.1. தமிழ்நாட்டில் களப்பிரர் காலம் இருண்ட காலம் என்று வருணிக்கப்படுகிறது. அதை அப்படியே ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

வேங்கடத்தை ஆண்ட புல்லி, புலவர்களுக்குப் பரிசுகள் அளித்து கௌரவித்ததைத் தமிழ்நாட்டுப் புலவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர்.

காவிரிப் பூம்பட்டினத்தை ஆண்டு வந்த களப மன்னர் அச்சுதவிக்கராந்தன் காலத்தில் பல பௌத்த நூல்கள் எழுதப்பட்டு இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றுள்ளன.

சேந்தங்கூற்றன் கல்வெட்டு களப்பிரர் காலத்தில் நில விய அரசியல், சமுதாயம், சமய ஒற்றுமை ஆகியனவற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்து இயம்புகிறது. இம்மன்னன்

காலத்தில் பல பிரமதேயங்கள் இருந்திருக்கின்றன. தேவ குலங்கள் (இந்து கோயில்கள்) எடுக்கப்பட்டுள்ளன. அரசு அதிகாரிகள் பலர் நியமனம் செய்யப்பட்டு, அரசு செம்மை யாக இயங்கி வந்துள்ளது.

களப்பிரர்களில் ஒருசில மன்னர்கள் (மூர்த்தி நாயனார் காலத்தில் இருந்தவரும் வேள்விக்குடிச் செப்பேட்டில் கூறப் படுபவரும்) வைதீகச் சமயத்துக்கு எதிர்ப்பானவர்களாக இருந்திருக்கலாம். அதைக்கொண்டு நாடே சீரழிந்து விட்டது என்று கொள்வது ஏற்புடைத்தன்று.

சோழ மன்னர்களில் ஒருவன் திருவரங்கத்து எம்பெரு மானைக் கடலில் வீசினான் என்பதற்காகவும், இராமானு ஜர் சோழ மன்னனால் நாடு கடத்தப்பட்டார் என்பதற் காகவும் சோழ மன்னர்கள் அனைவரும் வைணவ சமயத் துக்கு எதிர்ப்பானவர்கள் என்றோ, அவர்கள் காலம் வர லாற்றில் இருண்ட காலம் என்றோ, கொள்ள எந்த வரலாற்றாசிரியரும் துணிவதில்லை. ஆனால் களப்பிரர் காலத்தை மட்டும் நன்கு ஆராயாமல் பேசியும், எழுதியும் வருகின்றனர். அக்கருத்து மாற்றப்படுதல் வேண்டும்.

குறிப்புகள்

1. பாண்டியர் செப்பேடுகள் பத்து, ப. 38.
2. மேற்படி, ப. 42.
3. மேற்படி, ப. 125.
4. மேற்படி, ப. 126.
5. மேற்படி, பிற்சேர்க்கை, ப. அ-46.
6. பாண்டியர் செப்பேடுகள், பத்து, ப. 125.
7. பல்லவர் செப்பேடுகள் முப்பது, ப.
8. அகநானூறு, 393.
9. M. Arunachalam, Kalabhras in Tamilnadu, p.
10. Epi. India, Vol. XIII, p. 143-44.

6. காரைக்காலம்மையார் படைப்புகள்

வி. சி. சசிவல்லி

சைவ சமயத்திற்குரிய கடவுட்பழம் பாடல்களைச் சான்றோர் பன்னிரு திருமுறைகளாக வகுத்தனர். அவற்றுள் பதினொராந்திருமுறை பன்னிருவர் அருளிய திருப்பாடல்களின் தொகுப்பாய் விளங்குகிறது. இத்திருமுறையின் தொடக்கத்தில் திருவாலவாயுடையார் வழங்கிய திருமுகப் பாசுரம் ஒன்றுள்ளது. அதனை அடுத்துக் காரைக்கால் அம்மையார் அருளிய அற்புதத் திருவந்தாதி. இரட்டைமணி மாலை, மூத்த திருப்பதிகங்கள் இரண்டு ஆகிய பக்திச்சுவை கனிந்த தெய்வீகப் படைப்புகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் அற்புதத் திருவந்தாதி இறைவனைச் சூழ்ந்து போற்றி நிற்கும் பூதகணங்களின் வடிவம் வேண்டியபடியே கிடைக்கப் பெற்றமைக்கு மகிழ்ந்தும், இறைவனது அருட்கோலங்களின் காட்சிகளில் திளைத்தும் வியந்தும் அம்மையார் பாடியது. இறைவனது சீர்களைப் பொருளாகக் கொண்டது இரட்டை மணி மாலை; மூத்த திருப்பதிகங்கள் இரண்டனுள் முதல் பதிகம் இறைவனாடிய இடமாகிய திருவாலங்காட்டையும் இரண்டாம் பதிகம் இறைவனாடிய ஆடலையும் அழகுற எடுத்தியம்புவன.

தமிழில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகளுள் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியும், திருவிரட்டைமணி மாலையும், திருப்பதிகங்களும் காலத்தால் முந்தியவை. அம்மையார் அருளிய இந்நூல்களில் 143 செய்யுட்கள் உள்ளன. அனைத்துப் பாடல்களிலும் அவரது ஒப்புயர்வற்ற இறையன்பு ஒளிவிடுகின்றது. அம்மையாரின் பாக்களிலுள்ள இயற்கை வருணனையும், திருவருட்டிறமும், தத்துவ நுட்பமும், இறைவனின் இயல்புகளும் பிறவும் பாவலர்கட்கும், திருவருள் நெறியினர்க்கும், தத்துவ ஆராய்ச்சியினர்க்கும் பெருவிருந்து அளிப்பன என்பதில் ஐயமில்லை. எனினும் காலத்தின் தேவைக்கும் மனிதமன வளத்தின் மாட்சிக்கும் ஏற்பத் திறனாய்வு முறைகள் பெருகியுள்ள இக்காலத்தில்

இவற்றையும் மனத்துள் கொண்டு ஆராயப்புகின் புதுவது பயக்கும் தன்மை வாய்ந்த முடிவுகள் காண்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும். இந்நோக்கில் ஆயும்பொழுது, அம்மையாரின் படைப்புக்கள் பற்றிய ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள் எவை? அவற்றிற்குத் தீர்வுகாண முடியுமா? என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். எனவே, பின் வரும் பாகுபாட்டில் இத்தலைப்பில் எழும் சிக்கல்களை அணுகலாம்.

1. காரைக்காலம்மையார் படைப்புகள் பெறுமிடம்
2. அம்மையார் வாழ்ந்த காலச்சூழல்
3. அம்மையாரின் பெயர்
4. அம்மையார் கண்ட ஆடல்.

1. படைப்புகள் பெறுமிடம்

இறைவன் எங்கோ வாக்கு, மனம் செல்லாத இடத்தில் இருப்பவனாகக் கூறிக்கொண்டிருந்த நிலைபோக, நினைப்பவர் நெஞ்சுகளிலே நிற்குந் தன்மையனாய், ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அருள் செய்பவனாய் காணும் நிலை தான் இத்தமிழ்நாட்டுப் பக்தி மார்க்கத்தின் உயிர்நாடியாகும். இறைவனிடம் அன்பு கொண்டு ஏத்தினால் இருவினை அகலும், பிறவி நீங்கும், இவற்றால் அவலம் அகலும் என்ற கருத்துகள் தமிழர்தம் சிவவழிபாட்டு வளர்ச்சியில் காணப்பெறும் புது வளர்ச்சியாகும். தேவாரப் பாக்களை அருளிய மூவர் முதலிகள் இரண்டு நூற்றாண்டுகள் கழித்து இத்தமிழகத்தில் கொணரப்போகும் புதிய பக்திவழிச் சைவ சமயத்திற்கு வித்திட்டவர் காரைக்காலம்மையார் ஆவர்.

இவர் வாழ்ந்த காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்பது அறிஞர்தம் கருத்து. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த திருஞானசம்பந்தர் அம்மையாரைப் போற்றியுள்ளதால் அவருக்கு முற்பட்டவர் அம்மையார் என்பது பெறப்படும். சுந்தரர் தமது திருத்தொண்டத் தொகையில் ''பேயார்க்கு அடியேன்'' என்றும், சைவத் திருமுறைகளை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் தாம் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியில்,

''நம்பன் திருமலை நான்மிதியேன் என்று தாளிரண்டும்
உம்பர் மிசைத்தலை யானடந் தேற, வுமைநகலுந்

செம்பொன் உருவனென் னம்மை யெனப்பெற்
[றவள்செழுந்தேன்
கொம்பி னுகுகாரைக் காலினின் மேய குலதனமே''
(29)

என்றும் அம்மையாரைப் போற்றியுள்ளார்.

சிவபெருமானின் புகழ் பாடியவர்; சிவ வழிபாட்டிற்கு நெறியமைத்தவர்; மூவர் முதலிகளுக்கு முன்னோடியாய் இருந்தவர்; திருமுறைகளை வகுத்த நம்பிகளாலும் பாடப் பட்டவர் ஆகிய அம்மையாரின் பாடல்கள் சைவத் திரு முறைகளுள் முதல் திருமுறையாக இடம்பெறாமைக்குரிய காரணம் என்ன என்ற வினா எழுகிறது. 1. அம்மையாரின் அருஞ்செயலைப் போற்றிப் பரவியவர்கள் அவர்தம் பாக் களை அறிந்திருக்கவில்லையா? 2. அம்மையார் பாடல்கள் அந்தாதி, பதிகம், இரட்டைமணிமாலை ஆகிய பாவகைகள் முதன்முதலில் பாடப்பட்டாலும் சிற்றிலக்கிய வகையைச் சார்ந்தவை என்பதால் பக்திச் சிற்றிலக்கியங்களின் தொகுப் பாக அமைந்த பிரபந்தமாலை எனப்படும் பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட்டதா? 3. அல்லது பெண்பேயால் பாடப்பட்டதை முன்வைக்க முனையவில்லையா? என்ற எண்ணங்கள் எழுந்தாலும் இதற்குத் தீர்வு காண இயல வில்லை.

2. அம்மையார் வாழ்ந்த காலச்சூழல்

அம்மையார் திருஞான சம்பந்தரால் போற்றப் பெறுபவ ராதலால் அவர் காலத்திற்கு முற்பட்டவராவர். அதனால் அம்மையார் களப்பிரர் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப் படுகிறார். அப்பொழுது தென்னாட்டில் சமணமும் பௌத் தமும் பரவியிருந்த காலம். தேவாரப் பாடல்களில் பதிகந் தோறும் புறச்சமயம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. ஆனால் அம்மையார் பாடல்களில் ஓரிடத்தில் மட்டும் 'நூலறிவு பேசி நுழைவிலாதார் திரிக' (அ.தி. 33) என்று வந்துள்ள குறிப்பைத் தவிர சமணம், பௌத்தம் பற்றிய வேறெந்தக் குறிப்பும் காணப்படவில்லை. அப்படியானால் களப்பிரர் காலமான அவருடைய காலத்தில் ஏன் அவர் களைப் பற்றிக் கூறவில்லை என்பதையும் சிந்திக்க வேண்டும்.

அம்மையாரின் பெயர், உருவம் ஆகியவை கேள்விக் குரியவையாக இருந்த போதிலும் அவர் காரைக்கால் பகுதி

யைச் சேர்ந்தவர் என்பதில் ஐயமில்லை. காரைக்கால் சோழ நாட்டுடன் இணைந்த பகுதியாகும். சோழநாட்டுப் பகுதி யில் புகுந்த களப்பிரர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மதமாற்றம் முதலியவற்றில் சமணர்போல ஈடுபாடு கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் அம்மையார் வாழ்ந்த பகுதி பௌத்தப் பகுதியாதலின் சமணக் களப்பிரர் புகுந்த இடங்களில் விளைந்த துன்பங்கள் அங்கு இல்லாமல் இருந்திருக்கலாம். இதனால் களப்பிரரால் ஏற்பட்ட விளைவு களை அம்மையார் நினைக்கவோ பாடவோ இல்லை என்று கருதலாம்.

சிவன் என்னும் பெயர்

காரைக்காலம்மையார் சிறந்த சிவபக்தர். அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் சிவனைப் பற்றியவை. அவர் பாடி யருளிய இரட்டை மணிமாலை முழுவதும் சிவனின் பெருமை களைப் புகழ்ந்து கூறுவதாகவே உள்ளது. அம்மையார் இறைவனை அடிகள், அந்தணன், அரன், அழகன், ஆதிரை யான், ஈசன், குழகன், சங்கரன், நம்பன், பரமன், மாயன், விமலன், வேதியன் என்ற பல பெயர்களால் குறிப்பிட் டுள்ளார். என்றாலும் எந்தச் செய்யுளிலும் 'சிவன்' என் னும் பெயர் இடம்பெறவில்லை. ஆனால் தேவார காலத் திலிருந்து சிவன் என்னும் இறைவன் திருநாமம் பயன் படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். இதற்குக் காரணம் என்ன?

தமிழ் இலக்கிய வரலாற்றில் காலத்தால் முற்பட்டன வாகக் கருதப்படும் சங்கப் பாடல்களிலும், தொல்காப்பியத் திலும் சிவன் என்ற பெயர் பயன்படுத்தப்படவில்லை. அச் சொல் அன்று வழக்கில் இல்லாமல் இருந்திருக்கலாம். அதைப் போலவே அம்மையார் வாழ்ந்த காலத்திலும் சிவன் என்ற பெயர் வழக்கிலில்லையா? என்று கருத வேண்டி யுள்ளது.

சங்க காலத்தில் வேதம் முதலியனவும், ஆலமர் செல்வ னாகிய இறைவனும் பேசப்படினும் இரண்டையும் சேர்க்கும் இடத்தில் சிவபிரான் வேதத்தை ஓதுவதாகவே கூறினர். புறநானூற்றுப் பாடலொன்று 'முது முதல்வன்' என்று சிவனது முதன்மையை ஏற்றுக்கொண்டாலும் அவன் பாடுவ தாகவே வேதத்தைக் கூறிற்று.[1] ஆனால் அம்மையார் இறை

வனை வேதப்பொருளாக உள்ளவன் என்றும் வேதத்துக்கு முற்பட்டவன் என்றும் சிறப்பித்து,

''வேதியனை வேதப் பொருளானை வேதத்துக்
காதியானை''

(திருவிரட்டைமணிமாலை — 8)

என்று கூறுகிறார். இதனால் சங்க காலத்தில் கூறப்பட்ட வேதம் வேள்வி என்பன அம்மையார் காலத்திலும் நிலைத்து நின்றுவிட்டன என்பதை உணர்ந்தாலும் அதிலும் ஒரு வளர்ச்சி ஏற்பட்டுள்ளதைக் காணலாம்.

3. அம்மையாரின் பெயர்

அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டைமணிமாலை, திருப் பதிகங்கள் ஆகிய மூன்று நூல்களையும் பாடியவர் காரைக் கால் அம்மையார். இந்நூல்களில் இவர் தம்மை யார் என்று அறிமுகப்படுத்திக்கொள்ளும் இடத்தில் 'காரைக்காற் பேய்' என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். அப்படி எனின் 'காரைக்கால் பேய்' என்பது இவரது இயற்பெயரா அல்லது காரணப் பெயரா? என்பதைச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

சங்ககாலப் புலவருள் ஒருவர் பெயர் 'பேய்மகள் இள வெயினி' என்றிருப்பதைக் காணலாம். வைணவ சமயத் தில் ஆழ்வார்களுள் முதலாழ்வார் பேயாழ்வார் எனப்படு கிறார். இவற்றைப் போல அம்மையாருக்கும் காரைக்காலில் பிறந்த பேயார் என்பது ஏன் இயற்கைப் பெயராய் இருந் திருத்தல் கூடாது? என்றாலும் அம்மையார் வாக்கிலேயே,

''.... செடிதலைக் காரைக்காற்பேய்...'' (மூ.தி.1.11)

''.... கனல்வாய் எயிற்றுக் காரைக் காற்பேய்''
(மூ. தி. 2. 11)

''மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்''

(அ.தி. 86)

என வந்துள்ளதால் அம்மையார் பேய் வடிவுடன் காணப் பட்டவர், அதிலும் பேய் வடிவம் வேண்டிப் பெற்றவர் என்றே கொள்ள வேண்டியுள்ளது. இவர் பேய் வடிவம் பெற்றனர் என்பது, உடலில் தசை குறைந்து போக ஊனி

னைச் சுருக்கி உள்ளொளி பெருக என்புடம்பினராக நில வினர் என்பதை உணர்த்துவதாகும். பொதுவாக மக்கள் தாம் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு மாறுபட்ட தன்மை உள்ள வரைப் பேய் என்று கருதினர்.[2]

மேலும் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதியைப் படிக்கும்பொழுது அவரது மனநிலையை ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. இவர்தம் குழந்தைப் பருவமுதல் எக் காலத்தும் இறைவனின் அருமை பெருமைகளைக் கேட் டறிந்து இறைவனை அடைவதையே தம் குறிக்கோளாகக் கொண்டவர் என்பதை அவரது முதல் பாடலிலேயே,

''பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதற்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்'' (அ.தி.1)

எனக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். மேலும், இவர்தம் எண்ணத்தை வலியுறுத்துவது போல அற்புதத் திருவந்தாதி யின் பதினொராவது பாடலில்,

''ஒன்றே நினைந்திருந்தேன்; ஒன்றே
துணிந்தொழிந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்அடைந்தேன்—
ஒன்றேகாண்
கங்கையான் திங்கள் கதிர்முடியான்
பொங்கொளிசேர்
அங்கையாற்கு ஆளாம் அது'' (அ.தி. 11)

என்றும்,

''அவர்க்கே எழுபிறப்பும் ஆளாவோம் என்றும்
அவர்க்கேநாம் அன்பாவ தல்லால்—படர்சடைமேல்
பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால் மற்றொருவர்க்
காகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்'' (அ.தி. 3)

என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

அம்மையார் இல்லற வாழ்வில் ஈடுபடாமலே, அவர் வாழ்ந்த காலச் சமுதாயத்தில் ஒரு பெண் தனித்து வாழ்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்து வாழும் தனியுரிமைக்கு இடமில்லாத காரணத்தால், அதேசமயம் இறையை எக் காலத்தும் போற்றி மகிழவேண்டும் என்ற தமது தீவிர எண்ணத்தையும் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்ற

ஆழ்ந்த எண்ணத்தால், எல்லோரும் கண்டு அஞ்சும் பேய் வடிவினை வேண்டிப் பெற்றிருக்கக் கூடாதா? என்ற எண்ணம் எழுகிறது. இக்கருத்தினைக் கோடிட்டுக் காட்டு வதுபோல அம்மையாரின்

''பெறினும் பிறிதியாதும் வேண்டேன் நமக்கீது
உறினும் உறாதொழியு மேனுஞ்—சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்'' (அ.தி. 86)

என்றபாடல் அமைந்துள்ளதைக் காணலாம்.

இதுவன்றிப் பொதுவாக, காரைக்கால் அம்மையார் என்றவுடன் மாம்பழம் பெற்ற கதைதான் உடனே எல் லோர்க்கும் நினைவில் வரும். ஆனால் அந்த நிகழ்ச்சிக்கான அகச்சான்று அம்மையார் பாடல்களிலோ, தேவாரப் பாடல்களிலோ, நம்பியாண்டார் பாடலிலோ, பிறநாட்டார் குறிப்புகளிலோ காணப்பெறவில்லை. அப்படியிருக்கப் பெண்மைக்குப் பெருமை தரும் சேக்கிழார் பெருமான் அம்மையார் வேண்டிப் பெற்ற பேய் உருவத்திற்கு ஒரு நல்ல அடிப்படைக் காரணங் கற்பிக்கக் கருதித் தாம் பாடிய காரைக்காலம்மையார் புராணத்தில் பொருத்தமாக இக் கதையைப் பின்னணியாக அமைத்திருக்கலாமோ என்று கருத இடமிருக்கிறது. எனினும் இக்கருத்து மேலும் ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

4. அம்மையார் கண்ட இறைவனாடல்

சிவபெருமானைப் போற்றும் நற்கணத்தில் ஒருவராகிய அம்மையார் ஆலங்காட்டிறைவன் ஈமம் இடுசுடுகாட்ட கத்தே தாழ்சடை எட்டுத்திசையும் வீசி ஆடியருளும் திருக் கூத்தின் இயல்பினையும், அண்டமுற நிமிர்ந்தாடும் அப் பெருமானுக்கு ஆடரங்காகத் திகழும் சுடுகாட்டின் அமைதி யையும், அங்கு வாழும் பேய்களின் செய்கைகளையும் திருப் பதிகங்களில் சுவைபெற விரித்துரைக்கின்றார். இறைவ னடிக்கீழ் என்றும் பாடியும் ஆடியும் இருக்க விழைந்த அம்மையார் தம் பாடல்களில் திருவாலங்காட்டை மட்டுமே குறித்துச் சொல்கிறார். இறைவன் ஆடும் இடங்கள் எனக் குறிக்கப்பெறும் தில்லை, மதுரை முதலிய இடங்கள் அம்மை யாரால் குறிக்கப்படவில்லை.

திருவாலங்காட்டில் அம்மையார் தாம் கண்டதாகக் கூறும் இறைவன் ஆடிய ஆடல் கடுமையும் வேகமும் நிறைந்த தாகக் காணப்படுகிறது.

''காடும் கடலும் மலையும் மண்ணும்
விண்ணுஞ் சுழல அனல்கை ஏந்தி
ஆடும் அரவப் புயங்கன்.....'' (மூ.தி. 1:8)

''துத்தங் கைக்கிளை விளரி தாரம்
உழைஇளி ஓசைபண் கெழுமப்பாடிச்
சச்சரி கொக்கரை தக்கை யோடு
தகுணிதம் துந்துபி தாளம் வீணை
மத்தளங் கரடிகை வன்கை மென்தோல்
தமருகம் குடமுழா மொந்தை வாசித்து
அத்தனை விரவினோடு ஆடும் எங்கள்
அப்பன் இடந்திரு வாலங்காடே'' (மூ.தி. 1 : 9

இறைவன் ஆடிய ஆடலின் வகையைக் கூறும்போது,

''மண்டலம் நின்றங் குளாளம் இட்டு
வாதித்து வீசி எடுத்தபாதம்
அண்டம் உறநிமிர்ந் தாடும்'' (மூ.தி. 1:4)

என்றும்;

இறைவன் ஆடல் புரிந்த காலம், இடம் எவை எனக் குறிப்பிடும்போது

'அந்தியில் மாநடம் ஆடும்' என்றும்;

'மயங்கிடும் கூர்நடு நாளை ஆங்கே
ஈமம் இடுசுடு காட்டகத்தே ஆடும்' என்றும்;
(மூ.தி. 1:10)

இறைவன் ஆடும்போது கொண்டகோலம் எது என எண்ணும்போது,

''பித்தவேடங் கொண்டு நட்டம் பெருமான்
ஆடுமே'' (மூ.தி. 2:4)

என்றும் சித்திரித்துள்ளார்.

ஆடல் வல்லானாகிய இறைவன் ஆடியதாகப் பல்வேறு தாண்டவ வகைகள் கூறப்படுகின்றன. அவற்றுள் இங்கு

அம்மையார் கண்டு மகிழ்ந்த தாண்டவம் எவ்வகையைச் சாரும் என்ற கேள்வி எழுகிறது. அம்மையார் வாக்காக, 'அந்தி நிருத்தம்', 'அந்தி மாநடம்' என்பவையே காணப் படுகின்றன. ஆனால் இவ்வாடல் குறித்து விளக்கம் காண முற்படும் அறிஞர்களுள் சிலர், பேய்கள் தங்கி அலறி உலறும் ஈமம் இடுசுடுகாட்டில், நடுநிசியில் ஆடப்படுவதால் அம்மையார் காலங்கடந்த மகாசங்கார தாண்டவக் காட்சி யைக் கண்டு தரிசித்தனர் என்பர். அம்மையார், சிவபெரு மான் தமது ஒரு காலைத் தலை வரையில் உயரத் தூக்கி ஆடுகிறார் எனப் பாடியுள்ளதால் இத்தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம் என்பர் ஒரு சாரார். இதனை 'லலாட திலகம்' என்று நாட்டிய சாஸ்திரம் கூறும். இறைவன் மிக வேக மாகச் சுழன்று ஆடுவதாகையால் 'சண்ட தாண்டவம்' என்றும், வீடுபேற்றினைத் தருவதாகிய அனுக்கிரகத்தின் பொருட்டுச் செய்வதாகையால் 'அருள்நட்டம் அல்லது அனுக்கிரக தாண்டவம்' எனவும், இத்தாண்டவத்தைக் குறிப் பிட்டுள்ளனர். தொண்டை நாட்டுத் திருவாலங்காட்டிலே ஊர்த்துவ தாண்டவத்தைச் சிவபெருமான் செய்வதாகப் புராணங்கள் கூறுகின்றன.

இறைவனாடிய பல்வேறு தாண்டவங்களுள் தில்லையில் ஆடப்பெறுவது ஆனந்த தாண்டவம் எனப்பெறும். அன்றும் இன்றும் உலகெங்கும் போற்றப்பட்டு வருவது தில்லைத் திருநடனம். இதைப்பற்றிய குறிப்பு எதுவும் அம்மையார் பாடல்களில் காணப்பெறாமைக்குக் காரணம் என்ன?

சங்கச் செய்யுட்களில் கலித்தொகையும், காப்பியங்களில் சிலம்பும் சிவன் ஆடல்களாகப் பாண்டரங்கம், கொடு கொட்டி, காபாலம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனவே அல்லாமல் ஆனந்த தாண்டவம் போன்ற நடராச தாண்டவ வகையைக் குறிப்பிடவில்லை. இவற்றை அடுத்துத் தோன் றிய அம்மையார் பாடல்களிலும் இந்நிலை நீடித்திருக்கலாம் அல்லது அம்மையார் பேய்க்கணத்துள் ஒருவராக இருக்க விரும்பியதால் சுடுகாட்டில் பேய்களுடன் தாம் ஆடும் ஆடலை அம்மையார்க்கு இறைவன் அருளியிருக்கலாம். எப்படி இருப்பினும் டாக்டர் க.த. திருநாவுக்கரசு குறிப்பிட் டுள்ளதுபோல, "இந்தக் கூத்தினைப் பிற்காலத்தில் சிறப் பித்துப் பேசப்படும் இறைவனுடைய பிற கூத்துக்களுக்கெல்

ல்ாம் முன்னோடி எனவும், மூலமுதல் வடிவம் எனவும் கருத இடமுண்டு''.[3]

காரைக்கால் அம்மையார் படைப்புகளின்றும் அம்மையார் இயல், இசைத் தமிழில் வல்லவர் என்பதும், ஆண்டவன் அருள்வழி நின்று அவ்வழியோம்பினர் என்பதும், தத்துவ ஞானத்தில் தலைசிறந்து விளங்கினர் என்பதும் பெறப்படும். தொல்பழஞ் சமயமாகிய சைவம் இன்றும் அழியாமல் வாழ்ந்து வருகிறது என்றால் அதற்குக் கடைகால் இட்டவர்; அச்சமயம் எவ்வழியில் செல்லவேண்டும் என்று நெறியமைத்தவர் அம்மையாரே ஆவர். அத்தகையார் தமிழகத்தில் எந்த அளவு போற்றப்பட்டார் என்று கண்டறிவதை விடக் கடல் கடந்தும் அம்மையார் பாடல்களும் அம்மையார் புகழும் பரவியிருந்ததை அறியும்பொழுது வியக்காமல் இருக்க முடியவில்லை.

காம்போஜத்தை ஆட்சிபுரிந்த சிந்திரசேனன் (கி.பி. 604-627) காலத்தில் சிவன் கோயில்களைக் கட்டி, இந்திய இதிகாசங்களான இராமாயணமும் பாரதமும் ஆகியவற்றோடு காரைக்காலம்மையார் பாடல்களையும் அவற்றைப் போன்ற பக்திப் பாடல்களையும் கோயில்களில் படிப்பதற்கும் ஓதுவதற்கும் அரசன் அறக்கட்டளை அமைத்துள்ளான். மற்றும் காம்பூச்சியா, தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் உள்ள கோயில் சிற்பங்களுள், ஊழிக்கூத்தன் திருமேனியும், அதற்கு எதிரில் காரைக்கால் பேயின் சிலை கல்லிலும், செம்பிலும் செய்யப்பட்டு வழிபாட்டிற்கும், சிற்ப அலங்காரத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்கும் எட்டாம் நூற்றாண்டுக்கும் இடையே காரைக்கால் அம்மையாரின் வழிபாடு அந்நாடுகளில் வழக்கில் இருந்ததை டாக்டர் ழான். பிலியோசா தக்க காரணங்கள் காட்டி நிலைநாட்டியுள்ளார்.''[4]

இவற்றால் அறிதொறும் அறிதொறும் அறியாமையைப் போக்கி, அறிவொளியைத் தரக்கூடிய வகையில் காரைக்கால் அம்மையார் படைப்புகளுக்குச் சிறந்த விளக்கவுரை எழுதப்பட்டு, பிறநாடுகளில் வழங்கும் அம்மையாரைப் பற்றிய செய்திகளும் கிடைக்கப்பெற்றால் அம்மையார் வாழ்க்கை வரலாறு பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் இன்னும் தெளிவு பெறலாம்.

குறிப்புகள்

1. முதுமுதல்வன் வாய்போகா
தொன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த ஒருமுதுநூல். (புறம். 166: 2-3)

2. உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (குறள். 850)

3. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, ப. 198.

4. மேற்படி, ப. 200.

பயன்பட்ட நூல்கள்

1. ஆனந்த குமார சுவாமி, டாக்டர்., சிவானந்த நடனம், தமிழாக்கம் சோ. நடராசன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1980.

2. கமலையா, க.சி., தமிழகக் கலை வரலாறு, மணி வாசகர் பதிப்பகம், சென்னை, 1971.

3. செயராமன், ந.வீ., சிற்றிலக்கியச் செல்வங்கள், மணி வாசகர் நூலகம், சிதம்பரம், 1967.

4. ஞானசம்பந்தன், அ.ச., பெரிய புராணம்—ஓர் ஆய்வு—தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு 75, 1987.

5. திருநாவுக்கரசு, டாக்டர், க.த., தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1987.

6. பி. ஸ்ரீ., தில்லைத் திருநடனம், பென்லெண்ட் பப்ளி ஷர்ஸ், சென்னை, 1971.

7. முத்துராசன், கு., சிற்றிலக்கியச் சிந்தனைகள், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1980.

8. வெள்ளைவாரணன், க., பன்னிரு திருமுறை வர லாறு, பகுதி-2, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1980.

9. வேங்கடசாமி, மயிலை. சீனி., இறைவன் ஆடிய எழு வகைத் தாண்டவம், சாந்தி நூலகம், சென்னை, 1967.

10. ஆடல் வல்லான், திருவாவடுதுறை ஆதினம் வெளியீடு எண் — 224, திருவாவடுதுறை, 1967.

11. காரைக்காலம்மையார் திருமுறை, பாலன் பதிப்புக் கழகம், சென்னை, 1932.

12. திருவாலங்காட்டுத் தலபுராண வசனம், சென்னை கவுணியன் அச்சகம், 1967.

13. திருவாலங்காடு (தலவரலாறு), சாது அச்சுக்கூடம், 1967, சென்னை, 1941.

14. பதினொராந் திருமுறை, திருப்பனந்தாள் வெளியீடு, 1950.

15. Karaikkalammaiyar, (F.)ed. Karavelane, Institute Francais d' Indologie, Pondicherry, 1956.

7. கிறித்தவத் தமிழ் இலக்கியம்

சூ. இன்னாசி

அறிதொறும் அறியாமை கண்டற்றால் என்பது இலக்கிய ஆய்வுகட்கும் பொருந்தும். இலக்கியங்கள் பழமை வாய்ந்த வாயினும், புதியனவாகத் தோன்றியவாயினும் அவற்றின் தரம், திறம், பயன் பற்றிய புதிய போக்குகளையும் சிந்தனை களையும் முன்னிருத்திப் பார்க்குங்கால் அவை பற்றிய பழைய எண்ணங்கள் மாறுவது இயற்கை. பழையன கழித லும் புதியன புகுதலும் இலக்கணங்கட்கு மட்டுமன்று; இலக் கியங்கட்கும் ஏற்புடையனவே.

இலக்கிய ஆய்வில், ஆய்புலக் கருவிகளாக அமைவன அவ்விலக்கிய வகை சார்ந்த அடிப்படைச் சான்றாதார நூல்கள் ஆகும். இலக்கிய ஆய்வுகளில் மேனாட்டு மொழி கள் முன்னிற்பதற்குக் காரணம் அவற்றில் அமைந்து கிடக்கும் கருவி நூல்களே. தமிழில் அத்தகைய கருவி நூல்களாக எண்ணத்தக்க சொல்லடைவு நூல்களோ, வேர்ச்சொல் லகராதிகளோ, இலக்கிய வகைக் களஞ்சியங்களோ பல வாகத் தோன்றில. ஆதலின் தமிழில் பொதுப்பட இலக்கிய ஆய்வுகள் செம்மையுற நிகழ்வதில் பல்வகைச் சிக்கல்கள் எழுகின்றன. அந்நிலையில், சிறுபான்மையினர் பின்பற் றும் ஒரு சமயம் சார்ந்த நூல்களிலோ அன்றி அச்சமயத்தார் படைத்த நூல்களிலோ ஆய்வை மேற்கொள்வதில் ஏற்படும் சிக்கல்கள் பலவாதல் இயல்பு. அச்சிக்கல்களில் ஒருசில வற்றைத் தொகுத்துக் காட்டல், அவற்றினை அவிழ்க்கும் முயற்சியில் சிலரையேனும் ஈடுபடத் தூண்டும்.

தற்கால இலக்கிய ஆய்வுகளில் பொதுமை நோக்குக்கு வழிகாட்டியாய் அமைவது ஒப்பியல் ஆய்வாகும். அவ் வாய்வு பல்வேறு மொழிகளுக்கிடையே நிகழ்வதிலும், ஒரு மொழிக்குள்ளே தோன்றியுள்ள இலக்கியங்களில் பலசமய அடிப்படையிலோ, நூற்றாண்டுக்கால அடிப்படையிலோ, வடிவ அடிப்படையிலோ ஆய்வு செய்வது எளிதாகும். எனினும் கிறித்தவ இலக்கியங்களைப் பொறுத்தவரை, பிற

இலக்கியங்களோடு ஒப்பிடுங்கால் பின்வரும் இடர்ப்பாடு கள் ஏற்படுகின்றன.

தமிழ் மொழியின் வரலாறு தமிழகச் சமயங்களின் வர லாற்றோடு தொடர்புடையது. எவ்வெக்காலத்து எவ்வெச் சமயங்கள் செல்வாக்குப் பெற்றனவோ அவ்வக்காலத்து அவ்வச்சமயம் சார்ந்த இலக்கியப் படைப்புகள் பெருக லாயின. கி.பி. முதல் நூற்றாண்டிலேயே தூய தோமையர் வரவால் தமிழகத்தில் கிறித்தவம் கால்கொண்டிருக்க வாய்ப் புண்டு என அறிஞர்கள் கருதுவர். எனினும் அது பரவித் தொடர்ந்தமைக்கான சான்றுகள் தெளிவுறுமாறில்லை. ஆத லின் போர்த்துக்கீசியரது வரவுக்குப் பின், பதினாறாம் நூற் றாண்டு தொடங்கிக் கிறித்தவம் தமிழகத்தில் பரவியதாகக் கொண்டால் நானூறு ஆண்டுக்கால இலக்கிய வளர்ச்சி யைக் கிறித்தவ இலக்கியத்தில் காணலாம். ஆனால் ஈரா யிரம் ஆண்டுக்காலப் பின்னணியோடு சைவ, வைணவ, சமண, பௌத்த இலக்கியங்கள் உள்ளன. ஆதலின், கால நீட்சியுடன் இல்க்கிய வளர்ச்சியில் ஒரு படிக்கட்டாய்க் கருதும் பார்வையில், பிற இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காணச் சிக்கல் எழுகிறது.

ஈராயிரம் ஆண்டுக்கால வளர்ச்சியில் பிற சமய இலக் கியங்கள் புறவடிவத்தில் யாப்பியல் போக்கில் பல்வேறு படிவ நிலைகளைக் கொண்டுள்ளன. அவ்வகை வளர்ச்சிப் படிகளாக ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம், இசைப்பா, நாட்டுப்புறக்கூறு, உரை ஆகிய வடிவங்களைக் கொள்ள லாம். இவற்றில் செய்யுள் வடிவம் முன்னதாகவும் உரை வடிவம் பின்னதாகவும் அமைகின்றன. கிறித்தவப் படைப்பு களின் வடிவப்போக்கு அவற்றிற்கு மாறாக, உரைநடை தொடங்கிச் செய்யுள் வடிவங்களாய் மாறியுள்ளன.

பதினாறாம் நூற்றாண்டுக்குப் பின்னர் கிறித்தவ இலக் கியப் படைப்புகளோடு இணைந்து எழுந்த சைவ வைணவ இலக்கியங்கள் பெரும்பான்மையும் அகவுலகச் சமய உணர் வைத் தொட்டுக் காட்டிப் புறவுலக இன்ப நுகர்ச்சிகளை விளக்குவனவாகவே தோன்றியுள்ளன. ஆனால், கிறித்தவ இலக்கியங்கள் அழகுணர்ச்சியிலும் மிகுதியாக ஆன்மீக உணர்வுக்கே இடமளித்து இயற்றப்பெற்றுள்ளன. மேலும் கிறித்தவ சமயம் சார்ந்த தொடக்க கால இலக்கியங்கள்

வேற்றுமொழி நாட்டினரால் எழுதப்பட்டுள்ளமையின் அந் நாட்டு இலக்கியப் போக்குகளின் சாயல் பெற்றிருப்பதற் கான வாய்ப்பு உண்டு. ஆதலின் உட்பொருட்போக்கில் மாறுபடுவனவற்றை ஒப்பிடும் சிக்கல் தோன்றுகிறது.

தமிழ், சமயங்கட்குப் பொதுவாயது. சமய விருப்பு வெறுப்புகட்கு அப்பாற்பட்டது. ஆயினும் இலக்கிய ஆய்வுப் புலத்தில் தத்தம் சமய ஈடுபாடே இதுகாறும் இருந்து வந்த தாகத் தோன்றுகிறது. இலக்கியத்தைப் புலப்படுத்தும் முயற்சி யில் ஈடுபட்டிருந்த கிறித்தவரல்லா முதிர்ந்த தமிழ் அறிஞர் கூடக் கிறித்தவ இலக்கியங்களை முற்றக் கற்று ஆய்வு செய்ய முன்வந்திலர். சவரிராயலு நாயகருக்குத் தேம்பாவணியைக் கற்பித்தவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை. எனினும் அவர்தம் காலத்திய அறிஞர் உ.வே.சா. அவர் கட்கு அவற்றைப் பற்றிச் சிந்திக்கும் எண்ணமில்லை. அவ் வாறே மு. இராகவையங்கார், இரா. இராகவையங்கார், பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் போன்றோர் கிறித் தவ இலக்கியங்களை ஆய்ந்ததற்கான தடயங்கள் தென்பட் டில. அதற்குக் காலக்குறைவும், பணி மிகுதியும் காரணங் களாகலாம்.

தமிழ் இலக்கியப் பரப்பு என்பது குறித்த சில சமய இலக்கியங்களோடு அமைதல் சாலாது. அம்மொழியில் வழங்கும் அனைத்துச் சமய இலக்கியங்களும் தமிழின்பாற் பட்டனவே. எனினும் அண்மைக்காலம் வரை அறிஞர்கள் தத்தம் சமய இலக்கியங்களில் மட்டும் ஆய்வினைச் செலுத்தி வந்தனர். ஓரிருவர் இம்முறைக்கு மாறாக இருந்திருப்பினும் கிறித்தவ இலக்கியங்களைப் புறச்சமய இலக்கியங்களாகக் கருதி அவற்றை ஆராயாமல் விட்டுவிட்டமை ஆய்வு வளர்ச் சிக்கு ஏற்புடைத்தாக இல்லை.

சான்றாக, கீர்த்தனை நாடகங்களைக் கொள்ளலாம். 1988-ஆம் ஆண்டுக்கு முன்னர்வரை நாடகங்களைப் பற்றி ஆய்ந்த பெருமக்கள் இராமநாடகக் கீர்த்தனை, நந்தனார் சரித்திரக் கீர்த்தனை போன்றவற்றை மட்டும் சிறப்பாக ஆய்ந்தனரன்றிக் கிறித்தவக் கீர்த்தனை எதனையும் தம் ஆய் வில் உட்படுத்தவில்லை. எட்டுக் கீர்த்தனைகள் கிறித்தவ நாடக இலக்கியங்களாகத் தோன்றியுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டுமே ஆய்வாளரால் அறியவரப்பட்டுப் பெயர்

மட்டும் சுட்டப்பட்டுள்ளது. பிற அவர்தம் ஆய்வு நூல்களில் பெயர்கூடச் சுட்டப்பட்டில. சில அளவில் பெரியன. இவ் வகை எண்ணிக்கையிலும் மிகுதியாக உடையன. இருந்தும் ஆய்வில் இடம்பெறாமையின் கீர்த்தனை வளர்ச்சியில் கிறித் தவத்தின் பங்கு உணரப்படாமற் போகிறது. மேலும் இவ் விலக்கியங்கள் ஆய்வியல் வளர்ச்சியுறவும் வழியில்லாமற் போகிறது. இதற்குச் சமய விருப்பு வெறுப்புக் காரணம் அன்றென்றும் தத்தம் சமய இலக்கியங்களில் மட்டுமே அவ ரவர்க்குப் பயிற்சி இருந்ததும் பிற சமய இலக்கியங்களின் அறிமுகம் இன்மையுமே காரணங்களாகலாம்.

அறியாதவர்க்கு அறிமுகப்படுத்த வேண்டியது அறிந் தவர் கடன். கிறித்தவர் அவ்வகையில் உந்துதலோடு செயல் பட்டார் இலர். தம் சமயத்தைப் பரப்புவதில் கொண்டிருந்த வேட்கை தம் இலக்கியங்களைப் புலப்படுத்தலில் இருந் திலது. இக்குறைபாடும் கிறித்தவ இலக்கிய ஆய்வுக்கு ஒரு தடைக்கல்லாயது.

கிறித்தவருக்குள்ளேயும் சில உட்பிரிவுகள் உண்டு. பிற சமயத்தினரைக் கருதியது போன்றே தம் சமயப் பிற பிரி வினரையும் கருதி வந்தனர். அண்மைக் காலத்தில் இப் போக்கு மாறியுள்ளதெனினும் பத்தாண்டுகட்கு முன்னர் வரை இந்நிலையே இருந்து வந்தது. கத்தோலிக்கர் தாம் எழுதிய இலக்கிய நூல்களில் எச்.ஏ. கிருட்டிண பிள்ளை, வேதநாயக சாத்திரியார் போன்ற ஓரிரு திருத்தமுறைக் கிறித்தவரைக் குறித்திருப்பரன்றி மற்றவரைச் சிந்தித்திரார். திருத்தமுறைக் கிறித்தவரும் வீரமாமுனிவர், வேதநாயகம் பிள்ளை போன்ற ஓரிரு கத்தோலிக்கரைத் தம் நூல்களில் பெயரளவில் சுட்டிச் சென்றிருப்பர். இவ்வகையான், கிறித் தவருக்குள்ளேயே கிறித்தவ இலக்கியப் பரப்பு முழுமையும் அறியப்படா நிலையில், மற்றவருக்கு அறிவிக்கும் முயற்சி யிலும் ஈடுபட்டிலர். ஆதலின் அவ்விலக்கியங்களின் ஆய்வு பெருமளவில் வாராதொழிந்தது.

சைவ, வைணவ இலக்கியங்களின் வளர்ச்சிக்கும், ஆய் திறத்திற்கும் இசைச் சொற்பொழிவுகள், தொடர் சொற் பொழிவுகள் பெருமளவில் துணை நின்றுள்ளன. படிப் பவர்க்கு மட்டுமன்றிக் கேட்பவர்க்கும் பயனுண்டாம் என்பது அச்சமயத்தவரின் நம்பிக்கை. கிறித்தவரிடையே அவ்வகை

மனப்பான்மை இருந்ததில்லை. கோயில்களில் நின்று பேசு தற்கு முழுத் தகுதியுடையோர் துறவியரே என்ற எண்ணம் அண்மைக்காலம் வரை அவர்தம் நெஞ்சங்களைப் பற்றி யிருந்தது. இன்றும் அவ்வெண்ணம் முற்றிலும் மாறிவிட்ட தாகக் கொள்ள இயலாது. சான்றாகக் கட்டுரையாளர் இம் முறையில் ஈடுபட்டு இதுகாறும் ஐந்திடங்களில் மட்டும் தேம்பாவணிக் காப்பியம் குறித்த தொடர்ச் சொற்பொழிவு களை நிகழ்த்த முடிந்தது. இவ்வகைச் சொற்பொழிவுகளை ஆற்ற பிற சமயம் சார்ந்தோர் முன்வரினும் அவரைப் பயன் படுத்திக் கொள்ளும் எண்ணம் கிறித்தவரிடையே தோன்ற வில்லை. இவ்வகையாலும் கிறித்தவ இலக்கிய ஆய்வுப் போக்கு, சரிவர நடைபெறவில்லை.

நூலகங்களில் கிறித்தவ இலக்கியங்கள் போதிய அளவு இடம்பெறாமையும் ஆய்வு நெறிக்கு ஒரு சிக்கலாக அமை கின்றது. கிறித்தவ இலக்கியங்களில் தமக்குப் பயிற்சியின்மை யாலும், அவை பற்றி அறிதற்கும், ஆய்ந்து எடுத்துக் கூறுதற் குத் துணையாகும் நூல்கள் நூலகங்களில் இன்மையாலும் கல்லூரிப் பாடத் திட்டங்களில் கிறித்தவ இலக்கியங்கள் இடம்பெற வேண்டாம் எனக் கருதுகின்ற பேராசிரியர்கள் கூட உண்டு. தமிழ் நூல்களைப் பாதுகாத்து வைத்திருக்கும் இலண்டன், பாரீசு மாநகர்களில் உள்ள நூலகங்களிற்கூடக் கிறித்தவ இலக்கியப் பெருநூல்கள் இடம்பெறாமை கட் டுரையாளருக்கு வியப்பைத் தந்தது.

இதழ்களில் வெளிவரும் திறனாய்வுகள் கிறித்தவ இலக் கியங்கட்கு உரிய இடம் தருவனவாகத் தோன்றவில்லை. மக்களிடையே செல்வாக்குப் பெற்ற இதழ்கட்கு முறையாக நூல்கள் அனுப்பப்பட்டாலும் கிறித்தவ இலக்கியமாயின் அதனைத் திறனாய்வு செய்ய இதழ்கள் முன்வருவதில்லை. தவறி வெளிவரும் திறனாய்வுகளும் அவற்றின் உள்ளீடு கட்குத் தரும் மதிப்பீடுகளிலும் அதனைப் படைத்த ஆசிரிய னுக்கு மதிப்பீடுகளைத் தருவனவாகவே அமைகின்றன.

பொது இலக்கிய அமைப்புகளும் கிறித்துவ இலக்கியங் களைப் போற்றும் முயற்சியில் ஈடுபாடு கொண்டில. கிறித் தவ இலக்கிய ஆய்வு தம் பணிக்கு வேறானது என அதன் அமைப்பாளர்கள் கருதுவதுபோல் தோன்றுகிறது.

பிற சமயத்தவர் தம் சமய இலக்கிய ஆய்வுகளை நடத்த முன்வரும் வேட்கையும் அவற்றை வெளியிட மேற்கொள்ளும் முயற்சியும் கிறித்தவரிடையே இல்லை. சைவத் திரு மடங்கள், இசுலாமியச் செல்வந்தர், இலக்கியங்களை வெளியிட உதவுவது போன்று கிறித்தவ நிறுவனங்கள், செல்வந்தர் உதவினாரல்லர்.

கிறித்தவ ஆய்வாளர் சிலரிடையே காணப்படும் கிறித்தவப் புலவர்கட்கு வீண்பெருமை தேடும் நோக்கம் மற்றைய அறிஞர்களை அப்புலவர்களின் உண்மைப் பெருமையையே உணரவிடாமல் செய்து விடுகிறது. இஃதும் ஒருவகையில் கிறித்தவ இலக்கிய ஆய்வில் எழும் சிக்கலாகவே அமைகிறது. ''வீரமாமுனிவர் 36 ஆண்டுகள் வாழ்ந்தார்; 36 நூல்கள் எழுதினார். ஆண்டுக்கொரு நூல் எழுதிய அரிய அறிஞர் அவர்'' என்பது போன்ற ஆய்வும் அத்தகைய ஒன்றே.

கிறித்தவ சமய நூல்களைப் போற்றும் முயற்சியோ, அவற்றை ஆயும் அறிஞர்களைப் பாராட்டும் போக்கோ கிறித்தவரிடையே இல்லை. அதனால்தான் பலர் தம்மைக் கிறித்தவர் என்று பிறர் அறியாவாறு, தம் ஆற்றலை வெளிப்படுத்தத் தொடங்கினர்.

இவ்வகைச் சிக்கல்களை அறுக்கும் முயற்சியில் ஓராற்றான் சென்னைப் பல்கலைக் கழகக் கிறித்தவத் தமிழ் இலக்கியத்துறை ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐந்தாண்டுகட்கு முன்னர் தொடங்கப்பெற்ற இத்துறை அடிப்படைச் சான்றாதாரக் கருவி நூல்களைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. 'கிறித்தவ நாடக இலக்கியம்' என்னும் நாடகங்களின் அறிமுகத் தொகுதியை ஓராண்டுக்கு முன்னர் வெளியிட்டுள்ளது. கவிதைப் படைப்புகளின் அறிமுகத்தொகுதி அச்சுருப்பெற்று வெளியிடும் நிலையில் உள்ளது. புதினப் படைப்புகள் குறித்த அறிமுகத் தொகுதி அச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழியல் நூல்கள் பற்றிய அறிமுகத் தொகுதி விரைவில் அச்சுக்கு வழங்கப் பட உள்ளது. தொடர்ந்து சிறுகதை, இதழியல், கலைகள் போன்றவற்றின் தொகுதிகளை வெளியிட்டுவிட்டு, கிறித்தவ இலக்கியக் கலைக்களஞ்சியத்தையும் வெளியிடத் திட்ட

மிட்டுள்ளது. இவ்வகை அடிப்படை நூல்களின் துணையால் இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் பலபடப் பெருக வாய்ப் புண்டு.

சமய விருப்பு வெறுப்புகட்கு அப்பாற்பட்டு இலக் கியங்களை ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இத் துறை, பிற சமயம் சார்ந்தோர் கிறித்தவ இலக்கியங்களில் ஈடுபடத் தூண்டுதல் தந்துள்ளது. கிறித்தவம் சாராத கோவிந்தசாமி கிறித்தவ நாடக இலக்கியங்கள் பற்றி ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றுள்ளார். சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் உள்ள கிறித்தவ இலக் கியச் சுவடிகள் குறித்து டாக்டர் பட்ட ஆய்வை நிகழ்த்தி யவர் கிறித்தவம் சாராத சௌந்தரபாண்டியன் ஆவார். கிறித்தவரான பி. ஏ. தாசின் இலக்கியப் படைப்புகள், இதழ்ப்பணிகள் குறித்துக் கிறித்தவரல்லாத வி. ஆனந்த மூர்த்தி ஆய்ந்து டாக்டர் பட்ட ஆய்வேடு வழங்கியுள்ளார். நசரைக் கலம்பகம் குறித்து சாந்தி ஆய்வு செய்து எம். பில். பட்டம் பெற்றுள்ளார். அவ்வாறே கிறித்தவரல்லாதார் ஆற்றிய கிறித்தவ இலக்கியப் பணிகள் குறித்த ஆய்வினை எழிலரசி மேற்கொண்டு டாக்டர் பட்டம் பெற உள்ளார். பெரிய புராணத்துள் தொண்டுணர்வு குறித்து கோ. ஆறு முகம் ஆய்வு நிகழ்த்தி டாக்டர் பட்ட ஆய்வேட்டை வழங்கி யுள்ளார்.

ஒப்பியல் ஆய்வுகளின் வழியாகவும் சமய விருப்பு, வெறுப்புகளை நீக்கும் முயற்சி செய்யப்பட்டுள்ளது. முக் கூடற்பள்ளுவையும் செண்பகராமன் பள்ளுவையும் ஒப்பு நோக்கி ஆய்ந்து வசந்தி எம்.பில். பட்டம் பெற்றுள்ளார். சேக்கிழார் பிள்ளைத் தமிழையும் வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழையும் ஒப்பிட்டு ஜமுனா எம்.பில். பட்டம் பெற்றுள் ளார். குற்றாலக் குறவஞ்சியையும் பெத்லகேம் குறவஞ்சியை யும் ஒப்பிட்டு எம்.பில். பட்டத்திற்கு ஹேமாவதி ஆய்ந் துள்ளார். இவரனைவரும் கிறித்தவரல்லாதார்.

கிறித்தவர்க்குள்ளேயும் உள்ள உட்பிரிவுகளை மனத்துட் கொண்டு ஒரு பிரிவினருக்குப் பிறிதொரு பிரிவினரின் படைப்பினை ஆயும் வாய்ப்பு வழங்கப்பட்டது. கத்தோலிக்க ரல்லாத சத்தியவதனா கத்தோலிக்கக் காப்பியமான தேம்பா வணிக் காப்பியத்தின் பெண்மாந்தர் குறித்து ஆய்ந்து எம்.

பில். பட்டம் பெற்றுள்ளார். இசுலாமியரான உப்புக்கார முகமது சபீர் இயேசுநாதர் சதகம் குறித்த ஆய்வு நிகழ்த்தி எம்.பில். பட்டம் பெற்றுள்ளார்.

அடிப்படை நூல்களை வெளியிடும் முயற்சியிலும் பிற சமயத்தினரின் ஈடுபாட்டை இத்துறை பயன்படுத்தி வந்துள்ளது. கிறித்தவ நாடக இலக்கியம் என்னும் தொகுப்பு நூலுக்கு மூலமாய் அமைந்தவர் கோவிந்தசாமியாவார். வீரமாமுனிவரின் திருக்குறள் தொகுப்பு வெளிவரக் காரணமாய் அமைந்தவர் கிறித்தவரல்லாத சௌந்தரபாண்டியன் ஆவார். திருத்தமுறைக் கிறித்தவரான திட்டூர்த் தேசிகரின் 'சௌமியத்துறை' என்னும் அரிய நூலை கையெழுத்து மூலத்தினின்று குறிப்புக்களோடு வெளியிட்டவர் கத்தோலிக்கரான அத்துறைப் பேராசிரியராவார்.

இலக்கிய ஆய்வு பற்றிய சொற்பொழிவுகளை அச்சமயம் சாராத அறிஞர்களைக் கொண்டு அவ்வப்பொழுது இத்துறை நடத்தி வருகிறது. கவிஞர் சுரதா, வேதநாயக சாத்திரியார் பற்றியும், டாக்டர் சரளா இராசகோபாலன் மாயூரம் வேதநாயகர் பற்றியும் நிகழ்த்திய ஆய்வுரைகள் அவற்றுள் குறிப்பிடத்தக்கன.

இவ்வகைப் பணிகளால் கிறித்தவ இலக்கிய ஆய்வுகளில் ஏற்படும் சிக்கல்கள் படிப்படியாக அவிழ்ந்து அவற்றின் உண்மை மதிப்பீடு காலப்போக்கில் வெளிப்படக் கூடும்.

8. குழந்தை இலக்கியம்

அ. அஹ்மது பஷீர்

கருவுற்றிருக்கும் தாய் தன் குழந்தைகளுக்கு நலம் தரும் உணவை உட்கொள்கிறாள். உணர்வைத் தெளிவாக வைத்துக் கொள்கிறாள். கரு வளர வளரத் தனிமையில் அதனோடு பேசவும் செய்கிறாள். பதிலைப் பற்றிக் கவலை இல்லை. குழந்தை இலக்கியப் பயிர் வளர நிலம் பண்படுத்தப் பெறுகிறது. பெற்றெடுத்தபின் குழந்தைக்குப் பாடிக் காட்டுகிறாள். பேசி மகிழ்கிறாள். இலக்கியப் பயிர் வித்தூன்றப் படுகிறது. மழலை மொழிகள் இழையப் பேசத் தொடங்குகிறது. மழலைப் பருவம் நாற்றங்காலாகிறது. சமுதாயம் அதன் அறுவடையைப் பதினான்கு அல்லது பதினாறாம் அகவையில் பெற்றுக்கொள்கிறது.

குழந்தை இலக்கியம் குழந்தையால் விரும்பப்படுவது. குழந்தைகளுக்குக் கவர்ச்சியூட்டுவது. கட்டுப்பாடு குலையாதது. பேச்சு, பாட்டு, நடிப்பு ஆகிய வடிவில் வெளிப்படுவது. எழுத்திலும் இடம்பெறுவது.

குழந்தை மொழியைப் பற்றி இன்று ஆய்வு மேற்கொண்டிருப்பவர்களில் ஒருவர் அறிஞர் ஹெர்பர்ட் மெண்டஸ். சுவிட்சர்லாந்து நாட்டினர். குழந்தை பிறந்தது முதல் ஆறு திங்கள் வரை எல்லாக் குழந்தைகளும் ஒரே வகையான நடத்தைக் கோலங்களையே கொண்டுள்ளன. நடத்தைச் கோலம் பருவத்துக்குப் பருவம் வேறுபடுகிறதே தவிர ஒரு குழந்தையும் மற்றொரு குழந்தையும் வேறுபடுவதில்லை. ஒரே வகையில் அழுது, நரிவிரட்டி, சிரித்து, மல்லாந்து, குப்புறப்படுத்து, விழுந்து தவழ்ந்து எழுந்து வருகின்றனர். ஆயின் ஆறு திங்களுக்கு மேலே ஒவ்வொரு குழந்தையிடத்திலும் நடத்தைக் கோலங்கள் மாறுபட்டன. ஒரே குழந்தையை ஆய்ந்தபோது வளர்ச்சி மாற்றங்கள் ஏற்பட்டனவேயன்றி நடத்தைக் கோலம் அதிக அளவில் மாறுபடவில்லை.

வகை	பண்பு	செயல்
முதல் வகையினர்	அன்புடையவர்	பிறருக்கு மிட்டாய் தரல்—பொம்மை தரல்—அன்பு காட்டல்—பிற குழந்தையைக் கண்டவுடன் கன்னத்தைத் தடவுதல்—சிரித்தல்—கைதட்டல்.
இரண்டாம் வகையினர்	கண்டிப்புள்ளவர்	பற்களைக் கடித்தல்—வாய் திறத்தல்—கோபம் கொள்ளல்—கட்டை விரலை நிமிர்த்திக் காட்டல்—வந்தவர் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளல்.
மூன்றாம் வகையினர்	பகைக்கும் இயல்பினர்	வந்தவரை அறைதல்—மயிரை இழுத்தல்-ஆடையை இழுத்தல்—கீழே தள்ளுதல்—பிறருடைய விளையாட்டுப் பொருளை எடுத்துக் கொள்ளுதல்.
நான்காம் வகையினர்	அஞ்சும் இயல்பினர்	முகத்தைக் கைகளால் மூடிக்கொள்ளல்—தலையைக் குனிதல்—புறந்திரும்பி ஓடல்—அழுதல்—தேம்பித் தேம்பி அழுதல்.
ஐந்தாம் வகையினர்	தனிமையில் கழிப்பவர்	பிறரோடு சேர்ந்து வாராமை—ஒதுங்கி இருத்தல்—தனியே தூங்குதல்—தாயின் கருப்பையில் இருப்பது போன்று சுருண்டு படுத்தல்—தனிமையிற் போய் அழுதல்

அவர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட குழந்தைகள் 1500. அவர்கள் பல்வேறு நாட்டினர்; இனத்தினர்; மொழியினர். எல்லாக் குழந்தைகளிடத்திலும் ஒப்புமையும் இருந்தது. வேற்றுமையும் காணப்பட்டது. அந்த வேற்றுமையும் ஐந்து வகையில் அடங்கி வருவதை அவர் கண்டார்.[1]

இந்த இயல்புகளும் செயல்களும் பாரம்பரியத்துக்குக் கட்டுப்படுவில்லை. இவை குழந்தையின் தனித்தன்மையைத் தெரிவிப்பவை. உலகப் பொதுமொழியாய் அமைபவை. எந்த மொழி பேசினாலும் இந்தக் கூறுபாடுகள் இருக்கும். குழந்தை இலக்கிய ஆய்வாளர்க்கு இன்றியமையாத குறிப்புகளை ஹெர்பர் மெண்டஸ் கண்டறிந்து வருகிறார்.

ஆறாம் திங்கள் தொடங்கி ஆறாம் அகவை வரை இது பொருந்தும். ஆயினும் முழுத்திறன் வெளிப்படுவது மூன்றாம் அகவையில். தலைவனை உருவாக்கும் பருவம் இது. இப்பருவக் குழந்தை தாயின் பேச்சைவிடத் தன் பேச்சை உரத்து ஒலிக்கும். குழந்தை இலக்கியம் தன் பணியைத் தொடங்கும் பருவம் இதுதான்.

அந்த வயதில் அது விடுவதெல்லாம் கதைதான். ''நாளைக்கி (நேற்று) நா(ன்) ரயில்லே போனேனா? அப்புறம் பஸ் ஏறி ஏரோப்ளேன்லே போயி, வானத்துலே ஏறி தொப்புன்னு விழுந்திட்டேன் அஹ்ஹ்ஹ்ஹா''. ''நீ ஏன் தொப்புன்னு விழுந்தே?'' ''அப்பதானே சீக்கிரமாய்ப் போய்ச் சேரலாம்!'' (..... வயது 3).

நான்கு வயது நிரம்பாத சிறுவனிடம் எதிரில் இருந்த மேசை விளக்கைக் காட்டினேன். இந்த விளக்கைப் பற்றி ஒரு கதை சொல் என்றேன்.

''ஒரு ஊர்லே ஒரு விளக்கு இருந்திச்சு. அந்த விளக்கிலே ஒரு பையன் படிச்சிக்கிட்டு இருந்தான். திடீர்னு ஃபீஸ் போயிடுச்சு. உக்காந்துக்கிட்டே இருந்தான். அப்புறம் படிக்கலாண்டா கண்ணுன்னு அம்மா சொன்னாங்க. அடுத்த நாள் பள்ளிக்கூடத்துக்குப் போனான். பரீட்சையிலே பாதி ரைட்டு; பாதி தப்பு. டீச்சர் அடிச்சாங்க. அழுதுக்கிட்டே வீட்டுக்கு வந்திட்டான். அவ்வளவுதான் கதை'' (ஷேக் மீறான், வயது 3 ½, 1.1.90).

எந்த ஆசிரியரின் உதவியும் இன்றிப் பாடல்களைப் புனைந்துவிடும் பருவம் இது. இந்த வயதில் பாடல்கள் பொருளோடு பொருந்தாதவை. ஓசை மட்டுமே உடையவை என்பர்.[2] ஆயின் குழந்தை தன் சூழலில் உள்ள பொருளை வைத்தே பாடுகின்றது.

''பூ! பூ! புளியம்பூ!
பொன்னாங் கன்னிக்குத் தாழம்பூ!
கா கா கருப்பங்கா
கஞ்சி குடிச்சா நெல்லிக்கா''[3]

இது பழங்காலப் பாடல்.

நீ ஒரு பாட்டுப்பாடு என்று இப்பொழுது கேட்டால்,

''அதோபார் லைட்டு
அழுக்குச் சட்டையைக் கழட்டு
ஒண்ணாங்கிளாஸ் கொயட்டு
கோழிமுட்டை ஓயிட்டு''

எனப் பாடுகிறது குழந்தை. இல்லை! வேறு ஒரு பாட்டுப் பாடு என்றால்,

''பள்ளி செல்ல **விரும்பு**
பாடம் எல்லாம் **கரும்பு**
படித்துவிட்டுத் **திரும்பு**
பண்ண வேண்டாம் **குறும்பு**''

என்று பாடுகிறது. திரும்பு என்பதற்கு எதுகை குறும்பு ஆகாது. இலக்கணத்திற்காகச் சொல்லவரவில்லை. இரண் டின் ஒலியமைப்பு வேறு வேறானவை. சொல்லிக் கொடுத் தவரும், பாடும் குழந்தையும் நான்கு சொற்களையும் ஒரே ஒலியமைப்பில் பாட, எழுதும் போதும் இந்தத் தவறு நிகழ்ந்து கொண்டே உள்ளது. பாட்டின் முடிவில் ஒத்த ஒலியுடன் முடியும் சொற்கள் குழந்தைகளுக்கு இன்பம் பயக்கும். இயைபுத் தொடை என்பது இலக்கணம்.

ஒரே ஓசையோடு முடியக்கூடிய சொற்களை ஓர் ஓசை கொண்ட ஓர் அசைச் சொற்கள் (Masculine Rhymes), ஓர்

ஓசை கொண்ட ஈரசைச் சொற்கள் (Feminine Rhymes). ஓர் ஓசையில் ஒலிக்காத ஆனால் பார்வைக்கு ஒத்திருக்கும் சொற்கள் (Eye Rhymes) என்பவை அவை.[4] பார்வைக்கு ஒத்திருக்கும் சொற்கள் ஒரே எழுத்தைப் பெற்றுவரும். ஆனால் உச்சரிப்பில் வேறுபடும். ஆங்கிலத்தில் 'Loved, Proved' என்றாற்போல தமிழில் 'கரும்பு', 'குறும்பு' என்னும் சொற்கள் ஒலிப்பில் மட்டுமன்றி, எழுத்திலும் மாறுபட்டவை.

ஆறு வயதுக் குழந்தைக்கு மொழியை நன்றாகவே ஒலிக்க வருகிறது. ப்லமுறை ஒலித்துப் பழகுகிறது. அதற்காக,

''எட்டுக் குட்டிப் பூனைகள்
குட்டைக் குட்டை யானவை
அட்டைப் பெட்டிப் பொந்தினுள்
முட்டி முட்டிப் பார்த்தன
கிட்டக் கிட்டப் பெட்டியுள்
குட்டைக் குட்டைச் சுண்டெலி
வட்டமிட்டுச் சட்டென
எட்டி வெளியில் பார்த்தன''[5]

என்ற பாடலைப் பாடச்சொன்னால் திணறிப்போய்விடுகிறது.

குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டியது கருத்துகளையா? ஒலிகளையா? ''கருத்துக்களைக் கற்பித்தால் அது போதும். ஒலிகளைக் கற்பிக்கத் தொடங்கிச் சோர்வு அடையச் செய்ய வேண்டுமா?'' என வினவுகிறார் டாக்டர் மு.வ.[6] ஏனெனில் ஒலிகளைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்னும் ஆர்வம் அவர்களுக்கு இயற்கையாகவே உள்ளது. அதனைக் கெடுக்காமல் இருந்தால் போதும். குழந்தை மனம் ஒலியைப் பற்றிய ஆய்வில் இடைவிடாது ஈடுபட்டுள்ளது. இடையூறு செய்தால் வளர்ச்சியில் தடையேற்படும்.

குழந்தைகளிடம் இயற்கையாக அமைந்துள்ள பண்பாடு மரியாதை. 'வாங்க' என்று நாம் அழைத்தால் அவர்களும் 'வாங்க' என்பார்கள். 'வா' என்றால் 'வா'தான். இந்த மரியாதைப் பண்புகளை இலக்கியம் வளர்க்கவேண்டும்.

''பாப்பாவுக்கு முத்தம் கொடுங்கள்
பாப்பா உங்களுக்கு முத்தம் தரும்''

என்கிறார் மயிலை சிவமுத்து.

''ஈயம் பூசும் கலாய்க்காரா
எங்கள் வீட்டுக்குள்ளே வா''[7]

''தபால்காரன் வருகிறான்
தபால்காரன் வருகிறான்
ஐயா என்று கதவைத்தட்டி
ஆள்முகத்தைப் பார்க்கிறான்
அப்புறம்நம் பெயரை நன்றாய்
அறிந்தவன்போல் கேட்கிறான்''[8]

''குழைத்து நன்றாய்த் திரிகையிலே
கொண்டு வைத்தான் ஒரு குயவன்''[9]

''செம்படவன்''
''பிச்சைக்காரன்''[10]

போன்ற தொடர்கள் குழந்தைப் பாடல்களில் பயின்று வருதல் மரியாதைப் பண்புகளை வளர்க்க உதவி செய்யா தவை.

''நத்தையாரே நத்தையாரே அத்தைவீடு பயணமோ?'' எனப் பாடும் போது தரப்படுகின்ற மரியாதையைக் கூடத் தொழிலாளரைப் பாடும்போது தரக்கூடாதா? ஆயின் குழந் தைகள் தாம் பாடுகின்ற பாடல்களில் மரியாதைப் பண்பை மதித்துப் போற்றுகின்றனர்.

''மழையே மழையே வாருங்கள்
பூமியில் பஞ்சத்தை நீக்குங்கள்
மழையே மழையே வாருங்கள்
பூக்கள் பூக்க வாருங்கள்
மழையே மழையே வாருங்கள்
தண்ணீர்ப்பஞ்சம் நீக்குங்கள்
மழையே மழையே வாருங்கள்
இன்பமாக வாருங்கள்''

(ஏ. இராதிகா, வயது 12, 23.12.89
ஏழாம் வகுப்பு)

''எட்டாம் வகுப்பிலே ஒருநாள். தீண்டாமை பற்றிய பாடம். இனி இந்தச் சாதியும் தீண்டாமையும் இந்திய நாட்டில் இருக்கக்கூடாது. கப்பலில் ஏற்றி நடுக்கடலில் தள்ள வேண்டும்'' என்ற பாடற்பகுதி. ஒரு சிக்கல். பையன் எழுந்தான் 'ஐயா!' ''என்ன?'' ''முதலில் கப்பலில் ஏற்ற வேண்டியவர் ஒருவர் இருக்கிறார்'' 'யார் அவர்?' ''அவர்தான் இந்தப் பாடலைப் பாடியவர்'' ''ஏன்?'' அவர் பெயரில் சாதி ஒட்டிக்கொண்டிருக்கிறது.[11]

குழந்தைகளை நெருங்கும்போது இப்போது எவ்வளவு விழிப்புணர்ச்சி தேவைப்படுகிறது!

நம்முடைய குழந்தை இலக்கியங்கள் உயர்ந்த வர்க்கத்தை நினைவில் கொண்டே இயற்றப்படுகின்றன. அடிமட்டத்தில் வாழ்பவரைப் பற்றிய இலக்கியங்கள் இல்லை. பழங்குடிகள் மலைவாழ்மக்களைப் பற்றிய சிந்தனையே எழவில்லை. ஒன்றிரண்டு இருக்கலாமோ? ஆயின் குழந்தைகளை ஒன்றேனும் எட்டவில்லையே!

படிக்காவிட்டால் உயர்ந்த வாழ்க்கை கிடைக்காது என்ற கவலை காணப்படுகிறது. படிக்காமையால்தான் ஏழைகளின் வாழ்க்கை இப்படி இருக்கிறது என்று போதிக்கப்படுகிறது

''பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னலே
மூட்டை சுமந்தான் பின்னாலே''[12]

என்று கற்றுத் தருகின்றபோது மூட்டை சுமப்பதை ஒரு தொழிலாகக் கொண்டவரின் குழந்தைகளின் மனம் வெதும்பாதா? மூட்டை சுமந்தும் குடும்பத்தைக் காத்தல் இல்லையோ? மூட்டை சுமப்பது இழிவென்றால், வித்தியா சாகரர் கதையை ஏன் கற்றுத்தர வேண்டும்.

இப்பாடலுக்கு மறுப்புரை போல அமைந்துள்ளது மற்றொரு பாட்டு.

''எத்துணைப்பேர் கல்வி கற்றார்? — இங்கே
என்னநம் நாட்டினில் பெற்றார்?

பட்டங்கள் பெற்றிடப் போவார்—ஒரு
பாயும் முடைந்திடலாகார்

சின்னஞ் சிறுவரே நீரும்—அவர்
செல்வழிப் போகாதீர் வாரும்
இப்போதே பற்பல செய்வீர்—என்றும்
இன்புடனே இருந் துய்வீர்.

கூடை முடைந்திட வேண்டும்—உயர்
ஆடையும் நெய்திட வேண்டும்
பெட்டிகள் செய்திடக் கற்பீர்—பெரு
மேசையும் செய்துபின் விற்பீர்.

சீனச் சிறுவரைப் பாரீர்—உயர்
சீமைச் சிறுவரைப் பாரீர்
யாவரும் கைத்தொழில் செய்வார்''[13]

என இப்பாடல் பள்ளிப் படிப்பையும் உயர் கல்வியையும் புறக்கணிக்கும்படிக் குழந்தைகளுக்கு அறைகூவல் விடுகிறது. இப்போதே பள்ளிக்குள் நுழைந்திருப்பவரிடத்தில்—இன்னும் பதினோரு ஆண்டுகள் அடிப்படைக் கல்வியைப் பெற வேண்டியவரிடத்தில் இத்தகைய அறைகூவல் சிக்கலைத் தோற்றுவிக்காதா? இன்று சீமைச் சிறுவர் கோள்களுக்கன்றோ குடியேற உள்ளனர்?

நாட்டுப் பாடல்களில் பொருளுக்கும் ஓசைக்கும் தரப் படும் முக்கியத்துவம் சொல்லாட்சிக்கும் இலக்கணத்துக்கும் தரப்படுவதில்லை.[14] அவை ஏட்டில் இடம்பெறாமல் பன்னூறு ஆண்டுகள் வாய்மொழி வழியே வலம் வந்தவை. அல்லது கல்லா மழலைச் சொல்லாய்ப் பிறந்தவை ஆனால் மரபு மாற்றம் இல்லாதவை. அதற்காகக் குழந்தை இலக்கியம் படைப்போரும் கொச்சையாகப்பாடவேண்டுமா?

''காக்கையாரே வாருங்கோ
காலை வரவைக் கூறுங்கோ
நாவல் மரம் ஏருங்கோ
நல்ல பழத்தைத் தாருங்கோ
வேப்ப மரத்தில் தாவுங்கோ

விருந்து வருகை கூவுங்கோ
கூட்டுக்குரலில் கூவுங்கோ
கூடி வாழ்ந்து காட்டுங்கோ''[15]

வாருங்கள் வாருங்கோ என்றும் மாறுவதைக் குழந்தை மொழியாகக் கொண்டாலும் மரபைப் புறக்கணிக்க வேண்டுமா? காகம் எப்படிக் கூவும்? குழப்பம் குழந்தைக்கு வாராதா?

எல்லாப் பருவத்தினருக்கும் ஏற்ற பாடல்களை ஒரே தொகுப்பில் அடக்கும்போது மழலைகளே பெரிதும் இடர்ப் படுகின்றனர். பெரிய குழந்தைகளுக்குப் பிடித்தமானவை மழலையர்க்குப் புரிவதில்லை. மழலையர்க்குப் புரிந்தவை வளர்ந்தவர்க்குப் போதுமானவையாக இல்லை.

குழந்தைகளுக்கான நூல்கள். என்னும் ஆய்வில் ஈடுபடும் போது பாவேந்தர் போன்றவர்களின் பாடல்கள் விடுபட்டுப் போகின்றன. அல்லது, அவர்கள் பாடிய குழந்தைப் பாடல் கள் என்ற அளவில் ஆய்வு செய்ய முடிகிறதேயன்றி, ''குழந் தைகளின் ஈடுபாடு அப்பாடல்களில் எந்த அளவில் இருக் கிறது?'' என்று ஆய்வு செய்ய இயலவில்லை. 'அகத்துறைப் பாடல்களுக்கும் தொழில்துறைப் பாடல்களுக்கும் இடையே அப்பாடல்களைப் பாவேந்தர் செறித்து வைத்துள்ளார். இசையமுது இரண்டாந் தொகுதியில் முதற்பகுதி காதல். அடுத்து சிறுவர் பகுதி. பிறகு தொழிலாளர் பகுதி. பெற் றோர் குழந்தைப் பாடல்களைத் தனியே எடுத்துக் கற்பிக்கப் போகின்றனரா? பாவேந்தர் அப்படித்தான் நம்பினார். ''ஆங்கிலக் கல்வி; புத்தக மூட்டை; ஆறு மணிக்கு அலுத்துப் போய்த் திரும்பல்; அப்புறம் தனிப்படிப்பு; அடுத்து வீட்டுப் பாடம். பாவம் குழந்தைகள்!'' இன்றைய சமுதாய நிலை யைப் பார்த்து இன்னமும் அந்த நம்பிக்கை இருக்கிறதா?

குடும்பவிளக்கிலே வரும் 'அப்பாக்குதிரை ப் பாட்டை எத்தனைபேர் தம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்தனர்? கொஞ்சம் வளர்ந்ததும் எத்தனைபேர் 'வானம்' 'நிலவு' பாடி மகிழ்ச்சியூட்டினர்?

குழந்தை உணர்வுக்கு வேண்டிய ஊட்டச் சத்துகள் அனைத்தையும் பாவேந்தர் தொகுதி நூல்களில் பகுதியாகவே பொதிந்து வைத்துள்ளார். உணவைத் தரும் பெற்றோர் உணர்வைத் தருகின்றனரா? அவற்றைத் தனியே பிரித்து எடுத்துத் தனித் தொகுதியாக்க வேண்டிய கடமை பதிப் பாளர்க்குரியது. நாட்டுடமையாக்க வேண்டியது அவர் வீட்டை மட்டுமன்று. பாட்டையுந்தான். இது பாவேந்தர் நூற்றாண்டில் செய்யவேண்டிய நன்றிக்கடன் அல்லவா! அப்போது தானே பாவேந்தருக்கும் பாப்பாவுக்கும் இடையே இருக்கும் திரை விலகும்!

ஈசாப் நீதிக்கதைகள் குழந்தைகளுக்காகச் சொல்லப்பட் டவையல்ல. இருப்பினும் பாடல் வடிவில், கதை வடிவில் எத்தனை நூல்கள் குழந்தைகளுக்காக வருகின்றன. அப் படிப் பாவேந்தரின் மண்ணாங்கட்டியை அறிமுகம் செய்ய லாமே! இருண்ட வீட்டைக் காட்டி எச்சரிக்கலாமே! ஆசி ரியர் குறிப்பில் மட்டும் பட்டியல் ஒப்புவிப்பதைத் தவிர இன்றைய குழந்தைகள் ஒன்றும் அறியவில்லையே!

வளர்ந்தவர்களுக்காக எழுதியவர்கள் தொடக்கத்தில் குழந்தைகளுக்காகவும் எழுதினார்கள். பிறகு அவர்கள் ஒரு நூலும் எழுதவில்லையே ஏன்? டாக்டர் மு.வ. வின் குழந் தைப்பாட்டு நூலும், டாக்டர் மா. இராசமாணிக்கனாரின் குழந்தைப் பாடல்களும், பண்டித நடேசனாரின் மலரும் மனமும், அ.கி. பரந்தாமனாரின் எங்கள் வீட்டுத் தோட்ட மும் எங்கே? அவை மிகச்சிறந்த குழந்தை இலக்கியங்கள் என்று பட்டியல் போட்டுக் காட்டுகிறார்களே! கடந்த நாற் பது ஆண்டுகளில் ஒரு குழந்தையின் கண்ணிலும் காட்ட வில்லையே. ''வாரணம் கொண்டதந்தோ வழிவழிப் பெய ரும் மாள....'' என்பதாக அன்றோ உள்ளது!

அறிவியல் தொடர்பான நூல்கள் ஓரளவு வந்துள்ளன. ஆயின், அறிவியல் கதைகள் அவ்வளவாக இல்லை. குழந் தைகளுக்கு அறிவியல் கொள்கைகளை விளக்கும்போது பழைய எடுத்துக்காட்டுக்களைக் கூறுதல் கூடாது. அறிஞர் இராம்சே கூறுவது சிந்தனைக்குரியது. ''பூமி உருண்டை

என்பதற்குச் சான்று காட்ட உருண்டையான எலுமிச்சம பழத்தை நினைத்துக்கொள். அதன்மீது ஒரு எறும்பு ஊர்ந்து சென்றால் அது புறப்பட்ட இடத்திற்கே வந்து சேர்கிறது. ஆகையால் பூமி உருண்டை என்று விளங்குகிறது அல்லவா?'' இதைக் கேட்ட ''மாணாக்கனின் சிந்தனை வேறுவிதமாகத் திரும்புகிறது. சர்க்கரை இருக்கும் இடத்தில்தானே எறும்பு சுற்றும். எலுமிச்சம் பழத்தின் அருகிலும் நெருங்காதே. நெருங்கினாலும் சுற்றாதே'' என்று நினைக்கிறான்.[16]

செய்திகளைச் சுவைபடச் சொல்லிக்கொண்டே போகும் போது வேறு திசையில் கருத்தைச் சிதற வைக்க வேண்டிய தில்லை.

''ஏழை யென்றாலும், வறியவர் என்றாலும் அவன் உள்ளத்தில் காதல் அரும்பாமலா போகும். காற்று யார்மீது வீசக்கூடாது என்பதற்கு ஒரு நியதி இல்லையே! அதுபோன்றே காதலும். சாமுவேல் நான்சி எலியட் என்ற நங்கையைக் கண்டான். இரண்டு பார்வைகளும் முதலில் ஒன்றின. பின் உள்ளங்களும் ஒன்றிவிட்டன''.[17]

தெள்ளிய தமிழ்நடை. சின்னஞ்சிறிய அடிகள். எந்த வகையிலும் கடினம் ஆகாமல் அறிவியல் உண்மைகளை விளக்கும் பாங்கு. முழங்கால் அளவே உள்ள நீரோடையில் குழந்தைகள் மல்லாந்து படுத்துக்கொண்டே குளிப்பது போன்று எளிய பத்தியமைப்பில் நீந்திவரும்போது—இடை யிலே இப்படி ஒரு கவர்ச்சி—சுழற்சி. இந்த வரிகள் வந்த வுடன் குழந்தை உள்ளம் புரியாமைப் புதிரில் வீழ்ந்து விடாதா? குமரப் பருவத்தினரின் மனக்குதிரை கட்டறுத்துக் கொண்டு எட்டப் பறக்காதா?

சென்ற நூற்றாண்டில் இருந்த தமிழகக் கல்வி நிலை யைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல் எண்ணச் சிந்து.[18] காவலர் குடியிருப்பு மரைக்காயர் புலவர் பாடியது. வல்ல உபாத்தி செய்யும் வஞ்சகத்தையும், சட்டாம்பி (வகுப்புத் தலைவன்) மூட்டிவைத்தலையும் படீரென ஒரு குட்டு வைத் தலையும் பற்றித் தாயிடம் ஒரு பிள்ளை முறையிடுவதாக அமைந்தது. கிழமைப் பணம் கேட்டுக் கெஞ்சும்போது

பிள்ளை தனக்கு ஏற்படும் துன்பங்களைக் கூறுகிறான். நீங்கள் பாடுபட்டுப் பெற்றெடுத்த பிள்ளை இப்படித் துன் புறவேண்டுமா? என்று கேட்கும்போது நமக்கும் கண்ணீர் வருகிறது. பிறகு பிள்ளை, தாய் தன்னை வயிற்றிலே சுமந் திருக்கும்போது பட்ட பாடுகளையெல்லாம் வரிசைப்படுத் திச் சொல்வதாகப் பாடிவிடுகிறார் மரைக்காயர் புலவர். அவ்வளவுதான்! எண்ணச் சிந்து குழந்தை இலக்கியத்தின் தகுதியை இழந்துவிடுகிறது. ''வேம்பு தலையாத்த நோன் காழ் எஃகம்'' என்று ஓரடியால் நெடுநல்வாடை அகப்பாட் டினின்றும் திரும்பிப் புறப்பட்டாவது போன்ற நிலை இது.

குழந்தைகள் கலைக்களஞ்சியம் தமிழில் பத்துத் தொகுதி கள் வெளிவந்துள்ளன. ஆங்கிலக் கலைக்களஞ்சியத்தைக் காட்டிலும் அழகியது. ஆனால் பயன்பெற்ற குழந்தைகள் எத்தனை? குழந்தை நூலகங்களில்கூட அவை குழந்தை களுக்கு வழங்கப்படுவதில்லையே!

குறிப்பிட்ட சில இடங்களில் குழந்தை நூலகங்கள் உள் ளன. குழந்தைகள் தனித்துச் செல்ல இயலுமா? சில நாடு களில் நடைமுறையில் இருப்பதுபோன்று வாரம் ஒருமுறை குழந்தைகள் ஆசிரியரோடு வந்து படித்தலையும் வருகைப் பதிவு எடுத்தலையும் ஏன் விதியாக்கக் கூடாது? குழந்தை நூலகங்களில் உள்ள நூலகரைக் குழந்தைகள் மிகவும் விரும்பு கிறார்கள். தமக்கு விளங்காதவற்றை அன்போடு கேட்டு விளக்கம் பெறுகிறார்கள். அந்த வட்டாரத்தில் இருக்கும் அத்தனை குழந்தைகளுக்கும் அந்த 'அத்தையை' உறவாக்கி விடலாமே. நூலகங்களில் கதை சொல்லும் நேரத்தையும் ஒதுக்கலாமே. கதை சொல்லும் பாட்டிகள் இல்லாத முறையை நீக்கலாமே!

நூலகங்களில் குழந்தைகள் விரும்பிப் படிப்பவை கதை நூல்களே. பள்ளிகளில் போட்டிகள் நடைபெறும் காலங் களில் மட்டும் வாழ்க்கை வரலாற்று நூல்களைத் தேடி வரு கின்றனர். அவர்கள் தேடுவது பெரும்பாலும் கிடைப்ப தில்லை. பல பள்ளிகளில் நூல்கள் வழங்கும் வழக்கம் இல்லை. வட்டார நூலகங்களில் குழந்தைகளை அனுமதிப்ப தில்லை. குழந்தைகள் வருந்துகின்றனர்.

புத்தகத்தின் கதை, ரப்பரின் கதை, கணிப்பொறியின் கதை போன்ற தலைப்புகளில் வரும் நூல்களைக் குழந்தைகள் விரும்புவதில்லை. தாமும் ஒரு பாத்திரமாக அமைந்து இயங்கும் கதைகளை விரும்புகிறார்கள்.

"Jack and Jill went up the hill
To fetch a pail of water
Jack fell down and broke his crown
And Jill come timbling after"

என்ற பாடலைக் குழந்தைகள் ஒன்றாய்க்கூடி கைதட்டிப் பாடி ஆடுகின்றனர். இதையே ஒரு கதையாகச் சொல்லிக் காட்டினால் கண்ணீர் விடுகிறார்கள். பொருள் உணருங் காலத்தில் உங்களுக்கு அந்த அனுபவம் எப்படியிருந்தது என்றால், "மிகவும் அச்சமாக இருந்தது அழுகை அழுகை யாய் வந்தது. ஜில் உருண்டு விழுவதுபோல வரையப்பட் டிருந்த படத்தைப் பார்க்கவே பயமாக இருந்தது" என்கிறார் கள். இத்துணை மெல்லிய உள்ளம் குழந்தையினுடையது. ஆயினும், குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிக்கும் கதைகள் துப்பறியும் கதை. படிக்கும்போது ஒரே திகில். மயிர்க்கூச் செறிதல், எதிர்பாராத அச்சுறுத்தல், இரத்தத்தை உறைய வைத்தல் இவையெல்லாம் குழந்தை இலக்கியத்தில் தேவை தானா?

"அக்கதைகள் குழந்தையின் கண்டுபிடித்தல் உணர்ச்சிக்கு எழுச்சியூட்டுகின்றன. தலைவன்மேல் நம்பிக்கை, கட்டுப் படுதல், தீமையைக் கடிதல் ஆகிய எண்ணங்களை வளர்க் கின்றன" என்று கூறப்படுகிறது. ஆயின் குழந்தைகளின் உள்ளத்தில் அக்கதைகள் நச்சுக் கருத்துக்களை நிலைக்க வைத்திடும் என்ற அச்சமும் உள்ளது.

"Solomen Grundy" என்ற பாடலைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்? என்று குமரப்பருவத்தினர் பலரிடம் கேட்ட போது அவர்களில் பெரும்பாலோர் சொன்ன பதில், "அப் பாடலை நான் மிகவும் விரும்புகிறேன்". "ஏன்?" "அவர் அவ்வளவு விரைவில் எல்லாம் முடித்து விரைவில் செத்து விட்டார்". என்பது. வாழ்வாங்கு வாழவேண்டியவர் கூறும்

விடை இது. நாளைக் கற்றுக்கொடுக்கப் பயன்பட்ட உலக இலக்கியம் எதைப் பதித்துவிட்டது! சிந்திக்க வேண்டாவா?

இன்றைய குழந்தை இலக்கியங்கள் என்று வருவன பெரும்பாலும் முதியோர் கல்விக்குரிய நூல்களே. உண்மையான குழந்தைப்பாடல் பெரியவர்களுக்கும் உகந்த பாடலாகிறது. "Any real poetry for children is at the same time poetry for adults"[19] என்பது உண்மை. ஆயின் குழந்தை நூல்கள் வளர்ந்தவர்க்கு மகிழ்வூட்டும்—பயன்படும் எழுத்தறிவித்தலில் என்பதன்றி வளர்ந்தவர் இலக்கியம் குழந்தை இலக்கியம் ஆகாதே. முதியவர்க்கு எழுத்து மட்டும் பிடிபட்டுவிட்டால் தேவைப்படும் செய்திகளே வேறு. இருவர் உள்ளமும் உணர்வும் வேறு வேறானவை.

பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை தமிழிலே வந்த முதல் முதியோர் கல்வி நூல். ஆசிரியர் முஹம்மது இபுறாஹீம். ஊர் மண்டபம், இராமநாதபுரம் மாவட்டம். அச்சேறிய ஆண்டு 1871.[20] அதைத் தொடர்ந்து பெரிய எழுத்துக் கதைகள் பல தோன்றின. இன்று முதியோர் கல்விக்குப் பல புதிய நூல்கள் இயற்றப்படுகின்றன. 14 புள்ளி அல்லது 18 புள்ளி எழுத்தில் அச்சிடப்பெறுகின்றன. இவ்வாறு பெரிய எழுத்தில் அச்சிடப்பெறும் நூல்கள் எல்லாம் இன்று குழந்தை இலக்கியம் என்ற பெயரில் பள்ளி நூலகத்தை அடைத்துக்கொள்ள வேண்டுமா?

இன்று கதை நூல்களின் எண்ணிக்கை பெருகியிருக்கும் அளவுக்குக் கதைகள் பெருகி இருக்கின்றன என்று சொல்ல இயலாது. விக்கிரமாதித்தன் கதை, வேதாளம் சொன்ன கதை, மரியாதை ராமன் கதை என வடிவங்களே மாறியுள்ளன. குழந்தைகள் படித்த கதைகளையே படித்துவிட்டு மயங்கிக் கிடக்கின்றனர்.

குழந்தைகள் நூல்களைவிடக் கிழமை இதழ்களையே அதிகம் விரும்புகின்றனர். இன்று குழந்தைகளுக்கென வரும் இதழ்கள் ஒன்றோ இரண்டோ. வளரக்கூடாத இதழ்கள் பிறந்த வண்ணம் உள்ளன. குழந்தைகளுக்கான இதழ்கள் இறந்த வண்ணமுள்ளன. வளர்ந்தவர் இதழ்கள் குழந்தை

களுக்காக நாலைந்து பக்கங்கள் ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கை விடப்படுகிறது. இவ்விருப்பத்துக்கென்று குழந்தை களுக்காக இலவச இணைப்புகள் வெளியிட வேண்டும்.

குமரப் பருவத்துக் குழந்தைகள் தனிமை, சோர்வு, வேதனை போன்ற உணர்ச்சிகளால் பாதிக்கப்படும்போது இலக்கியங்கள் அவர்களுக்குப் புகலிடங்களாகின்றன. கவிதை களுக்கும் குமரப்பருவத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு.

குமரப்பருவம்	கவிதை
ஓய்வின்மை	கருத்தோட்டம்
ஆர்வத்துடிப்பு	ஓசை நயம்
பொருத்தமற்ற இயக்கம்	மொழியின் பல்வேறு தன்மைகள்

குமரப்பருவத்தினர் பெரும்பாலும் கவிஞர்களாய் மாறுவது இத்தகைய ஒற்றுமைப் பண்பால்தான்.

உண்மையான குழந்தை இலக்கியங்கள் எவை? குழந்தை களுக்காக வளர்ந்தவர் எழுதித் தருதலா? குழந்தைகளே தமக்காக எழுதியளித்தலா? என்னும் வினாக்களும் எழு கின்றன.

''குழந்தைகளே குழந்தைகளுக்கு எழுதும் பாடல்களே உண்மையான குழந்தைப் பாடலாகும்'' என டாக்டர் தெ. பொ.மீ. அவர்கள் கூறுகிறார்.[21] ''இஃது இயலாத செயல். குழந்தைகளே குழந்தைகளுக்கு நூற்கள் எழுத முடியாது. பெரியவர்கள்தாம் எழுதித்தர முடியும்'' என்ற மறுப்பும் கூறப்படுகிறது.[22]

நூற்கள் மட்டுமே குழந்தை இலக்கியம் ஆகுமா? பெரிய வர்கள் குழந்தைகளுக்குப் புரியும்படி எழுதினால் அது குழந்தை இலக்கியம் எனப்படுகிறது. அவ்வாறெனில், குழந்தைகளுக் குப் புரியும்படிப் பேசினால் குழந்தை மொழியா? இல் லையே.

"எழுத்தாளன் ஒரு வாசகனுக்காக எழுதுகிறான். குழந்தை தனக்காகவே பாடுகிறது" என்கிறார் தெ.பொ.மீ.[23] ஆம்! அந்தக் குழந்தை பருவம் நீங்கப்பெறாத குழந்தைக் கவிஞர் கள் தம் உணர்வை உள்ளபடியே பிழிந்து தருகின்றனர். வளர்ந்தவர்களின் பாட்டுக்கு எவ்விதத்திலும் குறையாதவை. அவை :

பூம்பூம்மாடு

"பாடம் கேட்டு பள்ளியில்நாம் தலையை ஆட்டுகிறோம்
பார்க்கப் போனால் நாமெல்லோரும் பூம்பூம்மாடுதான்!
கேட்பதில்லை ஐயமிருந்தும் ஆமாம் போடுகிறோம்
பார்க்கப் போனால் நாமும்கூட பூம்பூம்மாடுதான்"

(ஆர். சுமதி, வயது: 14)

மழை

"வானச் சட்ட சபைகளிலே
நடக்கும் கலாட்டக்களினால்
மேக மக்கள் விடும்
கண்ணீர்!

(எம். சசிகலா, 22.12.89)

சுதந்திரம்

"உயிர்கொடுத்த சுதந்தரம்—
உடமை தந்த சுதந்தரம்
அடிமைப்பட்ட வாழ்க்கையை
அழிக்கவந்த சுதந்தரம்"

(ஹயாத்துன் சபீனா, 22.12.89)

கதை : 1. குப்புசாமி—மீன்பிடித்தல் தொழில்—கிடையாமை—தங்கமீன்—மீட்டால் நினைத்தது நடக்கும்—விடல்—தங்க உடைகள் பெறல்-மீனவத் தொப்பி கிரீடம்—வாழ்க! வாழ்க!—மக்கள் ஆரவாரம்—குப்புசாமி விழித்தல்—கனவு—கடிகாரம்-

மணி பத்து — ஓயாமல் ஓடல் — தானும் கடிகாரம் போல உழைத்தல்.

(பா. நஜிமுத்தீன், 3.1.90)

கதை: 2 மாங்குடி — குப்பன் — இருமக்கள் — ஒருவன் படித்தவன் — வங்கி மேலாளன் — படியாதவன் உழவன் — நிறைந்த செல்வம் — மழை — அழிவு — வருத்தம் — முதியோர் கல்வி பெறல்.

(வி. லட்சுமிப் பிரியா, 22.12.89)

இக்குழந்தை எழுத்தோவியங்கள் முன்கூட்டியே தெரிவித்து எழுதப்பட்டவையன்று. உடனுக்குடன் சொல்லிய அளவில் சொல்லப்பட்டவை அல்லது எழுதப்பட்டவை.

குமரப்பருவக் கலைஞர்களுக்குச் செம்மை சேர்க்கும் நாற்றங்காலாக அமைவன பள்ளி இலக்கிய மன்றங்கள். அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் மாணாக்கர் 5.6 % விழுக்காடு மாணாக்கரே. போட்டிகளிற் கலந்துகொள்ளும் மாணாக்கரின் எண்ணிக்கை பின்வருமாறு அமைகிறது.



மாணவர் படிக்கும் வகுப்பு

X = 1 செ.மீ. = 1 வகுப்பு

Y = 1 செ.மீ. = 5 % மாணவர்

பள்ளி இதழுக்காக (School Magazine) கதை, கட்டுரை முதலான கருத்தோவியங்களை அளிப்பவர்கள் விகிதம் வருமாறு :

VI	VII	VIII	IX	X	XI	XII
4 %	20 %	20 %	13 %	9 %	17 %	17 %

எழுத எடுத்துக்கொள்ளும் வடிவம்

கதை	கட்டுரை	புதுக் கவிதை	மரபுக் கவிதை	அறிவியல் கணிதம்	நாடகம்	நகைச் சுவை	பொன் மொழி
16 %	15 %	12 %	33 %	6 %	2 %	10 %	6 %
		கவிதை = 45 %					

எழுத எடுத்துக்கொள்ளும் பொருள்கள்

கீழ் வகுப்பு 6, 7, 8 மாணவர்கள்	உயர் வகுப்பு 9, 10 மாணவர்கள்	மேனிலை வகுப்பு மாணவர்கள்
கடவுள்பற்று, அறிவுரைகள், உணவுப்பண்டங்கள், பெரியோர் வரலாறு, சுற்றுப்புறம், வீட்டு விலங்குகள், பறவைகள், இயற்கைப் பொருள், நாட்டுப்பற்று (விடுதலை) முதலானவை.	மொழிப்பற்று, நாட்டுப் பற்று (மக்கள்), குறிக் கோள் வாழ்க்கை. தாயின் பெருமை, சாதிகளின் இழிவு, அறிவியல், ஆக்கங்கள், இயற்கைச் சூழல் முதலானவை.	கணித உண்மைகள், தொழில்—புரட்சி-வரதட்சிணை-பொருளியல்-அரசியல் சிக்கல்கள்-நகைச்சுவை-பழகாத விலங்குகள்-மரணம்-இயற்கை அழிவுகள்-அறிவியல் அழிவுகள் அல்லது ஆக்கம் முதலானவை.

நகைச்சுவை எழுதுவதில் கீழ்நிலை வகுப்பு மாணாக்கரும், மேனிலை வகுப்பு மாணாக்கரும் கருத்துச் செலுத்து

கின்றனர். உயர் வகுப்பு (9, 10) மாணாக்கர் அவ்வளவு கருத்துச் செலுத்துவதில்லை. (வயது 13, 14) 9-ஆம் வகுப்பு மாணாக்கர்க்குக் குமரப் பருவத்துக் குமைச்சல் காரண மாகிறது. குரல் மாறுபட்டு ஒலிப்பதால் பேச்சுப் போட்டி களில் கலந்து கொள்ள முடியாமல் நாணுகின்றனர். சிலர் தனிமையில் அழுகின்றனர். பருவ மாற்றத்தால் திகில், அச்சம், வெறுப்பு, ஏக்கம் முதலியன எல்லாம் தோன்று கின்றன. பத்தாம் வகுப்புக்கு வரும்போது இவை சற்று மறைந்தாலும் பள்ளி இறுதித் தேர்வு என்னும் சுமை அவர் களை எதிலும் கலந்துகொள்ள முடியாதபடி செய்துவிடு கின்றது. சிலர் மட்டுமே மீண்டும் பதினோராம் வகுப்பில் மிகத் துடிப்போடு காணப்படுகின்றனர். இலக்கிய மன்றத் தில் பங்குகொண்டதற்கான சான்றிதழ் கேட்டு வருவோரில் பலர், ''அப்போது நான் ஏழாம் வகுப்பில், எட்டாம் வகுப் பில் கலந்துகொண்டேன்'' என்பர்.

குழந்தைகளின் இலக்கிய ஆர்வங்கள் இவை. சுவரை வைத்தே சித்திரம் தீட்ட வேண்டும். வளர்க்க வேண்டிய பண்புகள் எவை? தடை எது? நீக்கும் முறை யாது? பக்குவ மாகச் சிக்கல் எடுக்க வேண்டிய கடமை நமக்குள்ளது.

குழந்தைகளே எழுதத் தொடங்கிவிட்டார்கள். எனவே, நாம் எழுத வேண்டியதில்லை என்று நாம் ஒதுங்கியிருக்கப் போவதில்லை. குழந்தை பேசத் தொடங்கிவிட்டது என்பதற் காகத் தாய் வாயை மூடிக்கொள்வதில்லை. இந்த நிலையில் குழந்தை இலக்கியம் படைப்போர் சில வினாக்களையேனும் தம்முள் வினவிக்கொள்ள வேண்டும்.

1. குழந்தையின் குருத்து மூளை நாம் ஏற்றப்போகும் செய்தியைத் தாங்குமா?
2. நம் மொழிக்குரிய தனித்தன்மையோடு அது அமைகிறதா?
3. நாம் எழுதுவது குழந்தையின் மன நிறைவுக்கா (திருப்தி) ?, நம்முடைய மன நிறைவுக்கா?
4. நாம் எழுத எடுத்துக்கொள்ளும் பொருள் குழந்தை யோடு எந்த வகையில் தொடர்புடையது?

5. படிக்கத்தெரிந்த எல்லோரும் படிக்கலாம் என்று எழுதுகிறோமா? குழந்தையின் மன வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு எழுதுகிறோமா?

6. வயது வரம்புக்கேற்ற கருப்பொருளையும், சொற்களையும், தொடர்களையும் கையாளுகிறோமா?

7. எந்தக் குழந்தைகள் படிக்கப் போகிறார்கள்? அவர்களின் மொழித்திறன் என்ன?

8. ஒரு தாயின் அணுகுமுறை அந்த எழுத்தில் உண்டா?

9. உயர்தனிச் செம்மொழிகளுக்கு எந்த அளவு இடம் அளிக்கிறோம்?

10. பேய், பூதம், கெட்டவர், கொலை, உணவும் நீரும் இன்றிச் சிறையில் அடைத்தல் போன்ற குழந்தைகளைத் துன்புறுத்தும் நிகழ்ச்சிகளைப் படிப்பதால் குழந்தைகள் உள்ளத்தில் உண்டாகும் விளைவுகள் என்ன?

11. மந்திரவாதி மனிதனைக் கல்லாக, விலங்காக மாற்றுவது போன்ற கதைகளால் குழந்தைகளின் உள்ளத்தில் தோன்றும் 'பயங்கரம்' எத்தகையது?

12. குழந்தைகளைக் கொல்வது; அவர்களைப் பிடித்துத் தின்பது, நண்பர்கள், பெற்றோர்கள், பழகும் பறவை விலங்குகள் போன்றவற்றைக் கொல்வது போன்ற கதைகளால் ஆறு வயதுக் குழந்தைக்கு ஏற்படும் கருத்து மாற்றங்கள் யாவை?

13. மந்திரவாதிகள், பூதங்கள், பொய்யான சக்திகள் பற்றிய கதைகள் குழந்தைகளின் உள்ளத்தில் ஏற்படுத்தும் திடுக்கமும், குழப்பமும் பிற்காலத்தில் எத்தகைய பாதிப்பை உண்டாக்கும்?

— இத்தகைய வினாக்களை முன்வைத்து எழுதத் தொடங்கினால் நிச்சயம் நாம் குழந்தை இலக்கியத்துக்குத் தொண்டு செய்தவர்கள் ஆவோம். இல்லையெனில், அவர்களின் இலக்கியத்தை அவர்களே வளர்த்துக் கொள்ளட்டும் என்று அமைவதே அறமாகும்; பெருந்தொண்டு ஆகும்.

குறிப்புகள்

1. அரபுக் குழந்தை இலக்கியமும் எதிர்காலமும், (குவைத்), ப. 13.
2. அன்னகாமு, ஏட்டில் எழுதாக் கவிதைகள், ப. 90.
3. மேற்படி, ப. 90
4. Children Britannica, Vol. IV, p. 230
5. தூரன் பெ., நல்ல நல்ல பாட்டுகள்
6. வரதராசன், டாக்டர், மு.வ., மொழி வரலாறு, ப. 107.
7. தூரன், பெ., நல்ல நல்ல பாட்டுக்கள், ப. 10.
8. தமிழ் ஒளி, பாடு பாப்பா, ப. 40.
9. மேற்படி, ப. 41.
10. பெருமாள் தெ.ப., சிறுவர் அமுது, ப. 144.
11. ஆசிரியர், மதுரம் பன்னீர் செல்வம்.
12. தமிழ் ஒளி, பாடு பாப்பா.
13. சிவமுத்து, மயிலை, முத்துப் பாடல்கள், ப. 25.
14. சுப்பிரமணியம், சி., ஏட்டில் எழுதாக் கவிதைகள், முன்னுரை, ப. 8.
15. புலவர் வாணன், பறம்புமலை, ப. 40.
16. அரசுமணி, விந்தை புரிந்த விஞ்ஞானிகள்.
17. மேற்படி, ப. 7.
18. அகமது பஷீர், இஸ்லாமியக் குழந்தை இலக்கியம், ப.79.
19. Soviet Literature, 1978.
20. மயிலை சீனி வேங்கடசாமி, பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம், ப. 170. மேற்கோள்: பிறைக் கொழுந்து — கலை மாமணி கா. மு. ஷெரீப், கட்டுரை, 1979.
21. தெ.பொ.மீ., கல்விச் சிந்தனைகள், ப. 122.
22. முத்துச் சண்முகம், டாக்டர், குழந்தைப் பாடல்கள், ப. 65.
23. தெ.பொ.மீ. கல்விச் சிந்தனைகள், ப. 122.

9. குறுந்தொகை

தி. லீலாவதி

''காலமும் சூழலும் விளைக்கும் மாறுதல்கள் விரிந்து பரவிக் குவிந்து உணர்ச்சியலைகளாய் நெஞ்சிலே அலை மோதிக் கிளர்ச்சியூட்டித் தணிவுற்றுச் செறிவுற்றுக் கவிதை யாகிறது'' என்பார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி. கவிதைப் பயன்பாடு, இவ் அடிப்படையில் இன்ப உணர்வினையும், சிந்தனை வளர்ச்சியையும் தூண்டுவதாக அமைந்துவிடு கிறது. கவிதை மட்டுமன்று, சிறந்த கலை முயற்சிகளெல் லாம் இன்பம் தருவதற்கப்பால் உயிர் வளர்ச்சியைக் (ஆன்ம) குறிக்கோளாகவே கொள்ளுதல் வேண்டும். உணவு, உடை, உறையுள் எனத் தேவைகளைச் சுற்றி அமையும் உலகியல் வாழ்வு, இலக்கியம், இசை, ஓவியம் என்பன போன்ற மனத்தினைப் பதப்படுத்திப் பண்பாட்டினை வளர்க்க வல்ல மனவியல் வாழ்வு, இறை உணர்வு, இறைப்பற்று, இறை வழிபாடு என வளரும் ஆன்மீக வாழ்வு என்ற மூன்றன் கலப்பில் நிறைவு காணமுயலும் மானுட முயற்சிகளே வாழ்க்கையினைப் பொருண்மைக்குரியதாக்குகின்றன. எனவே, உடல் வாழ்விற்கு அப்பால் மன நலத்திற்கான கலை வாழ்வு, அதற்கப்பாலான உயிர் மேம் பாட்டிற்கான ஆன்மீக வாழ்வு என்ற படிநிலை வளர்ச்சியில் மனநலச் செம்மைக்குரிய இலக்கியங்கள் வாழ்விலும் பொருந்தி நின்று உயர் இலக்கினை, நோக்கினை அடைவதாகவும் இருக்க வேண்டும். மனநலச் செம்மை, ஆன்மீக உயர் வினுக்கு எளிதாக வழிகாட்டிவிடும். ஆகவே, உலகியல் வழக்கு, நாடக வழக்கு ஆகிய இரண்டன் கலப்பில், வாழ் வின் பொருண்மைகளைத் தெரிந்து தெளியச் சான்றோர் கண்ட புலனெறி வழக்கு, இலக்கியப் படைப்பாக்க முயற்சி களுக்கான பாடுபொருள் வரைவினையும், பாடு நெறி வரையறையினையும் ஒருசேர உணர்த்தி நிற்கின்றது.

வாழ்க்கையின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளத் தொல்காப்பியர், இலக்கண அமைதி சார்ந்த கவிதைப் புனைவுக் கோலத்தையும் அதற்கான நெறிமைகளையும்

படைத்துக் காட்டுவதே பொருளதிகாரம். உள்ளது உள்ள படியே என்ற மிக வெளிப்படை உலகியல் பார்வையோ, மண்ணில் கால்கொள்ளாத, வரம்பிகந்த கற்பனை வெளிப் பாடோ, இலக்கியப் படைப்பாக்கத்தின் முழுநிலையினைக் காட்ட மாட்டா. எனவே, தொல்காப்பியர் இரண்டும் கலந்த முழுநிலைப் பார்வைக்குட்பட்ட அறிவுசார் மரபு ஒன்றனை முந்தையோர் நெறிவழி முறைப்படுத்திக் காட்டு வார். இந்நெறி முறை வழியே சங்கப் பாக்களைக் காண்பது என்பது சங்க இலக்கிய ஆராய்ச்சிக்கு அடிப்படையான ஆய்வு நெறியாகும். எனவே சங்கப் பனுவல்களை ஆராய முற்படுவாருக்கு ஏற்கெனவே முறைப்படுத்தப்பட்ட ஆய்வு நெறிமைகள், இலக்கணத் தரவுகள், ஆய்வுப் புலப்பாட்டு நோக்கு நிலைகள் முன்னிலை வழிமுறைகளாகக் கிளைத்து விடுகின்றன. ஆயினும் பழந்தமிழ் ஆய்வு நெறிமைகள் வழி ஆராயப் புகும் ஆய்வாளன், தான் வாழுங்காலப் படைப் பாக்க நெறிமுறைகள், இலக்கியப் படைப்புத் திறன்கள், திறனாய்ந்து செப்பம் செய்யப்பட்டுள்ள ஆராய்ச்சி நெறிமை கள் இவற்றையும் மனத்துள் கொண்டு ஆராயப் புகின், புதுவது பயக்கும் தன்மை வாய்ந்த அறிவியல் நெறி சார்ந்த முடிவுகள் காண்பதற்கான வாய்ப்புக் கிடைக்கும். எனவே, சங்க இலக்கிய ஆராய்ச்சி என்பது, மரபு நெறிகளின் பின்புலத்தில் சமகால ஆராய்ச்சி நெறிமுறைகளை இணைத்து மேற்கொள்வதான நவீனத்துவம் கொண்டதாக அமைய வேண்டும் என்றாகிறது.

21 ஆண்டுகளுக்கு முன்னர், முதுபேரறிஞர் டாக்டர் மொ.அ. துரையரங்கனாரின் ஆன்ற கல்விப் புலமை நிழ லில் குறுந்தொகை ஆய்வினை மேற்கொண்ட கட்டுரை யாளர், மேற்குறித்த பழம் மரபு போற்றிப் புதுநெறி பொருத்திப் பார்க்கும் ஆய்வுநெறி வழியாகக் குறுந்தொகை யினை ஆய்வுப் புலத்திற்குட்படுத்தினார்.

இங்கு, ''**குறுந்தொகை ஆராய்ச்சியில் எழும் சிக்கல் கள்**'' எனத் தலைப்புத் தந்துள்ள அருமைப்பாடு எண்ணு தற்குரியது. ஆய்வு எல்லையில்லாதது. பெற்ற முடிவுகள் என்றுமே மீள் ஆய்விற்குரியன. ஒரு காலத்து நிகழ்த்திய ஆராய்ச்சி, பெற்ற முடிவுகள், நீண்ட இடைவெளிக்குப் பின்னரும் மீள்பார்வைக்கு உட்படுத்தப்படலாம். எனவே,

குறுந்தொகை ஆராய்ச்சி நிகழ்த்திய காலத்து எதிர்கொண்ட சிக்கல்கள், அவற்றை ஆராய்ந்து பெற்ற முடிவுகள் என்ற நிலையிலும் இன்றும் தொடர்ந்து அதே தலைப்பினை ஆராய்கையில் எதிர்கொள்ள இருக்கும் சிக்கல்கள், முடிவு களே இன்றுவரை காணப்பெறாத சிக்கல்கள் என்ற முத்திறப் பாகுபாட்டில் அணுகுதற்கு உகந்ததாகத் தலைப்பு அமைந்துள்ளது. எனவே, கட்டுரையாளர் பின்வரும் பாகு பாட்டில் இத்தலைப்பினை அணுக முற்படுகிறார்.

1) கட்டுரையாளர் எதிர்கொண்ட சிக்கல்கள்
2) இன்றைய ஆய்வாளர் எதிர்கொள்ள இருக்கும் சிக்கல்கள்
3) முடிவுகளே பெறாத சிக்கல்கள் (எதிர்கால ஆய்விற்கு)

1961 முதல் 1964 வரையிலான கால கட்டத்தில் குறுந்தொகையினை ஆராய்ச்சிக்கு எடுத்தபோது ஆய்வாளர் எதிர்கொண்ட சிக்கல்களும், தீர்வுகளும் பின்வருமாறு அமைகின்றன.

1) தலைப்பே சிக்கல்.
2) குறுந்தொகை — கால ஆராய்ச்சி.
3) எட்டுத்தொகையில் குறுந்தொகை பெறும் இடம் பற்றிய கணிப்பு — பொருண்மை, யாப்பு, புனைவு வழிப்பட்டன.
4) சங்க இலக்கியங்களில் காலத்தால் மிக முற்பட்டது குறுந்தொகை என்ற கருத்தின் வன்மை, மென்மை.
5) குறுந்தொகையில் திணைப் பாகுபாடு பற்றிய சிக்கல்.
6) துறைகள் பற்றிய பகுப்பாய்வு
7) தமிழர் கண்ட எழுதிணை, வடவரின் எண்வகை மணம் — பொருத்தம் பற்றிய ஆய்வு.
8) குறுந்தொகையின் காதற் பொருண்மையின் உள்ளிடு பொருளாய் அமைந்துள்ள இறைமைத் தத்துவம் — மானிடக் காதல் இறைமைக்காதல்.

9) அக மாந்தர்கள் பண்பு நலன்கள் பற்றிய மதிப்பீடு—புதுவகை முயற்சி.

10) குறுந்தொகைப் பதிப்புகள்—உரைகள்—குறை, நிறை—ஒரு கண்ணோட்டம்.

தலைப்பே சிக்கலாயிற்று

ஆய்வாளர், ஆய்வுக் களத்தில் நுழைந்து, ஓராண்டு முடிவில் ஆய்வுநெறி பற்றிய வாய்மொழித் தேர்விலும் வெற்றி பெற்றபின் கிடைத்த செய்தியின்படி டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் (இன்றைய மொழித் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்) குறுந் தொகை ஆய்வு நிகழ்த்தி 1963-இல் எம்.லிட். பட்டம் பெற்றார் என அறிய முடிந்தது. ஏற்கெனவே இரண் டாண்டுகள் ஆய்வு நிகழ்த்தியபின் தலைப்பு மாற்றம் தரும் இடர்ப்பாடு கருதி பேராசிரியர் அவர்கள் தலைப்பினை "A Critical Study of Kuruntokai — An Advanced Study" என மாற்றினார். எம்.லிட். ஆய்வேடும் கிடைத்தது. அதன் நோக்கு போக்கு, அமைப்பு ஆகியவற்றிலிருந்து முற்றாக வேறுபட்ட நிலையில் ஆய்வு தொடரப்பெற்றது குறிக்கத் தக்கது.

குறுந்தொகை-கால ஆராய்ச்சி

இலக்கியச் சான்றுகள், கல்வெட்டு, நாணயங்கள் தரும் சான்றுகள், அயல்நாட்டார் குறிப்புகள் என்ற பல்துறைத் தரவுகளின் அடிப்படையில் ஆய்ந்து அதன் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 2-ஆம் நூற்றாண்டு என வரையறை செய்து ஏனைய சங்கப் பனுவல்கள் தோன்றிய அக்காலப் பகுதியே குறுந்தொகைக்கும் உரியது என நிறுவப்பட்டது.

ஆய்வுச் சிக்கல்கள் 2, 3, 4 ஆகியன ஒரு பொருள் நீர்மையனவே. குறுந்தொகை காலத்தால் முற்பட்டது என நிறுவி 1955 ஜனவரி Tamil Culture, Vol. IV, No. 1 இதழில் இலங்கையைச் சார்ந்த அறிஞர் எச். எஸ். டேவிட் என்பார் ஆய்வுக்கட்டுரை எழுதியிருந்தார்.

1) குறுந்தொகையில் சேரர் பற்றிய குறிப்பு இல்லை. மூவேந்தர் பற்றிய குறிப்புகள் நற்றிணை, அகநானூறு போல எண்ணிக்கையில் அதிகமில்லை.

2) நந்தர் வெறுக்கை பற்றிக் குறுந்தொகை 75-ஆம் பாடலில் வரும் குறிப்பு. இதுபோன்ற குறிப்புகள் சம காலத்தவையாக இருத்தல் வேண்டும். அல்லது அண்மைக் காலத்தனவாக இருத்தல் வேண்டும். எனவே, சந்திரகுப்த மௌரியர் ஆட்சிக்கு வந்த கி.மு. 321-ஆம் ஆண்டிற்கு முற்பட்ட நந்தர் காலத்ததாகும் இப்பாடல். கி.மு. 324 எனக் கொள்ள வேண்டும். புலவர் அக்காலத்தைச் சார்ந்தவ ராதல் வேண்டும்.

3) குறுந்தொகைப் பாடல்கள் குறிக்கும் தழையாடை பற்றிய குறிப்பு. தலைவி வேறு ஆடையின்றித் தழையாடை அணிந்திருந்தாள் என வரும் குறிப்புகள். குறுந்தொகையில் பாடல்கள் 24, 125, 223, 293, 294, 295, 333, 342, 345 — அறுவை, துகில், கலிங்கம் போன்ற ஆடை வகை களே குறுந்தொகையில் காணப்பெறவில்லை. நற்றிணை, அகநானூற்றில் அவை வருகின்றன. எனவே, குறுந்தொகை காட்டும் மகளிர் நாகரிகம் பரவாத காலத்திற்குரியவர் எனலாம்.

இவை போன்ற தரவுகளை முன்வைத்துக் குறுந்தொகை யின் பழமையினை நிலைநாட்டுகின்றார்.

1) குட்டுவன் பற்றிய குறிப்பு குறுந்தொகை 34-இல் வருகிறது. அரசர்களைப் பற்றிப் பாட எழுந்தனவல்ல அகப்பாடல்கள். குறுந்தொகையில் பாடிய புலவர்களே மூவேந்தர்களைப் பற்றிய பிற அகநூல்களில் குறித் துள்ளனர்.

2) பாடலி, கங்கை, இமயம் போன்ற குறிப்புகளைச் சங்கப்பாடல்களில் பரக்கக் காணலாம். இவற்றைப் பற்றித் தமிழர் அறிந்திருந்தனர். சமகாலத்தில் வாழ்ந்தோ, அண் மைக்கால நிகழ்ச்சி என அறிந்தோ குறிக்க வேண்டிய தேவையில்லை. மூவர் தேவாரத்தில் இடம்பெறும் வைப்புத் தலங்கள் பற்றிய கருத்து ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது.

3) தழையாடை பற்றி வருதல். ''திருந்திழை அல்குற்குப் பெருந்தழை உதவி'' எனக் கூறும் குறுந்தொகை. செம்மை யான அணிகலன்கள் அணியத்தக்க நாகரிகம் வாய்ந்த குறுந்தொகைப் பெண்களுக்கு ஆடை கிடைக்க வாய்ப் பில்லையா? தழையாடையும் 'தழை அணி பொலிந்த'

(குறுந். 295) என ஆடைப் புறத்தே அழகு செய்யும் அணியாகவே கொள்ளப்பெறுகிறது. ஆடைக்குக் கஞ்சி போடுதல் பற்றிய குறிப்பினைக் குறுந்தொகை 330-ஆம் பாடல் காட்டும். ஆடைகளைச் சுத்தம் செய்யும் தொழில் பற்றிய குறிப்பே பல்வேறு ஆடைகள் இருந்தமையைக் காட்டும்.

என்பன போன்ற மறுப்புரைகள் எச்.எஸ். டேவிட் அவர்களின் ஆய்வு முடிவுகளின் பொருத்தமின்மையை நிலைநாட்டக் கட்டுரையாளர் பயன்படுத்தினார். குறுந்தொகைப் பழமையானது என்ற கருத்தின் ஆழமின்மையை நிறுவினார்.

ஏறக்குறைய 75 புலவர்கள் குறுந்தொகையில் மட்டுமன்றி, புறம், அகநானூறு, நற்றிணை போன்ற பிற சங்க இலக்கியங்களிலும் பாடியிருக்கும் குறிப்பு இங்குச் சிந்திக்கத் தக்கது.

எட்டுத்தொகை அகநூல்களில் குறுந்தொகை பெறும் இடம்

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற அகப் பாடுபொருள் அமைவுகளின் வரிசையினைச் சிறப்பு நோக்கி முறைப்படுத்தும் வகையில் இளம்பூரணர் காட்டும் உரைக்குறிப்பு அமைகிறது.

> ''முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங்காலை முறைசிறந் தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை''
>
> (தொல். பொருள். அகத்திணையியல், நூற்பா. 3)

என்ற நூற்பாவில் இளம்பூரணர்,

> ''முறை சிறத்தலாவது; யாதானும் ஒரு செய்யுட்கண் முதற்பொருளும் கருப்பொருளும், உரிப்பொருளும் வரின், முதற்பொருளால் திணையாகும் என்பதூஉம், முதற்பொருள் ஒழிய ஏனைய இரண்டும் வரின் கருப்பொருளால் திணையாகும் என்பதூஉம், உரிப்பொருள் தானே வரின் அதனால் திணையாகும் என்பதூஉம் ஆம். 'முறை சிறந்தன' என்பது 'முறைமையாற் சிறந்தன' எனப் பொருள்படும் என்

பார் இளம்பூரணர். எனவே •முதற்பொருள், கருப் பொருள் இரண்டினும் ''மக்கட்கு உரிய பொரு ளாகிய'' உரிப்பொருள், பாடலுக்கு உரிய பொரு ளாகிச் சிறக்கும் முறைமை புலனாகிறது.

31 அடிகள் வரை நீளும் அகநானூற்றில் முதல், கரு, உரி மூன்றும் விரிவாக விளக்கம்பெற இடம் உண்டு. 9 முதல் 13 வரை அமையும் நற்றிணைப் பாடல்களில் முதற்பொருள் வண்ணனையைக் காட்டிலும் கருப்பொருள்கள் அமைவுவழி உரிப்பொருள் பெரிதும் சிறக்கக் காணலாம். குறுந்தொகை 4 முதல் 8 அடி வரையறையில் உரிப் பொருட்கே பெரிதும் முதன்மை நல்குகின்றது.

குறைந்த அடி வரையறையில் கருத்துச் செறிவும், உணர்வுத் தெறிப்பும் சிறப்புற அமைய வாய்ப்புண்டு. தேர்ந்தெடுத்த சொற்களில் உணர்வு அழுத்தம் கொடுத்துச் சிறிய வடிவத்தில் கவிதை நயங்களைக் காட்டப் படைப் பாக்கச் செய்நேர்த்தி தேவை. எட்கர் ஆலன் போ ''நீண்ட பாடல் என்பது ஒரு முரண்பாட்டிற்குரிய சொல்லாக்கம்''[1] என்பார். கவிதையின் செயற்பாடு அது எழுப்பும் உணர் வின் தெறிப்பில் அமைகிறது. ஆன்மாவைச் சென்று தொட்டு அதனை உயர்த்துவதில் சிறக்கிறது. உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்து இன்ப அனுபவம் தந்து, சிந்தனை யைத் தூண்டிவிட அடிவரையறை ஒரு காரணமாகிறது. நீண்ட பாடலைச் சுவைக்கையில் உணர்வுக் கிளர்ச்சியும் இன்பமும், தொய்வும், தேய்வும் என மாறுபட்ட கவிதை அனுபவம் கிடைக்கும். எனவே, எட்கர் ஆலன் போ, சின்னப் பாக்கள் சிறப்பானவை என்றும், இனி வருங் காலத்தில் நெடும் பாடல்கள் செல்வாக்குப் பெற இயலா என்றும் வலியுறுத்தினார்.

இன்ப உணர்வு, அவல உணர்வு ஆகியவற்றின் வெளிப் பாடுகள்—உரையாடல்களோ, தற்கூற்றுக்களோ, எவை யெனினும் சுருக்கமாக அமைகையில் உணர்ச்சி அழுத்தம் வலுப்பெறுகிறது. மொழியில் மிகச் சிறந்த மொழி மௌனம் என்பர். எனவே, உணர்வுகள் கிளர்ந்து உணர்ச்சி வீறுகொண்ட கூற்றுகளாக வடிவம் பெறும் நாடகப் பாங் குடைய சங்க அகப்பாடல்களில் குறுந்தொகைப் பாக்கள் காதல் உணர்வுகளின் மென்மைகளையும், வன்மைபடு

போக்குகளையும், நயம்படவும், அழுத்தமாகவும் உணர்த்திக் காட்டுவதற்குக் காரணம் 4 அடி முதல் 8 அடி வரையிலான அடிச்சுருக்கம் என்பது பெறப்படுகிறது.

யாப்பு நிலையிலும், காதல் உணர்வின் நெகிழ்வு, மென்மை, இவற்றைப் புலப்படுத்தித் திட்பநுட்பமாகக் கருத்துக்களை வரையறுத்துக்காட்ட உதவும் வெண்பாவோ, தூங்கல் ஓசை கொண்ட வஞ்சியோ பயன்படா என்பது வெளிப்படை. ஆயின் புலனெறி வழக்கில் கலிப்பா, பரிபாட்டு காதற்பாட்டுக்குரிய யாப்பின என வரையறுத்தல் இங்குச் சிந்திக்கத் தக்கது. எனினும் கற்றறிந்தார் உணர்ந்து அனுபவிக்க வல்ல செறிவும், கட்டமைப்பும் கொண்ட கலிப்பா மக்கள் நுதலிய அகனைந்திணையையும் எளிமையாக இயல்பாகப் பாட வழி வகுக்காது. பரிபாடலும் இலக்கண வரையறையின்றி 'இது பா என்னும் இயல் நெறி இன்றி .பொதுவாய்க் கலந்து நிற்கும் நெறித்து: எனவே நிகழ்வு ஒன்றனைக் கதைபோலச் சுவைபடச் சொல்வதற்கும், கூற்று நிலையில் உரைத்தற்கும், கிளந்து மொழிதற்கும் ஏற்புடையதாக அமையும் மக்கள் யாப்பு அகவல் ஆகும். எனவேதான் அகப்பாடல்கள் தொல்காப்பிய பாடு நெறியினின்றும் விலகி, ஆசிரியாப்பில் இயற்றப்பட்டன. ஆயிரம் அடி வரை விரிந்து பரந்து வாழ்க்கையின் பல விதப் போக்குகளையும் எடுத்துக்காட்ட இசைவுபட நிற்கிறது ஆசிரியம். சங்கச் சான்றோர் 4 அடி அகவலில் தலைவனின் காதல் ஏக்கத்தைத் தலைவியின் பிரிவுத் துன்பத்தை எனச் செறிவாகவும், இயல்பாகவும், எளிமையும் இனிமையும்பட யாத்தமை நினைந்து இன்புறத்தக்கது.

அடிகள் குறுகக் குறுக, உவமை அணிப் புனைவுகள், வண்ணனைக் கூறுகள், வரலாற்றுக் குறிப்புகள் போன்ற கூறுகளுக்கு மிகுதியும் இடம் இல்லாமற்போக உணர்வு நிலை மட்டுமே மேலோங்கி நிற்க முடிகிறது.

திணைப் பாகுபாடு

மேலே விளக்கம் கண்ட குறுந்தொகை வடிவ அமைப்பு நிலையே, திணைப் பாகுபாடு காணத் துணை செய்தது.

குறுந்தொகை முதற்பதிப்பு 1915-இல் சௌரிப் பெருமாள் அரங்கனாரால் வெளியிடப்பட்டது. இவர் பதிப்பில் திணைக் குறிப்புடன் பாடல்கள் பதிக்கப்பெற்றுள்ளன.

இவருக்குப் பின்னர் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் பாடல்களை மட்டும் பதிப்பித்தார். இப்பதிப்புக் கிடைக்கவேயில்லை.

1930-இல் டி. என். சேஷாசலம் ஐயர், இராமரத்ன ஐயர் உரையுடன் குறுந்தொகையைப் பதிப்பித்தார். இதுவும் கிடைக்கவில்லை.

1933-இல் எஸ். அருணாசல தேசிகர் திணைக்குறிப் புடன் பதிப்பித்தார்.

1937-இல் டாக்டர் உ. வே. சாமிநாதையர் உரையுடன் குறுந்தொகையைப் பதிப்பித்தார். ஆனால் ஐயர் அவர்கள் அமைப்பு முறையில் கூறிய முறையைப் பின்பற்றித் திணைக் குறிப்பே சுட்டாது வெளியிட்டார். 1947-ஆம் ஆண்டில் வந்த இரண்டாம் பதிப்பு, 1955-இல் வெளிவந்த மூன்றாம் பதிப்பு ஆகியவற்றிலும் திணை வழிப்பட்ட அமைப்புமுறை இல்லை.

எனவே, கட்டுரையாளர் குறுந்தொகைப் பாக்களைத் திணை அடிப்படையில் பிரித்துத் திணைவாரியாகப் பாக் களின் எண்ணிக்கை காட்ட வேண்டிய கட்டாயம் ஏற் பட்டது. இளம்பூரணர் காட்டிய உரையின் அடிப்படையி லேயே உரிப்பொருளை முதன்மைப்படுத்தித் திணை வகுக்கக் குறுந்தொகையில் மிகு வாய்ப்புக் கிடைத்தது. பழைய பதிப்புகளின் திணைப் பாகுபாடுகளையும் முறைப் படுத்தி, ஆய்வாளர் முடிவுகளையும் ஒருங்கிணைத்த அட்ட வணைப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. முந்தைய பதிப்பு களின் திணை வேறுபாடுகள் தெற்றெனப் புலப்பட்டன. கட்டுரையாளர் முடிவுப்படி குறுந்தொகையில்,

குறிஞ்சித்திணைப் பாக்கள்	—	170
முல்லை	—	40
நெய்தல்	—	18
மருதம்	—	42
பாலை	—	131
		401

ஆயினும் இம்முடிவுகள் மீள் ஆய்வுக்குரியவை.

முன்னர்ச் சுட்டிய சிக்கல்கள் பலவும் சான்றாதாரங்கள் வழியாகவும், மறுவிளக்க ஆய்வு நெறிப்படியும், அறிவியல் சார் பட்டியல்கள், அட்டவணைகள், வரைபடங்கள் வழி யாகவும் ஆராயப்பெற்று முடிவுகள் கண்டு ஆய்வுலகின் கூர்த்த மதிப்புலத்திற்கு வைக்கப்பெற்றன.

21 ஆண்டுகள் கழிந்த பின்னர் இன்று மீண்டும் குறுந்தொகை பற்றிச் சிந்திக்கையில் ஆராய்தற்குரிய சிக்கல் கள் எழுவது, ஆய்வுப் பாதையில் நிரந்தர அறிவு முயற்சி கள் என்றும் உண்டு என்பதைக் காட்டுகின்றன.

பின்வரும் சிக்கல்கள் ஆய்விற்குரியன:

1) 401 பாக்கள் என்ற அமைப்பு 400 என்ற தொகை நூல்களின் சமச்சீர் எண்ணிக்கைக்கு மாறுபடுகின்றன. 4 அடிச் சிற்றெல்லை 8 அடிப்பேரெல்லைக்கு மீறிய 307, 309 பாக்கள் 9 அடிகள் கொண்டன. மிகையான பாடல் என்பது ஆய்விற்குரியது.

2) குறுந்தொகையில் ''ஆரியர் கயிறாடு பறை'' என்ற இடத்துச் சுட்டப்பெறும் ஆரியர் கழைக்கூத்தாடிகள் என் றும் அவருக்கு 'ஆரியர்' என்ற பெயர் வழக்கு உண்டு என்றும் 'சங்ககாலச் சிறப்புப் பெயர்களில்' டாக்டர் மொ.அ. துரை அரங்கனார் கூறுவார். 'ஆரியக் கூத்தாடி னாலும் காரியத்தில் கண்' என்ற சொல் வழக்கும் நினைப் பதற்கு உரியது.

3) சிலம்பு கழீஇ நோன்பு பற்றிய ஆய்வு என நோக்க 1961-இல் 'பழந்தமிழ்நாடு' என்ற கட்டுரைத் தொகுதியில் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் இதுபற்றி ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ளார். தலைவியின் சிலம்பணிந்த பாதங்களைக் கழுவி வரவேற்றல் மணமகன் வீட்டார் செயற்பாட்டைக் குறிக்கும் என்ற அவர் கருத்து ஏற்புடைய தாக அமைகிறது. ஆயின் சமூகவியல், மானிடவியல் துறை கள் வழிப்பட்ட ஆய்வுகள் நிகழ்த்தினால் புது விளக்கமும் காண இயலும்.

4) 'கொல்லிப்பாவை' பற்றிக் குறுந்தொகை குறிப் பிடும் வல்வில் ஓரியின் கொல்லி மலையும், பாவையும் 'வல்வில் ஓரிக் கொல்லிக் குடவரைப் பாவை' (குறுந். 100) எனக் குறிக்கப்பெறுகின்றன.

குறுந்தொகை 89,

''பெரும்பூட் பொறையன் பேமுதிர்க் கொல்லிக்
கருங்கட டெய்வங் குடவரை யெழுதிய
நல்லியற் பாவை''

எனக் குறிக்கும். மலையமான் திருமுடிக்காரி, ஓரியிட மிருந்து கொல்லி மலையை வென்று சேரனுக்கு ஈந்த குறிப்பினை அகநானூறு 209 காட்டும்.

கொல்லிப்பாவை தெய்வத்தால் வரையப்பட்டது. கண்டார் மயங்கி வீழ்ந்து உயிர்விடுவர் என்ற நம்பிக்கை சங்க காலத்தில் இருந்தமை புரிகிறது. இதுபற்றித் தொடர் ஆய்வு தேவை.

கட்டுரையாளர் தம் ஆய்வில் குறுந்தொகையில் பாடு பொருள், பாடுநெறி அமைவுகள், சங்கக் கவிதைக் கோட் பாடு என்ற கவிதையாக்க நெறிமைகளுக்குப் பெரிதும் சிறப்பிடம் கொடுத்து ஆய்வு நிகழ்த்தியமையால் சமூகவியல் கண்ணோட்டம், வரலாற்றியல் அணுகுமுறை போன்ற ஆய்வுப் பார்வைகளில் குறுந்தொகையை ஆராயவில்லை.

எனவே எதிர்கால ஆய்வுப் புலங்களாகப் பின்வருவன சுட்டப்படுகின்றன :

1) குறுந்தொகைப் பாக்களின் உரை மேற்கோள் செல் வாக்கிற்கான காரணங்கள்

2) கைக்கிளை, பெருந்திணைப் பாக்களும் குறுந் தொகையில் இடம் பெற்றுள்ளனவா?

ஆதிமந்தியார் பா: 31
ஔவையார் பா:

3) ஒரு பாடலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட துறைகள் சுட்டப்பெறும் போக்கு — இது பற்றிய தெளிவுபெற ஆய்வு தேவை.

4) இறைமைக் காதல் — நாயகன் நாயகி பாவம் பற்றிய பிற்கால இறைப் பற்றிலக்கியப் பாடல்களுக்கான அடிப் படைக் கூறுகள் குறுந்தொகையில் காணப்படுதல் பற்றிய ஆழ்நிலை ஆய்வு.

5) புலவர்கள் பற்றிய தனிநிலை ஆய்வு.

6) பாடல் எண்ணிக்கை அடிப்படையில் குறுந்தொகை பாக்கள் அமைப்பு முறை பின்வருமாறு அமைகின்றது:

1) நான்கடிப்பாக்கள் — 39 — 9.7 %

2) ஐந்தடிப் பாக்கள் — 89 — 22.1

3) ஆறடிப்பாக்கள் — 94 — 23 %

4) ஏழடிப்பாக்கள் — 102 — 25 %

5) எட்டடிப் பாக்கள் — 75 — 18.67 %

6) 10 அடிப் பாக்கள் — 2

அடிவரையறையும் பாடல் அமைப்புப் போக்குகளும் பற்றித் தொடர்புபடுத்தி ஆராய்ந்து புதிய முடிவுகள் காண வாய்ப்புண்டு.

7) குறுந்தொகை நடைக்கூறுகள் பற்றித் தனிநிலை ஆய்வு.

8) குறுந்தொகை, ஐங்குறுநூறு, நற்றிணை, அகநானூறு ஆகிய அக நூல்களைப் பல்நோக்கு நிலைகளில் ஒப்பிட்டு ஆய்வு செய்து, சங்க அக இலக்கிய அடிக்கருத்துக் கோட்பாடு, வடிவக் கோட்பாடு, அகப்பாட்ல் படைப்பாக்கக் கோட்பாடுகளை முறைப்படுத்தும் அறிவியல்சார் ஆழ்நிலை ஆய்வுகள்.

ஆய்விற்கு எல்லை இல்லை—முடிவும் இல்லை. அறிவு வாழ்வு உயிரும், உயிர்ப்பும், வளர்ச்சியும் கொண்டது. ஆய்வு வாழ்வு என்பது அறிவு வாழ்வாம். சாந்துணையும் அறிவு முயற்சி உண்டு. கற்பதும் உண்டு. கற்றலும், உணர் தலும், ஓர்தலும், முடிவு காணுதலும் மீள நினைத்தலும், புதுவது காணுதலும் ஆராய்ச்சி உலகின் அடிப்படை நடைமுறைகள். இவை என்றைக்கும் கடைப்பிடிக்கற்பாலன. எனவே, குறுந்தொகை ஆய்வும் இன்னும் தொடரும்—வளரும்.

குறிப்பு

1. Living Master pieces of American Literature, Ed. by Randall Stewart, p. 33.

10. சங்க கால வேந்தர்

அரங்க. இராமலிங்கம்

சங்ககால வேந்தர் ஆராய்ச்சியில் எழும் அடிப்படையான சிக்கல்கள் சிலவற்றைப் பின்வருமாறு எண்ணிப் பார்க்கலாம்.

1. வேந்தர் மன்னர் வேறுபாடு
2. மூவேந்தர் மரபு
3. தொன்மை
4. ஆட்சி எல்லை
5. மூவேந்தரும் தமிழும்
6. மூவேந்தர்
7. வேந்தர் முறைமை
8. காலம்

சங்ககால ஆய்வைப் பொறுத்தவரை சங்க இலக்கியங்களையே (எட்டுத்தொகை, பத்துப்பாட்டு) முதன்மைச் சான்றுகளாகக் கொள்ள வேண்டியுள்ளது. கிடைத்துள்ள ஒரு சில கல்வெட்டுகளும், வெளிநாட்டார் குறிப்புகளும் வரலாற்று ஆய்விற்குத் துணை செய்வனவாக அமையவில்லை. எனவே சங்க காலத்தில் ஆட்சித் தலைவர்களாக விளங்கிய வேந்தர், குறுநில மன்னர் இவர்களைப் பற்றிய ஆய்வில் பல அடிப்படையான செய்திகளையே தெளிவு செய்ய இயலாமல் இடர்ப்பட வேண்டியுள்ளது.

வேந்தர் மன்னர் வேறுபாடு

மன்னன் என்ற சொல் குறுநில மன்னனையும், வேந்தன் என்ற சொல் முடியுடை ஆட்சித் தலைவராகிய சேர, சோழ, பாண்டியரையும் குறிக்கும் நிலையில் சங்க இலக்கியங்களில் இச்சொற்கள் ஆளப்பெற்றுள்ளன.[1]

''சீறூர் மன்னன் நெருநை ஞாங்கர்
வேந்துவிடு தொழிலொடு சென்றனன்''[2]

''மன்னர் ஏவல் செய்ய மன்னிய
வேள்வி முற்றிய வாய்வாள் வேந்தே''[3]

"தொல்குடி மன்னன் மகளைக் கேட்டுவந்த
மாமுது வேந்தர்"[4]

ஆகிய இலக்கிய அடிகள் மன்னருக்கும் வேந்தருக்கும் உள்ள வேறுபாட்டை உணர்த்துகின்றன. ஆனால் சங்க இலக்கியத்திற்கு உரை எழுதிய உரையாசிரியர்கள் இவ்வேறுபாட்டை உணராது உரை எழுதியுள்ளனர். இதனால் ஆய்வில் இவ் வேறுபாடு உணரப்பெறாது மயக்கம் ஏற்படுகிறது.

மூவேந்தர் மரபு

சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெறும் சேர, சோழ, பாண்டிய மரபு எப்படி/எப்பொழுது தோன்றியது என்பதை வரையறுத்துச் சொல்ல முடியவில்லை. குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு என அழைக்கப்பெறும் நிலப்பரப்பில் பாண்டியர் ஆட்சி மேற்கொண்டிருந்ததை அறிய முடிகிறது.[5] சேர, சோழர் இருந்து ஆட்சி புரிந்த தற்கோ, மூவேந்தர் என்ற பிரிவு இருந்ததற்கான சான்றுகளோ இல்லை. கடல்கோளால் குமரிக்கண்டம் அழிவுற்று வட வேங்கடம் தென்குமரி தமிழகத்தின் எல்லைகளாக அமைந்த பின்னரே மூவேந்தரின் அமைப்பினைக் காண முடிகின்றது. ஆயின் தொல்காப்பியனார் காலத்திற்கு முன்பே மூவேந்தர் ஆட்சியமைப்பு நிலைபெற்றுவிட்டதை,

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"[6]

என்னும் கூற்றால் அறியலாம். மூவேந்தரைக் குறிப்பிடும் தொல்காப்பியனார் சேர, சோழ, பாண்டியர் எனக் குறிப்பிடாமல் அவர்தம் மாலையினைப்,

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"[7]

எனக் கூறுகின்றார். மாலைக்கு உரிமையுடைய சேர, பாண்டிய, சோழர் என உணர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. தொல்காப்பியனார் சேரர், சோழர், பாண்டியர் எனப் பெயரிட்டு ஓரிடத்திலேனும் குறிப்பிடவில்லை. சங்க இலக்கியங்கள் சேர, சோழ, பாண்டியரை மூவர் எனப் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

"மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்"[8]

''தமிழ்கெழு மூவர்''[9]

''முரசு முழங்கு தானை மூவர்''[10]

சேர, சோழ, பாண்டியர் என அழைக்கும் மரபு எப்படி/ எப்பொழுது தோன்றியது என்பதை ஆய்ந்துரைக்க இயல வில்லை.

தொன்மை

மூவேந்தரின் தொன்மையினைக் கூற முனைந்த ஆசிரியர் அனைவரும், இவ்வேந்தர் வரலாற்றுக் காலத்திற்கு முன்னர்த் தோன்றியவர் எனக் கூறுவதை மரபாகக் கொண்டுள்ளனர். ''தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டியரென்றாற் போலப் படைப்புக் காலந்தொடங்கி மேம்பட்டு வருதல்''[11] என மூவேந்தரின் தொன்மையினைப் பற்றிக் கூறுகின்றார் பரிமேலழகர். நினைவுக்கு எட்டாத மிகப் பழங்காலத்திலிருந்தே மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியர் தமிழகத்தில் ஆட்சி செலுத்தி வந்தனர் என அறிஞர் பலர்[12] கருத்துரைத்துள்ளனர். இராமாயணம், மகாபாரதம், இரகுவம்சம், அசோகன் கல்வெட்டு, வெளிநாட்டார் குறிப்பு ஆகியனவற்றிலிருந்து மூவேந்தரைப் பற்றிய குறிப்புகள்[13] கிடைக்கின்றன. ஆனால் கிடைக்கின்ற குறிப்புகள் தெளிவில்லாமலும், கருத்து மயக்கம் ஏற்படும் வகையிலும் அமைந்துள்ளன.

ஆட்சி எல்லை

வடக்கில் வட பெருங்கல் இமயத்தையும் தெற்கில் தென் குமரி மலையினையும், கிழக்கும் மேற்கும் கடலை எல்லையாகவும் கொண்டு தமிழகம் விளங்கியது என்பதை,

''வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅ துருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்''[14]

''தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை''[15]

எனப் புலவர் காரிகிழாரும், குறுங்கோழியூர் கிழாரும் முறையே குறிப்பிடுகின்றனர். வடவேங்கட மலையினை வட

எல்லையாகவும், கிழக்கும் மேற்கும் கடலை எல்லையாகவும் கொண்டு தமிழகம் விளங்கியது என்பதை,

''வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து''[16]

''குமரி வேங்கடங் குணகுடகடலா
மண்டிணி மருங்கிற் றண்டமிழ் வரைப்பில்''[17]

எனப் பனம்பாரனாரும், இளங்கோவடிகளும் முறையே பகர்கின்றனர். வடபெருங்கல் இமயமும், வடவேங்கடமும் தமிழகத்தின் வடவெல்லையாக இருவேறு நிலைகளில் குறிக்கப் பெறுகின்றன. எல்லை மாற்றம் எப்பொழுது நிகழ்ந்தது என்று அறியமுடியவில்லை. தம்மைப் புரக்கும் வேந்தனின் எல்லை வடக்கில் இமயம் வரை பரவியிருந்தது எனக் கூறு வதைப் புலவர்கள் மரபாகக் கொண்டிருந்தனர் என்னும் கருத்தும்[18] சிந்தனைக்குரியது.

மூவேந்தரும் தமிழும்

சங்க இலக்கியங்கள் மூவேந்தரைக் குறிப்பிடும்பொழுது தமிழாகவே குறிப்பிடுகின்றன.. மூவேந்தரும் போரிட்ட நிலையினை,

''தமிழ்தலை மயங்கிய தலையாலங் கானத்து''[19]

எனக் குடபுலவியனார் குறிப்பிடுகிறார்.

''வில்லலைத் துண்ணும் வல்லான் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர்''[20]

''மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசுமுழ்ங்கு தானை மூவர்''[21]

என்னும் அடிகள் தமிழ்மொழிக்கும், தமிழ்நாட்டை ஆட்சி செய்தோருக்கும் உள்ள உறவை உணர்த்துகின்றன.

இக்காரணங்களால் சங்க இலக்கியங்கள் வழி அறியப் பெற்ற 78 மூவேந்தர்களில் 28 பேர் (36 %) புலவர்களாகத் திகழ்கின்றனர்.[22] 68 பாடல்களைப் பாடிய, பாலைபாடிய பெருங்கடுங்கோவும், ஒரு பாடலைப் பாடிய குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனும் புலமைச் சிறப்பில் உயர்ந்தே

நிற்கின்றனர். எனவே மூவேந்தர்களை ஆட்சித் தலைவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் ஆய்வு செய்யப் புகுந்தால் அவ்வாய்வு முழுமை பெறாமல் போக வாய்ப்புள்ளது.

மூவேந்தர்

மூவேந்தர் என அழைக்கப்பெறுகின்ற சேர, சோழ, பாண்டிய மரபினர் எப்பொழுது தோற்றம் பெற்றனர்; அல்லது எந்தக் கிளை இனங்களிலிருந்து இவர்கள் வளர்ந்து தற்பொழுதுள்ள பெயரை ஏற்றனர் போன்ற செய்திகளைத் தெளிவாக அறிந்துகொள்வதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. பழந்தமிழ் கிளை இனங்களைக் குறிப்பிட்டு அவற்றில் சிறந்து விளங்கிய ''மீரான்மர், திரையர், வானவர் ஆகிய மூன்று தமிழ் மரபினரும் பாண்டிய, சோழ, சேர அரசுகளென்று பின்னாட்களில் வழங்கிய அரசுகளை நிறுவினர்''[23] என்பர் வி. கனகசபை. இவ்வாறு தோன்றிய மூவேந்தர் அரசுகளின் முதல் வேந்தர் யார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. தொல்காப்பியனார் காலத்தில் வாழ்ந்த மூவேந்தரைப் பற்றி ஆராய்ந்த ரா. இராகவையங்கார்[24] தொல்காப்பியனார் காலத்தில் ஆட்சி புரிந்த பாண்டியன் முடத்திருமாறன் எனவும் சேரன் குட்டுவன் எனவும், சோழன் இவனெனத் துணிய முடியவில்லை எனவும் கூறுவர். இவ்வாறு கூறப்பெறும் கருத்துரைகளுக்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் இல்லை. சேரர், சோழர், பாண்டியர் எனக் கூறுவதற்குரிய பெயர்க்காரணங்களை ஒவ்வொரு தமிழறிஞரும் தத்தம் ஆய்வுப்போக்கிற்கு ஏற்ப கருத்துரைத்துள்ளனர்.[25] சேரரைப் பற்றி ஆய்வு செய்தோர் அவரே தொன்மையானவர் என்றும் முதன்மையானவர் என்றும் கருத்துரைத்துள்ளனர். சோழரைப் பற்றியும், பாண்டியரைப் பற்றியும் ஆய்வு செய்தோர் இதே போக்கில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். சான்றுக்குச் 'சோழர்' என்னும் சொல்லுக்கு அறிஞர்கள் கூறும் கருத்துரையினைக் காணலாம். ''ஆரியர்க்கு முன் தென்னாட்டில் வாழ்ந்த கருப்பு மனிதர் என்னும் பொருளில் வழங்கும் கால அல்லது கோல என்ற வடமொழிச் சொல்லினின்று வந்தது என்பர் சிலர்; சோளம் விளையும் நாடு சோள நாடு அது சோழ நாடு என ஆயிற்று என்பர் மற்றும் சிலர். திருடன் என்னும் பொருளில் வழங்

கும் 'சோரன்' என்ற சொல்லிலிருந்து சோழன் என்ற சொல் வந்தது என்பர் வேறு சிலர்'' எனச் சோழரின் பெயர்படும் பாட்டைக் குறிப்பர் கா. கோவிந்தன்.[26]

வேந்தர் முறை வைப்பு

இவருக்குப் பின் இவர் பட்டம் பெற்றார் எனச் சங்க கால வேந்தர்களைக் கூறமுடியவில்லை. புறநானூற்றில் உள்ள பாடல்களில் மிகுதியானவை சமகாலத்து நிகழ்ச்சியினைக் குறிப்பவை. பதிற்றுப்பத்தைப் பாடிய புலவரும், பாடப்பட்ட வேந்தனும் ஒரே காலத்தில் வாழ்ந்தவர்.[27] பாடல்கள் பாடப்பட்டோனின் முன்னிலையில் பாடப்பெற்றவை. இதனால் புலவர்கள் வேந்தனின் பெயரை நேரடியாகக் குறிக்காமல், செழியன், வளவன், பொறையன் என்றும், 'பெரும' என முன்னிலைப்படுத்தியும், குறிப்பிட்டனர். இவை பாடப்பெற்ற காலத்தில், இப்பாடல்கள் குறிக்கும் வேந்தன் பெயர், வரலாறு முதலியன தெளிவாக அனைவருக்கும் தெரிந்திருக்கும். அதனால் இப்பாடல்களுக்கு முன்னுரையோ, விளக்கமோ தேவையின்றி அனைவருக்கும் விளங்கியிருக்கும். ஆனால் இன்றைய நிலையில் இப்பாடல்கள் பாடப்பெற்ற காலம், இடம், காரணம் ஆகியவற்றை அறிந்துகொள்ள முடியாமையால், இவை உணர்த்தும் வரலாற்றுச் செய்திகளையும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியவில்லை. புறநானூற்றுப் பாடல்களுக்கு எழுதப்பெற்றுள்ள திணை, துறைக்குறிப்புகள், பதிற்றுப் பத்தின் பதிகம் ஆகியவையே இப்புறப்பாடல்கள் குறிப்பிடும் வேந்தரின் பெயர் வரலாறு முதலியவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன. பெரும்பான்மையான புறப்பாடல்கள் யாரைக் குறிக்கின்றன என்பதை அகச்சான்று கொண்டு அறிதற்கு இல்லை. எனவேதான் மூவேந்தர் வரலாற்றினைக் கால வரிசைப்படி முறையாகவும், தெளிவாகவும் வரையறுத்துக் கூற இயலவில்லை.

சோழ வேந்தரைப் பற்றி ஆராய்ந்து நூலெழுதிய டாக்டர் மா. இராசமாணிக்கனார் ''நமக்குள்ள துன்பம்'' என்னும் தலைப்பில் பின்வருமாறு எழுதியிருப்பது ஆய்வாளர்கள் உணரத்தக்க ஒன்றாகும். ''நமக்குக் கிடைத்துள்ள சங்கச் செய்யுட்களைக் கொண்டு, சோழர் அரச மரபினர், மன்னவர் எனக் கூறலாமேயன்றி, 'இவர்க்குப்பின் இவர் பட்டம்

பெற்றனர்' என்று தக்க சான்றுகளுடன் கூறத்தக்க வசதி இல்லை. சங்கச் செய்யுட்களைப் பலபட ஆராய்ந்து, அரசர் முறைவைப்பை அரும்பாடுபட்டு அமைக்க முயன்ற பலர் செய்துள்ள பிழைகள் பலவாகும். ஆதலின் முடியாத இந்த வேலையை மேற்கொண்டு இடர் வராமல் நன்றாகத் தெரிந் தாரைப் பற்றி மட்டும் விளக்கமாகக் கூறிப் பிறரைச் சங்கச் செய்யுட்கள் கூறுமாறு கூறிச் 'சங்ககாலச் சோழர் வரலாற்றை' ஒருவாறு எழுதி முடித்த நாவலர் பண்டிதர் நாட்டார் அவர் களும், பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் அவர்களும் நமது பாராட்டுக்குரியவரே ஆவர். தக்க சான்றுகள் கிடைக் கும் வரை, இப்பேரறிஞர் கொண்டுள்ள முறையே சிறந்த தாகும் என்பது சாத்திரீய ஆராய்ச்சி உணர்வுடையார்க்கு ஒப்ப முடிந்த ஒன்றாகும்.''[28]

மேலே கூறப்பெற்றுள்ள கருத்துரை சோழர்க்கு மட்டு மன்று. இஃது சேர பாண்டியர்க்கும் பொருந்தும். பதிற்றுப் பத்தின் துணையோடு சேரரின் வைப்பு முறையினை அறிஞர் சிலர்[29] ஆய்வு செய்துள்ளனர். ஆனால் பதிற்றுப்பத்தின் பதிகம் மட்டுமே வேந்தரின் வரலாற்றினை எடுத்துரைக் கின்றது. பதிகம் பின்னால் எழுதிச் சேர்க்கப்பெற்றது என அறிஞர் பலர் கருதுகின்றனர். பாண்டிய வேந்தர்தம் வர லாறு ஓரளவிற்குக் கிடைக்கிறது. காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாகவுள்ள பாண்டிய வேந்தர் எண்பத்தொன் பதின்மர், கடல்கொள்ளப்பட்ட தென் மதுரையிலிருந்து ஆட்சிபுரிந்து, முதற் சங்கத்தைத் தோற்றுவித்தனர் என்றும் வெண்தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக வுள்ள ஐம்பத்தொன்பதின்மர், கபாடபுரத்திலிருந்து ஆட்சி புரிந்து இரண்டாவது சங்கத்தைத் தோற்றுவித்தனர் என்றும் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாகவுள்ள நாற்பத்தொன்பதின்மர் இப்பொழுதுள்ள மதுரையில் (உத் திர மதுரை) இருந்து ஆட்சிபுரிந்து, மூன்றாவது சங்கத்தைத் தோற்றுவித்தனர் என்றும், இத்தமிழ்ச் சங்கங்களில் பாண்டிய வேந்தர் முறையே எழுவர், ஐவர், மூவர் எனக் கவியரங் கேறினர் என்றும் இறையனார் அகப்பொருள் உரை[30] இயம்புகிறது. எண்பத்தொன்பதின்மர், ஐம்பத்தொன்பதின் மர், நாற்பத்தொன்பதின்மர் போன்ற வரையறைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இந்த வைப்பு முறையினைச் சங்க இலக்கியங்கள் குறிப்பிடவில்லை. எனவே,

சங்ககால வேந்தர்தம் வைப்பு முறையினை அதாவது இவருக்குப் பின் இவர் பட்டம் பெற்றார் என்பதை அறுதியிட்டுக் கூறுவதற்குப் போதுமான சான்றுகள் இல்லை.

காலம்

வேந்தரின் காலத்தைக் கணிப்பதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. சங்க காலத்தைப் பொறுத்தமட்டில் எட்டுத் தொகை, பத்துப்பாட்டு ஆகிய நூல்களின் துணைகொண்டே ஆய்வு மேற்கொள்ள வேண்டியுள்ளது. கல்வெட்டு, செப்புப் பட்டயச் சான்றுகள் கிடைக்கவில்லை. சங்க காலத்தை ஒட்டிய நடுகற்கள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. கிடைத்த ஒருசில கல்வெட்டுகள் வேந்தர் செய்த கொடைகள் பற்றிக் கூறுகின்றன. சான்றாக மாங்குளம் கல்வெட்டு, தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அந்தணர் ஒருவர்க்கு அளித்த கொடை பற்றிக் கூறுகிறது. கால ஆராய்ச்சியில் ஆய்வு மேற்கொண்ட கே.என். சிவராசப்பிள்ளை[31] அவர்களும் டாக்டர் மா. இராசமாணிக்கனார்[32] அவர்களும் சங்க இலக்கியங்கள் கி.மு. 1000-த்திலிருந்து கி.பி. 300 வரையிலான கால எல்லையினை உடையவை என்ற பொதுவான முடிவிற்கு வருகின்றார்கள். எனவே, சங்க இலக்கியங்கள் வழி அறியப்பெறுகின்ற வேந்தர் இன்ன காலத்தவர் எனத் தெளிவாகக் கூற முடியாதெனினும் இவ் வேந்தர் அனைவரும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவர் என ஒருவாறு அமைதி கூறலாம். சம காலத்தவர் எனக் கூறுவதற்கு ஒருசில சான்றுகள்[33] கிடைக்கின்றன.

சங்க கால வேந்தர் தொடர்பான ஆராய்ச்சியில் எழுந்த சில அடிப்படையான சிக்கல்களைத்தான் இக்கட்டுரை கோடிட்டுக் காட்டியிருக்கிறது. இவை மட்டுமன்றி வேறுசில சிக்கல்களும் உள்ளன. வேந்தர் நிகழ்த்திய போர்கள், அவர்தம் ஆட்சிமுறை இவை தொடர்பான செய்திகளை ஆய்வு செய்யும்பொழுது பல சிக்கல்கள் எழுகின்றன. அவற்றை விரிப்பின் பெருகும். ஆர்வமும் உழைப்பும் நிறைந்த இளைஞர் பலர் இத்துறையில் உழைத்து ஆய்வு செய்ய முன்வருவார்களேயானால் சங்ககால வேந்தர் பற்றியும், சங்ககாலத் தமிழர் வரலாறு பற்றியும் பல புதிய உண்மைகள் புலப்பட வாய்ப்பிருக்கின்றன.

குறிப்புகள்

1. அரங்க. இராமலிங்கம், சங்க இலக்கியத்தில் வேந்தர், பக். 27-302, பக். 300-301 (அட்டவணை — 1).
2. புறம். 319 : 12-13.
3. புறம். 26 : 14-15
4. புறம். 353 : 11-12.
5. (அ) இறையனார் களவியல் உரை, பக். 5-6.
   (ஆ) சிலம்பு. 11 : 18-22.
   (இ) கா. அப்பாத்துரை, குமரிக்கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு, பக். 1-3.
6. தொல். பொருள். 384 : 3.
7. தொல். பொருள். 63 : 4-5.
8. புறம். 35 : 3-4.
9. அகம். 31:14.
10. பெரும். 32-33.
11. குறள். 955 (பரிமேலழகர் உரை).
12. (அ) கா. கோவிந்தன், சங்ககால அரசர் வரிசை-1, சேரர், பக். 2.
    (ஆ) மேற்படி, -2, பாண்டியர், பக். 2-3.
    (இ) டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, ப. 1.
    (ஈ) P.T. Srinivasa Iyengar, History of the Tamils from the earliest times to 600 A. D., p. 3.
13. சங்க இலக்கியத்தில் வேந்தர், பக். 32-36.
14. புறம். 6 : 1-4.
15. புறம். 17 : 1-2.
16. தொல். பாயிரம். 1-3.
17. சிலம்பு. நூற்கட்டுரை.
18. The idea of a Tamil Kingdom extending its boundary to the Himalaya seems to have become part of a theme in the bardic corpus. This is evident from such a claim being

made for a number of kings. Besides being a theme, it was also a formula.

— K. Kailasapathy, Tamil Heroic Poetry, p. 209.

19. புறம். 19 : 2

20. அகம். 31 : 13-14.

21. புறம். 35 : 3-4

22. சங்க இலக்கியத்தில் வேந்தர், பக். 321-325.

23. வி. கனகசபை, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம், கா. அப்பாத்துரை (மொ. பெ. ஆ.), ப. 95.

24. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 371-375.

25. சங்க இலக்கியத்தில் வேந்தர், பக். 39-48.

26. கா. கோவிந்தன், சங்ககால அரசர் வரிசை-2, சோழர், ப. 2.

27. K.G. Sesha Aiyar, Cera Kings of the Sangam Period, p. 2.

28. மா. இராசமாணிக்கனார், சோழர் வரலாறு, பக்.15-16.

29. (அ) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, பண்டை நாளைச் சேரமன்னர் வரலாறு.

(ஆ) K.G. Sesha Aiyar, Cera Kings of the Sangam Period, Luzac & Co., London, 1937.

30. இறையனார் அகப்பொருள் உரை, பக். 5-6.

31. K. N. Sivaraja Pillai, The Chronology of the Early Tamils, University of Madras, Madras, 1932.

32. மா. இராசமாணிக்கனார், தமிழ்மொழி இலக்கிய வரலாறு (சங்க காலம்), பாரி நிலையம், சென்னை, 1963.

33. (அ) சேரமான் மாரிவெண்கோ
பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி
சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி—
— ஔவையார், புறம்: 367.

ஆ) சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமா வளவன்
பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி
— காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், புறம். 58.

இ) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
சேரமான் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்
— ஆலந்தூர் கிழார், புறம். 36

11. சாத்திர நூல்கள்

பழ. முத்தப்பன்

இந்திய மெய்ப்பொருளியல் வரலாற்றில் தனி ஒரு இடத்தைப் பெற்றுள்ள சைவசமயத்தின் தோற்றம் கற்பனைக்கு எட்டாததாய் அமைந்துள்ளது. தோற்றத்தின் கால எல்லையை வரையறுத்துக் கூறமுடியாத சிறப்பினை உடைய சைவ சமயம் தமிழகத்தில் மிகப் பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்கும் முற்பட்ட காலத்திலேயே பரவி யிருந்தது என்பது தெரிகிறது. இவ்விலக்கண நூல் நிலம் பகுக்கும் பொழுது குறிஞ்சிக் கடவுளாக முருகனைக் குறிப் பிட்டிருப்பதும் அதற்குரிய சான்றுகளில் ஒன்றாகும். தமிழ கத்தில் ஆதிகாலம் தொட்டு மேன்மையுற்றிருந்த சைவ சமய வரலாற்றில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு சாத்திரங்களின் தோற்றத்திற்குரிய ஆண்டாக அமைந்து ஆய்வுநிலைக்கு வித் திடுகிறது. சைவசமயத் தத்துவக் கருத்துக்கள் அந்த நூற் றாண்டில்தான் தனி ஒரு இலக்கிய வடிவம் பெற்றன. எனவேதான் பிற்கால-இலக்கிய ஆய்வாளர்கள் 13-ஆம் நூற்றாண்டைச் சாத்திர நூல்களின் வரலாற்றுத் தோற்றத் திற்குரிய நூற்றாண்டு எனக் குறிப்பிடுகின்றனர்.[1]

கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு முன்புவரை சைவசமயத் தத்துவக் கருத்துக்கள் பக்திப் பனுவல்களாம் திருமுறை களின் மூலமும், திருமந்திரம் போன்ற சில தத்துவ நூல் களின் மூலமும் வெளிப்படுத்தப் பெற்றுள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் சைவ சமயத்தோடு ஒருசேர வளர்ந்த விசிஷ்டாத்வைதம், துவைதம் ஆகிய சமயங்கள் தத்தம் கொள்கைகளைத் தத்துவங்களாக வெளிப்படுத்தின.[2] பிற சமய வளர்ச்சியோடு இந்த நூற்றாண்டில் சைவசமயமும் தம் கொள்கைகளைத் தனியே வகுத்து அவற்றைத் தத்துவங் களாக நூல் அளவில் வெளிப்படுத்த வேண்டிய நிலைக்கு உந்தப் பெற்றது. இத்தகைய சூழலில் சைவ சித்தாந்தச் சாத் திர நூலாகிய ஞானாமிர்தம் முதன்முதலாகத் தோன்றிற்று. ஞானாமிர்த ஆசிரியர் வாகீசமுனிவர் தன் நூலில் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும், மாறுபட்ட கொள்கையினரை

மறுத்தலையும் அமைத்துள்ளார். ஞானாமிர்தத்திற்குப் பின்னர் அதே நூற்றாண்டில் திருவுந்தியாரும், திருக்களிற்றுப் படியாரும் தோன்றிச் சைவ சித்தாந்த வளர்ச்சிக்கு அடி கோலின. இம்மூன்று நூல்களும் சிவஞான போதத்திற்கு முன்னர்த் தோன்றிய சைவசித்தாந்த நூல்களாகும். ஆயின் சைவசித்தாந்த நூல்களை வகைப்படுத்தியோர் திருவுந்தியாரையும், திருக்களிற்றுப்படியாரையும் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கில் சேர்த்து வழங்கினாரேயன்றி ஞானாமிர்தத்தைச் சாத்திர எண்ணிக்கையில் அடக்காது விட்டுவிட்டனர். இது, சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களை ஆய்வு செய்கின்றபொழுது ஞானாமிர்தம் பற்றிய எண்ணத்தைத் தோற்றுவிக்காததோடு, சாத்திர நூல்களுக்கு அடி கோலிய முதல்நூல் எது என்பது பற்றிய கருத்து வேறுபாடு களையும் உண்டாக்கிவிடுகிறது.

அதுபோல உமாபதி சிவாச்சாரியாரின் நூல்களோடு நிறைவு பெற்று விளங்குகின்ற, சைவசித்தாந்த சாத்திரங்கள் 14-க்குப் பிறகு தோன்றிய பண்டார சாத்திர நூல்களும் சாத்திர எண்ணிக்கையில் சேர்த்து எண்ணப்படாமல் தனித்து எண்ணப்படுவதால் சைவசித்தாந்தச் சாத்திரக் கருத்துக் களுக்கு முறையான பரிணாம வளர்ச்சியை அமைக்க முடியவில்லை. எனவே சாத்திர நூல்களைப் பற்றி' ஆய்வு செய்யும்பொழுது எங்கிருந்து தொடங்குவது என்பதும் எவற்றின் வழி நிற்பது என்பதும், எங்கு நிறைவு பெற்றுத் திகழுகிறது என்பதும் ஆய்வாளனுக்கு அறிய முடியாததாகி, சாத்திர நூல்கள் ஆய்வு தடைப்படுகிறது.

சாத்திர நூல்களில் பெரும்பாலானவற்றைத் தந்திருக்கின்ற ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது சந்தான சாரியார் என்ற ஒரு பரம்பரை குறிப்பிடப்படுகிறது. இச் சந்தானசாரியார் பரம்பரையைத் தமிழில் குறிப்பிடும் பொழுது குரு பரம்பரை எனலாம். இப்பரம்பரையினர் அகச் சந்தானாசாரியார் புறச் சந்தானசாரியார் என இரு வகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளனர். நந்தியம் பெருமான், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசினிகள், பரஞ் சோதி முனிவர் ஆகிய நால்வரும் சிவபெருமானைத் தலைமையாகக் கொண்டு திருக்கயிலாயத்தில் வாழ்ந்தவர்கள். ஆதலால் அகச்சந்தானம் எனப்பட்டவர். பின்னர் பரஞ்சோதி முனிவரால் மெய்கண்டார் சிவஞான அறிவைப்பெற அவ

ரால் அருணந்தி சிவாசாரியார் மெய்ஞ்ஞானம் கைவரப் பெற்றுத் தன் மாணவராகிய மறைஞான சம்பந்தருக்கு ஞானநிலை காட்டிட மறைஞான சம்பந்தர் தான் பெற்ற ஞானப்பொலிவை உமாபதி சிவாசாரியாருக்கு அருளினார் என்பதால் இவர்கள் நால்வரும் நிலவுலகில் வாழ்ந்த காரணத்தால் புறச் சந்தானவாசாரியார் எனப்பட்டனர். இச் சந்தான பரம்பரையைப் பற்றிய செய்திகள் சாத்திர நூல்களாகிய சிவஞான சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் இடம்பெற்றுள்ளன. சிவஞான சித்தியாரில் நந்தியம்பெருமான், சனற்குமாரர் என்ற இரண்டு பேர்களை மட்டும் அருணந்தியார் குறிப்பிட, பின்னால் வந்த சிவப்பிரகாசத்தில் நந்தியம்பெருமான், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதியார், மெய்கண்டார், அருணந்தியார், மறைஞான சம்பந்தர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குருபரம்பரையாம் சந்தானாசாரியார் பரம்பரை குறிப்பிடப்பெறும் பொழுது அகச் சந்தானாசாரியர்கள் சிவாகமத்தை அருளியதாகவும், புறச் சந்தானாசாரியார்கள் இக் காலத் தத்துவ நூல்களைத் தந்ததாகவும் சைவ சித்தாந்த வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.[3] இவ்வாறு தத்துவ நூல் ஆசிரியர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 14 சாத்திரங்களில் முதல் இரண்டாக அமைந்துள்ள திருவுந்தியாரையும், திருக்களிற்றுப்படியாரையும் அருளிய இருவரின் மரபுகள் முன்கூறிய சந்தான மரபுகளில் இடம்பெறாமை ஐயப்பாட்டைத் தருகிறது. இவ்விரு மரபைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது திருவியலூர் உய்யவந்தார் சந்தானம் என்று தனி ஒரு சந்தானம் குறிப்பிடப்பெற்று அதைப் பற்றிய செய்திகள் முழுமையாக அறியமுடியாமையால்[4] தத்துவ நூல் ஆசிரியர்களில் முதல் இருவரைப் பற்றிய வரலாற்றாய்வு தடைப்படுகிறது.

சிவஞானபோதத்தினைத் தந்த மெய்கண்டார், அவரைச் சார்ந்த அருணந்தியார், அவரைச் சார்ந்த மறைஞான சம்பந்தர், அவரைச் சார்ந்த உமாபதியார் ஆகியோர் மெய்கண்ட சந்தானம் என்று வழங்கப் பெறுகின்றனர். ஆனால் 14 சாத்திரங்களில் ஒன்றான உண்மை விளக்கத்தினைத் தந்த திருவதிகை மனவாசகங்கடந்தார் இந்தச் சந்தானத்தில் சேர்க்கப்படாது தனித்து நிற்கிறார். எனவே, பதினான்கு

சாத்திரங்களில் உய்யவந்தார் சந்தானம், மெய்கண்டார் சந்தானம் இவ்விரண்டிலும் சேராத மனவாசகங்கடந்தார் ஆகியோர் பற்றிய பரம்பரை குருபரம்பரையில் தெளிவாக வரையறை செய்யப்படாததால் சாத்திர நூல்களின் பொது வான வரலாற்றை அறியமுடியாது தடைப்படுகிறது. அதி லும் ஒரு குறிப்பு மெய்கண்ட சந்தானத்தில் ஒருவராகிய மறைஞான சம்பந்தர் பெயரளவில் நிற்கின்றாரே அன்றி அவர் யாத்து அருளிய தத்துவ நூல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை அல்லது அறியமுடியவில்லை. எனவே, சாத் திர நூல்களின் ஆய்வில் ஒரு பொதுவான சாத்திர நூல் வரலாற்று ஆய்வு பெரிதும் சிக்கலுக்கு உள்ளாகிறது.

சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் கூறும் சைவத் தத்துவங் கள் இந்திய நாட்டில் வேறெங்கும் பரவலாக வழங்காது தமிழ்நாட்டில் மட்டுமே மிகுதியும் வழங்கப்பெறுவதால் சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் கூறும் தத்துவங்களைத் தமி ழருக்கே உரிய தத்துவங்களாகக் குறிப்பிடலாம். அவ்வாறு குறிப்பிடும்பொழுது ஒரு பெரிய இடர்ப்பாடு தோன்று கிறது. அதாவது சாத்திரங்கள் கூறுகின்ற கொள்கைகள் தமிழருக்கே உரியவை. ஆயின் அக்கொள்கைகள் கூறும் முதல் நூல் எது? என்று அறிய வேண்டிய இன்றியமை யாமை ஏற்படுகிறது.

பெரும்பாலும் சாத்திர நூல்களுக்கு அச்சாணியாக விளங்குவது மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்பர். அவ்வாறானால் அதுதான் முதல்நூல் என்று கொள்ளலாமா? அவ்வாறு கொள்ளும்போது மெய்கண் டார் காலத்திற்குமுன் தோன்றிய திருமந்திரம், ஞானா மிர்தம் உள்ளிட்ட நூல்களை எந்த அடிப்படையில் கொள் வது? இத்தகைய ஐயங்களுக்கு விளக்கம் கூறுவதற்காகச் சைவ சித்தாந்திகள் ஒரு கருத்தினை வெளிப்படுத்துவர். அதாவது சைவசித்தாந்தத் தத்துவங்களுக்கு வேத ஆகம நூல் களே பிரமாண நூல்கள் என்பர். இதனைச் சிவஞான சித்தி யாரில் அருணந்தியார் பின்வருமாறு உறுதிப்படுத்துவார்.

''வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கும் நூல்இவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூல் அனாதிஅமலன் தருநூல் இரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு எனலாம்''

— (சுபக்கம் — 267)

எனவே, சித்தாந்தவாதிகள் கருத்துப்படி, சைவசித்தாந்தத் தத்துவ நூல்களுக்கு முதல் நூலாக விளங்குவது வேத ஆகம நூல்களே ஆகும். இவ்வேத ஆகம நூல்கள் தமிழில் தோன்றியனவா? அல்லது வடமொழியில் தோன்றியனவா? என்ற ஆய்வு பல்லாண்டு காலமாக நடைபெற்று வருகிறது. சாத்திர உரையாசிரியர்களாகிய சிவஞான முனிவர்[5] போன்றோரும் இக்கால ஆய்வாளர்கள் இலங்கை கி. லட்சுமணன்[6] போன்றோரும் இவ்வேத ஆகம நூல்கள் வடமொழியில் இருந்தன; அவற்றை அடியொற்றியே தமிழ்ச் சாத்திர நூல்கள் தோன்றின என்ற கருத்தைக் குறிப்பிடுகின்றனர். ஆயின் இக்கருத்துக்கு மாறாக வேத ஆகம நூல்கள் முதன் முதலில் தமிழில்தான் இருந்தன என்பது கா. சுப்பிரமணிய பிள்ளை, மறைமலை அடிகளின் கருத்தாகும்.

''ஆதியில் வேதங்களும், ஆகமங்களும் தமிழில் இருந்தன. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என இன்று வழங்கும் இதே பெயர்களோடு அன்று தமிழிலும் நான்கு வேதங்கள் இருந்தன. அவற்றுள் ஒன்றாகிய சாமவேதம் இராவணனால் பாடப்பெற்றது. காலப்போக்கில் தமிழ் வேத ஆகமங்கள் அழிந்துவிட்டன. வடமொழி வேத ஆகமங்கள் மட்டும் அழியாது நிலைத்து நின்றன. எனவே அவைகளையே தமிழரும் தங்களுக்குப் பிரமாண நூல்களாகக் கொள்ளத் தலைப்பட்டனர்'' என்று கா. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார்.[7] இத்தகு நிலையில் சாத்திர நூல்களுக்கு மூலநூல் பற்றிய கருத்துக்கள் ஆய்வுக்கு வரும்பொழுது ஒன்று மட்டும் நமக்குத் தெளிவாகப் புலனாகின்றது. அதாவது மெய்கண்ட சாத்திரத்திற்கு முன்னமேயே சைவ சித்தாந்தத் தத்துவக் கருத்துக்களைக் குறிப்பிடுகின்ற நூல்கள் இருந்திருக்கின்றன என்பதே அது. இதில் ஏற்படுகின்ற இடர்ப்பாடு அந்த மூல நூல்கள் தமிழில் இருந்தனவா அல்லது வடமொழியில் இருந்தனவா என்பதேயாகும். தக்க சான்று கிடைக்கும்வரை இக்கேள்வி கேள்விதான். எனவே, சாத்திர நூல்களின் ஆய்வில் இப்பொழுது கிடைத்திருக்கின்ற சாத்திர நூல்களுக்கு முதல் நூல் எது என்பதை அறிய முடியாமல் ஆய்வு தடைப்படுவது உண்மையாகும்.

சாத்திர நூல்கள் பற்றி ஆய்வு செய்யும்பொழுது சரித்திர நூல் ஆசிரியர்களின் வரலாறு இன்றியமையாத ஆய்

வாக அமைகிறது. சாத்திர நூல் ஆசிரியர்கள் வரலாற்றில் இயற்கை இறந்த நிகழ்ச்சிகள் சமய நம்பிக்கைகளால் குறிப் பிடப்பெற்று வரலாற்று ஆய்வு சிக்கலுக்குள்ளாகிறது. எடுத்துக்காட்டாக மெய்கண்டார் வரலாற்றில் காணப் பெறும் செய்திகளைக் குறிப்பிடலாம். பொதுவாகச் சந் தானாசாரியார்கள் வரலாற்றைக் குறிக்கும்போது சந்தானா சாரிய வரலாறு கூறும் சந்தானாசாரியார் புராணம் இடம் பெறுகிறது. அதில் மெய்கண்டார் வரலாற்றில் பின்வரும் செய்தி இடம்பெற்றுள்ளது:

> ''சுவேதவனப் பெருமாள் திருவெண்ணெய் நல்லூரில் 2 வயதுச் சிறுவராய் இருந்தபொழுது திருக்கயிலாயத்தில் சனற்குமார முனிவருடைய ஞானப் புதல்வராகிய சத்தியஞான தரிசினிகள்பால் ஞான உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் அகத்திய முனிவரைக் காண்ப தற்கு அவர் வீற்றிருக்கும் பொதிய மலைக்குத் தம் ஒளி விமானமேறி வந்து கொண்டிருந்தார். திருவெண்ணெய் நல்லூருக்கு அருகே வந்ததும் அவ்விமானம் மேலே செல்லாது நின்றது. உடனே பரஞ்சோதியார் தமது ஞான நிலையில் உண்மை உணர்ந்து சுவேதனப் பெரு மாளை அடைந்து அவர்க்குச் சிவஞானத்தை உரைத்து, சுவேதனப் பெருமாள் என்னும் பெயரை மாற்றி— தமது ஞானத் தந்தையின் பெயராகிய சத்தியஞான தரிசினி என்பதன் தமிழாக்கமாகிய 'மெய்கண்டார்' என்ற திருப்பெயரை இட்டுச் சென்றார்''

எனக் குறிப்பிடுகின்றது.[8]

இந்நிகழ்ச்சியில் இரண்டு அல்லது மூன்று வயதுடைய இளையவருக்குத் தத்துவ விளக்கங்கள் உபதேசம் செய்யப் பெற்றன என்று அமைந்துள்ள செய்தியும், 13-ஆம் நூற் றாண்டில் அகத்தியர் பொதியமலையில் இருந்தார் என்று அமைந்துள்ள செய்தியும், ஒளிவிமானம் பற்றிய செய்தியும் ஆய்வு நிலையில் ஐயத்தைத் தருகின்றன. இவ் ஐயத்தை ஐயமாகக் கருதாமல்—இவை புராண நிகழ்ச்சிகள் எனக் கொண்டு ஒதுக்கினாலோ அல்லது மறுத்தாலோ—சமய நெறியில் நின்று பிறழ்ந்த குற்றம் சமயவாதிகளால் சாற்றப் படுகின்றது. இதனால் வரலாற்றில் உண்மை நிலை காண முடியாமல் தடுக்கப்படுகிறது. இதுபோல உமாபதிசிவம்

பற்றிய வரலாற்றில் பெத்தான் சாம்பனுக்கும்—முள்ளிச் செடிக்கும் உமாபதிசிவம் முக்தி கொடுத்த வரலாறு ஆய்வாளர்களால்[9] குறிக்கப்படுகிறதே அன்றி—அச்செய்தி பற்றிய வன்மை மென்மைகளைக் குறிப்பிட முடியவில்லை. எனவே, சாத்திர நூல் ஆய்வில் நூலாசிரியர்களைப் பற்றிய வரலாற்றுச் செய்திகள் வரையறுக்க முடியாமையால்—வரையறுக்காததால்—நூல்களின் காலச்சூழல் அல்லது நூல்களின் பின்னணி பற்றிய செய்திகளை ஆய்வாளர்களால் தெளிவாகத் தரமுடியவில்லை. அவ்வாறு தரமுடியாமையால் ஆய்வு முழுமைபெற முடியவில்லை.

சாத்திர நூல்களின் ஆய்வுகள் பிற இலக்கிய நூல்களில் நிகழ்ந்துள்ள ஆய்வுகளைப்போல எண்ணிக்கையில் பல்கிப் பெருகித் திகழவில்லை. இன்னும் குறிப்பாகச் சொன்னால் திருமுறை இலக்கியங்களில் நடைபெற்ற ஆய்வுகளின் அளவுக்குக்கூடச் சாத்திர நூல்களின் ஆய்வுகள் பெருகவில்லை. அதற்கு முக்கியக் காரணம்—சாத்திரங்களின் உட்பொருளில் தெளிவான அறிவு ஏற்பட முடியாமையே. சாத்திர அறிவில் ஓர் தெளிவு ஏற்பட முடியாமைக்குக் காரணம் சாத்திரங்களின் அடிப்படையான முப்பொருள் பற்றிய செய்திகளில் காணப்பெறுகின்ற மயக்கமேயாகும்.

இம்முப்பொருள் பற்றிய செய்திகளைச் சாத்திர நூல்கள் தரும்பொழுது முடிந்த முடிபாகச் செய்திகளை வரையறுத்திடவில்லை. முப்பொருளில் முதன்மையானது பதியாகும். பதியினுடைய உண்மையை விளக்கச் சித்தாந்தச் சாத்திர ஆசிரியர்கள் உலக உண்மையை எடுத்துக்காட்டி, உலகம் இருப்பதனால் அதைப் படைத்த இறைவனும் உண்டு என்பர்.[10] அவ்வாறு கூறும்போது உலகைப் பார்க்கும்போது படைத்த இறைவன் உணரப்படுவது எவ்வாறு என்றால் பானையைப் பார்க்கும்போது குயவன் நினைவுக்கு வருமாறுபோல[11] என்பர். இவ்வாறு இறை உண்மையை எடுத்துக்கூறும் பொழுது சித்தாந்தத் தத்துவங்களை வெளிப்படுத்துகின்றனர் ஆசிரியர்கள். தத்துவங்களை வெளிப்படுத்தும்போது பிற சமயத் தத்துவங்களையும்—பிற சமயத்தார் தருக்கங்களையும் மறுத்து—சைவ சித்தாந்தக் கருத்துகளை நிலைநாட்டுகின்ற போக்கும் அவர்களிடையே காணப்பெறுகின்றது. அத்தகைய இடங்களில் சில ஐயங்கள்—

அல்லது பிற சமய மறுப்புரைகள் தெளிவாக அமைந்துவிடு கின்றன எனக் கூற இயலாது. சில நேரங்களில் சாத்திர ஆசிரியர்களின் மறுப்புரைகள் சமாதானச் செயலாகத் தென்படுகிறதே அன்றி தருக்க நிலையில் பொருத்தமானது எனக் கூற இயலவில்லை.

உதாரணமாக இறைவன் உலகத்தைப் படைக்கின்றான் என்பதற்குக் குயவன் பானை வனைவதை எடுத்துக்காட் டாகக் காட்டுவதைக் குறிப்பிடும்போது ஒரு வினா எழு கின்றது. குயவன் பானையை வனையும்போது அவனுடைய இடத்தில் இருந்து வனைகின்றான். அப்படியானால் இறை வன் உலகத்தைப் படைக்கும்பொழுது எங்கிருந்து படைக் கின்றான் என்ற வினா எழுகிறது. இதற்குச் சித்தாந்திகள் பதில் சொல்லும்போது உவமை என்பதை முழுமையாகக் கொள்ள முடியாது. ஒருபுடை ஒற்றுமையாகத்தான் கொள்ள வேண்டும். எனவே, உலகத்தை இறைவன் படைக்கும் பொழுது அவனுக்கு இடம் தேவை இல்லை. தன்னுடைய ஆற்றலால் அவன் உலகத்தைப் படைக்கின்றான் என்று சித்தாந்திகள் மறுப்புரைக்கின்றனர். இந்த மறுப்பு ஏற்புடை யதாக இருக்கின்றது என்பதைவிட ஏதோ ஒரு அமைதி தருகிறது என்றுதான் கொள்ள முடிகிறது.

மற்றொன்றைக்கூட இங்குக் குறிப்பிடலாம். உயிர் பற்றிக் குறிப்பிடும்பொழுது உயிர் என்பதற்குச் சரியான விளக்கம் சித்தாந்தவாதிகளால் தரப்படவில்லை. சைவ சித்தாந்தம் எதனை உயிர் என்று குறிப்பிடுகிறது என்ற வினா எழுந் தால் இதனைத்தான் உயிர் என்று குறிப்பிடுகிறது என்று வரையறுத்துச் சொல்ல முடியவில்லை. உடம்பை உயிர் என்று கூறமுடியாது. ஐம்பொறிகளை உயிர் என்று கூற முடியாது. சூட்சும தேகத்தையும் (கனவுடல்) உயிர்என்று கூறமுடியாது. அந்தக் கரணங்களையும் (மனம், புத்தி, சித்து, அகங்காரம்) உயிர் என்று கூறமுடியாது. பிராணவாயு உயி ராகாது. ஐம்பொறிகளின் கூட்டம் உயிர் ஆகாது. பரப் பிரம்மம் உயிர் ஆகாது என்றெல்லாம் இன்னின்ன உயிர் கள் ஆகா(து) என்று கூறப்படுகிறதே அன்றி இதுதான் உயிர் என்று கூறப்படவில்லை. சிவஞானபோதத்தின் அடிப் படையில் எழுந்த சாத்திர நூல்கள் எல்லாவற்றிலும் மூன் றாம் சூத்திரமாக உயிர் உண்மை கூறப்படுகிறது. எத்தனை

தான் படித்துத் தெளிவுபெற முயன்றாலும் உயிர் என்பதற்குச் சரியான விளக்கம் காணமுடியவில்லை. இவ்வாறு தத்துவக் கருத்துக்கள் தெளிவற்ற நிலையில் அமைந்திருக்கும் பொழுது சாத்திர ஆய்வியல் தடைப்படத்தான் செய்கிறது.

அடுத்துச் சீவன்முக்தி என்ற ஒரு சிறப்புநிலை தத்துவங்களில் கூறப்படுகின்றது. இந்தச் சீவன் முக்தியைப் பற்றிய தத்துவக் கருத்துக்கள் உடம்போடு கூடியிருக்கும் நிலையில் இறையருளைப் பெறுவதைச் சீவன் முக்தி என்று குறிப்பிடுகின்றன. சீவன் முக்தி நிலையில் நின்றோர்க்கு ஆகாமியம், சஞ்சிதம் என்னும் இருவகை வினைகளும் இல்லாது ஒழிந்தன. ஆயினும் பிராரத்தம் என்பது இருத்தலின் அஃது உள்ளவரையில் உடம்பும் நீங்காது நிற்கும். அஃது உடலளவாய் நின்று ஒழியுமே அன்றி உயிரைத் தாக்கி உலகத்தோடு தொடர்புபடுத்தல் இல்லை. எனவே, சீவன் முக்தி நிலையை அடைந்தோர் எஞ்ஞான்றும் இறை நிலையில் அழுந்தி இறைவனோடு தொடர்புற்று உலகத்தோடு தொடர்புறாது நிற்றல் எனக் குறிப்பிடுவர்.[12] இக்கருத்துச் சைவ சித்தாந்தத்தில் முக்தி என்ற சொல்லுக்குக் குறிப்பிடுகின்ற அல்லது முக்தி அடைவதற்குக் கூறுகின்ற சாதன முறைமைகளிலிருந்து மாறுபட்டது போன்ற உணர்வைத் தருகிறது. அதாவது இறைவனுடைய திருவடியை அடைவதுதான் முக்தி என்று சாத்திர நூல்கள் கூறுகின்றன.

''தன் மெய்வடிவாம் சிவத்தை
செம்மையே பெறுகை முத்திஎன்று செப்புவர்
சிவனடியைச் சேரும்முத்தி செப்புவது இங்குயாமே''

என்று சிவஞான சித்தியார் கூறுவதை இங்கு எடுத்துக்காட்டாகக் காட்டலாம். அவ்வாறு இறைவனடியைச் சேர்வதை முக்தி என்று குறிப்பிட்ட பிறகு செம்மலர் நோன்தாள் சேரவொட்டாது அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ மாலற நேயமும் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழும் அடியார்கள் இவ்வுலக வாழ்வில் சீவன் முத்தராவார் என்ற கருத்தைக் கூறும்போது தெளிவில்லாத நிலையில் ஆய்வை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

முப்பொருளில் மூன்றாவது நிலையில் உள்ளது பாசமாகும். பாசத்தின் இயல்பு, அது மூன்று வகையாகத் திகழ்

வதாகும். ஆணவம், கன்மம், மாயை என்பன அவை. இந்த மூன்றில் ஆணவம் என்பதைத் தத்துவவாதிகள் அனைவரும் ஏற்றுக்கொள்வதில்லை. காரணம் ஆணவம் என்பதை உணர்தல் மிகவும் அரிதாகும். சைவசித்தாந்திகள் ஆணவத்தைச் சூக்குமப் பொருள் எனக் குறிப்பிடுவர். எனவே இந்த நுண்பொருளை உணரமுடியாத காரணத்தால் சைவசமயம் தவிர ஏனையச் சமயங்கள் ஒப்புக்கொள்வதில்லை. ஒப்புக் கொள்கிற சைவசமயச் சாத்திரங்கள் ஆணவம் பற்றித் தெளிவாக உணர்த்துவதாகக் கொள்ள முடியவில்லை. இன்றைய சைவசித்தாந்த அறிஞர்கள்கூட ஆணவம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளனர்.

ஆணவத்தைப் பற்றிச் சித்தியார் தனி ஒரு பாடலில் குறிப்பிடுகிறது.

> ''ஒன்றதாய், அநேக சத்தி உடையதாய், உடனாய், ஆதி
> அன்றதாய், ஆன்மா வின்தன் அறிவொடு தொழிலை ஆர்த்து
> நின்று, போத் திருத்த வத்தை நிகழ்த்தி, செம்பினில் கிளம்பு ஏய்ந்து
> என்னும்அஞ் ஞானம் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே''
>
> (பா. 170)

இப்பாடலிலிருந்து ஆணவ மலமானது ஒன்றாய், எண்ணிறந்த சக்திகளை உடையதாய், உயிர்களோடு கூடி நிற்பதாய், தோற்றம் இல்லாததாய், உயிர்களின் அறிவையும் தொழிலையும் மறைந்திருப்பதாய், செம்பினில் பொருந்திய களிம்பினை ஒத்ததாய் உயிர்களுக்கு அஞ்ஞானத்தைத் தருவத்தாய் உள்ளது என்று அருணந்தியார் குறிப்பிடுகின்றார். இப்பாடலின் மூலம் ஆணவ மலம் ஒரு தனிப்பொருள் என்றும் அஃது உயிரைப்பற்றி நிற்கிறது என்றும் நாம் அறியமுடிகிறது. அவ்வாறானால் இந்த ஆணவ மலம் எப் பொழுது உயிரைப் பற்றியது என்ற வினா எழுகிறது. இந்த வினாவிற்கு விடையைச் சித்தியாரில் காணமுடியவில்லை. உயிரும் ஆணவமும் இறைவனைப்போல நித்தியமானது என்பது சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கொள்கை யாகும்.

''பதி, பசு, பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பாசம் அநாதி''[13]

என்ற பாடலும் அதனை வலியுறுத்தும். எனவே, உயிர் நிலையானது, பாசம் நிலையானது இரண்டும் தனித்தனிப் பொருள், இரண்டும் எவ்வாறு சேர்ந்தன அல்லது எந்த அடிப்படையில் இறைவன் அவற்றைச் சேர்க்கிறான் என் பன போன்ற வினாக்கள் எழுகின்றன. இவற்றிற்கெல்லாம் சித்தாந்திகள்,

''உயிர் ஆணவமலம் இன்றி இருந்த காலமே
இல்லை, தொன்றுதொட்டு ஆணவமலத்தோடு
கூடித்தான் உள்ளது...''

என்று ஒரே மறுப்பைத்தான் குறிப்பிடுகின்றனர்.[14]

இவ்வாறு சைவசித்தாந்தச் சாத்திரங்களின் ஒரு முடிந்த முடிபாகத் தத்துவங்கள் நிறுவப்படாததால் ஆய்வுநிலை தடைப்பட்டுச் சிக்கலை ஏற்படுத்துகின்றது. இத்தத்துவக் கருத்துக்களில் எல்லாம் தெளிவு பெற முடியவில்லையே என்று இக்காலச் சித்தாந்த அறிஞர்களிடம் கேட்டால் அவர்கள் அதற்கு வயதும் அனுபவமும் தேவை என்று பொதுவான நிலையில் பதில் அளிக்கிறார்கள். எனவே தான் சாத்திர நூல்களில் இளைய தலைமுறையாளர் அதிக நாட்டம் செலுத்த முடியாமல் ஆய்வுகள் வளராமல் தடைப் பட்டு நிற்கிறது.

சாத்திர ஆய்வில் பொதுவான ஓர் இடர்ப்பாடு காலச் சூழல் ஆகும். அதாவது சைவசித்தாந்தத் தத்துவம் அறிந்த பெரியோர்கள் ஆய்வு நெறிமுறைகளை அறியாதவர்களாக ஒருபுறம் இருக்க, மற்றொரு புறம் வழிகாட்டும் ஆய்வாளர் கள் சாத்திரங்களில் போதிய அறிவு நலம் பெறாது இருக்க, இடையில் இளைய ஆய்வாளன் தடுமாறுகிற நிலை இப் பொழுது இருக்கிறது. இக்காலச்சூழல் மாறுதல் வேண்டும்.

அதுபோலச் சாத்திரக் கருத்துக்களில் இடம்பெறும் தத்துவ மரபுச் சொற்கள் பெரும்பாலும் வடமொழிச் சொற் களாகவே காணப்பெறுகின்றன. தற்காலத்தில் தத்துவச் சொல் அகராதிப் பணியைச் சில இயக்கங்கள் மேற்கொண் டுள்ளன. அப்பணியும் முழுமையாக நிறைவேறாத காரணத் தால் ஆய்வுநிலை தடைப்படுகிறது.

மேற்கூறிய சிக்கல்களெல்லாம் இக்கட்டுரை ஆசிரியர்க்குத் தன் ஆய்வுக் காலத்தில் ஏற்பட்ட அனுபவங்கள் ஆகும். எனவே, மேற்கூறப்பெற்ற சிக்கல்களிலிருந்து வருகின்ற ஆய்வாளர்கள் விடுபட இக்காலச் சாத்திரத் தத்துவம் அறிந்த பெருமக்கள் தெளிவான உரைநூல்களையும் உரைநடை நூல்களையும் சொற்பொருள் விளக்கங்களையும் தர முற்படுவார்களேயானால் சைவ சித்தாந்தச் சாத்திரங்களில் ஆய்வுகள் பெருக வாய்ப்பிருக்கிறது.

குறிப்புகள்

1. மு. அருணாசலம், தமிழிலக்கிய வரலாறு, 13-ஆம் நூற்றாண்டு, ப. 282.
2. வேதாந்தத்திற்குரியன: உபநிடதம், வேதாந்த சூத்திரம், கீதை.

   விசிஷ்டாத்வைதத்திற்குரியன: நியாய தத்துவம், சதுசுலோகி, மகா புருஷ நிருணமம்.

   துவைதத்திற்குரியன: மத்துவரின் 37 நூல்கள், நியாய சுதா, நியாமிருதம்.
3. அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப. 9.
4. மேற்படி, ப. 8
5. சிவஞானபோத உரை, உரைப்பாயிரம்.
6. இந்தியத் தத்துவ ஞானம், ப. 356.
7. சைவ சித்தாந்த உண்மை வரலாறு, ப. 6.
8. சந்தானாசாரியார் புராணம், பாடல். 24-71.
9. டி.பி. சித்தலிங்கையா, சைவசமயத் தோற்றமும் வளர்ச்சியும், ப. 121.
10. சிவஞான சித்தியார், ப. 23.
11. மேற்படி, பாடல். 26.
12. அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப. 380.
13. திருமந்திரம், பாடல். 115.
14. அருணை வடிவேல் முதலியார், சித்தாந்த வினா விடை, ப. 231.

12. சுவடிப் பதிப்பு

பூ. சுப்பிரமணியம்

'தமிழ்ச் சுவடிகளின் தலைவிதி'[1] என்ற தலைப்பில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எழுபத்தாறில் ஒரு கட்டுரை வெளியாயிற்று. தமிழர் வருந்தத்தக்க தலைப்புதான். ஆனால் அதில் உண்மையும் இருந்தது.

> ''பழந்தமிழர்தம் எண்ணங்களும் கருத்துகளும், பல திறக் கலைநுட்பங்களும் பழக்க வழக்கங்களும், இலக்கிய உணர்வுகளும் பெரும்பாலும் ஓலைச்சுவடிகளில் தான் வடிக்கப்பெற்றன. சுவடி வடிவம் பெற்ற அவை அனைத்தும் அச்சு வசதிபெற்ற இக்காலத்தும் முழுமை யாக அச்சு வடிவம் பெறவில்லை என்பதும் உண்மை தானே!''[2]

அவ்வுண்மைக்கு எதிர்ப்புத் தோன்றாமலில்லை.

> ''தமிழ்நாடு அரசு, இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளை அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது''[3]

என்பது முதலாவது தோன்றிய எதிர்ப்பு. அதன்வழி தொல் பொருள் ஆய்வுத்துறை 1981-இல் சில நூல்களைச் சுவடிப் பதிப்புகளாக வெளியிட்டது. அடுத்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சுவடி இயல் பயிற்சி வகுப்பு ஒன்றினைத் தொடங்கியது; சுவடிப் பதிப்பு நூல்களை வெளியிடும் பணியினையும் மேற்கொண்டது; தொடர்ந்து இதுவரை இருபத்து நான்கு நூல்களைச் சுவடிப் பதிப்பாக வெளி யிட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழகம் 'அச்சில் வாரா அருந்தமிழ் நூல்கள்' என்ற வரிசையில் சில நூல்களைச் சுவடிப் பதிப்பாக வெளியிட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம் 'சுவடிப்புலம்' என ஒரு துறையை நிறுவி, ஓலைச் சுவடித் துறை, தாள் சுவடித்துறை என்ற இரண்டு பிரிவு களாகப் பணியாற்றி வருகிறது. சில பல்கலைக் கழகங்கள் சுவடி ஆய்வில் எம்ஃபில்., பிஎச்.டி., ஆகிய பட்டங்களை வழங்கி வருகின்றன. மருத்துவத்துறை போன்ற பிற துறை களும் சுவடிப்பதிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

சுவடிப் பதிப்பில் ஈடுபடும்போது ஏற்படும் சிக்கல் களை மூன்று நிலைகளில் அடக்க முடிகிறது. அவை:

(1) சுவடி திரட்டுதலில் சிக்கல்கள்

(2) பதிப்பித்தலில் (Editing) சிக்கல்கள்

(3) அச்சிடுதலில் சிக்கல்கள்

1. திரட்டுதலில் சிக்கல்கள்

சங்க காலத்தில் தொடங்கிய சுவடி திரட்டும் பணியின் பயனே பாட்டும் தொகையும் கீழ்க்கணக்கும் ஆகும். அப் பணி இன்றுவரை தொடர்வதனால் பல இலக்கண இலக்கியங்கள் நம்மிடை உலவி வருகின்றன. வெளியிடப் பெறாது பலரிடையே முடங்கிக் கிடக்கும் சுவடிகளைத் திரட்டுவதில் இன்றும் பல வகைச் சிக்கல்கள் காணப்பெறு கின்றன. பொதுவாகச் சுவடி திரட்டும் முறையை மூன்று வகைப்படுத்தலாம். அம்மூவகை நிலையிலும் ஏற்படும் சிக்கல்களையும் காணலாம்.

(1) தனியார் திரட்டுதல்

(2) தனியார் நிறுவனங்கள் திரட்டுதல்

(3) அரசு நிறுவனங்கள் திரட்டுதல்

என்பன அம்மூன்று வகைகளாகும்.

1. (அ) தனியார் திரட்டும் முறை

ஒரு குறிப்பிட்ட நூலைப் பதிப்பிக்கும் பணியில் ஈடு படும் ஒருவர் அந்த நூல் எந்தப் பகுதியில் வாழ்ந்த ஆசிரிய ரால் இயற்றப் பெற்றது? எந்தப் பகுதியில் பெருவழக்காகக் கற்றுவரப்பெற்றது? அல்லது கற்றுவரப்பெறுகிறது? என் னும் செய்திகளை அறிந்து அப்பகுதியில் உள்ள நண்பர்கள், சான்றோர்கள், நூலாசிரியர்கள் போன்றோர் மூலம் அச் சுவடிகளைப் பெற முயற்சி செய்ய வேண்டும். இக்கால வசதிகளைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட அல்லது தேவை யான சுவடியைக் குறித்தோ பொதுவாகவோ இதழ்களில் விளம்பரம் செய்து பெறலாம். துண்டுத் தாள்களாக— வேண்டுகோள்களாக—அச்சிட்டு ஆர்வமுடைய நண்பர் கள், சான்றோர்கள் மூலம் செய்தியைப் பரப்பி அவர்கள் கருத்தின்படி அணுகலாம்.

சிக்கல்கள்

இவ்வாறு சுவடி திரட்டிப் பதிப்பிக்க வேண்டும் என்ற விருப்பமுள்ள தனியார் இப்பணியில் பேரார்வமும் பொருள் வசதியும் உடையவராய் இருத்தல் வேண்டும். இருநிலையும் அமைவது என்பதே சிக்கல். முயன்று பதிப் பிக்கும் நூல்களால் வருவாய் கிடைப்பது என்பது பெருஞ் சிக்கல்.

1. (ஆ) தனியார் நிறுவனங்கள் திரட்டும் முறை

சமயச் சார்புடைய மடங்கள், பதிப்பு நிறுவனங்கள், ஆய்வுக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவை இப்பகுதியில் அடங்கும். மேற்கண்ட முறைகளைக் கையாள் வதன் மூலமே இவையும் சுவடிகளைத் திரட்டலாம்.

சிக்கல்கள்

மடங்கள் சமய நூல்களைத் தவிர பிற நூல்களை நோக்க இயலாத நிலை. பதிப்பு நிறுவனங்களுக்கு வருவாய் முக்கி யம். சுவடி திரட்டிப் பதிப்பிப்பதால் பயன் ஏதும் இல்லை. ஆய்வுக் கழகங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவை தாங்கள் மேற்கொண்டுள்ள ஆய்வுக்கான ஒரேவகைச் சுவடிகளையே திரட்ட வேண்டிய கட்டாயம். சான்றாகக் கம்பன் கழகம் கம்பராமாயணச் சுவடி ஒன்றை மட்டுமே பலவிடங்களிலிருந்தும் திரட்டி ஆய்வு செய்து பதிப்பித்தது. இச்சிக்கல்களால் சுவடி திரட்டும் முறையில் தனியார் நிறு வனங்கள் முழுமையாகச் செயலாற்ற முடிவதில்லை.

1. (இ) அரசு நிறுவனங்கள் திரட்டும் முறை

சுவடி திரட்டும் நிலையில் உள்ள அரசு நிறுவனங்களில் முதலிடம் பெறுவது அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகமே யாகும் (Govt. Oriental Manuscripts Library, Madras-5). தஞ்சை சரசுவதி மகால் நூலகம், தமிழ்ப் பல்கலைக் கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் போன்றவையும் இவ்வகை யைச் சார்வன. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் கிராமங் கள் தோறும் செய்தியைப் பரப்பி, ஆங்காங்கு உள்ள வட்ட ஆட்சியர் அலுவலகங்களில் சுவடிகளைத் திரட்டி வைக்கச் செய்து, வல்லுநரை அனுப்பி விலை நிர்ணயம் செய்து

பெற்றுவரச் செய்யலாம். உரிய நிறுவனங்களில் அவர்களே கொண்டுவந்து கொடுத்து உரிய தொகையினைப் பெறச் செய்யலாம். தமிழ் விழாக்கள், நூலக வார விழாக்கள், கண்காட்சிகள் போன்ற நிகழ்ச்சிகளில் கொண்டு வந்து காட்சியில் வைக்குமாறு விளம்பரம் செய்து, அங்கு வரும் சுவடிகளை ஆய்ந்து விலை கொடுத்து வாங்கலாம். சோதிடக் கலையின் அரிய நூல்கள் தமிழ்நாட்டில் பலவிடங்களில் நிறைந்து கிடக்கின்றன. உரியவர்களை நேரில் அணுகி, அவர்களைக் கவரும்படியான பணத்தைக் கொடுத்து அனைத்துச் சுவடிகளையும் திரட்டலாம்.

சிக்கல்கள்

அரசு சுவடி நிறுவனங்களில் தமிழ் வல்லுநர்களை, தமிழார்வம் உடையவர்களை, சிறப்பாகச் சுவடிப் பதிப்பில் ஆர்வமும் அனுபவமும் உடையவர்களைத் தலைவர்களாக நியமிக்க இயலாமை முதலாவதும் மிகப் பெரியதுமாகிய சிக்கலாகிறது. சுவடிகளை விலைக்கு வாங்குவதில் நிறுவனத் தலைவர்களுக்கு முழு உரிமையற்ற நிலையும், பல வகைக் கட்டுப்பாடுகளும் அடுத்த நிலைச் சிக்கல்களாகின்றன. கட்டுப்பாடுகளை நீக்கி, முழு உரிமை அளிக்கப் பெறுமேயாயின் பலவகையான முறைகேடுகள் நிகழ்வதற்கான வாய்ப்புகள் தோன்றிவிடுகின்றன. இந்த நிலையும் ஒரு சிக்கலாகவே உருவாகிறது.

தனியாராயினும் அரசு நிறுவனங்களாயினும் தமிழரின் அரிய கலைகள் பொதிந்த சுவடிகளைத் திரட்டுவதில் கணிசமான தொகையைச் செலவிடுவதே இக்கால நிலைக்கும், இக்கால நாட்டு நிலைக்கும் பொருந்துவதாய் அமைந்து முழுப்பயனை அளிக்கும்.

மேலை நாட்டு அறிஞர் நம் நாட்டுக்கு வந்து களனாய்வுப் பணியை மேற்கொள்ளுவதன் மூலம் சுவடிகளை— மூல ஏடுகளையே பெற்றுச் செல்லுகின்றனர். இந்த முயற்சியில் அவர்களுடைய எண்ணம் ஈடேற நம்மவரிடம் வேரூன்றியிருக்கும் பாமரத் தன்மையும் வறுமையும் அவர்களுக்குத் துணையாகிவிடுகின்றன என்று கூறும் அ. தாமோதரன் அவர்களின் கருத்து[4] சுவடி திரட்டுவோர் நினைவு கூரத் தக்கதாகும்.

1. (ஈ) திரட்டும் பணியில் பொதுநிலைச் சிக்கல்கள்

சுவடிகளைத் திரட்டும்போது கிடைக்கும் சுவடிகள் எல்லாம் இதுவரை அச்சாகாத நூல்களுக்கான சுவடிகளாகவே இருக்கும் என்று கூறமுடியாது. அச்சான நூல்களுக்குரிய சுவடிகள், அவற்றிலும் சில பகுதிகள் மட்டுமே உள்ள குறையான சுவடிகள், மூலம் மட்டும் உள்ள சுவடிகள், உரையோடு கூடிய சுவடிகள், மூலச் சுவடிகள், படியெடுக்கப்பெற்ற சுவடிகள், பிழையற்ற சுவடிகள், பிழை மலிந்த சுவடிகள், பழுதுபடாத சுவடிகள், பூச்சி முதலியவற்றால் பழுதுபட்ட சுவடிகள் எனப் பலவகையான சுவடிகள் கிடைக்கலாம். அச்சான சுவடிகள், குறையாக உள்ள சுவடிகள் ஆகியவற்றை வாங்க வேண்டுமா? இது ஒரு பெரிய சிக்கலான செய்தி. இச்சுவடிகளை வாங்க வேண்டாம் என்பதே நிறுவனங்களின் நடைமுறையாக உள்ளது.

1. (உ) அச்சான நூல் சுவடிகளின் பயன்

உ. வே. சா. அவர்களின் பதிப்பில் சிதைந்து காணப்பெறும் பாடலடிகள் பலவும் ஔவை சு. துரைசாமி பிள்ளை உரையமைந்த கழகப் பதிப்பில் திருத்தம் பெற்றுள்ளன. (புறநானூறு: 57, 62, 66, 70, 328, 337, 355, 361, 384). அவை உ.வே.சா. அவர்களுக்குக் கிடைக்காத பழைய சுவடிகளுடன் ஒப்பிட்டு நோக்கியதால் ஏற்பட்ட திருத்தங்களாகும்.

அச்சான நூல்களுக்கான சுவடிகளை ஒப்பிட்டதால்,

> ''முன்பு உள்ள அச்சுப் படிகளில் காணப்பெறாத அடிகள் பல கிடைத்தன; சில சொற்கள் புலப்பட்டன; சில திருத்தம் பெற்றன. இலக்கணக் குறிப்புகள், பாடினோர், பாடப்பட்டோர் குறிப்புகளில் பல திருத்தங்கள் கிடைத்தன''[5]

என்கிறார் எஸ். வையாபுரிப் பிள்ளை.

1. (ஊ) பிற நூல் சுவடிகளின் பயன்

ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது அதே நூலுக்குரிய பல சுவடிகள் பயன்படுவது போல வேறு நூல்கள் எழுதப் பெற்ற சுவடிகளும் பயன்படுகின்றன. பிற நூல்களில்

உரையாசிரியர்கள் உரை, விளக்கவுரை, சான்றுகள், மேற்கோள்கள் போன்றவற்றைக் கூறுமிடத்து வேறு நூலின் பாடல்களும் கருத்துகளும் எடுத்துக் காட்டப்பெறுகின்றன. அவை, பதிப்பிக்கும் நூலுக்குத் துணைசெய்கின்றன. சான்று :

''பாடுநர்க் கீத்த பல்புக ழுன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண்ணன் பினனே''

என்பன புறநானூற்று 221-ஆம் பாடலின் தொடக்க அடிகள். பல பதிப்புகளிலும் இவ்வடிகளே காணப்பெறுகின்றன. இவற்றுள் 'பேரன்பினனே' என்பதற்கேற்ற ஒலி அமைப்பில் 'பல்புகழினனே' என்றிருப்பதும், 'திண்ணன் பினனே' என்பதற்கேற்ப 'ஆய்கோலினனே' என்றிருப்பதுமே பொருத்தமுடையவையாகும். தொல்காப்பியப் பொருளதிகாரம், புறத்திணையியல் 24-ஆம் நூற்பாவின் மன்னைக் காஞ்சித் துறைக்கு இப்பாடல் எடுத்துக்காட்டப் பெறுகிறது. ஒரு தொல்காப்பியச் சுவடியில் உள்ள பல் புகழினனே, ஆய்சொல்லினனே என்னும் தொடர்கள் பாடவேறுபாடாகக் கொடுக்கப்பெற்றுள்ளன.

''யாற்றுநீரும் ஊற்றுநீரும் மழைநீருமுடைமையான் கடற்கு முந்நீரென்று பெயராயிற்று. அன்றி முன்னீரென்று பாடமோதி நிலத்திற்கு முன்னாகிய நீர் என்றுமுரைப்ப''[6]

என்பது உரையாசிரியர் விளக்கம்.

''முந்நீர் நாப்பண்—நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்று தொழிலையுடைய நீர்க்கு நடுவே''[7]

என்பது ஒரு விளக்கம்.

''முந்நீர்—கடல்; ஆகுபெயர்; ஆற்றுநீர், ஊற்றுநீர், மேனீர் என இவை என்பார்க்கு அற்றன்று; ஆற்றுநீர் மேனீராகலானும், இவ்விரண்டுமில்வழி ஊற்று நீரு மின்றா மாதலானும் இவற்றை முந்நீரென்றல் பொருந் தியதன்று. முந்திய நீரெனின் 'நெடுங்கடலும் தன் னீர்மை குன்றும்' (குறள். 17) என்பதனால் அதுவும்

மேனீரின்றி அமையாமையின் ஆகாது. ஆனால் முந்நீர்க்குப் பொருள் யாதோவெனின் முச்செய்கையை யுடைய நீர் முந்நீரென்பது. முச்செய்கையாவது மண்ணைப் படைத்தலும், மண்ணையழித்தலும் மண்ணைக் காத்தலுமாம்''[8]

என்பது சிலப்பதிகார உரை.

இவ்வாறு பல நூல் சுவடிகளிலும் ஒரு தொடருக்குப் பலவகையான உரைகள் கிடைக்கின்றன. அவற்றுள் சிறந்த உரையைத் தேர்ந்தெடுக்க முடிகிறது.

2. பதிப்பித்தலில் (Editing) சிக்கல்கள்

''நூல்களைப் பதிப்பிப்பதில் ஆராய்ச்சி என்பதற்கு இடமில்லை; ஏட்டிலுள்ளதை அப்படியே பதிப்பிடத் தானே வேண்டும் என்று சிலர் கருதுவர் ... முதலாவது தமிழ் ஏடுகளில் எழுதப்பெற்றிருப்பனவற்றை வாசிப் பதே மிக்க சிரமமான வேலையாகும். உதாரணமாக, பொன் என்பதைப் பொன், போன, பேரன் என்று வாசிக்கலாம். இதை நிச்சயப்படுத்தப் பொருளுணர்ச்சி, செய்யுளோசையுணர்ச்சி இருத்தல் வேண்டும் ... 'யாரினு மினியன் பேரன் பினனே' என்பதை, 'யாரினு மினியன் போன பின்னே' என்று அச்சிட் டனர்''[9]

சுவடியின் தன்மையை உணர்த்தும் இக்கூற்று, பதிப்பின் அருமையை எடுத்துக் காட்டுகிறது.

2. (அ) சிக்கல்கள்

சுவடிகளில் பிழைகள் ஏற்பட்டிருப்பின் அவற்றைத் திருத்தம் செய்து, பதிப்பித்துச் சுவடியில் உள்ள பிழையான தொடரை அடிக்குறிப்பில் தருதல் வேண்டும் என்பது ஒரு முறை. சுவடிகளில் உள்ளவாறே பதிப்பித்துவிட்டுத் திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் அவற்றை அடிக்குறிப்பில் தருதல் வேண்டும் என்பது ஒரு கருத்து. இக்கருத்து வேறுபாடுகள் பதிப்பித்தலில் ஏற்படும் முதல் சிக்கலாகும்.

''சற்வசித்து வருஷம் ... எளுதி வச்சது. றாமசாமி செட்டியார் கையில் தறீமந்திரியார் அருளிச்செய்த

நிகண்டு முன்னூறும் எழிதி நிறவேறியது''[10]

என்பது சுவடியில் காணப்பெறும் வடிவம். விளக்க அட்டவணை வெளியிட்ட நூலகம் இதனை,

> ''ச/றீ/(ர்)வசித்து வருஷம்... எ/ளு/(ழு)தி (ந)வ/ச்ச (த்த) து. /றா/ (ரா)மசாமி செட்டியார் கையில் த/றீ/(ன்)/ம/(வ)ந்/தி/(து)-ரியார் அருளிச்செய்த நிகண்டு மு/ன்னூ/(ந்நூ)றும் எ/ழி/(ழு)தி நி(ந)றவேறியது''

என்று பதிப்பித்துள்ளது. சுவடி வடிவமும் திருத்த வடிவமும் இணைந்த இம்முறை நூலைப் படிப்பதில் வெறுப்பை உண்டாக்கிவிடும். எனவே தனித்தனியே அமைப்பதே சிறப்புடையது என்பர். அவ்வாறு தனித்தனியே அமைக்கும் இருவகை முறைகளில் திருத்திப் பதிப்பிக்கும் முறையைப் பின்பற்றுவதே ஏற்புடையதாகும்.

சுவடியில் உள்ளதை அப்படியே பதிப்பிப்பதில் நூலைப் படிக்கும் போதே வெறுப்பு ஏற்பட்டுவிடும். சுவடியில் உள்ள வடிவம் என்பது யாருக்கு அவசியமாகிறது? மேலும் பொருளை ஆழ்ந்து, ஆய்ந்து அறிய விரும்புவோருக்கே தேவையாகிறது. ஆய்வாளருக்கு மட்டுமே பயன்படும் இம் முறை நூலைப் படித்துப் பொருளை அறிந்து பயன்படுத்த விரும்பும் சாதாரண மக்களுக்குத் தேவையற்றதாகும். ஆய்வாளருங்கூட முதலில் செய்தியைத் தெளிவாக அறிந்து கொள்ளவே விரும்புவர். பிறகே ஆய்வினை நிகழ்த்துவர். திருத்தமில்லாத பதிப்பு, திருத்திப்படிக்க இயலாமலும் பொருள் விளங்காமலும் அவ்வப்போது அடிக்குறிப்பைப் பார்த்துப் பொருள் தொடர்பை அறிவதில் வெறுப்பு ஏற்பட்டு அப்பதிப்புப் பயன்படாமல் போவதும் உண்டு. எனவே, அனைவருக்கும் பயன்படும் வகையில் திருத்தி அமைத்துச் சுவடி வடிவினை அடிக்குறிப்பில் தருவதே பயனுள்ள முறையாகும்.

2. (ஆ) சீர்மை செய்தல்

சுவடி வடிவத்தில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என்பது சான்றோர் கருத்து.

> ''முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
> பொன்னேபோல் போற்றுவர் பொற்புலவர்—
> அன்னோர்

நடையிடையத் தம்வழியே நாட்டி மொழிமாற்றல்
கடையிடையர் மாட்டுவினை காண்''

என்னும் செய்யுளில் கூறியபடி, சுவடிகளில் காண்பதைத் தம் மதத்தின்படி திருத்துதல்... விபரீத அறிவினை உடைய மத்திமர்க்கும் சந்தேக ஞானத்தையுடைய அதமர்க்கும் உரிய தொழில் என்று உணர்க''[11]

''இந்நூற் பதிப்பை ஏட்டுப்பிரதிகளின் போக்கிலே விடாது சிற்சில இடங்களில் சில விகாரங்கள் செய்திருக் கிறேன்''[12]

''... அவர் நூலையே அச்சொரூபமாக எடுத்துப் பதிப் பிப்போர் ஓர் அக்ஷரமாவது மாற்றுதல் பெருந்தவறு என்பது யார்க்கும் உடம்பாடே. ஆயினும் இந்நூல் துரைத்தன வித்தியாசாலைகளிலும் பிற கல்லூரிகளி லும் பாடசாலைகளிலும் பயிலல் வேண்டும் என்னும் அவாவினாலே தற்காலம் அவை அவையிற்றுக்கு இணங்காததோர் இழிசொல்லும்... இடக்கர்ப் பெயரு மாகிய ... அன்மொழிகளை ... ஒழித்தும் ... புணர்த்தி யும் இருக்கிறேன்''[13]

என்பன யாவுமே சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்களின் கூற்றாகும். அவர் பலவிடத்தும் பலவகைச் சீரமைவுகளைச் செய்து எளிமைப்படுத்தியிருப்பதும் புலனாகிறது.

2. (இ) பாடவேறுபாடு

சுவடியில் உள்ளவாறு பதிப்பிப்பது அல்லது திருத்திப் பதிப்பிப்பது என்ற முறைகளில் ஒன்றைத் தேர்ந்து அம் முறையில் பதிப்பிக்கும்போது பாடவேறுபாடுகள் பலவாகி எதைத் தேர்ந்து பதிப்பிப்பது என்ற ஒரு சிக்கல் இரண்டா வதாக உருவெடுக்கிறது.

இங்கே பாடம் என்பது மூலபாடம்; நூலாசிரியர் உரை யாசிரியர் ஆகியோர் கூறிய உண்மைத் தொடர் 'மூல பாடம்' எனப்பெறுகிறது. அவ்வுண்மைத் தொடர் சொல்வோராலும் படிப்போராலும் எழுதுவோராலும் வேறுபட்டு வழங்கப் பெறுமாயின் அது பாடவேறுபாடு ஆகிறது.

சான்று :

''பெண்ணொருத்தி பேசில் பெரும்பூமி தானதிரும்
பெண்ணிருவர் பேசில் விழும்வான்மீனே—பெண்மூவர்
பேசில் அலைசுவறும் பெண்பலர்கள் தான்கூடிப்
பேசினுல கென்னாமோ பின்''[14]

''..... ....—பெண்மூவர்
பேசில் அலைசுவறும் பேதையே! பெண்பலர்தாம்
பேசிலுல கென்னாமோ பின்''[15]

இவற்றுள் முதல் அமைப்பில் உள்ள ஆசிரியரின் பொதுக் கூற்று, மற்றொரு சுவடியில் முன்னிலையாரிடத்துக் கூறும் கூற்றாக வேறுபட்டுள்ளது.

''இதுமுனைவனாற் செய்யப்பட்ட நூலாகலாற் குற்ற மின்றாயின மையிற் கேட்டாரை இன்றென்பது''[16]
''இது முனைவன்றன்னாற் சொல்லப்பட்ட நூலாக லாற் குணமின்மை 'யின்மையின் கேட்டாரை யின்றென்பது''

இது உரையிற் காணும் வேறுபாடாகும். இவ்வேறுபாடு களைப் பொருள் அடிப்படையில் மூன்றுவகைப்படுத்த லாம். அவை:

(1) பாடவேறுபாடு

(2) வடிவ வேறுபாடு

*(3)*பிழை

என்னும் மூன்று வகையாகும்.

2. (இ) 1. பாடவேறுபாடு

ஆசிரியரின் மூலபாடத்தினின்றும் வேறுபட்டுப் பாட் டின் கருத்தை மாற்றி அமைப்பது; தொடரின் பொருட் போக்கைத் திருப்பி அமைப்பது; ஆனால் பாட்டின் நடைக்கு ஏற்பச் சீரும் தளையும் சிதையாது, ஓசை நயம்படத் தோன்றி நிற்பதாகும்.

''இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்'' (குறள். 1040)

வேறு :

''இலமென் றசைஇ இரப்பாரைக் காணின்''

இலம் என்று சோம்பி இருப்பாரும், இலம் என்று இரந்துண்பாரும் என்னும் பொருள்தரும் இவ்வேறுபாடு பொருட்போக்கால் வேறுபடுவது; ஓசை வேறுபடுவதில்லை.

''தாமே செல்ப வாயிற் கானத்துப்
புலந்தேர் யானைக் கோட்டிடை யொழிந்த''[17]

வேறு :

''பொலந்தேர் யானைக் கோட்டிடை...''
''திண்டேர்ப் பொறையன் தொண்டி''[18]

வேறு :

''திண்டோட் பொறையன் தொண்டி''

என்பனவும் இத்தகு பாடவேறுபாடுகளாகும்.

2.(இ) 2. வடிவ வேறுபாடு

மூலபாடத்தினின்றும் வேறுபட்டதேயாயினும் சொல்லின் வடிவத்தால் மட்டுமே வேறுபட்டு நிற்பது; மூல பாடத்தின் கருத்தைச் சிறிதும் மாற்றாதது; பாடலின் பொருட் போக்கை மாற்றாதது; சீர்தளை சிதையாதது. இது வடிவ வேறுபாடு எனப்பெறுகிறது.

சான்று :

''...வல்லெழுத் தியையின் **அவ்வெழுத்து** மிகுமே''[19]

வேறு :

''...வல்லெழுத் தியையின் **வல்லெழுத்து** மிகுமே''[20]
''அடிதொறும் **தலையெழுத்** தொப்பது மோனை''[21]

வேறு :

''அடிதொறும் **முதலெழுத்** தொப்பது மோனை''

இவ்வேறுபாடுகள் சொல்லின் வடிவத்தால் மட்டும் வேறுபட்டன.

''குலையுடை வாழைக் கொழுமடல் கிழியாப்
பலவின் **பழத்துள்தங்கும்** மலைகெழு வெற்பனை''[22]

வேறு :

''பலவின் **பழத்தில்** தங்கும்...''

''உள்ளார் கொல்லோ தோழி **கள்வர்தம்**
பொன்புனை பகழி செப்பம் கொண்மார்''[23]

வேறு :

''உள்ளார் கொல்லோ தோழி **கணவர்தம்**''
''உள்ளார் கொல்லோ தோழி **கானவர்**''

இவையும் வடிவ வேறுபாட்டுக்குரிய சில சான்றுகளாகும்.

2. (இ) 3. பிழை

தமிழ்ச் சுவடிகளைப் பொறுத்தவரை மூலபாடங்களி லிருந்து வேறுபட்டுக் காண்பனவற்றுள் பெரும்பாலானவை பிழைகளாகவே காணப்பெறுகின்றன. பாடவேறுபாடு, வடிவ வேறுபாடுகளைப் போலன்றி எவ்வகையாலும் பொருந்தாமலும் பொருள் தராமலும், சரியான சொல்லாக இல்லாமலும் தோன்றும் வேறுபாடுகளைப் பிழைகள் என்றே கொள்ளத்தகும். சான்று :

''நல்லா றெனப்படுவ தியாதெனின்'' (குறள். 324)

வேறு :

''நல்லா ரெனப்படுவ தியாதெனின்''

''தூங்குசிறை யன்னந் துயில்வதியுஞ் சோணாட்டே''[24]
''தூங்குசிறை யன்னம் துயில்வதியுஞ் சேரனாட்டே''
''தறயில் பன்னீர் தெளித்து—சந்தணத்தால் கோல மிட்டு''[25]

''கோறோசனம் மாட்டின் வயத்திலெ பிறக்கும்;...
சேத்திலே பிறக்கும்;... காட்டு மிருகத்தின்
வாலில்...; ...மரத்திலும் மத்தும் துற்க்
கந்தமான விடத்திலும் பிறக்கும்;... சிங்கத்தினிடக்
கெவியிலே புகுந்தவன் பலன்பெத்தாற்போல...''[26]

இவை பிழைகளாகவே காணப்பெறுவன.

2. (ஈ) பாடங்களைத் தேர்தல்

பதிப்பிக்க எடுத்துக்கொள்ளும் நூலுக்குரியனவாகப் பாடவேறுபாடு, வடிவ வேறுபாடு எனக் கிடைப்பனவற்

றுள் எதைத் தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பது? எதை வேறு பாடாகக் கொடுப்பது? பதிப்புப் பணியில் இத்தேர்வு இன்றியமையாததாகிறது. ஒரு நூலுக்குரியனவாகப் பல சுவடிகள் கிடைக்கின்றன. அவற்றுள் முழுமையான, பிழை மிகுதியாக இல்லாத, தெளிவான ஒரு சுவடியை மூலச் சுவடியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறோம். பிறவற்றை ஒப்பிட்டுக் காண்பதற்குரிய துணைச் சுவடிகளாகக் கொள்ளு கிறோம். அவற்றுள்,

1) தேர்ந்தெடுத்த மூலச்சுவடியில் உள்ள பாடத்தைப் பதிப்பித்துப் பிற சுவடிப் பாடங்களை வேறுபாடு களாகக் கொடுப்பதா? அல்லது

2) எந்தச் சுவடியில் இருந்தாலும் சிறந்த பாடத்தைத் தேர்ந்து பதிப்பித்துப் பிறவற்றை வேறுபாடு களாகக் கொடுப்பதா? இது மூன்றாவதாக எழும் சிக்கல்.

''யானை நாதத்தில் தோற்றுதலின் அதற்கு வணங்குதல் இயல்பு''[27] என்னும் தொடரில் உள்ள 'நாதத்தில்' என்ற சொல் பல சுவடிகளிலும் 'நாகத்தில்' என்றே காணப் பெற்றது. ஒரு சுவடியில் மட்டும் தெளிவாக 'நாதத்தில்' என்றிருக்க அதைத் தேர்ந்து பதிப்பித்தார் உ.வே.சா.[28] இவ்வாறு சுவடிப் பதிப்பு முன்னோடிகளின் பலவகைச் சான்றுகளைத் துணையாகக் கொண்டு, சிறந்த பாடத்தைத் தேர்ந்து பதிப்பிக்கும் இரண்டாவது முறையே ஏற்புடையது எனக் கொள்ளுகின்றோம்.

2. (உ) பாடத் தேர்வுக்கான கருவிகள்

சிறந்த பாடத்தைத் தேர்ந்தெடுப்பதில் மூன்று வகை யான கருவிகள் நமக்குத் துணை நிற்கின்றன. அவற்றுள், பொருளமைதி, உரை, இடப்பொருத்தம், நடை ஆகிய கருவிகள் அகச் சான்றுகளாக முதற்றுணையாகின்றன.

பிற நூல் கருத்துகளும் மேற்கொள்ளும் புறச்சான்று களாக இரண்டாம் நிலைத் துணையாகின்றன.

யாப்பு அமைதியும் பிற இலக்கண அமைதிகளும் ஆய்வு நிலைத் துணைக் கருவிகளாகின்றன. இக்காலத்துச் சுவடிப் பதிப்பாசிரியர்களுக்குச் சுவடிப் பதிப்பு முன்னோடிகளின்

அனுபவக் கருத்துகள். இம்மூவகைக் கருவி நிலையிலும் பெருந்துணையாகின்றன.

சான்றுகள்

2. (உ). 1. பொருள் :

கிடைக்கும் பாடங்களில் பொருளால் சிறந்து நிற்கும் பாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம். அதாவது,

''போதவிழ் பொய்கை தோறும் **புதுமணற் றடங்கள்** தோறும்''[29]

வேறு :

''போதவிழ் **பொய்கை** தோறும் **புதுமணத் தடங்கள்** தோறும்''

என்பதில் சரயு நதியின் வெள்ளம், சோலை, காடு, பொய்கை, பூகவனம், வயல் ஆகிய எல்லா இடங்களிலும் பரவியது என்பது பாடலின் பொருள். மலர்ப்பொய்கை, மணமிக்க தடாகம் என ஒரே பாடலில் கூற வாய்ப்பில்லை. மணல் தடம் என்பதே பொருளால் சிறக்கிறது.

''தீங்கவி செவிக் ளாரத் தேவரும் **பருகத்** செய்தான்''[30]

வேறு :

''தீங்கவி செவிக ளாரத் தேவரும் **பகரச்** செய்தான்

இதில் தேவர் பருகுமாறு இனிய கவிகளைச் செய்தான் என்பதே பொருட் சிறப்புடையதாகிறது.

2. (உ). 2. உரை:

வேறுபாடுகள் நிகழ்ந்துள்ளவிடத்தில் அதற்குரிய உரையின் துணைகொண்டு திருத்தமான பாடத்தை உறுதி செய்யலாம்.

''செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'' (குறள். 26)

வேறு :

''செயற்குரிய செய்கலா தார்'' என்பது வேறுபாடு.

''ஒருவராலும் செயற்கரிய துறவறத்தைச் செய்வார் பெரியர்; சிறியர் செய்யும் தொழிலாகிய இல்லறமும் செய்ய

அறியார்'' என்பது பரிதியார் உரை; பரிமேலழகரினும் முற்பட்டது. அரிய செய்வார் பெரியர்; உரியதும் செய்யார் சிறியர் என்ற உரையால், 'செயற்குரிய செய்கலா தார்' என்ற பாடமே சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

2.(உ) 3. இடம்:

பல பாடங்கள் கிடைக்கின்றபோது அந்த இடத்திற்குப் பொருத்தமுடையதாக நூலாசிரியர் எந்தப் பாடத்தைக் கொண்டிருப்பார் என்று தேர்ந்தெடுப்பது ஒரு முறை யாகிறது.

''போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை''

வேறு :

''பொழிலிடை உறங்கும் மேகம்''[31]

சோலையில் மயில் உறங்குகிறது; சோலையில் மேகம் உறங்குகிறது. இவற்றில் உள்ள மயில் உறங்குவதும், மேகம் நிறைந்து உயர்ந்த சோலையை மூடித் திகழ்வதுமாகிய செயல்கள் இரண்டும் பொருத்தமுடையனவே. ஆயினும் இப்பாடலில் காணும் சங்கம், மேதி, வண்டு, செய்யாள், ஆமை, இப்பி, அன்னம் என்னும் ஏற்புடைப் பொருள் களிடையே மேகம் திகழும் என்பதிலும், தூங்கும் இயல்பு வாய்ந்த தோகை சிறப்புடையதாகிறது. அன்னமும் மயிலு மாகிய பறவைகளும் இனத்தால் ஒன்றி நிற்கின்றன. எனவே, தோகை என்பதைத் திருந்திய பாடமாக ஏற்க முடிகிறது.

2.(உ). 4. நடை:

நூலுட் காணப்பெறும் சொல்லாட்சி, தொடரமைப்பு, விளித்துக் கூறும் நடை, அடுக்குமுறை எண்ணலங்காரம் சொல்லலங்காரம், யாப்பு நடை ஆகியவை ஆசிரியரின் நடையை நுண்மையாக அறிய உதவுவனவாகும். இவற்றின் துணைகொண்டு உண்மையான மூலபாடத்தைத் தேர்ந் தெடுக்கலாம்.

''வகுத்தான் வகுத்த வகையல்லால் (குறள். 377-பரி.)

வேறு :

''வகுத்தார் வகுத்த'' (மணக்குட. காளிங்.)

ஆதிபகவன் (1), வாலறிவன் (2), மலர்மிசை ஏகினான் (3), வேண்டாமையிலான் (4), இறைவன் (5), ஐந்தவித்தான் (6), உவமை இல்லாதான் (7), அந்தணன் (8), எண்குணத்தான் (9), பற்றற்றான் (350), தாமரைக்கண்ணான் (1103) — வள்ளுவர் இறைவனைக் குறிப்பிடும் இச்சொற்கள் அனைத்தும் ஒருமை நடை பெற்றவை. இந்த வள்ளுவர் நடையின் துணைகொண்டு பரிமேலழகர் கொண்ட 'வகுத்தான்' என்ற பாடமே சிறப்புடையது ஆகிறது. இந்த நடையின் அடிப்படையில் பரிமேலழகரும், பிற முந்தைய உரையாசிரியர்களும் கொண்ட பாடங்களுள் சிலவற்றையும் சான்றாகக் காட்டலாம்.

குறள்	பரிமேலழகர்		மணக்குடவர்
58	பெற்றான்பெறின்	—	பெற்றார் பெறின்
205	இலன் என்று	—	இலமென்று
250	தன்னை நினைக்க	—	தம்மை நினைக்க
1052	ஒருவற்கு இரத்தல்	—	ஒருவர்க்கு இரத்தல்
			காளிங்கர்
387	வல்லாற்கு	—	வல்லார்க்கு
622	அறிவுடையான்	—	அறிவுடையார்
702	அறிவிலான்	—	அறிவிலார்
1328	தும்மினேனாக	—	தும்மினேமாக

இவற்றுள் பரிமேலழகர் கொண்ட பாடங்கள் வள்ளுவரின் நடையை உணர்ந்து மேற்கொள்ளப் பெற்றவையாகின்றன.

2. (உ). 5. பிறநூல் தொடர்:

பிற நூல் தொடர்கள், மேற்கோள்கள் ஆகிய புறச் சான்றுகளைக் கொண்டும் மூலபாடத்தைத் தேர்ந்தெடுக்கலாம்.

''ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்'' (குறள். 763)

வேறு :

'ஒலித்தக்கால் என்னாம் உவரி **எலிப்பகை**''

இக்குறட்பா, எலிப்படை, எலிப்பகை என்ற பாடங்களுடன் காணப்பெறுகிறது.

அதிகாரம் படைமாட்சி; 'அஞ்சா வெல்படை' (761); தொல்படை (762); அதுவே படை (764), (765); ஏமம்படைக்கு (766); படைத்தகையால் (768); வெல்லும்படை (769) என்பன அகச் சான்றுகள்.

மேலும், ''எலிஎலாம் இப்படை அரவம் யான்எனா''[32] என்னும் குகனது கூற்றாகப் பேசும் கம்பரின் வாக்கு இக்குறட்பாவின் (763) தொடரையே எடுத்தாளும் புறச்சான்றாகிறது. 'எலிப்படை' என்பதே சிறந்த பாடம் எனத் தேர்ந்தெடுக்க இவை துணைபுரிகின்றன.

2. (உ). 6. ஆய்வுநிலை:

அகச்சான்று புறச்சான்றுகளின் துணை கிடைக்காத நிலையில் பொதுநிலையில் ஆய்ந்து உரிய பாடத்தை நிறுவ வேண்டியுள்ளது. இவ்வாய்வுக்குத் துணை நிற்பன சீர், தொடை, வகையுளி, அளபெடை முதலான யாப்பமைதிகளும் பிற இலக்கண அமைதிகளுமாகும்.

யாப்பு-சீர்

''காடது அணிகலம் காரர வம்பதி காலதனில்
தோடது அணிகுவர் சுந்தரக் காதினில் தூச்சிலம்பர்
வேடது அணிவர் விசயற் குருவலில் லுங்கொடுப்பர்
பீடது அணிமணி மாடப் பிரமபு ரத்தரரே''[33]

வேறு :

''பீடது அணிமணி மாடப் **பிரமபு ரத்தாரே**''

'பிரம புரததாரெ' என்பது சுவடி வடிவம். இதனைப் பிரமபுரத்தரரே, பிரமபுரத்தாரே என்னும் இரண்டு வடிவத்தாலும் எழுதலாம். முதலில் பிரமபுரத்தாரே என்று படித்து விட்டதனால் அதுவே அச்சாகி நிலைத்து விட்டது. ஓசை குறைதலோ பொருட்சிதைவோ ஏற்படவில்லை என்பதும் ஒரு காரணமாகிறது. ஆனால் பாடலுக்கேற்ற சீர் அமைதி

நோக்கி ஆய்ந்து பார்க்கப் 'பிரமபுரத்தரரே' என்பதே சரியான பாடமாகிறது. அச்சீரமைதியாவது:

திருப்பிரமபுரம் பற்றிய இப்பதிகப் பாடல்கள் பன்னிரண்டும் கட்டளைக் கலித்துறைப் பாடல்கள். அனைத்தும்,

> ''...கடையொரு சீரும் விளங்கா யாகி
> நேர்பதி னாறே நிரைபதி னேழென்று
> ஓதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே''[34]

என்னும் இலக்கணத்தைத் தழுவியவை. இப்பாடலின் (1159) முதல் மூன்றடிகளும் நேரசையால் தொடங்கிப் பதினாறு எழுத்துகளைப் பெற்று இறுதிச் சீர்கள் காலதனில், தூச்சிலம்பர், லுங்கொடுப்பர் எனக் கூவிளங்காய்ச் சீர்பெற்றன. ஈற்றடியோ நேரசையில் தொடங்கிப் பதினைந்து எழுத்துகளையுடையதாய் 'ரத்தாரே' எனத் தேமாங்காய்ச் சீர் பெற்றுள்ளது. எனவே, இவ்விறுதிச் சீர் பிரமபுரத்தரரே (பிரமபுரத்து அரரே) என்றிருப்பது சீர் அமைதியுடைய பாடமாகிறது.[35]

யாப்பு-தொடை

> ''மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
> தாளுளாள் தாமரையி னாள்''[36]

'மாமுகடி ஒருவன் மடியின்கண்ணே உறையும்' என்பது பரிமேலழகர் உரை. ஒருவன் வரவழைக்கப் பெறுகிறது; மடி இடப்பெயராகிறது. பழைய உரையில் மடியுளான்—மடியிலான் என இருவரின் தன்மைகளே சுட்டப்பெறுகின்றன. இது ஒரூஉ முரண்தொடையாகிச் சிறந்த பாடமாகிறது.

யாப்பு—வகையுளி

பாடல்களில் தளை சிதைந்து ஓசை கெடாதவாறு சீர்களை முறைப்படுத்திப் பதிப்பிக்கும்போது சில சொற்கள் இரண்டு சீர்களில் பிரிந்து நிற்பதுமுண்டு. இதனை வகையுளி என்பர். சிறப்புடைய சில பாடங்கள் இவ்வகையுளியை விலக்கி இயல்பான நடை அமையத் துணைபுரிகின்றன.

சான்று:

> ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
> இறைவ னடிசேரா தார்'' (குறள். 10, பரிமே.)

வேறு :

''இறைவனடி சேரா தவர்'' (மணக்.)

பொருளமைப்பில் சிறிதும் மாறாது இயல்பாக அமையும் மணக்குடவர் பாடம் பழமையானது என உணரமுடிகிறது.

பிற இலக்கண அமைதி

''இளையவற் பயந்தனள் இளைய மென்கொடி''[37]

வேறு :

''இளையவள் பயந்தனள்'' — ன, ள ஈற்று வேறு பாட்டால் பால் மாறுபடும் இவ்வேறுபாட்டில் 'ன' ஈற்றையுடைய '**இளையவற்**' என்பதே பாடம்.

''வந்த நம்பியைத் தம்பி தன்னொடும்
முந்தை நான்மறை முனிக்குக் காட்டிநல்
தந்தை நீதனித் தாயு நீயிவர்க்கு''[38]

வேறு :

''தந்தை நீதனித் தாயு **நீயிவற்கு''** — இது ஒருமை, பன்மை வேறுபாடு. பாட்டிற்கு ஏற்ப 'நீ யிவர்க்கு' என்னும் பன்மைத் தொடரே பாடமாகிறது.

இவ்வாறு அகச்சான்று புறச்சான்றுகளும், இலக்கண அமைதிகளும் துணைநிற்கத் தேர்ந்தெடுக்கப்பெறும் பாடங்களையே மூலபாடம் என்று உறுதிப்படுத்துகிறோம். ஆயினும்,

''பழைய காலத்து ஏட்டுப் பிரதிகள் அடைந்திருக்கும் ஈனஸ்திதியையும்... நோக்க அனேக வித்துவான்களாய் ஒரு சபை சேர்ந்து ஒருவரோடொருவர் தீர்க்க ஆலோசனை செய்து... பதிப்பிப்பினும்[39]

''அனைத்து மாறுபாடுந் திருத்தி ஆதிரூபங் காட்டுதல் இனி எத்துணை வல்லார்க்கும் அரிது''[40]

என்னும் சான்றோர் அனுபவக் கருத்துகளையும், இன்றைய தமிழ்ச்சுவடிகளை ஆய்வு செய்யும் அனுபவத்தையும் கொண்டு மூலபாடம் இதுவே என நிறுவுவது இயலாது என்ற முடிவுக்கே வர முடிகிறது. பொருத்தமுடையது, சிறந்தது என்று தேர்ந்தெடுக்க மட்டுமே இயலும்.

2. (ஊ) தேர்வு முடிவு

பொருத்தமுடையது, சிறந்தது என்று முடிவு செய்வதும் பதிப்பாசிரியரின், ஆய்வாளரின் கருத்தைப் பொறுத்தே அமைகிறது. ஒருவரின் முடிவு மற்றொரு பதிப்பாசிரிய ருக்கு, ஆய்வாளருக்குப் பொருத்தமற்றதாகத் தோன்றி யுள்ளது. ஒரு பதிப்பாசிரியரே ஒரு நூலின் முதற்பதிப்புக் கும் மறுபதிப்புக்கும் இடையே கருத்து வேறுபடுவதையும் காணமுடிகிறது.

சான்று :

''ஊரில் கூறும் அம்பலும் பொய்யாகிய களவிற் கூட்டமும் நீங்க'' என்று பதிப்பித்த அனந்தராமையர் 'கனவிற் கூட்டமும் நீங்க' வேறுபாடும் உண்டு என்று காட்டினார். 'கனவிற் கூட்டமும் நீங்க' என்பதை வேறுபாடாகக் காட்டின பாகநேரி வெளியீடும் (காசி விசுவநாதன்) கழக வெளியீடும்.[41]

''உத்தமக் கவிகட்கொன் றுணர்த்துவென்''[42]

வேறு :

''உத்தமக் கவிஞர்க்கொன் றுணர்த்துவென்'' — என் பது வை. மு. கோ. கொண்ட பாடமும் வேறுபாடும். கலியாண சுந்தர ஐயர் பதிப்பு இதே வேறுபாட்டை மாற்றிப் பதிப்பித்தது.

உ. வே. சாமிநாதையரின் சிலப்பதிகாரப் பதிப்புகள் இரண்டில் (1892, 1927) அமையும் வேறுபாட்டு மாற்றங்கள்.

''பாசவர் வாசவர் **பன்னிண** விலைஞரோடு''[43]

வேறு :

பாசவர் வாசவர் **மைந்நிண** விலைஞரோடு''

''பாசவர் வாசவர் **பைந்நிண** விலைஞரோடு''

இது 1892 — பதிப்பு முறை.

''பாசவர் வாசவர் **மைந்நிண** விலைஞரோடு''

வேறு :

''பாசவர் வாசவர் பன்னிண விலைஞரோடு''

இது 1927-பதிப்பு முறை.

3. அச்சிடுதலின் சிக்கல்கள்

நூல்களை அச்சிட்டு வெளியிடுவதில் உள்ள சிக்கல்கள், பதிப்பு நூல்கள். மறுபதிப்புகள் போன்ற எல்லா வெளியீடுகளுக்கும் பொருந்துமாயினும் இங்குக் குறிப்பிடப்பெறுவது சிறப்பாகச் சுவடிப் பதிப்புகளுக்குரியதாகும். அச்சிடுவதில் ஏற்படும் சிக்கல்களை ஆய்வு செய்வதற்குப் பொதுவாக வெளியீடுகளை வகைப்படுத்திக் காண வேண்டியுள்ளது. அவ்வகையில், 1. சொந்த வெளியீடு, 2. தனியார் நிறுவன வெளியீடு, 3. அரசு நிறுவன வெளியீடு என மூன்று வகைப்படுத்தலாம்.

3. (அ). சொந்த வெளியீடு :

சுவடிப் பதிப்பைப் பொறுத்தவரை சொந்த வெளியீட்டுச் செலவுகள் பலவகையாலும் மிகுதியாகின்றன. நூல்கள் விரைவில் விலையாகாமை பெருஞ்சிக்கலாகிறது.

3. (ஆ) தனியார் நிறுவன வெளியீடுகள் :

இவற்றிலும் விரைவில் விலையாகாமை, இலாபம் மிகுதியாக இல்லாமை, தேக்கத்தால் பொருள் நஷ்டம் போன்றவை சிக்கல்களாகின்றன.

3. (இ) அரசு நிறுவன வெளியீடுகள் :

1. அச்சகம் தேர்ந்தெடுத்தல்.
2. அரசுப்பணம் உரிய காலத்தில் செலவிடப்பெறாத நிலையில் ஒவ்வொரு ஆண்டும் இசைவுபெற்ற் தொகையை இழத்தல்.
3. விலை மிகுதியாதல் போன்ற பலவகைச் சிக்கல்கள் தோன்றுகின்றன.

3. (இ). 1. அச்சகம் தேர்ந்தெடுத்தல்

சுவடிப்பதிப்புகளை அரசு நிறுவனங்கள் மேற்கொள்ளுமாயின் அரசினர் அச்சகங்களிலேயே அச்சிட வேண்டும் என்பது விதி. அதன்படி அச்சகங்களை அணுகும்போது, முதலில் அச்சுப்படியினை (Press Copy) அனுப்ப வேண்டும். அனுப்பப்பெறும் அச்சுப்படி அனுபவத்தால் அனைத்

கள் மாற்றப்பெறுவதும் அரசு நிறுவனங்களுக்குத் தேவை யாகின்றன. பொதுவாகத் தனியார் நிறுவனங்கள் என்ற எல்லா நிலையிலும் சுவடிப் பதிப்புகள் முன்னேற்றம் பெற இரண்டு நிலைகளில் அரசின் துணை தேவைப்படுகிறது. ஒன்று சுவடிப்பதிப்பில் நிதி உதவி; மற்றொன்று நூல் விற்பனையில் உதவி. சிறந்த நூல்களைப் பதிப்பிக்க நிதி உதவி தரும் திட்டத்தின்கீழ் சுவடிப் பதிப்புகளுக்குத் தாராள மாக நிதி உதவி செய்வது இன்றியமையாததாகும். விற் பனை உதவி பதிப்பாசிரியருக்கு மேலும் ஊக்கத்தை அளிப்பதாக அமையும்.

3. (ஈ). 1. விற்பனை உதவி

தரமான பதிப்பேயாயினும் குறைந்த விலை உள்ள தாயின் மிகுதியாக விற்பனையாகும். குறைந்த விலையை நிர்ணயிக்க நூலின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். அதாவது சுமார் முந்நூறு பக்க அளவில் ஒரு நூலை அச்சிடுவதானால் ஆயிரம் படிகள் அச்சிடப் பத்தாயிரம் ரூபாய் செலவாகும். ஒரு படியின் அடக்கவிலை பத்து ரூபாய் ஆகும். ஐய்ாயிரம் படிகள் வெளியிடச் சுமார் முப்பதாயிரம் மட்டுமே செலவாகும். ஒரு படியின் அடக்க விலை ஆறு ரூபாய் ஆகும். நல்ல இலாபத்தோடு விலையை நிர்ணயிக்கலாம். அவ்வளவும் விற்க வேண்டுமே! அதற்கு அரசின் துணை தேவை. அதாவது மாவட்டப் பொது நூலகங்கள், ஊராட்சி மன்ற நூலகங்கள், பள்ளி, கல்லூரி நூலகங்கள் ஆகிய யாவும் வாங்க வேண்டும் என்ற கட்டாயம் உருவாக வேண்டும். சான்றாக—

தமிழ்நாட்டின் பொது நூலக அமைப்பின்கீழ் 1501 நூலகங்கள் பணியாற்றுகின்றன. அவற்றுள் நகரப் பகுதி களில் உள்ளவை 500-க்கு மேற்பட்டவை. நகரப் பகுதிக் கிளைகளுக்கு இரண்டு அல்லது மூன்று நூல்கள், பிறவற் றிற்கு ஒரு நூல் என்ற திட்டப்படி வாங்கினால் இரண்டா யிரம் படிகள் உடனடியாக விற்பனையாகும். பிற நூலகங் களின் மூலம் இரண்டாயிரம் படிகள் எளிமையாக விற் பனையாகும். இந்த முறை அரசினரால் கட்டாயப்படுத்தப் பெறுமானால் பதிப்பாசிரியர் பெரும்பயன் பெறுவர்; பதிப்புகள் தொடர்ந்து வெளியாகும்.

துச் செய்திகளையும் தெளிவாக எடுத்துக்காட்டுவதாகவே இருக்கும். இருந்தாலும் பலமுறை நினைவூட்டுக் கடிதங்கள் எழுதிய பிறகு, அதிலே ஒரு ஐயத்தைக் கிளப்பி ஒரு கடிதம் வரும். இது தேவையற்றதாகவோ முன்பே தெளிவாகக் கொடுக்கப் பெற்றதாகவோ இருக்கும். இப்படியே பல காலம் நீட்டித்த பிறகு இப்போது தேர்தல் பணி மிகுதியாக இருப்பதால் (செய்யப்பெறும் பணிக்கு ஏற்ப இப்பதில் அமையும். அப்படி பணியைக் காட்டும் காலம் வரும்வரை கடிதப் போக்குவரத்து நடைபெறும்.) சில காலம் கழித்து இப்பணி மேற்கொள்ளப்பெறும் என்ற பதில் கிடைக்கும். முடியாது என்றும் கூறமாட்டார்கள். தனியார் அச்சகத்தில் அச்சிடவும் மாட்டார்கள்.

3. (இ). 2. தொகை இழப்பு

அரசு அச்சகத்தில் இல்லாத மொழிகளைத் தனியார் அச்சகங்களில் அச்சிட அனுமதிப்பார்கள். செலவினப் பட்டியலைப் பெற்று அனுப்பிய பின் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டு கழித்து இசைவு ஆணை வழங்கப்பெறும். அப்போது செலவினங்கள் கூடி இருப்பதால் அச்சகத்தில் ஏற்கமாட்டார்கள். எந்த வகையிலும் அந்த ஆண்டிற்காக அனுமதிக்கப்பெற்ற தொகையை இழக்க நேரிடும். உரிய காலத்தில் அனுமதிக்கப்பெற்ற தொகையைச் செலவு செய்ய வில்லை என்ற குற்றச்சாட்டிற்கு நிறுவனத் தலைவர் ஆளாவதும் உண்டு.

3. (இ) 3. விலை

ஓராண்டில் நூல் அச்சிடுதல்; ஓராண்டில் முன்னுரை, இணைப்பு போன்றவை அச்சிடுதல்; அடுத்த ஆண்டில் கட்டமைப்பு முடித்தல் என ஒரு நூல் முடிவுபெறும். அந் நூலுக்கு விலை நிர்ணயிக்க ஓராண்டுக்கு மேலாவதும் உண்டு. 200, 300, 500 படிகள் என்று அச்சிடுவதாலும், மேலும் பலவகைக் காரணங்களாலும் அமைய வேண்டிய விலையைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிகமாக நிர்ண யிக்கப்படும். இப்படிப் பல சிக்கல்கள்.

3. (ஈ). தேவையான சில நடைமுறைகள்

சில கட்டுப்பாடுகள் தளர்த்தப் பெறுவதும், நடைமுறை

3. (ஈ). 2. விளம்பரம்

நூலை வாங்கும் எண்ணம் இருப்பினும் வெளியாகும் நூலைப் பற்றி அறியாத நிலை ஒருபுறம் இருக்கிறது. நல்ல விளம்பரம் இருப்பின் விற்பனை உயரும்.

> ''ரஷ்யர்கள் புத்தகம் என்றால் என்ன விலையானாலும் வாங்கிவிடுவார்கள் ... எங்கள் நாட்டில் புத்தகங்களுக்கு அதிக விளம்பரம் செய்கிறோம்''[44]

என்னும் மாரத் எஸ். கிக்மாதுலவ் என்பாரின் கூற்று இங்குச் சுட்டத்தக்கதாகும்.

குறிப்புகள்

1. லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர், 1975-76, டாக்டர் அ. தாமோதரன், பக். 47.
2. எண்பத்தொன்றில் தமிழ், பக். 473.
3. தொல்பொருள் ஆய்வுத்துறை, 1981-ஆம் ஆண்டு வெளியீடுகள் பலவற்றிலும் உள்ள கல்வி அமைச்சர் அவர்களின் உரை.
4. லண்டன் தமிழ்ச் சங்க ஆண்டு மலர், பக். 49.
5. சங்க இலக்கியம், முகவுரை, பக். 17
6. புறநானூறு, பா. 9.
7. பெரும்பாணாற்றுப்படை, வரி. 441.
8. சிலப்பதிகாரம், 17 : உள்வரி, அடியார்க்கு நல்லார்.
9. தமிழ்ச்சுடர்மணிகள், பக். 316.
10. தன்வந்திரி நிகண்டு, சுவடி எண் ஆர். 145
11. வீரசோழியம், பதிப்புரை, பக். 29
12. கலித்தொகை, பதிப்புரை, பக். 27
13. மேற்படி, பக். 28.
14. நீதிவெண்பா, பா. 31.
15. நீதிவெண்பா, சுவடி—டி. 2283.
16. இறையனாரகப்பொருள், சூ. 1, உரை.

17. குறுந்தொகை, 348.
18. மேற்படி, ப. 128.
19. தொல். எழுத்து, 357.
20. தொல். எழுத்து, எஸ். ராஜம் வெளியீடு.
21. தொல். செய்யுள், 92.
22. கலித்தொகை, 41, 15-16.
23. குறுந்தொகை, 16.
24. முத்தொள்ளாயிரம், 50.
25. கௌளக் குறவஞ்சி, ஏடு—15.
26. நீதிவெண்பா, பா. 1-2, உரை. (சுவடி டி. 2283).
27. சீவகசிந்தாமணி, 748—உரை.
28. என் சரித்திரம், பக். 768.
29. கம்பராமாயணம், பால. 1-20.
30. கம்பராமாயணம், பால. 2-1.
31. மேற்படி. 2-6.
32. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், 11:10
33. சம்பந்தர் தேவாரம், 1159.
34. யாப்பருங்கலக்காரிகை, 1-மேற்கோள்.
35. தேவாரம், முன்னுரை, பக். 128.
36. பழைய உரை, உ.வே.சா. பதிப்பு.
37. கம்ப. பால. 5:105.
38. மேற்படி, 6:17.
39. தொல். பொருள். பதிப்புரை, பக். 28-29.
40. வீரசோழியம், பதிப்புரை.
41. கலித்தொகை, 39, உரை.
42. கம்ப. பால. பாயிரம், 11.
43. சிலப்பதிகாரம், 5:26.
44. கல்கி, 6.8.1928, பேட்டிக் கட்டுரை

பயன்பட்ட நூல்கள்

1. இறையனாரகப்பொருள், நக்கீரர் உரையுடன், பவானந்தம்பிள்ளை (பதி.) சென்னை, 1916.
2. எண்பத்தொன்றில் தமிழ், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் & டாக்டர் ந. கடிகாசலம் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1983.
3. என் சரித்திரம், டாக்டர் உ.வே. சாமிநாதையர், எஸ். கலியாணசுந்தரம் (பதிப்பு), சென்னை, 1950.
4. கம்பராமாயணம், அயோத்தியா காண்டம், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சார்யர் (பதி.), வை. மு. கோ. கம்பெனி, சென்னை-5, 1928.
5. கம்பராமாயணம், பாலகாண்டம், வை.மு.கோ. (பதி.) வை.மு.கோ. கம்பெனி, சென்னை-5, 1973.
6. கலித்தொகை, காசிவிசுவநாதன் செட்டியார் (பதி.), கழக வெளியீடு, சென்னை, 1967.
7. கலித்தொகை, அனந்தராமையர் (பதி.), சென்னை, 1925.
8. குறுந்தொகை (பதி. 2), டாக்டர் உ.வே.சா. (பதி.), சென்னை, 1947.
9. சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), (பதி. 2), எஸ். வையாபுரிபிள்ளை, (பதி.), பாரி நிலையம், சென்னை, 1967.
10. சம்பந்தர் தேவாரம் (பண்முறை), கோபால் ஐயர் (பதி.), 'புதுவை பிரெஞ்சு நிறுவனம்', பாண்டிச்சேரி, 1984.
11. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, வே. சாமிநாதையர் (பதி.), சென்னை, 1892.
12. சீவகசிந்தாமணி, (பதி. 3), எஸ். வையாபுரிபிள்ளை, சென்னை, 1959.
13. தமிழ்ச் சுடர்மணிகள் (பதி. 3), எஸ். வையாபுரிபிள்ளை, சென்னை, 1959.
14. திருக்குறள், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியர் (பதி.); சென்னை, 1949.

15. திருக்குறள், காளிங்கர் உரை, தெ. பொ. பழனியப்பா பிள்ளை, (பதி.), சென்னை, 1948.

16. திருக்குறள், பரிமேலழகர் உரை, நுண்பொருள்மாலை, டாக்டர் இ. சுந்தரமூர்த்தி (பதி.) சென்னை, 1980

17. திருக்குறள் யாப்பமைதியும் பாடவேறுபாடும், மு. சண்முகம்பிள்ளை, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1971

18. திருக்குறள், பழைய உரை, உ. வே. சா. (பதி.), சென்னை.

19. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், அடிகளாசிரியன் (பதி.), தஞ்சை, 1969.

20. தொல்காப்பியம், எழுத்ததிகாரம், எஸ். ராஜம் வெளியீடு, சென்னை, 1957.

21. தொல்காப்பியம், பொருளதிகாரம், இரண்டாம் பாகம், பேராசிரியம், எஸ். கனகசபாபதிபிள்ளை (பதி.), சென்னை, 1935.

22. நீதிவெண்பா, (பதி. 3), ஆறுமுக நாவலர் (பதி.), சென்னை, பரிதாபி, தை.

23. பத்துப்பாட்டு, மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், வே. சாமிநாதையர் (பதி.), சென்னை, 1889.

24. புறநானூறு, (பதி. 2), வே. சாமிநாதையர் (பதி.), சென்னை, 1923.

25. புறநானூறு, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை விளக்கவுரை, கழகம், சென்னை, 1968.

26. முத்தொள்ளாயிரம், கழக வெளியீடு, சென்னை, 1946.

27. யாப்பருங்கலக் காரிகை, கா.ரா. கோவிந்தராஜ முதலியார் (பதி.), சென்னை, 1908.

28. லண்டன் தமிழ்ச்சங்க ஆண்டுமலர், லண்டன் தமிழ்ச் சங்கம், ஒப்புரவு அச்சகம், சென்னை-18, 1975-76.

29. வீரசோழியம், பெருந்தேவனார் உரையுடன், சி. வை. தாமோதரம் பிள்ளை (பதி.) சென்னை, 1895.

சுவடிகள்

1. கௌளக் குறவஞ்சி, ஆர். 5594, ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை-5.

2. தன்வந்திரி நிகண்டு முந்நூறு, ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை.

3. நீதிவெண்பா, டி. 2283, ஓலை, அரசினர் சுவடி நூலகம், சென்னை.

ஆய்வேடு

சுவடி இயல் ஓர் ஆய்வு, பூ. சுப்பிரமணியம், (சென்னைப் பல்கலைக் கழகம்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

13. தமிழ்

சு. த. திருநாவுக்கரசு

''பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்''[1]

''தன்னேரிலாத தமிழ் அன்னையே! —
உன்னை வணங்கினேன்
இன்னல் தவிர்த்தாள் என்னையே''

''முன்னைத் தோன்றிய மக்கள் முதன்முதல் பேசிய
மொழியே! மொழியே! மொழியே! எனவும் வாழ்த்தும்''[2]

தமிழருடைய பண்பாட்டின் பெட்டகமாக விளங்குவது தமிழ்மொழி. இனப்பண்பாடு, நாட்டினப்பண்பாடு எனும் யாவும் தமிழரைப் பொறுத்தவரை, அவர்களுடைய மொழி வழிப்பட்ட பண்பாடாகவே பொலிவுறுகிறது.

ஆங்கிலத்தில் உள்ள பிரிட்டானியக் கலைக்களஞ்சியம், ''கடந்த இருபத்தைந்து நூற்றாண்டுகளாக வாழ்ந்தும் வளர்ந்தும் வரும் ஒரே உலக மொழியாகத் தமிழ்மொழி வீறுடன் விளங்குகிறது''[3] எனத். தெரிவிக்கிறது. 'இது உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை!' என்பதைத் 'தமிழ்மொழியின் வரலாறு' அறிவிக்கிறது.

முதற்பகுதி

இன்றைய உலகில், அறுபத்து நான்கு நாடுகளில், தமிழைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். தாய்த் தமிழ்நாட்டில் ஆறு கோடித் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.[4] வெளிநாடுகளில் ஒன்றரைக் கோடி மக்கள் தமிழைப் பேசிவருகின்றனர்.

ஆங்கில மொழிக்கு அடுத்த நிலையில், வெளியுலகில் மிகப்பலரால் பேசப்படும் மொழியாகத் தமிழ் வலிவும் பொலிவும் பெற்றுள்ளது எனலாம்.

தமிழின் தொன்மை

'தமிழ் மொழி, எந்தக் காலத்தில் தோன்றியது? எப்படித் தோன்றியது? முதன்முதல் யாரால் பேசப்பட்டது?' எனும் ஐயங்கள் நமக்கு எழலாம். இவ்வினாக்களுக்கு, யாராலும் எளிதில் விடைகூற இயலாது. இதனால்தான்,

''தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்''
(கம்ப. அகத். 41)

''என்றுமுள தென்தமிழ் இயம்பி இசைகொண்டான்''
(கம்ப. அகத். 47)

என்று கம்பன் அறிவித்துள்ளான்.

தமிழக மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாகிய சுப்பிர மணிய பாரதியாரும்,

''ஆதிசிவன் பெற்றுவிட்டான்
அந்த ஆரிய மைந்தன்
அகத்தியன் வளர்த்து விட்டான்''
(பாரதி. கவி. தமிழ்த்தாய், ப. 45)

எனவும், ''பொதிய மலைப் பிறந்த மொழி'' (பாரதி. கவி. ப. 239) எனவும் தமிழின் தொன்மையைப் புராண மரபு வழி விளக்கியுள்ளார்.

இதனையே, தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், ''தமிழ் ஒரு காட்டுமிராண்டி மொழி'' என்று பச்சையாகத் தெரிவித்துள்ளார்.

தமிழின் தோற்றத்தை ஆராய்ந்து பார்க்கின்றபொழுது, வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளிபரப்ப இயலாத தொல் பழங்காலத்தில், அது தோன்றி இருக்க வேண்டும் எனும் உண்மை புலப்படுகிறது.

தமிழ்நாட்டில் புதுக்கற்கருவிக் காலப் பண்பாட்டை ஆராய்ந்த அகழ்வாராய்ச்சியாளர்கள், ''கி.மு. பத்தாயிரத் திற்கு முன்பே, இந்நாட்டில் ஓர் இனக்குழு மொழியாக வழங்கி இருத்தல் கூடும்''[5] எனக் கருதுகின்றனர்.

ஆய்வின் நோக்கம்

சென்ற நூற்றாண்டுகளாகத் தமிழைப் பற்றி நடை பெற்று வரும் ஆராய்ச்சியால், மேலும் மேலும் பல 'சிக்கல் கள்' பெருகியுள்ளனவேயொழிய, அவற்றை விடுவிக்கும் முயற்சிகள் போதிய அளவிற்கு அறிஞர்களால் மேற் கொள்ளப்பெறவில்லை. இதனால், சிறுசிறு சிக்கல்கள், பெருஞ்சிக்கல்களாக மாறுவதற்கு முன்னரேயே, அவற்றை இக்கால ஆராய்ச்சி முறைகளின் ஒளியைக் கொண்டு, உண்மை காணும் நோக்கத்தோடுப் பகுத்துப் பகுத்து ஆராய்வோமானால், 'முன்னோர் மொழிந்த பொருளில்' உள்ள மெய்ம்மையைக் கண்டறிய இயலும் எனும் நம்பிக்கை எழுகிறது.

'தமிழ்' எனும் சொல் பலவகையாகப் பகுக்கப்பட்டு, வெவ்வேறு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவை வியப் பூட்டுவனவாகவும், நம் அறிவாராய்ச்சிக்கு அப்பாற்பட்டன வாகவும் உள்ளன. அவற்றைத் தொகை-வகைப்படுத்தி,

அ) மனப்பதிவு முறை,

ஆ) சமய-தத்துவச் சார்பு முறை,

இ) ஒலியொப்புமை ஆய்வு முறை,

ஈ) சொற்பொருளியல் ஆய்வு முறை,

உ) மீட்டுருவாக்க முறை

எனும் ஐந்து வகை ஆராய்ச்சி முறைகளில் அடக்கி, மதிப் பீடு செய்யும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

பழந்தமிழ் நூல்களில் 'தமிழ்' எனும் சொல் வழங்கப் பட்டுள்ள பொருட்பாங்கினை ஆராய்வதன் மூலம், அதன் பொருள், எவ்வெக்காலத்தில், எவ்வெவ்வாறு விரிந்து, சிறந்துள்ளது என்பதை அறிய முயலுதல்.

'தமிழ்' எனும் சொல்லிற்கு வழங்கும் முதன்மைப் பொருள், **சங்க காலத்தில்:**

(1) மொழி, **(2)** நாடு, **(3)** இனம், **(4)** முத்தமிழ், **(5)** அகப்பொருள் என்பன.

பிற்காலத்தில் வழங்கும் பொருள்

(கி.பி. 6 நூ. முதல் 20 நூ. வரை)

1) இனிமையும் குளிர்ச்சியும்

2) அகப்பொருளில் 'களவு' ஒழுக்கம்

3) தம்மிடத்தே ழகரத்தைக் கொண்ட மொழி

4) தனித்து இயங்கும் மொழி

5) வல்லின, இடையின, மெல்லின எழுத்துகளைக் கொண்ட மொழி

6) அறியாமையை நீக்குவது

7) மந்திரப் பொருளுடையது.

'தமிழ்' எனும் சொல் இடப்பொருளில் இருந்து, மொழிப்பொருளையும், இனப்பொருளையும் சுட்டத் தொடங்கியது என்பதைப் பற்றிய ஆராய்ச்சி.

'தமிழ்' எனும் சொல்லின் திரிபு 'திரமிடம்-திரவிடம்' என்பதா? அல்லது கால்டுவெல் கருதுவதைப்போல், 'திரமிடம்-திரவிடம்' என்பதிலிருந்து 'தமிழ்' எனும் பெயர், தோன்றியதா?'' என்பதைப்பற்றி அறிய முயலுதல்.

பின்னர், இவ்வாய்வின் முடிவினைத் தொகுத்துக்கூறி, ஆய்வாளனுடைய துணிவினைத் தக்க சான்றுக்ள் காட்டி நிலைநாட்ட முயலுதல்.

இத்தகைய முறைகளில் இவ்வாய்வுகள் அமையுமானால், வருங்கால ஆராய்ச்சியாளர்க்கும், அறிஞர்க்கும், தமிழ் மாணவர்க்கும் நல்லதோர் அடிப்படையை இவ்வாய்வுரை அமைத்துத் தரும் என்பது இவ்வாய்வாளனின் கருத்து.

இரண்டாம் பகுதி

'தமிழ்' எனும் சொல்லிற்குப் பொருள் கூற முனைந்த அறிஞர்கள் பலர், தத்தம் அறிவுத் திறமையையும், ஆர்வத்தையும் புலப்படுத்தும் வகையில், பலவகை விளக்கங்கள் தந்துள்ளனர். அவற்றுள் பெரும்பாலானவற்றை 'மனப் பதிவு முறை' எனும் தலைப்பின்கீழ் அடக்கலாம்.

(அ) **மனப்பதிவு முறை**

இன்றைய ஆராய்ச்சியுலகிலும், திறனாய்வுத் துறையிலும் பொருத்தமற்ற—சிறப்பற்ற முறையாகக் கருதப்படுவது இம்முறை.

இம்முறையில் நடத்தப்படும் ஆயாய்ச்சி, ஒருவருடைய உணர்ச்சிக்கனிவையும் பற்றையும் பாசத்தையும், விழைவார்ந்த விருப்பத்தையும் அடிப்படையாகக் கொண்டது; விருப்பு வெறுப்பிற்கு இடமளிப்பது. இதனால், இம்முறை, தற்சார்பு உடையது.

மற்றும், ஆய்விற்குரிய கருதுகோளினை, அளவை இயல் அடிப்படையில் காரண-காரியத் தொடர்புபடுத்தி விளக்காமல், தன் மனப்போக்கிற்கு ஏற்ப அல்லது முன்கூட்டியே தாம் கொண்டுள்ள முடிவினைப் புலப்படுத்துவதாய் அமைப்பது இம்முறை. ஒருவருடைய மனத்தில் எழும் எண்ணங்களை ஒருவகைப் பற்று ஆர்வத்தால், 'அப்படியே' வெளிப்படுத்துவது 'மனப்பதிவு' முறையாகும்.

கடந்த நூற்றாண்டுகளில் 'தமிழ்' எனும் சொல்லிற்குத் தரப்பட்டுள்ள விளக்கங்கள் பெரும்பாலானவற்றை, இத் தலைப்பின்கீழ் நாம் அடக்கலாம்.

(1) தனிமைப்பொருள்

சி. வை. தாமோதரம் பிள்ளை எனும் ஈழநாட்டு அறிஞர், தம்முடைய 'வீரசோழிய'ப் பதிப்புரையில் கி.பி. 1880 அளவில்,

> ''இகழ், இமிழ், உமிழ், கமழ், குமிழ், சிமிழ் என முகரப் பேறுபெற்ற பதங்கள் போலத் 'தமிழ்' என்னும் சொல், **தனிமைப் பொருள் குறித்த 'தமி'யெனும்** வினையடியாற் பிறந்து, வினைமுதற் பொருண்மை உணர்த்திய விகுதி குன்றித், தனக்கு இணையில்லாப் பாஷை என்னும் பொருள் பயப்பது''[6]

எனும் விளக்கத்தைத் தந்துள்ளார். இவ்விளக்கம், தமிழின் சிறப்பை மிகைபடக் கூறுவதாக அறிஞர் கருதுவர்.[7] 'தமிழ் வேறு எந்த மொழிக் குடும்பத்தையும் சேராதது; ழகரம் எனும் சிறப்பு எழுத்தை உடையது' எனும் பொருளை இந்த விளக்கம் தருகிறது.

இக்கருத்து ஒப்பியன் மொழி நூலாராய்ச்சிக்குப் பொருந்தி வரவில்லை. 'தமிழ்' மொழி திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது என்பதனைக் கால்டுவெல் நிறுவி யுள்ளார். மற்றும் ழகரவொலி, இன்றைய இத்தாலிய, பிரெஞ்சு மொழிகளில் உள்ளன என்பதனை இக்காலத்திய மொழியியல் ஆராய்ச்சி அறிவிக்கிறது.

எனவே, இக்கருத்து; தாமோதரனாரின் மொழிவழிப் பட்ட தேசிய உணர்வின் எழுச்சியையே புலப்படுத்துகிறது எனலாம்.

(2) தென் எனும் அடை

கி.பி. 1886ஆம் ஆண்டில், திருக்குறளின் ஆங்கில மொழிபெயர்ப்பை டாக்டர் ஜி. யூ. போப் எனும் அறிஞர் வெளியிட்டார். அந்நூலின் முன்னுரையில், 'தென்மொழி' எனும் பெயர்ச்சொல், 'தமிழ்மொழி' எனத் திரிந்ததாகக் கருதலாம்'[8] என்று அவர் தெரிவித்துள்ளார். இக்கருத்தை அடுத்து, ''தேன்மொழி' எனும் பெயர்ச்சொல்லே திரிந்து, 'தென்மொழி'யாயிற்று'' என்ற அக்காலத்தில் தமிழகத்தில் நிலவிய கருத்து ஒன்றினை அவர் மறுத்துள்ளார்.[9]

'தென்மொழி' எனும் பெயர்ச்சொல், மிகவும் பிற்பட்ட காலத்தில் வழக்கிற்கு வந்ததாகும். சம்ஸ்கிருத மொழியை 'வடமொழி' எனக் குறிக்கும் வழக்குப் பெருகிய பிறகு, அதற்கு எதிர்ச்சொல்லாகத் தமிழ் மொழியைச் சுட்டுவதற் குத் 'தென்மொழி' எனும் சொல் வழக்கிற்கு வந்ததாகத் தெரிகிறது.

தேவார காலத்தில் இவ்வழக்குத் தோன்றவில்லை. அப்பர்,

''ஆரியன் கண்டாய்! தமிழன் கண்டாய்''

(தேவா. 6:23:5)

என்றே இறைவனைச் சுட்டியுள்ளார்.

மற்றும், கம்பனோ (கி.பி. பன்னிரண்டாம் நூ. ஆ.)

''தென்சொற் கடந்தான்
வடசொற் கலைக்கு எல்லை தேர்ந்தான்''

(கம்ப. அயோ. நகர். 433)

எனும் பாடற் பகுதியில், தமிழைத் 'தென்சொல்' எனவே குறிப்பிட்டுள்ளார். அக்காலத்திலும் 'தென்மொழி' எனும் ஆட்சி வழக்கிற்கு வரவில்லை என்பது புலப்படுகிறது.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சிவஞான முனிவரே, தம்முடைய 'காஞ்சிப்புராணத்தில்', 'தென் மொழி' எனும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

''வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
உலகமெலாம் தொழுதேத்துங்.
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகனார்''

(காஞ்சி. தழுவக். 248)

எனும் பாடலால் இது உறுதிப்படுகிறது. எனவே, ஜி. யூ. போப்பின் விளக்கம், பண்டைக்காலத்தில் 'தமிழிற்கு'ப் பெயரே இல்லாமல் இருந்திருக்க வேண்டும் எனும் எண் ணத்தை எழச்செய்கிறது.

(3) அழகிய மொழி

'தமிழ் மொழி வரலாறு' எனும் நூலைச் சென்ற நூற்றாண்டின் இறுதியில், பூபாலப்பிள்ளை என்பவர் எழுதியுள்ளார். அந்நூலுள், 'தமிழ்' எனும் பெயர், 'தென் மொழி என்பதன் திரிபு' என்றும், 'தென்' என்பதற்கு 'அழகு' என்றும் பொருள்கொண்டு, 'தமிழ்' என்பதற்கு 'அழகிய மொழி' எனும் பொருள் விளக்கம் கூறியுள் ளார்.[10] தமிழ் தழீஇய சாயலவர் (சீவக. 2026) என்பதனைச் சான்றாகக் காட்டுவர். இவ்விளக்கம், ஆசிரியரின் உணர்ச்சிக் கனிவையே காட்டுகிறது.

(4) 'அமிழ்து' தமிழாயிற்று

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, 'அமிழ்து, அமிழ்து' என்பதே தமிழின் பழைய பெயர். உண்டாரை வாழவைக்கும் தேவர் உலக அமிழ்தத்தைவிட இனிமை யானது; அதனைச் சுவைத்தோர் பூதவுடலை இழந்தாலும், புகழுடம்பைப் பெற்று பன்னெடுங்காலம் வாழ்ந்து வருகின்

றனர் என்பது இவர் கருத்து. 'அமிழ்து' அமிழ்து' என்று விரைந்து உச்சரித்த நிலையில், 'அமிழ்து' எனும் சொல் திரிந்து தமிழாயிற்று என்பது இவருடைய நம்பிக்கை.[11]

வெளிப்படையாகவே, இந்த விளக்கம் 'மனப்பதிவாக' அமைந்து இருப்பதை உணரலாம்.

(5) மூவகை எழுத்தால்...!

முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள், ''தமிழுக்கு இனம் மூன்று, அவை வல்லினம், மெல்லினம், இடையினம் என்பவை. நமது மொழிக்குப் பெயர் வைக்க எண்ணிய தமிழ்ச் சான்றோர்கள், அக்காலத்திலேயே இனத்திற்கு ஒரு எழுத்தாக எடுத்து, மூன்று இன்ங்களுக்கும் 'பிரதிநிதித்துவம்' வழங்கிப் பெயர் வைத்திருப்பது எண்ணி, எண்ணி மகிழ்வதற்குரியது. த—வல்லினம்; மி—மெல் லினம்; ழ—இடையினம்''[12] என்று தெளிவுறுத்தியுள்ளார்.

தமிழ் எழுத்துகளை, உயிர் எழுத்துகள், மெய்யெழுத்து கள் என்று பாகுபடுத்தியுள்ளனர். வல்லினம், மெல்லினம், இடையினம் எனும் பாகுபாடு மெய்யெழுத்துகளுக்கே பொருந்தும். உயிர் எழுத்துகள், குற்றெழுத்து, நெட் டெழுத்து என இருவகைப்படும். மேற்கண்ட விளக்கத்தில் உயிர் எழுத்துகள் ஒன்றுகூட இடம்பெறவில்லை. மெய் யோடு சேர்ந்த 'உயிர்' தான் இடம்பெற்று இருக்கிறது. எனவே, தமிழ் நெடுங்கணக்கின் 'பிரதிநிதித்துவத்தை' இச்சொல் முழு நிலையில் பெறவில்லை என்பது கருதத் தக்கது.

இதனால், இவ்விளக்கத்தையும், 'மனப்பதிவு' முறையில் அமைந்ததாகவே கருதலாம்.

இதுவரையில் நாம் கண்ட ஐவகை விளக்கங்களும், அறிவாராய்ச்சி முறையில், அளவை இயல் அடிப்படையில் அமையவில்லை என்பது எளிதில் புலனாகிறது. எனவே, இவற்றை மனப்பதிவு முறையில் அமைந்த ஆராய்ச்சி களாகவே கொள்ளுவதில் குற்றம் ஒன்றும் உண்டாகாது எனத் தோன்றுகிறது.

(ஆ) சமய-தத்துவச் சார்புமுறை

'தமிழ்' எனும் சொல்லில் உள்ள எழுத்துகளைத்

தனித்தனியே பிரித்து, அவற்றுக்குச் சமயச் சார்புடைய மந்திரப் பொருள் விளக்கத்தை ஒருசாரார் தந்துள்ளனர்.

மற்றொரு சாரர், அவற்றிற்குத் தத்துவப் பொருள் விளக்கம் கூறியுள்ளனர். இந்த விளக்கங்கள் யாவும், வெளிப்படையாகச் சொல்லின் பொருளைப் புலப்படுத்து வது இல்லை. இதற்கு மாறாக உள்ளுறைப் பொருளும், குறிப்புப் பொருளும், குறியீட்டுப் பொருளும் அவற்றிற்குத் தரப்பட்டுள்ளன. அப்பொருள்கள் மந்திரப் பொருளை அறிவிக்கும் மறைபொருள் (Esoteric) சொற்களாகக் கருதப் படுகின்றன.

த — என்பது தெய்வத்தன்மை உடைய எழுத்து. தெய்விக இயல்பைப் புலப்படுத்துவது.

ம — என்பது மூலமந்திர ஒலி

ழ் — என்பது நாதத்தின் குறியீடு.

எனவே 'தமிழ்' எனும் எழுத்து தெய்வத்தன்மை வாய்ந்த மூலமந்திரமாகிய 'ஓம்' என்பதன் நாத வடிவத்தை உணர்த் துவது என்பர் இராமலிங்க அடிகள். அவரே,

த — என்பது தெய்வ இயல்பையும் சாத்துவிகத்தையும் புலப்படுத்தும் குறியீடு.

ம — மனித இயல்பையும் ராஜசப்பண்பையும் உணர்த்தும் குறியீடு.

ழ் — சடப்பொருளின் இயல்பையும், தாமசப் பண் பையும் புலப்படுத்தும் குறியீடு.

எனவும் வேறுவகையாக விளக்கியுள்ளார்.[13]

பஞ்சாட்சரத்தின் குறியீடு

'தமிழ்' எனும் சொல்லில், அமைந்துள்ள ஐந்து எழுத்து களை வகைப்படுத்திக் காட்டுவர்.

த் + அ = த
ம் + இ = மி
ழ்

அதாவது அ, இ, த், ம், ழ் எனும் ஐந்து ஒலிகளால் அமைந்தது 'தமிழ்' எனும் சொல். இந்த ஐந்து எழுத்து

களும், சைவ சமயத்திற்குரிய 'பஞ்சாட்சர' மந்திரத்தின் (சிவாயநம) குறியீட்டுச் சொல் எனக் கூறுவாரும் உளர்.[14]

அட்டமாசித்துக் குறியீட்டுப் பொருள்

த — தகர வித்தையை உணர்த்தும் மந்திர எழுத்து.

மி — மகிமா எனும் வித்தையை உணர்த்தும் மந்திரம் எழுத்து.

ழ் — கீத்துகளின் நிறைவை உணர்த்துவது.

இவ்வாறு எண்வகைச் சித்துகளோடு மந்திரக் குறியீட்டைக் கலந்து[15] மாணிக்கவாசகத் தம்பிரான் விளக்கியுள்ளார்.

ஆண், பெண் எழுத்துகள்

த — என்பது அமுத எழுத்து. இதனை 'ஆண் எழுத்து' எனவும் கொள்ளலாம்.

மி — அமுத எழுத்து — ஆண் பெண் கலந்த எழுத்தாகவும் கூறலாம்.

ழ் — அமுத எழுத்து. பெண் எழுத்தாகவும் சுட்டுவர்.

எனவே, அமுதம் போன்ற இனிய இயல்புடைய மொழியை அமுத எழுத்துகள் சுட்டுகின்றன. மற்றும், உலகம் அவன், அவள், அதுவாகத் தோற்றம் அளிப்பதைப்போல, 'தமிழ்' எனும் சொல் அவன், அவள், அது எனும் மூன்றும் இணைந்த தோற்றமுடைய ஞானத்தைப் புகட்டும் மொழி[16] என்பது ஈசானிய முனிவரின் கருத்தாகும்.

இயற்கை-செயற்கை எழுத்துகள்

இவ்வாறு அல்லாமல், தமிழ் எனும் சொல்லில் உள்ள 'த, மி எனும் எழுத்துகளை இயற்கை எழுத்துகள் எனவும், 'ழ்' என்பதனைச் செயற்கை எழுத்து எனவும் கூறுவர்.[17]

மேற்கண்ட விளக்கங்கள் யாவும், காரணகாரியத் தொடர்பு இல்லாமல், மெய்யுணர்வு நிலையில் தரப்பட்டனவாகத் தோன்றுகின்றன. இவற்றிற்கு எல்லாம் அடிப்படை யாவை என்பதனை அறிய இயலவில்லை.

(இ) ஒலியொப்புமை ஆய்வு முறை

மேற்கு நாட்டு ஒப்பியன் மொழி நூல் நெறிமுறைகளைக்

கருத்தில் கொண்டு, 'தமிழ்' எனும் சொல்லை அதனோடு ஒலி ஒப்புமையுடைய சொற்களோடுத் தொடர்புபடுத்தி, பகுதி—விகுதியாகப் பிரித்துப் பொருள் கூறும் வழக்கும் தமிழ் அறிஞர் சிலரிடம் நிலவுகிறது.

திராவிடம் > திரமிடம்

திரமிடம் எனும் சொல்லின் திரிபே, தமிழ் என்பது 'பிரயோக விவேகம்' எனும் இலக்கண நூலின் ஆசிரிய ரான சுப்பிரமணிய தீக்கதரின் கருத்தாகும்.[18]

முன்னர் நாம் கண்ட 'தென்மொழி' எனும் சொல்லே திரிந்து, 'தமிழ்' எனும் சொல்லாக அமைந்தது எனும் கருத்தும் ஒலியொப்புமை அடிப்படையில் அமைந்ததே யாகும்.

(ஈ) சொற்பொருளியல் ஆய்வு

தமிழ் எனும் சொல்லிற்கு உரிய பொருள்கள் யாவை என்பதனை அறிஞர் ஆராய்ந்துள்ளனர். தங்கள் ஆராய்ச்சி யின் முடிவாக, அவர்கள் சில கருத்துகளைத் தெரிவித் துள்ளனர்.

இனிமை

பிங்கல நிகண்டு நூலாரின் கருத்தைத் தழுவி, 'தமிழ்' எனும் சொல்லிற்கு 'இனிமை' எனும் பொருளைச் சபாபதி நாவலர் தந்துள்ளார்.

தம் + இழ் எனப் பகுத்து 'இழும்' எனும் இனிய ஒலி நயம் உடைய மொழியே தமிழ் எனும் விளக்கத்தை அவர் தந்துள்ளார்.[19]

இதற்குச் சான்றாக,

''தமிழ் தழீஇய சாயலவர்'' (சீவக. 2026)
''தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே''
(கம்ப. பம்பை. 29)

எனும் பாடற்பகுதிகளைக் காட்டியுள்ளனர்.[20] இதனை அறிவியல் சார்ந்த ஆராய்ச்சி முறை எனக் கொள்ளுவதற்கு இல்லை.

ஒப்பற்ற சிறப்பு

பூபாலபப்பிள்ளை முதல் கா. சு. பிள்ளை ஈறாக உள்ள தமிழறிஞர்கள் 'தமிழ்' எனும் சொல்லிற்கு, தனிப்பட்ட தனிமையான சிறப்புடைய, தனித்து இயங்கும் ஆற்றலுடைய மொழி எனப் பலவாறாகப் பொருள் கூறியுள்ளனர்.[21]

இப்பொருளும், சொற்பொருளியல் ஆய்வினால் வெளிப் படக் கூடியதாகத் தோன்றவில்லை. பெரிதும் 'மனப்பதிவு முறை'யின் பாற்பட்டதாகவே காணப்படுகிறது.

ஓரசைச்சொல்

வேறொரு சாரார், 'தமிழ்' எனும் சொல்லை, ஓரசைச் சொல்லாகக் கொண்டு, ஓரசைச்சொற்களாலான பண்டைக் காலத்திய மொழியைத் 'தமிழ்' எனும் பெயரால் சுட்டினர் எனக் கூறுவர்.[22]

ஓரசைச் சொல்லாலான மொழியைச் சுட்டுவதே 'தமிழ்' எனும் பெயர் என்பது ஆய்வாளரின் உய்த்துணர்வே ஒழிய, இக்கருத்தினை அரண்செய்யும் ஆதாரம், இச்சொல்லின் பொருளில் இருப்பதாகத் தெரியவில்லை.

தாமம் > தமிழ்

மாகறல் கார்த்திகேய முதலியார் எனும் மொழிநூல் அறிஞர் "'தாமம்' எனும் சொல்லின் திரிபாக வழங்கும் சொல்லே தமிழாகும்" என்று துணிந்துள்ளார்.

'தாமம்' எனும் சொல்லிற்குச் சூரியன் என்பது பொருள். "சூரியன் உலகின் புற இருளைப் போக்கு கின்றான்; மக்களுடைய அறியாமையாகிய அக இருளைப் போக்குவது தமிழ்" எனும் கருத்து அமையுமாறு, 'தமிழ்' எனும் சொல்லை விளக்கியுள்ளார்.[23]

இது ஒப்பியன் மொழி நூல் அறிவு ஆராய்ச்சி ஆர்வத் தால் தோன்றிய தவறான முடிவாகும். தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் 'சூரியன்' எனப் பொருள்படும் 'சுல்' எனும் வேர்ச்சொல்லடியாகப் பிறந்தது எனும் தவறான நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டதாக இவருடைய ஆய்வு அமைந்து இருக்கிறது.

இதுவரையில், நாம் கண்ட சொற்பொருளியல் ஆராய்ச்சி யும், தக்க அடிப்படையில் அமைந்ததாகத் தெரியவில்லை.

(உ) மீட்டுருவாக்க முறை

மொழி ஒப்பாய்வில் மீட்டுருவாக்கம் சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு மொழியில் வழங்கும் குறிப்பிட்ட ஒரு சொல், அம்மொழியோடு நெருக்கமான தொடர்புடைய குடும்ப அல்லது இனத் தொடர்புடைய குழுக்களாக விளங் கும் மொழிகளில் எவ்வாறு வழங்குகிறது என்பதைக் கண்டறிய வேண்டும். இதற்குப் பிறகு அம்மொழிகளுள், அச்சொல்லில் காணப்படும் ஒலி வேற்றுமை, வடிவ வேற்றுமையைக் கண்டறிய வேண்டும். பின்னர், அவற் றிடையே காணப்படும் பொதுமைப் பண்புகளை ஒன்றாகத் திரட்ட வேண்டும். அவற்றுக்கு இடையே காணப்படும் வேறுபாடுகளுக்குரிய காரணங்களையும் கண்டு அறிய வேண்டும். பிறகு பொதுமைப் பண்புகளுள் தலையாய வற்றை ஒன்றாகச் சேர்த்து அச்சொல்லின் ஒலி வடிவமும் வரி வடிவமும் எவ்வாறு அமைந்து இருக்கும் என்பதைக் கண்டறிந்து, வரையறுத்துக் கூறுவதே 'மீட்டுருவாக்கம்' எனப்படுவதாகும். பல்வேறு இனக்குழு மொழிகளின் மூலமொழியில் அச்சொல், இவ்வாறு அமைந்து இருக்கும் எனத் துணிவதே மீட்டுருவாக்கத்தால் விளையும் பயனாகும்.

டாக்டர் கமில் வெலபில் எனும் அறிஞர், 'தமிழ்' எனும் சொல் தொன்மைத் தமிழ் மொழிக்குரிய சொல் என்னும் கருத்துடையவர். அச்சொல், பிற திராவிட மொழிகளில் எவ்வாறு திரிந்து வழங்குகின்றது என்பதனை, முதலில் 'திராவிட மொழிகளின் சொற்பிறப்பு இயல் அகராதி'யின் துணைகொண்டு ஆராய்ந்துள்ளார்.

பிற திராவிட மொழிகளில், தமிழ் எனும் சொல் எவ் வாறு வழங்குகிறது என்பதனை முதலில் காண்போம்.

தமிழன்	= ஒரு தமிழ் மகன்
மலை. தமிழ்	= தமிழ்மொழி
தோடா. தொபிய்ள்	= தமிழ் மொழி
கன்னட. தமிற > தம்பற	= தமிழ் மொழி
துளு. தமுளு > தம்புளு	= தமிழ்மொழி[24]

மேற்கண்ட சொற்களின் ஒலிவடிவ, வரிவடிவ அமைப்பு களை ஆராய்ந்த டாக்டர் வெலபில் பின்வரும் முடிவிற்கு வந்துள்ளார்.

தம் + இழ் எனும் வடிவம் மூலத் திராவிட மொழியில் இருந்திருக்கலாம். 'தம்' என்னும் பகுதி, படர்க்கைப் பொருளில் ''நம்முடைய—நமக்குச் சொந்தமான'' எனும் பொருளைத் தருகிறது.

இந்நிலையில் 'தமிழ்' எனும் சொல், 'அவர்களுடைய' எனும் பொருள்படும்.

'இழ்' என்னும் சொல்லாக்க விகுதியான உம் அல்லது எனும் பொருள் பயப்பதாகக் கொள்ளலாம். இதற்கு ஓர் ஒலியோடு 'விரிவது', 'திறப்பது' எனும் பொருள் கூற லாம்.

இந்த அடிப்படையில் நோக்குகின்றபொழுது, 'தமிழ்' எனும் சொல்லிற்கு 'அவர்களுடைய சொந்த ஒலி' என்று விளக்கம் தருகிறார்.[25]

இதற்குமேல் ஒருபடி சென்று, 'தமிழ்' என்பதற்குச் 'சரியான, நேர்த்தியான, பொருத்தமான ஒலி' எனப் பொருள் கூறுவதே சாலவும் பொருந்தும் என்று அவர் குறிப்பிடுகிறார்.[26]

இறுதியில், தமிழ் எனும் சொல்லின் மூல வடிவத்தைத்

தம்-இழ்	தவ்-இழ்
	தகு-இழ்

என்று வரையறுத்துள்ளார்.

இவற்றுள் மூன்றாவதாக உள்ள மூல வடிவத்தின் வேர்ச்சொல்லான 'தகு' என்பதன் அடிப்படையிலேயே 'சரியான, பொருத்தமான, நேர்த்தியரன' எனும் பொருள் விளக்கம் தந்துள்ளார். இறுதியாகத் 'தமிழ்' எனும் சொல் லிற்குப் 'பொருத்தமான முறை'[27] என்பதே பலவகையா லும் பொருந்திவரக் கூடிய பொருள் என்றும் அவர் தெளி வுறுத்தியுள்ளார்.

அறிஞர் வெலபிலின் முதற் கருத்து முப்பது ஆண்டு

களுக்கு முன்னரே, மொழிஞாயிறு தேவநேயப் பாவாண ரால், தமிழில் எடுத்துரைக்கப்பட்டதாகும்.

இதனை வெலவில் கண்டதாகத் தெரியவில்லை. ஆனால் பாவாணருடைய கருத்தை ஆங்கிலத்தில் தம் கருத்தாக வெளியிட்ட ஒரு அறிஞரின் கட்டுரையையே, டாக்டர் கமில் கண்டுள்ளார். அந்த அறிஞரின் கருத்தைத் தழுவி, தம் முதற் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இரண்டாவது கருத்து அவருக்கே உரியது. ஆனால், அக்கருத்தும் 'மனப்பதிவு முறை'யில் அமைந்ததாகவே தோன்றுகிறது. டாக்டர் வெலபிலின் 'மீட்டுருவ' ஆராய்ச்சி யினால், 'தமிழ்' எனும் சொல் தமிழிற்கே உரியது என் பதும், மூலத் திராவிட மொழியிலும் அதன் பண்டை வடிவம் 'தம் + இழ்' என்னும் அமைப்பாகவே இருந்திருக்க வேண்டும் எனும் உண்மை வெளிப்படுகிறது.

சொல்லும் பொருளும்

'தமிழ்' எனும் சொல், தொல்காப்பியனார் காலம் முதல் இன்றுவரையில், தமிழ் இலக்கண இலக்கியங்களில் பல்வகைப் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. அவற்றுள் முதன்மையானவற்றைக் கால வரன்முறைப்படி இங்குக் காண்போம்.

(அ) பழந்தமிழ் நூல்களில்

தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களில் இச் சொல் மொழி, நாடு, மக்கள், மூவகைத் தமிழ், அகப் பொருள் — களவியல் எனும் ஐவகைப் பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

(அ) மொழி

"'தமிழ்' என் கிளவி" (தொல். எழுத். 386)
"செந்தமிழ் நிலம்" (தொல். சொல். 398)
"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்து"
(தொல். சொல். 400)
"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்"
(பத்து. சிறு. 66)

''அதுஉம் சாலும் நல்தமிழ் முழுதறிதல்''
(புறநா. 98)

(ஆ) நாடு

''தமிழ் கூறும் நல்லுலகம்'' (தொல். சிறப். பா.)
''தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்
(புறநா. 51)
''வையக வரைப்பில் தமிழகம் கேட்ப''
(புறநா. 168)
''இமிழ்கடல் வரைப்பில் தமிழகம் அறிய''
(சிலப். கா. 35)

(இ) மக்கள் (வீரர்)

''தமிழ்தலை மயங்கிய தலையாலங்கானம்''
(புறநா. 19)
''தண்தமிழ் செறித்துக்'' (பதிற். 63)
''தாதின் அனையர் தமிழ்க்குடிகள்'' (பரி.திர. 8:5)
''அருந்தமிழாற்றல்'' (சிலப். 23:63)

(ஈ) மூவகைத் தமிழ்

(உ) அகப்பொருள் — களவியல்

''தள்ளாப் பொருளியல்பின் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார் இக் குன்று பயன்'' (பரி. 9)

இவ்வகைப் பொருள்களில் அல்லாமல், சங்கப்பாடல்களில் 'தமிழ்' எனும் சொல், அடைமொழியாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவை, பாடல் இயற்றிய புலவரைக் குறிப்பிடும் கொளுக்களில் காணலாம்.

மதுரைத் தமிழ்க்கூத்தனார் (புறநா. 334)
மதுரைத் தமிழ்க் கூத்தன் நாதன் தேவனார்
(அகநா. 164)
மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன் மன்றனார்
(அகநா. 256)

இந்த அடைமொழிகள் 'தமிழ்' நாட்டிற்கேயுரிய கூத்துக்கலை எனும் பொருளைத் தருவதோடு, 'ஆரியக்

கூத்தி'லிருந்து இது வேறுபட்டது எனும் கருத்தையும் புலப் படுத்துகிறது.

(ஆ) பிற்கால இலக்கிய வழக்கு

சங்க காலத்திற்குப் பிறகு, 'தமிழ்' எனும் சொல்லின் பொருள் விரிவடையலாயிற்று. இதனால், பலவகையான புதிய பொருள்களிலும் இச்சொல் வழங்கப்படலாயிற்று.

இனிமையும் தண்மையும்

''தண்டமிழ்ப் பாவை'' (மணி. பதிகம் 25)
''இனிமையும் நீர்மையும் தமிழ்என லாகும்''
(பிங்கல. 3610)
''இன்றமிழ் இயற்கை இன்பம்'' (சீவக. 2063)
''வண்டு
தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே''
(கம்ப. ஆர. பம்பை. 29)
''ஊறும் இன்றமிழ் எனுமினிய தீஞ்சொல் தையல்''
(கம்ப.)
''கோவை இன்தமிழ்'' (நாலா. திவ். 1480)
''அருந்தீந் தமிழ் மொழிந்தார்'' (திருவிளை. 55)
''இனிய தமிழ் பகர்வோனே'' (திருப்புகழ். 342)
''தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்சுவையே''
(குமரகுரு. பிர. 62.105)
''மெய் வண்ண ஒத்துமுறைத் தீந்தமிழ்''
(காஞ்சிப்புரா. தழுவக். 246)

அகப்பொருள் — களவியல்

''இந்நூல் என்னுதலிற்றோ வெனின்
தமிழ் நுதலியது என்பது''[28]

இறையனார் களவியல் உரையின் தோற்றுவாய்.

மாணிக்கவாசகரும்.

''உயர்மதில் கூடலில் ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந் தனையோ'' (திருக்கோ. 20)

எனும் செய்யுளில், 'அகப்பொருள் மரபினையே, 'தீந்தமிழ்' என்று சுட்டியுள்ளதாகக் கருத இடமுண்டு.

பிற்கால இலக்கண நூலான யாப்பருங்கல விருத்தி யுரையில், 'தமிழியல் வழக்கு' எனும் பெயரால், இந்நெறி சுட்டப்படுகிறது. மற்றும் 'தமிழ்நெறி விளக்கம்' எனும் அகப்பொருள் இலக்கண நூலில், 'அன்பின் ஐந்திணை' ஒழுக்கமே, 'தமிழ்நெறி' என்று போற்றப்படுகிறது.[29]

இவை யாவும், 'தமிழ்' எனும் சொல் பரிபாடல் காலம் முதல், 'அகப்பொருள்' எனும் பொருளில் வழங்கி வருவ தைப் புலப்படுத்துகின்றன.

இந்த வகையான இலக்கிய வழக்காறுகளைக் கருத்தில் கொண்டு, தமிழ் 'லெக்சிகன்' பின்வரும் பொருள்களைத் தமிழ் எனும் சொல், புலப்படுத்துவதாகத் தெரிவிக்கிறது.

(1) இனிமை, *(2)* நீர்மை, *(3)* முத்தமிழ், *(4)* தமிழ் இலக்கியம், *(5)* தமிழர், *(6)* தமிழ்நாடு, எனும் அறுவகைப் பொருள்களையே தருகிறது. இவற்றோடு, 'அகப்பொருள்—களவியல்' எனும் பொருளையும் சேர்த்து, பண்டைக்காலம் முதல் ஏழு வகையான பொருள்களில், 'தமிழ்' எனும் சொல் வழங்கப்பட்டு வருவதாகக் கூறலாம்.

இந்த எழுவகைப் பொருள் அல்லாமல், இக்கால ஆராய்ச்சியாளர், அச்சொல்லைப் பகுதி விகுதியாகப் பகுத்து, 'தம்முடைய—தமக்கே சொந்தமான மொழி' என வும்,[30] 'பொருத்தமான, சரியான, நேர்த்தியான ஒலி'[31] எனவும் பொருள் கொண்டுள்ளதை முன்னரே கண்டோம்.

தம் + இல்—தமது வீடு எனும் பொருள் அடிப்படை யில் வீட்டையும், வீட்டில் பேசப்படும் மொழியையும் தமது நாட்டையும் நாளடைவில் குறிக்கப்பயன்பட்டு இருக்கலாம். இந்த முறையில் காலப்போக்கில் நாட்டில் வழங்கும் மொழி யையும் சுட்டுமாறு, பயன்படுத்தப்பட்டு இருக்கலாம் எனும் பாவாணரின் கருத்தே பொருத்தம் உடையதாகத் தோன்று கிறது. இவ்விரிந்த பொருளில் இச்சொல் வழங்கத் தலைப் பட்ட காலத்தில் 'இல்' எனும் விகுதி, 'இழ்' எனும் விகுதி யாகத் திரிந்து,[32] இழுமெனும் ஒலியைப் புலப்படுத்துவ தாக அமைந்து இருக்கலாம் எனும் பாவாணரின் கருத்து, ஆழ்ந்த சிந்தனைக்குரியதாகும். இதே கருத்தைப் பேராசிரி யர் ஏ. எஸ். நாராயணசாமி நாயுடு, வேறுவகையாக ஆராய்ந்து, வெளியிட்டுள்ளார்.

'த + மிழ்' எனக் கொண்டு, தமக்குச் சொந்தமான உற்றார் உறவினரை (தமர்)த் 'த' சுட்டுவதாக அவர் விளக்கியுள்ளார்.

'மிழ் மிழற்று மழ மழலை மொழி' என மாறியும் திரிந்தும் வளர்ந்து இருக்கலாம் என்பது அவருடைய கருத்து. இந்த இரு விளக்கத்தின் அடிப்படையில், பையப்பையத் 'தமிழ்' எனும் சொல், **நம்முடைய மொழி** எனும் பொருளைப் பயக்கும் நிலையை அடைந்திருக்கக் கூடும் என்பது அவருடைய துணிவாகும்.[33]

வருங்காலத்தில் செய்யப்படும் ஆராய்ச்சி, 'நம்மொழி' எனும் இவ்விரு அறிஞர்களின் கருத்தை வலிவும் பொலிவும் பெற்று வீறுடன் விளங்குமாறு செய்யும்.

குறிப்புகள்

1. வில்லிபாரதம், சிறப்புப்பாயிரம்.
2. தேனருவி, ப. 9.
3. Ency. Britannica, Vol. 22, p. 647.
4. The Census of India, Pt. 3: P. 286.
5. தமிழ்நாட்டு வரலாறு, தொல்பழங்காலம், ப. 166.
6. சி. வை. தாதோதரம்பிள்ளை, தாமோதரம், ப. 3.
7. K. N. Sivaraja Pillai, 'Derivation of the term Tamil', Tamilayvu, No. 9, p. 23.
8. The 'Sacred' Kural, Intro. P. 16.
9. மேற்படி.
10. தமிழ் மொழி வரலாறு, ப. 3.
11. இலக்கிய இன்பம், பக். 10-12.
    இதனைத் 'தமிழுக்கு அமுதென்று பேர்' எனப் பாவேந்தர் பாடி யுள்ளார். காண்க 'இசையமுது'.
12. தமிழின் சிறப்பு, ப. 5.
13. திருவருட்பா, பகுதி-2, ப. 276.
14. பூபாலப்பிள்ளை, மு.கு.நூ., பக். 7-9.

15. மறைபொருள் விளக்கம், பக். 7-10.

16. பூபாலப்பிள்ளை, மு.கு. நூலில் மேற்கோள், பக். 16-18.

17. சபாபதி நாவலர், திராவிட பிரகாசிகை, ப. 18.

18. பிரயோக விவேகம், பக். 127-28.

இதே கருத்தினை டாக்டர் கால்டுவெலும், திரு. எம். சீனிவாச ஐயங் காரும் கூறியுள்ளனர். பின்னர் இதைக் காண்போம்.

19. திராவிட பிரகாசிகை, பக். 12-15.

20. இதனைச் 'சொல்லும் பொருளும்' எனும் பகுதியில் விரிவாகக் காணலாம்.

21. பூபாலப்பிள்ளை, தமிழ்மொழி வரலாறு, பக். 18-20.

22. K. N. Sivaraja Pillai, மு.கு.நூ. பக். 30-31.

23. மொழிநூல், பக். 3-5.

''ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர்'' எனத் தொடங்கும் பழம்பாடல் இவருடைய கருத்துக்கு ஆதாரமாக அமைந்ததாகும்.''

24. Dravidian Etymological Dictionary, p. 199.

25. Kamil, V. Zvelebil, 'The Term Tamil' in the IJDL, Vol. 15: No. 1, Jan. 1986.

26. மேற்படி, ப. 9.

27. Kamil V. Zvelebil, Op.Cit., p. 9.

28. இறையனார் அகப்பொருள் உரை, ப. 14.

29. இதன் விளக்கத்தை மயிலை சீனி. வேங்கடசாமியின் 'தமிழ்-அகம்'. எனும் கட்டுரையில் (தமிழியல் செப்டம்பர் 1973-ல்) காண்க.

30. G. Devaneyan, Op. Cit., P. 5.

31. அடிக்குறிப்பு 24-ஐக் காண்க.

32. G. Devanayan, BP. Cit. pp. 5-6.

33. A.S. Narayanaswami Naidu, An Explanation of the Term, Prof. A. S. Narayana- swami Naidu Commemoration Volume, p. 120.

பயன்பட்ட நூல்கள்

தமிழ்

1. இராகவையங்கார், ரா., தமிழ் வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1952.
2. இராமலிங்க அடிகள், திருவருட்பா 2 பகுதிகள், பாலகிருஷ்ணப் பிள்ளைப் பதிப்பு, சென்னை, 1941.
3. கடிகாசலம், ந., தமிழும் தமிழரும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1982.
4. கந்தையா பிள்ளை, ந. சி., தமிழ் இந்தியா, கழகம், சென்னை, 1959, (மறுபதிப்பு)
5. கார்த்திகேய முதலியார், மாகறல், மொழிநூல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1985 (மறுபதிப்பு)
6. கால்டுவெல், இரா., திராவிட மொழி—ஒப்பிலக்கணம், முன்னுரை; (தமிழா.) கா. அப்பாத்துரையார், கழகம், சென்னை, 1951.
7. கிருஷ்ணன், டாக்டர், ப., தமிழ்நூல்களில் தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்நாடு, இளந்தமிழர் பதிப்பகம், சென்னை, 1984.
8. சீனிவாசபிள்ளை, கே. எஸ்., தமிழ் வரலாறு, முதற் பாகம், வெற்றிவேற் பிரஸ், தஞ்சை, 1989.
9. சுப்பிரமணிய தீக்கிதர், பிரயோக விவேகம், சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சை, 1973.
10. சுப்பிரமணிய நாவலர், இராம., தமிழ் மொழி வரலாறு, தக்கலை, ஆ. இ.
11. தமிழ்நாட்டு வரலாற்றுக்குழு, தமிழ்நாட்டு வரலாறு, தொகுதி-1, தொல்பழங்காலம், தமிழ்நாடு அரசு வெளியீடு, சென்னை, 1975.
12. தாமோதரம்பிள்ளை, சி. வை., தாமோதரம், யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூல் விற்பனைக் கழகம், யாழ்ப்பாணம், 1970.
13. திருநாவுக்கரசு, க. த., 'இன மரபு வரலாறு'—தமிழ்நாட்டு வரலாறு—தொல்பழங்காலம், தமிழ்நாடு அரசு, சென்னை, 1975.

14. பாரதிதாசன், தமிழியக்கம், செந்தமிழ் நிலையம், இராமச்சந்திரபுரம், 1975.

15. பாரதிதாசன், தேனருவி, பாரதிதாசன் பதிப்பகம், புதுச்சேரி, 1956.

16. புத்தமித்திரனார், வீரசோழியம், கழகம், சென்னை, 1970. (மறுபதிப்பு)

17. பூங்காவனம், கு., உலக முதன் மொழி தமிழ், உ.த.நி., சென்னை, 1986.

18. மறைமலை அடிகள், தமிழ்த்தாய், பாரி நிலையம், சென்னை, 1957.

19. மீனாட்சிசுந்தரம், கா., (பதி.), தமிழியல் இதழ்-3, சென்னை, செப்டம்பர், 1973.

20. விசுவநாதம், கி.ஆ.பெ., தமிழின் சிறப்பு, பாரி நிலையம், சென்னை, 1969.

21. வீரபாகுபிள்ளை, எம்.இ., தமிழும்-தமிழரும், ஒற்றுமை ஆபீஸ், சென்னை, 1958.

22. வேங்கடசாமி, மயிலை, சீனி., 'தமிழ்-அகம்', தமிழியல் இதழ்— 3 செப்டம்பர், 1973.

23. வேங்கடசாமி, இரா., (பதி.), மொழியரசி, கழகம், சென்னை, 1976.

ஆங்கிலம்

24. Balasubramanian, C., (Ed.), Tamilayvu, Vol. 9, University of Madras, 1979.

25. Burrow, T., Emeneau, M.B., A Dravidian Etymological Dictionary, Clarendon Press, Oxford, 1965 (Reprint).

26. Chatterji, S.K., Dravidian, Annamalai University, Annamalai Nagar, 1965.

27. Devaneyappavanar, N., The Primary Classical Languages of the World, Nesamani Publishing House, Katpadi, Extension, First Edi. 1966.

28. Encyclopaedia Britannica, Vol. 21, 1972.

29. Grierson, G.A., (Edi.), Linguistic Survey of India, Vol. IV. Motilal Banarsidass, Delhi, 1973 (Reprint).

30. Heras, Father, Studies in the Proto-Indo Mediterranean Culture, Vol. I, Heras Institute. Bombay, 1953.

31. Irschick, Eugene, F., Politics and Social Conflict In South India, Oxford University Press, Bomaby, 1969.

32. Kanakasabhai Pillai, V., The Tamils 1800 years Ago, Kazhakam, Madras, 1956.

33. Lahovary, Dr. N., Dravidian Origins and the West, Orient Longmans, Madras, 1963.

34. Manickam Naicker, P.V., The Tamil Alphabet and its Mystic Aspect, Asian Educational Services, New Delhi, 1985.

35. Manickavasagam Pillai (Ed.), Professor A. S. Narayanaswami Naidu Commemoration Volume, G.V.N. College, Kovil Patti, First Edi. 1973.

36. Nilakanta Sastri, K. A., Cultural Contacts between Aryans and Dravidians, Manaktalas, Bombay, 1967.

37. Oppert, Gustav, The Dravidians, Asian Educational Services, New Delhi, 1988.

38. Pope. G.U., 'Sacred Kural', Asian Educational Services, New Delhi, 1960.

39. Purana Lingam Pillai, M.S., Tamil India, Kazhakam, Madras, 1965.

40. N. Sanjeevi, Earlist Reference to Tamil, Annals of the Oriental Research, Univ. of Madras, 1977, Vol. 27. P. 1-2.

41. Srinivasa Aiyangar, M., Tamil Studies, Asian Educational Services, New Delhi, 1982, (Reprint).

42. Subramanian, N., Pre-Pallavan Tamil Index, University of Madras, Madras, 1966.

43. Subramanian, S.V., The Word Tamil, 'Heritage of the Tamils — Language and Grammar', July, 1980.

44. Tamil Lexicon, Vol. III, University of Madras.

45. Venkatachari, P.N., 'Tamil'. The Cultural Heritage of India, Vol. V, Suniti Kumar Chatterji (Edi.), The Ramakrishna Mission Institute of Culture, Calcutta, 1978, (Reprint).

46. V. Zvelebil, Kamil., 'The Term Tamil' in IJDL (Ed.) V.I. Subramonian, DLA, Trivandrum, 1986.

14. தமிழ் நெடுங்கணக்கு

க. த. திருநாவுக்கரசு

மக்களினம் பெற்றுள்ள பேறுகளுள் ஒன்று மொழி. ஒலிகளை அறிகுறிகளாகக் கொண்டு கருத்துகளை உணர்த்துவது மொழி. கருத்துகளும், ஒலிகளும் உலகத்திற்குப் பொதுவானவை. அவற்றிற்கு இடையே தொடர்பினை அமைக்கும் அறிகுறிகள் எண்ணற்றவையாக உள்ளன. அவ்வறிகுறிகள், மொழிக்கு மொழி வேறுபட்டு விளங்குகின்றன. அவ்வறிகுறிகள், மொழிக்கு மொழி வேறுபட்டு விளங்குவதே, உலகில் பல்வேறு மொழிகள் தோன்றக் காரணமாய் அமைந்ததென்பர்.

ஆதிமனிதன், தெளிவற்ற தன் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சிகளையும் கருத்துகளையும் எத்தனையோ வகையான ஒலிகளின் மூலம் அறிவுறுத்த முயன்றான்; தெளிவற்றுக் குழம்பிக் கிடந்த கருத்துகளையும் ஒலிகளையும் பாகுபடுத்தி, தெளிவும் ஒழுங்கும் உடையனவாக அவற்றை வரையறுத்துக்கொள்ள ஆதிமனிதன் முயன்றான். அம்முயற்சியின் பயனாகத் தோன்றியதே மொழி. மொழியெனும் கருவி ஆதிமனிதனுக்குக் கிடைக்காமல் இருந்திருந்தால், அவனுடைய சிந்தனை வளர்ச்சியுற்றிருக்க முடியாது. அவன் எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் முன்னேற்றம் அடைந்திருக்க இயலாது.

மொழி பேச்சுமொழி, எழுத்துமொழியென இரு வகைப்படும். பேச்சு மொழியில் உள்ள ஒலிகளாகிய அறிகுறிகளுக்கு எழுத்து வடிவில் குறியீடுகள் அமைத்து, குறிப்பிட்ட ஒரு குறியீடு, குறிப்பிட்ட ஓர் ஒலியைத்தான் உணர்த்தும் என்று முடிவு செய்ததன் விளைவாகத் தோன்றியதே எழுத்து முறை. இன்று ஒரு மொழி பெற்றுள்ள சிறப்பிற்குக் காரணம், அதற்கு அமைந்த எழுத்து வடிவமேயாகும். நம் தமிழ்மொழியின் எழுத்துகள் அவ்வாறு அமைக்கப்பட்டனவேயாகும். நம்முடைய தமிழ்மொழி எழுத்துகளை நெடுங்கணக்கு என்னும் பெயரால் குறிப்பிடுவது மரபாகும்.

இந்நெடுங்கணக்கில் முப்பத்தோரெழுத்துக்களே அடிப் படை எழுத்துக்களாக அமைந்துள்ளன. அவை, பன்னீ ருயிரும், பதினெண் மெய்யும், ஓராய்தமுமாகும். இவை தமிழின் முதலெழுத்துகள் எனப்படும். இவ்வெழுத்துகள் பேச்சு மொழியில் வழங்கப்படும் ஒலிகளை விளக்கும் குறி யீடுகளாகும். தமிழ் மொழியின் ஒலிகளையும் அவற்றின் குறியீடுகளாகிய எழுத்து அமைப்பினையும் ஆராய்ந்த பரிதி மாற்கலைஞர், "தமிழெழுத்துக்கள் முப்பத்தொன்றேயாகத் தமிழொலிகள் அவற்றினும் மிகுகின்றன... ஒவ்வோ ரொலிக்கும் ஒவ்வோரெழுத்திருத்தலே நியமம். அவ்வா றன்றி, ஓரெழுத்தால் இரண்டு மூன்று ஒலிகளைக் குறித்தல் நேரிதன்று. அது பாஷையின் குறையே. தமிழின்கண் நாற்ப தொலிகளிருப்பவும், அவற்றை வரிவடிவிற் குறித்தற்கு முப்பத்தோரெழுத்துக்களேயுள. முப்பத்தோரெழுத்துக்களுக்கும் முப்பத்தோரொலிகள் போக, மிகுதியான ஒன்பதொலி களுக்கும் ஒன்பது தனி வேறெழுத்துக்களின்மை தமிழ் மொழிக்குக் குறைவாமாறு காண்க"[1] என்று குறிப்பிட் டுள்ளார்.

மற்றும் சுப்பிரமணிய பாரதியார், "ஸம்ஸ்க்ருதம், ஹிந்தி, பெங்காளி, மஹாராஷ்ட்ரம், குஜராத்தி, தெலுங்கு, கன் னடம், மலையாளம் முதலிய மற்ற பாரத பாஷைகளிலெல் லாம் வர்க்க எழுத்துக்கள் உண்டு.

அதாவது, க-ச-ட-த-ப என்று ஐந்து வல்லெழுத்துக்களில் ஒவ்வொன்றுக்கும் நான்கு வேறுபாடுகள் இருக்கின்றன. திருஷ்டாந்தமாக:

வடசொல்	**பொருள்**
1. பரம்	**மேலானது**
2. பலம் (ப = Ph)	**பயன்**
3. பலம் (ப = b)	**வலிமை**
4. பாரம் (ப = bh)	**சுமை**

வெவ்வேறு எழுத்துக்களை முதலாகக் கொண்ட இந்த நான்கு சொற்களையும் தமிழில் வழங்கி வருகிறோம். ஆனால், "எல்லி செட்டி லெக்க ஏகலெக்க" என்பது போல் எல்லாவற்றிற்கும் ஒரே "ப"தான் போடுகிறோம்"[2] என்று வருத்தம் தெரிவித்துள்ளார்.

இவர்களுடைய கருத்துகளை மொழியியல் கண்கொண்டு ஆராய்ந்து பார்ப்போமானால், இவர்கள் இவ்வாறு வருத்தப் பட வேண்டிய தேவையில்லை என்பது புலனாகும்.

தமிழில் மெல்லெழுத்துகளுக்குப் பின்னே யடுத்து வருகின்ற வல்லெழுத்துகளெல்லாம் தம் வல்லோசையிழந்து, தாமும் மெல்லோசையுடையனவாகின்றன.

எடுத்துக்காட்டு: (1) கத்தி, பக்கம் என்னும் சொற்களில் ஒலிக்கப்படும் 'க'கர ஒலிக்கும், பங்கு, தங்கை எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'க'கர ஒலிக்கும் இடையே வேறுபாடு காணப்படுகிறது. (2) சுக்கு, தச்சன் என்னும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ச'கரத்திற்கும், பஞ்சு, கஞ்சி எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ச'கரத்திற்கும் இடையே ஒலி வேற்றுமை உள்ளதை நாம் உணரலாம். (3) கடி, தட்டி என்னும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ட'கரத்திற்கும், வண்டு, கெண்டை எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ட'கரவொலிக்கும் இடையே வேற்றுமை காணப்படுகிறது. (4) தகுதி, அத்தை எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'த'கரத்திற்கும், வந்தாள், தந்தை எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'த'கரத்திற்கும் இடையே ஒலி வேறுபாடு உள்ளதை உணரலாம். (5) படி, தப்பு எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ப'கரத்திற்கும், தம்பி, இன்பம் எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ப'கரத்திற்கும் இடையே ஒலி வேற்றுமை இருப்பதைக் காணலாம். (6) மறுப்பு, பற்று எனும் சொற்களில் ஒலிக்கப்படும் 'ற'கரத்திற்கும், அன்று, பன்றி எனும் சொற்களில் வழங்கப்படும் 'ற'கரத்தின் ஒலிக்கும் இடையே வேறுபாடு இருப்பதைக் காணலாம். மேற்கண்ட எடுத்துக்காட்டுகளினால் வல்லெழுத்துகள் ஆறும், தம்மோசையாறும், பிறவோசையாறும் உடையனவாகக் காணப்படுகின்றன. இதுமட்டுமல்லாமல் 'உகுதல்', 'பசித்தான்', 'படர்ந்தது', 'பதிவு', 'செய்பவன்' என்ற சொற்களில் முறையே க, ச, ட, த, ப-க்கள் தம்மோசையின் வேறுபாடுடையனவாக ஒலிக்கப்படுகின்றன. இவ்வைந்து சொற்களில் மூன்றாவதிலும் நான்காவதிலுமுள்ள ட,த, ஓசைகள், முற்கூறிய மெல்லோசைகளேயாக, எஞ்சிய மூன்று சொற்களிலுமுள்ள க,ச,ப ஓசைகள் வேறு புத்தொலிகளாக உள்ளமை ஒலித்துப் பார்த்தால் எளிதில் புலனாகும்.[3]

எனவே, முதலில் கண்ட மிகையான ஆறு ஒலிகளோடு இம்மூன்று ஒலிகளையும் சேர்த்துக் கணக்கிடுவோமானால்,

'ஒன்பது' புதிய ஒலிகள் தமிழில் வழங்கப்படுவதைக் காண லாம். இவற்றைத் தனித்தனியாக எழுதிக் காட்டுவதற்குத் தமிழில் தனி எழுத்து வடிவங்கள் இல்லை. இது தமிழ் மொழி எழுத்து முறையில் காணப்படும் குறைபாடு என்பது பரிதிமாற் கலைஞர், பாரதியார் முதலியோரின் கருத் தாகும். இதே கருத்தினைத் தற்கால மொழியியல் அறிஞ ரான டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி அவர்களும், ''தமிழ் மொழியின் எழுத்துமுறை இந்தியாவின் எழுத்து முறைகள் அனைத்திலும் மிகுந்த குறைபாடுடைய எழுத்து முறை யாகும்''[4] என்று மொழிந்துள்ளார்.

மேற்கண்ட மூவகைக் கருத்துகளும் ஓர் உண்மையை உணர்த்துகின்றன. வடமொழியிலும், பிற திராவிட மொழி யிலும் உள்ளதைப் போன்று, தமிழிலும் 'கசடதபற' ஆகிய எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் இனவெழுத்துகள் பல இல்லை என்னும் கருத்தினையே இந்த அறிஞர்கள் இவ்வாறு எடுத்தியம்பியுள்ளனர் என்பது பெறப்படுகிறது.

அவர்கள்,	க	(K)	g-வையும்
	ச	(c)	j-வையும்
	ட	(t)	d-வையும்
	த	(t)	dh-வையும்
	ப	(p)	b-வையும்
	ற	(r)	tr-வையும்

உணர்த்துவதற்கு ஒரே எழுத்தைத் தமிழ்மொழி பயன்படுத்தி வருகின்றது என்பதையே சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தமிழ் மொழியின் குறையென்று கூறுவது தற்கால மொழியாராய்ச்சிக்குப் பொருந்தாக் கூற்றாகும். ஒரு மொழி யில் வழங்குகிற எல்லா ஒலிகளுக்கும் எழுத்து வடிவம் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லையென்பது ஒலி யனியல் (Phonemics) ஆராய்ச்சியால் அறியப்படும் உண்மை யாகும். ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளை, அம்மொழி யைப் பேசும் மக்கள், நனவிலி நிலையிலேயே இயல்பான முறையில் வரையறுத்து, குறிப்பிட்ட சில அமைப்புகளாக வகுத்துப் பயன்படுத்துகின்றனர். அவற்றை நாம் ஒலி யன்கள் (Phonemes) என வழங்குகிறோம். அவற்றுள் ஓர் ஒலியளவு, மிகச் சிறிய வேறுபாடுடைய எண்ணற்ற நுட்ப

மான துணை ஒலிகளையுடையதாக இருக்கலாம். அவை, ஒலியியலில் (Phonetics) நன்கு பயிற்சி பெற்ற வேற்று மொழியாளருக்கு எளிதில் புலனாகக் கூடியனவாகவும் இருக்கலாம். ஆனால் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களுக்கு ஓர் ஒலியளபிற்கு நுட்பமான பல துணை ஒலிகள் (எ-டு. சகரம் C.Ch, S, J — ஆகிய ஒலிகளாக ஒலிக்கப்படுவது) தங்கள் மொழியில் வழங்கப்பட்டு வருவது தெரியாமலும் இருக்கலாம். ஒரு மனிதன், தன்னுடைய மொழியில் உள்ள ஒலியன்கள் ஒவ்வொன்றிற்கும் நுட்ப மான பல துணை ஒலிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதை அறிய வேண்டுமென்றால், அவன் ஒலியியலில் சிறிதாகிலும் பயிற்சி பெற்றாக வேண்டும். இதற்கு மாறாக, அம்மனிதன் தன்னுடைய மொழியில் ஓர் ஒலியனுக்கு எத்தனை நுட்பமான துணை ஒலிகள் உள்ளன என்பதைப் பற்றிக் கவலைப்படாமலேயே, அம்மொழியை எளிதில் பேச முடியும்; எழுதவும் முடியும். அவன் தன்னுடைய மொழியில் வழங்கும் வேற்றுமை மிக்க பல்வேறு ஒலிகள் யாவை என்பதை அறிந்துகொண்டால் மட்டும் போதும் என்று நினைப்பது இயற்கை. என்வே, மக்களால் எளிதில் புரிந்து கொள்ளக் கூடியதாகவும், தெளிவாகப் பயன் படுத்தக் கூடியதாகவும் அமைவது ஒலியனியல் முறைப்படி அமைக்கப்படும் எழுத்து முறையேயாகும். ஒலியனியல் எழுத்து முறையில், நுட்பமான பல துணை ஒலிகளைக் கொண்ட ஒலியளபினைக் குறிப்பிடும் அறிகுறியாக ஓர் எழுத்தே பயன்படுவதைக் காணலாம்.

இங்கு 'ஒலியன்' (Phoneme) என்று வழங்கப்படுவது "ஒரு மொழியில் வழங்கிவரும் ஒலிகள் அல்ல. அவை ஓர் ஒலியின் நுட்பமான துணை ஒலிகள் பலவற்றின் பிரதிநிதி யாகும்: மோட்டார்கார் ஓட்டுபவர் சிவப்பு எச்சரிக்கைக் குறியைக் கண்டவுடன் தம்முடைய வண்டியை நிறுத்து வதற்குப் பயிற்சி பெற்றிருப்பதைப் போன்று, குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசும் மக்கள், அம்மொழியின் ஓர் ஒலிக்கு வழங்கும் நுட்பமான துணையொலிகளைப் பற்றிக் கவலைப்படாது, அவ்வொலியின் பல்வேறு இயல்புகளை யும் நன்கறிந்திருப்பர். கார் ஓட்டுபவர் தமக்கு முன் காட்டப் படும் சிவப்பு எச்சரிக்கைக் குறி மின்சார விளக்கா, கை விளக்கா, கொடியா என்பதைப் பற்றியெல்லாம் கவலைப்

படாததைப் போன்று, குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசும் மக்களும் அம்மொழியில் வழங்கும் ஒலிகளை எளிதில் கண்டறியும் ஆற்றலும், பயிற்சியும் பெற்றிருப்பதோடு, குறிப்பிட்ட ஓர் ஒலியனின் நுட்பமான துணை ஒலிகளைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.[5]

இம்மொழியியல் உண்மையினைக் கருத்தில் கொண்டு நாம் தமிழ் மொழியின் எழுத்து முறையினை நோக்குவோ மானால், க, ச, ட, த, ப, ற என்னும் எழுத்துக்கள் இரண் டிரண்டு ஒலிகளையுடையனவாக விளங்குவது துணைநிலை வரவு முறையிலேயே (Complementary distribution) யொழிய, வேற்றுநிலை வரவு முறையில் (contrasting distribution) அன்று என்பது புலனாகும்.

எ-டு.

கமம்

= 'K' ஒலி

கடல்

பங்கு

= 'G' ஒலி

தங்கை

மேற்கண்ட முதல் பிரிவில் ககரம் மொழிக்கு முதலில் வருகிறபொழுது, தன்னுடைய இயல்பு குன்றாத ஒலியுடன் ஒலிக்கப்படுவதைக் காணலாம். இரண்டாம் பிரிவில் ககரம் தன்னுடைய இயல்பு குன்றியதாக ஒலிக்கப்படுகிறது. அதாவது ககரம் ஒரு சொல்லிற்கு இடையில், மெல்லினத்தை (மூக் கின மெய்யை) அடுத்து வரும்பொழுது ஒலிப்புடைய ஒலி யாக (voiced sound) — க (g)-வாக ஒலிக்கப்படுகிறது. ககரத் தின் இருவேறு ஒலிகளுள் ஒன்றுதான் பண்டைத் தமிழ் மொழியில், மொழிக்கு முதலில் வழங்கியது. அதைப் போன்றே ஒரு சொல்லின் இடையிலும் இருவகை யொலி யும் ஒருங்கே வருவதில்லை. வேறு வகையாகச் சொல்லுவ தென்றால், ககரத்தின் ஓர் ஒலி வருமிடத்தில், மற்றோர் ஒலி வருவது கிடையாது. அதுமட்டுமல்லாமல், ககரம் (k) க்கரமாக (g) ஒலிக்கப்படுவதனால் பொருள் வேற்றுமையும் உண்டாவதில்லை. எனவே, இருவேறு ஒலிகளையும் உணர்த்த, ககரத்தையே ஓர் எழுத்தாகப் பயன்படுத்துவதனால், ஒலி

யமைப்பில் எத்தகைய குழப்பமும் உண்டாவதில்லை. இதைப் போன்றே, பிற வல்லின எழுத்துகளும் இருவேறு ஒலிகளை யுடையனவாக ஒலிக்கப்பட்டாலும், அவை ஓர் எழுத்தி னாலேயே எழுதப்பட்டு வருகின்றன. இச்சிறு விளக்கத் தினால் சில அறிஞர்கள் கருதியதைப் போன்று, தமிழ் மொழியில் வல்லின ஒலிகள் பன்னிரண்டு இருக்கவும், அவற்றை ஆறு எழுத்துகளினால் குறிப்பது நேரிதன்று என்று நாம் கருதத் தேவையில்லை என்பது புலனாகும்.

மேலும், க, ச, ட, த, ப-க்கள் வேறுசில ஒலிகளை உடையனவாக உள்ளன என்று அவர் மொழிந்துள்ளார். தற்காலத்தில் தமிழ் மொழியின் ஒலியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர் பிர்த்து (Firth) என்பனவர் ககரம் மட்டும் ஆறு வகையாக ஒலிக்கப்படுவதை நுட்பமாக ஆராய்ந்து தெரிவித்துள்ளார்.

1) மொழிக்கு முதலில் வரும் ககரம் 'k'-வாக ஒலிக்கப் படுகிறது. (எ-டு.) கல்.

2) மொழிக்கு இடையிலும், 'ர்'-ஐ அடுத்தும், இரட் டித்தும் ககரம் வருகிறபொழுது 'k'-வாக ஒலிக்கப் படுகிறது. (எ-டு.)பக்கம், தீர்க்க

3) ஙகரத்தை அடுத்துக் ககரம் வரும்பொழுது அது 'g'-யாக ஒலிக்கப்படுகிறது. (எ-டு.) நாங்கள்

4) மொழிக்கு இடையில் தனித்து வரும் இடங்களில் ககரம் x-ஆக ஒலிக்கப்படுகிறது. (எ-டு.) மகன்

5) மொழிக்கு இடையில் இகரத்தை அடுத்துக் ககரம் வரும்பொழுது அது c-யாக ஒலிக்கப்படுகிறது. (எ-டு.) அருகி

6) மொழியின் இறுதி அசையில் அகரம் அல்லது உகரத்தைத் தொடர்ந்து ககரம் வருமானால் அது s-ஆக உச்சரிக்கப்படுகிறது.

இதைப் போன்றே, மற்ற வல்லின எழுத்துகளும் பல் வேறு நுட்பமான ஒலிகளையுடையனவாக ஒலிக்கப்படுகின் றன. ஆயினும், "இந்த ஒலிகளுக்கு இடையே காணப்படும் வேற்றுமைகளைச் சுட்டிக்காட்டும் வகையில் தமிழ் எழுத் துகள் அமைக்கப்படாமை போற்றத்தக்கதாகும். ஒலியனைப்

பற்றிய கொள்கை பண்டைக் காலத்தில் உருவாக்கப்பட வில்லை யென்றாலும், தமிழ் மொழியின் எழுத்துக்களை முதன்முதல் வகுத்துத்தந்த பண்டைத்தமிழ் அறிஞர்கள் ஒலி யனைப் பற்றிய மிகத் தெளிவான கருத்துடையவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பது அவர்கள் தமிழ் மொழி வழக்கிற்குப் பொருத்தமான முறையில் எழுத்து முறையை அமைத்திருப்பதால் தெரியவருகிறது''[6] என்னும் கருத்து களைக் கருதுவோம்.

ஆகவே, பண்டைத் தமிழ்ச் சான்றோர்கள் அன்றைய தமிழ் மொழியின் ஒலிகளை, நுட்பமாக ஆராய்ந்து எழுத்து களை வகுத்தபோது, அவர்களுடைய தேவைக்கு ஏற்றவாறு, எழுத்துகளை அமைத்துக்கொண்டனர் எனக் கருதுவதே சாலவும் பொருத்தமுடையதாகும். அதை விட்டுவிட்டு, தமிழ் மொழியின் எழுத்துகளை இந்தியாவில் வழங்கும் பிற மொழி எழுத்துகளோடு ஒப்பிட்டுப்பார்த்து, 'பிற மொழி களுள் ஒவ்வோரொலிக்கும் ஒவ்வோரெழுத்து இருக்கிறதே, தமிழ் மொழியில் அவ்வாறு இல்லையே' என்று வருந்த வேண்டிய தேவையுமில்லை; அல்லது 'அது தமிழ் மொழி யின் குறையே யாகும்' என குறையாகக் கருதத் தேவையு மில்லை என்பதை, இன்று வளர்ந்துவரும் மொழியியல் ஆராய்ச்சி நமக்கு எடுத்துரைக்கிறது. ''அந்தந்த மொழிக்கு உரிய ஒலியன்களை மட்டும் ஆராய்ந்து, அவற்றிற்கு ஏற்ற வரிவடிவங்களை அமைத்துக்கொண்ட முறை இந்திய நாட்டு மொழிகளில் காணப்படும் தனிச்சிறப்பாகும்''[7] என்று மேலைநாட்டு மொழியியல் அறிஞர்கள் பாராட்டுகிறபொழுது, நாம் நம்முடைய நெடுங்கணக்கின் அமைப்பு முறையில் காணப்படும் சிறப்பியல்புகளை இன்னும் உணர்ந்து போற்றத் தயங்குவது அறமாகாது.

குறிப்புகள்

1. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழி வரலாறு, ப. 70.
2. பாரதி புதையல், முதல் பாகம், ப. 66.
3. வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார், தமிழ்மொழி வரலாறு, ப. 70.

4. "The (Tamil) alphabet most incomplete of all Indian alphabets, indicates the sound-system of old Tamil of about the middle of the first millenium A.D." — Languages and Literatures of Modern India, p. 64
5. L. Bloomfield, Language, p. 80
6. Daniel Jones : The Phoneme, Its Nature and Use, p. 23
7. E.H. Sturtevant : An Introduction to Linguistic Science, p. 16.

15. தமிழும் மலையாளமும்

க. த. திருநாவுக்கரசு

திராவிட மொழிகளை, மூவகையாக மொழி இயல் அறிஞர் பாகுபடுத்தியுள்ளனர். அவற்றுள், நம் தமிழ் மொழியைத் 'தென் திராவிட மொழிக் குழு'வில் அவர்கள் சேர்த்துள்ளனர். தென் திராவிட மொழிகளுள், தமிழோடு மிகவும் நெருக்கமான உறவு உடையது மலையாள மொழி. இந்த உறவினை ஆராய்ந்த அறிஞர் பலர், மலையாளத் தினைத் தமிழின் கிளை மொழியாக—சேய்மொழியாகவே கருதியுள்ளனர்.[1] தங்கள் கருத்திற்குத் தக்க சான்றுகள் பல வற்றை, அவர்கள் காட்டியுள்ளனர்.

தமக்கையும் தங்கையும்

ஆனால், சென்ற ஐம்பதாண்டுகளாக மலையாள மொழி ஆராய்ச்சியில், கேரள நாட்டுத் தோழர்கள் பேரீடு பாடு காட்டி வருகின்றனர். அவர்களுள் சிலர், 'தமிழை விடப் பழமையானது மலையாள மொழி; மலையாள மொழியின் இயல்புகளில் பல, பழைய தமிழில் காணப்பட வில்லை. எனவே தமிழிற்குத் தமக்கையாகவே மலையாள மொழியைக் கூறவேண்டும்' என்பர்.[2]

சிறப்பாக இராமசரிதம் என்னும், மலைநாட்டுத் தமிழ் மொழி நூலை, ஆராய்ந்த அறிஞர், தெரிவித்துள்ள கருத்துகளைக் காண்போம்.

1. கேரளத்தில் வாழ்ந்தவந்த மக்கள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழையே பேசிவந்தனர் என்றும், அந்தத் தமிழிலிருந்தே மலையாளம், பையப்பைய வளர்ச்சி அடைந்தது என்றும் கூறுவது, உண்மைக்கு மாறான செய்தி யாகும். மலையாளம் தமிழிலிருந்து தோன்றியது என்பதற்கு வரலாற்றிலோ, நில நூலிலோ அடிப்படைச் சான்றுகள் கிடையா.[3]

2. பழைய உறவுமுறை உருவகப் பெயரைப் போற்றிப் பின்பற்றினால், தாய்வீட்டினை மிகப் பழங்காலத்திலேயே

விட்டு விலகிய குடும்ப உறுப்பினர்களுள், மலையாளம் ஒன்று எனக் கூறலாம். இவ்வகையில், தமிழிற்கு மலையாள மொழி, தமக்கையாகும். அவள் தனித்தும், புறக்கணிக்கப் பட்டும் வாழ்ந்து வந்தாள். அக்காலத்தில், தங்கையாகிய தமிழ், வாழ்வும் வளமும் பெற்றுச் செல்வாக்கு மிக்க வளாகச் சிறப்புற்றாள். எனவே, சில நூற்றாண்டு இடை யீட்டுக்குப் பிறகு, அவர்கள் திரும்பச் சந்தித்த பொழுது, தங்கை இயற்கையாகவே உயர்ந்த நிலையையும், சிறப்பான இடத்தையும் போற்றத்தக்க தகுதியையும் பெற்றிருந்தாள்.

இத்தகைய ஆற்றல்மிகு இயல்புகளால், தமக்கையான மலையாள மொழியினைச் சிறப்பற்றவளாகத் 'தமிழ் எனும் தங்கை' செய்து விட்டாள்... ஆயினும், பழைய தாயின் (மூலத்திராவிட மொழியில்) சிறந்த பண்புகளை, மிகச் சிறந்த முறையில் போற்றிக்காத்து வருபவளாக இன்றும் இருந்து வருபவள் இந்த மூத்த சகோதரியே ஆவாள்[4] என்பர்.

வரலாறு உணர்த்தும் உண்மை

இக்கருத்துகளின் வன்மை மென்மைகளை, இப்பொழுது ஆராய்வோம்.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சேர (கேரளா) நாட்டில் தமிழ்மொழி பேசப்படவில்லை என்பது தமிழக வரலாற்றின் அடிப்படையை மாற்ற முயலும் செயலாகும்.

கி.பி. பத்தாம் நூற்றாண்டு வரை, வடவேங்கடம் முதல் தென்குமரி வரையில் வழங்கிய மொழி, தமிழ் என்பதில் இதுவரை இருவேறு கருத்துகள் இருந்ததில்லை. கிழக்கிலும் மேற்கிலும் கடல்களே எல்லைகளாக இருந்துவந்தன. இந்த எல்லைகளில் உண்டான மாற்றத்தை முதன்முதலாக, நன் னூலின் சிறப்புப் பாயிரம் சுட்டுகிறது.

''குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனும் நான்கெல்லையின் இருந்தமிழ்க் கடலுள்''
(நன். சிறப்பு. 8-9)

என்னும் நூற்பாவில், தமிழ் வழங்கும் நாட்டிற்கு, மேற்கு எல்லையாகக் குடகு நாடு கூறப்பட்டுள்ளதைக் காண்க. இந்நூல் இயற்றப்பட்ட காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதி என்பது நினைவுகூரத்தக்கது.

எனவே, அக்காலத்திற்குச் சற்று முன்புதான், பண்டைச் சேர நாட்டில் தமிழின் கிளை மொழியாக மலையாளம் வழக்கிற்கு வரத்தொடங்கியது எனலாம். மற்றும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையில் அங்கு வழங்கிய மொழி தமிழ் மொழி என்பதற்கு இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் பலவற்றை, நாம் காட்ட இயலும். சேரநாட்டைச் சேர்ந்த சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய ஆதியுலா வும், வேணாட்டு அடிகளின் பதிகங்களும், தமிழில் இயற் றப்பட்டவை; வைணவ சமயத்துப் பெயரரான குலசேகர ஆழ்வாரின் பாசுரங்கள், தமிழில் இயற்றப்படவில்லை எனக் கூற இயலுமா? புறப்பொருள் வெண்பாமாலை இயற்றிய ஐயனாரிதனார் சேரர் குடியைச் சேர்ந்தவர் அன்றோ? அவர்கள் யாவரும், கி.பி. எட்டாம் நூற் றாண்டை ஒட்டி வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை.[5]

அன்றைய கேரளத்தின் ஆட்சிமொழியாகத் தமிழ் இருந்தது. எனவே, அரசப் புலவர்களான சேரமான் பெருமாள் நாயனாரும், குலசேகரரும் தமிழில் தங்கள் நூல்களை இயற்றினர் எனக் கூறுவது[6] வரலாற்று உண்மை களுக்கு முரணான செய்தியாகுமா? **'இராமசரிதம்'** என்னும் நூலினைத் **'தமிழில்'** இயற்றியுள்ளதாக அந்த நூல் ஆசிரி யர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது.

''ஆதி தேவனில் அமிழ்ந்த மனக் காம்புடைய
சீராமன் அன்பினொரு இயம்பின **தமிழ்க்கவி**
வெல்வோர் போதிய மாதின் இடமாவருடல்
வீழிவதிது பின்போதி போக சயனன்
சரணதார் அணய்வரே''[7]

என்று இராமசரிதத்தின் ஆசிரியர் அறிவித்துள்ளார். இந் நூலாசிரியரின் காலம் கி.பி. பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டு ஆகலாம்[8] என்பது மலையாள மொழி அறிஞர் பலருக்கு உடன்பாடான கருத்தாகும்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு இருந்தே, தமிழ் மொழி, பல வட்டார மொழிகளாகத் திரிந்து வழங்கியதை நாம் அறிவோம்.

''செந்தமிழ் சேர்ந்த **பன்னிரு நிலத்தும்**
தற்குறிப் பினவே திசைச்சொற் கிளவி''

(தொல். 885)

என்று தொல்காப்பிய நூற்பாவும்,

''செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்திலும்
ஒன்பதிற் றிரண்டினில் தமிழொழி நிலத்தினும்
தன்குறிப் பினவே திசைச்சொல் என்ப''

(நன். 273)

என்று நன்னூல் நூற்பாவும் இதற்குச் சான்று பகருகின்றன.

எனவே, கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு அளவில் தமிழ், பல வட்டார மொழிகளைக் கொண்டு இருந்ததில் வியப்பில்லை. அவ்வட்டார மொழிகளுள், சேரநாட்டுப் பகுதியில் வழங்கிய தமிழில் வட்டாரப் பேச்சு மொழியை இலக்கியத்தில் ஏற்றிய காரணத்தினாலும், வரம்பின்றி வடமொழியைப் பயன்படுத்தியமையாலும் அம்மொழி தமிழிலிருந்து சிதைந்தும், பிரிந்தும் ஒருவகைத் தனி நிலையை அடைந்தது. இந்த மொழியை **மலைநாட்டுத் தமிழ்** என்று லீலா திலகம் எனும் மலையாள மொழியின் மணிப் பிரவாள இலக்கணம் சுட்டுவதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.[9] இந்நூல் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது என்பர்.[10]

மலையாள மொழி ஆய்வாளர்களுள் ஒருவரான, இளங் குளம் குஞ்ஞன்பிள்ளை போன்றவர்களும், கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரையில் தமிழே, கேரளத்தின் உலக வழக்கு மொழியாகவும், செய்யுள் வழக்கு மொழியாகவும் இருந்து வந்ததாகக் கூறியுள்ளமையும் இக்கருத்தை அரண்செய்கிறது. இதிலிருந்து கி.பி. எட்டாம் நூற்றாண்டையொட்டியே, அங்குத் தமிழின் சிதைந்த 'வட்டார வழக்குத்' தோன்றத் தொடங்கியமை புலனாகின்றது.

தொன்மைக்கூறுகள்

தமிழில் காணப்படாத மூலத்திராவிட மொழியின் இயல்புகள், மலையாளத்தில் இன்றும் காணப்படுவதாகச் சொல்லுகின்றனர். அவ்வியல்புகள் ஒலியனியல், சொல் லமைப்பியல் துறைகளைச் சார்ந்தனவாகும்.

தமிழிற்கும், மலையாளத்திற்கும் இடையே, ஒலியமைப் பியல் (Phonological) துறையில், பலவகையான வேறு

பாடுகள் காணப்படுகின்றன. இவை யாவும், மலையாளம் தொன்மையான இயல்புகளைப் போற்றி வருகிறது என்பதைத் தெரிவிக்கின்றன என்பர்.

ஒலியமைப்பில் சிறப்பியல்புகள்

தென்திராவிட மொழிகளின் ஒலியமைப்பில் காணப்படும் நால்வகைச் சிறப்பியல்புகள் :

1. ஞகர ஒலியன்
2. இகரம் எகரமாக மாறுதல்
3. உகரம் ஒகரமாக மாறுதல்
4. லகரக்ககரப் புணர்ச்சி

இவற்றுள் உயிரொலிகளின் மாற்றத்தை, டாக்டர் கால்டுவெல்,[11] சுப்பையா,[12] சிரீகண்டையா,[13] பர்ரோ,[14] முதலானோர் நன்கு விளக்கியுள்ளனர். அண்மையில் டாக்டர் பிஎச். கிருஷ்ணமூர்த்தி இம்மாற்றங்களை மிக விரிவாகத் தெளிவுறுத்தியுள்ளார்.[15] டாக்டர் எமனோவும், இவ்வியல்புகளுக்குப் புத்தொளி தந்துள்ளார்.[16] இவற்றுள் இகரத்திற்கு முன்னர் வரும் ககரம், சகரமாகத் திரிவது தென்திராவிட மொழிகளுள் மலையாளத்தில் மட்டும் அல்லாமல், தமிழிலும் காணப்படுகிறது.

எ-டு.

தமிழ்	மலையாளம்
கீரை	சீரை
செய்	கை
செம்பு	கெம்பு

இவ்வாறு ககரம் சகரமாக, அண்ணச்சாயல் பெறுவதை 'மூலத் தென்திராவிட மொழியின்' கூறாகக் கூறுவர் கமீல் வெலெபில்[17] சிறப்பாகத் தமிழ்-மலையாள மொழிகளுக்குரிய தனிப்பண்பு இது என்பது அவருடைய கருத்து.



மேற்கண்ட விளக்கத்திலிருந்து, 'இவ்வியல்பு மலையாளத்திற்கு மட்டும் உரியதன்று' என்பது புலனாகின்றது. மலையாளம், தமிழிலிருந்து பிரிந்த பொழுது, தாயிடமிருந்து பெற்ற மரபுவழிப் பண்பே; ககரம் சகரமாகத் திரிதல் என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

திராவிட மொழியின் ஒப்பியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டோர், 'ஞ'கரம் எனும் ஒலியன் தென்திராவிட மூலமொழியில் (Proto-South Dravidian) காணப்பெறும் இயல்பாகக் கூறுகின்றனர். இவ்வியல்பு, தமிழிலும் மலையாளத்திலும் சிறப்புற்று விளங்குகின்றது. இவ்வியல்பு பழைய (சங்கத்) தமிழில் மட்டும் பெருவழக்காக இருந்தது. பின்னர், அருகிய வழக்காகிவிட்டது. ஆனால், மலையாள மொழியில் இன்றும் இப்பண்பு பெருவழக்காக இருந்து வருகிறது. எனவே, மலையாளமொழி, மூலத்திராவிட மொழியிலிருந்து தமிழிற்கு முன்பே, பிரிந்திருக்க வேண்டும் என்றும், இதனால், தமிழிற்கு மலையாளமொழி, மூத்தவளாக இருக்க வேண்டும் என்றும் வாதிடுவர்.[18]

பழைய தமிழிலேயே, மொழிக்கு முதலில் வரும் ஞகரம் நகரமாகத் திரியும் வழக்கு உண்டாயிற்று எனலாம். இடையில் வரும்பொழுதும் அது திரிந்தது.

உரையாசிரியர்கள் 'யாத்தல்' எனும் ஒரு சொல்லைத் தவிர, மற்றச் சொற்கள் யாதும், இவ்வாறு திரிவதில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.[22] எனவே, இத்திரிபு ஒரு கிளைமொழி (Dialect) வழக்காக வழங்கி, தொல்காப்பிய ருக்குப் பிறகு, மறைந்துவிட்டது போலும். பவணந்தியாரும், பிற பிற்கால இலக்கண நூலாரும் இவ்வழக்கு அருகிப் போய்விட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

ஞகரம் நகரமாக மிகப்பழைய காலத்திலேயே திரிந்து விட்டது என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால், அதன் இருவகை வடிவங்களும் தமிழில் நெடுங்காலம் வழங்கி வந்ததைக் காணுகின்றோம். சங்க இலக்கியத் தமிழில், நெகிழ் என்னும் சொல்வடிவம் 114 இடங்களிலும், ஞெகிழ் என்னும் வடிவம் 2 இடங்களிலும் வழங்கி யுள்ளமை[23] இங்குக் குறிப்பிடத்தக்கது. இதைப்போன்றே ஞிணம்-நிணம், மிஞிறு-ஞிமிறு போன்ற சொல்வடிவங் களும் பல இடங்களில்[24] பயன்படுத்தப்பட்டுள்ளன. இத னால், தமிழில் இவ்வியல்பு, நெடுங்காலம் நிலைத்த பண் பாக இருந்துவந்தமை தெரிகிறது. 'யான்' எனும் சொல், 'நான்' என்று திரிந்து வழங்கியதைப் பரிபாடலிலும் சிலப் பதிகாரத்திலும் முதன்முதலாகக் காணுகின்றோம்.[25]

இடைக்காலத்திய இலக்கண நூல்களான வீரசோழிய மும், நன்னூலும் அண்ணவொலிகளை அடுத்து நகரம், ஞகரமாகத் திரிதலைத் தெரிவிக்கின்றன. பவணந்தி முனி வர் இத்திரிபினைப் 'போலி' என்பர். ஆனால், இதை ஒரு விதியாக அவர் வரையறுத்துக் கூறவில்லை; 'என்மரும் உளரே' என்று குறிப்பிடுகிறார்.[26]

''ஐகாண் யல்வழி நவ்வொடு சில்வழி
ஞஃகான் உறழும் என்மரும் உளரே''

(நன். 124)

இவற்றால், தமிழின் தொன்மைக் காலம் முதல், சற் றேறக்குறைய கி.பி. 1000 (மலையாளம் கிளைமொழி யாகக் கிளைக்கத் தொடங்கிய காலம்) வரையில், இலக்கிய வழக்கிலும், உலக வழக்கிலும், ஞகரம் பெருவழக்காக இருந்திருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. பின்னர், தமிழின் தொன்மையான இயல்பு ஒன்று, அதன் கிளை

மொழியில் நிலைத்த வாழ்வு பெற்று விட்டது. தமிழில் உண்டான வளர்ச்சியும் திரிபும் அதைவிட்டுப் பிரிந்து போன மலையாளத்தில் உண்டாகவில்லை. இலக்கண மரபிலும், சொற்பொருளியல் துறையிலும் அதனை, ஒரு வகைக் கலவை (மணிப்பிரவாள) மொழியாக்கிய காலத்தில், அதன் வளர்ச்சி குன்றி ஒரு தேக்கநிலை உண்டாயிற்று. அந்நிலையிலிருந்து விடுபட்டு, முன்னேற்றம் காண்பதற்கு முன்பே, பழைய இயல்புகள் சில மலையாள மொழியில் கல்மாறிகளாகப் (Fossils) போய்விட்டன என்று கூறின், இது தவறாகாது.

ல

மலையாள மொழியில் -லக- புணரும்பொழுது, திரிபின்றி நிற்கின்றன. இவ்வியல்பு, இன்றும் மலையாளத்தில் காணப்படுகிறது. இப்பண்பு தமிழில் காணப்படாமையால், மலையாளம் மூலத்திராவிட மொழியிலிருந்து வரலாற்றுக் காலத் தொடக்கத்திற்கு முன்பே, பிரிந்து, தனித்த இயல்புடையதாக வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்பர்.[27]

லகரமெய் தமிழில் கீழ்க்காணும் சூழல்களில் வழங்கி வருகிறது :

1) உயிரிடை : ல்—

2) மொழியிடை : ல்ல்—
இரட்டித்தல்

3) மொழியிறுதி : -ல்-

4) மெய்முன் : -ல்க்-ல்ப்-ல்வ்- etc.

இவற்றுள் ககரமெய்முன் வரும் லகரம்—ல்க்—என்னும் புணர்ச்சியில் லகரம் நகரமாக திரியுமெனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

லன எனவரூஉம் புள்ளி முன்னர்த்
தந வரிற்றன வாகும்மே (தொல். 149)

மேலும், வேற்றுமைப்புணர்ச்சியில்,

லகார இறுதி, னகார இயற்றே (தொல். 366)
மெல்லெழுத்து இயையின் னகார மாகும்
(தொல். 367)

என்றும், அல் வழிப்புணர்ச்சியில்,

''அல் வழியெல்லாம் உறழெனமொழிய''

(தொல். 369)

என்றும் திரியுமெனக் குறிப்பிட்டுள்ளார். அவ்வழியில் லகரம், றகரமாகத் திரிதலைக் காணலாம்.

(எ-டு.)

நல் + கு = நற்கு (நற்றி. 199)

கொல் + கை = கொற்கை (நற்றி. 23.6)

சுவல் + கலித்த = சுவற்கலித்த (குறுந். 204.3)

ஆனால், தொல்காப்பியர் லகர, ககரப்புணர்ச்சியில், லகரமும் ககரமும் திரிபின்றிப் புணர்ந்து நிற்பதைக் கூறவில்லை. எனினும், சங்கத் தமிழில் இவ்வியல்பு இடம் பெற்றிருந்தமைக்கு, நாம் பின்வரும் பாடற் பகுதிகளைச் சான்றாகக் காட்டலாம்.

நல்நால்கு பூண்ட கடும்பரிநெடுந்தேர் (அகம். 104)
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி

(பெரும்பாண். 84)

'நான்கு' எனும் எண்ணுப்பெயர், பழைய தமிழில் மட்டும் அல்லாமல் இன்றைய கன்னடத்திலும் 'நான்கு' எனவும், தெலுங்கில் 'நாலுகு', எனவும் வழங்கி வருவதைக் கால்டுவெல் சுட்டிக்காட்டியுள்ளார்.[28] ஆனால், மலையாளத்தில் 'நால்', 'நாங்கு' (னாங்கு) என்னும் வடிவங்களே, வழக்கில் உள்ளன. எனவே, -லக- புணரும்பொழுது, தி யாமல் அமைவது மலையாள மொழியில் மட்டும் காணப்படும் சிறப்பியல்பு என்று கூற இயலாது; அதில் 'பெரு வழக்காக உள்ள இயல்பு' என்று மட்டும் கூறலாம். ஆனால், பிற திராவிட மொழிகளிலும் அவ்வழக்கு, இன்னும் இருந்து வருகிறது. பழைய தமிழில், இவ்வழக்கு இருந்ததை நாம் மேலே கண்டோம். இதற்குத் தொல்காப்பியர் விதி வகுக்கவில்லை என்பதனால், தமிழிற்கு, இது புதுமையான பண்பு எனக்கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

ழ

'ழ்' எனும் நாமடி ஒலியன், இன்று தமிழிலும் மலையாளத்திலுமே உள்ளன. மற்றத் திராவிட மொழிகளில் இவ்வொலியன் திரிந்து வழங்குகிறது. மலையாளத்தில் மட்டும் தமிழில் உள்ளதைப் போலவே இருக்கிறது. இதனால், அண்மைக்காலத்தில்தான், மலையாளம் தமிழில் இருந்து பிரிந்தமை புலனாகிறது.

சொல்லமைப்பியல் (Morphology)

சொல்லமைப்பியலில் தமிழிற்கும், மலையாளத்திற்கும் இடையே காணப்படும் வேற்றுமைகள் இரண்டு. அவை (1) முன்னிலை இடப்பெயர் வேற்றுமை உருபேற்கும் நிலையில், இகரம் உகரமாகத் தமிழில் திரிவதும், மலையாளத்தில் இகரம் திரியாது நிற்பதுமாகும்.

(2) மலையாள மொழியின் வினைமுற்றுகள், காலத்தைத்தான் காட்டும்; திணை, பாலிடத்தைக் காட்டா. திணை பாலிடத்தைக் காட்டும் பாலறி கிளவிகளை வினைமுற்றோடு சேர்க்கும் வழக்கும் மலையாளத்தில் கிடையாது; வேறுவகையான குறியீடுகளால் அவற்றை, மலையாள மொழி உணர்த்துகின்றது. இத்தகைய பண்பு மூலத்திராவிட மொழியில் ஒரு காலத்தில் இருந்தது என்பதைத் திராவிட மொழியியல் அறிஞர் சுட்டுகின்றனர்.[29] ஆகவே, பிற திராவிட மொழிகள், மூலத்திராவிட மொழியிலிருந்து பிரிவதற்கு முன்பே மலையாளம் பிரிந்தமையால்தான் மூலத் திராவிட மொழியின் தொன்மைக் கூறு அதனிடம் நின்று, நிலைபெற்று வருகிறது. மற்ற திராவிட மொழிகள், மூலத் திராவிட மொழியின் பிற்கால வளர்ச்சியை எதிரொலிக்கின்றன. இதனால், மலையாள மொழி, தமிழிற்கு முன்பே, மூலத்திராவிட மொழியை விட்டுப் பிரிந்து விட்டது என்பர்.

முன்னிலை இடப்பெயர் வேற்றுமையில் திரிதல்

இவ்விரு வேற்றுமைகளுள், முன்னிலைப் பெயர், வேற்றுமை உருபேற்கும் பொழுது உண்டாகும் மாற்றத்தைக் காண்போம்.

		தமிழ்	மலையாளம்
பெயர்ச்-சொல்	ஒருமை	நீ	நீ
	பன்மை	நீம், நீர், நீயிர், நீவிர், நீங்கள்	நிங்ஙள், நீம்
வேற்றுமை உருபேற்கும் நிலையில்	ஒருமை	நின் நுன் உன்	
	பன்மை பன்மை	நும் உம் நுங்கள் உங்கள்	நிங்கள் நீம்

முன்னிலை இடப்பெயர், வேற்றுமை உருபேற்கும் பொழுது, 'நீ ~ நின்' என்று திரிவதோடு, நில்லாமல் 'நுன் ~ உன்' என்றும் 'நும் ~ உம்' என்றும் 'நுங்கள் ~ உங்கள்' என்றும் திரிந்து வழங்குவது, மிகவும் பிற் பட்ட காலத்திய வழக்கு. மூலத்திராவிட மொழியில் இகர ஈறே (நீ ~ இ) வழக்கில் இருந்தது; மலையாளம் பிரிந்த காலத்தில் இப்பண்பினை, அது ஏற்றுப் போற்றியது. பிற்காலத்தில், தமிழில் 'உகரம்' இடம்பெற்றது. இத்திரிவு, சங்க காலத்திற்கு முன்பே உண்டாயிற்று. ஏனெனில், சங்கத்தமிழில் வேற்றுமை உருபேற்ற முன்னிலை இடப் பெயர், 'இகரமாகவும் உகரமாகவும்' ஒரே சமயத்தில், வழங்கியதைக் காணுகின்றோம்.

(எ-டு.)

நோய்க்குன் மேனியாய் நலம் (அகம். 222:2)
இம்மனை அன்று; அஃதுஉம்மனை (அகம். 56:14)
தோற்பதுநும் குடியே (புறம். 45:5)
நும், வாய்ப் பொய்யும் (அகம். 48:18)
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் (குறுந். 40:2)
நீ ஓர் ஆதலின் நின் ஒன்று மொழிவல் (புறம். 2.5)
மறுத்தாங்கே நின் வயின் (கலி. 91:22)

இப்புதுமைப்பண்பு, மலையாளத்தில் இடம் பெற வில்லை. எனவே, மலையாளம் சங்க காலத்திற்கு முன்பே, மூலத்திராவிட மொழியிலிருந்து பிரிந்து சென்றிருக்க வேண்டும் எனக் கூறுவர்.[30]

முன்னிலை இடப்பெயர், வேற்றுமை உருபேற்கும் பொழுது இ ~ உ ஆகத்திரிவது, பன்மைப் பெயராகிய 'நீம்' என்பதில் முதன்முதல், ஈற்று மகரத்தின் செல்வாக்கால், உண்டாகியிருக்க வேண்டும்.[31] பின்னர், ஒரே வகையான ஒத்ததன்மை கருதி, ஒருமையிலும், இம்முறை பின்பற்றப் பட்டிருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர்.[32]

திராவிட மொழிகளின் அமைப்பினை, ஒப்பியல் முறையில் ஆராய்ந்த டாக்டர் கால்டுவெலும், யூலேபிளாக் கும் (Jules Bloch) முன்னிலை இடப் பெயரில், இகரம் உகரமாகத் தமிழிலும், பிராகுவி (Brahui)-யிலும் திரிந்து, வழங்குவதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.[33] யூலே பிளாக்கு, ''ஒரே சமயத்தில் 'நும்' எனும் வடிவம் காணப்படுவது, அதன் ஆற்றல்மிகு போக்கைக் காட்டுகிறது. அதன் இறுதி யில் உள்ள மகரத்தின் செல்வாக்கால், இகரம் இதழ்குவி உயிராக மாற்றமுற்று இருக்கலாம் என்பதைக் காண்பிக்கும் வரையில், இவ்வடிவத்தைச் (நும்) சிறப்புமிக்கதாகவே கருத லாம். தமிழில் 'நும்' எனும் வடிவம் 'உம்', 'உன்' எனும் தீர்வுகளை அடைந்திருப்பதைக் காணுகின்ற பொழுது, அதை மிகவும் பழமையான வடிவமாகவே கருதலாம்'' என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.[34]

தொல்காப்பியனார், 'நீயிர்' என்பது 'நும்'மின் திரி பெயர் எனக் கொண்டுள்ளார்,

நும்மின் திரிபெயர் வினாவின் பெயரென்று
அம்முறை யிரண்டும்அவற்றியல் பியலும்

(தொல்.சொல். 143)

இவற்றிலிருந்து, 'நும்' என்பதும் மிகப்பழமையான வடிவங்களுள் ஒன்று என்பது புலனாகின்றது. தென் திராவிட மொழியாகிய தமிழிலும், வட இந்தியத் திராவிட மொழியான [illegible]குவியிலும், இப்பண்பு காணப்படுகிறது. மூலத் திரா[illegible]மொழியிலும் இவ்வியல்பு இருந்திருத்தல் வேண்டும் என[illegible]தற்கு, பிராகுவி மொழி சான்று பகரு கிறது. மலையா[illegible]ளமும் தமிழும் தென்திராவிட மொழிக் குடும்பத்தைச் [illegible]சர்ந்தவை. இவையிரண்டும் வேறுமொழி களாகப் பிரிவதற்கு முன்னரே, மூலத் தென்திராவிடத்தின் இவ்வியல்பும் இருந்திருத்தல் கூடும். மலையாளம் கிளை

மொழியாகப் பிரிந்த காலத்தில், இகர வடிவத்தை மட்டும் போற்றிக்காத்தது; தமிழ் உகர வடிவத்தைப் போற்றி வளர்த்தது என நாம் கூறலாம்.

பாலறி கிளவி

மலையாள மொழியில் பாலறிகிளவி வினைமுற்று' களோடு சேர்க்கப்படுவதில்லை என்பதனால், அதை 'மிகப் பழமையான திராவிட மொழி' என்று கருதுவதும், தமிழிற்குத் தமக்கை எனக் கூறுவதும் உண்மைக்கு மாறான செய்திகளாகும்.

மலையாள மொழி தவிர, ஏனைய திராவிட மொழிகளில் வினைமுற்றுகள் காலத்தோடு திணைபாலிடமும் உணர்த்துகின்றன. பழைய மலையாளச் செய்யுள்களில், அவை இடம்பெற்றுள்ளன. எனவே, திணைபாலிடம் காட்டாத பண்பை, ஒரு சிறப்புமிக்க, தொன்மைப் பண்பு எனக் கொள்ளுவதற்கு இல்லை. அண்மைக்காலத்தில், மலையாள மொழியில் பையப்பையத் தோன்றி வளர்ந்த, பண்பென இதனைக் கருத இடமுண்டு. இதைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் பலருள், எல். வி. இராமசாமி ஐயர் இங்குக் குறிப்பிடத்தக்கவராவர்: அவர் மலையாள மொழியைப் பற்றிப் பொதுவாகவும், இப்பண்பைப் பற்றிச் சிறப்பாகவும் கொண்டுள்ள கருத்துகள் இங்குக் குறிப்பிடத்தக்கவை.

தொல்காப்பியத்திலேயே திணை, பால், எண், இடம் காட்டா வினையெச்ச வாய்பாடுகள், ''செய்து செய்யூச் செய்பு செய்தெனச், செய்யியர் செய்யிய செயின் செயச் செயற்கென, அவ்வகை ஒன்பதும் வினையெஞ்சு கிளவி'' (தொல். வினை. 713) எனப் பலவாறாகத் தரப்பட்டுள்ளது. இதனால், தொன்மைத் தமிழில் (Ancient Tamil) இந்த இயல்பு இருந்ததை அறிய இயலுகிறது. எனவே, மூலத்திராவிட மொழியாகக் கருதுவதற்குரிய இயல்புகள் தமிழிலேயே காணப்படுகின்றன.

(1) இடைக்காலத் தொடக்கத்தில், தமிழிலிருந்து (ஏறக்குறைய பத்தாம் நூற்றாண்டு அளவில்) கிளைத்துத் தனி மொழியாக மலையாளம் பிறந்தது. அதற்கு முன்னர், தமி

ழின் கிளைமொழிகளுள் ஒன்றாகவே மலையாளம் இருந்து வந்தது.

2) காலந்தோறும் படிப்படியாகத் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள் மலையாள மொழியில் கைவிடப்பட்டு வந்தமைக்குரிய சான்றுகள், அம்மொழியின் இலக்கியங்களில் காணப்படுகின்றன. பழைய மலையாள நூல்களில் காலங்காட்டும் வினை வடிவங்களில் திணை, பால், எண், இடம் உணர்த்தும் கூறுகள், பொதுவாகக் காணப்படுகின்றன. ஆயினும், வினைமுற்றுகள், இத்தகைய விகுதிகள் பெறாமலேயே, வழங்கப்பட்டமைக்கும் சான்றுகள் சில உள்ளன. காலப்போக்கில், இப்பண்பு அம் மொழியில் பல்கிப் பெருகியது. வினைமுற்றுகள் திணை, பால், எண், இடம் காட்டும் விகுதிகளைக் காலந்தோறும், சிறிது சிறிதாகக் கைவிட்டு வந்த முறையில், சில படிநிலைகள் உள்ளன. லீலாதிலகத்தில் எல்லா வகையான வினை வடிவங்களுக்கும் திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகள் தேவை என்று விதி வகுக்கப்பட்டுள்ளதைக் காணுகின்றோம். ஆனால், 'கிருஷ்ண காதை'களில், இவ் விதி முற்றிலும் பின்பற்றப்படவில்லை. சில வினைச்சொற்களின் விகுதிகள், திணை, பால், எண், இடம் உணர்த்துவனவாக உள்ளன. இத்தகைய படிப்படியான மாற்றம் இலக்கியத்தில் மட்டும் உண்டானதாக இருந்திருக்கலாம். ஆனால், அன்றைய வட்டார மொழியிலும், சமூகப் பேச்சு வழக்கிலும் இத்தகைய திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகளைப் புறக்கணிக்கும் போக்குப் பெருகியது. மேற்கண்ட இலக்கியங்கள் காலங்கடந்த நிலையில் இப்போக்கினை எதிரொலிக்கின்றன என்று நாம் கூறினால், அது தவறாகாது.

(3) பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த லீலாதிலகத்தில், திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதி களைக் கொண்ட **'வந்தான்'**, **'இருந்தான்'** போன்றவற்றை எடுத்துக்காட்டி, அவை 'இழிசினர் வழக்'கென்று கூறப்பட்டுள்ளமை, நாம் இங்குக் கருதத்தக்கதாகும். இதிலிருந்து, பல்வேறு சாதிக்காரரர் பேசிய கிளை மொழிகளிலிருந்து இந்தப் பண்பு, அக்காலத்தில் முற்றிலும் நீக்கப்படவில்லை எனும் உண்மை புலனாகின்றது.

(4) இலட்சத்தீவுகளிலும், அமிலிதீவுகளிலும் வாழும் 'மாப்பிள்ளைமார்' பேசும் மொழி, மலையாளத்தின் ஒரு வகைக் கிளைமொழியே! இக்கிளை மொழியில், வினை முற்றுகள் திணை, பால், எண், இடம் உணர்த்தும் பண்பு, இன்றுவரை வழக்கில் இருந்துவருகிறது.

(5) மலையாள மொழி நீங்கலாக உள்ள பிற திராவிட மொழிகள் யாவற்றிலும் இப்பண்பு நிலையான வாழ்வைப் பெற்றுள்ளது. எனவே மூலத்திராவிட மொழியில் இப் பண்புதான் இருந்திருக்க வேண்டும் என்று நாம் துணிந்து கூறலாம்.[35]

மலையாள மொழியின் இலக்கண இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு, இராமசாமி ஐயர் இம்முடி விற்கு வந்துள்ளார். அவருடைய கருத்தினைக் கல்வெட்டு களில் காணப்படும் சான்றுகள் அரண்செய்கின்றன. ''இவ் வியல்பு (வினைமுற்றுகள், திணை, பால், எண், இடம் உணர்த்தும் விகுதிகளைப் பெறாமை) காலம் செல்லச் செல்ல, கல்வெட்டுகளில் பெருகிக் கொண்டே வந்துள்ளது[36] என்று ஏ. சி. சேகர் எனும் மலையாள மொழி அறிஞர் மொழிந்துள்ளமையும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

புதுமைப்புண்பு

இவற்றிலிருந்து, வினைச் சொற்கள் திணை, பால், எண், இடம் உணர்த்தா இயல்பு மலையாள மொழியில் அண்மைக்காலத்தில் தோன்றி வளர்ந்த புதியதொரு பண்பு என நாம் உறுதியாகக் கூறலாம்.

தாயும் சேயும்

இவ்வாய்வுரையினால், நாம் பெறக்கூடிய விளக்கங்கள் இரண்டு. 'தமிழ்மொழியே மலையாளத்திற்குத் தாய்மொழி யாகும்' என்பது முதன்மையானது. இதனால், 'மலையாளத் தைத் தமிழிற்குத் தமக்கை' எனக் கூறுவது, பொருத்தமற்ற கருத்து என்பது புலனாகின்றது. இரண்டாவதாக, 'மலை யாள மொழி மிக அண்மைக்காலம் வரையில் மேற்குக் கடற்கரைப் பகுதியில் தமிழின் வட்டார (கிளை) மொழி யாக வழங்கி வந்தது' என்பதும், சற்றேறக்குறைய எண் ணூறு ஆண்டுகளுக்கு முன்பே, அவ்வட்டார மொழி (மலை

நாட்டுத் தமிழ்) தனிமொழியாகத், தாயாகிய தமிழிலிருந்து பிரிந்து, மலையாளமாக மாற்றமுற்றிருக்க வேண்டும் என் பதும் தெளிவாகின்றன.

இந்த ஆய்வாளனுடைய கருத்தை அரண்செய்யும் வகை யில், ''நாம் எல்லாம் நன்கு அறிந்து உள்ள செய்தி பழைய தமிழில் இருந்து கிளைத்து எழுந்ததே மலையாளம் என்ப தாகும். சங்கத் தமிழே, இதனுடைய மூலமொழியாகும். கி.பி. 1300 அளவிலேயே இந்தக் கிளைமொழிக் கல் வெட்டுகள் கிடைத்துள்ளன. இதற்குச் சிறிது காலத்திற்குப் பிறகே, இம்மொழியில் இலக்கியம் தோன்றத் தொடங் கின''[37] எனும் எஸ். கே. சாட்டர்ஜியின் கருத்து அமைந் துள்ளதைக் கருதுக.

பிற்சேர்க்கையில் உள்ள 'கிளை மரபு விளக்கப் படங் களை'க் காண்க. அவற்றால் தமிழின் தொன்மையும், பிற திராவிட மொழிகளின் தோற்றமும் நன்கு புலனாகும்.

''கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும்
உன்னுதரத்து உதித்து எழுந்து ஒன்றுபல ஆயிடினும்''

எனும் அடிகளில் உள்ள 'உதரத்து' எனும் சொல்லிற்குப் பாடவேறுபாடாக **உன்னுதிரத்து** என்பதனைப் பயன்படுத் துவாரும் உளர். 'அவர்களுடைய எண்ணப்போக்கும் தவ றானாது' என்பதை இத்தகைய ஆய்வுரைகள் — சிக்கல் களைத் தீர்க்க முயலும் ஆய்வுரைகள் — மெய்ப்பிக்க இயலும் எனும் நம்பிக்கை இந்த ஆய்வாளனுக்கு என்றும் உண்டு.

படம் 1
திராவிட மொழிகளின்
தோற்றமும் வளர்ச்சியும்
(கி.மு. 2000 முதல் கி.மு. 400)



படம் 2


தமிழ் மொழியின் வரலாறு
(கி.மு. 1000-கி.பி.2000)
தொன்மைத் தமிழ்
(கி.மு. 1000-400 வரை)
தொல்காப்பியருக்கு முற்பட்டத் தமிழ் (கி.மு. 350 வரை)
பழந்தமிழ்
(கி.மு. 300-கி.பி.500 வரை)
தொல்காப்பியர் காலத்தமிழ்
(கி.மு. 350 அளவில்)
ப.த. முற்காலம். கி.பி.
(கி.மு. 300 முதல் 100 வரை)
ப.த. இடைக்காலம்
(கி.பி.100 முதல் 250 வரை)
ப.த. பிற்காலம்
(கி.பி.250 முதல் 500 வரை)
இடைக்காலத் தமிழ்
(கி.பி.500முதல் 1700 வரை)
இ.த. முற்காலம்
(கி.பி. 500 முதல் 900)
இ.த. இடைக்காலம்
(கி.பி.900 முதல் 1400)
(சோழர் காலம்)
இ.த. பிற்காலம்
(கி.பி. 1400 முதல் 1700 வரை)
(இசுலாமியர் காலம்
நாயக்கர் காலம்)
மலையாளம் திரிதல்
(கி.பி. 900 அளவில்)
புதுமைத் தமிழ்
பேச்சுத்தமிழ்
(1700-200)
கொச்சைத் தமிழ்
மாவட்ட வழக்கு
பு.த. முற்காலம்
(கி.பி. 1700-1900 வரை)
பு.த. பிற்காலம்
(கி.பி. 1901 முதல்)

குறிப்புகள்

1. a) Gundert, H., A Grammer of the Malayalam Language, 2nd end.1868; p. 1

b) Caldwell, R., A Comparative Grammar of Dravidian Languages, University of Madras, 1956, pp. 23-25

c) Srinivasa Aiyangar, M., Tamil Studies, Madras, 1916, pp. 375-376

d) Ramaswami Aiyar, L.V., The Evolution of Malayalam Morphology, Ernakulam, 1936, pp. 52-62

e) Jules Bloch, The Grammatical Structure of the Dravidian languages, Poona, 1954, p. XXV

f) Emeneau, M.B. 'The South Dravidian Languages', in the Proceeds of the First International Conference-Seminar of Tamil Studies, Vol. II, IATR, Kaula Lumpur, Malaysia, 1966, pp. 564-65

g) Kamil Zvelebil; Lectures on Historical Grammer of Tamil, University of Madras n.d. p. 30

h) Krishnamurthi, Bh., 'Comparative Dravidian Studies', in Current Trends in Linguistics, Ed. Thomas A. Sebeok; Vol. 5; Mouton, Paris, 1969; pp. 365-368. Telugu Verbal Bases; A Comparative Study, Berkely, 1961 p. 48.

i) Subramanian, V.I; Malayalam in current trends in Linguistics, Ed. by Thomas A. Selbeok; Vol. 5, Mouton, Paris, 1969, p. 326.

j) குஞ்ஞன்பிள்ளை இளங்குளம் : ஸாகித்ய சரித்ர ஸங்க்ரஹம். (மலையாளம்), 1929, பக். 9.

2. a) George K. M. : 1) Ramacaritram and the study of Early Malayalam, National Book Stall, Kottayam, Kerala, 1956, pp.40-49.

b) George K. M. : 2) A Survey of Malayalam Literature, Asia Publishing

House, Bombay; 1968; pp. 4-6

c) Godai Varma, K. : Indo-Aryan Loan Words in Malayalam, 1946, pp. 8-10

d) Pisharoti, A.K. : A Critical Survey of Malayalam Languages and Literature, 1927; pp. 5-10

e) Govindankutty, A. : 'From Proto-Tamil-Malayalam to West Coast Dialects' in the Indo-Iranian Journal, Vol. XIV, No. 1/2 Mouton, The Hague, 1972; pp. 52-60

f) பரமேசுவர ஐயர் : உள்ளூர், எஸ். கேரள சாகித்திய சரித்திரம் (மலையாளம்) பகுதி ஒன்று, 1954, பக். 18

3. George, K.M. : Ramacantran etc; p. 83.

4. Ibid. p. 75

5. வெள்ளைவாரணனார், க., பன்னிரு திருமுறை வரலாறு, பகுதி. 2; அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1964, பக். 136

இராசமாணிக்கனார், மா., 'ஆழ்வார்கள் காலம்', நாலாயிர திவ்வியப் பிரபந்தம், மணலி அறநிலையம், சென்னை, 1962, பக். 39

6. George, K.M., Op. cit; pp. 45-46

7. இளைய பெருமாள், மா (மொ.பெ) லீலா திலகம், சென்னை, 1972; பக். VI

8. மேற்படி பக். 1

9. மேற்படி பக். 18

10. George K.M., A Survey of Malayalam literature, p. 4

11. Caldwell, R., op.cit; pp. 77-79

12. Subbayya, K.V. Principles of Dravidian Phonology, Indian Antiquary Vol. 38, (1909); p. 161

13. Sreekantaiyya, T.N. Thee 'Mutation of I.U.E. and O in Kannada', Proceeds and transactions of Eighth All India Oriental Languages Congress, Mysore; 1953, pp. 769-800

14. Burrow, T.S., Dravidic Studies, II, BSOS Vol. lo; pp. 289-97

15. Krishnamurthy, Bh., op.cit; Vol. 34, 1958, pp. 458-68

16. Emeneau, M.B. Op. cit;

17. Zvelebil, Kamil; Comparative Dravidian Phonology, Mohton, The Hague; 1970, p. 14

18. Emeneau, M.B. A Dravidian Comparative Phonology — A sketch Mimeography, Annamalai University, 1960; p. 29

Krishnamurthi, Bh. Telugu Verbal Bases, University of California Press, Berkeley and Los Angels, 1961; p. 237

19. George, K.M. Ramacaritram, p. 75

20. Jayakumari, V. A Study of the language of the Tamil Inscriptions, from 7th century to 11th century A.D. University of Madras (unpublished Thesis) p. 102

21. Govindan Kutty. A., op.cit. p. 56

22. Ibid. p. 57

23. சொல். எழுத்து. 146, நச்சி. உரை, மற்றும் நன்னூல் 124-சங்கர நமச்சிவாயர் உரையைக் காண்க.

24. சங்க நூற் சொல்லடைவு, பகுதி ஒன்று பிரஞ்சு இந்தியக் கலைக் கழகம், புதுச்சேரி, 1967, 68-70, பக். 919-920 பகுதி இரண்டு, பக். 695

25. மேற்படி பகுதி 3, பக். 694, 873 & 1241

26. சிலப்பதிகாரம்

27. நன்னூல் 124, சங்க. நம. உரை

28. Indo-Iranian Journal, Vol. XIV. No. 1/2, 1972 p. 59.

29. Caldwell, R. op.cit. p. 334

30. George, K.M. op.cit; p. 82; Indo Iranian Journal, op. cit. p. 58
31. Ibid. p. 100
32. Kamil Zvelebil: 'Personal Pronouns in Tamil and Dravidian', Indo-Iranian Journal, VI, 1962, pp. 67-68
33. Caldwell, R. : op.cit. p. 387 Jules Bloch; op.cit. p. 32.
34. Ibid
35. Ramaswami Aiyar, L.V., The Evolution of Malayalam Morphology, Ernakulam, 1936, pp. 42-62
36. Sekhar A.C. Evolution of Malayalam, Deccan College and Post-graduate Research Institute, Poona, 1953, p. 105
37. Chaterji, S.K. Dravidian, Annamalai University, 1965, p. 41

16. திருக்குறளின் காலம்

கு. மோகனராசு

ஒரு நூல் காலத்தால் முற்பட்டது என்பதாலேயே அந் நூலுக்குப் பெருமை கிடைத்துவிடுவதில்லை; அல்லது, ஒரு நூல் காலத்தால் பிற்பட்டது என்பதாலேயே அந்நூல் சிறுமை அடைவதும் இல்லை.

ஆனால், ஒரு நூலின் உண்மையான பொருளை அறிய வும், அந்நூல் தோன்றிய சூழல், நோக்கம் ஆகியனவற்றை அறியவும், பல்வேறு சிந்தனைகளின் / இலக்கண இலக்கியக் கூறுகளின் வளர்ச்சி வரலாற்றை முறைப்படுத்திக் காணவும், தாக்கங்களை இனங்காணவும், அந்த நூலின் காலம் பற்றிய தெளிவு தேவையான ஒன்றாகும்.

ஆகவேதான், பல்வேறு நோக்குகளிலும் போக்குகளி லும் தமிழ் இலக்கண இலக்கியங்களின் காலம் காணும் முயற்சிகள் பலரால் பல்வேறு காலங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அவற்றுள், திருக்குறளின் காலம் காண மேற்கொண்ட முயற்சிகளே கூடுதலானவை; அவற்றால் விளைந்த கருத்து வேறுபாடுகளும் மாறுபாடுகளும் கூடுதலானவை.

திருக்குறள்,

தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டது என்பர் சிலர்; பிற்பட்டது என்பர் சிலர்; சங்கத் தொகை நூல்களுக்கு முற்பட்டது என்பர் சிலர்; பிற்பட்டது என்பர் சிலர்; முச் சங்கங்களுக்கும் முற்பட்டது என்பர் சிலர்; பிற்பட்டது என்பர் சிலர்; வடமொழி நூல்களான மனுதர்மம், அர்த்த சாஸ்திரம், காமசாஸ்திரம் போன்றவற்றுக்கு முற்பட்டது என்பர் சிலர்; பிற்பட்டது என்பர் சிலர்.

ஏன்? திருக்குறளை நாலடியார், சில ஆழ்வார்கள் பாடல் கள், நாயன்மார்களின் பாடல்கள் ஆகியவற்றிற்கும் பிற் பட்டது என்பாரும் உளர்; இவற்றை மறுப்பாரும் உளர்.

திருக்குறள் காலத்தின் மேல் எல்லை கி.மு. 6027 வரை செல்கிறது (அழகரடிகள்); கீழ் எல்லை கி.பி. 1000 வரை நீள்கிறது (ஜி.யூ.போப்). இவற்றிற்கிடையே எத்தனையோ வேறுபட்ட காலங்கள்! மாறுபட்ட கோணங்கள்!

மொத்தத்தில் திருக்குறள் கால ஆய்வுகளால் தோன்றிய சிக்கல்களே மிகுதி. எனினும், சிக்கல்களுக்கிடையேயும் சில தெளிவுகளும் கிடைத்துள்ளன.

அந்தச் சிக்கல்களையும் தெளிவுகளையும் ஓரளவு சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரை.

கால ஆய்வுக்குக் கொண்ட சான்றுகள்

1. இறையனார் களவியல் உரை
   1) முச்சங்கங்கள், கடல்கோள் தொடர்பான கருத்துகள்
   2) உரையில் குறள் மேற்கோள்
   3) சங்க நூல்களுள் குறள் சுட்டப்படாமை
   4) நக்கீரர் காலம்
   — போன்ற குறிப்புகள்.
2. செங்கோன் தரைச் செலவு
   (சொல்லாட்சி, பொருளாட்சி, பெயர் வழக்கு, பாவழக்கு ஆகியனவற்றை ஒப்பிட்டுக் காலம் காண)
3. இலங்கை மகாவம்சம்
   (கடற்கோள்களின் காலம், கயவாகு காலம், ஏலேல சிங்கன் காலம் ஆகியன காண)
4. திருவள்ளுவ மாலை
   (குறிப்பாக, உக்கிரப் பெருவழுதி, கபிலர், நக்கீரர், அவ்வையார், சீத்தலைச் சாத்தனார் தொடர்புடையன)
5. திருவள்ளுவர் கதைகள்
   (1. உடன் பிறப்புகள், 2. நூல் அரங்கேற்றம், 3. ஏலேல சிங்கன் தொடர்பானவை)

6. உரையாசிரியர் உரைக்குறிப்புகள்
(குறிப்பாக, நச்சினார்க்கினியர், பரிமேலழகர், பேரா சிரியர் ஆகியோரின் உரைக்குறிப்புகள்)
7. அகத்தியர் கதை
8. ஏலாச்சாரியர் கதை
9. புராணக் கதைகள்
10. பழைய ஏற்பாடு (Old Testament)
11. சோதிடக் குறிப்புகள்
12. மெகஸ்தனிசின் குறிப்புகள்
13. பிற நாட்டார் வணிகத் தொடர்பு
14. தமிழக/இந்திய வரலாற்றுச் செய்திகள்
15. தமிழக அரசர்கள் புலவர்கள் தொடர்பான தொடர்பு நிலைக் காலங்கள்
16. வியாசர் காலம்
17. பெருமுத்தரையர் காலம்
18. திருக்குறளின் காலம் தொடர்பாகவும் உயர்வு தொடர் பாகவும் மேலை நாட்டறிஞர்கள் கூறிய கருத் துகள்
19. திருக்குறளின் காலம் தொடர்பாகத் தமிழறிஞர்கள் கூறிய கருத்துகள்
20. அர்த்தசாஸ்திரத்தின் காலம் பற்றிய கருத்து முரண் பாடுகள்
21. கருத்து ஒப்புமைகள்

(1. தொல்காப்பியம் — திருக்குறள்
2. சங்கத் தொகை நூல்கள் — திருக்குறள்
3. திருக்குறள் — சிலம்பு / மணிமேகலை
4. திருக்குறள் — நாலடியார், சீவகசிந்தாமணி போன்ற பிற்கால நூல்கள்
5. திருக்குறள் — மனு, அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம் போன்ற வடமொழி நூல்கள்).

22. கருத்து வேறுபாடுகள்
(1. தொல்காப்பியம் — திருக்குறள்
2. சங்கத்தொகை நூல்கள் — திருக்குறள்
3. வடமொழி நூல்கள் — திருக்குறள்)

23. தொல்காப்பிய இலக்கண வரையறைகளுக்குத் தொல்காப்பியத்திலேயே காணும் முரண்பாடுகள்.

24. இலக்கண மரபின் வீழ்ச்சி / வளர்ச்சி

25. புறம். 34-ஆம் பாடல் சுட்டும் 'அறம்'.

26. புத்தமதக் கருத்துகளின் ஏற்பும் எதிர்ப்பும்

27. சமண மதக் கருத்துகளின் தாக்கம்

28. தோமையர் மலைப்பொழிவு

29. வடவர்-தமிழர் இடையிலான மொழி / பண்பாட்டுத் தாக்கங்கள்
(1. வடமொழிச் சொற்களின் தாக்கத்தின் அளவு
2. ஒருவந்தம், ஆதிபகவன்
3. வருணப் பாகுபாட்டுத் தாக்கத்தின் அளவு
4. அறம் பொருள் இன்பம்)

30. இலக்கிய மரபுகள்
(1. பாயிரம் பாடும் மரபு
2. யாப்பு வடிவம்
3. அறம் பொருள் இன்பம்)
4. மேற்கணக்கு, கீழ்க்கணக்கு)

31. புதிய சொல்லாட்சிகள்

32. கல்லாடம்

33. பல்வேறு சிந்தனைகளின் வளர்ச்சி நிலைகள்

— இவை போன்ற பல்வேறு சான்றுகளைத் திருக்குறள் கால ஆய்வுக்கு அறிஞர்கள் கொண்டுள்ளனர்.

ஆனால், இங்கே சுட்டிய சான்றுகள் அனைத்தையும் ஒன்றுசேர்த்த நிலையில் இதுவரை ஒருவரும் ஆய்வு மேற் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றுள், தாம் அறிந்த/தமக்குச் சாதகமான ஒன்றையோ, ஒன்றிரண்டையோ, ஒருசிலவற்றையோ தத்தம் கால ஆய்வுகளுக்குச் சான்றுகளாகக் கொண்டுள்ளனர்.

அவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ள சான்றுகளும் ஆய்வாளர்களின் 'நோக்கு'களுக்கேற்பப் 'பயன்பாடு' பெற்றுள்ளன.

ஆய்வாளர்களின் நோக்கங்கள்

திருக்குறள் கால ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆய்வாளர்கள் பலரின் நோக்கங்கள் வேறுபட்டனவாகவும் மாறுபட்டனவாகவும் விளங்குவதைக் கால ஆராய்ச்சிகளிலிருந்து உய்த்துணர முடிகின்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்க சில வருமாறு:

1. காலங்காண இயலாத நிலையில் ஒரு நூல் அமைந்திருந்தால்தான் அந்நூல் காலங்கடந்த நூலாக விளங்க இயலும் என்னும் உணர்வு (புலவர் செந்துறை முத்து)
2. உலகத்தின் எழுதுமறைகளுள் திருக்குறள்தான் முதல் நூல் என்னும் உணர்வு (அழகரடிகள்)
3. திருவள்ளுவர் முச்சங்கங்களுக்கும் முன்பிருந்தவர் என்னும் எண்ணம் (ச. சோமசுந்தர பாரதியார்).
4. ஆரியக் கருத்துகளின் கலப்புப் பெற்றதே திருக்குறள் என்னும் எண்ணம் (ஆர். நரசிம்மன், எஸ். வையாபுரியார்)
5. திருக்குறள் ஆரியக் கலப்பற்ற தனித்தமிழ் நூல் என்னும் எண்ணம் (இறையனார்).
6. திரு. எஸ். வையாபுரியாரின் கருத்துகளை மறுக்க வேண்டும் என எண்ணியமை (ச. சோமசுந்தர பாரதியார், தி. பழநியப்பன், கு. பரமசிவன், டாக்டர் சி. இலக்குவனார், வீ.ப.கா. சுந்தரம், கா. அப்பாத்துரையார், தேவநேய பாவாணர்).
7. திருக்குறளுக்கென ஏதேனும் ஒரு காலத்தை வரையறுக்க வேண்டும் என்னும் வேட்கை (மறைமலையடிகள்)

8. புதியதொரு கோணத்தில் (சோதிட முறைப்படி) வள்ளுவரின் காலத்தைக் காணவேண்டும் என்னும் முனைப்பு (அ. கிருஷ்ணசாமி)

9. தம் முன் முடிவுக்கு / ஊகத்துக்குத் தக வள்ளுவரின் காலத்தைக் கொண்டு செல்ல நினைத்தல் (மு. தெய்வநாயகம்)

10. அடிப்படைச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வேண்டும் (டாக்டர் கு. மோகனராசு)

11. இலக்கண நெகிழ்ச்சி / வளர்ச்சி நிலைகளின் அடிப்படையில் பழந்தமிழ் நூல்களின் தொடர்புநிலைக் காலம் காணவேண்டும் (டாக்டர் ச. அகத்திய லிங்கம்)

— இவை போன்ற பல நோக்குகள், தத்தம் நோக்கங்களுக்கு ஏற்றனவற்றைச் சான்றுகளாக்கி எதிர்ப்பானவற்றைக் கண்டும் காணாது விட்டுவிடும் ஒருசிலரின் போக்குகள் போன்ற பெரிதும் நடுநிலையற்ற தன்மைகளால்தான் திருக்குறள் கால ஆராய்ச்சியில் சிக்கல்கள் பலவாகியுள்ளன.

அவற்றுள் அடிப்படையான சில சிக்கல்களைக் காண்போம்:

சிக்கல்: 1

புறநானூறு கூறும் 'அறம்'

''ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்
வழுவாய் மருங்கில் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே''

(புறம். 34:1-7)

என்பது ஆலத்தூர் கிழார் கூற்று. இக்கூற்றில் 'அறம்' என்னும் நூல் சுட்டப்படுகின்றது.

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு''

(குறள். 110)

என்னும் குறளுக்கு உரை விளக்கம் தரும்போது, புறம் 34-ஆம் பாடலில் வரும் தொடர்களை / கருத்துகளை இணைத்து விளக்கம் தந்துள்ளார் பரிமேலழகர்.

— இதுவே, புறம். 34-வது பாடல் அடிகளையும் குறள். 110-ஐயும் இணைத்துப் பார்த்த முதல் பார்வை.

கால ஆய்வில் இந்த இணைப்புப் பார்வை பல்வேறு சிக்கல்கள் தோன்றத் தூண்டுதலாய் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது.

சங்கத் தொகை நூல்களுக்கு முற்பட்டது திருக்குறள் என நிலைநாட்டக் கருதிய ஆய்வாளர்களுள் மிகப் பலரும் புறம். 34-ஆம் பாடல் கூறும் 'அறம்' என்பதையே அடிப்படைச் சான்றாகக் கொண்டுள்ளனர்.

புறம். 34-ஆம் பாடல் சுட்டும் 'அறம்' என்பது திருக்குறளே. இது, இத்தகையோர் கருத்து. இதற்கு 1928-ஆம் ஆண்டிலேயே வித்திட்டவர் ச. சோமசுந்தர பாரதியார் ('திருவள்ளுவர்', ப. 19). இவர் கருத்திற்கு ஏற்பும் இருந்துள்ளது (எச். ஏ. பாப்ளே, The Sacred Kural, p.x) எதிர்ப்பும் இருந்துள்ளது (ஆர். நரசிம்மன், திருவள்ளுவர் காலம், ப. 84).

திருக்குறள் சங்கத் தொகை நூல்களுக்குப் பிற்பட்டது எனக் கருதியவர்கள் புறம். 34-ஆம் பாடல் சுட்டும் 'அறம்' திருக்குறள் அன்று என்றனர். இவர்கள் இருவகையினர்.

ஒருசிலர், 'அறம்' எனச் சுட்டப்படுவது மனுதர்ம சாஸ்திரமே என்றனர் (ஆர். நரசிம்மன், திருவள்ளுவர் காலம், ப. 85; டாக்டர் ப. அருணாசலம், குறளின் செய்தி, ப. 285-292).

புறம் சுட்டும் 'அறம்' வேறு ஏதோ ஒரு தமிழ் நூலாக இருக்கலாம், அதனையே புறமும் குறளும் சுட்டியிருக்கலாம் என்னும் ஐயப்பாட்டைத் திரு. எஸ். வையாபுரியாரும் (தமிழ்ச் சுடர் மணிகள், ப. 75), டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தர

னாரும் (Philosophy of Tiruvalluvar, pp. 4-5) எழுப்பினர்; ஆனால், ஆய்வு மேற்கொள்ளவில்லை.

இந்த இருவரின் 'ஐயங்கள்' ஆய்வுக்கு அடித்தளமாயின; டாக்டர் கு. மோகனராசு, டாக்டர் இலக்குமணசாமி ஆகியோர் ஆய்வைத் தொடர்ந்தனர். இவர்களுள் முன்னவரின் முனைப்பு மிகுதி.

புறம். 34-ஆம் பாடல் சுட்டும் 'அறம்' என்பது திருக்குறளும் அன்று; மனுதர்மமும் அன்று; 'அறம்' என்னும் பெயரிலேயே திருக்குறளுக்கு முன் தமிழில் இருந்த அற நூல்; அதனையே புறநானூறும் திருக்குறளும் சுட்டுகின்றன; இக்கருத்துகள் இவ்விருவரால் சான்றுகளோடு முன் வைக்கப் பட்டன. அச்சான்றுகளுள் சில வருமாறு:

''அந்தணாளர்,
நான்மறைக் குறித்தன்று அருளா காமையின்
அறம்குறித் தன்று பொருளா குதலின்''

(புறம். 362:8-10)

''அறம்பா டிற்றே ஆயிழை கணவ''

(புறம். 34:7)

''அறம் புகழ்ந்த வலை''

(புறம். 166:14)

''அறம் கூறும் ஆக்கம் தரும்''

(குறள். 183)

''அறம் பொருள் கண்டார்வாய்ச் சொல்''

(குறள்.141)

''அந்தணர் நூற்கும் அறத்திற்கும்''

(குறள். 543)

''ஏரணம் உருவம் யோகம்
இசைக்கணக் கிரதம் சாலம்
தாரணம் அறமே சாந்தம்
தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளின் றின்ன
மானநூல் யாவும் வாரி

வாரணம் கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாள''

(பழம்பாடல்)

''அறம்உரைத் தானும் புலவன்; முப் பாலின்
திறம் உரைத்தானும் புலவன்; — குறுமுனி
தானும் புலவன்; தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்''

(பொய்யாமொழியார்)

ஆக, 'அறம்' பற்றிய சிக்கல், படிப்படியாக ஒரு தெளிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை அறிய முடிகின்றது.

சிக்கல்: 2

திருக்குறளின் கீழ் எல்லை

திருக்குறள் கால ஆய்வு தொடர்பான சிக்கல்களுள் முடிவு கண்ட ஒன்று திருக்குறளின் கீழ் எல்லை குறித்த தொடர்புநிலைக் காலமாகும்.

சிலம்பிலும் மணிமேகலையிலும் திருக்குறளின் தாக்கம் தெளிவாக இருப்பதால், அவ்விரு நூல்களின் காலமே திருக்குறள் காலத்தின் கீழ் எல்லை என வரையறுத்துள்ளனர்.

எனினும், சிலம்பும் மேகலையும் ஒரே காலத்தனவா? வெவ்வேறு காலத்தனவா என்னும் சிக்கல் இன்றும் தீரவில்லை. ஆனால் மேகலையைவிடச் சிலம்பு முற்பட்டது என்பது அறிஞர்கள் முடிவு.

எனினும், சிலம்பின் காலம் இன்னது என வரையறுப்பதிலுள்ள சிக்கல்கள் இன்னும் தீரவில்லை. சிலப்பதிகார காலத்தின் மேல் எல்லை கி.பி. 2-ஆம் நூற்றாண்டு; கீழ் எல்லை கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

இந்நிலையில், திருக்குறள் காலத்தின் கீழ் எல்லை இன்ன ஆண்டு என வரையறுத்துக் கூற முடியாத சிக்கல் உள்ளது.

சிக்கல் : 3

திருக்குறள் காலத்தின் மேல் எல்லை

தொல்காப்பியம் திருக்குறள் என்னும் இரு நூல்களுள், தொல்காப்பியம் முற்பட்டது என்னும் முடிவினை இன்று ஆய்வுலகம் ஏற்று வருகின்றது.

சங்கத் தொகை நூல்கள், திருக்குறள் ஆகியவற்றுள் (கலித்தொகை, பரிபாடல் தவிர்த்த) சங்கத் தொகை நூல்களுக்குத் திருக்குறள் அப்பாற்பட்டதாகலாம் என்னும் கருத்து இன்று மெல்ல மெல்ல உறுதிப்பட்டு வருகின்றது.

கலித்தொகை, பரிபாடல் ஆகியவை திருக்குறளோடு ஏறத்தாழ ஒத்த காலத்தனவாக இருக்கலாம் என்னும் கருத்து மொழியியலாரிடையே நிலவுகிறது (டாக்டர் ச. அகத்திய லிங்கம், சங்கத்தமிழ்).

இச்சூழலில், தொடர்புநிலைக் காலம் என்னும் அளவில் நோக்கின், தொல்காப்பியமும் சங்கத் தொகை நூல்களும் (கலித்தொகை, பரிபாடல் நீங்கலாக) திருக்குறளுக்கு முற்பட்டவை எனக் கொள்ள இன்றைய ஆய்வுகள் இடம் அளித்து வருகின்றன.

தொல்காப்பியம், சங்கத் தொகை நூல்களுக்கு முற் பட்டது என்று பரவலாகக் கூறப்படினும், அதனை உறுதிப் படுத்த இயலவில்லை. உறுதிப்படுத்த வேண்டுமானால்,

''தொல்காப்பியத்தில் சங்க காலத்துக்கு முற்பட்ட கால நிலையின் எதிரொலியினையும் காணலாம்; சங்க கால எதிரொலியினையும் காணலாம்; அதற்குப் பிற்பட்ட காலத்து எதிரொலியினையும் காணலாம். பல்வேறு கால நிலைகளைப் பிரித்தறிதல் அரிது.''

என்பது போன்ற கூற்றுகளுக்கு (Dr. T. P. Meenakshisundaram, A History of Tamil Language, p. 52) விடை கண்டாக வேண்டும்.

அப்படியே தொல்காப்பியம் முந்தியது எனக் கொண் டாலும், அதனுடைய காலம் என்ன என்பதில் பல்வேறு கருத்து வேறுபாடுகளும் மாறுபாடுகளும் காணப்படுகின் றன.

இதன் காலத்தின் மேல் எல்லை கி.மு. 12,000 வரை செல்கிறது (சிதம்பர புன்னைவன நாதர்); கீழ் எல்லை கி.பி. 500 வரை நீள்கிறது (எஸ். வையாபுரியார்). கால இடைவெளி 12,500 ஆண்டுகள்!

இந்தக் கால இடைவெளியில், திருக்குறள் காலத்தின் மேல் எல்லையை எங்கே வரையறுப்பது?

சிக்கல்: 4

மேற்கணக்கும் கீழ்க்கணக்கும்

''ஐம்பது முதலா ஐந்நூறு ஈறா
ஐவகைப் பாவும் பொருள்நெறி மரபின்
தொகுக்கப் படுவது மேற்கணக் காகும்'' (247)

''அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி
அறம்பொருள் இன்பம் இடுக்கி அவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும் (248)

— இவை, மேற்கணக்கு, கீழ்க்கணக்கு - என்பனவற்றிற்குப் பன்னிரு பாட்டியல் தரும் வனரயறைகள்.

இந்த வரையறைகளில், மேற்கணக்கு, கீழ்க்கணக்கு என்பனவற்றின் தொகுப்புப் பார்வையில், சிறப்புடையவை சிறப்பற்றவை என்னும் நோக்கு இல்லை.

ஆனால், மேற்கணக்கு நூல்கள் என்றால் 'சிறப்புக் குரியவை' என்றும், கீழ்க்கணக்கு நூல்கள் என்றால் 'சிறப் பற்றவை' என்றும் பார்க்கும் பார்வை, திறக்குறள் கால ஆய்வு மேற்கொண்ட ஆய்வாளர்களிடம் காணப்படு கின்றது.

''திருக்குறளைச் சிறுநூல் வரிசையில்
சேர்த்தல் பெருந்தவறு''

எனத் திரு. வீரபாகு என்பவர் கூறியிருப்பதாகத் தம் நூலில் கூறுகின்றார் புலவர் செந்துறை முத்து (திருவள்ளுவர், கி.மு. நாலாயிரம், ப. 18). இவ்வாறுள்ள வழக்குப் 'பொருந் தாது' என்று இவரும் கூறுகின்றார் (மு. நூல். ப. 19).

> ''முத்தமிழ் இலக்கியத்தில் இடம்பெறாத அத்தனி முதல் நூலும் பின்னாளில் நல்லிலக்கியங்களுள் ஒன்றாகப் பேசப்படத் தொடங்கிய பின்னர், அதுபோன்ற பிற நூல்களும் எழுந்து அவை திருக்குறளுடன் சேர, 'கீழ்க் கணக்கு அல்லது சில்லறை நூல்கள்' என்று தொகுக் கப்பட்டிருத்தல் சாலும்''

என ஓர் ஊகத்தை முன் வைக்கிறார் பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார். மேலும்,

> ''கீழ்க்கணக்கு என்பது அதிக முக்கியமல்லாத நூல் என்று பொருள்படுமன்றோ? சங்க காலத்தே இயற்றப் பட்ட பழைய நூலாயிருப்பின் திருக்குறளைக் கீழ்க் கணக்கிலே சேர்த்து ஒதுக்கியிருப்பரோ?''

எனத் திருக்குறளைத் தாழ்த்தக் கருதும் முரண்பட்ட பார்வை யும் எழுந்துள்ளது (ஆர். நரசிம்மன், திருவள்ளுவர் காலம், ப. *185*).

இதனால், திருக்குறளைப் பதினெண்கீழ்க்கணக்கு நூல் களின் பட்டியலிலிருந்து நீக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டுள்ளது. 'முப்பால் கடுகம்' என்னும் தொடர் குறளை யும் திரிகடுகத்தையும் சுட்டுவதாய் இருக்க, 'மூன்று பகுதிப் பட்டதாகிய திரிகடுகம்' எனப் பொருள் கொண்டு, திருக் குறளைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களின் பட்டியலி லிருந்து பிரித்தெடுக்க முயன்றுள்ளனர் (மேற்கோள், ந. சேதுரகுராமன், பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவு கள், ப. *3*), கே. என். சிவராசனார், சி. வை. தாமோதர னார் போன்றோர் 'முப்பால்' எனப் பதினெண்கீழ்க் கணக்கு நூற் பட்டியலில் சுட்டப்படுவது திருக்குறள் அன்று என்றும் கூறியுள்ளனர் (மது. ச. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, ப. *130*).

மேலும், மேற்கணக்கு நூல்கள் என்றால் முற்பட்ட நூல்கள் என்றும், கீழ்க்கணக்கு நூல்கள் என்றால் பிற்பட்ட நூல்கள் என்றும் கருதும் போக்கும், கால ஆய்வுகளில் காணப்படுகின்றன (ஆர். நரசிம்மன், திருவள்ளுவர் காலம், ப. *185*), இதற்கு முரண்பட்ட கருத்தும் கூறப்பட்டுள்ளது (புலவர் அ. நடேசனார், திருக்குறள் உரை விளக்கம், ப. *7*).

அன்றியும், களவழி நாற்பது பாடிய பொய்கையாரையும், இன்னா நாற்பது பாடிய கபிலரையும் சங்கப் புலவர்களாகக் கொண்டு இடர்ப்பட்டுள்ள போக்கைக் கால ஆய்வுகளில் பரவலாகவே காண முடிகின்றது (ச. சோமசுந்தர பாரதியார்).

சங்கப் புலவர்கள் வேறு, பதினெண்கீழ்க்கணக்குப் பாடல்கள் பாடிய புலவர்கள் வேறு எனக் கொள்ளும் நிலை கால ஆய்வில் தற்போது வலுப்பெற்று வருகின்றது; எனினும் ஆழமான ஆய்வுகள் இன்னும் மேற் கொள்ளப் படவில்லை.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் திருக்குறளை முற்பட்டதாகக் கருதும் பார்வை கால ஆய்வுகளில் பரவலாகவே காணப்படுகிறது.

சிக்கல் : 5

வடமொழிச் சொற்களின் தாக்கம்

தொல்காப்பியம், திருக்குறள், சங்கத் தொகை நூல்கள் ஆகிய அனைத்திலுமே வடமொழிச் சொற்களின் கலப்பைக் காணமுடிகின்றது.

சங்கத் தொகை நூல்களைச் சேர்ந்த பாடல்கள் அனைத்திலுமே வடமொழிச் சொற்களின் கலப்பு உண்டென்று சொல்லிவிட முடியாது.

தொல்காப்பியத்தில் அதிகாரம், காண்டிகை, சூத்திரம், படலம், பிண்டம், மந்திரம், மங்கலம் போன்ற பல வடமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. சூதர், ஓரை போன்ற வரலாற்றுத் தொடர்புடைய பிறமொழிச் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

திருக்குறளில் அந்தம், அவி, ஆகுல, ஆதி, ஆசாரம், இந்திரன், உலகு, கணம், கலம், பாக்கியம், பாவம், பூசனை, மங்கலம் போன்ற வடமொழிச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுள்ள வடமொழிச் சொற்களில் சில வருமாறு :

அங்குசம், அசுரர், அமிர்தபானம், அரமியம், அவுணர், ஆராதனை, ஆதி, உத்தி, உற்கம், எந்திரம், கலாபம், கபிலம், சகடம், சருமம், சாலேகம், சித்திரம், தடாகம், தவசியர், தாமம், திசை, நந்தி, நாகம், மது, மாகதர், மிலேச்சர், வச்சிரம், விச்சை, பதி, பதுமம், பிரசம், பூதம், போகம்.

சங்கத் தொகை நூல்கள், திருக்குறள் ஆகியவற்றிற் கிடையிலான தொடர்புநிலைக் காலத்தை வடமொழிச் சொற்களின் அடிப்படையில் காண ஆய்வாளர்கள் முனைந்துள்ளனர். அது தொடர்பாகச் சில சிக்கல்களுக்கு நாம் விடை கண்டாக வேண்டும்.

சங்கத் தொகை நூல்கள் / பாடல்கள், பல்வேறு காலத்தைச் சேர்ந்தவை; பல்வேறு இடங்களைச் சேர்ந்த புலவர்களால் பாடப்பட்டவை.

அவற்றில் ஒரு காலத்துப் பாடல்களுள் வடமொழிச் சொற்கள் இல்லாமல் இருக்கலாம்; பிறிதொரு காலத்துப் பாடல்களுள் வடமொழிச் சொற்கள் ஒப்பு நிலையில் கூடுதலாகக் கலந்திருக்கலாம்.

ஓரிடத்துப் புலவர்கள் வடமொழித் தாக்கம் பெறாதவர்களாகவும், பிறிதோரிடத்துப் புலவர்கள் வடமொழித் தாக்கம் கூடுதலாகப் பெற்றவர்களாகவும் இருக்கலாம்.

இந்நிலையில், சங்கத் தொகை நூல்கள் அனைத்தையும் ஒருசேரக் கொண்டு, வடமொழிச் சொற்களின் தாக்கம் அடிப்படையில் தொடர்புநிலைக் காலம் காண்பது சரியான ஆய்வாகுமா?

தொடர்புநிலைக் காலம் காணும்போது, வடமொழிச் சொற்களின் எண்ணிக்கை அடிப்படையிலான கூடுதல் குறைவுகளை அடிப்படையாகக் கொள்வதா?

அல்லது,

தமிழ் மொழிச் சொற்கள், வடமொழிச் சொற்கள் ஆகியவற்றின் அளவிலான விழுக்காட்டை (%) அடிப்படையாகக் கொள்வதா?

அல்லது,

சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்றுத் திருக்குறளில் இடம்பெறாத வடமொழிச் சொற்கள், திருக்குறளில் இடம் பெற்றுச் சங்கத் தொகை நூல்களில் இடம்பெறாத சொற்கள் என்றும் இந்தப் போக்கை அளவாகக் கொள்வதா?

இக்கேள்விகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு, வடமொழிச் சொற்களின் தாக்கம் அடிப்படையிலான தொடர்புநிலைக் காலம் காண்பதே நேரியது என்பதை மறுக்க இயலாது.

இதற்குப் பொறுமையோடு கூடிய அறிவியல் பார்வை தேவை.

வடமொழிச் சொற்களின் தாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு தொடர்புநிலைக் காலம் காண முயன்ற ஆய்வாளர்கள், மேற்கூறிய 'பார்வை'யின் ஒரு விழுக்காட்டளவையேனும் (1 %) தொட்டிருப்பார்களா என்பது ஐயப்பாடே.

அனைத்திற்கும் மேலாக எழும் ஒரு கேள்வி; சங்கத் தொகை நூல்களிலும் திருக்குறளிலும் காணும் சொற்களில் எவை எவை வடமொழிச் சொற்கள் என்பது.

இந்தக் கேள்விக்குத் தேவை இல்லாமல் இல்லை.

திருக்குறளில் 123-க்கும் மேற்பட்ட வடமொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளன எனக் கருதும் திரு. எஸ். வையாபுரியார் அவர்கள், ஏர், கழகம், களம், குடி, கூர், கொக்கு, கோடி, திரு, தோள், நீர், மடமை, மணி, மாடு, வளை போன்ற பல சொற்களையும் வடமொழிச் சொற்களாகக் கொள்கின்றார்.

இவ்வாறு கொண்டு,

> ''இங்குக் காட்டியனவெல்லாம் வடசொற்களை எடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மையுடையவர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன''
>
> (தமிழ்ச்சுடர் மணிகள், ப. 68)

என்னும் முடிவுக்கு(?) வருகின்றார்.

இவருக்கு முற்றிலும் மாறான முடிவு(?) உடையவராகத் திரு. தேவநேய பாவாணர் காணப்படுகின்றார்.

திரு. வையாபுரியார் வடமொழிச் சொற்கள் எனக் கூறும் 125-க்கு மேற்பட்டனவற்றுள், நூற்றுக்கு மேற்பட்டனவற்றைத் தூய தமிழ்ச் சொற்கள் எனக் கூறி,

> ''இது பொழுதுள்ள இலக்கிய நூல்களுள் முதலான திருக்குறளிலும் ஒருசில வடசொற்களிருப்பதால், வரலாற்றாராய்ச்சியும் மொழியாராய்ச்சியும் இல்லாத சில புலவரும் துறவியரும், திருவள்ளுவரும் தம் நூற்கு வடசொற்றுணை வேண்டினரெனக் கருதுகின்றனர்''.
>
> (திருக்குள் மரபுரை. ப. 32)

எனக் கருத்துரைக்கின்றார்.

இருவரும் எதிரெதிரான இருவேறு எல்லைகளில் நின்று தத்தம் கருத்துகளைக் கூறியுள்ளதைக் காணமுடிகின்றது.

இவ்விருவருள் யாரை நம்புவது?

கால ஆய்வுகளில் பொதுவாகக் காணப்படும் 'போக்கு' இதுதான்.

வடமொழிச் சொற்களின் அடிப்படையில் தொடர்பு நிலைக் காலம் காண முற்பட்ட ஆய்வுகள் மிகப்பலவும் நம்பிக்கை தருவனவாக இல்லை.

ஆனால்,

நடுநிலை உணர்வோடு, பொறுமையாக அறிவியல் அடிப்படையில் ஆய்வு மேற்கொண்டால், வடமொழிச் சொற்களின் தாக்கம் தொடர்புநிலைக் காலம் காண ஓரளவு துணையாகும் என்பதில் ஐயம் இல்லை.

சிக்கல்: 6

ஒப்புடைய கருத்துகளும் தொடர்புநிலைக் காலமும்

காலம் இன்னது என உறுதி செய்யப்படாத இருவேறு நூல்களில் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, ஒரு நூல் முந்தியது என்றும் இன்னொரு நூல் பிந்தியது என்றும் காணும் போக்குகள் திருக்குறள் கால ஆராய்ச்சிகளில் பரவலாகவே காணப்படுகின்றன.

திருக்குறள் கால ஆராய்ச்சியைப் பொறுத்தவரை இத்தகைய போக்குடையோரைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம் :

1. தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, தொல்காப்பியமே முற்பட்டது என்றவர்
2. தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, திருக்குறளே முற்பட்டது என்றவர்
3. சங்கத் தொகை நூல்களிலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, சங்கத் தொகை நூல்களே முற்பட்டவை என்றவர்
4. சங்கத் தொகை நூல்களிலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, திருக்குறளே முற்பட்டது என்றவர்
5. வடமொழி நூல்களிலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, வடமொழி நூல்களே முற்பட்டவை என்றவர்
6. வடமொழி நூல்களிலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு, திருக்குறளே முற்பட்டது என்றவர்,
7. விவிலியத்திலும் திருக்குறளிலும் காணும் ஒப்புடைய கருத்துகளைக் கொண்டு விவிலியமே முற்பட்டது என்றவர் (மு. தெய்வநாயகம்)

இத்தகைய போக்குகளுக்கு அவரவர் நோக்குகளே அடிப்படைகள்.

இவ்வொப்புகளின் அடிப்படையில் ஆய்வுலகில் முன் வைக்கப்பட்டுள்ள கருத்துகள் ஏற்கத்தக்கன அல்ல.

சிக்கல்களுக்குக் காரணமான பிற

மேற்கூறிய சிக்கல்களே அன்றிப் பின்வருவனவற்றின் அடிப்படையிலும் திருக்குறள் கால ஆராய்ச்சியில் பல சிக்கல்கள் எழுந்துள்ளன :

1. திருவள்ளுவர் கதைகள்
2. திருவள்ளுவமாலைப் பாடல்கள்
3. பழைய உரையாசிரியர்களின் உரைகள்
4. திரு. எஸ். வையாபுரி அவர்களின் திருக்குறள் கால ஆராய்ச்சிகள்

விரிவஞ்சி, இவற்றின் அடிப்படையிலான சிக்கல்கள் இக்கட்டுரையில் ஆராயாது விடப்பட்டுள்ளன.

நிறைவுரை

திருக்குறள் கால ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், பின்வரும் முடிவுகளை ஆய்வாளர்கள் முன்வைத்திருப்பதை அறிய முடிகின்றது.

1. திருவள்ளுவர் தொடர்பான கதைகள் கற்பனைகள்
2. திருவள்ளுவமாலைப் பாடல்கள் சங்கப் புலவர்களால் பாடப்பட்டவை அல்ல.
3. வடமொழி—பண்பாட்டுத் தாக்கம் திருவள்ளுவருக்கு முன்னரே தமிழகத்தில் நிகழ்ந்துள்ளது; அதன் எதிரொலியைத் திருக்குறளிலும் காணமுடிகின்றது.
4. தொல்காப்பியம் திருக்குறளுக்கு முற்பட்டது.
5. திருக்குறள் காலத்தின் கீழ்-எல்லை சிலப்பதிகாரம்
6. பதினெண்கீழ்க்கணக்கு நூற்பட்டியலில் சுட்டப்படும் 'முப்பால்' திருக்குறளே.
7. இரு நூல்களில் காணும் ஒத்த கருத்துகளை மட்டுமே கொண்டு, ஒரு நூல் முந்தியது என்றோ, பிந்தியது என்றோ முடிவு செய்ய முடியாது.

பின்வரும் இரு கருத்துகள் மேலும் ஆய்வுக்குரியனவாக உள்ளன.

1. சங்கத் தொகை நூல்கள் (கலித்தொகை, பரிபாடல நீங்கலாக) திருக்குறளுக்கு முற்பட்டவை.
2. புறம். 34-ஆம் பாடல் சுட்டும் 'அறம்' என்பது அப்பெயரில் தமிழில் திருக்குறளுக்கு முன் தோன்றிய ஓர் அறநூல்.

திருக்குறள் கால ஆராய்ச்சியில் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ள சிக்கல்கள் பின்வருமாறு:

1. சிலம்பு, மணிமேகலை ஆகிய நூல்களின் காலங்கள்.
2. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் மொழி நிலையும் தொடர்புநிலைக் காலமும்.
3. தமிழில் உள்ள பிறமொழிச் சொற்களும் அவை திருக் குறளில் இடம்பெற்ற காலங்களும்.
4. திருக்குறள் எழுந்த சூழல்—பிறர் கருத்துகளின் தாக் கமும் காலமும்.
5. திருக்குறள் நூலாசிரியரைப் பற்றிய விவரங்கள்.
6. பல்வேறு சிந்தனைகளின் வளர்ச்சியில் திருக்குறளின் இடம்.
7. பழந்தமிழ்ப் புலவர்களின் / அரசர்களின் கால நிரல்.

திருக்குறள் தொடர்பான கால ஆராய்ச்சிகள் மேம்பட வேண்டுமானால், பின்வரும் கருத்துகளை ஆய்வாளர்கள் நினைவில் கொள்ள வேண்டும்:

1. தனிநபர் போற்றுதலும் தூற்றலும் விட்டுவிட வேண்டும்.
2. ஆரியர் திராவிடர் என்னும் பகுப்புணர்விலிருந்து விடுபட வேண்டும்.
3. தொடர்புடைய பிற மொழி—பண்பாடு பற்றிய தெளிந்த அறிவு பெறவேண்டும்.
4. விருப்பு வெறுப்பின்றிச் சான்றுகளாக முன்வைக்கப் பட்டுள்ள அனைத்துக் கூறுகளையும் ஒருங்கிணைத்து ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
5. தீர்க்கப்படாமல் இருக்கும் சிக்கல்களுக்கு நடுநிலை நின்று தீர்வுகாண வேண்டும்.
6. ஊகங்கள், நம்பிக்கைகள் போல்வனவற்றை விடுத்து அறிவியல் வழிப்பட்டனவாக ஆய்வுப் போக்கு களை அமைத்துக்கொள்ள வேண்டும்.
7. பல துறை அறிஞர்களையும் ஒருங்கிணைத்த பல்துறை நோக்கிலான ஒருங்கிணைந்த ஆய்வினை மேற் கொள்ள வேண்டும்.

8. அனைத்திற்கும் மேலாகத் திருவள்ளுவரின் உண்மையான காலம் காண வேண்டும் என்னும் வேட்கை உடையராதல் வேண்டும்.

திருவள்ளுவர் காலம் — ஆராய்ச்சியாளர்களின் கருத்துகள்

திருவள்ளுவர் காலம்	எடுத்துரைத்த அறிஞர்	கருத்து இடம் பெற்ற நூல் / 'கட்டுரை'
கி.மு. 6027	அழகரடிகள்	'மறைத்தமிழ்' (1968)
கி.மு. 4000	செந்துறைமுத்து	திருவள்ளுவர் கி.மு. 4000 (1963)
கி.மு. 1200- கி.மு.500	கா.சுப்பிரமணியம்	'திருவள்ளுவர் திருக்குறள்' (1927)
கி.மு. 500	,,	இலக்கிய வரலாறு (1957)
கி.மு. 500- கி.மு. 300	மா. இராசமாணிக்கனார்	'தனிப்பட்ட தமிழ் நூல்' (1959)
கி.மு. 400	ஆ. அரங்கநாதன்	திருக்குறள் மூலமும் உரையும் ஆங்கில மொழி பெயர்ப்பும் (1933)
கி.மு. 300-	சி. எம். நடராசன்	'வள்ளுவர் வாக்கு' (1957)
கி.மு. 200	பா. நடராசன்	வள்ளுவர் தந்த பொருளியல் (1965)
கி.மு. 300- கி.மு. 100	மா. இராசமாணிக்கனார்	திருவள்ளுவர் காலம்
கி.மு. 200	ஞா. தேவநேயப் பாவாணர்	'திருவள்ளுவர் காலம்' (1969)
	கு. பரமசிவம்	'வள்ளுவர் காலம்' (1953)

திருவள்ளுவர் காலம்	எடுத்துரைத்த அறிஞர்	கருத்து இடம் பெற்ற நூல் / 'கட்டுரை'
கி.மு. 200-	அ. நடேசன்	திருக்குறள் உரை விளக்கம் *(1954)*
கி.மு. 100	அ. சக்கரவர்த்தி	Thirukkural (1953)
கி.மு. 100	அ. சிதம்பரனார்	'திருவள்ளுவர்' *(1934)*
	க. வெள்ளைவாரணன்	'தமிழ் இலக்கிய வரலாறு' *(1959)*
கி.மு. 100- கி.பி. 100	வே. அந்தினிஜான்	வள்ளுவரும் விவிலியமும் *(1979)*
இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்	திருக்குறள் வீ. முனுசாமி	திருவள்ளுவரும் திராவிடர் கொள்கையும் *(1948)*
	கா. மு. சின்னப்பா	திருக்குறள் மூலமும் அதிகார முறை வைப்பும் *(1950)*
	மணி. திருநாவுக்கரசு	திருவள்ளுவர் திருக்குறள்
	ம. இரத்தினம்	திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் *(1951)*
	நாமக்கல் கவிஞர்	வள்ளுவரின் உள்ளம் *(1954)*
	மு. வரதராசனார்	திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் *(1955)*
	அ. கிருட்டிணசாமி	திருவள்ளுவர் காவியம் *(1958)*
	ஆர். கே. சண்முகம்	திருக்குறளின் பெருமை *(1959)*
	ந.சி. கந்தையா	திருக்குறள் மூலமும் ஆங்கில மொழி பெயர்ப்பும் *(1961)*

திருவள்ளுவர் காலம்	எடுத்துரைத்த அறிஞர்	கருத்து இடம் பெற்ற நூல் / 'கட்டுரை'
	தி. மாணிக்கவாசகம்	வான்புகழ் வள்ளுவர் (1965)
	கா. சி. நாகராசன்	காந்தியும் வள்ளுவரும் (1968)
	கி.ஆ.பெ. விசுவ நாதம்	வள்ளுவரும் குறளும் (1969)
	சி. இலக்குவனார்	'திருவள்ளுவர்-தமிழகத்தின் முதல் புரட்சியாளர்' (1970)
	நா.ரா. முருகவேள்	'திருக்குறளும் சைவமும்' (1970)
	இல. செ. கந்தசாமி	திருக்குறளில் வேளாண்மை (1973)
	புலியூர் கேசிகன்	திருக்குறள் பரிமேலழகர் உரை (1976)
கி.மு. 30- கி.மு. 20	மறைமலையடிகள்	திருக்குறள் ஆராய்ச்சி (1956)
கி.பி. 30-	ந.சி.கந்தையா	'திருவள்ளுவர்' (1953)
கி.மு. 50		
கி.பி. 100	எஸ். அனவரத விநாயகம்	திருவள்ளுவ நாயனார் சரித்திரம் (1908)
	ந.மு. வேங்கடசாமி	'வள்ளுவர் வாய்மொழி' (1927)
	ஜே.எம்.கனக நாயகம்	'The Tirukkural' (1931)
	டி.ஆர்.சீனிவாசன்	திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்தமும் 'முன்னுரை' (1932)
	ச. தண்டபாணி தேசிகர்	திருக்குறள் உரை உரை விளக்கம் (1952)

திருவள்ளுவர் காலம்	எடுத்துரைத்த அறிஞர்	கருத்து இடம் பெற்ற நூல் / 'கட்டுரை'
	கோ. வடிவேலன்	திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும் (1972)
கி.பி. 200-க்கு முன்	கா. சுப்பிரமணியம்	'திருவள்ளுவர்' (1924)
	மு. கோவிந்தன்	இலக்கிய காலம் (1956)
	ச.சோ. பாரதியார்	'திருவள்ளுவர் காலமும் திரு. வையாபுரிப் பிள்ளை அவர்களின் கொள்கையும்' (1962)
கி.பி. 200-க்குப் பின்	எஸ். மகராஜன்	'Tiruvalluvar' (1979)
கி.பி. 300-க்கு முன்	எஸ். ஜெயலட்சுமி	திருக்குறளும் தம்மபதமும் (1976)
கி.பி. 450 — கி.பி. 600	எஸ். வையாபுரியார்	இலக்கிய மணிமாலை (1957)
கி.பி. 500 (1970)	பி. ஸ்ரீ	வள்ளுவரும் சாக்ரடீசும்
கி.பி. 800 - கி.பி. 1000	ஜி.யூ.போப்	The Sacred Kural (1931)

பயன்பட்ட நூல்கள் : கட்டுரைகள்

1. அகத்தியலிங்கம், ச., **சங்கத் தமிழ்**, அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகம், அண்ணாமலை நகர், 1983.
2. அப்பாத்துரை, கா., **வளளுவர் நிழல்**, ஔவை நூலகம், சென்னை, 1957.
3. அரங்கநாதர், ஆ., **திருக்குறள் மூலமும் உரையும் ஆங்கில மொழிபெயர்ப்பும்**, சுவர்ண விலாஸ், சென்னை, 1933.
4. அருணாசலம், ப., **குறளின் செய்தி**, பாரி நிலையம், சென்னை, 1968.

5. அழகரடிகள், 'மறைத்தமிழ்' திருவள்ளுவர் திருநாள் விழா மலர், சை.சி.நூ.கழகம், சென்னை, 1968.

6. அனந்த நாதனார், தி., திருக்குறள் ஆராய்ச்சியும் ஜைன சமய சித்தாந்த விளக்கமும், ஸ்ரீ ஆதிமூலம் அச்சியந்திர சாலை, சென்னை, 1932.

7. அனவரத விநாயகம், எஸ்., திருவள்ளுவ நாயனார் சரித்திரம், மதராஸ் ரிப்பன் அச்சுக்கூடம், சென்னை, 1908.

8. இரத்தினம், பி., திருக்குறள் மூலமும் பரிமேலழக ருரையும், இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை, 1951.

9. இராகவனார், மு., ஆராய்ச்சித் தொகுதி, பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1964.

10. இராசமாணிக்கனார், மா., தால ஆராய்ச்சி, பாரி நிலையம், சென்னை, 1957.

11. ...., தமிழ் மொழி-இலக்கிய வரலாறு, பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1969.

12. ...., திருவள்ளுவர் காலம், பாரி நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1962.

13. இராமகிருஷ்ணன், எஸ்., திருக்குறள் ஒரு சமுதாயப் பார்வை, மீனாட்சி புத்தக நிலையம், சென்னை, 1980.

14. இராமச்சந்திரன், சி.எம்., 'வள்ளுவர் வாக்கு', வெள்ளி விழா மலர், திருவள்ளுவர் கழகம், தென்காசி, 1957.

15. இலக்குமணசாமி, கொ., 'திருக்குறளும் சங்க இலக் கியங்களும்', திருக்குறட் சிந்தனைகள், அண்ணா மலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1979.

16. இலக்குவனார், சி., தொல்காப்பிய ஆராய்ச்சி, வள் ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1961.

17. இறையனார், திருக்குறள் ஆராய்ச்சி, தமிழகம், திருச்சி, 1949.

18. கந்தசாமி, சே.ந., **திருக்குறள் கூறும் உறுதிப்பொருள்**, மணிவாசகர் நூலகம், சென்னை, 1977.

19. கந்தசாமி, டி.எஸ்., **திருக்குறள் மூலமும் பரிமேலழக ருரையும்**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1937.

20. கந்தையா, ந.சி., **திருவள்ளுவர்**, ஆசிரியர் நூற் பதிப் புக் கழகம், சென்னை, 1953.

21. கழகம், **பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1966.

22. கனகசுந்தரம், த., 'திருவள்ளுவர் ஓர் ஆராய்ச்சி' கோவை திருவள்ளுவர் சங்க மலர், கோவை, 1937.

23. கனகசுந்தரம், தி. த. 'திருவள்ளுவர்', **செந்தமிழ்ச் செல்வி, 9:1**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1931.

24. கிருட்டிண மூர்த்தி, ரா., 'காலக் கண்ணாடியா? கலங்கரை விளக்கமா?', **திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டு நிறைவு விழா மலர்**, திருவள்ளுவர் கழகம், மதுரை, 1970.

25. கோபாலகிருஷ்ணன், வை.மு., **திருக்குறள் மூலமும் பரிமேலழகருரையும்**, வை.மு. கோபாலகிருஷ்ண மாசாரியார், கம்பெலி, சென்னை, 1965.

26. கோவிந்தன், செ., **சிலப்பதிகாரம் பதினோராம் நூற்றாண்டுக் காப்பியம்**, சை. சி. நூ. கழகம், சென்னை, 1975.

27. சக்கரவர்த்தி நயினார், அ., **திருக்குறள் வழங்கும் செய்தி**, பாரி நிலையம், சென்னை, 1959.

28. சதாசிவனார், தி. வி., **தமிழ் இலக்கிய வரலாறு (கி.பி. 250—கி.பி. 600)**, அண்ணாமலைப் பல் கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1963.

29. சாரங்கபாணி, இரா. **குறள் விருந்து**, தி. சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி, 1973.

30. சிதம்பரனார், அ., 'திருவள்ளுவர்', **செந்தமிழ்ச் செல்வி 13:1**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1939.

31. சிதம்பரனார், சாமி, **வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்**, ஜனசக்தி பிரசுராலயம், சென்னை, 1956.

32. சிவலிங்கனார், அ., **வள்ளுவரைப் பற்றி**, முருகன் புத்தக நிலையம், மதுரை, 1967.

33. சுத்தானந்த பாரதியார், சுவாமி, **திருக்குறளின்பம்**, அன்பு நிலையம், சிங்கப்பூர், 1937.

34. சுந்தரம், வீ.ப.க., 'வள்ளுவர் காலமும் வையாபுரியாரும்', **செந்தமிழ்ச் செல்வி**, 37:1, சை. சி. நூ. கழகம், 1962.

35. சுப்பிரமணியம், கா., 'திருவள்ளுவர்', '**செந்தமிழ்ச் செல்வி** 2:1 சை.சி.நூ. கழகம், சென்னை, 1927.

36. சுப்பிரமணியம், பி. எஸ்., **திருக்குறள்-அறத்துப்பால்** பாலருரையுடன், முருக விலாஸ் ஜனானுகூல பிரஸ், திரிசிரபுரம், 1939.

37. சுப்பிரமணியம், வெ.சு., **திருக்குறளும் காலமும்**, ஸ்ரீதேவி அச்சகம், சென்னை, 1956.

38. சுப்பிரமணியன், ந. **வள்ளுவரும் வாய்மொழியும்**, ஓரியண்ட் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை, 1960.

39. செந்துறை முத்து, **திருவள்ளுவர் கி.மு. நாலாயிரம்**, மனோண்மணிய புத்தக நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1963.

40. சோமசுந்தர பாரதியார், ச., **திருவள்ளுவர்**, நாவலர் புத்தக நிலையம், மதுரை, 1929.

41. ...., 'திருவள்ளுவர் காலமும் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் கொள்கையும், **திருவள்ளுவர் காலம்**, பாரி நிலையம், சென்னை, 1962.

42. தண்டபாணி, ச., **திருக்குறள் உரைவளம்** (காமத்துப் பால்), ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமபுரம், 1952.

43. திருநாவுக்கரசு, க.த., **சான்றோர் கண்ட திருவள்ளுவர்**, மணியகம், சென்னை, 1979.

44. ...., **திருக்குறளும் இந்திய அறநூல்களும்**, மணி யகம், சென்னை, 1978.

45. துரை அரங்கசாமி, மொ.அ., 'திருவள்ளுவர் உலகப் பெருஞ்சான்றோர்களில் ஒருவர்', **திருவள்ளுவர்** 2000-ம் ஆண்டுத் திருநாள் விழா சிறப்பு மலர், சென்னை, 1969.

46. துரைசாமி, ஔவை சு., **தெய்வப் புலவர் திருவள்ளுவர்**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1950.

47. தேவநேயன், ஞா., **திருக்குறள்-தமிழ் மரபுரை**, நேச மணி பதிப்பகம் காட்பாடி, 1969.

48. நடராசன், பா., **வள்ளுவர் தந்த பொருளியல்**, பழனி யப்பா பிரதர்ஸ், சென்னை, 1965.

49. நடேசன், அ., **திருக்குறள் உரை விளக்கம்**, பழனி யப்பா பிரதர்ஸ், சென்னை, 1954.

50. நரசிம்மன், ஆர். 'திருவள்ளுவர் காலம்', **செந்தமிழ்** 33:1 மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை, 1935.

51. பரமசிவம். கு., 'வள்ளுவர் காலம்', **செந்தமிழ்ச் செல்வி** 28:1, சை. சி. நூ. கழகம், சென்னை, 1953.

52. பழனியப்பன், தி.பொ. 'திருக்குறள்', **திருவள்ளுவர் காலம்**, பாரி நிலையம், சென்னை, 1962.

53. பெருமாள், அ.கா. **தமிழ் இலக்கியங்களின் காலம்** பற்றி வையாபுரியாரின் கணிப்பு, கிரியா, சென்னை, 1963.

54. மறைமலையடிகள், **திருக்குறள் ஆராய்ச்சி**, பாரி நிலையம், சென்னை, 1977.

55. முத்துராசன், கு., **சங்க காலம்**, தேன் தமிழ்ப் பதிப் பகம், சேலம், 1980.

56. மோகனராசு. கு, **தொல்காப்பியமும் திருக்குறளும்-ஓர் ஒப்பாய்வு**, சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை, 1983.

57. ...., திருவள்ளுவர் காலம், **வள்ளுவர் வழி** (மாத இதழ்) சென்னை, 1986, சனவரி முதல்.

58. வடிவேலு, கோ., **திருக்குறள் மூலமும் பரிமேலழக ருரையும் (அறத்துப்பால்)** மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை, 1972.

59. வெள்ளைவாரணன், க., தொல்காப்பியம், அண்ணா மலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர், 1957.

60. வேங்கடசாமி, ந.மு. 'வள்ளுவர் வாய்மொழி', **செந் தமிழ்ச் செல்வி, 5:1**, சை.சி.நூ. கழகம், சென்னை, 1928.

61. வையாபுரியார், எஸ்., இலக்கிய மணிமாலை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1954.

62. வையாபுரியார், எஸ்., தமிழ்ச் சுடர்மணிகள், பாரி நிலையம், சென்னை, 1968.

63. பி. ஸ்ரீ..........., வள்ளுவரும் சாக்கரடீஸூம், ஸ்டார் பிரசுரம், சென்னை, 1970.

64. ஜெயலஷ்மி, எஸ்., திருக்குறளும் தம்மபதுமும், சர்வோ தய இலக்கியப் பண்ணை, மதுரை.

65. Chakravarti, A., Thirukkural, Divacesan Pres, Madras, 1953.

66. Dhamotharan, A., A Grammar of Thirukkural South Asia Institute, University of Heidelberg, Delhi, 1972.

67. Kanaganayagam, J.M. The Thirukkural, Patriot Press, Ceylon, 1931.

68. Maharajan, S. Thiruvalluvar, Sahitya Akademi, New Delhi, 1979.

69. Meenakshi Sundaram, T.P. Philosophy of Thiruvalluvar, Madurai University, Madurai, 1969.

70. Popley, H.A., The Secred Kural, Association Press, Calcutta, 1931.

71. Rajagopalanar, C. Kural, Rochous & Sons Ltd. Madras, 1937.

17. திருஞானசம்பந்தர் தேவாரம்

பி. எஸ். சோமசுந்தரம்

திருஞான சம்பந்தப் பெருமானின் திருவாக்குகளில் மிளிரும் மெய்யுணர்வியற் கோட்பாட்டினையும், சமய, சமுதாயக் கோட்பாடுகளையும் ஆராய்வதே இவ்வாராய்ச்சியாளனின் ஆய்வுப்புலன். அவ்வாய்வின் அடிப்படையில் எழுந்த சிக்கல்கள் சிலவற்றை எடுத்துக்காட்டுவதுதான் இக் கட்டுரையின் நோக்கம்.

''தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்''

என்று நல்வழியில் ஔவையார் உணர்த்துகின்றார். இங்கு, 'ஒரு வாசகம்' என்றது 'மஹா வாக்கியத்தைப் போன்றே உற்றுணர்ந்து ஓதவல்லது என்பதைக் குறிக்கும். மூவரில் முதல்வராக மதித்துப் போற்றப்படுபவர் திருஞான சம்பந்தர் ஆவார். 'லயஞானம்' வந்து வாய்க்கப்பெற்ற அவர்தம் பாடல்கள் 'உயர்ஞானம்' உணர்த்தும் பெற்றியவை; திருமா மறைக் கருத்துகளைச் செந்தமிழிற் கூறும் சிறப்புடையவை. ஆளுடையபிள்ளையாரே தம் பாடல்களை 'மறையிலங்கு தமிழ்' என்றும், 'மறைமலி தமிழ்' என்றும், 'தமிழ்க் கிளவி' என்றும் மதிக்கின்றார். 'பிள்ளை பாதி புராணம் பாதி' பாடவந்த சேக்கிழாரடிகள் சம்பந்தரின் செந்தமிழ்மாலையை 'எழுது மாமறை' என்றே இசைக்கின்றார்.

வடமொழி நான்மறையில் தோத்திரங்களாக உள்ளவற்றை 'மந்திரம்' என்றும், செயல்முறைகளை விளக்குபவற்றை, 'பிராமணியம்' என்றும், தத்துவக் கோட்பாடுகளைக் கூறவந்தவற்றை 'ஆரண்யகம்' என்றும் பாகுபாடு செய்வதுபோல, சம்பந்தரின் தேவாரத்தில் அடங்கிய பாடல்களையும் இவ்வாறே பாகுபாடு செய்வதற்கு வேண்டிய கருத்துகள் ஏராளமாக உள்ளன என்பதை நுண்ணறிவினோர் எளிதில் உணரலாம்.

ஆயினும், இக்கருத்துகளையெல்லாம் ஒரு தத்துவ நூலாசிரியரைப் போல சம்பந்தர் ஒருசேரத் திரட்டி ஓதிச் செல்லவில்லை. ஏனெனில், அவர் ஒரு வெறும் தத்துவக்காரர் அல்லர். 'திருப்பெருகு' சிவஞானமும், உவமையில்லாக் கலைஞானமும் உணர்வரிய மெய்ஞ்ஞானமும்' வாய்க்கப் பெற்ற பேரருளாளர் அவர். அன்னார்தம் பாடல்கள் யாவும், 'பத்தியில் வருவன'; 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' ஓதப்பெறுவன, 'பண்மதியால் சொன்ன பாட்டு'; 'வேந்தன் அருளாலே விரித்த பாடல்' என்று அவராலேயே சுட்டியுணர்த்தப்பெற்றவை. ஓங்கிய அருளியல் உணர்வில் அழுந்தி நிற்கும் நிலையின் வெளிப்பாடான (Mystic expressions) அவற்றில் தத்துவக் கோட்பாடுகள் போன்றவை ஆங்காங்கே அழுந்திக் கிடக்கின்றன. அவற்றை உற்று நோக்கி, இனம் கண்டு, எடுத்துச் சிந்தித்துத் தெளிவதற்கு ஒரு முறையான பயிற்சி தேவைப்படுகிறது.

ஏனெனில், சம்பந்தரின் செந்தமிழ்ப் பாடல்களைப் பயிலுகையில் அவற்றில் உள்ள இசை நயம், இயற்கை வருணனை, சொல்லாட்சி உவமைகள், கற்பனை, புதுமையான யாப்பு முறைகள் ஆகியவற்றில் நாம் அழுந்தி மறைகிறோம்; நம்மை மறக்கின்றோம். எடுத்துக்காட்டாக, சம்பந்தரின் பாடல்தோறும் இயற்கை சொல்லோவியமாக வெளிவந்து நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. ஆனால், மற்றக் கவிஞரைப்போல, இயற்கையை இயற்கைக்காக அவர் பாடவரவில்லை. இயற்கையை இறையருள் வெளிப்பாடாக (Divine Manifestation) அவர் உணர்ந்து பாடுகிறார். அதில் அடிநாதமாக ஒலிக்கும் இயற்கை அருளியலை (Nature Mysticism) இனம் கண்டுகொள்ளத் தத்துவக் கோட்பாட்டு ஆய்வாளனுக்கு ஆழ்ந்த அனுபவமும் கூர்த்த கவனமும் தேவைப்படுகின்றன; கவனம் தளர்ந்தால் 'தப்புன பலவே' யாகும்.

இத்தகைய பணியில் ஈடுபடும்போதுதான் ஆய்வாளனுக்குப் பல சிக்கல்கள் எழுகின்றன. மூவர் பாடிய தேவாரம் முழுதிற்குமே ஒரு முறையான உரை எழுதப்பெறவில்லை. வைணவ சம்பிரதாயத்தில் நாலாயிரத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை, நஞ்ஜீயர், வடக்குத் திருவீதிப்பிள்ளை போன்ற உரைகாரர்களின் திட்டவட்டமான விரிவுரைகள் உள்ளன.

நாலாயிரத்தில், குறிப்பாகத் திருவாய்மொழிக்குச் சொல்லுக்குச் சொல் மெய்யுணர்வியல் அடிப்படையில் விளக்கம் தரப்படுகிறது; வைணவக் கோட்பாடுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன. ஆனால் தேவாரத்திற்கு அத்தகைய உரை இல்லாதது ஆராய்ச்சியாளனுக்குப் பெரும் இடர்ப்பாடாக உள்ளது. இவ்வாறு உரையில்லாமைக்கு என்ன காரணம் என்று தெளிவாகத் தெரியவில்லை. திரிசிரபுரம் மகாவித்துவான்கூட உரை எழுதத் துணிந்தாரில்லை என்றும், தேவாரத்திற்கு உரை எழுதுவது தகாது என்றும் பல சமாதானங்கள் கூறப்படுகின்றன.

இதுவரை பதிப்பிக்கப்பெற்றத் தேவாரப் பதிப்புகளைக் காலவரையறையில் அட்டவணைப்படுத்தும் முயற்சியைக் கூட யாரும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இக்கட்டுரையாளன் ஓரளவிற்கு இப்பணியில் முயன்று தன் நூலில் வெளியிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

பதிப்பிக்கப்பெற்ற ஒருசில தேவார நூல்களுக்குக் குறிப்புரை மட்டும் தரப்பட்டுள்ளது; அக்குறிப்புரையும் மிகவும் சுருங்கியிருப்பதால் ஆய்வாளனின் ஐயங்களைக் களைவதற்குப் போதியனவாக அமையவில்லை. குறிப்பாக, தத்துவக் கோட்பாடுகளைக் குறிக்கும் இடங்களுக்குத் தக்க முறையிலும் அளவிலும் விளக்கம் காணமுடியவில்லை. ஈண்டு எடுத்துக்காட்டுகளாகச் சிலவற்றை நோக்குவோம்.

இரண்டாம் திருமுறையில் அமைந்த தென்திருமுல்லைவாயில் பதிகத்தில் (2.224 : 4),

''ஒன்றொன்றொடொன்றும் ஒருநாள் கொடைந்தும்
இருமூன்றொடேழு முடனாய்
அன்றின்றொ டென்றும் அறிவானவர்க்கும்
அறியாமை நின்ற அரன்...''

என்ற அடிகளுக்கு, தருமபுரம் பதிப்பில் (பக். 420, 421) இருபத்துநான்கு தத்துவங்களும் அதற்குமேல் அவற்றை அறியும் புருடனுமாக, இருபத்தைந்துக்கு மேல் த்த்துவமில்லை என்று அறிகின்றவர்களுக்கு அறிவதற்கு அரியனவாக நின்றவன் அரன் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. இவ்வாறு அறிவது சாங்கியரின் கோட்பாடு எனினும், உரையில் இது தெளிவுற விளக்கப்படவில்லை.

இனி,

''நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவும்
நன்மைப் பொருள் போலும்'' *(1.69 : 2)*

''ஞானத்திரளாய் நின்றபெருமான் நல்லடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவும் உண்மைப் பொருள்
போலும்'' *(1.69 : 3)*

என்ற அடிகளில் காணப்படும் 'போலும்' என்பதற்கு, 'ஒப்பில் போலி' என்றே உரை கூறப்படுகிறது. ஆயின், ஆழ்ந்து நோக்குகையில், இது 'உண்மைப் பொருளேதான்' என்று தேற்றம் பற்றியே வருவது புலனாகும். இவ்வாறு பொருள் கொள்வதால் 'ஊனத்திரள்' என்ற மாயையின் காரியம், தான் ஒடுங்கும் காரணமாகிய மாயையைக் குறித்து அது உண்மைப் பொருள் என்ற சைவசித்தாந்த அடிப்படையை வலியுறுத்தக் காணலாம். ஆனால், கிடைக்கும் குறிப்புரை இந்த அருமையான கருத்தை விளக்கத் தவறிவிட்டதைக் காணலாம்.

இவ்வாறே 'கணிகை நோன்பர்' என்ற சொற்றொடருக்கு, 'போலியான நோன்பு நோற்பவர்' என்று குறிப்புரை தரப்பெற்றுள்ளது. ஆயின் இது பௌத்தர்களின் 'க்ஷணிக வாத'த்தையே குறிக்கின்றது என்று தெ.பொ.மீ. போன்றோர் பொருளுரைக்கின்றனர். இவ்வாறு பலவற்றிற்கு உரிய சிறப்பான பொருள்களை நாம் தக்கார் சிலரிடம் நேராகவோ அவர்தம் நூல்கள் வாயிலாகவோதாம் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

சம்பந்தப்பெருமான் இயலிசைத் தமிழ் மாலைகளைப் புனைந்தளித்ததோடு, மிறைக்கவிகளான சில மூல இலக்கியங்களையும் படைத்துள்ளார். அவற்றுள் 'திருமாலை மாற்று' (3.375) என்பது குறிப்பிடத்தக்கது. முதல் அடியில் காணப்படும் எழுத்துக்களைப் பின்னிருந்து முன்னோக்கிப் படித்தால் அது இரண்டாவது அடியாகவும், அதுபோல், இரண்டாம் அடியைப் படித்தால் முதலடியாகவும் அமையும். தருமபுரம் பதிப்பில் இப்பதிகம் முழுவதற்கும் பதவுரை கூறப்பட்டுள்ளது. ஆயின், அது பல இடங்களில் வலிந்து பொருள் கூறுவதாகத் தோன்றுகிறது; தெளிவில்லாமையால் குழப்பம் ஏற்படுகிறது; இப்பதிகத்தில் பல தத்துவ

உண்மைகள் பேசப்படுகின்றன. ஆயினும், தகுந்த உரை யின்மையால் அவற்றைச் சரிவர அறிந்துகொள்வதற்குத் தடை ஏற்படுகின்றது.

அதேபோன்று, முதல் அடியில் உள்ள சொற்களே நான் கடியிலும் வருமாறு தொடுக்கப்படும் 'ஏகபாதம்' (1.127) என்றழைக்கப்படும் பதிகத்திற்குக் கிடைக்கும் உரையிலும் வலிந்து பொருள் கோடல் மிகுதியாகவுள்ளது. சைவ சித் தாந்தப் பெருமன்றம், 1985-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள முதலாம் திருமுறைப் பதிப்பில், ஏகபாதத்திற்கு ஓர் உரை பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளது; ஆயினும், அங்கும் இதே நிலைதான்.

இனி, சம்பந்தர் தேவாரத்தின் மூன்று திருமுறைகளிலும், அண்மையில் கல்வெட்டுகள் மூலமாகக் கண்டறிந்த திரு விடைவாய்ப் பதிகம் உள்பட 384 பதிகங்கள் உள்ளன. அது அவ்வாறே இருந்திருப்பின் இடர்ப்பாடு அதிகமில் லாமற் போயிருக்கும். ஆனால் நம்பியாண்டார் நம்பியும் திருமுறை கண்ட புராண ஆசிரியரும் சம்பந்தர் பதினாறா யிரம் பதிகங்களைப் பாடிச்சென்றதாக அறிவிக்கிறார்கள். சில ஆய்வாளர்கள், பதினோராயிரம் பாடல்கள் என்பர். எப்படியிருப்பினும் இன்று கிடைப்பனவோ 4158 பாடல் கள்தாம். ஏனையவை அழிந்து மறைந்திருக்கக்கூடும் என்று கருத இடமுள்ளது. எடுத்துக்காட்டாக, சம்பந்தர் திருவாலந் துறையில் பதிகம் பாடியதாகச் சேக்கிழார் தெளிவாகக் கூறுகின்றார். ஆனால் அப்பதிகம் இன்று கிடைத்திலது. இவ்வாறு பல பதிகங்கள் கிடைக்கவில்லை. இதனால் பல சிக்கல்கள் தோன்றுகின்றன.

சம்பந்தரும் நாவுக்கரசரும் ஒருகாலத்தவர்; உடன் பழகி யவர் என்பதை நம்பியாண்டார் நம்பி முதல் யாவரும் எடுத்துப் பேசுகின்றனர். இது ஒரு தேர்ந்த முடிவு, ஆயின் விந்தை என்னவென்றால், சம்பந்தர், இன்று கிடைக்கின்ற ஒரு பாடலிலாவது அப்பரைக் குறித்துப் பேசவில்லை. தம்முடன் பழகிய முருகனார், நீலநக்கர், பாணர், சிறுத் தொண்டர் போன்ற பலரையும் சம்பந்தர் குறிப்பிட்டுப் பாடும்பொழுது நாவுக்கரசரை அவர் பாடாதது ஏன் என்ற ஒரு சிக்கல் எழுகிறது. நல்லவேளையாக அப்பர், 'கழுமல ஊரர்க்கு ஐம்பொன் ஆயிரம் கொடுப்பர் போலும் ஆவடு

துறை அரனே' (4.56 : 1) என்றும், 'செந்தமிழ் உறைப்புப் பாடி அடைப்பித்தார்' (5.50 : 8) என்றும் சம்பந்தரைக் குறிப்பிடுகிறார். இல்லாவிடில், சம்பந்தரும் அப்பரும் சம காலத்தவர் என்ற கூற்றுக்கு அகச்சான்று இல்லாமல் போயிருக்கும். இவ்வாறாக, சம்பந்தர் பாடல்கள் பல இன்று காணப்பெறாமையினால் அவர்தம் தத்துவக் கோட்பாடுகள் பற்றி முற்றிலும் முழுவதுமாய் அறிந்துகொள்வதற்கு முடியாமற் போகின்ற பெருங்குறை ஏற்படுகின்றது. பல பாடல்கள் மறைந்துவிட்ட காரணத்தால் அவர்தம் வாழ்வு, சிந்தனை பற்றிய செவிவழிச் செய்திகளையும் மரபுக் கூற்றுகளையும் முற்றிலுமாகக் கொள்ளவோ, தள்ளவோ இயலாத நிலையில் உள்ளோம்.

தேவார ஆசிரியர்தம் கால ஆராய்ச்சியில் சிக்கலின்றி முடிவு ஏறத்தாழ உறுதி செய்யப்பட்டுள்ளது எனலாம். இருப்பினும் அக்கால அடிப்படையில் தமிழ்நாட்டின் வரலாற்றுப் பின்புலம் செம்மைப்படுத்தப்படவில்லை. குறிப்பாக வரலாற்று அடிப்படையில் சமய, சமூகக் கோட்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி விரிவாக அமையவில்லை. சேக்கிழாரின் திருஞானசம்பந்தர் புராணம் முதலியவற்றைக் காண்கையில் தொண்டை நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் சமண சமயம் அரசியல் செல்வாக்குப் பெற்று வலுத்திருந்தது என்றும், அதே நேரத்தில் சோழநாட்டில்கூட சம்பந்தர் போன்றோருக்கு மக்கள் ஆதரவு அளித்த அளவிற்கு அரசு அளிக்கவில்லையென்றும் தோன்றுகிறது. திருவறத்துறையில் முத்துச் சிவிகையையும் பட்டீச்சரத்தில் முத்துப் பந்தரையும் ஊர் மக்களே அளித் துள்ளனர். திருவீழிமிழலையில் இறைவனிடமிருந்துதான் படிக்காசு பெற்றுப் பஞ்சம் தீர்க்க முடிந்தது. சிவபாத விருதையரான தந்தைக்கு வேள்வி செய்தற்கு வேண்டிய பணத்தையும் ஆவடுதுறை அரனே அளித்தார். இக்காரணத்தால்தான் போலும் 'கொடுக்கிலாதானைப் பாரியே எனினும் கொடுப்பாரில்லை' என்று சுந்தரரும் பாடுகின்றார். ஆனால் சமணர் போன்றோருக்குக் கடல் கடந்த நாடுகளிலிருந்தும் பொருள் வந்து குவிந்தது என்பதை, 'கலம் தந்த நலம்' என்று நீலகேசி உரை குறிப்பிட்டுக் காட்டுகிறது. ஏன் இந்த நிலை என்பதை வரலாற்று முறையில் விளக்குவதற்கு நூல்கள் எழாதது ஒரு பெரும் தடையாக உள்ளது.

சம்பந்தர் மதுரையில் அமணரை வாதில் வென்றமைக்கு அகச்சான்றுகள் உள்ளன. அமணர் ஆயிரக்கணக்கில் கழுவில் மாய்ந்த கதையைச் சம்பந்தர் எங்கும் கூறவில்லை. பின்னால் நம்பியாண்டார் நம்பியே இக்கதையைச் சொல்லத் தொடங்குகின்றார்; ஒட்டக்கூத்தர் அதனை விரித்துரைக்கின்றார். சேக்கிழாரும் ஓரளவிற்கு இக்கதையை ஒப்புக்கொள்கிறார். ஆனால், சமணர், தாம் செய்த சூளுரையின் காரணமாகத் தாமாகவே முன்வந்து கழுவிலேறி மாண்டனர் என்கிறார். மேலும் சம்பந்தருக்கு அவர்கள்பால் பகைமையில்லை. (இகலிலர்) எனினும் சிவனடியார்கள் தங்கிய திருமடத்திற்குத் தீக்கொழுவின காரணத்தால் அத்தகைய குற்றத்தைக் கண்டித்துத் தண்டிக்கும் வேந்தனது கொற்றத்திற்குத் தன்னால் தடை வரலாகாது என்று கருதி வாளாவிருந்து விட்டார் என்றும் சேக்கிழார் எடுத்துரைக்கின்றார். எனினும் இந்த சமாதானத்தால் ஆய்வாளனின் மன உறுத்தல் தீரவில்லை. பேரருளாளரான சம்பந்தர் இந்தப் பெரும் தற்கொலையை ஏன் தடுக்கவில்லை என்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

பதிகம் தோறும் பத்தாவது பாடலில் சமண் சாக்கியத்தைச் சாடிப் பாடிவரும் சம்பந்தர் பல இடங்களில் அவர்களுக்காக இரங்குகின்றார். வீணான, கடுமையான தவ விரதங்களாலும் போலிச் சடங்குகளாலும் தவறான கருத்துகளாலும், 'பாக்கியமின்றி இருதலைப்போகமும் பற்றும் விட்டார்' (1.116:10) என்றும், 'விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்றிவர்கள் மதியிலாதார் என்செய்வாரோ' (1.50:10) என்றும், அவர்பால் இரக்கம் கொள்கிறார். அவர்களைக் கண்டு 'வெகுளேன்மின்' (2.147:9) என்றும் 'வாதியாவம்மின்' (2.148:10) என்றும் அறிவுரை கூறித் தம் தொண்டர்களைத் தடுக்கின்றார். 'தொண்டர்கள் சொல்லிர்... ஈசன் அணைவில் சமண் சாக்கியம் ஆக்கியவாறே' (2.172:10) என்று அவ்விரு சமயங்களையும் சிவ பரம்பொருளே ஆக்கினான் என்று ஒப்புக்கொள்கிறார். அவர்களில் 'நல்லோர் அறஞ்சொல்ல' (1.84:10) அவர்களைக் குறை கூறாமல் போலிச் சமயத்தையே சாடுகின்றார். இருப்பினும் அத்தனை சமணர்களும் கழுவேறுவானேன்? சம்பந்தர் அதற்கு எவ்வாறு இசைந்து வாளாயிருந்தார்?

இதற்கு விடை கூறுவதற்கு நாம் சமூகவியலையும் சமூக மானுடவியலையும் நாடவேண்டும். ஏன் எனில், இந்த நிகழ்ச் சிக்கு—அது நடைபெற்றது என்பதை ஒப்புக்கொண்டால்—சமயக்காழ்வு மட்டிலும் காரணமாக இருக்கவியலாது. அதற்கு அப்பாற்பட்ட காரணங்கள் இருந்திருக்க வேண்டும். மேற்சொன்ன முறைகளில் ஆராய்ந்து பார்த்தால்தான் நாம் காரணத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளலாம். ஆயின் இன் றைய அளவில் அத்தகைய ஆய்வுகள் ஏதும் நிகழ்வில்லை. அவை நிகழ்த்தப்பட்டு முடிவு செய்தால்தான், சம்பந்தர் வாழ்க்கை வரலாற்றில் ஏற்படும் இந்தச் சிக்கலுக்கு விடை காணமுடியும். மேலும் சம்பந்தர் வாழ்வில் திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறார். தீண்டத்தகாத குடியிற் பிறந்த அவரைத் தாம் செல்லும் திருத்தலங்களுக்கெல்லாம் சம்பந்தர் அழைத்துச்சென்று, தம் பதிகங்களைப் பாணரின் யாழிசைமேல் ஏற்கச் செய்தார்; தில்லை மூவாயிரவரைத் தாம் சிவகணங்களாகக் கண்டு பாணருக்கும் காட்டினார். திருச்சாத்தமங்கையில் நீலநக்கர் என்னும் அந்தணத் தொண்டரைத் தம் இல்லத்தில் உள்ள வேள்விச்சாலையில் பாணருக்கும் அவர்தம் மனைவியாருக்கும் தங்குவதற்கு இடமளிக்குமாறு வேண்டிக்கொண்டார். இறுதி யில் பெருமணநல்லூரில் நீலகண்டருக்கும் சோதியில் கலக்கும் பேற்றை நல்கித் தாமும் அதில் மறைந்தார். அக்காலச் சூழ லில் இச்செயல்கள் பெரும்புரட்சிச் செயல்களாகத் தோன்று கின்றன. மேற்சொன்ன ஆராய்ச்சி இவற்றுக்குரிய காரண காரியங்களைப் புலப்படுத்த உதவும்.

சம்பந்தர் பல மூல இலக்கியங்களைப் படைத்துள்ளதாக நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரும் சிறப்பித்துப் பேசு கின்றனர். திரு. டி. வீரபத்திர முதலியார் என்ற அறிஞர் ‘சித்தாந்த தீபிகை’ என்ற ஏட்டில், ‘Lord Sambandha and An Unknown Tamilian Prosody’ என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில், சம்பந்தர் நூற்றுக்கு மேற்பட்ட யாப்பு வகை களைத் தம் பாடல்களில் கையாண்டுள்ளார் என்றும், அந்த யாப்பு வடிவங்களைத் தெலுங்கு, கன்னட யாப்பியல் நூல் களிலும் பாடல்களிலும் காணமுடிகிறது என்றும் ஆராய்ந்து கூறுகிறார். ஆயின் அத்தகைய ஆய்வினை அவர் வெளியிட வில்லை; அந்த ஒப்பியல் யாப்பு இலக்கண ஆராய்ச்சியை வேறு யாரும் மேற்கொண்டு செய்து முடித்ததாகத் தெரிய

வரவில்லை. எதிர்காலத்திலாவது இத்தகைய ஆராய்ச்சி நிகழுமாயின் சம்பந்தர் தேவாரத்தின் யாப்பு அமைதி பற்றிய ஒரு திட்டமான முடிவைக் காணலாம்.

சம்பந்தர் தேவார ஆராய்ச்சியில் எழுந்த சிக்கல்கள் சிலவற்றைக் கண்டோம். இவற்றைத் தவிர, கல்வெட்டுகள் போன்ற சான்றுகளை ஆராய்வதிலும் பல சிக்கல்கள் உள்ளன. இச்சிக்கல்களை ஆய்வுலகம் முயன்று அகற்றும் என்று நம்புவோம்; அதன் விளைவாக அறிவொளிக் கற்றைகள் இருண்ட பல புலன்களிலும் பாய்ந்து உண்மையைத் துலக்கிக் காட்டும் காலம் வருக என்று வாழ்த்துவோம்.

18. திருமந்திரம்

கே. ஆர். நஞ்சுண்டன்

தமிழ் மொழியில் உள்ள சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் திருமந்திரம் பத்தாவதாக வைத்து எண்ணப் படும் பெருமைக்குரியது. அது சொற்சுவையிலும் பொருட் சுவையிலும் சிறந்து விளங்கும் ஞானத் தமிழ்நூல்; சில இயல்புகளில் திருமுறைகள் எல்லாவற்றிலும் தலைசிறந்தது.[1] எந்த அடிப்படையில் திருமுறைகள் வரிசைப்படுத்தப்பட் டுள்ளன என்பது தெளிவாகத் தெரியவில்லை. எனினும் பிற திருமுறைகளினின்றும் பல்வகையானும் வேறுபட்டுக் காணும் திருமந்திரம் அவ்வரிசையில் இடம்பெற்றுள்ளது அதன் பெருமைக்குச் சான்று பகர்வதாக உள்ளது.

இந்த ஒப்பற்ற நூலை இயற்றியருளியவர் 63 நாயன் மார்களில் ஒருவரான திருமூலர் எனப்படும் ஞானயோகி ஆவார். அவர் வேத-ஆகமங்கள், மந்திர-தந்திர-யோக நூல் கள், புராணங்கள் ஆகியவற்றில் முற்றறிவும், அட்டாங்க யோகத்தில் ஆழமான பயிற்சியும் பெற்றவர். அவர் உரைத்த மூவாயிரம் தமிழில் உலக வாழ்க்கை, சமயம், தத்துவம், யோகம், சிவ-சக்தி வழிபாடு, ஆன்மஞானம் போன்ற பல் வேறு பொருள்கள் பற்றிச் பேசப்படுகின்றன. எனவேதான் அந்நூல் ஒரு சிறந்த சாத்திர நூலாகவும் தோத்திர நூலாக வும் கருதப்பட்டு வருகிறது. அந்நூலின் அமைப்பு முறை, பொருள், செய்யுள் நடை, மொழி இயல்பு ஆகியவை அதைப் பிற திருமுறைகளினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது கண் கூடு. அதனால்தான் இன்றைய அறிஞர் ஒருவர் அந்நூலைக் குறிப்பிட்டு எழுதும்போது, ''எது எப்படியிருந்தபோதிலும், அது (திருமந்திரம்) தமிழில் உள்ள பிற சாத்திர தோத்திர நூல்களினின்றும் வேறுபட்டுத் தனித்து நிற்கிறது; அது பிற 11 திருமுறைகள் தோற்றுவித்துள்ள தமிழ் மரபுக்கு ஒத்து வராத, ஏன், அத்றகுப் புறம்பானதொரு நூலாக உள்ளது''[2] எனக் கூறியுள்ளார்.

திருமந்திரத்தை ஆய்வுக் கண்கொண்டு நோக்கும்போது சிக்கல்கள் பல எதிர்ப்படுவதை எளிதில் காணமுடிகிறது.

அவைகளை நூலாசிரியர் பற்றியவை என்றும் நூலைப் பற்றியவை என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஆராய்ந்து பார்க்கலாம். அப்படிப்பட்டவைகளில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமூலரை நமக்கு முதன்முதல் அறிமுகப்படுத்துபவர் தேவார முதலிகள் மூவரில் மூன்றாமவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளே[3]. அவர் திருத்தொண்டர்த் தொகையில் 'நம்பிரான் திருமூலர் அடியார்க்கும் அடியேன்' என்ற சொற்றொடர் வாயிலாகத் திருமூலரை, 'நம்பிரான்' எனப் போற்றியுள்ளதைத் தவிர அவரைப் பற்றி வேறு குறிப்பான செய்தியேதும் சொல்லவில்லை.[3] அவருக்குப்பின் வந்த முதலாம் ஆதித்தன் காலத்தவராகச் சிலராலும்[4] முதலாம் ராசராசன் காலத்தவராகச் சிலராலும்[5] கருதப்படும் திருநாரையூர் நம்பி, ஆரூரர் சொல்லாத இரண்டு செய்திகளைச் சொல்லியுள்ளார்; 1) மூலன் குடிகள் நிரம்பிய சாத்தனூரில் வாழ்ந்து வந்த ஆநிரை மேய்ப்போனின் குரம்பையில் புகுந்தெழுந்தான்; 2) பின்னர், வேதத்தின் சொற்படி கூனற் பிறையாளனைத் தமிழால் புகழ்ந்து பாடினான். அவருக்குப் பின் தோன்றிய சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தில் திருமூலர் புராணம் என்ற தலைப்பில் இருபத்தெட்டு பாக்களில் திருமூலரின் வரலாற்றைப் பாடியுள்ளார்.

நம்பி சொல்லாத வேறுசில செய்திகளைச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார். அவையாவன: 1) இமையவருக்கு நெறியருளும் நந்தியின் திருவருள் பெற்ற நான்மறை யோகிகளில் அணிமாதி சித்திகள் கைவரப்பெற்ற ஒருவர், குறுமுனியோடு சிலகாலம் தங்கியிருக்க விரும்பிப் பொதியில் மலையை நோக்கிப் புறப்பட்டார்; 2) வழியில் பல தலங்களில் உறையும் சிவபெருமானைக் கண்டு வணங்கிக் கடைசியில் சாத்தனூரை அணுகினார்; 3) அங்கு மூலன் என்ற ஆநிரை மேய்ப்போனின் உயிர் நீங்கிய உடலில் தனது உயிரைப் புகுத்தி அவனைப் பிழைக்க வைத்து கோக்குலத்தின் துயர் துடைத்தார்; 4) சிவபெருமானின் கட்டளைக்கிணங்க மூலனின் உடலிலேயே தங்கி ஆவடு தண்டுறையைச் சேர்ந்து மூவாயிரம் ஆண்டுக்காலம் யோக சமாதியில் அழுந்தியிருந்தார்; 5) ஆண்டுக்கொருமுறை சமாதி கலைந்த போது ஒரு பாடல் வீதம் மூவாயிரம் ஆண்டுகளில் மூவா

யிரம் பாடல்கள் இயற்றினார்; 6) சிவபெருமான் 'ஒன்றவன்தானே' என அடியெடுத்துக் கொடுத்தார்; 7) மூலராக மாறிய யோகி குறுமுனியைக் காணாமலேயே மீண்டும் தனதிருப்பிடமாகிய திருக்கயிலையைச் சென்றடைந்தார்.[7]

அவருக்குப் பிறகு உமாபதிசிவமும் (கி.பி. 14-வது நூற்றாண்டு) சாத்திரம் சாமிநாத முனிவரும் (கி.பி. 18-ஆம் நூற்றாண்டு) முன்றையே திருத்தொண்டர் புராண சாரத்திலும், துறைசைப் புராணத்திலும் சேக்கிழாரை அடியொற்றித் திருமூலரின் கதையைப் பாடியுள்ளனர். அவ்விருவரும் புதிதாக ஏதும் கூறவில்லை. வடமொழியில் உள்ள 'உபமன்யு பக்த விலாசம்', 'அகஸ்த்ய பக்த விலாசம்' என இருநூல்களிலும் திருமூலரின் சுருக்கமான வரலாறு உள்ளது. ஆனால் பிந்தைய நூலில் திருமூலர் திருமந்திரம் என்ற நூலை இயற்றினார் என்பதற்கான குறிப்பேதும் காணக்கிடைக்கவில்லை.

இவைகளைத் தவிர, திருமந்திரத்தின் பாயிரப் பகுதியின் ஐந்தாவது பிரிவில் 'திருமூலர் வரலாறு' கூறப்பட்டுள்ளது. அதன்படி நந்தி அருளால் நாதன் என்ற பேர் பெற்றுச் சீலாங்க வேதத்தைச் செப்ப வந்த திருமூலர், நந்திகள் நால்வர், சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகியோரின் வழிவந்தவர் என்றும் அவருக்கு மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துருகாலாங்கி, கஞ்சமலையன், என்ற எழுவர் சீடர்களாக இருந்தனர் என்றும் தெரிகிறது. இன்னொரு செய்யுள் வாயிலாகக் காலாங்கர், அகோரர், மாளிகைத் தேவர், நாதாந்தர், பரமாநந்தர், போகதேவர், திருமூலர் ஆகிய எழுவரும் பிறவி நோயற்ற சித்தர்கள் என அறியமுடிகிறது.[8] மேலே காணும் பெயர்களில் பலர் இந்திய சித்தர் மரபில் காணாத பெயர்களாக உள்ளன. கோரக்கநாதர், மச்சேந்திரர் ஆகியோர்தான் அகோரர் மாளிகைத்தேவர் எனப்படுகின்றனர் என்ற கூற்று உண்மையானால் திருமூலரை நாதசம்பிரதாயத்தை நிறுவிய மூலபுருடர் என எண்ண இடமுண்டு.

தத்துவஞானம் உரைத்த தாழ்வரையிலிருந்து தென்னாடு வந்து சிவனாவடுதண்டுறையில் சிவபோதியின் நிழலில் அமர்ந்து சிவநாமம் ஓதி, சித்திகள் பல பெற்ற திருமூலர்,

காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்தரம், சுப்பிரபேதம், மகுடம் ஆகிய ஒன்பது ஆகமங்களைப் பரசிவத்திடமிருந்து பெற்றார் என்ற செய்தியும் அப்பகுதியிலிருந்தே பெறப்படுகிறது.

நம்பியும் சேக்கிழாரும் வடக்கிருந்து வந்த யோகி, மூலனின் சடலத்தில் புகுந்து திருமூலராக மாறினார் என்ற தகவலைத் தந்துள்ளனர். அதிலிருந்து அந்த யோகி கூடுவிட்டுக் கூடு பாயும் . வித்தையை அறிந்திருந்ததோடு மட்டுமில்லாமல், அதை வெற்றிகரமாகப் பயன்படுத்தித் திருமூலராக மிளர்ந்தார் எனவும் அறியமுடிகிறது.

இந்திய நாட்டுச் சமய வரலாற்றில் இந்தக் கூடுவிட்டுக் கூடு பாயும் நிகழ்ச்சி ஒருசில புகழ்வாய்ந்த சமயத் தலைவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்ததாகக் கதைகள் வழங்குகின்றன. ஆதிசங்கரரும் (கி.பி. 788-820) மச்சேந்திரரும் இந்த வித்தையைக் கையாண்டனர் என்ற கட்டுக்கதையைச் சமய உலகம் நன்கு அறியும். பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் எழுதியதாகக் கருதப்படும் 'பகவதஜ்ஜுகம்' என்ற ஒற்றையங்க, நகைச்சுவை நிரம்பிய, பிர்கசனத்தில் பிரிவிராசகன் என்பவன் இந்த வித்தையைக் காட்டியதாகச் சுட்டப்பட்டுள்ளது. இதிலிருந்து ஏழாம் நூற்றாண்டிலிருந்து தமிழ்நாட்டில் இந்த வியத்தகு வித்தையை அறிந்தவர் பலர் இருந்தனர் என்பது தெரியவருகிறது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு இந்த வித்தையைக் கையாண்டவர் மீண்டும் உயிரற்ற தமது உடல்களிலேயே உயிர்களைப் புகுத்தி பழையபடியே தந்நிலையை அடைந்தனர். திருமூலரின் கதையில் இதற்கு மாறுபட்ட ஒரு நிகழ்ச்சியைக் காண்கிறோம். யோகி, யோகியாக வராமல் மூலராக வந்தது இந்திய சமய வரலாற்றில் வேறு எங்கும் காணமுடியாத ஒன்று. திருமூலர் வரலாறு, குருமட வரலாறு, குரு பாரம்பரியம் ஆகிய பகுதிகளில் மேலே கண்ட கருத்துக்கு—அதாவது யோகி மூலனாக மாறியதற்கு—எவ்வித சாட்சியமும் கிடையாது. நூலின்கண் ஆங்காங்கே மூலரது கூற்றாக வரும் சொற்றொடர்களிலும் இதுபற்றிய குறிப்பேதும் இல்லாதது நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. எந்தச் சமுதாயச் சூழலில் இத்தகையதொரு கருத்து உருப்பெற்றது என்பது சிந்திக்கத் தகுந்ததே. 'அரனை அடைவதற்குரிய

வழியாவதை அறிந்தேனாகிய நானும் வேறுசில நெறிகளைத் தேடித்திரிந்த அக்காலத்தும் மேன்மையான நெறியாக நின்று என்னைக் காத்தவன் அப்பெருமானே' என்ற கருத்துத் தோன்றப் பாடியதொரு செய்யுள் (திரு. 1562) இங்கு நோக்கற்பாலது.[9]

வேதாந்த-சித்தாந்தத்தின் அடிப்படையில் திருமூலர் சுத்த சைவத்தை உருவாக்கியுள்ளார் என்பது நூலை உற்றுநோக்கினால் தெளியலாம். மேலும் நூல் முழுவதிலும் சீவனும் சிவமும் வேறு வேறு அல்ல; சீவனே சிவன், சிவனே சீவனாக மாறுகிறான் என்ற காஷ்மீர ஏகான்மவாத சைவத்தின் கோட்பாடும், நாதசித்த மதத்தின் சீவ்சிவ அபேதவாதக் கொள்கையும், கௌல சமயச் சார்பான கொள்கையும், குண்டலினி யோகம், மற்றும் சிவசக்தி சமாரஸ்யம் எனப்படும் சிவசக்தி கூட்டு என்ற தத்துவச் சிந்தனையும் இழையோடுவதைக் காணமுடிகிறது. ஒருகாலத்தில் ஆகமநெறி தந்திரவாதம், யோகசமயம், கௌல மதம் ஆகியவை வேதங்களை ஏற்காததோடு மட்டுமல்லாமல் அவைகளை வன்மையாகக் கண்டித்து ஒதுக்கித் தள்ளின என்பதைச் சமய வரலாறு காட்டுகிறது. ஆனால், திருமூலர் திருமந்திரத்தில் வேதாந்தக் கருத்தோட்டத்தையும் ஆகம-யோக நெறிகளையும் இணைத்துப் புதியதொரு சமய தத்துவக் கொள்கையைச் சுத்த சைவம் என்ற பெயரில் நிலைநாட்டியுள்ளார். இதன் பின்னணியை வரலாற்று முறையில் அறிய முயற்சி செய்ய வேண்டும்.

இது நிற்க, 'கௌலாவலி தந்திரம்'[10] என்ற நூலும், 'ஸ்யாமா ரகசியம்'[11] என்ற நூலும் பன்னிரண்டு மாணவ குருமார்களின் பெயர்களைத் தாங்கிய பட்டியலைத் தந்துள்ளன. அவ்விரண்டு நூல்களும் கொடுத்துள்ள பெயர்ப் பட்டியலில் மூலதேவர் என்ற பெயரும் காணப்படுகிறது. அந்த மூலதேவர்தான் திருமூலரா அல்லது இருவரும் வேறு வேறு நபர்களா என்பதனை ஆராய்ந்து உணரவேண்டும்.

திருமூலரது காலமும் ஒரு பிரச்னையாக இன்றளவும் உள்ளது. இதுகாறும் அவர் வாழ்ந்த காலத்தை ஆய்ந்தறிய முற்பட்ட அறிஞர் மாறுபட்ட கருத்துக்களையே வெளியிட்

டுள்ளனர். அவர்களில் முக்கியமான ஒருசிலரின் முடிவு பின்வருமாறு :

1. பாலூர் கண்ணப்ப முதலியார் — கி.மு. 8020
2. சிதம்பரனார் — கி.மு. 6000
3. செங்கல்வராயபிள்ளை — கி.மு. 2100
4. மறைமலை அடிகள் — கி.பி. 500
5. வி.வி. ரமணசாஸ்திரி — கி.பி. 600
6. டாக்டர் ராசமாணிக்கம் — கி.பி. 300-600
7. சி.வி. நாராயண அய்யர் — கி.பி. 600
8. சதாசிவ பண்டாரத்தார் — கி.பி. 500-600
9. வெள்ளைவாரணனார் — கி.பி. 200-600
10. ஏ.வி. சுப்பிரமணிய அய்யர் — கி.பி. 600
11. ஃபர்கூகர் — கி.பி. 800
12. வி.ஆர். ரங்கநாத முதலியார் — கி.பி. 900

மேற்கண்ட அறிஞரில் ஒவ்வொருவரும் தம்தம் நோக்கில் திருமந்திரத்தின் ஏதோ ஒரு பகுதியையோ அல்லது சில பகுதிகளையோ ஆய்வு செய்து காலத்தைத் தமது கருத்திற் கேற்ப கணித்துள்ளதாகத் தெரிகிறது. அவர்கள் நூல் தோன்றுவதற்குரிய சமுதாயச் சூழலையோ அல்லது சமய நிலையையோ கருத்தில் கொண்டு அந்த முடிவுக்கு வந்தார் கள் என எனக்குப் படவில்லை. தமிழ்நாட்டுச் சமய வரலாறு இன்னமும் தெளிவாகவில்லை. இந்த நிலையில் பயின்று வரும் சமயந் தொடர்பான மற்றும் ஏனைய சொற்களைச் சமுதாய மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்வுக்கு உட் படுத்தினால் காலத்தைக் கண்டறிய வழிபிறக்கலாம்.

திருமந்திரத்தைத் தவிர திருமூலர் எழுதியதாகக் கருதப் படும் நூல்கள் பல அச்சேறாமல் கையெழுத்துச் சுவடி யாகவே இருக்கின்றன. அவை உண்மையில் திருமூலரால் இயற்றப்பட்டனவா அல்லது பிறரால் எழுதப்பட்டுத் திரு மூலரின் பெயரைத் தாங்கி நிற்கின்றனவா என்பது அவை களைப் பதிப்பித்து அச்சேற்றி வெளியிட்டால்தான் தெரிய வரும். திருமூலரின் நூல்களாக—ஏட்டுச் சுவடிகளாக உள்ளவைகளின் எண்ணிக்கை முப்பத்தேழு. அவைகளில்

'உண்மைத் திருமந்திரம்' என்பதும் ஒன்று.[12] திருமந்திரத்திற்கு நல்ல திருத்தமான பதிப்பு ஒன்று தேவை. அத்தகைய நூல் வெளிவருமேயானால் சிக்கல்களை அவிழ்க்க அது உதவுவதாக இருக்கக்கூடும்.

இனி, நூலைக் காண்போம். இந்த நூலுக்குத் திருமந்திரம், திருமந்திரமாலிகை, மூலன் உரைத்த மூவாயிரம் தமிழ் என்ற பெயர்கள் வழங்குகின்றன. இந்த நூலின் ஒவ்வொரு பெரும்பிரிவும் தந்திரம் எனப்படுகிறது. தந்திரம் என்ற சொல்லுக்கு 'அறிவை விரிவுபடுத்துவது' என்பது பொருள். மேலும் தந்திரம், ஆகமம், சம்கிதை என்ற சொற்கள் ஒரு பொருள் கிளவிகள். பொதுவாக வைணவ ஆகம நூல்களைச் சம்கிதைகள் என்றும் சைவ நூல்களை ஆகமங்கள் எனவும் சாக்த நூல்களைத் தந்திரங்கள் என்றும் குறிப்பிடுவர் சமயாசாரியர். சாக்த ஆகமங்கள் மூவகைப்படும். சத்துவ குணம் மிகுதியாக உடையவர்களுக்கு உபதேசமாக அமையும் நூலைத் தந்திரம் என்றும், ராசச குணமுடையவர்களைக் கருத்தில் கொண்டு வெளியிடப்படும் உபதேச மொழிகள் அடங்கிய நூலை யாமளம் என்றும் தாமச குணத்தை அதிகமாகக் கொண்டவர்களுக்கு அறிவுறுத்தும் நூலை டாமரம் என்றும் சொல்வர் அறிஞர். திருமந்திரத்தில் தந்திரம், யாமளம், டாமரம் ஆகிய மூன்றும் கலந்துள்ளன. திருமந்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் தந்திரம் என அழைக்கப்படுவதின் காரணம் என்ன என்ற கேள்வி பிறப்பது இயல்பானதே. இதுபற்றிச் சிந்திப்பது ஆய்வாளரின் கடமை.

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் (99), முத்தி முடிவிது மூவாயிரத்திலே (99) என்ற சொற்றொடர்கள் திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட நூல் என்பதைத் தெரிவிக்கின்றன. ஆனால் வெவ்வேறு பதிப்புகளில் பாடல்களின் மொத்தத் தொகை 3000-க்கும் மேலாக உள்ளன. வெவ்வேறு பதிப்புகளில் மிகைப் பாடல்களின் எண்ணிக்கை 47, 64, 89 ஆக உள்ளது. ஒரே பாடல் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வந்துள்ளதையும் காண்கிறோம். அப்படிப்பட்ட பாடல்கள் 54 உள்ளன. மேலும், தமிழ் உரை நூல்களில் 'இது திருமந்திரப் பாட்டு' என சுட்டப் பெறும் பாடல்கள் 47 உள்ளன. அவைகள் அச்சேறிய

பதிப்புகளில் இடம்பெறவில்லை. அதேபோல் சுவடிகளில் காணப்பெறும் 14 பாடல்கள் அச்சிடப்பெற்ற நூல்களில் இடம்பெறவில்லை. இடைச்செருகல்கள் நூலில் பல இடங்களில் இருந்தாலும் அவை எவை எவை எனத் தீர்மானிக்கப் படாமல் உள்ளன. இந்தப் பிரச்னையும் தீர்க்கப்படாம லேயே இருக்கிறது. திருத்தமான பதிப்பு வெளிவந்தால்தான் இடைச்செருகல்கள் களையப்பட்டு நூலுக்குரிய பாடல்கள் இடம்பெற முடியும்.

திருமூலர், சைவாகமங்களின் எண்ணிக்கை இருபத்தெட்டு என்றும் அவைகளை 66 பேர் உபதேச வாயிலாகச் சிவபெருமானிடமிருந்து பெற்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர் (57). சிவபெருமான் பார்வதிக்குச் சொல்லிய பத்து ஆகமங்கள் சிவாகமங்கள். அவைகள் சிவன் வேறு சீவன் வேறு எனத் தெளிவுபடக் கூறுவதால் பேத ஆகமங்கள் எனப்படுகின்றன. பரமசிவன் உருத்திர வடிவில் உருத்திராணிக்கு அருளிய பதினெட்டு ஆகமங்கள் ரௌத்திர ஆகமங்கள், சிரீநாதருக்குக் கிடைத்த இந்தப் பதினெட்டு ஆகமங்கள் சிவனும் சீவனும் தனித்தும் ஒன்றியும் இருக்கின்றனர் எனக் கூறுவதால் பேத, அபேதாபேத ஆகமங்கள் எனப்படுகின்றன. இந்த இருபத்தெட்டு ஆகமங்களைப் பரம சிவன் தனது சத்தியோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருடம், ஈசானம் எனப்படும் ஐம்முகங்களினின்றும் வெளிப்படுத்தினார் என்பர் ஆன்றோர். அபிநவகுப்தர் இந்த ஆகமங்களைச் சித்தாந்த தந்திரங்கள் என்பர். இவைகளைத் தவிர, பரமசிவன் பைரவ வடிவில் தோன்றி, பைரவிக்கு உரையாடல் மூலம் அருளிய அறுபத்திநான்கு அருளிய ஆகமங்கள் பைரவ ஆகமங்கள் எனப்படுகின்றன. சிவனும் சீவனும் ஒடுக்க நிலையில் ஒன்றே. சிவன் தன் விருப்பப் படிச் சீவனாக மாறி அஞ்ஞானம் என்ற தளையில் பட்டு, பின் ஞானம் வரப்பெற்று மீண்டும் சிவனாக ஆகிறான் எனப் பறை சாற்றுவதால் அவை அபேத ஆகமங்கள் எனச் சுட்டப்படுகின்றன. இந்த 64 ஆகமங்கள் பைரவ தந்திரங்கள் எனப்படும். இவைகள் தாம் காஷ்மீரத்தில் நிலைத்த சைவ சமயத்தின் உயிர்நாடியான மூல நூல்கள்.

இந்த ஆகமங்களில் திருமூலர் நூலெழுதப் பயன்படுத்தியதாக எண்ணப்படும் ஆகமங்கள் காரணம், காமிகம்,

வீரம், சிந்தம், வாதுளம், யாமளம், காலோத்தரம், சுப்பிர பேதம், மகுடம் என அழைக்கப்பெறும் ஒன்பது ஆகமங் களே (63). இவைகளில் யாமளம், காலோத்தரம் இரண்டும் பேத, பேதாபேத ஆகமங்களில் சேராது அபேத பைரவ ஆகமங்களில் அடங்கும். நூலாசிரியர் திருமந்திரத்தை இயற் றும்போது சித்தாந்த தந்திரங்களைச் சேர்ந்த ஏழு ஆகமங் களையும் பைரவ ஆகமங்களைச் சேர்ந்த இரண்டு ஆகமங் களையும் துணை நூல்களாகக் கொண்டிருந்தார் என்பதே இதன் பொருள். இன்று நமக்குக் கிடைக்கும் பதிப்புகளில் ஒவ்வொரு தந்திரமும் இன்ன இன்ன ஆகமத்தின் பிழிவாக அமைந்துள்ளது எனக் குறிக்கப்பட்டுள்ளது. அதையும் தவிர, ஒவ்வொரு தந்திரத்திலும் உட்பிரிவுகள் உள்ளன. அவை களுக்கும் தனித்தனித் தலைப்புகள் தரப்பட்டுள்ளன. இந்த முறை மூலத்திலேயே உள்ளதா அல்லது பிற்காலத்தில் யாரேனும் இவ்வாறு வகுத்தார்களா என்பதை ஆராய்ந் தறிய வேண்டும். பொதுவாக, ஆகமங்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களாக வகுக்கப்பட் டிருக்கும். ஆனால் திருமந்திரத் தந்திரங்களில் இந்த அமைப்பு முறை இல்லை. எனினும் இதற்கு அமைதி கூறும் ஆராய்ச்சி யாளர், ஒவ்வொரு தந்திரமும் ஏதோ ஒரு குறிப்பிட்ட ஆக மத்தின் சாரம் என்று சொல்வதைக் காட்டிலும், ஒன்பது தந்திரங்களும் ஒட்டுமொத்தமான ஒன்பது தந்திரங்களின் கருத்துகளைத் தாங்கியுள்ளன எனச் சொல்வதே பொருந்தும் என்றும் கூறுவர். எனினும் நூலின் கருத்தோட்டம் இதற்கு ஆக்கம் தருவதாகத் தெரியவில்லை. எடுத்துக்காட்டாக மூன் றாம் தந்திரத்தில் விவரிக்கப்படும் அட்டாங்க யோகப் பகுதி யில் ஆகமத்தின் யோகபாதப் பொருளைக் காட்டிலும் அதற் குப் புறம்பான பல செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம். நான்காம் தந்திரமும் அத்தகையதே. இன்று நமக்குக் கிடைக்கும் ஆகமங்களைத் திருமந்திரத்தோடு ஒப் பிட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும்.

இந்த நூலைத் திருமூலர் ஒருவரே எழுதினாரா அல்லது அவர் வாய்மொழியாக வெளியிட்ட நல்லுரைகளைக் கேட்ட அவர்தம் சீடர்கள் பல்வேறு பகுதிகளை இயற்றிய பின் ஒரே நூலாகத் தொகுத்தார்களா என ஒரு கேள்வி பிறக்க ஏது உள்ளது. எடுத்துக்காட்டாக மூன்றாம் தந்திரத்தில் இருக்கவேண்டிய விந்துற்பனம், விந்துசமம்போக சரவோட்

டம் ஏழாம் தந்திரத்தில் உள்ளது. இதுவும் ஆய்வுக்குரிய பிரச்சினையாகும்.

இரண்டாம் தந்திரத்திலும், மற்றும் பிற தந்திரங்களிலும் சிவபெருமானது ஐந்தொழில்களாகிய படைத்தல், காத்தல், துடைத்தல், மறைத்தல், அருளல் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. இதுபற்றி டாக்டர் ரஸ்தோகி ஒரு கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளது கவனிக்கத் தக்கது. அவர் கூறுவதாவது, 'அபேதவாத சைவ சிந்தனையின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று சிவபெருமான் இடையறாது பஞ்ச கிருத்தியம் எனப்படும் ஐந்தொழில்களைச் செய்துகொண்டேயிருக்கிறான் என்பது. இச்செயலின் வாயிலாக அவன் தன்னைப் புலப்படுத்திக் கொண்டேயிருக்கிறான். ஆகவே, இதைச் சிவ சைதன்யத்தின் ஓயாத தொழிலாக உணர்தல் வேண்டும். அப்படி அதை உணர்பவன் இந்த வாழ்விலேயே ஆன்மஞானத்தை அடைகிறான். இந்த ஐந்தொழில் கோட்பாடு காஷ்மீர் சைவத்தை வேதாந்தக் கோட்பாட்டிலிருந்து வேறுபடுத்துகிறது. இக்கொள்கையின் அடிப்படையில்தான் சீரம் எனப்படும் சாக்த மெய்விளக்கக் கொள்கை அமைந்துள்ளது.[13] திருமூலர் இமயத்தாழ்வரையிலிருந்து வந்தவராகக் கருதப்படுவதால் இக்கோட்பாட்டை அவரே முதன் முறையாகக் கண்டாரா அல்லது அங்கிருந்து கொணர்ந்தாரா என்பதும் ஒரு பிரச்னைதான். பிற்காலத் தமிழ் சைவ இலக்கியங்களில் ஐந்தொழில் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றன. ஆனால் தேவாரம் மற்றும் திருவாசகத்தில் இதுபற்றிய குறிப்பேதும் இருப்பதாகத் தெரியவில்லை. வேத மதத்தோடு ஒத்துப்போகாத ஒரு கொள்கையைத் திருமூலர் எப்படி ஏற்றார் என்ற கேள்வி பிறப்பது இயல்பானதே.

சைவ, வைணவ, சாக்த ஆகமங்கள், யோகபாதம் எனும் பகுதியில் அட்டாங்க யோகத்தைச் சுருக்கமாக விளக்குகின்றன. பதபஞ்சலி யோகத்தின் அடிப்படையில் ஒரு மெய்க்காட்சியியலையே உருவாக்கிக் கொடுத்துள்ளார். அதோடு சாங்கியமும் ஒரு காலத்தில் இணைந்துவிட்டதைக் காண்கிறோம். வசிட்டர் வாமதேவர் என்பவர்களின் பெயரால் அட்டாங்க யோக முறை ஒன்று இந்த நாட்டில் வழங்குகிறது. மச்சேந்திரர், கோரக்கநாதர் ஆகிய நாதசித்தர்கள்

தொடங்கிய யோக முறையும் கண்டு, யோக உபநிடதங்கள் என்ற பெயரால் பிற்காலத்தில் எழுந்த யோக நூல்களிலும் அட்டாங்க யோகம் விளக்கம் பெறுகிறது. ஆனால் மூன்றாம் தந்திரத்தில் காணப்படும் அட்டாங்க யோகம் மற்றவைகளினின்றும் வேறுபட்டு உள்ளது. அதிலும் குறிப்பாகப் பரியங்கியோகம், சந்திரயோகம், அமுரிதாரணை, கேசரி யோகம், வாரசரம், வாரசூலை ஆகிய பகுதிகள் ஆகமங்களிலோ, பதஞ்சலி யோக சூத்திரத்திலோ காணப்படாதவை. இங்குக் கூறப்பெறும் யோக முறை நாதசித்தர்களும் தந்திர வாதிகளும் விளக்கும் யோக முறையை ஒத்துள்ளது. பரயங்கியோகம் என்பது வஜ்ரோலி, அம்ரோலி, சகஜோலி என்ற வேறுவேறு பெயர்களால் அடயோக பிரதீபிகையில் காணப்படுகிறது. இது கண்ட அல்லது சண்ட கபாலிகர்களிடையே வழங்கிவந்த ஒருவகைச் செயல்முறை. பின்னர் யோக நூல்களிலும் இடம்பெற்றுவிட்டது. சுத்த சைவத்தை வலியுறுத்தும் வேதாந்தி சித்தாந்தியான திருமூலர் இதை எப்படி ஏற்று நூலில் அதற்கு இடம் கொடுத்தார் என்பது புரியவில்லை. கட்குடியையும் காமத்தையும் வாழ்க்கை நெறியெனக் கொண்ட வாமத்தோரை வன்மையாகச் சாடும் ஆசிரியர் நெறியல்லா நெறியை ஏன் ஏற்றார்?

நாலாந்தந்திரம் முழுவதும் வெவ்வேறு வடிவுகளில் காட்சிதரும் தேவியின் வழிபாட்டு முறைகளை விளக்குகிறது. அத்தகைய வழிபாட்டில் ஏற்கப்பெறும் தேவதைகள், அவர்களைக் குறிக்கும் ரூபாரூபமான இயந்திரங்கள், அவைகளுக்குரிய மந்திரங்கள் முதலியன அப்பகுதியில் விரிவாகவே கொடுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 534 பாக்களைக் கொண்ட இத்தந்திரம் திருமந்திரத்தின் நீண்டதொரு பகுதியாகும். கௌல மதம், திரிபுரா மதம் மற்றும் வேறுபல தாந்திரீக மதங்களின் சாரமாக இத்தந்திரம் அமைந்துள்ளது எனச் சொன்னால் மிகையாகாது. ஏற்கெனவே குறிப்பிட்டது போல இம்மதங்களும் இவைகள் வகுத்த வழிபாட்டு முறைகளும் ஒருகாலத்தில் வேத மதத்திற்குப் புறம்பானவைகளாகக் கருதப்பட்டன. அவைகளை வேதவாதிகள் ஒதுக்கினர். ஆனால், திருமூலர் அவைகளை வேத சம்மதமான மதங்களாகக் காட்டுகிறார். இத்தந்திரம் பெரும்பாலும் யாமள ஆகமத்தை ஒட்டியே அமைந்துள்ளது. மேலும் மந்திர சாத்

திரத்தில் கூறப்படும் பல மந்திரங்களை இப்பகுதி எடுத்தாளுவதைக் காணலாம்.

இதே தந்திரத்தில் 64 யோகினிகள் குறிப்பிடப்படுகிறார்கள். அவர்களுக்கென இந்திய நாட்டில் ஐந்து ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. அவைகள் முறையே நர்மதையின் கரையில் உள்ள பேடாகாட், கஜுராகோ, ராணிஜாரியல், சுரதா மற்றும் தமிழ்நாட்டில் ஓரிடத்தில் உள்ள இந்த யோகினி—கோயில்கள் வட்டவடிவமான அமைப்பில் உள்ளன. இந்த யோகினிகளைத் தவிர வேறுபல பெண் தெய்வங்களும் வழிபாட்டிற்குரியனவாக இருந்ததைத் திருமந்திரம் உணர்த்துகிறது. சாக்த மதத்தின் தாக்கம் எந்த அளவு தமிழ்நாட்டில் இருந்தது என்பதை ஒருவாறு இந்தத் தந்திரத்திலிருந்து அறியலாம். இந்த மாதிரியான நிலை எவ்வாறு உருவாயிற்று என்பதும் ஒரு சிக்கலான பிரச்னைதான் என்பதில் ஐயமில்லை. சுத்த சைவத்தின் ஒரு கூறா இந்த சாக்தம் என்பது ஆராயப்படவேண்டும். இத்தந்திரத்தில் டாமரத்தைச் சார்ந்த தம்பனம், மோகனம், உச்சாடனம், மாரணம், வசியம்,'' ஆகர்ஷணம் ஆகியவை இடம்பெற்றுள்ளதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

முதல் நான்கு தந்திரங்கள் பொது என்றும் பிந்தைய ஐந்தும் சிறப்பு என்றும் சொல்லப்படுவதின் காரணம் என்ன என்பதையும் ஆராய்தல் வேண்டும்.

ஐந்தாம் தந்திரத்தில் திருமூலர் நால்வகைச் சைவத்தைப் பற்றிப் பேசுகிறார். அவை முறையே சுத்த சைவம், அசுத்த சைவம், மார்க்க சைவம், கடுஞ்சுத்த சைவம் என்பன. தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பிற பகுதிகளிலும் சைவத்தைச் சார்ந்த ஆறுவகைச் சைவர்கள் இருந்தனர். ப்பாசுபதர்கள், சைவர், ஆகமச்சைவர், காபாலிகள், காளாமுகர், மாவிரதிகள், வாமத்தோர் ஆகியவர்கள் சைவர்களே. தேவார இலக்கியத்தில் பாசுபதர், சைவர், காபாலிகள் குறிப்பிடப்படுகின்றனர். மாவிரதிகள் உள்ளிட்ட அறுவகைச் சைவர்களைப் பற்றிக் கல்வெட்டுகளும் பேசுகின்றன. ஆனால் திருமூலர் குறிப்பிடும் நால்வகைச் சைவர்கள் யார் என்பது தெரியவில்லை.

''ஆறு சமயமுங் கண்டவர் கண்டிலர்
ஆறு சமயப் பொருளும் அவனலன்'' (1533)

என்று யாரைக் குறித்துப் பேசுகிறார் திருமூலர்?

காலாங்கி, கஞ்சமலையன், கந்துரு என்ற பெயர்களைக் கொண்ட தனது சீடர்களை முன்னிலைப்படுத்தி அவர்களுக்குச் சுத்த சைவத்தின் உயிர் நாடியாக விளங்குவது மூல அல்லது மூலன் சரியை என விளக்க முற்படும்போதும், அதனை அடுத்து, கிரியை யோகம் ஞானம் ஆகியவற்றைப் பற்றிப் பேசும்போதும் திருமூலர் உணர்த்த விரும்பும் நெறி யாது? என்ற கேள்வி பிறக்கிறது. சீவனைத் தளைப்படுத்தும் மலங்கள் மூன்று என்பதைச் சைவசமயத்தைச் சார்ந்த எல்லாப் பிரிவினரும் ஒப்புவர். மலங்கள் நான்கு என போஜ தேவர் தாமெழுதிய தத்துவப் பிரகாசத்தில் சொல்லியுள்ளார். திருமூலர் மலங்கள் மூன்று எனச் சிலவிடங்களிலும் ஐந்து எனச் சிலவிடங்களிலும் குறிப்பிட்டுள்ளார். இந்த வேறுபாடு எதனால் ஏற்பட்டது?

''சீவ னெனச்சிவ னென்னவே றில்லை
சீவ னார்சிவ னாரை யறிகிலர்
சீவ னார்சிவ னாரை யறிந்தபின்
சீவ னார்சிவ னாயிட் டிருப்பாரே'' (2017)

இப்பாட்டில் சீவ சிவ அபேதம் காட்டப்படுகிறது. 'தத்துவம்சி' என்ற வேதாந்த வாக்கியத்திற்கு விளக்கம் அளிக்கும் போது திருமூலர் இதையே மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறார். சைவத்திற்குரிய முப்பத்தாறு தத்துவங்களை விவரித்து அவைகளை வேதாந்தத்தோடு இணைக்கும் திருமூலரது சுத்த சைவம் யோகத்தையும் கௌலத்தையும் பற்றி நிற்பானேன்?

திருமூலர் ஒரு செய்யுளில் (2179) 96 தத்துவங்களைப் பொது என்று குறிப்பிட்டுச் சைவர் தத்துவம் 36, வேதாந்திகளின் தத்துவம் 28, வைணவர் தத்துவம் 24, மாயாவாதிகள் தத்துவம் 25 என்று சொல்லியுள்ளார். அவர் சுட்டும் வேதாந்திகள் யார்? வைணவர் யார்? பாஞ்சராத்ரிகளா அல்லது வேறு யார்? மாயாவாதிகள் யார்?

ஒன்பதாவது தந்திரத்தில் 17-ஆவது பிரிவில் உள்ள 70 பாடல்கள் சூனிய சம்பாஷணை என்ற தலைப்பைக் கொண்டுள்ளன. இந்த மறைபொருட் கூற்றில் திருமூலர் தாம் சொல்ல 'விரும்பியதை நேரடியாகச் சொல்லாமல் சுற்றி

வளைத்துச் சொல்கிறார். இந்த உத்தி அதர்வவேதம், புத்த தந்திர நூல்கள், நாதசித்த நூல்கள் ஆகியவைகளில் கையாளப் பட்டுள்ளது. இந்த மொழி நடையைச் சந்தியா அல்லது சந்தாய மொழி எனச் சித்தர் இலக்கியத்தை ஆய்ந்தவர் கூறுவர். "The Sandhya-Bhasha or the Sandha-Bhasha has become an all-India literary technique for giving expression to esoteric doctrines"[14] என இந்த மொழிநடைக்கு ஒரு விளக்கம் தந்துள்ளார் பேராசிரியர் தாஸ்குப்தா. திருமூலர் சிவ லோகத்தைத் தன்னுள் கண்ட மாபெரும் சித்தர் என்பதில் ஐயப்பாடே இருக்கமுடியாது. சிவஞானம் கைவரப்பெற்ற சீவன் ஐம்மலங்களையும் களைந்து அவரோகண முறையில் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து தான் வேறு சிவன் வேறு என்றில்லாமல் நானே பிரமம், தானே அவன், அவனே தான் என்ற உயரிய நிலையை அடைகிறது என்று கூறும் நூலாசிரியர் முன்னும் பின்னும் தொடர்பில்லாத முறையில் ஏன் இத்தகைய பாடல்களைப் புனையவேண்டும்?

இதுபோன்ற கேள்விகளுக்குச் சரியான விடைகளைத் தரவல்லவரே திருமந்திரத்தை உள்ளது உள்ளபடி உணர்ந்தவர் என்று சொன்னால் அது பொருத்தமானதே.

குறிப்புகள்

1. தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், பக். 159.
2. பெரியபுராணம், கோ. வன்மீகநாதன், பக். 572.
3. தேவாரம், ஸ்ரீகாசிமடம்; பக். 150.
4. பிற்காலச் சோழர் சரித்திரம், தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பக். 30.
5. சோழர் (ஆங்கிலம்), கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, பக். 637.
6. பிற்காலச் சோழர் சரித்திரம், தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பக். 417-18.
7. திருத்தொண்டர் புராணம், ஸ்ரீகாசிமடம், பக். 557-560.

8. திருமந்திரம், ஸ்ரீகாசிமடம், பக். 11; 13-16; 17.
9. திருமந்திரம், ஸ்ரீகாசிமடம், பக். 249.
10. கௌலாவலி தந்திரம், பக். 76.
11. ஸ்யாமா ரகசியம், பக். 24.
12. An Alphabetical Index of Tamil Manuscripts, Vol. IV, Govt. Oriental Mss. Library, Madras, pp. 116; 322; 338-342.
13. The Krama Tantricism of Kashmir, Vol. I, Dr. Navjeevan Rastogi, pp. 11-12.
14. Obscure Religious Cults, Dr. S.B. Das Gupta, p. 424.

19. திருமுருகாற்றுப்படை

மொ. அ. துரையரங்கனார்

நாம் தமிழர். நமது மொழி தமிழ்மொழி. அதனால்தான் நாம் தமிழர் எனப்படுகிறோம். நமது தமிழ் மிகமிகத் தொன்மையான மொழி. அம்மொழியில் மிகமிகத் தொன்மை யான நூல் திருமுருகாற்றுப்படையே. அதுவே நமது முதல் நூல். இலக்கணம் இலக்கியம் என்ற பாகுபாட்டில், அஃதோர் இலக்கியந்தானே! ஆனபின் அஃதெப்படி முதல் நூல் ஆகும்? இலக்கியம் கண்டதற்கே இலக்கணம். நூல் வரிசையில் இலக்கியமே முதலிடம் பெறும். ஆகவே, திருமுருகாற்றுப்படையே முதல் நூலாகும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

அஃது எவ்வாறு முதலிடம் பெற்றது? திருமுருகாற்றுப் படையை அறிந்தால் எல்லாம் அறிந்தவர்கள் ஆவோம். ஆதலினால்தான் அது நம் நூல் வரிசையில் முதலிடம் பெற்றது.

நாம், நம் எதிரே உலகைப் பார்க்கிறோம். உலகம் காரியம்; செயப்படுபொருள். எனவே, இதற்கொரு கர்த்தா உண்டு; வினை முதல் உண்டு. அம்முதற் பொருள் யாது? கடவுள். கடவுளை அறிந்தவர், எல்லாம் அறிந்தவர் எனப்படுவர். திருமுருகாற்றுப்படையை அறிந்தவர்கள் கடவுளை அறிந்தவர்கள் ஆவார்கள். எனவே, அதை அறிந்தவர்கள் எல்லாம் அறிந்தவர்கள் ஆவார்கள் என்ப தில் தடை யாது? திருமுருகாற்றுப்படை வெறும் இலக்கிய நூல் மட்டும் அன்று. அஃதொரு கடவுள் நூலும் ஆகும். இங்கெல்லாம், அறிந்தவர் என்றால் அனுபவமாக அறிந்த வர் எனக் கொள்ளல் வேண்டும்.

இலக்கிய இலக்கணப் புலமையோடு, கடவுட் புலமையும் வாய்ந்த நக்கீரர் பெருமானாரே திருமுருகாற்றுப்படையின் ஆசிரியர். தாம் பெற்ற இன்பம் உலகோர் அனைவரும் பெறவேண்டும் என்ற அருளுள்ளத்தோடு, நக்கீரர் பெரு மானார் படைத்த படைப்பே திருமுருகாற்றுப்படை.

அரிது அரிது எனப்படும் மக்கட்பிறப்பில்தான் பிறப் பறுத்துப் பேரின்பம் பெற்று நிலைபெற முடியும். கல் முதல் யானை இறுதியான மற்றப் பிறப்புகளுள் அப்பேரின்பத் தைப் பெறவே முடியாது. ஆகையினால்தான், இம்மக்கட் பிறவி முடிவதற்குள் அறிவன அறிந்து, ஆற்றுவன ஆற்றி, மெய்யுணர்வு உற்று, அப்பேரின்பத்தை அடைந்துவிட வேண்டும் என்று அறிந்தோர் கூறுவர்; அறிவு நூல்கள் எல்லாம் பறை சாற்றும்.

நக்கீரர், தம் வாழ்நாளிலேயே அப்பேறு பெற்றுத் திகழ்ந்தவர். வாழ்நாளிலேயே அப்பேறு பெற்றவர், ஜீவன் முத்தர் எனப்படுவர். அவரை உயிரொடு செத்தவர் எனத் தமிழில் வழங்குவர். உடலிலிருந்து உயிர் நீங்கியபின் அப் பேறு பெற்றவர், விதேக முத்தர் எனப்படுவர். அவரை, உடலொடு செத்தவர் எனத் தமிழில் வழங்குவர்.

மக்கட்பிறப்பில் தோன்றியவர் யாவரேயாயினும், தம் தூய மனங்கொண்டு, பிறப்பறுத்துப் பேரின்பம் பெறுவ தற்குக் கடைப்பிடித்தற்கு உரிய நெறிகள் இரண்டாகும். அவை உருவ வழிபாட்டு நெறி, அருவ வழிபாட்டு நெறி எனப்படும்.

நக்கீரர் பெருமானார், இந்த இரு நெறிகளையும் கடைப் பிடித்துத்தான் ஜீவன் முத்தரானார். எனவே, அவர், தாம் பெற்ற பேறு யாவரும் பெற வேண்டும் என்ற அருளுள்ளத் தோடு அவற்றைக் குறித்த விவரமெல்லாம் திருப்பரங்குன் றம் என்ற முதற்பகுதியில் தெளிவாக உரைக்கிறார்.

ஒருவர் தாம் அனுபவத்தால் துய்த்ததை, மற்றவர்க்குச் சொல்லால் எடுத்தியம்ப முடியாது. எந்த அனுபவத்தையும் மற்றவர்க்குச் சொல்லால் இயம்பவே முடியாது. தமக்கு ஏற்பட்டிருக்கும் பசித்துன்பம் இவ்வாறிருக்கிறது என்று மற்றவர்க்கு எவ்வாறு உரைப்பது? மற்றவர் அதை எவ்வாறு உணர்வர்.

ஆகவே, தாம் பெற்ற அனுபவத்தை மற்றவர்க்கு நக்கீரர் எடுத்துரைக்கிறார் என்று எவ்வாறு சொல்லலாம்? நாடகத் தில் நடிப்பவர் இரட்டை வேடம் போடலாமன்றோ? அதே உத்தியைக் கைக்கொண்டு தான், நக்கீரர் தாமே உரைப்பவ ராகவும் கேட்பவராகவும் இங்கே இரட்டை வேடம் பூண்டு

அறநெறிகளைக் கடைப்பிடிக்கும் முறையையும் அடையக் கூடிய பயனையும் மற்றவரெல்லோரும் அறியும்படி செய்து விடுகிறார். இந்த உத்தியை அறியாதவர், உரைப்பவரை ஒரு புலவராகவும், கேட்பவரை ஒரு புலவராகவும் கொண்டு, ஒரு புலவர் மற்றொரு புலவரை முருகனிடம் ஆற்றுப் படுத்தும் நெறி ஈண்டு உணர்த்தப்பட்டது என்று மேலெழுந்த வாரியாகக் கொண்டு, முருகாற்றுப்படைக்குப் புலவராற் றுப்படை என்பது ஒரு பெயராம் என்று சாதிப்பர். அத் தகைய வழக்குக்குத் தொல்காப்பியத்தில் இடமில்லை என்று திருமுருகாற்றுப்படைக்கு முதல் முதல் உரை எழுதத் தலைப்பட்ட நச்சினார்க்கினியரே மறுத்துவிடுகிறார். அவ் வாறு கூறுகிறவர், உரைப்பவரை வீடுபெற்ற ஒருவராகக் கொண்டு, கேட்பவரை வீடுபெற நிற்பார் ஒருவராகக் கொண்டு அவரை முருகனிடம் ஆற்றுப்படுத்தலே முருகாற் றுப்படையாம் என்று அவர் புனைந்துரை வழங்குவர். தொல்காப்பியப்படி, பாணனைப் பாணன் ஆற்றுப்படுத் தல் பாணாற்றுப்படை எனப்படுதல் போல, முருகனை முருகன் ஆற்றுப்படுத்தலே முருகாற்றுப்படையாம் எனல் வேண்டுமாதலால் அவர் கூறும் புத்துரையும் தவறேயாகும் என்பதைப் பொறுத்திருந்து அறிவோம்.

ஆனால் ஆற்றுப்படையைப் பற்றிச் சிந்திக்க இங்கே இடம் இல்லை. இங்கே நக்கீரர் இரண்டு நெறிகளைப் பற்றியே நாடக வழக்கில் நின்று விளக்கம் தருகிறார்.

பிறப்பறுத்துப் பேரின்பம் பெற இரு நெறிகளை ஒன்றன்பின் ஒன்றாகக் கடைப்பிடித்தல் வேண்டும். அவை உருவ வழிபாட்டு நெறி, அருவ வழிபாட்டு நெறி என்பன வாகும். அவற்றுள் உருவ வழிபாட்டு நெறியை, முதலிற் கடைப்பிடித்தல் வேண்டும். பின்னர் அருவ வழிபாட்டு நெறியை மேற்கொள்ள வேண்டும். உண்மையில், அருவ வழிபாட்டு நெறியால்தான் பேரின்பம் எய்தலாம். ஆகை யால், அதனையே கொள்ளலாமே, அதனை முதலிற் கொள்ள லாமே என்று எண்ணுதல் கூடவே கூடாது. உருவ வழிபாட்டு நெறியை முதலிற்கொண்டு பக்குவம் பெற வேண்டும். பெற்றபின் அதனோடு தொடர்ந்து அருவ வழி பாட்டு நெறியைக் கொள்ள வேண்டும். இதனை நன்கு வற்புறுத்த, உருவ வழிபாட்டு நெறியோடு அருவ வழி

பாட்டு நெறியை மேற்கொண்டால் பேரின்பம் பெற வேண்டும் என்று எண்ணிய எண்ணம் விரைவில் நிறைவேறும். இல்லாவிட்டால் நிறைவேறாது என்று கொள்ளும் வகையில் அவர் சொற்களை நயம்பட ஆண்டுள்ளார். இந்த நெறிமுறைகளே நக்கீரர் நமக்கு உணர்த்தவந்த கருவாகும்.

உருவ வழிபாட்டு நெறி என்பது, கடவுளை உருவமாகக் கொண்டு மாறாத தூய அன்புடன் அவன் திருவடியில் மனத்தை ஈடுபடுத்தி வழிபடும் நெறியாகும். இதுவே, அன்பு நெறி என்றும், தொண்டு நெறி என்றும், கரும நெறி என்றும், பக்தி நெறி என்றும் வழங்கப்பெறும்.

அருவ வழிபாட்டு நெறி என்பது அருவமாக யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் அக்கடவுளைத் தத்துவ விசாரம் செய்து மதிநலத்தால் வழிபடும் நெறியாகும். அறிவாராய்ச்சி செய்து வழிபடும் நெறி ஈது ஆதலால், ஈது அறிவு நெறி என்றும், ஞான நெறி என்றும் வழங்கப்பெறும்.

இந்த இரண்டு நெறிகளும் சமயந் தழுவி நிற்கும் உலகோர் அனைவராலும் போற்றப்படும்.

பகவத்கீதை மூன்றாம் அத்தியாயத்தின் மூன்றாம ஸ்லோகத்தில், ''இந்த உலகில், யோகியர்க்குக் கர்மயோக நெறி என்றும், சாங்கியர்க்கு ஞானயோக நெறி என்றும் இரண்டு நெறிகளையும் நான் முன்பே வகுத்துக் கூறியிருக்கிறேன்'' என்று கண்ணன் கூறியிருத்தலை ஈண்டு நினைவுகூரலாம்.

யாண்டும் நீக்கமற உணர்வொளியாய் நிறைந்திலங்கும் அம்முதற்பொருள், எப்போது எப்போது அறம் தேய்ந்து பாவம் வளர்ச்சி பெறுகின்றதோ அப்போது அப்போது, அறம் போற்றும் நல்லோரைக் காத்து உயர்த்தவும், மறம் பரப்பும் தீயோரைத் தேய்த்து ஒழிக்கவும், அறத்தை நிலை நிறுத்தவும் உருவங்கொண்டு அவதாரம் செய்யும் என்று அறநூல்கள் பறைசாற்றும். அவ்வாறு அவதாரம் செய்து மறைந்த அந்த மூர்த்தங்களையே கல்லிலும் பொன்னிலும், பிற உலோகங்களிலும் தெய்வத் திருமேனிகளாக அமைத்துக் கோயிலில் வைத்து வழிபாடாற்றுவர்.

கண்ணன், இராமன், முருகன் எனப் பெயர்களாலும், வடிவங்களாலும் அவதாரங்கள் வேறுபடுவன எனினும்

அவையெல்லாம் ஒரே முதற்பொருளின் தோற்றங்களே யாதலால் எந்த வடிவத்தை வழிபட்டாலும் பயன் ஒன்றே யாகும். ''எந்த எந்த வடிவமாக வழிபாடாற்றுகிறார்களோ அந்த அந்த வடிவமாக நானே வந்து அருள்செய்கிறேன்'' என்பது பகவத்கீதை அருள்வாக்கு.

இந்த முறையில், தம் உருவ வழிபாட்டுத் தெய்வத் திருமேனியாக முருகனைப் போற்றினவர், நக்கீரர் பெருமானார். உருவத் திருமேனி வழிபாட்டு நெறி நின்று, செம்மல் உள்ளம் பெற்றுப் பக்குவமடைந்தார். ஆற்றுப் படை உத்தி முறையால் அவனுடைய (முருகனுடைய) தெய்வக் காட்சி பெற்றார். அவனருளால் தத்துவக் கூறுபாடுகளுடன் அறிவு நெறி நிற்கும் மதிநலம் பெற்றார், ஒப்பற்ற ஒருவராய்த் திகழும் பேறு பெற்றார். இந்த அனுபவம் பெற்றதனாலேயே, அவர் உருவ வழிபாட்டு நெறியில் முதலில் நின்று அவன் காட்சிபெறப் பக்குவம் பெற வேண்டும். அருவ வழிபாட்டு நெறி நிற்றல், பின்னர் அவனருளால் கிடைக்கும். அறிவு நெறியே பிறப்பறுக்கும் நெறி எனினும் அதனை நேரே பற்ற நினையாமல் உருவ வழிபாட்டு நெறியோடு அதனைப் பற்ற வேண்டும் என்று முதலில் வற்புறுத்துகின்றார். இதுவே திருப்பரங்குன்றத் தலைப்புடைய பகுதி நமக்கு உணர்த்துவதாகும்.

இந்த உண்மையே அவர் நமக்கு உணர்த்த முற்பட்ட நற்செய்தியாகும். இவ்வாறு உணர்த்த முற்பட்ட உடனேயே அவர் தம்மை மறந்து உருவ வழிபாட்டில் அழுந்திவிடுகிறார். திருமுருகாற்றுப்படையின் முதல் அறுபத்தொரு வரிகளும் அவருடைய உருவ வழிபாட்டுக் காட்சியேயாகும். வரிவரியாக நாம் ஈடுபட்டால் நக்கீரரோடு நாம் கலந்து நின்றுவிடுவோம் என்பது உண்மை.

யாண்டும் நீக்கமற நிறைந்திலங்கும் உணர்வொளிக் காட்சி. அவ்வொளி சேண் விளங்கு அவிர் ஒளியாய்ப் பரந்த கடல் நின்றெழும் ஞாயிற்றொளியாய்த் திகழ்கின்றது. பரந்த கடல் மயில், ஞாயிறு சேயோன். அடுத்து அன்பரைத் தாங்கும் திருவடி; செருநரைத் தேய்க்கும் கைகள்; அருகே நெருங்க நெருங்க ஒரு பக்கம் தெய்வயானைத் திருவுருவம்; மார்பிற் புரளும். செங்கடப்ப மலர்மாலை; முடியில் காந்தட்கண்ணி; கையில் வேல்; செம்மேனி

கொண்ட செம்முகச் சேஎய். இவ்வாறு தம் காட்சியில் நம்மை ஈடுபடுத்திக் காணச்செய்யும் ஓவியக்காட்சி அவருக்கே அமைந்த ஒன்றாகத் திகழ்கின்றது.

அடுத்துத்தான் அவர் நமக்கு உணர்த்தும் உபதேச மொழி; மறை வாக்கு; அப்படியே ஈடுபடுவோம். அந்த ஈடுபாடே வீடாம்.

''மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுந் நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்றே பெறுதிநீ முன்னிய வினையே''.

ஏழே அடிகள். இந்த ஏழு அடிகளுக்கும் திருப்பரங் குன்றத்திற்கும் ஒரு தொடர்பும் இல்லை. முன்னே அவர் கண்ட காட்சி ஈடுபாட்டிற்கும் திருப்பரங்குன்றத்திற்கும் யாதொரு தொடர்புமில்லை. இந்த உண்மையை நன்கு உளத்தில் பதித்துக்கொள்ள வேண்டும்.

இனி, ஏழு வரிகள் பற்றியும் நெறி குறிக்கும் செலவு பற்றியும் ஈடுபடுவோம். ஓரிடத்தில்தான் செலவு என்ற சொல் வருகின்றது. அச் செலவு எதைக் குறிக்கின்றது? நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறைதலைக் குறிக்கின்றது. யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கும் ஒரே முதற்பொருளே, கல் முதல் மக்கள் ஈறான-எல்லாப் பொருளிலும் நிறைந் திருப்பதறிந்து அவ்வெல்லாப் பொருளுக்கும் நலம் புரி தலையே கொள்கையாகக் (விரதமாக) கொள்வதே அறிவு நெறி நிற்பார்க்கு வேண்டப்படுவதான ஒரு கூறு. அடுத்தது, புலன் என்னும் உலக விஷயத்தில் பற்றுண்டு பிறப் பிலிருந்து நீங்குவ்தற்கு அப்புலனில் செல்லாது அறி கருவி களாம் இந்திரியங்களை வெல்லும் வெற்றி பெற்று உறைதல். எனவே அறிவு நெறிச் செலவு இந்த ஒன்றேகால் அடிகளால் குறிக்கப்பட்டுவிட்டன. அறிவு நெறிச் செல வால்தான் பிறப்பறுத்துப் பேரின்பம் பெறவேண்டும் என்ற நசை (விருப்பம்) நிறைவேறும். ஆனால் உள்ளமொடு நயந்தால்தான் அஃதுண்டு. இன்றேல் இல்லையென்பது ஒடு

என்னும் உருபின் ஆற்றல், அங்கேதான் மற்றொரு செலவுச் சொல்லை மறைமொழியாக அமைத்து வைத்துள்ளார். அதனை அறியாததால்தான் இருநெறிகள் புலப்படக் கூறப் படவில்லை என்ற பெருஞ்சிக்கல் ஏற்பட்டுள்ளது. அம் மறைமொழி யாது? அதுதான் படர் என்னும் சொல். ஏன் அதை வெளிப்படையாகக் கூறவில்லை. செலவு என்ற சொல்லொடு உள்ளுதல் என்ற கருத்தும் தேவை. இரு கருத்துகளும் கொண்ட சொல், படர் என்பது, ''படரே உள்ளல் செலவும் ஆகும்'' என்ற நூற்பா இப்போது நம் கண்முன்னே எழுந்து தோன்ற வேண்டும்.

தம்முடைய வழக்கமான உருவ வழிபாட்டில் முருகனைக் காணும் காட்சியைக் கண்டு நாமும் உணரும்படி காட்டிச் சேஎய் எனக்காட்சியை முடிவு செய்து,

''அச்சேஎய் (இன்)
சேவடி படரும் செம்மல் உள்ளம்''

பெற்று நிலையுறுவதே உருவவழிபாட்டுக் காட்சியின் எல்லையாக அவர் குறிக்கிறார். படர் என்பது உள்ளல், செலவு என்ற இருபொருளைக் குறிக்கும் என்பதை முன்பே சுட்டினோம். எனவே, செக்கச்செவேலென்ற திருமேனி உடையவனான சேயோனுடைய சிவந்த அடியை உள்ளிச் செல்லும் செலவாகிய வழிபாட்டு நெறி நின்ற செம்மல் ஆகிய தலைமை உள்ளம் பெற்றுப் பக்குவம் அடைய வேண்டும். இதுவே உருவ வழிபாட்டு நெறியாகிய முதல் நெறி. இந்த நெறியோடு ''நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையும் செலவு'' என்பதால் குறிக்கப்படும் அறிவு நெறியை முருகன் அருளால் பெற்றுவிட வேண்டும். அப்போது எண்ணிய எண்ணங் குறித்த பேறு பெற்றுவிடலாம், இந்த இரண்டாம் நெறியே பெறற்கரிய பேறு பெறுவதற்கு நேர் நெறி என்றாலும், அன்பு நெறி நில்லாமல் இந்த நெறியைப் பெற முடியாது என்னும் கருத்துத் தெளிவுபட இந்த ஏழு வரிகளில் இரண்டு நெறிகளைப் பற்றித் தெளிவாக்குகிறார்.

இவற்றைக் கேட்டவுடன், கேட்பவன் யாது செய்ய விழைவான்? உருவ வழிபாட்டு நெறியை எங்ஙனம் பற்ற லாம் என்பதேயன்றோ! இங்கேதான் அவர் தாம் மேற் கொண்ட முறைகளையெல்லாம் எடுத்துரைக்கிறார்.

கோயில்களே, உருவ வழிபாட்டு நெறி நிற்கத் துணை புரிவன ஆகும். எனவே, நக்கீரர், தாம் வழிபட்ட இடங்களாகிய பலப்பல கோயில்களுள், மதுரையைச் சுற்றியுள்ள சில கோயில்களைச் சுட்டுகிறார். கோயில் வழிபாடு செய்து உருவ வழிபாட்டில் பக்குவம் பெற்றவர், பின்னர்த் தாம் இருந்த இடத்தில் இருந்தபடியே முருகனை உளக்கண்ணால் கண்டு வழிபடும் முறையையும் விளக்குகிறார். இந்த முறைகளுள் ஏதாவது ஒன்றைப்பற்றிப் பக்குவம் பெறலாம் என அமைதி பெறுகிறார். நூல் முழுதும் பெரும்பான்மையாக உருவ வழிபாட்டிற்கு உரிய முறைகளையே கூறுவதாக இருத்தலை நாம் நூலைப் படித்து உணரலாம். ஒவ்வொரு தலமும் ஒவ்வொரு வகையாக முருகன் சிறப்பை உணர்த்துவதாகும். ஆகவே ஒவ்வொன்றாகப்பற்றி ஈடுபடும்போது, அவ்வச் சிறப்பில் ஈடுபட்டுப் பக்குவம் பெறலாம். இங்கே முதற்பகுதியாகிய திருப்பரங்குன்றப் பகுதியில் 67 ஆம் வரி தொடங்கி 77 ஆம் வரி இறுதியாக உள்ளவை திருப்பரங்குன்றத்தில் முருகன் உறையும் சிறப்பை இயற்கைக் காட்சி எழுச்சியோடுப் புலப்படுத்துவனவாம். இந்தப் பதினொரு வரிகளே திருப்பங்குன்றத்தைப்பற்றியவை. ஏனைய 6 வரிகளும் அவருடைய முருகன் காட்சிச் சிறப்பையும், இரு நெறிகளைப் பற்றிய உண்மையையும் விளக்குவனவாம். அந்த 66 வரிகளுக்கும் மற்றப் பதினொரு வரிகளுக்கும் தொடர்பில்லையாதலால் முதற் பகுதி முழுதும் திருப்பரங்குன்றச் சிறப்பை விளக்குவதென முடிவு செய்தல் ஆகாது.

நெறிகளைப் பற்றிக் கேட்டுணர்ந்தவன், முதலில் உருவ வழிபாட்டு நெறியிற் சென்று பக்குவமடையத் துடிதுடித்து நிற்பவனாகின்றான். அவனைப் பார்த்து முதலில் வெற்றித் திருவையேயுடைய மதுரைக்கு மேற்குப் பக்கமாக உள்ள திருப்பரங்குன்றத்தில் முருகன் உறைதலுடையவன்; அங்கே சென்றால், அவனைக் கண்டு வழிபடலாம் என்கின்றார். அதுவன்றி, அடுத்துத் திருச்சீர்அலைவாய்க்குச் சென்றால் அங்கே ஆறுமுகங்களும் பன்னிரண்டு கைகளும் கொண்டு திருவிளையாடல் புரியும் முருகனைக் கண்டு வழிபடலாம் என்கிறார். அதுவன்றி, அடுத்துத் திரு ஆவினன்குடிக்குச் சென்றால், நான்முகனைச் சிறை மீட்பதற்காகக் குழுமிய தேவர்கள் குறை தீர்த்த முருகன் உறைதலைக் காணலாம். அதுவன்றி, நாற்பத்தெட்டாண்டு பிரமசரிய நிலை நின்று

வழிபட்ட அந்தணர் போற்றுதலைப்பெற்ற திருவேரகத்தில் அவன் உறைதலும் உரியன். அங்கே சென்றாலும் அவனைக் கண்டு வழிபடலாம். இவ்வாறு, நாலு தலங்களைப்பற்றிக் கூறிய நக்கீரர், அவன் உறையாத இடமே இல்லையே என்ற உணர்ச்சி பெற்றவராய்ச், ''சேயோன் மேய மைவரை உலகம்'' என்ற எண்ணம் அடிமனக் கண்முன் எழுந்து நிற்க, உலகம் முழுதும் உள்ள எல்லாக் குன்றுகளும் அங்கே வாழும் குறமக்களால் வழிபாடு செய்யப்பெற்று அவர் களோடு கைகோத்து ஆடும் இடங்களாவனவாம். ஆதலால் அங்கெல்லாம் அவனைக் கண்டு வழிபடலாம் என்கிறார். மேலே நான்கு தலங்கள் அவன் உறைவிடங்களாகக் குறிக்கப் பட்டன. இங்கே உலகில் உள்ள ஆயிரக்கணக்கான குன்று களெல்லாம் அவன் உறைவிடங்களாகக் குறிக்கப்பட்டன. இப்போது, அவருக்குத் தலங்கள் பற்றிக் கவலையில்லை. பழமுதிர்சோலைப் பகுதியைத் தொடங்குகின்றார். தொடங்கு கின்றவர், தலங்களில் மட்டுமே அவன் உறைபவன் என்று கொள்ளத் தேவையில்லை. ஆயிரக்கணக்கான குன்றுக ளெல்லாம் அவன் உறைவிடங்களே என்பது கண்டோம். அம்மட்டோ? ஒவ்வோர் ஊரிலும் அவனைக் குறித்து விழாக் கொண்டாடுவார்கள் அன்றோ! அவ்விழாவிலும் அவனைக் கண்டு வழிபடலாம். வழிபாட்டிற்கு, இது வரையில் பல தலங்களைக் கண்டு வழிபாடாற்றி உளத்துள் அமைத்துக்கொண்ட முருகன் திருமேனிக் காட்சி ஒன்றே போதும் என்பாராய், ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும் அவனை வழிபடலாம்; வேலன் அமைத்த வெறி அயர் களத்தினும் அவனை வழிபடலாம்; காடும், காவும், வைப் பும், சதுக்கமும், சந்தியும், கடம்பும், மன்றமும், பொதியி லும், கந்துடை நிலையிலும் அவனைக் கண்டு வழிபடலாம். இவ்வாறு பலப்பல இடங்களைக் குறித்தவர் இறுதியாக அன்பே உருவான ஒரு குறமகள் வழிபாட்டை குறிப்பது, நூலிற்கு முருகாற்றுப்படை என்ற பெயரமைந்த காரணத் தைத் தெற்றென விளக்குவதாக அமைந்துள்ளது.

அன்பே உருவமானவள் குறமகள். அவள் முருகனை வழிபட்டு வழிபட்டு, முருகனே ஆகிவிட்டவள். முருகனை உருவமாகக் கொண்டு வழிபடுவார், பக்குவம் பெறும் நிலையில் முருகனே ஆகிவிடுவர் என்பது அறிவு நூல் உணர்த்தும் உண்மை. எப்படி?

நாற்காலி என்ற ஒரு பொருளை அறிய விரும்பி அதனைப் பார்க்கிறோம். நாற்காலி காணப்படும் பொருள். நாம் காண்பவர்; நமக்கும் நாற்காலிக்கும் காட்சி என்ற ஒரு தொடர்பு ஏற்பட்டால்தான், நாற்காலி காணப்படும். இல்லாவிட்டால் காணப்படாது.

காண்பானுக்கும் காணப்படும் பொருளுக்கும் ஏற்படும் தொடர்பால் பொருளைக் காண்கிறோம் என்பது உண்மையே ஆனாலும், பொருளை முழுமையாக நாம் எப்போது உணர்கிறோம் என்பது ஆராயத்தக்கது. காண்பவன், தன்னையும் மறந்து, காட்சியையும் மறந்து காணப்படும் பொருளேயாய் நிலைபெறும் நேரத்தில்தான் துருத்தியும், ஆறும், குளமும் என வெவ்வேறான பல பொருளின் முழுமையை உணர்பவன் ஆவான்.

உருவ வழிபாட்டில் இந்த நிலையை எய்துவான் ஆனால் அவனே பக்குவம் அடைந்தவன் எனப்படுவான். முருக வழிபாட்டில், தன்னையும் மறந்து, முருகனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பாகிய காட்சியையும் மறந்து முருகனே ஆகிவிடும் நிலையை ஒருவன் எய்தலாமன்றோ!

இங்கே, குறமகள் ஒருத்தி, முருக வழிபாட்டினை முற்றச் செய்து .முடித்தவளாய் முருகனேயாய் நிலைபெற்றவளாய், மாண்புமிக்க கோழிக்கொடியை நட்டு அதன் பக்கத்தில் முருகன் எழுந்தருளியிருப்பதாகப் பாவனை செய்து, தூப, தீப ஆராதனைகள் கொள்ளும் கோயிலமைத்துத் தன் இனத்தவரான குறமக்களிடம் பூசை ஏற்ற முருகனை ஆற்றுப் படுத்தும் செய்தி கூறி, ஆண்டும் முருகன் உறைபவன்; ஆண்டும் அவனைக் கண்டு வழிபடலாம் என்பதோடு அமையாமல், ''வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழி பட ஆண்டாண்டு உறைதலும் யாவரும் அறிந்த செய்தியே யாகும்'' என்று நக்கீரர் கூறுகின்றார்.

பாணனைப் பாணன் ஆற்றுப்படுத்துவது பாணாற்றுப் படை எனப்படுதல் போல, முழுமையான முருக வழிபாட்டால் முருகனேயான குறமகள், முருகனைத் தன் இனத்தவரிடம் ஆற்றுப்படுத்திய இது முருகாற்றுப்படை எனப் பெயர் பெறுவதாயிற்று என்றாற்போல, ''முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்'' என 244ஆம் வரியில்

குறித்து, முன்னர் உணர்த்திய நாலு தலங்களிலே அல்லாமல், பல குன்றுகளிலும், இங்கே குறித்த 16 இடங்களிலும், அடுத்துப் பழமுதிர்சோலையிலும் முருகனைக் கண்டு வழிபடலாம் என்கிறார் நக்கீரர்.

இங்கே குறித்த முருகாற்றுப்படை என்ற தொடரே, தம் பாட்டிற்கும் பெயராய் அமைந்தது எனக் கொள்க என்பார்போல அமைந்தது முருகாற்றுப்படை என்ற தொடர்.

தேய்புரி பழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார், தொடித்தலை விழுத் தண்டினார் என்ற தொடர்களே அவற்றைப் பாடிய புலவர்களுக்கும் பெயராய் அமைந்த உத்தியை நாம் இங்கே நினைவு கூரலாம்.

உண்மையில், நக்கீரர் பாடிய முருகாற்றுப்படை என்ற நூலுக்கு, முருகனை முருகன் ஆற்றுப்படுத்தல் என்ற உத்தி முறையில் பெயர் அமைந்திருப்பதை நூலின் இறுதியில் கண்டு தெளிவடையலாம்.

திருமுருகாற்றுப்படை என்பதற்கு, முருகனை ஆற்றுப் படுத்தல் என்பதே நேரிய பொருளாம் என்பது, 'முருகாற் றுப்படுத்த' என்ற தொடராலேயே அமைவதாகட்டும் என்று நக்கீரர் தாம் நூலியற்றியபோதே கருதி அதை அமைத்தார் என்று உறுதியாய்க் கொள்ளலாம். அவ்வாறாகவும், உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் முதலாக வந்த உரைகாரர் அனைவரும் முருகாற்றுப்படை என்ற தொடருக் குப் பிறழ்ந்த பொருளே கூறிவந்துள்ளனர்.

முருகன் அவதாரமாக வந்தவன் ஆயினும், அவன் தன் அவதாரச் செயல் முடிந்ததும் தன் தந்தையிடம் சென்று சேர்ந்துவிட்டான் ஆதலின், அவனை, நாம் எவ்வாறு கண்டு ஆற்றுப்படுத்தல் இயலும். வேண்டுமானால், அவனுடைய தெய்வத் திருமேனியை நினைந்து வழிபாடாற்றிச் செல்லுமாறு செய்யலாம் என எண்ணியவராய், முருகாற்றுப்படை என்பதற்கு முருகனிடத்தே ஆற்றுப்படுத்தல் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறிச் சென்றார். இவ்வாறு கூறிய பொருள் தொல்காப்பியர் விதிக்குப் புறம் பானதாகும். ஆதலால் அவர் கூறிய பொருள் மறுக்கத் தக்கதாகும். அச்சம் காரணமாக அவர் அப்பொருள் கூறியமைந்தார் எனவே கொள்ள வேண்டியுள்ளது. இலக்கிய

இலக்கணங்களில் ஒப்புயர்வற்றவரெனினும், சமய நெறியில் இன்னும் சிறிது தெளிவு பெற அவர் சமயப் பயிற்சியில் ஈடுபடவில்லை என்று கொள்வது தவறாகாது.

மனிதனை முருகனிடம் ஆற்றுப்படுத்தலாம். ஆனால் முருகனை மனிதனிடம் எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்பதில் அவருக்கு மயக்கம் ஏற்பட்டதென்பது உண்மை.

ஆதலினால்தான் அவர், ''கந்தழியைப் பெற்றானொருவன், அதனைப் பெறாதான் ஒருவனுக்குப் பெறுமாறு கூறி அவனை வழிப்படுத்துக் கூறுவான் என்பது பற்றிச் செய்யுள் செய்தாராயிற்று'' எனவும்,

''கந்தழியாவது, ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்கும் தத்துவங்கடந்த பொருள்; அது, சார்பினாற் றோன்றாது தானருவாய்...மைதீர் சுடர்'', என்பதாம், இதனை உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம் போல் பற்றானாவதோர் நிலையிலாப் பரம்பொருள் என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றான் உணர்க எனவும், முருகாற்றுப்படை என்றதற்கு வீடுபேறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றானொருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்த லென்று பொருள் கூறுக'', எனவும் அரும்பாடுபட்டு விளக்கலானார்.

முழுமைக் காட்சி பெறுகையில் காணப்படும் பொருளேயாய் நிலைபெறுதலையும் முத்திநெறியில், சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்ற நான்கு நிலையில், சாரூப நிலையில், முருகனை வழிபடுவோன், முருகனேயாய் வடிவு பெற்று நிற்றலையும், அங்ஙனம் முருகனேயாய் நின்றவன், அன்பனை முருகனிடம் ஆற்றுப்படுத்தல் அமையும் என்பதையும், எனவே முருகாற்றுப்படை என்பதற்கு முருகன் முருகனை ஆற்றுப்படுத்தல் என்பதே ஏற்ற பொருள் என்பதையும் சமய நூலின் முற்றறிவுடையவர் தெளிய உணர்வர். நூலின் முடிவில், ஈர அன்பினராய் வழிபாடு முற்றி முருகர் ஆன கூளியர், வழிபாடு முற்றிப் பக்குவம் பெற்றவனைச் சுட்டி அவனிடத்தே முருகனை ஆற்றுப்படுத்தும் செய்தியைக் காணுமிடத்தில் நமக்கு நல்ல தெளிவு ஏற்படும்.

சமய நெறி அனுபவத்தை மற்றவர்க்குச் சொல்லால் உணர்த்தல் இயலாதெனக் கூறுவோராகவும், கேட்போராக

வும் இரட்டை வேடம் கொண்டு நாடகம் நடத்த முற்பட்ட நக்கீரர், கூறுவோனாக நின்றதையே வீடுபெற்றானொருவனாகவும், கேட்போனாக நின்றதையே வீடுபெறச் சமைந்தோனாகவும் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டார் எனலாம். ஆனால் முடிவில் காணும்போது, கூறுவோன், கேட்போனை ஆற்றுப்படுத்தாமல், கூளியரே ஆற்றுப்படுத்தலைக் காண்கின்றோம்.

திருப்பரங்குன்றம் முதலாகக் குறமகள் வழிபடும் நகர் (கோயில்) ஈறாகப் பல இடங்களைக் கூறுவோராக நின்ற நக்கீரர் முருகனைக் காணும் இடங்களாகக் கூறி, ஆண்டாண்டு ஆயினும் வேறு யாண்டு ஆயினும் வழிபாடு செய்யும் தெய்வத் திருமேனியைக் கண்டு வணங்கிப் பலப்பல புகழுரைகளால் ஏத்தி, "உன்னை அளந்து அறிதல் நிலை பெற்ற உயிர்களுக்கு அருமையாகும். ஆகவே நான் உன்னுடைய அடியையே உள்ளத்தில் வைத்துத் தியானித்து வந்தேன். உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத உணர்வொளியே என்று நீ வீடுபேறு கருதிய குறையைக் கூறு" என்ற இவ்வளவோடு நக்கீரர் தம் கூறுவோன் வேடத்தைக் கலைத்துக் கொள்கிறார். எனவே, கேட்போனுக்குக் கூறுவோனாக நின்ற நக்கீரர் அவனை எங்கே ஆற்றுப்படுத்துகிறார்? முருகனிடத்தில் எங்கே ஆற்றுப்படுத்துகிறார்?

நச்சினார்கினியர் இங்கே மேற்செல்ல இயலாமல், கேட்போனாகிய வீடுபெற நின்றானை முருகனிடத்தில் ஆற்றுப்படுத்திவிட்டதாக முடித்துக் கொள்கிறாரே! அஃது எவ்வாறு பொருந்தும்!

முருகனை ஆற்றுப்படுத்தல் என்று பொருள் கூற அச்சம் கொண்டவராய், முருகனிடம் ஆற்றுப்படுத்தல் என்ற பொருள் கூற முற்பட்டும் முற்ற முடிக்காமல் மயங்கி விட்டதை ஈண்டுத் தெளியலாம்.

ஆனால் நடந்ததுதான் யாது? உருவ வழிபாட்டு நெறி நிற்பவர், கோயில்களை மட்டும் வழிபாட்டிடங்களாகக் கொள்ளாது எந்த இடத்திலாயினும் தாம் நினைந்த வடிவில் தியானம் செய்தலைத் தவறாது கடைப்பிடித்தொழுகித் தூய மனம் பெற்றுப் பக்குவம் பெற்ற நிலையில், வழக்கம் போலத் தியான முடிவில், தாம் பெற விரும்பிய வீடு பேற்றைக் குறித்து எடுத்துக் கூற முற்படுவதற்கு முன்பே,

ஈர அன்பரான கூளியர், சாரூப முத்தி பெற்று முருக வடிவத்தில் முருகப் பெருமானைச் சூழ்ந்து விழாக் களம் போல் இசை விருந்தெல்லாம் எழுந்து போற்றுமாறு செய்து, பக்குவம் பெற்று நின்ற அன்பரைச் சுட்டிக் காட்டி, அவர் வழிபாட்டுச் சிறப்புக்களைக் கூறி முருகனை ஆற்றுப் படுத்துவர். குளிர்ந்த அன்பர் என்று பொருள்படும் கூளிய ராய்ச் சாரூப முத்தி பெற்ற முருக வடிவினர் முருகனை நக்கீரர் இரட்டைவேடத்தில் கேட்போனாய் நின்ற வழிபாடு முற்றிய அன்பனிடம் ஆற்றுப்படுத்துவர். ஆனால், அத் தனை முருகர் நடுவே உண்மை முருகனை அறிந்து, தன் குறை கூறல் எவ்வாறாகும்? திகைத்து நின்ற அவனுக்குத் தெளிவு உண்டாக்க வேண்டி முருகப்பெருமான், பேருரு வங் கொண்ட தெய்வக்காட்சியைக் காட்ட, அதைக்கண்டு அஞ்சிய அவனுக்கு அவன் வழக்கமாக வணங்கி வழிபடும் இளைய முருகன் வடிவம் காட்டி, ''அஞ்சாதே, நீ விரும்பி வந்த வீடுபேற்றை யான் அறிவேன். அது பெறுக என்று, தத்துவக் கருத்துகள் கொண்ட மதிநல அறிவு நெறியை அவருள் வழங்குவான்'' எனத் தாம் மதிநலத்துடன் தத்து வக்கருத்துகள் பெற்ற அறிவு நெறி அனுபவத்தை நக்கீரர் கூறிமுடித்து, அப்படிப்பட்டவனைப் பழமுதிர்சோலையி லும் சென்று காணலாம் எனக் கூறி முடிக்கிறார். முருகாற் றுப்படை என்றால் முருகனை ஆற்றுப்படுத்தல் என்பதும், முருக வடிவினரே ஆற்றுப்படுத்தினர் என்பதும் விளங்கும்.

பாணனைப் பாணன் ஆற்றுப்படுத்தல் பாணாற்றுப் படை என்று பெயர் பெறுதல் போல முருகனை முருகன் ஆற்றுப்படுத்தலே முருகாற்றுப்படை என்பது இவ்வாற் றால் தெளிவாகிறது.

பாணர் இசையாகிய பொருளைக் கொடுக்கிறார்; வள் ளல் செல்வமாகிய பொருளைக் கொடுக்கிறார். பாணன் செல்வமாகிய பொருளை ஏற்கிறான்; வள்ளல் இசையாகிய பொருளை ஏற்கிறான். இம்முறையில் கொடுப்போன் ஏற்போன் என்பவற்றில் பாணனுக்கும் வள்ளலுக்கும் ஏற்றம் இழிவு இல்லை.

அங்ஙனமே முருகன் வீடுபேறாகிய பரிசிலைக் கொடுக் கிறான். வழிபாடுவோன் அன்பாகிய பரிசிலைக் கொடுக்கி றான். முருகன் அன்பாகிய பொருளை ஏற்கிறான். வழி

படுவோன் வீடுபேறாகிய பொருளை ஏற்கிறான். இம் முறையில் முருகனுக்கும் வழிபடுவோனுக்கும் கொடுப் போன் ஏற்போன் என்பவற்றில் எந்த இழிவும் இல்லை என்பதை அறிக.

முருகனை ஆற்றுப்படுத்தலே முருகாற்றுப்படை என் பதே இவ்வாற்றால் உண்மையான பொருளாயிருக்கவும், முருகாற்றுப்படைப் பொருளில் ஈடுபாடு இல்லாத யாரோ ஒருவர், முருகாற்றுப்படை என்ற தலைப்பையும், திருப் பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருஆவினன்குடி, திரு ஏரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற பகுதி களின் தலைப்புகளைக் கண்டதும் முருகன் அவதாரக் கதையில் ஈடுபட்டுத் தம் மனம் போனபடி ஒரு பொருளைக் கற்பிக்கலானார். ஆற்றுப்படை நூல் வகை உண்டு என் பதையோ, அதற்குத் தொல்காப்பியத்தில் இப்படித்தான் பொருள் கூற வேண்டும் என்று இருப்பதையோ அறியாத வராய் ஆற்றுப்படை என்றால் ஆறு படை வீடுகள் என்று பொருள் கூறி, முருகன் சூரபதுமன்மீது படையெடுத்துச் செல்லுங்கால், திருப்பரங்குன்றம் முதலான ஆறு படை வீடுகளில் தங்கினான் என்று பொருள் விளக்கமும் தர லானார். அவர் மிக்க செல்வாக்குப் பெற்ற புலவராய்த் திகழ்ந்தமையாலோ என்னவோ, அவர் கூறிய பொருள் நன்கு பரவலாயிற்று; அறிந்த புலவர்களும் அவரைப் பின் பற்றி அப்பொருளையே ஏற்று வழங்கலாயினர்.

முருகன் திருப்பரங்குன்றமாகிய இடத்தில் உறைபவன் என்றாலும், திருப்பரங்குன்றத்தைப் படைவீடாகக் கொண்ட வன் என்றாலும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், குன்று தோறாடல் என்ற பகுதிக்கு வரும்போது உலகில் உள்ள குன்றுகள் அனைத்தும் அவன் உறைவிடங்கள் ஆதல்போல, அப்பலப்பல குன்றுகளும் எப்படிப் படைவீடுகள் ஆதல் பொருந்தும் என்பதை அவர் ஏனோ சிந்திக்கவில்லை.

இனிப் பழமுதிர்சோலைப் பகுதியைத் தொடங்கும் போது, விழவு முதலிய 16 இடங்களில் அவன் உறைபவன் எனக் கொள்ளல்போல அவையெல்லாம் படைவீடுகள் எனக் கொள்ளல் எவ்வாறு பொருந்தும்? இவை அனைத் தும் முருகனுடைய உறைவிடங்களாம் எனக் கொள்ளும் போது அவர் கூறும் ஆறு படைவீடுகளை அவர்கள் வழி

பாட்டுத் தலங்களாகக் கொண்டு வழிபாடு, விழா முதலிய வற்றைக் கொள்ளுதலை நாம் தடுக்கவில்லை. இவையே யன்றி, உலகில் உள்ள ஆயிரக்கணக்கான இடங்களையும் அவன் விழா எடுத்தற்கு அமைந்த தலங்களாம் என்பதை ஏற்று வழிபட உடன்படுகிறோம். ஆனால், உட்பகுதிகள் ஆறை ஆறுபடைவீடுகள் என்று கொள்வதில் சிறிதும் பொருத்தமே இல்லையாதலால் முருகாற்றுப்படை என்ப தற்கு முருகனுடைய ஆறுபடை வீடுகள் என்று கூறும் பொருள் பொருந்தாது, பொருந்தாது என்று கூறுவதில் தடையொன்றுமேயில்லை.

அன்பு முதிர்ந்தவர் தெய்வக் காட்சியில் பேருருவக் காட்சி பெறுதலை ஐயுறலாகாது. அக்காட்சி வழிபடுவார்க் கும் தெய்வத்திற்கும் இடையே அனுபவமாக நிகழும் ஓர் அதிசயம். கண்ணன் அருச்சுனனுக்குப் பேருருவம் காட்டி னான் என்பதைச் சமய நெறி நிற்கும் உலகோர் அனை வரும் போற்றுகின்றனரே.

இவ்வாற்றால்—திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் காட் டும் இரண்டு நெறிகளின் உண்மைப் பொருளை அறிந்து அந்நெறிகளைப் போற்றி அனுபவத்தில் ஒன்றன்பின் ஒன் றாக அவற்றை ஏற்பதில் ஈடுபாடு கொண்டு பிறப்பறுத்தல் நம் தலையாய கடன் என்பதைப் போற்றி உய்தி பெறு வோமாக.

முருகாற்றுப்படை என்றால் முருகனை ஆற்றுப்படுத்தல் என்பதே உண்மையான பொருளாதலை அனுபவமாக நாம் உணர்ந்து உய்தி பெறுவோமாக.

ஆறுபடை வீடுகள் எனத் தவறான பொருள் கொள்ளு தல், பலரும் போற்றி வழக்கில் நிலைபெற்றுவிட்டதை உணர்ந்து உண்மைப் பொருளை உணர்ந்து போற்றுவார் போற்றுக. தவறான பொருளையே நாங்கள் கடைப்பிடிப் போம் என்று பிடிவாதம் செய்பவர் அவ்வாறே செய்து நிற்க விரும்பினால் நிற்கட்டும். உண்மையை உணர்த்த முற்பட்ட யாம் உண்மையை உணர்த்தினோம். அவ்வளவே.

Hamilton Bridge என ஆங்கில ஆட்சியில் வழங்கப் பெற்ற வாராவதி தமிழுருவம் பெற்று அம்பட்டன் வாரா வதி என வழக்குப்பெற்று அதுவே ஆங்கில மொழி

பெயர்ப்புப் பெற்று இன்று Barber's Bridge என்று வழங்கு வதை யார் தள்ளிவிட்டார்கள்? ஆனால் Barber's Bridge என்பதனுடைய பழைய வடிவம் Hamilton Bridge என்பது தான் என்றால் வரலாற்று நூலறிவுடையார் ஏற்றுப் பய னடைவர் என்பதை யாரோ மறுப்பர்?

அறம்பொருள் இன்பம் வீடு என்பன மனிதனால் அடைதற்கு உரிய நான்கு பேறுகள் என்பது தொன்று தொட்டுத் தமிழில் வழங்கிவந்த வழக்குத்தான். ஆனால் திருவள்ளுவர் அறம் பொருள் காமம் என மூன்று தலைப்பு களால் அதிகாரம் வகுத்துள்ளார். அவர் ஏன் அவ்வாறு வகுத்துள்ளார் என்பதற்குக் காரணம் ஒன்றும் கூறாமலே, அறம் பொருள் இன்பம் என்பதே தமிழ் வழக்கு எனக் கொண்டு, காமத்துப்பாலை இன்பத்துப்பால் என ஒரு தமிழ் வெறியர் கூற, இன்று திருக்குறள் பதிப்புக்கள் அறத்துப்பால் பொருட்பால் இன்பத்துப்பால் என்ற தலைப் புகள் கொண்டு வழங்கத் தலைப்பட்டுவிட்டதும் இதற்குச் சான்றாகக் கொள்ளலாம். திருக்குறள் காமத்துப்பாலில், 37 இடங்களில் காமம் என்ற சொல்லே ஆளப்பட் டுள்ளது. இன்பம் என்ற சொல்லோ இரண்டே இடங்களில் தான் ஆளப்பட்டுள்ளது. அந்த இரண்டிடங்களிலும் காமம் என்ற சொல்லைப் பயில வழங்கிய திருவள்ளுவர் கருத்தை யாரேனும் அறிய முற்பட்டனரோ? செல்வாக்கே இக் காலத்து ஆட்சியாய்விட்டது. காமம் என்ற சொல் வடிவம் வடமொழியிலும் உள்ளது. தமிழ் மொழியிலும் உள்ளது. வடமொழியில் காமம் என்ற சொல் ஆசை என்பதை உணர்த்தும். தமிழ் மொழியிலோ காமம் என்ற சொல் நிறைவு என்பதை உணர்த்தும். ஓருயிர் ஈருடல் பெற்றுக் கடமையாற்றித் தூய உள்ளம் பெற்று உடல் நிறைவும், உளநிறைவும், உணர்வு நிறைவும், உயிர் நிறைவும் பெற்றுப் பேரின்பம் உறலையே காமம் என்று தமிழ்மொழி குறிக்கும். தமிழ்மொழிக் காமம் நிறைவு என்னும் பொருளுடையது. காமத்துப்பாலில் திருவள்ளுவர் கருத்துக்கொள்வது நிறைவு என்பதையேயாகும்.

நக்கீரர் நுட்பமாகக் கூறியிருக்கும் இருநெறிகளையும் மறந்தவர்கள் ஆயினோம். சமய நூல் அனுபவம் கொண்டு முருகனை ஆற்றுப்படுத்தலே முருகாற்றுப்படையாம் என்

பதையும் அறியாதவர்கள் ஆயினோம். ஆறுபடை வீடுகள் எனத் தவறான பொருள்கொண்டு, ஆறு படைவீடுகள் பற்றிய சிற்றிலக்கியங்கள் பல தோன்றி ஆரவாரம் செய்ய இடம் கொடுத்துவிட்டோம். அம்மட்டோ! திருமுருகாற்றுப் படை ஒரு பக்தி இலக்கியம் ஆகும். இடைக்காலத்தில் தலையெடுத்தவையே பக்தி நூல்கள். ஆகவே நக்கீரர் சங்கச் சான்றோர் அல்லர். பன்னிரு திருமுறைகள் தோன்றிய இடைக்காலத்தில் பதினொராந் திருமுறையில் திருமுருகாற் றுப்படை இடம்பெற்றிருத்தலைக் காட்டி நக்கீரர் அக்காலப் புலவரே என்று கொண்டு புலமை நிரம்பியவர்களும், சங்க காலத்தில் இயற்கைக் காட்சிகளுக்கு இடம், நக்கீரர் மாறு பட்டுக் கூறும் புலமை காட்டுதலால் சங்ககாலப் புலவர் வழிவந்தமைக்கும் அவருக்கும் தொடர்பு வேண்டா என அசட்டை செய்வர்.

இயல், இசை, நாடகம், கடவுள்நெறி முதலிய எல்லா வற்றாலும் நிரம்பிய அவருடைய தமிழ் நடைக்கும் பதி னோராம் திருமுறையில் வரும் ஏனையவர் தமிழ்நடைக்கும் உள்ள வேறுபாட்டைச் சிறிதளவு நோக்கினாலே, குற்றம் கூறி அசட்டை செய்வோர் தெளிவுபெறலாம். சமய நூல் களில் ஈடுபட்டவர் முருகாற்றுப்படையை ஒரு சிறந்த சமய நூல் என மதித்து அதனைப் பதினோராந் திருமுறையில் சேர்த்துவிட்டதனாலேயே அவரைப் பிற்காலப் புலவர் என்று எவ்வாறு முடிவு செய்வது? மேலும் நக்கீரர் பெய ராலேயே, பதினோராந் திருமுறையில் வேறு நூல்கள் நக்கீர தேவ நாயனார் என்ற பெயரில் அமைந்துள்ளன. அவற்றின் நடைக்கும் முருகாற்றுப்படை நடைக்கும் உள்ள வேற்றுமை ஏற்றக்கோலுக்கும் அரிவாட்பிடிக்கும் உள்ள வேற்றுமை போலாகும் எனத் தெளிவாகக் காணலாம்.

பத்துப்பாட்டில் முதலில் நிற்கும் நக்கீரர் திருமுரு காற்றுப் படைபோல, அவருடைய மற்றொரு நூல் நெடுநல் வாடை நிலைபெற்றுள்ளது. எட்டுத் தொகையில், அக நானூற்றில் 17 பாடல்களும், குறுந்தொகையில் எட்டும், நற்றிணையில் ஏழும், புறநானூற்றில் மூன்றும் ஆகமொத் தம் 37 பாடல்கள் அவருடைய பாடல்கள். இவையனைத்தி லும் சம நோக்கும் அன்பும் மிடுக்கும் ஆழ்ந்து ஈடுபட்டா லன்றி விளங்கிக் கொள்ள முடியாத மாண்பும், செறிவும் அமைந்துள்ளமை காணலாம்.

அன்பு நெறியே தமிழர் நெறி என்ற எம் நூலில் நக்கீரர் என்னும் தலைப்பில் இவரைப் பற்றிப் படித்து, சாகவும் வாழவும் கூடப் பாடும் சித்தராகவும் அவர் விளங்கினார் என்பதை அறிந்து அவரிடம் பயமும் பக்தியும் கொண்டு அவர் நூலில் ஈடுபட்டுப் பயனடைவோமாக.

இரு நெறிகளையும், திருமுருகாற்றுப்படை என்பது முருகனை ஆற்றுப்படுத்தலேயாகும் என்ற உண்மையையும், ஆறுபடைவீடுகள் அல்ல என்பதையும் அறிந்து சிக்கல்கள் அகலப்பெற்ற நாம் எத்தனையோ சமய நூல்களைப் பயின்றாலும் அறியக்கூடாத உண்மையைத் திருமுருகாற்றுப் படையை உள்பொருளறிந்து ஓதுதல் மூலமாக அனுபவமாக உணர்ந்து கடைப்பிடித்தால் இப்பிறப்பில் நலம்பெறுவதற்கு உரிய பிறப்பறுத்துப் பேரின்பம் பெறலாம் என்பது உறுதி யாகும். வாழ்க நக்கீரர். என்றென்றும் நிலைபெற்று நின்று வழிகாட்டுக திருமுருகாற்றுப்படை.

20. திருவாசகம்

க. இராசசிங்கம்

திருவாசகம் தொன்றுதொட்டுத் தமிழ் மக்களின் சிந்தனையில் பதியப்பட்டு வழிவழியாகப் போற்றப்படும் நிலையில் அதன் பொருள் சிவனேயென்றும், அதனைத் தில்லைச் திருச்சிற்றம்பலம் உடையாரே தமது திருக்கரத்தால் மணிவாசகர் பாட எழுதியதாகப் போற்றப்பட்டது.

இந்த உளவியல் அடிப்படையில் ஆளப்பட்ட உண்மையைச் சிந்தையில் உணராவிடில் திருவாசகம் ஏனைய நூல்களைப் போன்று சாதாரணக் கருத்துகளை உள்ளடக்கி உள்ளது என்ற நிலையும், அதற்குப் பொருள் மொழிபெயர்ப்பு வாயிலாக அனைத்து மக்களும் அறிந்துகொள்ள முடியும் என்ற நிலையும் ஏற்படக்கூடும். இதனால்தான் திருவாசகம் ''ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும்'' தன்மையுடையது என்றும், அவ்வுள்ளொளி (Psychio Consciousness) ஞான அனுபவமென்னும் உயர்ந்த குறிக்கோளை அடையும் நிலையை உடையவர்களுக்கு மட்டுமே கைகூடும் என்றும் சிந்திப்பார் இல்லையென்றே கூறலாம். இக்கருத்தை,

''தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்'' (249)

என்ற குறள்வழி அறியலாம். இதன் பொருள்: ''உயிர்கள் மாட்டு அருள் செய்யாதவன் செய்யும் அறத்தை ஆராயின் ஞானம் இல்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளை உணர்ந்தாற் போலும்'' "The non-spatial images of the Psychic non-ego are not pale shadows, but tremendously powerful psychic factors" என்பது சி. ஜி. ஊங் என்னும் உலகப் புகழ்பெற்ற உளவியல் நிபுணரின் ஆராய்ச்சியாகும்.

வல்வினைப் பட்டாழ்கின்ற நிலையை அவலக் கடலாகிய வெள்ளத்தில் வீழ்கின்றதைப்போல் எடுத்துக்காட்டுகின்

றார். உளவியல் அடிப்படையில் இதனை எவ்வாறு கூறு வது? மனித முன்னேற்றம் விஞ்ஞான அடிப்படையைத்தான் கொண்டிருக்கிறது என்பது நவீன மனிதனின் தவறான எண்ணமாகும். அறிவியல் முன்னேற்றமென்பது உலகத்திற் கோர் புரட்சி வழியைக் காட்டி இருந்தும் அவ்வழி உள வியல் முறையில் வேகத்தையும் சிந்தனையில் தெளிவற்ற நிலையையும் உருவாக்கிவிட்டது. இவற்றை, Future Shock எனும் நூலில் Alvin Toffler சிறப்பாக விளக்கியுள்ளார்.[1]

திருவாசகத்தில் ஊறிய தமிழ் சமூகத்தினர் அழிவற்ற பேரின்ப வாழ்க்கையை என்றும் நாடினர். வலிய இரு வினையின் போக்கு எத்தகைய கேடு விளைவிக்கும் என் பதனை அறிந்து திருவாசகத்தை மனப்பாடத்திற்குரிய தொன்றாக அவர்கள் வைத்துக்கொண்டனர். தங்கள் நெஞ் சத்தையே காண்பித்தனர்—''நீ அவலமாய கடல் வெள் ளத்தே வீழ்கின்றாய்''. வாழாமல் வாழும் நிலையை (A life without substance) வெறுத்தனர்.

உளவியல் அடிப்படை என்று கூறும்பொழுது அவ் வுலகம் இவ்வுலகம் என்கின்ற பிரிவு தோன்றலாகின்றது. உடம்பின்வழி ஒரு தோற்றம், Psyche அல்லது உளத்தின் வழி வேறு தோற்றம். இதனையே, "Just as I reach this world through the medium of the body, so I reach that world through the medium of the psyche"[2] என்று ஊங் கூறுகிறார்.

மனிதனுக்குப் (பொறி) புலன்களால் அறியும் தன்மை அநேகமாக இருள் அடைந்ததாகவும் வலிமையற்றதாயும் இருக்கும் என்று ஜெ. ஊங் கூறியது நோக்கத்தக்கது.[3]

ஆணவம் இருளடைந்தது என்னும்போது சுய சிந்தனை யால் வரப்பட்ட வீக்கம் என்றே கூறவேண்டும். இதனை, "An inflated consciousness is always ego-centric and conscious of nothing but its own existence"[4] என்று ஊங் தெளிவுறக் கையாண்டார். இதனாலன்றோ மணிவாசகர் சிவபிரான் இருப்பிடத்தைக் கூறும் வகையில், ''கூர்த்தமெய் ஞானத் தால் கொண்டுணர்வார் தம் கருத்தின் நோக்கரிய நோக்கே'' என்றார். மெய்ஞானம் (பொறி) புலன்களுக்கு அப்பாற்

பட்ட நிலையென்னும்போது அறிவியல் போக்கை அறிந்து கொள்ள வேண்டும்.

"Microphysics is feeling its way into the unknown side of matter, just as complex psychology is pushing forward into the unknown side of matter, just as complex psychology is pushing forward into the unknown side of the Psyche"[5]

சிவனது தூய சூக்குமத்தைக் கூறவந்த திருவண்டப்பகுதி தில்லையில் அருளிச் செய்யப்பட்டது மட்டுமன்றி, சூக்குமத் திற்கு முதல் எழுத்தான அகரத்தையே கையாண்டுள்ளது. இந்த முறை மெய்கண்ட சாத்திரங்களுக்கு முதன் நூலாக அமையும் சிவஞான போதத்திலும் ஒரு விதியாக இருப் பதைக் காணலாம்.

தொல்காப்பியம் அன்பு, அருள் என்பதனைக் கையாண்டு ஒப்புமைக்கு இவை இன்றியமையாத நிலையை வலியுறுத் தும் வகையில்

"நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

என்கின்றது.

திருவாசகம் அறத்தை வலியுறுத்தும் வகையாக,

"வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச் சிறிதும் நினையாதே தளர்வெய்திக்
கிடப்பேனை" (கண்ட — 2)

என்கின்றது.

அறநெறி உளவியல் அடிப்படையில் அமைந்த காரணத்தி னால்தான் அதனை அரசாட்சிக்கு இன்றியமையாததாகத் தமிழ்மரபு ஏற்றி வலியுறுத்தியுள்ளது.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால் நமரெனக் கோல் கொடாது
பிறரெனக் குணங் கொல்லாது"[6]

பொது வாழ்வினைச் சீர்படுத்தும் தன்மை வாய்ந்த தமிழ் அரசியல் சைவ நெறியை முதன்மையாகக் கொண்டது;

அரசனுக்கு அமையப்பட்ட முறை என்றும் சைவநீதி என்றும் வலியுறுத்தப்பட்டது.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப் படும்''[7]

இங்கு முறை என்பது அறநெறியை வலியுறுத்தும். திருவாசக அடிப்படையில் தமிழ் மரபு எழுத்திலேயே சிறப்பிக்கப்பட்டதைக் காணலாம்:

''எழுத்தெனப் படுப
அகர முத
னகர விறுவாய் முப்பஃதென்ப
சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே''

இதே வழியில் திருக்குறள் அகர முதல என்றும், சிவ ஞானபோதம், 'அவன், அவள், அது' என்றும், முதலென்பதை 'Principial beginning' என்னும் கருத்துப்பட அமைத்தன.

உளவியல் அடிப்படையில் வரப்பட்ட திருவாசகமும் தேவாரமும் சாதி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டவையாயின. மணிவாசகர் சாதி குலம் குடிப்பிறப்பில் அகப்படும் நிலையை அறிவுத் தடுமாற்றம் எனக் கூறியுள்ளதை நம் தமிழ்ச் சமுதாயம் முற்றிலும் மறந்து விட்டது போலும். மேலும் கண்டபத்தில் பின்வருவதைக் காணலாம்.

''சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை
மாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவு தில்லை கண்டேனே''

இறைவன் மக்கள் விளையாட்டுகளிலும் காணப்பட்டான் என்பதை நன்கு புலப்படுத்துவது திருவாசகம். அவ்விளையாட்டுக்களாவன :

1. அம்மானை, 2. பொற்சுண்ணம் இடித்தல், 3. தும்பியாடல், 4. தெள்ளேனம் கொட்டல், 5. சாழல், 6. திருப்

பூவல்லி கொய்தல், 7. உந்தி பறத்தல், 8. தோள் நோக்கம் ஆடல், 9. ஊசலாடல்.

சைவ சமய வாழ்க்கைநெறிப்பண்பாடு தனிப்புகழ் பெற்ற நிலையில் இருந்த காரணத்தினால்தான் சமய பௌத்த இடையூறுகள் இதனைப் பாதிக்கவில்லை. கோவில் களில் இசையும் நடனமும் சிறந்த உறுப்புகளாக இருந்தன. மடங்களிலும் கோவில்களிலும் பல சிவனடியார்கள் வாயி லாகச் சைவ ஒழுக்கமும் நிறைந்த கல்வியும் பரவலாயின. சேக்கிழார் கூறியபடி ''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்'' என்னும் நிலையையே மக்கள் விரும்பி நாடி னார்கள். சைவநீதி ஒன்றே ஆட்சிபுரிந்தது.

உளவியல் அடிப்படை என்னும்போது ஒரு நிலையான சிந்தனையைத்தான் மனத்தில் கொள்ள வேண்டும். உறு பொருள் என்றால் கற்பென்னும் நிலையைக் குறிக்கும் — In the idea of the Self there is a constancy which is divinity itself. இதனை, ''சிந்தை நீங்காநிலை'' என்பார் அப்பர் அடிகள்.

''பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல்லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீயானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி!''

மேலும் மணிவாசகர் உறுதியாகத் திருப்பூவல்லியில் கூறுவ தாவது,

''வணங்கத் தலைவைத்து வார்கழல்கள் வாழ்த்த வைத்து
இணங்கத் தன்சீரடியார் கூட்டமும் வைத்தெம் பெருமான்
....''

இதன் பொருளில் தாடலை என்னும் கருத்தைத் தரும்

படி செய்தார். அப்பர் வாக்கு ''தலையே நீ வணங்காய்'' என்பதற்கு மேலானதேயாகும்.

திருவாசக ஆராய்ச்சிக்கு உளவியல் அடிப்படையிலன் றிப் பொருள் காண்பது கடினம். அதனைக் கையாளும் சிந்தனை உடல் இயல்பு கடந்ததாயும், உடன் சார்ந்ததாயும் இருத்தல் மிகவும் இன்றியமையாதது. இந்த அறிவியல் ஆய்வு முறையை உளநிலைப் பகுப்பாய்வு என்று கருதுவது சரியே. இம்முறையை, நவீன அறிவியல் ஆய்வுமுறை என்பது பொருந்தும். எடுத்துக்காட்டாக, தொலைநோக்காடி (Telescope), நுண்ணோக்காடி (Microscope) எனும் கருவிகள் மூலம் பிரபஞ்சத்தையோ அணுத்தொகுதிகளையோ பாராமலே திருவண்டப் பகுதியில் ''சிறியவாகப் பெரியோன்'' என்னும் பெரும் உண்மையைக் காட்டியுள்ளார் மணிவாசகர். அப்பகுதி பின்வருமாறு :

''அண்டப் பகுதியி லுண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் றுன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்''[8]

அண்டப் பகுப்பினை உடைய பூகோளத்தின் விளக்கம் உரைத்தற்கும் அரியதான ஒரு சிறப்புத் தன்மையினை உடையது. அதுமட்டுமன்றி வளமான பெருங்காட்சியினையும் உடையது. சிறியவாக அமையும் தோற்றம் அணுவானாலும் யாவற்றிற்கும் கருதா நிற்கும் கருத்தினையுடைய கடவுள் சிவனேயாகும். அச்சிவன் ''சொற்பதங் கடந்த தொல்லோன்'' என்றும் கூறி, ''கண்ணால் யானும் கண்டேன் காண்க'' என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார்.

''அருக்கனிற் சோதி அமைந்தோன்'' என்னும் பொழுது ஒரு சக்தி சூரியனுக்கு இடையறா வெப்பத்தைக் கொடுத்த வண்ணமே இருக்கின்றது என்பதை வலியுறுத்துவதைக் காண்கின்றோம். இவ்வறிவு அறிவியல் நிலைக்கு அப்பாற் பட்டதே என்று கூறலாம். சிவனென்பது ஓர் ''ஊற்றான

உண்ணார் அமுதம்'' ஆனது என்றும், ''ஊற்றிருந்து உள் ளம் களிப்போன் என்றும்'' சொல்லும் பொழுது உடல் இயல்பு கடந்த நிலை எவ்வளவு உயர்ந்ததென்று தெரிய வருகிறது. இதனையே ஆங்கிலத்தில் உளவியல் விதிப்படி பொருள் கூறும் பொழுது,

1. "The psyche is the core of man and is separable from the body. It does not share in the dissolution of the body".
2. "The psyche carries on its functions as an inner polarity".
3. "The psyche's experience is numinous"

என்று அழுத்தமாக ஊங் (Jung) கூறியுள்ளார்.

நாம் அறிவியல் அறிவை அளவுகடந்த முறையில் போற்று வதைக் கண்டித்து ஊங் கூறியதை மனத்தில் கொள்ள வேண்டும்: "The field of science has, without doubt, led to imprisonment and stagnation for the psyche".

உலகத்தில் பலவிதப் போர் நிகழ்ந்துள்ளதை—நிகழ் வதைக் காணலாம். ஞான வழியில் மகாபாரத இராமா யணப் போர் எப்படி அறியப்பட்டன என்பதை அறிவோம். ஆனால் மணிவாசகரின் சிந்தனையில் பிரபஞ்சத்தையே அடிப்படையாகக் கொண்ட போர் ஒரு விழிப்பு நிலையை நமக்கு ஏற்படுத்துவதாய் அமைந்தது எனலாம். திருப்படை எழுச்சி, திருப்படை ஆட்சி என்னும் பதிகங்களை அறிந்து கொண்டால் உளவியல் அடிப்படையில் போர் எப்படி அமையும் என்பதனை நாம் சிந்திக்க முடியும். அதுமட்டு மன்று, அப்போருக்கு அடிப்படைத் தூண்டுகோல் உணர் வும் அறிவும்தான் என்பதனை அறிய முடிகிறது. இதை உற்றுநோக்கில் எப்பொருளையும் ஆக்குபவன் ஈசனே என்றும், அறிவு என்பது, ''அப்பொருள் தான் ஆளுடை யார் அடியார்கள்'' எனும் உண்மை வெளிப்படும். அந்தண ரிடம் சிறந்த வீரம் (வேறு ஓராதிக்கம்) இருந்ததை நாம் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டு:

''நெறிப்படச்சுவல் அசைஇ வேறு ஓரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல் மாலைக் கொளை நடை
அந்தணீர்'' (கலி. 41)

மக்கள் வாழ்க்கையோடு சமயம் பின்னிப் பிணைந்து நின்ற நிலையினைச் சங்க இலக்கியம் தெளிவாக விளக்குகின்றது. மணிவாசகர் இதே மரபில் பிரபஞ்சப்போர் ஒன்றை நிகழ்த்தும் வகையில் திருப்படை எழுச்சி என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார். படை அமைக்கும்படி அறைகூவுகின்றார். ''வானவூர்க் கொள்வோம் நாம் மாய்ப்படை வராமை''. இப்படையில் அமையப்பெற்ற வீரர்கள், தொண்டர்கள், பக்தர்கள், யோகிகள், சித்தர்கள் படையெழுச்சி என்பது வானவூரையும் அண்டை நாட்டையும் கொள்வதற்காகவே.

இங்கே வரப்பெற்ற வெற்றி திருப்படை ஆட்சி ஆகிய உச்சக்கட்டத்தை அடைந்தது. இப்பகுதி சிவோபாதி ஒழிதல் என்னும் நிலையைத் தெளிவுபடுத்துவதாக அமையப்பட்டதைக் காணமுடியும். பிறவியென்பது மறதியினால் ஏற்பட்டது என்பதைக் கூறும் வகையில் ''மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும் ஆகாதே'' எனத் தெளிவுபட அருளினது வியப்புக்குரியதே. மேலும், ஈசனுடைய திருவடியை ''மாமறையும் அறியா மலர்ப்பாதம்'' என்று கூறும் வகையில் ஆங்கிலத்தில் கையாளும் "The Still point of Consciousness" நமக்கு என்ன கருத்தைக் கொண்டுள்ளது என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிய முடிகின்றது.

சைவசமயச் சிந்தனை பூமி சாஸ்திரத்திற்குத் தெய்வீக அடிப்படையை வகுத்துள்ளது. 'கயிலை' என்பது சிவலோகம் என்ற பொருளில் வழங்கப்பட்டது. சுந்தரர் சேரமான் பெருமாள் கயிலை சென்றனர் என்பது மரபு. சைவ சமயக் குரவர்கள் இந்தியா முழுவதும் அமைக்கப்பட்ட சிவத்தலங்களுக்குச் சென்று வழிபட்டார்கள் என்பது ஓர் தமிழ் மரபு. இதேபோல மகேந்திரத்தோடு மணிவாசகருக்கு இருந்த தொடர்பும் கருதத் தக்கது. சைவ மடங்கள் எங்கும் தோன்றலாயின; கோமடம், காபாலிகர் மடம்,

வீரசைவமடம், கோளகிமடம். தமிழிசை எங்கும் தொனித்தது. அதன்மூலம் இறைத்துடிப்பை முக்கியமானதாகக் காட்டியது. சுந்தரர் பாடல் இதனை எடுத்துக்காட்டும்:

''தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோக மாள்வதற்கு
யாதுமையுற வில்லையே''

மணிவாசகர் குறிப்பிட்டத் தலங்கள் இன்று சிவ சிந்தனையில் சிதம்பரம் என்று கூறுவது மரபாகிவிட்டது. ஆனால் அடிப்படையில் அவையேயாய், தானேயாய், அவையே தானேயாய் என்னும் சிவஞான போதம் பொருள் படக் கருதுதல் இன்றியமையாததாகிவிட்டது.

சம்பந்தர் உணர்ந்த ஞான நிலையைச் சேக்கிழார் வருணிக்கும்போது கூறியதாவது:

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்
[ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்''

அடியார்கள், பக்தர்கள், தொண்டர்கள் ஞானம் கைவரப்பெற்றவர்களே. சித்தாந்தத்தில் 'ஞானம்' என்னும் நிலை முற்றாக அருள் முயற்சியையே குறிக்கும். திருவாசகத்தை ஆராயும்பொழுது முதலில் அது இசை வடிவமாக மனத்திலும் சிந்தனையிலும் குடிகொண்டிருத்தல் வேண்டும். இக் குடிகொள்ளும் தன்மை ஆன்ம அல்லது உயிர்த் துடிப்பு கைவரப் பெற்றவர்களிடம்தான் காணமுடியும். இதை விளக்கும் வகையில் கூறியதை மனத்தில் வைக்க வேண்டிய

ஓர் கடமை தமிழ்ச் சிந்தனையாளர்களுக்கு மிகவும் அவசிய மென்றே கூறலாம்.

> "Psychic wholeness will never be attained empirically, as consciousness is too narrow and too one — sided to comprehend the full inventory of the psyche"[9]

நாம் மணிவாசகரைப்போல் பிரபஞ்சத்தைப் பார்க்க வேண்டுமாயின், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவ ஞானத்தைப் பெற முயலவேண்டும். இது பாடலோடு இசை அமைவது எவ்வகையில் நுண்மாண்புடையது என்பதை அறியும் வகையில் ஓரளவு கருத்தில் கொள்ளலாம். "திருப் பெருந்துறையில் நிறை மலர்க்குருந்த மேவிய சீர் ஆதி" என்னும் கருத்து வாழ்க்கைக்கும் விழிப்புக்கும் ஓர் இன்றி யமையாத நிலையை உருப்படுத்துகின்றது. பிரபஞ்சம் ஆடல் வல்லானின் தோற்றம் என்ற கருத்துப்பட "தில்லை நிருத் தனே" (5-51). "நிருத்தனே போற்றி" (5-61), "நிருத்தா போற்றி" (4-202) என்றும் சிவனை அழைக்கின்றார். மேலும் தில்லையென்பது பிரபஞ்சத்தின் அசைவற்ற நடு நிலை என்பதைக் கூறும் வகையில் (that Siva is the unmoved centre of the Universe) — 'தில்லை நிருத்தனே போற்றி' (5-61) என்றும், 'தில்லைக் கூத்தனே' (1-90) என்றும், 'பொன்னம்பலக் கூத்தா' (21-8) என்றும் அழைப்பதைக் காணலாம். பின்வரும் இடங்களில் சிவபெருமான் நடனம், ஆடல், குறிப்புகள் உள்ளம் நெகிழ வைப்பனவேயாம்.

1. "பொன்னம்பலத் தெம் முடியா முதலே" (21-5)
2. "பொன்னம்பலத்தெம் முழு முதலே" (21-3)
3. "திகழ்தில்லை அம்பலத்தே திருநடன்செய் கூத்தர்" (15-1)
4. "தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்" (7-12)
5. "தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி" (4-92)

பிறவியென்னும் பிணிக்குச் சிவனே மருந்து என்னும் கருத்துப்பட திருவாசகம் கூறுதலை நோக்குதல் அவசியம்:

''கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறிநின்று'' (1-46-48)

சிவனை ஆரமுது என்றழைப்பர் மணிவாசகர்.

''உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே'' (20-9)
''உலகுக்குயிர் சிவன் என்பார்'' (20-9).

மேலும், ''உலகினுக்கப்புறமாம்'' (10-14) என்றும் கூறுவர். ''ஏர்தரும் ஏழுலகத்த எவ்வுருவும் தன்உருவாய்'' என்றும், ''வியன் மண்டலத்து ஈசன் என்றும்'' சிவனை அழைப்பர். தமிழ் அடிப்படையில் உடம்பை மெய் என்னும் பொழுதே உயிரைக் காண்கின்றோம். ''மெய்யின் வழிய துயிர் தோன்றும் நிலையே'' என்பது தொல்காப்பியம்.

உளவியல் அடிப்படையில் சிவன் என்னும்பொழுது சிந் தனைக்கு அப்பாற்பட்ட ஒரு பரம்பொருளைக் காணமுடி கின்றது. கூத்தன், ஈசன், அண்ணாமலையான், சிவன், தில்லை அம்பலவன், தென்னன், பெருந்துறையான், வெண் ணீற்றான் என்னும் பல நாமங்களாலும், ''ஊறிநின்னுள் எழுபரஞ்சோதி'' என்றும், ''அழுபவர் உள்ளத் தமுதென் றும்'' வர்ணிக்கின்றார். இவ்வருணனைகள் யாவும் ''ஈசன் அருள் வெள்ளச்சீர் உறு சிந்தை எழுந்த தேன்'' என்றே கூற லாம். இவை அத்தனையும் உளவியல் சிந்தனைக்குரியனவே என்பதற்கு முழுமையான சான்றுகள் ஆகும்.

திருவடி என்னும்பொழுது ஒரு தனிநிலையான ஒப்பற்ற சிந்தனையைக் கூறும் வகையில் 'ஆதியாம் பாதமலர்' என் கின்றார். The one central point of reference. மேலும், அதனை வருணிக்கும் வகையில், ''அறைகூவி வீடருளும் அங்கருணை வார்கழல்'' (8-1) என்கின்றார். ''பூவேறு கோனும் புரந் தரனும் பொற்பமைந்த, நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும், மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச், சேவேறு சேவடி'' (10-1) என்றெல்லாம் பாடும்பொழுது, சிவனெனும் பரம்பொருள் எவ்வளவு பரந்த சிந்தனையை ஆளாக்கும் தன்மை வாய்ந்தது என்பதனை உணரமுடிகிறது.

குறிப்புகள்

1. "... housewives confronted with squalling children, jangling telephones, broken washing machines, the wail of rock and roll from the teenager's living — room and the whine of the television set in the parlour — may well find their ability to think and act clearly impaired by the waves of information crashing into them.

— "Future Shock", p. 321.

2. "Freud and Psycho-analysis", C.G. Jung, C.V. 4.
3. "The unconscious mind of man sees correctly even when conscious reason is blind and important".

   — "Psychology and Religion: West and East", C. G. Jung, 1958-69.
4. "Collected Works", C.G. Jung, p. 563.
5. "Mysterium Coniunctionis", C.G. Jung, C.W. 14, p. 768. p. 768.
6. Thiruvasagam — கண்ட பத்து — 2.
7. புறநானூறு, 55 : 10-17.
8. Thiruvasagam — திருவண்டப்பகுதி.
9. "Mysterium Coniunctionis", C. G. Jung, C.W. 14, p. 759.

21. நாட்டுப்புற இயல்

மா. கோதண்டராமன்

நாட்டுப்புற இயல் பற்றிய ஆய்வு இன்று பரவலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்விற்கு வருவோர் நல்ல இலக்கியப் பயிற்சியும் சமூகவியல் பட்டறிவும் பெற்ற வராக இருக்க வேண்டும். கிராம மக்களோடு ஒன்றிப் பழகும் பண்புள்ளம் கொண்டவராகவும் இருத்தல் வேண் டும். காடு-மேடு-வயல்-வரப்புகளில் தயங்காமல் நடக்கும் மெய்யுரமும் கொடிய விலங்கு-பாம்பு போன்றவற்றைக் கண்டால் அஞ்சாத நெஞ்சுரமும் பெற்றிருப்பது அவசியம்.

சிக்கல்: 1

கற்றவர்கள் நாட்டுப்புற இயலுக்கு மதிப்புத் தருவதில்லை. அவர்கள் சான்றோர் இலக்கியத்திற்கு அளிக்கும் தகுதியை நாட்டுப்புற இயல் ஆய்வுக்குத் தருவதில்லை. இவ்வாய்வில் ஈடுபடுவோரைத் தாழ்வாக நினைக்கிறார்கள். அமெரிக்கா, ஜெர்மனி, போன்ற நாடுகளில் இத்துறை ஆய்வுக்கு மிகவும் மதிப்புத்தருகிறார்கள். ஆனால் இந்தியாவில் நிலை வேறு; குறிப்பாகத் தமிழ்நாட்டில் இழிவாகவே கருதுகிறார்கள். இத்துறையில், ஆய்வு செய்யலாம் என்று நினைத்து முனை வோர் கூட நாளடைவில் இதனை விட்டுவிட்டுப் பிற துறை ஆய்வில் ஈடுபட்டு விடுகிறார்கள்.

தீர்வு:-

இந்நிலை மாற வேண்டுமானால் கற்றவர்கள் தம் நிலை யிலிருந்து கீழே வந்து நாட்டுப்புற இயலுக்கு உறு துணை புரிய வேண்டும்.

சிக்கல்: 2

நாட்டுப்புற இயல் ஆய்வை நூலகத்திலிருந்தோ, வீட்டி லிருந்தோ செய்துவிட இயலாது. ஆய்வாளர் நாட்டுப் புறங்களுக்கே சென்று கள ஆய்வைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். இதற்கு மனம் இருந்தால் மட்டும் போதாது;

பணமும் வேண்டும். காலமும் வேண்டும். கிராம மக்களின் பண்பாட்டை-நடை-உடை பாவனை-மொழி நடை போன்ற வற்றை அருகிருந்து கூர்ந்து நோக்கி நாள்தோறும் குறித்து வர வேண்டும். கிராம மக்கள் பலதரப்பட்டவர்கள்; ஆண்-பெண், மூத்தவர், இளைஞர்-சிறார் போன்ற நிலையினரைத் தனித்தனியாகவும் சேர்த்து வைத்தும் வினாவெழுப்பி விடைபெற முயல வேண்டும். இவ்வகை ஆய்வு எல்லார்க்கும் இயலுவதன்று; கடமை உணர்வும், சோம்பல் இல்லா முனைப்பும், அனைவரும் ஒன்றே என்றெண்ணும் பேருள்ளமும் உடையவர்களே நாட்டுப்புற இயல் ஆய்வை மேற்கொள்ள இயலும். சொந்த இருப்பிடத்தை விட்டு நீங்கிக் கிராமச் சூழலில் வாழப் பக்குவப்படுத்திக் கொள்ள விரும்பும் ஆய்வாளர்க்குத்தான் இது பொருந்தும். பிறர்க்கு இது ஒரு பெருஞ்சிக்கலாகும்.

தீர்வு:-

உண்மையைக் கண்டறிய வேண்டும் என்னும் உறுதியும் கிராம வாழ்க்கையை நுகரும் பண்புள்ளமும் இருந்தால் இச்சிக்கலைத் தீர்க்கலாம்.

சிக்கல்: 3

தேடிச்செல்லும் மக்கள் ஊரில் இல்லாமல் போவது அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சியாகும். ஓர் ஊரில் ஒருவர் ஒப்பாரி பாடுவதில் வல்லவர் எனக் கேள்விப்பட்டுத் தெரிந்த நண்பர்க்கு மடல் எழுதிவிட்டு அந்த ஊருக்குச் சென்றால் பாடகர் வெளியூர் சென்று விட்டார் என்று செய்தி தெரிய வரும். காரணம் கேட்டால் யாரோ ஒருவர் இறந்துவிட்டதாகவும் ஒப்பாரி வைக்கப்போய் விட்டதாகவும் சொல்வார்கள். தொழிற் பாடல்களைப்பாடுகின்ற ஒரு குழுவைத் தேடி அந்த ஊருக்குச் சென்றால் அந்தக் குழுவினர் அனைவரும் கிணறுவெட்ட வெளியூர் போய்விட்டனர் என்றும் கூறுவார்கள். அத்தகையப் பாடல்களை அந்த ஊரில் வேறு யாரும் பாட முன்வருவதில்லை. தெரியவும் தெரியாது; ஆய்வாளரின் பயணம் முடிவதில்லை. அங்கிருந்து திரும்பி ஊருக்கு வருவதைத் தவிர வேறு வழியே இல்லை. நெடுந் தொலைவிலுள்ள கிராமம் என்றால் போக்குவரத்துப் பிரச்சனை வேறு; இரவில் பேருந்து கிடைக்காது. கிராமத்தி

லேயே தங்கவேண்டி நேரும். பெருநகரங்களில் வாழ்ந்து பழக்கப்பட்ட ஆய்வாளராக இருந்தால் இரவு நேரக் கிராம வாழ்க்கை அச்சமூட்டுவதாகவும் அமைந்துவிடும். தோல்வி மனப்பான்மையும் சேர்ந்துகொண்டால் சோர்வெனும் ஆற்றில் நீந்துவதைத் தவிர வேறு வழியே இல்லை.

தீர்வு:-

கிராமப் பயணம் நம் திட்டப்படி நடக்க வாய்ப்பில்லை, அங்குள்ள சூழ்நிலைக்குத் தக்கவாறு நடந்துகொள்ள வேண்டும் என்ற துணிச்சல் மிகமிகத் தேவை. கிடைக்கும் உணவை உண்டு, அங்குள்ள எளிய வசதியோடு உறங்கவும் ஆயத்தமாகிவிட முடியும் என்ற ஆய்வாளரே நாட்டுப்புற இயல் ஆய்வை மேற்கொள்ள முடியும்.

சிக்கல்: 4

பணம் எதிர்பார்த்தல்: கிராம மக்களின் எண்ணப்போக்கில் பெரியதொரு மாற்றம் இன்றைய நாளில் ஏற்பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும் பணம் எதிர்பார்க்கும் வணிக மனம் வளர்ந்துவிட்ட நிலையில் நாட்டுப்புற ஆய்வாளரும் பணம் கொடுத்துத்தான் சில செய்திகளைப் பெற முடியும். பாட்டுப்பாட முன்வருவோர் ஒரு பாட்டிற்கு எவ்வளவு கொடுப்பார்கள் என்று நேரடியாகக் கேட்பதும் உண்டு. தெரிந்தவர் மூலமாகக் கேட்பதும் உண்டு. பெரியவர்கள் பெரும்பாலும் குடிப்பதற்குப் பணம் கொடுத்தால்தான் பாடுவார்கள். குடித்தால்தான் பாடவரும் என்று சொன்ன சிலர் முன்கூட்டியே பணம் பெற்றுவிடுவார்கள். இவர்கள் குடித்துவிட்டு வந்தும் சரியாகப்பாட மாட்டார்கள். பாடிய வரிகளையே திரும்பத் திரும்பப் பாடுவார்கள்; இல்லையென்றால் எதையோ பாட்டென்று சொல்லி உளறுவார்கள். மகளிர் பெரும்பாலும் பணம் பெறுவதை விரும்புவதில்லை. பாடி முடித்த பின் நாம் ஏதாவது பணம் கொடுத்தால் தயங்கியபடியே வாங்கிக் கொள்வார்கள். இளம் பெண்கள் பெரும்பாலும் பாட முன்வருவதில்லை. சிறுவர் பாடவந்தால் அவர்களுக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

தீர்வு:-

நாட்டுப்புற இயல் ஆய்வுக்குப் பணம் மிகுதியும் தேவைப் படுகிறது. மனம் இருந்தால் மார்க்கம் உண்டென்பது

போலப் பணமிருந்தால் பாட்டு வரும் என்பதும் உண்மை.

சிக்கல்: 5

நாட்டுப்புற இயல் ஆய்வை மேற்கொள்வோர் ஒலிப் பதிவுக் கருவியை எப்பொழுதும் வைத்திருத்தல் அவசியம். ஒலிப்பதிவு கருவி இல்லாத நாட்டுப்புற இயல் ஆய்வு முழுமை பெறாது. மற்றும் அதை இயக்கும் பட்டறிவும் தடங்கல் ஏற்பட்டால் தடையை நீக்கும் செயலறிவும் மிகமிகத் தேவை. மின் இணைப்பின் மூலம் இயக்கவியலாத நேரத்தில் 'செல்' மூலம் இயக்கும் வண்ணம் தயாராகச் செல்ல வேண்டும். மின் இணைப்பில் கருவியை ஓடச் செய்து பாடிக் கொண்டிருக்கும்போதே மின்சாரம் நின்றுவிடும். இதுபோன்ற சமயத்தில் செல்களைப்போட்டு நிகழ்ச்சியைப் பதிவு செய்ய வேண்டும். மின்சாரம் வரட்டும் என்று காத்திருந்தால் எடுத்த செயல் முடியாமலும் போய்விடும். ஒலிப்பதிவு செய்யும்போதே பாடுகின்றவர்களின் மொழிநடையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். வழக்கில் இல்லாத-நமக்குப் புரியாத சொல் வந்தால் ஒலிப்பதிவை நிறுத்திவிட்டுப் பாடுவோரின் விளக்கத்தை அப்பொழுதே கேட்டுவிட வேண்டும். அவருடைய விளக்கத்தைத் தாளில் குறித்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதே அதைக் குறித்துக்கொள்ளவில்லையென்றால் பிறகு தொல்லையாகப் போய்விடும். மறவாமல் தயங்காமல் குறித்துக் கொள்வது ஆய்வுக்குப் பெருந்துணை புரியும்.

தீர்வு:-

ஒலிப்பதிவு கருவியோடுதான் நாட்டுப்புற இயல் ஆய்வு செம்மையுற முடியும். எனவே இத்துறை ஆய்வாளர்கள் கட்டாயம் இந்த மூலாதாரமான கருவியைப் பெற்றிருக்க வேண்டும்.

சிக்கல்: 6

மாற்று வடிவங்களும் பாட பேதங்களும்: நாட்டுப்புற இயல் ஆய்வில் தகவலாளர்கள் / பாடுவோர் ஒவ்வொரு ஊரிலும் சிறுசிறு மாற்றங்களோடு பாடல்களை / கதைகளைப்

பாடுவது / கூறுவது உண்டு. இதுபோன்ற இடங்களில் ஆய் வாளர்கள் விழிப்புடன் இருந்து குறிப்பேட்டில் குறித்துக் கொள்ள வேண்டும். பின்னர் வீடு வந்து சேர்ந்தபின் ஒவ் வொன்றாக ஆய்வு செய்து பொருந்துவனவற்றை / ஏற் புடையவற்றைத் தேர்ந்துகொள்ள வேண்டும். மாற்று வடி வங்கள் கிடைக்குமானால் அவற்றை, அடிப்படையாக வைத்துக்கொண்டு, மேலும், மேலும் ஆய்வைப் பெருக்கிக் கொள்ள முயலவேண்டும். மாற்று வடிவங்கள் காலத்தின் எண்ணப்போக்கையும் மொழியின் வளத்தையும் வளர்ச்சி யையும் புலப்படுத்தும். மாற்று வடிவங்களை அலட்சியப் படுத்தக் கூடாது. அவை நம் மூல ஆய்வுக்குத் துணை / அரண் செய்யுமானால் எடுத்துக்கொள்ளலாம், இல்லை யென்றால் தள்ளி விடலாம். இவை மூலக் கூறு எது என் பதை ஆய்ந்தறியவும் திட்ட வட்டமான முடிவுக்கு வரவும் துணை செய்யும்.

பாட பேதங்கள் வட்டார மக்களின் மொழிநடையைப் பிரதிபலிக்கும்; அல்லது எண்ணப் போக்கைப் புலப்படுத் தும். சில சமயங்களில் சரியாகப் புரிந்து கொள்ளாதவர் களால் மாற்றி ஒலிக்கப்பட்டும் பாட்டில் அப்படியே நின்று விடும்.

தீர்வு:-

தமிழ் மொழியில் திரட்டப்பட்டுள்ள நாட்டுப்புறப் பாடல்கள் கதைகள், பலவற்றை ஒப்பிட்டுப்பார்த்து எந்த வடிவம் / சொற்றொடர் சரியென்று, முடிவு செய்ய இயலும், இத்துறையில் தேர்ந்த ஞானம் பெற்ற வர்களின் அறிவுரையை ஏற்றும் முடிவுக்கு வரலாம். அல்லது தொடர்புடைய மக்களின் பழக்க வழக்கம் கால மாற்றம் — கருத்து மாற்றம் — வளர்ச்சி முதலிய வற்றைக் கருத்தில் கொண்டும் மூல வடிவத்தை உறுதி செய்யலாம். எழுத்திலக்கியத்தின் உதவிகொண்டும் உறுதி செய்யலாம்.

சிக்கல்: 7 சூழலும் பொருளும்:-

நாட்டுப்புற இயலில் ஒரு கூறான இலக்கியத்தில் சூழலும் பொருளும் பெரும் பங்கு வகிக்கின்றன. சூழல் ஒன்றாகவும் பாட்டின் பொருள் வேறாகவும் அமைதல் உண்டு. குழந்தை

யைத் தாலாட்டும் தாய் தன் அண்ணன் இறந்துவிட்டதை நினைத்துச் சோகமாகப் பாடுவதுமுண்டு. அந்தப் பாட்டு, தாலாட்டில் சேருமா ஒப்பாரியில் சேருமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். தாலாட்டுச் சாதாரணமாகக் குழந் தையை உறங்க வைப்பதற்காகப் பாடப்படுவது. அப்போது இயல்பாக அமையும் உணர்ச்சி மகிழ்ச்சிதான். ஆனால் சோகமாகப் பாடப்படுகிறதே என்று பார்க்கும்போது இந்த இடத்தில் பாட்டின் பொருளை அடிப்படையாக வைத்து ஆராய்ந்தால் சூழலுக்கும் பாட்டின் பொருளுக்கும் பொருத்தம் இல்லாமல் போய் விடுகிறது.

தீர்வு:-

பாட்டின் பொருளை முதன்மையாகக் கொண்டு பாட் டின் வகைப்பாட்டைத் தெளிவு செய்தல் நலம் பயக்கும்.

சிக்கல்: 8 (அ) வகைப்பாடு:-

இது பெருஞ்சிக்கலாகவே இருந்து வருகிறது முடிந்த முடிபாக எந்த வகைப் பாட்டையும் ஏற்றுக் கொள்ள இயல வில்லை. ஒவ்வொரு ஆய்வாளரும் தத்தம் ஆய்வுப் போக் கின்படி ஒவ்வொரு வகைப்பாட்டை வகுத்துள்ளனர். தாலாட் டும் ஒப்பாரியும் எல்லா ஆய்விலும் இடம் பெறுகின்றன. காதல் பாடலும் தொழிற்பாடலும் ஒரே வகைப்பாட்டில் இடம்பெற வேண்டுமா இரண்டும் தனித்தனியே இடம் பெற வேண்டுமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். பொரு ளடிப்படையில் இரண்டும் தனித்தனி வகைப்பாட்டில் அமைதல் வேண்டும் என்பார் ஒரு சாரார். மற்றொரு சாரார் சூழல் அடிப்படையில் இரண்டும் ஒன்றே என்பார். காதல் பாட்டு தனியே பாடப்பெறுவது என்று கூறித் தொழிற் பாட்டின் வகைப்பாட்டிலேயே காதல் பாட்டையும் அடக்கி விடுகின்றனர். பொருளடிப்படையில்பார்க்கும் போது காதல்பாட்டு தனி வகைப் பாட்டில் அமைவது பொருத்தமாக இருக்கும்.

தீர்வு:-

பொருளடிப்படையில் வகைப்பாடு செய்தால் தொல்லை நேராது என்று முடிவு செய்யலாம்.

சிக்கல்: 8 (ஆ) சொல்லாட்சி

நாட்டுப்புற இயல் என்னும் சொல்லாட்சி மிகவும் பொருத்தமுற அமைந்துள்ளது. தமிழகத்தின் பெரும்பாலான ஆய்வாளர்களும் சான்றோர்களும் இச்சொற்றொடரையே ஏற்றுக்கொள்கின்றனர். இப்படியே எழுதியும் வருகின்றனர். ஆனால் தென் தமிழகத்தில் சில ஆய்வாளர்கள் இச்சொற்றொடரை விடுத்து நாட்டார் வழக்காற்றியல் என எழுதியும் பேசியும் வருகின்றனர். இந்த நிலை மாற வேண்டும். இரு அணியினரும் ஒன்றுபட்டு ஒரு முடிவுக்கு வருதல் வேண்டும். இந்த இரு சொற்றொடர்களில் எது ஏற்றது என முடிவு செய்து தமிழகம் முழுவதும் ஒரே வடிவத்தை நிலைபெறச் செய்திடல் மிகமிக இன்றியமையாதது.

தீர்வு:-

மிக எளியது; பெரும்பாலோர் ஏற்றுக்கொண்டுள்ள எளிய வடிவமாகிய 'நாட்டுப்புறவியல்' என்னும் வடிவமே ஏற்றது என்று முடிவு செய்தல் நல்லது.

சிக்கல்: 9

சில நாட்டுப்புறப் பாடல்கள் நாட்டுப்புறப் பாடலா, எழுத்திலக்கியமா? எனச் சில நேரங்களில் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ளன. சில ஆய்வாளர்கள் இனங் காண முடியாமல் மலைத்துப் போயிருக்கிறார்கள். திருக்குறளைக் கூடச் சிலர் நாட்டுப்புறப்பாடல் எனக் கூறியுள்ளனர். எழுத்திலக்கியம் சில வரையறைகளைக் கையாண்டு வருகிறது. அத்தகைய வரையறை நாட்டுப்புற இலக்கியத்தில் கிடையாது. எழுத்திலக்கியம் பெரும்பாலும், பொதுமைப் பண்பைக் கொண்டு விளங்கும். நாட்டுப்புற இலக்கியம் வட்டாரப் பண்பைக் கொண்டு அமையும். எழுத்திலக்கியம் செஞ்சொற்கவி இன்பந்தர, நாட்டுப்புற இலக்கியமோ எளிய மக்களின் பொதுமொழியை ஊடகமாக்க் கொண்டு விளங்கும். அணிகளால் புனையப்பட்டுப் பொலிவோடு விளங்குவது எழுத்திலக்கியம்; வெறும் எதுகை மோனைகளால் மக்களின் மனமேடையில் நடை பயில்வது நாட்டுப்புற இலக்கியம். பாடுபொருளின் நுண்மையாற் பொலிவது எழுத்திலக்கியம், வெளிப்படையாய்ப் பொருளை விளக்குவது

நாட்டுப்புற இலக்கியம்; சுரங்கத்தின் உள்ளே, கிடக்கும் மாணிக்கக் குவியல் ஏட்டிலக்கியம்; தொட்டதெல்லாம் பொன் னாய்க் காட்சியளிப்பது நாட்டுப்புற இலக்கியம்.

தீர்வு:-

சொல்—யாப்பு—அணி இவையெல்லாம் பிழையின்றிச் செம்மாந்த நடையில் இயன்றால் அந்தப் பாட்டு ஏட் டிலக்கியம் என்றும், இயல்பாக அமைந்திருக்குமானால் அது நாட்டுப்புற இலக்கியம் என்றும் தெளியலாம்.

சிக்கல்: 10

நாட்டுப்புறப் பாடலும் சித்தர் பாடலும், சிலபோது இனங்காண முடியாமல் போகலாம். நாட்டுப்புறப் பாடலும் சித்தர் பாடலும் ஏறக்குறைய ஒரே வகையான சொற்களைக் கையாள்கின்றன. பலர் குழப்பமடைகின்றனர். பாட்டில் பயின்றும் வரும் சொற்களும் பாட்டமைப்பும் ஏறக்குறைய ஒன்றாக இருக்கும். பாட்டின் மெட்டும் ஒத்திருக்கும். சொல்லும் பொருளில் வேறுபாடு அமைந்திருக்கும். நாட்டுப் புறப்பாடல் வெளிப்படையாகவே எதனையும் எடுத்துக் கூறும். சித்தர் பாடல்களை மேற்போக்காகப் பார்க்கும் போது ஒருபொருளும், ஆழ்ந்து பார்க்கும்போது வேறொரு பொருளும் உடையதாக இருக்கும். தூய மணலின்மீது ஓடும் தண்ணீர் போன்றது நாட்டுப்புறப்பாடல். ஆழங்காண முடி யாத கடல் போன்றது சித்தர் பாடல். சாதாரண மக்களும் எளிதிற் புரிந்து கொள்ளும் நிலையில் பாடப்படுவன நாட்டுப் புறப்பாடல்கள். கற்றவர்களும் மருளும் வண்ணம் புதை பொருள் மிளிரப் பாடப்பெறுவது சித்தர் பாடல்.

தீர்வு:-

நேர்ப்பொருள் விளங்கப் பாடப்பட்டிருக்குமானால் அதுநாட்டுப் பாடல் என்றும் ஆழமிக்க புதைபொருள் பொலியப் பாடப்பட்டிருக்குமானால் அதைச் சித்தர் பாடல் எனவும் கொள்ளலாம்.

சிக்கல்: 11

தமிழகத்தில் நாட்டுப்புறவியல் ஆய்வு ஓரளவுக்கு வளர்ந்துள்ளது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும். மேலும்

சிறப்புற வளர வேண்டுமென்றால் நாட்டுப்புற இயலுக்குத் தேவைப்படும் அடிப்படைத்தேவைகளைச் சேகரித்து வைத்துப் போற்றும் மையம் மிகமிக இன்றியமையாதது. கல்கத்தா விலும், மைசூரிலும் இது போன்ற மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையத்தை அரசே முன்வந்து நிறுவலாம்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கூட முயன்று அமைக்க லாம். இனிவரும் ஆய்வாளர்களுக்கு இந்த மையம் பெரும் பயன் அளிக்கக் கூடும். எழுத்திலக்கியத்தைப் பிற மொழி களில் மொழிபெயர்த்து வெளியிடும் தமிழ்ப் பல்கலைக் கழகம் நாட்டுப்புற இலக்கியத்தையும் மொழிபெயர்த்து வெளியிட முன்வந்தால் மிகவும் பயன் விளையும் என்பது திண்ணம்.

தீர்வு:-

நாட்டுப்புறவியலில் ஆர்வங்காட்டிவரும் ஆய்வாளர் களும் ஆதரவு தரும் சான்றோர்களும் அரசுக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கும் இது குறித்து எழுத வேண் டும். இன்றில்லையென்றாலும் என்றேனும் ஒரு நாளில் இது செயல் வடிவம் பெறும்.

22. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

ந. சுப்பு ரெட்டியார்

'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்னும் நூல் ஆழ்வார்கள் பன்னிருவரால் படைக்கப்பெற்ற பக்திப் பனுவல். இதில் இருபத்து நான்கு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இதன் கவிதைச் சுவையும் அழகும் பத்திச்சுவையும் நுகர்ந்து இன்புறத் தக்கவை. தென்னாட்டில் இப் பக்திப் பனுவல் வைணவப் பெருமக்களால் போற்றப்படுவதாக இருப்பினும், தமிழ் மக்கள் அனைவரும் பொதுவுடைமையாக கொள்வதற்குரிய பெருந்தகுதி வாய்ந்தது. தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் இந்நூல் பெரிதும் ஆய்ந்து பயன் கொள் ளத்தக்கது. ஆயினும் சங்க இலக்கியங்களைப்போல், இக்கால இலக்கியங்களைப்போல் ஏன்? சைவ இலக்கியங்களைப்போல் பெருமளவுக்கு இந்நூல் பயன்படுத்தப் பெறுவதில்லை. பெரும்பான்மையான வைணவப் பெருமக்கள் கூட இந்நூலை முற்றிலும் ஓதித் துய்ப்பதில்லை. இத்தகைய ஓர் அரிய நூலை ஆய்வுக்கு உட்படுத்தும்போது பல சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

ஆழ்வார்கள் — பிறப்பும் வளர்ப்பும்

திவ்வியப் பிரபந்தத்தை அருளிச்செய்த ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்களுள் ஆண்டாள் திருவரங்கப் பெருமானுடன் ஐக்கியமாய்விட்டபடியாலும், மதுரகவியாழ்வார் இறைவனைப் பாடாமல் நம்மாழ்வாரை மட்டிலும் பாடியதாலும், அவர்களை நீக்கி ஆழ்வார்கள் பதின்மர் என்று கொள்ளும் மரபும் உண்டு. முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் (இவர் அந்தகக்கவி வீரராகவ முதலியாரின் மகள் வயிற்றுப் பேரர்) 'பதின்மர் செந்தமிழ்'[1] என்று திருவேங்கடக் கலம்பகத்தில் கூறுவதைக் காணலாம். பன்னிரு ஆழ்வார்களில் சிலரது பிறப்பைப் பற்றி அறியக்கூடவில்லை. பொய்கையாழ்வார் காஞ்சி மாநகரில் சொன்ன வண்ணம்

செய்த பெருமாள் கோயில் திருக்குளத்தில் (பொய்கை) மலர்ந்த தாமரைப் பூவில் அவதரித்தார் என்றும், பூதத் தாழ்வார் மாமல்லபுரத்தில் ஒரு குருக்கத்திப் பந்தரில் ஒரு குருக்கத்தி மலரிலே அவதரித்தார் என்றும், பேயாழ்வார் மயிலையில் ஒரு கிணற்றிலுண்டான செவ்வல்லிப் பூவிலே அவதரித்தார் என்றும் கூறப்படுகின்றது. திருமழிசையாழ் வார் பிறப்பும் விநோதமானதே. பார்க்கவ முனிவருக்கும் கனகாங்கி என்னும் கட்டழகிக்கும் பிறந்த அவயவம் ஒன்றும் காணப்பெறாத பிண்டம் என்றும், புதரில் தூக்கியெறியப் பட்ட பிண்டம் ஆண் குழந்தை வடிவமாகப் பரிணமித்தது என்றும் அது திருவாளன் என்னும் வேளாளன் ஒருவனால் வளர்க்கப்பெற்றதென்றும் அறியக்கிடக்கின்றது. துளசிச் செடிக்கருகில் கண்டெடுக்கப்பெற்ற குழந்தையே ஆண்டாள் என்றும் பெரியாழ்வார் அக்குழந்தையை வளர்த்தார் என் றும் சொல்லப்பெறுகின்றது. நம்மாழ்வார் பிறந்தது முதல் அழுதல், பாலுண்ணுதல் முதலிய செயல்களின்றி வளர்ந் தவர் என்றும், ஓதாது உணர்ந்த ஞானச்செல்வர் என்றும் நவிலப்பெறுகின்றது. இவர்களை நம்மால் எவ்வாறு ஆராய முடியும்?

ஆழ்வார்களின் காலம்

வரலாற்று உணர்வே இல்லாதவர்கள் நம்மவர்கள். ஆழ் வார்கள் பிறந்த ஆண்டு பிரபவாதி ஆண்டுகளிலும், சித் திரை முதலிய மாதங்களிலும், அசுவதி முதலிய நட்சத்திரங் களிலும் சொல்லப்பெறுகின்றனவேயன்றி கி.மு., கி.பி. என்ற வரலாறு கணக்கிடும் முறையில் அறியக்கூடவில்லை. ஆழ்வார்களை வரிசையாகக் கூறுவதிலும் பல முரண்பாடு கள் உள்ளன. இராமாநுச நூற்றந்தாதி அருளிய திருவரங் கத்தமுதனார்,

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருப்பாணாழ்வார்
5. திருமழிசையாழ்வார்
6. தொண்டரடிப்பொடியாழ்வார்

7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. திருமங்கையாழ்வார்
11. நம்மாழ்வார்

நாதமுனிகள்

யாமுனர் (ஆளவந்தார்)

இராமாநுசர்

என்று வரிசைப்படுத்துகின்றார். இந்த வரிசையில் மதுரகவிகளின் பெயர் காணப்பெறவில்லை.

பராசர பட்டர் என்பார் (கூரத்தாழ்வானின் திருமகனார்) அருளிய வடமொழிச் சுலோகம் ஒன்றினால் அடியிற் கண்டவாறு ஆழ்வார்களின் வரிசை அமைகின்றது.

1. பூதத்தாழ்வார்
2. பொய்கையாழ்வார்
3. பேயாழ்வார்
4. பெரியாழ்வார்
5. திருமழிசையாழ்வார்
6. குலசேகராழ்வார்
7. திருப்பாணாழ்வார்
8. தொண்டரடிப்பொடியாழ்வார்
9. திருமங்கையாழ்வார்
10. நம்மாழ்வார்

இராமாநுசர்

இந்த வரிசையில் ஆண்டாள் மதுரகவிகள் ஆகிய இருவரும் இடம்பெறவில்லை.

பின்பழகிய பெருமாள் சீயர் என்பார் தமது 'குருபரம்பரை' என்னும் நூலில் ஒரு வரிசையைத் தருகின்றார். அது

வருமாறு:

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவியாழ்வார்
7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. ஆண்டாள்
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

இந்த வரிசையில் ஆழ்வார்கள் பன்னிருவரும் இடம்பெறுகின்றனர்.

வேதாந்த தேசிகர் தம்முடைய 'அதிகார சங்கிரம்' என்ற நூலில்[2] கடைப்பிடிக்கும் வரிசை வருமாறு:

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. நம்மாழ்வார்
5. பெரியாழ்வார்
6. குலசேகராழ்வார்
7. திருப்பாணாழ்வார்
8. தொண்டரடிப்பொடியாழ்வார்
9. திருமழிசையாழ்வார்
10. திருமங்கையாழ்வார்
11. மதுரகவியாழ்வார்

இந்தப் பட்டியலில் ஆண்டாளுக்கு இடம் இல்லை.

வேதாந்த தேசிகர் தமது 'பிரபந்த சாரம்' என்ற நூலில்[3] அநுசரிக்கும் வரிசை முறை:

1. பொய்கையாழ்வார்
2. பூதத்தாழ்வார்
3. பேயாழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. நம்மாழ்வார்
6. மதுரகவிகள்
7. குலசேகராழ்வார்
8. பெரியாழ்வார்
9. கோதைப்பிராட்டி (ஆண்டாள்)
10. தொண்டரடிப்பொடியாழ்வார்
11. திருப்பாணாழ்வார்
12. திருமங்கையாழ்வார்

திருவரங்கத்தமுதனார்

ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் இதில் இடம் தரப்பெற்றுள்ளது.

மணவாள மாமுனிகள் தமது 'இயல் சாத்தில்' தரும் வரிசை இது.

1. பூதத்தாழ்வார்
2. பேயாழ்வார்
3. பொய்கையாழ்வார்
4. நம்மாழ்வார்
5. திருமழிசையாழ்வார்
6. பெரியாழ்வார்
7. திருமங்கையாழ்வார்
8. குலசேகராழ்வார்
9. தொண்டரடிப்பொடியாழ்வார்
10. திருப்பாணாழ்வார்

11. ஆண்டாள்

12. மதுரகவியாழ்வார்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஆழ்வார்கள் அமைந்திருக்கும் வரிசை முறை:

1. பெரியாழ்வார்
2. ஆண்டாள்
3. குலசேகராழ்வார்
4. திருமழிசையாழ்வார்
5. தொண்டரடிப்பொடியாழ்வார்
6. திருப்பாணாழ்வார்
7. மதுரகவியாழ்வார்
8. திருமங்கையாழ்வார்
9. நம்மாழ்வார்
10. பொய்கையாழ்வார்
11. பூதத்தாழ்வார்
12. பேயாழ்வார்

இங்ஙனமெல்லாம் குழறுபடியாக வரிசை முறைகள் அமைந்திருப்பதால் ஆழ்வார்கள் காலத்தைப்பற்றி ஆராயும்போது நம் ஆய்வுக்கண்ணுக்குப் பார்வை இருக்க முடிவதில்லை.

திருப்பல்லாண்டு

இது பெரியாழ்வார் அருளியது. பெரியாழ்வார் திருமொழியில் முதலாவதாக அமைந்திருப்பது. இதனை ஒரு தனிப்பிரபந்தம் என்று ஒரு சாரார் (தென்கலையார்) கருதுவர்; தனிப்பிரபந்தம் அன்று என்று மற்றொரு சாரார் (வடகலையார்) கருதுவர். இதுபற்றிய ஒரு விரிவான ஆய்வை மேற்கொண்டு பல காரணங்களைக் காட்டி, தனிப்பிரபந்தம் அன்று என்று முடிவுகட்டப் பெற்றுள்ளது.[4]

சரமப்பிரபந்தம்

திருமங்கையாழ்வார் பிரபந்தங்கள் ஆறினுள் திருநெடுந்தாண்டகமே சரமப்பிரபந்தம் என்று வலியுறுத்திப் பேசுவர்

தென்கலையார். அஃது அன்று; பெரிய திருமடலே சரமப் பிரபந்தம் என்று நிலைநாட்டுவர் வடகலையார். இரண்டை யும் ஊன்றிப் படித்துப் பகவதநுபவம் பெற முயன்றால், இரண்டும் உயர்ந்த பக்தி நிலைகளைக் காட்டுகின்றன என்பதை அறியலாம். இது வேண்டாத ஆராய்ச்சி.

நாலாயிரம்—பாசுரத்தொகை

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் உண்மையாக அடங்கி யுள்ள பாசுரங்கள் வருமாறு:

முதலாயிரம்		947
பெரியதிருமொழி	—	1134
திருவாய்மொழி	—	1102
இயற்பா	—	593
ஆக, மொத்தம்	—	3776

இத்தொகைப்படி 4000-க்கு 224 பாசுரங்கள் குறைவாக உள்ளன என்பது வெளிப்படை. இதில் இராமாநுசர் காலத் தில் திருவரங்கத்தமுதனாரால் பாடப்பெற்ற இராமாநுச நூற்றந்தாதி சேரவில்லை. இராமாநுசர் காலத்தில் இராமாநுச நூற்றந்தாதி 24-ஆவது பிரபந்தமாக இயற்பாத் தொகுதி யில் இறுதிப் பிரபந்தமாகச் சேர்க்கப்பெற்றது என்பது அறியத்தக்கது. அதன் பாசுரங்களையும் சேர்த்தால் நாலா யிரத்தின் பாசுரங்களின் தொகை 3776 + 108 = 3884 ஆகின்றது.

இராமாநுச நூற்றந்தாதியை நாலாயிரத்துடன் சேர்ப்ப தற்கே அக்காலத்தில் ஆட்சேபங்கள் எழுப்பப்பெற்றன. ஒரே ஒரு காரணம் பகவான்மீது பாடப்பெற்றுள்ள பாசுரங் களுடன் ஒரு மனிதர்மீது பாடப்பெற்ற பாசுரங்கள் சேரக் கூடாது என்பது. ஆனால் மதுரகவிகளால் நம்மாழ்வார் மீது பாடப்பெற்ற பத்துப் பாசுரங்களைக் கொண்ட 'கண் ணினுண் சிறுத்தாம்பு' முதலாயிரத்தில் இறுதிப் பிரபந்த மாகச் சேர்க்கப்பெற்றுள்ளதே என்ற காரணம் காட்டப் பெற்றுச் சேர்க்கப்பெற்றது. இதனால் இராமாநுசரின் ஏற்

றம் நிலைநிறுத்தப்பெற்றது. அவரும் ஆழ்வார்களின் நிலைக்கு உயர்ந்து விடுகின்றார்.

வேதாந்த தேசிகர்

இவர் 3884 பாசுரங்களை 4000 ஆகக் காட்டுவதில் மேற்கொண்ட முயற்சியை விளக்குவேன். இவர் இயற்பாவின் பாசுரங்களை 593 + 108 = 701 ஆகக் கூட்டிக் கொண்டு 4000 எனக் காட்டுவர். அதனை நோக்குவோம். 'பிரபந்த சாரம்' என்னும் தமது நூலில்,

''அத்தனுயர் வேங்கடமாற்
காயி ரத்தோ
டானவிரு நூற்றோரைம்
பத்து மூன்றும்''[5]

என்று திருமங்கையாழ்வாரின் பாசுரங்களையே 1253 என்று கணக்கிடுகின்றார். அதன் விவரம்:

பெரிய திருமொழி	1134
திருவெழுக்கூற்றிருக்கை	1
	1135

எஞ்சிய 1253 — 1135 = 118 செய்யுட்கள் 'இருதிருமடல்களிலும்' இருப்பனவாகக் கொண்டிருத்தல் வேண்டும். இரண்டு மடல்களிலும் உள்ள மொத்த அடிகள் 452. நான்கு வரிகளை ஒரு பாசுரமாகக் கொண்டு பார்த்தால் 113 பாசுரங்களாகின்றன. சிறிய சிறுமடலின் தலைப்பிலுள்ள தனியன் பாசுரம் ஒன்றும், ஈற்றிலுள்ள வெண்பா ஒன்றும், பெரிய திருமடலின் தனியன் ஒன்றும், ஈற்றிலுள்ள வெண்பாக்கள் இரண்டும் சேர்த்து 118 எனக் கணக்கிட்டனரோ என்று சிலர் கருதுவர். தனியன்களைச் சேர்த்திருந்தால் வேறு ஆழ்வார்களின் பாடல்கட்குரிய தனியன்களையும் சேர்த்திருத்தல் வேண்டும். அங்ஙனம் சேர்க்கவில்லையாதலின் அது தவறு. பிரபந்த சாரத்தின் இன்னொரு பாசுரத்தில்,

''சிறியமடற் பாட்டுமுப்பத்
தெட்டி ரண்டும்
சீர்பெரிய மடல்தனிற்
பாட்டு எழுபத்தெட்டு''[6]

என்பதில் சிறிய திருமடலை 40 பாசுரங்களாகவும், பெரிய திருமடலை 78 பாசுரங்களாகவும் கொண்டுள்ளதை அறியலாம். பொருளுக்கேற்பச் சில அடிகளைச் சேர்த்து பாசுரங்களாகக் கணக்கிடுதல் முன்னோர்களின் மரபு என்று கருத இடம் உண்டு. இதனைச் சரியெனக் கொண்டால் 118 பாசுரங்கள் கணக்கிற்கு வருகின்றன. எனவே இருமடல்கள் நீக்கிய,

இயற்பாத் தொகுதிப் பாசுரங்கள்	591
சிறிய திருமடல்	40
பெரிய திருமடல்	78
இராமாநுச நூற்றந்தாதி	108
	817

என அமைகின்றன.

இக்கணக்குப்படி நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் அமைந்து விடுகின்றன. அதாவது,

முதலாயிரம்	947
பெரிய திருமொழி	1134
திருவாய்மொழி	1102
இயற்பாத்தொகுதி	817
	4000

என்று காண்க. ஆயினும் குறையொன்று தோன்றுகின்றது. கலிவெண்பாவாலாகிய இருதிருமடல்களையும் விருப்பப் படிச் சிதைத்துப் பாடற் கூறுகளைப் பாடல்களாகக் கொள்ளல் பொருந்தாது; யாப்பு இலக்கணத்திற்கும் முரணானது. எனவே, தேசிகரின் கணக்கினை ஏற்றுக்கொள்ள இயலாததாகின்றது.

அப்பிள்ளை

இவர் இராமாநுச நூற்றந்தாதியின் பாடல்களைச் சேர்க்காமல் 4000-ஆகக் கணக்கிடுவர். அவரது திருமங்கையாழ்வார் வாழித்திருநாமத்தில்,

''இலங்கெழுகூற் றிருக்கை
யிருமடலீந்தான் வாழியே!
இம்மூன்றில்பாட் டிருநூற்றிரு
பத்தேழிசைத்தான் வாழியே''[7]

என்று கூறியுள்ளார். இவர் இருமடல்களின் கண்ணிகளை யும் பாசுரங்களாகக் கணக்கிட்டுள்ளார்.

சிறிய திருமடல்	77½	கண்ணிகள்
பெரிய திருமடல்	148½	கண்ணிகள்
ஆக, மொத்தம்	226	

எனவே,

இருமடல்கள் நீங்கிய இயற் பாத் தொகுதிப் பாசுரங்கள்	591
மடல்களின் பாசுரங்கள்	226
ஆக, மொத்தம்	817

இவர் கணக்குப்படியும் நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் அமைந்துவிடுகின்றன. இங்கும் ஒரு குறை தோன்றுகின்றது. கண்ணிகள் பாவின் பகுதிகள். இவற்றைப் பாவாகக் கணக் கிடல் இலக்கண வரம்பினை மீறிய குற்றமாகின்றது. ஆகவே இக்கணக்கும் பொருந்தாததாகின்றது. தவிர, இராமாநுச நூற்றந்தாதியைச் சேர்க்காத குற்றமும் செய்ந்நன்றி கொன்ற பாவமும் வந்து சேர்கின்றன. வைணவம் நிலைத்திருக்கும் காலம் வரையிலும் இராமாநுசருடைய பெயரும் நிலைத் திருக்குமாறு காத்தல் வேண்டும்.

நாலாயிரத்தில் 4000 பாசுரங்கள் இருந்தேயாக வேண் டும் என்ற கொள்கையை நிலைநாட்டவே இலக்கண வரம்பை யும் மீறத் துணிந்தனர் நம் முன்னோர். இது தேவையில்லாத கொள்கை. 4000-க்குச் சில பாசுரங்கள் குறைவாக இருப் பினும் தொகை மிகுதி பற்றி 'நாலாயிரம்' என்றே வழங்கப் பெறுகின்றது என்று கொள்ளலே ஏற்புடைத்து. பத்துக்குக் குறைவாகவும் பத்துக்கு மேலாகவும் உள்ள பாசுரங்களைச் சேர்த்து ஒரு பதிகமாகக் கொள்ளும் ஒரு வழக்கு உண்டல்

லவா? 947 பாசுரங்களைக் கொண்ட பகுதியை 'முதலாயிரம்' என்று வழங்குகின்றோம் அன்றோ? அங்ஙனமே திருவாய்மொழி 1102 பாசுரங்கள் அமைந்திருப்பினும் 'நிரநிறை ஆயிரத்து'[8], 'சீர்த்தொகை ஆயிரத்து'[9], 'அமர் சுவை ஆயிரத்து'[10], 'குருகூர்ச் சடகோபன் சொன்ன ஆயிரம்'[11] என்று ஆழ்வார் தாமே அருளிச் செய்துள்ளமை ஈண்டு அறியத்தக்கது. பெரியதிருமொழி 1134 பாசுரங்களாலமைந்திருந்தும் 'பொங்குபுகழ் மங்கையர் கோன் ஈந்த ஆயிரம்'[12] என்று எம்பார் அருளிச் செய்துள்ளமையையும் 108 பாசுரங்களைக் கொண்ட அந்தாதி (எ-டு. இராமாநுச நூற்றந்தாதி) நூற்றந்தாதி என்று வழங்கப்பெறுவதும் ஈண்டு சிந்தித்தல் தகும். எனவே, 4000-க்குச் சில பாசுரங்கள் குறைந்துள்ள திவ்வியப் பிரபந்தத்தை 'நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்' என்று வழங்குவது எல்லாவற்றாலும் பொருந்துகிறது.

பொதுவாகக் கூறினால் இப்பிரபந்தங்கள் யாவும் சமயச் சார்புடையனவாகும். ஆகவே, பாசுரங்கள் பக்தி நிலைகளையும், சமயக் கொள்கைகளையும், இறைவன், உயிர்கள் இவர்களின் தன்மைகளையும் இவற்றிற்கிடையேயுள்ள உறவு முறைகளையும் (சம்பந்த ஞானம்) உணர்த்துவனவாக அமைந்துள்ளன. ஆயினும் பாசுரங்கள் யாவும் இலக்கிய நயம் செறிந்தவையாக இசைத்தமிழ்க் கூறுகளை உடையனவாக அமைந்துள்ளவாதலால் சமயச்சார்பு அற்றவர்களும் அவற்றை விரும்பிக் கற்றுப் போற்றுகின்றனர்.

இசையுடன் சேவித்தல்

நாதமுனிகள் நாலாயிரத்தைத் தொகுத்து அடைவுபடுத்தியவுடன் மேலையகத்தார் கீழையகத்தார் துணைகொண்டு பாசுரங்களைப் பாடிவந்தனர் என்பது வரலாறு. பாசுரங்களின் வெளிப்படைப் பொருளைத் தெரிந்து கொள்வதற்கும், பலரும் அதன் சுவையை முற்றிலும் அனுபவிப்பதற்கும் பாசுரங்களைப் பாடுதல் வேண்டும். நமது நாட்டில் தோத்திரப் பாடல்கள் எல்லாம் பாடப்பட்டே வந்தன. திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களும் அந்நெறியைப் பின்பற்றின. இதனை ஆசாரிய ஹிருதய சூத்திரங்களால் அறியலாம்.[13] இவ்வாறு பாடப்பெற்றுவந்த நெறி பல இடங்

களிலும் தூர்ந்து மறைந்துவிட்டது. பொதுமக்களில் வைணவத்தில் பற்றுள்ளவர்களும் பிறரும் பாசுரங்களைக் கற்று வந்தனர் என்று கூறலாமேயன்றி இசையோடு பாடிவந்தவரல்லர். ஆனால் பாடுதல் இன்றியமையாதது. 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்பது அப்பர் பெருமானின் திருவாக்கு. மேலும்,

> ''குருகூர்நம்பி பாவின் இன்னிசைப் பாடித் திரிவனே''[14]

என்ற மதுரகவிகளின் பாசுரப்பகுதியும்,

> ''பண்ணார் பாடல் இன்கவிகள்
> யானாய்த் தன்னைத் தான்பாடி
> தென்னா என்னும் என்அம்மான்
> திருமா லிருஞ்சோலை யானே''[15]

என்ற நம்மாழ்வாரின் திருவாக்கும் நாயன்மார் ஆழ்வார்கள் இசையோடு பாடினார்கள் என்பதைப் புலப்படுத்தும். இசையின் இயல்பு முறை முதலியன மறந்துவிட்டமையினால் இந்நெறியையும் தமிழ் மக்களால் அறிந்துகொள்ள முடியவில்லை.

திருவாய்மொழியை 'சாமவேத சாரம்' எனப் பெரியோர் வழங்கி வருகின்றனர். சாமவேதம் போல் இதுவும் இசையுடன் பாடுவதற்குரியது. 'பண்ஆர்தமிழ்' (திருவாய். 9.8:11), 'செயிரில் சொல் இசைமாலை' (மேற்படி, 3.2:11), 'பால் ஏய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரத்தின்' (மேற்படி 1.5:11) என்ற திருவாய்மொழியில் வரும் பாடற்பகுதிகள் இக்கருத்திற்கு அரணாக அமைகின்றன. திருவரங்கத்தமுதனாரும் தமது இராமாநுச நூற்றந்தாதியில் 'பண்தரு மாறன் பசுந்தமிழ்' என்றும், 'குருகை பிரான் அமுதத் திருவாய் ஈரத்தமிழின் இசை உணர்ந்தோர்க்கு' என்றும் திருவாய்மொழியைப் பாராட்டுவர். ஒரு தனியனும் 'யாழின் இசை வேதத்து இயல்' என்று இப்பிரபந்தத்தைக் குறிப்பிடும். திருவாய்மொழி முழுவதற்கும் பெரியதிருமொழி சில பகுதிகட்கும் (மர்ரே ராஜம் பதிப்பு) பண் தாளங்கள் பற்றிய குறிப்புகள் தரப்பெற்றுள்ளன. இப்பொழுது அப்பண்கள் தாளங்கள் பற்றிய குறிப்புகள் தெரியாமல் போனாலும், பின்னால் ஆராய்வாருக்கு இக்குறிப்புகள் பயன் தரலாம். இந்நிலையில் திவ்

வியப் பிரபந்தப் பாசுரங்கள் முழுவதற்கும் இத்தகைய குறிப்புகள் மிகவும் இன்றியமையாதவை. எனவே, பண்ணாராய்ச்சி மிகவும் இன்றியமையாதது. பிரபந்தம் முழுவதும் பலர், தாளங்களுடன் சேவிக்கும் முறை மிகவும் இன்றியமையாதது. இம்முறையில் நம் கருத்தைச் செலுத்த வேண்டும்; ஆராய வேண்டும்.

இங்குக் கூறியவற்றால் பிரபந்த ஆராய்ச்சியில் பல சிக்கல்கள் எழுகின்றன என்பது போதரும். இயன்றவரை இச்சிக்கல்களைத் தீர்ப்பது ஆய்வாளர்களின் கடமை.

குறிப்புகள்

1. திரு. வேங்கடக்கலம்பகம் — 24.
2. தேசிகப் பிரபந்தம் — 40.
3. மேற்படி, 368.
4. சுப்பு ரெட்டியார், ந., **'விட்டுச்சித்தன் விரித்த தமிழ்'** (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை — 600 108).
5. பிரபந்த சாரம் — 16 (தே.பி. — 382).
6. பிரபந்த சாரம் — 13 (தே.பி. — 379).
7. வாழித்திருநாமம் — 10.
8. திருவாய். 1.1:11.
9. மேற்படி, 1.2:11.
10. மேற்படி, 1.3:11.
11. மேற்படி, 2.1:11.
12. தனியன்.
13. ஆசா. ஹிரு. 68, 69 (புருடோத்தம நாயுடு பதிப்பு); விளக்கம் அவற்றின் உரையிலும் கண்டு தெளியலாம்.
14. கண்ணிநுண் — 2.
15. திருவாய், 10.7:5.

23. புதுக்கவிதை

சு. அரங்கராசு

புதுக்கவிதை கவிதையா என்பதே இங்கு ஒரு சிக்கலாக உள்ளது. அண்மையில் வெளிவந்த **'குங்குமம்'** இதழில், **'புதுக்கவிதை அலை ஓய்ந்துவிட்டது'** என்ற தலைப்பில் கவிஞர் சுரதாவும், **'என்றும் ஓயாது'** என்ற தலைப்பில் கவிஞர் ஞானக்கூத்தனும் தத்தம் கருத்துகளைத் தெரிவித் திருந்தனர். புதுக்கவிதை ஒரு புதிய அலையாகப் புறப் பட்டதை ஏற்றுக்கொண்டே இவ்வினா முன்வைக்கப்பட் டதைக் கவிஞர் சுரதா ஏற்றுக்கொள்ளவில்லை. புதுக்கவிதை ஓர் இலக்கியமா என்ற தொடக்ககால வினாவையே தற் போதும் அவர் முன்வைக்கிறார். 'கவிதைக்கான வடிவமே இல்லாத, உரைநடையை ஒடித்து எழுதும் முறையை வேறு எந்தப் பெயரில் வேண்டுமானாலும் அழைக்கலாம்' என்று கூறும் சுரதா, கவிதையின் வடிவம் பற்றிக் கூறும்போது 'கவிதைக்கு என்று ஒரு வடிவமைப்பு உண்டு. அந்த வடிவத் துக்குள் கவிதையின் கருத்தைச் சொல்வதே சிறப்பு'[1] என்று குறிப்பிடுகின்றார்.

எனவே வெண்பா, விருத்தம் முதலான பாவடிவங்களே கவிதையின் அடையாளம் என்று அவர் வற்புறுத்துகிறார். 'கவிதைக்கான வடிவமே இல்லாத ஒன்றை எவ்வளவு சிறந்த கருத்து இருந்தாலும் எப்படிக் கவிதை என்று ஏற்றுக்கொள்ள முடியும்?' என்றும் வினவுகிறார். மேலும், 'வசன கவிதை' பற்றிக் கூறுகையில், இப்படிக் கூறுவதுகூடத் தவறுதான். வசனம் வேறு, கவிதை வேறு'[2] என்கிறார்.

புத்திலக்கிய வகை

புதுக்கவிதை — இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பாரதியாரால் காட்சிகள் என்ற தலைப்பிடப்பட்டு, (பின் னாளில் 'வசன கவிதை' என்று பெயரிடப்பட்டது; பாரதி

வசன கவிதை என்று கூறவில்லை) வெளியான புதிய இலக்கிய வகையானது, முப்பதுகளில் 'மணிக்கொடி' என்ற சிறு பத்திரிகை வழியே ந. பிச்சமூர்த்தி, க.நா.சு., கு.ப.ரா., ஆகியோரால் 'வசன கவிதை' என்ற பெயரிடப்பட்டு அறிமுகமாகியது. 1950-களில் சரஸ்வதி இதழில் க. நா. சு. ஆங்கிலக் கவிதை முப்பதுகளில் புதிய கவிதை என்ற பொருளில் (New Poetry) வழங்கப்பட்டதை ஒட்டி தமிழில் புதுக்கவிதை என்று பெயரிட்டார்.

இப்புதிய இலக்கிய வகை தமிழில் காலூன்றும் முன்னரே அமெரிக்கப் புரட்சியை ஒட்டி (1776) அமெரிக்காவில் வால்ட் விட்மனால் **சுதந்திரச்** செய்யுள் (Free Verse) என்ற பெயரால் அறிமுகமாயிற்று. அதேபோல, ஐரோப்பாவில் குறிப்பாகப் பிரெஞ்சு நாட்டில் 1789-ஆம் ஆண்டு நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின் விளைவாகப் பாதலேர் போன்றோரால் **விடுநிலைப்பா** (Verse libre) என்ற பெயரில் இப்புதிய இலக்கிய வகை காலூன்றியது வரலாற்றுச் செய்திகளாகும். எனவே, காலனி ஆட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து சுதந்திரம் அடைந்த அமெரிக்காவின் சமூக உள்ளடக்கமே — சுதந்திரச் செய்யுளின் (கட்டற்ற கவிதை, சுயேச்சா கவிதை என்றும் கூறப்படுவதுண்டு) தோற்றத்திற்கு அடிப்படை. அதேபோல, 'சுதந்திரம் — சமத்துவம் — சகோதரத்துவம்' என்ற பிரகடனத்தின் மூலம் நிலப்பிரபுத்துவ முடியாட்சி அமைப்பைத் தகர்த்தெறிந்துவிட்டு முதலாளித்துவ முடியாட்சி அமைப்பை நிறுவிய பிரான்சின் வரலாற்று உள்ளடக்கமே விடுநிலைப் பாவின் தோற்றத்திற்கு அடிப்படையாகும்.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஓர் இலக்கிய வகையாகத் தோன்றிய இப்புதிய அலை **செய்யுளில்** இயங்காமல் அதிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக்கொண்டு வசனத்தின் வழியே இயங்கியது. புனைவியல்காரரின் (Romanticist) உள்ளடக்கத்தைப் புறக்கணித்துவிட்டுத் தம்கால வாழ்வியல் வரலாற்றியல் உள்ளடக்கங்களைத் •தமது இல்க்கியத்தின் உள்ளடக்கமாகக் கொண்டனர் இப்புதிய இலக்கியக் (கவிதை) காரர்கள். அதே காலத்தில் வசனத்தின் வழியே

இலங்கிய நீண்ட கதையை நாவல் என்றும், சிறிய கதையைச் சிறுகதை என்றும் அழைத்தவர்கள் — இதன் தன்மையானது கவிதைக்கு நெருக்கமாக அமைந்ததால், இதைக் கவிதை என்றே அழைக்கத் தலைப்பட்டனர். ஆனால் தொடக்கத்தில் வசனத்தைக் கவிதைச் சாயலுடன் எழுதியதால் **கவிதை வசனம்** என்று கூறி (Poetic prose) அதையே தொடர்ந்து மேலும் செறிவும் நுட்பமும் தோன்ற 'வசன கவிதை'யாகப் (Prose Poetry) பெயரிட்டு வெளியிட்டனர். இதுவே பின்னாளில் விடுநிலைப்பாவாக (Verse libre) மாறியது. அதே போல யாப்பிலா செய்யுள் (Blank Verse) சுதந்திரச் செய்யுளாக (Free Verse) மாறியது.

இப்படி மேற்கு உலகில் தோன்றிய இப்புதிய இலக்கிய வகையானது பாரதி காலத்தில் தமிழிலும் அறிமுகமாயிற்று. வால்ட் விட்மனையும் அவருடைய சுதந்திரச் செய்யுளையும் அறிமுகப்படுத்தும் பாரதி, அப்புதிய வகையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அவரது கூற்றைக் கேட்போம்: ''வால்ட் விட்மனின் — பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால் அது வசனநடை போலேதான் இருக்கும். எதுகை மோனை தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனை இல்லாத கவிதைதான் உலகத்திலேயே பெரிய பாஷைகளின் பெரும்பகுதியாகும். **ஆனால் தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கம் இல்லை.** வால்ட் விட்மன் '**கவிதையைப் பொருளில் காட்டவேண்டுமேயல்லாது** சொல்லடுக்கில் காட்டுவது பிரயோசமில்லை' என்று கருதி **ஆழ்ந்த ஓசை** மாத்திரம் உடையதாய் மற்றபடி **வசனமாகவே** எழுதிவிட்டார். இவரை ஐரோப்பியர் காளிதாசன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்ட்ன், தாந்தே, கெத்தே முதலிய மகாகவிகளுக்குச் சமமான பதவியுடையவராகவே மதிக்கிறார்கள்''[3] என்று வசன கவிதையைப் பாரதி அறிமுகப் படுத்துகிறார்.

பாரதி வசன கவிதையை அறிமுகப்படுத்தும்போது அதை ஏற்காதவராகவே அமைகிறார். கவிதை என்று சொல்லவந்தால் அது யாப்புக்குத் தான் என்பதில் உறுதியாக இருக்கிறார். ஆனால் 1913 வாக்கில் அவரே வேதங்களைப்

படித்தபின், அவற்றைக் கவிதையாக ஏற்றுக்கொண்டு, தமிழாக்கப்படுத்தி **'வேதரிஷிகள் கவிதை'** என்று தலைப் பிட்டு நூலாக வெளியிடுகிறார். எனவே பாரதியின் கவிதைக் கோட்பாட்டில் நிகழ்ந்த மாற்றம் மேலைத்தாக்கத்தின் விளைவு என்ற கூற்றில் காணும் உண்மையைவிட, கீழைய பயன்படு மரபின் தொடர்ச்சியே என்பதில் அதிக உண்மை இருப்பதை அறியமுடிகிறது.[4]

மேற்கண்ட கூற்றின் மூலம் நமக்குப் புலனாகும் உண்மை எது? வசன கவிதை அல்லது புதிய கவிதை என்பது தமிழ் நாட்டில் மட்டுமே செயற்கையாக உண்டாக்கப்பட்ட இலக் கிய வகை அல்ல என்பதும், அது இருபதாம் நூற்றாண்டில் உலக இலக்கியத்தின் ஒரு பகுதியே என்பதும் தெளிவாகின் றன. உலக மொழிகள் அனைத்திலும் உரைநடையில் வெளி யான நாவல், சிறுகதை என்ற நவீன இலக்கியத்தின் கடைசிக் கொழுந்தாகத் தோன்றியதே புதுக்கவிதை என்பது மனங் கொளத்தக்கது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகில் பெரும்பாலான மொழிகளில் **செய்யுள் நடையின் ஊடே இயங்கிய கவிதை, உரைநடையை ஊடகமாக்கிக் கொண்டு வெளிவரத் தொடங்கியது என்பதே இங்குச் சிந் திக்க வேண்டிய கருத்தாகும்.**

செய்யுள் நடையும் உரைநடையும்

கவிஞர் சுரதாவின் புதுக்கவிதைப் புரிதல் பற்றிப் பார்ப் போம். அவர் கூற்றில் கீழ்க்காணும் புரிதல்கள் காணப்படு கின்றன. கவிதைக்கு வடிவம் உண்டு. செய்யுள் வடிவமே கவிதை வடிவம். செய்யுள் வடிவம் அற்றது கவிதை அல்ல. செய்யுளை ஓர் ஊடகமாகக் (Medium) கொள்ளாமல் அதை வடிவமாகக் (Form) கொண்டதினாலேயே பெரும்பாலான வர்கள் குறிப்பாக மரபுக் கவிஞர்கள் புதுக்கவிதையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். பழங்காலத்திய உரைநடையே செய்யுள் நடைதான். அதுவே அக்கால ஊடகமாகும். அதன் வழியேதான் அறிவியற் கலைகள் இயங்கின. இலக்கியக் கலையும் இயங்கியது. அக்காலத்தில் செய்யுள் இலக்கியம் தான் இலக்கியம். இருபதாம் நூற்றாண்டில் மேலைநாட்டை

ஒட்டித் தமிழ்நாட்டிலும் செய்யுள் இலக்கியத்துடன் உரை இலக்கியமும் வளரத் தொடங்கியது. உரைநடையின் வழியே நாவல் சிறுகதை வேரூன்றியபின் கடைசியாகச் செய்யுளிட மிருந்து கவிதை விடைபெற்று உரையின் வழியே வெளிப் பட்டது. சுருக்கமாகச் சொன்னால், கவிதையின் பிறந்தகம் செய்யுள். அதன் புகுந்தகம் உரைநடை. மரபுக் கவிஞர்கள் எதிர்ப்பு என்பதைத் தாய்வீட்டிலிருந்து புக்ககம் நோக்கிப் புறப்படும் மகளின் பிரிவைத் தாங்கமாட்டாமல் தாய் உகுக் கும் கண்ணீர்த் துளிகள் என்றே கொள்ள வேண்டும்.

முடியரசு, சுரதா, பொன்னடியான், பொன்னிவளவன் போன்றோரைத் தவிர பாரதிதாசன் பரம்பரை என்று அறியப்பட்டவருள் பெரும்பாலோர் புதுக்கவிதை எழுத முன்வந்ததை இங்குக் குறிப்பிட வேண்டும். இது இலக்கிய வரலாற்றின் பரிணாம வளர்ச்சி. நவீன கவிதையில் **நவீனத் துவம்** என்பது பாரதி காலம் தொட்டுத் தொடங்குகிறது. **தற்காலத்தன்மை** என்பதே நவீனத்துவத்தின் முதற்பண் பாகும். வரலாற்றடிப்படையில் முதலாளியச் சமூக அமைப் பின் புதிய மதிப்பீடுகளால் பழைய சமூக அமைப்பின் பயன்பாடு மதிப்பீடுகளை இழக்க விரும்பாத மறுமலர்ச்சிக் காலக்கவிஞர்கள் குறிப்பாக பாரதிதாசனும் அவரை அடி யொற்றிய கவிஞரும் உள்ளடக்கத்தில் புதிய பார்வைகளைக் கொண்டும் பழஞ் செய்யுளை ஏற்றும் செயல்பட்டனர். ஊடகத்தில் நிகழ்கால சமுதாய எழுச்சிக்கு மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தை ஒட்டி வாழ்க்கைத் தேவைகளை அமைத்துக் கொள்ளும் காலகட்டத்தில், பாரதிதாசனின் பாடுபொருள் களின் மய்யமாய் அமைந்தது காலனி ஏகாதிபத்திய எதிர்ப் பும் தமிழ்த்தேசியமும் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழினம்

சங்க காலத்திற்குப் பின் தொடர்ந்து பல அந்நிய ஆட்சி களின் கீழ் தனது அடிமை விலங்குகளைப் புதுப்பித்துவந்த தமிழினம் இருபதாம் நூற்றாண்டில்தான் விடுதலை சமத் துவம் சகோதரத்துவம் ஜனநாயகம், என்று தோன்றிய புதிய

முழக்கங்களின் கீழ் தனது அடிமை விலங்குகளைத் தகர்க்க முன்வந்தது. எனவே, மேற்கில் நிறவெறி எதிர்ப்பும், கிழக்கில், குறிப்பாகத் தமிழகத்தில் சாதி வெறி எதிர்ப்பும் இலக்கியத்தின் முதன்மை உள்ளடக்கங்கள் ஆயின. நிறவெறியை எதிர்த்தும், அடிமைத்தனத்தை எதிர்த்தும் அமெரிக்காவில் ஓர் உள்நாட்டுப் போரே ஏற்பட்டது. ஆனால் சாதி வெறியை எதிர்த்தும் தீண்டாமையை எதிர்த்தும் இத்துணைக் கண்டத்தில் தமிழகத்தில் மட்டுமே தந்தை பெரியார் தலைமையில் கத்தியின்றி ரத்தமின்றி ஓர் உள்நாட்டுப் போர் நிகழ்ந்தது. அந்தப் போரின் முன்னணியாகச் செயல்பட்டதே திராவிட இயக்கமாகும். அமெரிக்கச் சுதந்திரத்தையும், மக்களாட்சித் தத்துவத்தையும் உயர்த்திப் பிடிக்க அமெரிக்காவிற்கு ஒரு வால்ட் விட்மன் கிடைத்தார். தமிழகத்திற்குப் பாரதிதாசன் கிடைத்தார்.

புதுக்கவிதை எதிர்ப்பும் செய்யுட்கவிதை ஆதரவும்

அமெரிக்காவிற்குச் செழுமையான நீண்டகால வரலாறு இல்லை. ஆனால் தமிழகத்திற்கோ நீண்ட வரலாறும் பண்பாடும் உள்ளன. எனவே, வால்ட் விட்மனால் வெகுசுலபமாக உரைநடைக்கு மாற்றிக்கொள்ள முடிந்தது. ஆனால் தொல்காப்பியம் நன்னூல் காலம் தொட்டு செழுமையான இலக்கண வரையறைகள் கொண்ட தமிழினத்திற்கு அப்பாய்ச்சல் தேவைப்படவில்லை. இதனாலேயே கவிஞர் சுரதா போன்றோர் இன்றளவும் எதிர்த்துக் கொண்டிருக்கின்றனர். சேரர் சோழர் பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலத்தோடு ஆத்மார்த்தமாகத் தம்மைப் பிணைத்துக் கொண்டுவிட்ட காரணத்தாலும், தமிழன் வேறு எந்த இனத்துக்கும் மொழிக்கும் அடிமைப்படாமல் சுதந்திரமாக வாழ்ந்த காலகட்டமான காரணத்தாலும் கவிஞர் சுரதா போன்ற தமிழர்கள் பழகிய பழமையின் அடையாளங்கள் கடைசியாய் எஞ்சி நிற்கும் செய்யுளை விட்டுவிட மனமின்றி வசன கவிதையை எதிர்க்கிறார்கள் என்றே பொருள் கொள்ள வேண்டியுள்ளது. அறிவியல் வளர்ச்சியின் காரண

மாக, செய்யுள் வகித்த இடத்தை வசனம் வகிக்க முன் வந்தாலும், அதை நாவல் சிறுகதை அளவில் ஏற்றுக் கொண்டு கவிதை அளவில் ஏற்க முன்வராததன் காரணங் களை நாம் மேலும் காண வேண்டியவர்களாக இருக் கிறோம்.

இனமும் இலக்கணமும்

இலக்கண வரையறை என்பது ஒரு மொழியின் தனித் தன்மையைக் காப்பாற்றி வரும் பாதுகாப்புப் பெட்டக மாகும். மொழியின் வரையறை என்பது ஓர் இனத்தின் வரையறையுமாகும். யாப்புக் கட்டுப்பாடு என்பது ஒரு சமுதாயத்தின் கட்டுக்கோப்பாகும். தொடர்ந்து மாற்றினத் தவரும் அவர்தம் மொழிகளும் முற்றுகையிட்டு, இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வட வேங்கடம் முதல் குமரி வரை தமிழ் மட்டுமே கூறப்பெறும் நல்லுகமாக இருந்த தென்னகத்தைக் கன்னடம், ஆந்திரம், கேரளம் என்று பிரித்து விட்டனர். எனவே, மேலும் சிதையாமல் தன்னைத் தற் காத்துக் கொள்ளும் பொருட்டுத் தமிழினம் தன் அடை யாளங்களைப் பேணிப்பாதுகாத்துக்கொள்ள வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் உருவாயிற்று. இதன் விளைவாகத் தென்னகத்தில் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் உரு வானதே பிராமணர் அல்லாதார் இயக்கம்.

பிராமணர் அல்லாதார் அனைவரும் ஒருமுகமாக ஒன்று திரண்டு சாதி ஆதிக்கத்தைச் செயல்படுத்தும் பிரிவினரான பிராமணரின் சமூக ஆதிக்கத்தின் வேர்களைக் களைய முற் பட்டபோது **திராவிட இயக்கம்** தோன்றியது. தொடர்ந்து பல நூற்றாண்டுகளாக இம்மண்ணில் வாழ நேர்ந்த அறிவு ஜீவிகளான பிராமணர்கள் இந்தப் புதிய எதிர்ப்பை எதிர் கொள்ள நேர்கையில், பிராமணர் அல்லாதாரில் **'சாதி இந்துக்கள்'** என்ற புதிய பிரிவை ஏற்படுத்திப் பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் **புதிய பார்ப்பனீயத்தைத்** தோற்றுவித்து, பிராமணர் அல்லாதாரில் சாதிப்போரை நிகழவைத்தனர்.

பண்பாட்டு இடைவெளியும் பண்பாட்டு மௌனமும்

பிராமணருக்கும் பிராமணர் அல்லாதாருக்கும் தமிழ் நாட்டில் காலம் காலமாக நிலவிய பண்பாட்டு இடைவெளி (Cultural distance) தமிழகத்தில் ஒரு பண்பாட்டு மௌனத்தை (Cultural silence) உண்டாக்கியது. இதன் காரணமாகத் தொடக்கத்தில் பாரதி, உ.வே.சா., வ.வே.சு., வ.ரா., போன்றோர் தமிழக மறுமலர்ச்சியின் விதைகளாகத் தோன்றி னாலும், தொடர்ந்துவந்த பிராமண அறிவு ஜீவிகள் தம்மைத் தமது மண்ணின் பண்பாட்டு வேர்களிலிருந்து முழுதும் கத்தரித்துக்கொண்டனர். நீண்டகாலமாக வடமொழிச் செல் வாக்கால் வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொண்டவர் கள், ஆங்கிலேய ஆதிக்கம் ஏற்பட்டபின்னால் ஆங்கிலம் கற்றுத் தொடர்ந்து தமது சமூக இருப்பைத் தக்கவைத்துக் கொண்டார்கள்.

நீண்டகாலமாக வடமொழி ஆதிக்கத்திற்குக் காரணமாக இருந்த பிராமணர்கள் பெரும்பாலான உழைக்கும் மக்க ளிடமிருந்து தனிமைப்பட்டே வாழ்ந்து வந்தனர். வீட்டு அளவுக்கு இவர்கள் வைத்துப் புழங்கிய தமிழைத் தெரு வுக்குக் கொண்டுவந்தது பக்தி இயக்கமே. பக்தி இயக்கம் ஒன்றுதான் அரசியல் இயக்கங்கள் தோன்றாத காலத்தில் சாதி அமைப்பை எதிர்த்துப் போராடியது என்பதும் இங்கு மனங்கொளத் தக்கது.

புதுக்கவிதைக்கும் பிராமணர்களுக்கும் என்ன தொடர்பு என்று இங்கொரு கேள்வி எழுவது நியாயம்தான். அல்லது புதுக்கவிதைக்கும் திராவிட இயக்கத்துக்கும் என்ன வரலாற் றுத் தொடர்பு என்ற கேள்வியும் இங்கு எழத்தான் செய்யும்.

தமிழ்த்தேசிய உள்ளடக்கமும் பிராமணரும்

பாரதி, பாரதிதாசன், நாமக்கல்லார் போன்றோரால் **தமிழ்த் தேசிய உள்ளடக்கம்** தமிழ்க்கவிதையின் முதன்மை யான உள்ளடக்கமாக மொழியப்பட்டது. தமிழ் வாழ்ந்தால் தான் தமிழினம் வாழும்—என்ற கருத்து திரும்பத் திரும்ப

வற்புறுத்தப்பட்டது. தமிழ்நாட்டின் பண்பாட்டுத் தொடர்ச்சியாகத் தம்மைக் கருத இயலாமல் காலம் காலமாக வடமொழிச் செல்வாக்கிற்குள் தம்மை சிறைப்படுத்திக்கொண்ட பிராமணர்கள் சுதந்திரப் போராட்டத்தின்போது தம்மைச் சுயவிமர்சனம் செய்துகொண்டு, 'வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்' என்று தமிழ்த்தேசிய நீரோட்டத்தில் இரண்டறக் கலந்தனர். இந்திய தேசியத்திலோ தமிழ்த் தேசியத்திலோ எதிலும் தம்மை அடையாளம் காண முற்படாமல் காலனி ஆட்சியில் ஆங்கில மொழி கற்றுத் தொடர்ந்து மக்களிடம் மேலும் தம்மை அந்நியப்படுத்திக்கொண்டு ஆங்கிலம் கற்ற பிராமணர்களில் பெரும்பாலோர் மேற்கத்திய அளவுகோல்களை விமர்சனமின்றி ஏற்கத்தொடங்கினர். அதன் விளைவே பாரதி, பாரதிதாசனுக்குப்பின், க. நா. சு. வின் தலைமையில் பிராமணர்கள் தமது பண்பாட்டு ஒருமையை, அடையாளத்தை, தொடர்ச்சியைப் பேணிக்கொள்ள மேலைய நவீனத்துவ இலக்கியத்தை ஏற்றுக்கொண்டனர். குறிப்பாகப் புதுக்கவிதையை ஏற்றனர். ஆனால் அவர்களுக்குள்ளேயே முரண்பாடு வெடிக்கத் தொடங்கியது. பாரதி, பாரதிதாசன் மரபில் புதுமைப்பித்தனும், ந. பிச்சமூர்த்தியும் மரபின் (செய்யுளின்) சாயலுடன் கவிதை எழுதினர்.

பிராமணரும் மேலைத்தாக்கமும்

ந. பிச்சமூர்த்தி, கு.பா.ரா., க.நா.சு., ல.ச.ரா., சிட்டி போன்றோரும் இன்னும் பலரும் தொடக்கத்தில் தாம் ஆங்கில மொழியிலேயே தமது இலக்கியப் படைப்புகளை எழுதி வந்ததாகவும் தற்செயலாகப் பாரதியின் கவிதைகளைக் குறிப்பாக வசன கவிதைகளைப் படிக்க நேர்ந்தபோது அதன் ஊடகச் சுதந்திரம் தம்மையும் தமிழில் எழுதவைத்தது என்றும் ஆங்காங்கு குறிப்பிட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் க.நா.சு. அவர் கூறுகிறார்: ''என் ஆரம்பகால இலக்கிய முயற்சிகள் ஆங்கிலத்திலேயே அமைந்தன. ஆங்கிலத்தில் Prosody படித்திருந்தாலும் கூட metrical patterns-சுக்கு உட்படாமல் We are the Free — என்ற கவிதையை எழுதினேன்....''[5]

இந்தக் கூற்றில் தமிழ்நாட்டில் பெரும்பாலான பிராமணர்கள் மேற்கத்திய சூழலுக்குத் தம்மைத் தயார்படுத்திக் கொண்டதை அறிந்துகொள்ள முடிகிறது. எனவே, தமிழ் மொழி மரபு, இலக்கிய மரபு, இலக்கண மரபு ஆகிய மரபுகளிலிருந்து துண்டிக்கப்பட்டனர் என்று துல்லியமாகத் தெரிகிறது. 'மணிக்கொடி'யில் இவர்கள் எழுதத் தொடங்கும்போதுதான் அனைவருக்கும் தமிழில் பெயர் உட்பட எழுத (தலை எழுத்து initial) வ.ரா. தூண்டுதலாக அமைந்தார்.

தன்னிலை நெருக்கடி

வீட்டு வளர்ப்பும் சமூகச் சூழலும் கற்ற காலனியக் கல்வியும் இந்த இளைஞர்களைத் தமிழ்ச் சமூக வரலாற்றுடன் ஒன்றிணைக்கவில்லை. மாறாக, நிறவெறி எதிர்ப்பை ஏற்றுக் கொண்ட ஏராளமான வெள்ளை இளைஞர்கள் எதிர்ப்பியக்கத்தில் கருப்பு மக்களுடன் கைகோர்த்து நின்றதைப் போல, இங்கே சாதி எதிர்ப்பியக்கத்தில் பிராமண இளைஞர்கள் பிராமணர் அல்லாதாருடன் ஒன்றிணையவில்லை என்பது சிந்திக்கத்தக்கது. தேசிய இயக்கத்தில் பாரதி காலத்தில் பலரும் ஈடுபட்டனர். தீவிரவாதிகள் இயக்கம் ஒடுக்கப்பட்டு மிதவாதத் தலைமை ஏற்பட்டபின் பிராமண இளைஞர்கள் முற்றிலும் சமூகத்திலிருந்து அந்நியமாயினர். திராவிட இயக்கமோ பிராமணர்களைப் புறக்கணிக்கும் இயக்கமாகியது. எனவே, தம்மைத் தமிழர்களாகவும் இனங்காண இயலாமல் ஆரியர்களாகவும் அடையாளங் காணாமல் ஒரு விதமான **தன்னிலை நெருக்கடிக்கு (Identity crisis)** ஆளாயினர்.

வளர்ந்த பண்பாட்டுச் சூழலும் கற்ற கல்விச்சூழலும் ஏதாவதொரு பண்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டாக வேண்டிய உள்உந்தல் காரணமாக நவீன இலக்கியத்தில் (Modern literature) இவர்கள் காலூன்றினர். இன்று வரையிலும் பிராமணர்களே தமிழ்ப் பண்பாட்டுத் துறைகளின் முன்னோடிகளாக இருப்பது இங்குக் கருதத்தக்கது. ஆனால் சமூக நடவடிக்கைகள் எதிலும் பங்குகொள்ளாமல் தனித்

திருந்து வாழும் இலக்கிய மணிகளாக இவர்கள் தமது நெருக் கடியிலிருந்து தம்மை விடுவித்துத் தமது தனித்தன்மையைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றனர். இவர்களது இரத்தத் திலும் சித்தத்திலும் இரண்டறக் கலந்த ஆதிக்க மனப்பான்மை தமது இருப்பின் நிலைப்புக்கு ஆபத்து விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் எதிர்க்கத் தொடங்கியது.

தமிழ் மறுமலர்ச்சியும் மீட்புவாதமும்

தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்துக்குப் பழமை மீட்பு இன்றி யமையாததாக அமைந்தது. வரலாற்றில் தாம் சுதந்திரமாக இருந்த பொற்காலத்தைத் திரும்ப நினைவூட்டுவது ஓர் இயக் கத்தின் உயிர்நாடியான பண்பாக அமைந்தது. அந்தப் பழமைக்கு உரிமை கொண்டாட முடியாத பிராமணர்கள், மேலைய நவீனத்துவப் போக்கின் பண்பான பழமை மறுப்பை, எதிர்ப்பை எவ்வித விமர்சனமுமின்றி ஏற்றுக்கொண்டு, தமிழகத்தின் பழமை மீட்பை எதிர்க்கவும், வெறுக்கவும், ஏளனம் புரியவும் தலைப்பட்டனர். இந்த எதிர்ப்பினைச் சிறிதளவுகூட இவர்கள் சமூக நடவடிக்கைகளில் செலுத்த வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதில் ந. பிச்சமூர்த்தி, சி.சு.செ., ஆகியோர் விதிவிலக்கு ஆவர். ஆனால் க.நா.சு. தன் சொந்த மண்ணின் வரலாற்றுச் சிக்கலை முழுக்கவும் புறக்கணித்துவிட்டுத் தன் வாழ்க்கைச் சிக்கலை மட்டும் இலக்கியத்தின் உள்ளடக்கமாகக் கருதியமை இங்கே கவனிக்கத்தக்கது.

பாரதிதாசன், இருட்டடிப்பு

'தமிழைப் பற்றிய வரையில் தமிழ்க் கவிதை செத்து விட்டது'[6] என்று கூறும் க.நா.சு., 'பாரதிக்குப்பிந்திய கவிதை முயற்சிகளிலே ரகுநாதனையும், புதுமைப்பித்தனை யும், கொத்தமங்கலம் சுப்புவையும் பாராட்டுகிறார்.[7] தவறிப் போயும் ஓரிடத்தில் கூட பாரதிதாசனைப் பற்றிய விமர் சனத்தை முன்வைக்காமல் நழுவிச் செல்கிறார். இதன்மூலம் பாரதிதாசனை இருட்டடிப்புச் செய்ய முயற்சிக்கிறார். இது இவரோடு மட்டுமல்ல, பிறரும் செய்கிற காரியம்தான்.

பிரின்ஸ்டன் பல்கலைக்கழகம் 1979-இல் வெளியிட்ட **'கவிதை, கவிதையியல் கலைக்களஞ்சியம்** (Princeton Encyclopaedia of Poetry and Poetics) என்ற நூலில் **இந்தியக் கவிதை** என்ற பகுதியில் **தமிழ்க் கவிதைப்** பிரிவில் 'பாரதிக் குப்பின்' ச.து.சு. யோகி, சுரபி, தேசிக விநாயகம்பிள்ளை, நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் கவிதை ஆற்றலுடன் எழுதுபவர்கள் என்று குறிப்பிடுகின்றார் (ப. 392) சென்னைப் பல்கலைக் கழக வடமொழித் துறையின் முன்னாள் தலைவர் மறைந்த வி. ராகவன். இதிலிருந்து திராவிட இயக்கத்தின்மீதும் தமிழர் மரபின்மீதும், தமிழர் எழுச்சியின்மீதும் இவர்கள் கொண்டிருக்கும் வெறுப்பு வெளிப்படையாகத் தெரிகிறது. எனவே இவர்களின் பழமை மறுப்புக்கும் பாரதியின் பழைமை மறுப்புக்கும் அடிப்படை வேறுபாடு உள்ளது.

ஐரோப்பியப் புதுக்கவிதையில் புதுமைகளை எல்லாம் தொட்டு நடக்கும் ஒரு நேர் நடையும், அகவல் சந்தம் என்று நாம் சொல்லக்கூடிய ஒரு பேச்சு நடை அடிப்படைச் செய்யுள் வேகமும், எல்லாவற்றிற்கும் மேலாக இடைக்காலப் பழமைக்கு மேலாகப் பண்டைக்கால ஆதிகாலப் பழமையைப் போற்றும் ஒரு திறனும் காணக்கிடக்கின்றன,[8] அதேபோல பிரெஞ்சு புதுக்கவிதைகாரர்களைப் பற்றிப் பேசும் போது, 'இவர்கள் செய்திருப்பது என்னவென்றால் அன்று ஆட்சி செலுத்திய மரபைத் தகர்த்தெறிந்துவிட்டு ஒரு மிகப் பழைய கவிதை மரபை ஆதர்ரமாக வைத்து இன்றைய பேச்சு வடிவ அடிப்படையில் புதுக்கவிதை செய்ய முயன்றிருக்கிறார்கள்[9] என்று குறிப்பிடுகிறார்.

இவர் குறிப்பிடும் இலக்கணங்கள் அனைத்தும் பாரதிதாசனுக்குப் பொருந்தும். பாரதிதாசன் 1930-களில் மணிக்கொடியில் கவிதை எழுதியவர். புதிய கவிதைப் பரிசோதனைகளை அறிந்தவர். திராவிட இயக்கத்தவர். இலக்கண வரம்பு ஓர் இனத்தின் வரம்பாகக் கருதியவர். எனவே இந்தப் புதுக் கவிதை முயற்சிகளை அறவே புறக்கணித்தார் என்று கருத இடம் உள்ளது. எனவே கீழைக் கவிதை மரபின் தொடர்ச்சியாக வந்த பாரதிதாசன் மரபுக் கவிதையை எளிய பழகு

தமிழில் எழுதும் அளவுக்குச் செய்திறன் (Craftmanship) உள்ளவராக இருக்கிறார். அவர் காலத்தில் அவரே கவிதை யின் இயங்குதளமாக இருந்தார். பின்னர் வந்த **வானம்பாடி கள்** முழுக்க வசன கவிதையாக எழுதாமல் மரபு தழுவியே புதுக்கவிதைகளைப் படைத்தனர். இதன் மூலம் தமிழகத் திற்கு வேண்டிய புதுக்கவிதையை அமைத்துக்கொண்டனர்.

க. நா. சு. வும் — கவிதைகளும்

க. நா. சு. வின் புதுக்கவிதைகள் *(1989)* என்ற நூலில் உள்ள கவிதைகளில் **பேச்சாளர் (1958)** என்ற கவிதையும் ஞானக்கூத்தனின் அன்று வேறு கிழமையில் உள்ள கவிதை யும் தமிழகத்தில் மேடைத்தமிழை அங்கதத் தொனியில் கிண் டல் புரிகின்றன. க.நா.சு. 'முச்சங்கம்' என்ற கவிதையில்,

''சென்னைத் தார் ரோட்டிலே
புல்மேயும்
ஜட்கா வண்டி குதிரையது,
தொல்காப்பியம் பேசும்....
திருக்குறள் ஓதும்...
எல்லையற்ற பெருமைப் பேச்சுக்கும்
பல்லிளிக்கும் சிறுமைக்கும்
இடமாகிவிட்ட தமிழ்ப் பிரபாவம்
காண்மினோ! காண்மினோ!''[10]

பழைமை மீட்டலை ஏளனம் புரிகிறார். அதற்கான வரலாற் றுத் தேவையை உணராத போக்கு இக்கவிதையில் இருக்கக் காணலாம். 'தகுதி' என்ற கவிதையில்,

''யாரடா பையன்' என்றால் வந்து நிற்பான்
'உத்தரவு' என்று ஒரு வார்த்தை மட்டுமே அறிந் திருந்தான்

அவன் இன்று மேடையேறி பேசுவது கேட்டேன்
நான்கு விஷயங்களையும் நன்கு அறிந்தவன்
என்று அவனை இன்று புகழ்கிறார்கள்.
இதிலே என் பங்கு எத்தனை?

'எல்லாமே உங்களதுதான்'
என்று நயமாக உரைத்தான்''[11]

இக்கவிதையில் காலம் காலமாக சூத்திரன் என்ற இழிபெயருடன் ஏவலாளாக இருந்தவன் இன்று தனது சுதந்திரத்திற்கான உரிமைக் குரலை எழுப்பத் தொடங்கியதும் அதற்கும் தானே காரணம் என்ற பெருமிதம் வெளிப்படுகிறது. அடிமைப் படுத்திய ஆண்டைகளின் பண்பாட்டில் ஊறிய மனம் எப்படி சுதந்திரத்திற்கான உத்தரவாதத்தை அளித்தது? இதற்குக் கவிதையில் பதில் இல்லை.

கவிதைச் சிக்கல்

''வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாக இருப்பது போலவே என் கவிதையும் சிக்கலும் இடுக்கும் நிரம்பியதாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை''[12] என்று கூறும் க.நா.சு., கவிதை காலம் காலமாக இங்கே செயல்பட்டுவந்த போக்கிற்கு மாறான கோட்பாட்டை முன்வைப்பவராகவே தோன்றுகிறார். அகநானூற்று மரபும் புறநானூற்று மரபும் இங்கே தமிழ்க் கவிதை மரபாக உள்ளன. வாழ்வின், வரலாற்றின் சிக்கலைத் தம்காலத் தத்துவத் தெளிவின் அடிப்படையில் கவிதையின் வழியே புரிய வைத்தலே இங்குக் கவிதையின் பணியாகவும், பாணியாகவும் இருந்து வந்துள்ளது. ஆனால் க.நா.சு.வோ., கவிதையில் சிக்கல் விடுவிக்கக் கூடாததாகவும் இருக்க வேண்டும்.... புரியவில்லைபோல இருக்க வேண்டும். அதே சமயம் பூராவும் புரியாமலும் இருந்துவிடக் கூடாது[13], என்று மேலைய நவீன புதுக்கவிதையாளரின் இருண்மை உத்திகளை மனதில் வைத்துக்கொண்டு புதுக் கவிதைக்கு இலக்கணம் கற்பிக்கிறார்.

கிழக்கும் மேற்கும்

இவர் கற்பிக்கும் இலக்கணத்துக்கு எதிராகச் செயல் பட்டதாக ந. பிச்சமூர்த்தி தமிழ்க் கவிதை மரபிலேயே வசன கவிதை எழுத முற்பட்டபோது மேற்கை நிராகரிக்கிறார். புது... க்குப் பயணம் என்ற கவிதையில்,

''புதுமைக்குப் புறப்படு. போ மேற்கே.
மேற்கே நடந்தேன். நடந்தேன்...
இதுவா மேற்கு?
அதுவும் உரு. குலையும் இருள். சிதறும் சிவப்பு''[14]

என மேற்கை நிராகரிக்கிறார். பழைமை என்ன புதுமை என்ன காலைக் கும்பிடு கைகளை வாழ்த்து என்று உழைப்பின் பெருமையை உற்சாகத்துடன் முழங்குகிறார். இதுவே கீழைக் கவிதையின் சாரம். நம்பிக்கையே கிழக்குத் திசையின் போக்கு. இதில் உடன்பாடு அற்ற க.நா.சு. 'பழைய கவிதையின் நெடிய எல்லை சிறப்பாகவே ந.பி. யின் கவிதைகளில் செயல்படுகிறது. இது கவிதை மரபு எல்லைகளை மீறி வரவில்லை. எனவே ந.பி.யின் கவிதைகளைப் படிப்பவன் 'இது கவிதை அல்ல' என்கிற தீர்மானத்திற்குத்தான் வரவேண்டியதாக இருக்கிறது''[15] என்று கூறுவதினின்று நாம் அறியும் உண்மை என்ன? பயன்படு மரபின் தொடர்ச்சியாகப் புதுக்கவிதையைப் பார்க்கும் பார்வை க.நா.சு.க்கு இல்லை என்றே தோன்றுகிறது. மேலும் பல நூற்றாண்டுகளாக நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய மரபில் கவிதை செழிக்கச் செய்த பாரதியின் கவிதைகளில் வேகம் துடிப்பு இருப்பதைப் பாராட்டும் க.நா.சு. அதற்குக் காரணமான இசை (பாட்டு) மரபை முற்றாக மறுக்கும் விதத்தில், இந்த 'இசை நயத்தால் கவிதை நயம் தீர்த்துக் கட்டப்பட்டது'[16] என்ற முடிவுக்கு வருகிறார்.

உதிரி இலக்கிய மரபு

எனவே, இவ்வாறு தமிழ்மொழி, இனம், அரசியல், பண்பாடு, வரலாறு ஆகிய அனைத்துக்கும் எதிரான ஓர் **உதிரி இலக்கிய மரபை** உருவாக்கித் தமிழ்ப் புதுக்கவிதையைத் தமிழ் மனத்துடன் (Tamil mind) செயல்படாமல் தள்ளி வைத்து வளர்த்தவர் க.நா.சு.வே என்ற முடிவுக்கு வர வேண்டியுள்ளது.

எனவேதான், கவிஞர் சுரதா போன்ற பழம் மரபுக் கவிஞர்கள் புதுக்கவிதையை மறுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இந்தக் காரணம் பற்றியே தமிழகத்தில் இக்

கவிதை வசன கவிதையாகக் காலூன்றியபோது புதுமைப் பித்தன் வன்மையாக மறுத்துள்ளமை கவனிக்கத்தக்கது.[17] புதுக்கவிதை கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலான பிற திராவிட மொழிகளில் தோன்றியபோது எதிர்பாராத எதிர்ப்பு இங்குத் தோன்றியதற்கு மேலே சுட்டிய சமூக வியல் காரணமும் ஒன்றாகலாம். ஏனெனில் பிற திராவிட மொழிகளில் அந்தந்த மண்ணின் வரலாற்றுத் தொடர்ச்சி யாகவே—புதுக்கவிதை தோன்றியது குறிப்பிடத்தக்கது. இன்றும் மலையாளத்தில் புதுக்கவிதை பாட்டாகவே வழங்கப்படுகிறது. மேலும் எதிர்ப்பிலக்கியத்தின் ஊற்றுக் கண்ணாகவே அம்மொழிகளில் புதுக்கவிதை செயற்படு கின்றது என்பதும் கவனிக்கத்தக்கது. எனவேதான் 1970-களில் வானம்பாடிகளின் கவிதை இயக்கம் புதுக்கவிதையை ஜனநாயகப்படுத்தியதும், தமிழ் மரபின் தொடர்ச்சியாக் கியதும் வரலாற்று முக்கியத்துவமுள்ள நிகழ்வாக மாறியது.

குறிப்புகள்

1. சுரதா, பேட்டி, குங்குமம், 16.11.89.
2. அதே இதழ்.
3. பாரதியார், பாரதி நூல்கள் — வசனம் — தமிழ்நாடு அரசாங்கம், 1963, ப. 110.
4. சு. அரங்கராசு, தமிழ்ப்புதுக்கவிதை — ஒரு திறனாய்வு (விடுதலைக்குப்பின்), டாக்டர் பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக் கழகம், 1984, ப. 126.
5. க. நா. சுப்பிரமணியன், புதுக்கவிதைகள், ஞானச்சேரி வெளியீடு, சென்னை, 1989, ப. 1.
6. மேற்படி நூல், ப. 189.
7. மேற்படி நூல், ப. 185.
8. மேற்படி நூல், ப. 182.
9. மேற்படி நூல், ப. 183.
10. மேற்படி நூல், ப. 27.

11. மேற்படி நூல், ப. 113.

12. மேற்படி நூல், ப. 186.

13. மேற்படி நூல், ப. 186.

14. ந. பிச்சமூர்த்தி கவிதைகள், எழுத்து பிரசுரம், சென்னை, 1975, ப. 126.

15. க. நா. சுப்பிரமணியன், புதுக்கவிதைகள், ப. 13.

16. மேற்படி நூல், ப. 181.

17. புதுமைப்பித்தன் செய்யுட்சாயல் தோன்றிய வரிகளை மடக்கி இரண்டு இரண்டு சீர்களாக்கிப் பேச்சுச் சந்தத்தில் எழுதியவர். சமகாலப் பிரச்சனைகளைக் கவிதையில் எழுதியவர். தம் சமகால வசன கவிதை முயற்சிகளை மரபின் தொடர்ச்சியின்மைக்காக எதிர்த்தும், புதிய சோதனை முயற்சி என்ற அளவில் வரவேற்றும் உள்ளார். செய்யுள் நடையும் வசன நடையும் இரண்டறக் கலந்த நடையையே அவர் பின்பற்றினார்.

24. புனைகதை

வீ. அரசு

புனைகதை உருவாக்கங்களுக்குப் பின்கண்ட தன்மைகளை அடிப்படையாகக் கொள்ளலாம்.

1. மக்கள் தொடர்பு முறைமை (Mass-media) அடிப்படையில் உருப்பெற்ற புதிய வடிவக் கூறுகள்.
2. அச்சுக் கருவிக்கும் சமூகத்தில் அதன் தேவைக்கும் ஏற்ப உருப்பெற்ற தன்மைகள்.
3. படைப்பாக்க முறைமை (Creative process), உற்பத்தி முறைமை, நுகர்வுத்தன்மை, சென்றடையும் வாயில்கள் ஆகிய அனைத்திலும் இதுவரை உருப்பெற்று வந்த முறைமையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட புதிய தன்மைகள் உருவாகியுள்ள சூழல் ஆகியவை ஆகும்.

அச்சுத் தொடர்புச் சாதனம் உருப்பெற்ற சூழலில் அதன் உடன் விளைவாக இதழியல் என்னும் துறையும் உருப்பெற்றது. இதழியலில் எழுதுவதற்கு ஒரு புதிய வடிவமாக உரைநடை உருப்பெற்றது. இந்த உரைநடையை அடிப்படையாகக் கொண்ட புனைகதைமொழி ஒன்று உருப்பெற்றது. அந்த மொழியில் எழுதும் வடிவங்கள் புனைகதைகள் என உருப்பெற்றன. எனவே, புனைகதைக்கான மொழி என்பதும் புதிய ஒன்றேயாகும். ஐரோப்பிய மரபில் இயல்பாகவே இம்மொழி உருப்பெற்றது. ஆனால் தமிழ்ச் சூழலில் இம்மொழி உருவாவதில், நமது பண்டைய யாப்பு வழிப்பட்ட இலக்கிய மொழிமரபுச் செல்வாக்குச் செலுத்தியது.[1] உரையாசிரியர்களின் மொழிநடையைத் தொடக்ககால நாவல்களில் காணமுடியும். இவ்வகையில் புதிதான ஒரு தொடர்பு முறைமை (Communication) தொடர்புச் சாதனத்தில் உருப்பெற்ற சூழலில் அதன் இலக்கிய வகையாகப் புனைகதை உருப்பெற்றது. இப்படி உருப்பெற்ற புனைகதையில் இருப

தாம் நூற்றாண்டின் பல்துறை அறிவியல் வளர்ச்சியின் செல்வாக்கு மிகுதியாகும். இதன் அடிப்படையில்தான் துப்பறிதல் (Crimes), அறிவியல் புனைகதை (Science fiction), வரலாற்றுப் புனைகதை போன்ற வடிவங்களும் புனைகதையில் உருப்பெற்று வளர்ந்து வருகின்றன. தமிழில் இவ்வகை வளர்ச்சி செழுமையாக இல்லையெனினும் ஐரோப்பிய மொழிகளில் ஆழமாகவும் விரிவாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது.[2] எனவே மக்கள் தொடர்புச் சாதன வளர்ச்சிக்கும் புனைக்கதை உருவாக்கத்திற்கும் நெருக்கமான உறவு இருப்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

புனைகதை இன்றைய சூழலில்—ஒளிப்பேழையில் (Cassettes) பதிவு செய்யப்பட்டு வருவது ஐரோப்பிய நாடுகளில் பரவலாக்கப்பட்டிருப்பினும்[3] அடிப்படையில் அச்சுக் கருவி உருவாக்கத்திற்கும் புனைகதை உருவாக்கத்திற்கும் தொடர்பு இருப்பதைக் காணமுடியும். தமிழகச் சூழலில் இதழ்களை நடத்துவோர் பெரும் அச்சுக் கருவிகளுக்கும் உரிமையாளர்களாக இருக்கிறார்கள். அச்சுக் கருவிக்கு முழுமையாக வேலை கொடுக்கும் தேவை அவர்கள்முன் உள்ளது.[4] ஆனால் தமிழ்ச் சூழலில் படிப்போர் நிலை, புத்தகங்களை வாங்குவோர் நிலை ஆகியவற்றோடு, புத்தக உருவாக்கத்தை ஒப்பிடும்போது படிப்போர், வாங்குவோர் குறைவாகவே இருப்பதைக் காணமுடிகிறது.[5] இது தமிழ் நாட்டின் படிப்பறிவு, மற்றும் படிக்கும் பழக்கம் என்னும் பண்பாட்டுத் தன்மை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்தப் பின்னணியில் ஆழமாகப் படிக்கும் பண்புநிலை நமது கல்விமுறை மற்றும் படிப்பறிவால் உருப்பெறாத சூழல் உள்ளது. மேலோட்டமாக வாசிக்கும் தன்மைதான். தமிழகத்தின் படிப்பறிவு வறுமையால் நிகழுகிறது. எனவே அச்சுக் கருவியாளர் தனது சரக்கை மிகுதியாக விற்பனையாக்க வேண்டுமெனில், மேற்குறித்த தர அடிப்படையில் உற்பத்தி செய்யவேண்டிய சந்தை நிலை (Market Situation) உள்ளது. அதற்கேற்றபடி வெறும் எழுத்துக்களைச் சகல தரப்பிலும் உற்பத்தி செய்கின்றார்கள். இப்படியான உற்பத்திகளில் ஒன்றாகத் தமிழில் 'புனைகதை' என்று வாச

கர்கள் வாசிக்கும் பொருள் ஒன்று உற்பத்தி செய்யப்படுகின்றது. எனவே அச்சுக் கருவிக்கும் தமிழ்ப் புனைகதை உருவாக்கத்திற்கும் இவ்வகையில் தொடர்பு இருப்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

தமிழ்ச் சூழலில் உருப்பெறும் புனைகதை படைப்பாக்க முறைமைகளைப் பின்கண்ட வகையில் பாகுபாடு செய்து பார்க்கலாம்.

1. மேற்குறித்தவாறு அச்சுக்கருவியின் தேவையை நிறைவேற்றல்.
2. உண்மையான எழுத்தாக உருப்பெறும் படைப்புகள் (பெரும்பகுதி சிறு பத்திரிகைகள் அல்லது சொந்த வெளியீடுகள் அல்லது சிரத்தையான பதிப்பகங்கள் வழி வெளிவருவன).
3. படைப்புக்களைச் செய்ய வேண்டும் என்னும் தேவை அடிப்படையில் உருப்பெறும் புனைகதைகள்.[6]

இவ்வகையான முறைமைகளில் புனைகதை அமைந்திருக்கும் அடிப்படைகளை இனம் காணும் தன்மை மிகவும் அவசியமாகும். மேலும், அண்மைக்காலமாக இந்தியா போன்ற நாடுகளில் நுகர்வுப் பண்பாடு (Consumerism) என்பது வேகமாக வளர்ந்து வருகிறது. 'எதையெடுத்தாலும் ஒரே விலை' என்ற பிளாஸ்டிக்கூடை விளம்பரமும், நடைபாதையில் 'ரூபாய்க்கு மூன்று பழங்கள்' என்று கூவுவதும் இவ்வகைப் பண்பாட்டில் உருப்பெற்றவைதான். எனவே இத்தன்மையையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

இன்றைய சூழலில் ஒரு பொருளை உற்பத்தி செய்வதைவிட அதைச் சென்றடையச் செய்யும் வாயில்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. உற்பத்தி செய்யப்படும் புனைகதைகள், பதிப்பகங்கள், புத்தகக் கடைகள், நூலகங்கள் வழி சென்றடைகின்றன. இதில் சிறுபதிப்பாளர் (மோசமான நூல்களை உற்பத்தி செய்தாலும் கூட), சிரத்தையுடன் வெளியிடும் சிறுபதிப்பாளர் ஆகியோருக்கு மக்களைச்

சென்றடையும் விநியோக முறைமையில் வெற்றியடையும் ஏதுக்கள் மிகக் குறைவாகவே இருப்பதைக் காணமுடிகிறது.[7] படிப்பவர்களைப் புனைகதை சென்றடைவதில் உள்ள இந்தச் சிக்கலும் தமிழ்ப் புனைகதை பற்றி அறிய வேண்டிய செய்திகளில் ஒன்றாகும்.

எனவே புனைகதை பற்றி மேற்கொள்ளும் ஆய்வுமுறைமை மேற்கண்ட அடிப்படைகளிலிருந்து உருவாக வேண்டும். படைப்பாக்கம் என்பது காலம் காலமாக அந்தந்தச் சூழலுக்கு ஏற்ப உருப்பெற்றுவரும். மரபுத் தொடர்ச்சி இருந்தாலும் அவை வெளிப்படுத்தும் வடிவ முறையும் உற்பத்தி முறையும் காலத்திற்குக் காலம் மாறுபட்டவை. எனவே இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் பற்றிய ஆய்வு என்பதும் அதற்கு முற்பட்ட இலக்கியங்கள் பற்றிய ஆய்வு என்பதும் அடிப் படையில் வேறுபட்டவை. இன்றைய சமூகப் பொருளா தாரத் தன்மைகள் பற்றிய ஆய்வுக் கண்ணோட்டமின்றி இன்றைய இலக்கியங்களை ஆய்வு செய்ய இயலாது.[8] இன் றைய சமூகம் பற்றிய ஆய்வு பன்முகப்பட்டதும் ஆழமான தும் ஆகும். கடந்தகால சமூகம் பற்றிய ஆய்வுக்குப் பல் வேறு கருதுகோள்கள் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் இருபதாம் நூற்றாண்டிற்கு முற் பட்ட இலக்கியங்களை மதிப்பீடு செய்ய இயலும். ஆனால் இருபதாம் நூற்றாண்டு இலக்கியங்கள் பற்றிய ஆய்வு மேற் குறித்த அடிப்படைகள் இன்றி நிகழ்த்தப்படுவதை; குறிப் பாகப் பல்கலைக் கழகங்களில் நிகழ்த்தப்படுவதைக் காண முடிகிறது. இந்தப் பின்னணியில் புனைகதை பற்றிய ஆய்வு களில் பின்கண்ட தன்மைகள் இடம்பெறுவதைக் காணலாம்.

1. புனைகதையில் ஆய்வு எளிதானது என்ற பாமர அணுகுமுறை (Lay-man approach).
2. நவீனத் தன்மைகளின் உருவாக்கம் பற்றிய அறிவு மற்றும் அக்கறையற்ற தன்மை.
3. இன்றைய அச்சு வடிவத்தின் தொழில் தன்மை மற் றும் அதனால் உருவாக்கப்படும் வணிக எழுத்துக் கள் என்ற அணுகுமுறையின்றி ஒட்டுமொத்தமாக

அனைத்தையும் ஒரே கண்ணோட்டத்தில் அணுகும் முறைமை.

4. இருபதாம் நூற்றாண்டு நிகழ்வுகளின் அரசியல் மற்றும் சமூக விளைவுகளில் ஈடுபாடு அற்ற தன்மை.

5. ஐரோப்பிய புனைகதைகள் பற்றிய ஆய்வு முறைகளை அப்படியே தமிழ்ச் சூழலுக்கும் பயன்படுத்தும் போக்கு.

தமிழியல் தொடர்பான ஆய்வுகளில் இருநிலைகள் இருப்பதைக் காணமுடிகிறது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள், இக்கால இலக்கியங்களோடு ஒப்பீட்டு அளவில் ஆய்வு செய்வது கடினம் என்ற மனநிலை; மற்றும் இக்கால இலக்கியங்களைப் பழம் இலக்கியங்களோடு ஒப்பிடும்போது தர அளவில் சிறப்பற்றவை என்ற மனப் பதிவு. இவ்வித அணுகுமுறைகள் சில ஆண்டுகளுக்குமுன் ஆழமாக இடம்பெற்றிருந்தன.[9] அண்மைக்காலங்களில் குறைந்திருப்பதைக் காணலாம். இவ்வகை அணுகுமுறையின் விளைவுகளில் ஒன்றாகவே புனைகதை ஆய்வு எளிதானது என்ற மனநிலை ஆய்வில் ஈடுபடத் தொடங்கும் மாணவர்களிடம் மிகுதியாக இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வித மனநிலைக்குப் பின்கண்டவற்றை நாம் காரணமாகக் காணலாம்.

புனைகதைகள் அமைந்திருக்கும் மொழி எளிதாகப் புரிந்து கொள்ளும் தன்மையுடன் இருத்தல்.

புனைகதைகளில் பேசப்படும் செய்திகளை நடைமுறை வாழ்க்கையில் நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றிருக்கும் சூழல்.

பண்டைய இலக்கியங்களுக்கு விளக்கவுரை, தொகுப்புரை எழுதும் அடிப்படையில் உருப்பெற்ற பயிற்சியால் புனை கதைகளுக்கும் அவ்விதம் எளிதாக எழுதிவிட இயலும் என்ற மனநிலை.

இத்தன்மைகள் ஒட்டுமொத்த ஆய்வுப்போக்கில் உருப் பெற்றுள்ள மலினப் போக்கோடு இணைத்துப் பார்க்க

இயலும் என்ற போதிலும் தமிழ்க் கல்விவழி பெறும் பயிற்சிகள் மேற்குறித்த மனநிலைகளை உருவாக்குவதையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. இத்தன்மையால், தமிழில் புனைகதை ஆராய்ச்சியில் பின்கண்ட தன்மைகள் இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

1. குறிப்பிட்ட ஒரு நாவலை ஆய்வு செய்தல் என்ற அடிப்படையில், அந்நாவல் உருப்பெற்ற சூழல், அந்நாவலின் உள்ளடக்கம் ஆகியவை பற்றிய மதிப்பீடு இன்றி நாவலின் அமைப்பை மட்டும் ஆய்வு செய்யும் தன்மையைக் காணமுடிகிறது.
2. நாவல்கள் பற்றிய கதைச்சுருக்கம் மற்றும் நிகழ்ச்சிகளின் தொகுப்பு ஆகியவை ஆய்வாகச் செய்யப்படும் தன்மையைக் காணமுடிகிறது.
3. இருபதாம் நூற்றாண்டின் நிகழ்விற்கான பன்முகத் தன்மை பற்றிய அக்கறையின்றி 'நாவலை விட்டு வெளியே' போகாமல் ஆய்வு செய்யும் போக்குகளையும் காணலாம்.

மேற்குறித்த தன்மை, பிற இலக்கிய வகைகளை விட புனைகதைகள் பற்றிய ஆய்வில் எண்ணிக்கை அளவில் மிகுதியாகவே நிகழ்கிறது எனலாம்.

தமிழில் புனைகதை பற்றிய ஆய்வு நூல்கள் என்ற பெயரில் சுமார் நூற்றிருபது நூல்கள் வெளிவந்துள்ளன எனலாம். ஒருசிலர் எழுதியுள்ள நூல்களைத்[10] தவிர, பிற அனைத்தும் புனைகதை வடிவத்தின் அடிப்படைப் பண்புகளைக் கொண்டிருப்பதாகக் கூறமுடியாது. சங்க இலக்கியப் பாடலுக்கு எழுதும் விளக்கவுரையும் சிறுகதைக்கு எழுதும் விளக்கமும் அடிப்படையில் ஒரே தன்மை பெற்றிருப்பதைக் காணலாம். கீழ்க்காணும் மேற்கோள் புனைகதை ஆராய்ச்சி பற்றிய அறிய உதவும்.[11]

''இலக்கியக்கலை என்னும் நூலை எழுதியுள்ள அ.ச. ஞான சம்பந்தன், Novel என்பதனைப் 'புதினம்' எனக் கொண்டு, அதுபற்றிய அத்தியாயத்தில், Plot என்பதைச் 'சூழ்ச்சி அல்லது சதி' என மொழிபெயர்த்து, அச் 'சூழ்ச்சி அல்லது சதி'

எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் கூறிச் செல்கிறார்''. 'சூழ்ச்சி' என்னும் பதத்தை விளக்க முனையும் பொழுது, 'கதைப்போக்கு', 'கதையின் கட்டுக்கோப்பு' என வரும் சில சொற்றொடர்களைக் கையாண்ட பின்னரும் தொடர்ந்து சூழ்ச்சி என்ற பதத்தையே கையாள்கின்றார். சூழ்ச்சி என்ற பதம் எவ்வாறு அவ்வாங்கிலப் பதத்துக் கியைந்த தமிழ்ச் சொல்லாக அமைந்துள்ளது என்பதை நிறுவாது விட்டுவிடுகிறார். புனைகதைத் துறையில் பயிலப் படும் Plot என்னும் சொல்லைச் சூழ்ச்சி அல்லது சதி என அவர் மொழிபெயர்த்துள்ளமை இத்துறையில் அவரது ஞானமின்மையையே காட்டுகிறது.

பேராசிரியர் மு. வரதராசன் அவர்கள் 'இலக்கிய மரபு' என்ற நூலில், 'நாவல்' என்ற அத்தியாயத்தில் Plot என் பதனைக் 'கரு'வென மொழிபெயர்த்துள்ளார். 'கரு' என்ற பெயர்ச்சொல் பதினாறு கருத்துப்பட நிற்கும் எனத் 'தமிழ் லெக்சிகன்' மூலம் அறிகின்றோம். புனைகதைத் துறையுடன் இணையத்தக்கதாகவுள்ள கருத்து "Substance-Contents-உட் பொருள்'' என்ற கருத்தே. பேராசிரியர் அவர்கள் தொடர்ந்து தம் நூலில், ''கருவும் நிகழ்ச்சியும் பலவகையாக அமைவது உண்டு'' என்று சொல்வதனாலும், ''நிகழ்ச்சிகள் பலவாக அமையினும், ஒன்று மற்றொன்றுக்குக் காரணமாகத் தொடர் புற்று நிற்க, கதையின் கரு அவற்றால் விளக்கமுறுவதும் உண்டு'' என்று சொல்வதனாலும், கருவும் நிகழ்ச்சியமைப் பும் வெவ்வேறான விடயங்கள் எனக்கொள்ள முனைகிறார் என்று தெரிகின்றது. Plot என்பது பற்றி மேனாட்டாராய்ச் சியாளர் விளக்கத்தைப் பார்க்கும்பொழுது இக்கருத்துத் தவறானது என்பது புலனாகிறது. பேராசிரியர் நாவலாசி ரியராகவும் இருப்பதனால் இக்கருத்து மயக்கம் மன்னிக்க முடியாத ஒன்றாகவேயுள்ளது''.

மேற்குறித்த இருநூல்களும் இளங்கலை மற்றும் முது கலையில் தமிழ் பயிலும் மாணவர்களுக்குப் பாடநூல்களாக இடம்பெற்றுள்ளன. இவ்வகை நூற்பயிற்சியால் புனைகதை பற்றிய ஆய்வு, அடிப்படையின்றித் தமிழ்ச் சூழலில் நிகழ் வதைக் காணமுடிகிறது. மேற்குறித்த மேற்கோளில் பேரா

சிரியர் மு.வ.வின் விளக்கம் பழம் மரபு நூல்களுக்கான விளக்க நடையில் இருப்பதையும் நாம் காணமுடிகிறது. இங்கு நவீன ஆக்கங்கள் பற்றிய கண்ணோட்டமின்மை என்பதை மிகவும் அடிப்படையான தன்மையாகக் கொள்ள முடிகிறது.[12] நவீனத் தன்மைகளை உருவாக்க வேண்டும் என்ற ஈடுபாடு இருந்த/இருக்கும் அளவிற்கு அவற்றின் அடிப்படைகள் பற்றிய பயிற்சி இன்மையை அறியமுடி கிறது. புனைகதை ஆராய்ச்சியின் ஆழமான சிக்கலாக இதனை நாம் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் நம்முன் உள்ளது.

புனைகதை உருவாக்கத்தில் அச்சுத் தொழிலின் பங்கு பற்றி முன்பகுதியில் கண்டோம். ஆய்வாளர்கள் மத்தியில் வணிக எழுத்து, இலக்கியம் என்னும் பாகுபாட்டுத் தன்மை அற்று இருப்பதின் விளைவால் புனைகதை ஆராய்ச்சியில் நிகழும் சீர்கேடுகளைப் பின்கண்ட வகையில் காணலாம்.

மிக விரிவாக வளர்ச்சியடைந்துள்ள தொடர்புச் சாத னங்களில் (அச்சு மற்றும் காட்சிச் சாதனங்கள்) பரவலாக அறியப்படும் பெயர்களைப் படைப்பாளியாகக் கருதும் மனநிலை இருப்பதைக் காணலாம்.[13] வெகுசன விருப்பு அடிப்படையில் உருவாகும் மிகப் பரவலாக அறியப் படும் வணிக எழுத்துக்களை மட்டுமே அறிந்த தமிழ்ச் சூழல் நிலவுகிறது. இங்குக் காத்திரமான (Serious) இலக்கியத்தை யும் வணிகத்தையும் ஒரே நிலையில் கருதும் சூழல் அல்லது காத்திரமான இலக்கியம் பற்றிய அறியாத நிலை ஆகிய வற்றைக் காணலாம். இவ்வகையில் பல்கலைக் கழகங்களில் புனைகதை ஆய்வுக்கு வரும் மாணவர் வணிகப்பாங்கில் உள்ள 'எழுத்துக்காரரை' எழுத்தாளராகக் கருதி ஆய்வு செய்ய விரும்புகிறார். அதனை நெறிப்படுத்தும் நெறி யாளர், அந்த எழுத்து வணிகம்; ஏன் அது வணிகமாக உருப்பெற்றுது? காத்திரமான எழுத்திற்கும் வணிக எழுத் துக்கும் என்ன தொடர்பு என்று நெறிப்படுத்துவதற்கு மாறாக, அவரே வணிக எழுத்தை, இலக்கியமாகக் கருதும் மயக்கம் இருக்கிறது.

தமிழ்ச் சூழலில் 1970-களில் உருவான சா. கந்தசாமி, வண்ணநிலவன், வண்ணதாசன், நாஞ்சில்நாடன், பூமணி, சுயம்புலிங்கம், சூரியதீபன், ஜெயந்தன், பிரபஞ்சன் (பின்னர் கூறிய இருவரும் வணிக இதழ்களில் அணிமைக்காலங்களில் எழுதுவதால் ஓரளவு அறிந்திருக்க வாய்ப்புண்டு) போன்ற புனைகதைப் படைப்பாளிகளை ஆய்வுலகம் மிகப் பரவலாக அறியாதிருப்பதைக் காணலாம். எண்பதுகளில் உருப்பெற்றுவரும் பாவண்ணன், கோணங்கி, தமிழ்ச்செல்வன் போன்ற படைப்பாளிகள் தமிழ் மாணவர்கட்கு மிகக் குறைவாகவே அறிமுகமாயிருப்பர்.

காத்திரமான இலக்கிய உருவாக்கத்தில் அச்சுச் சாதனம், அவை நூலாக வடிவம் பெற வெறுமனே தொழில்நுட்பமாக மட்டுமே செயல்படுகிறது. ஆனால் அச்சுச் சாதனம் பெரும் தொழிலாக மாற்றம் பெற்று, அதன் மூலம் ஒரு சரக்கை உற்பத்தி செய்யும் முறைமையால் ஒருவகையான 'எழுத்துக்கள்' உருவாகியுள்ளன.[14] இவ்விதம் உருவாக்கப்படும் 'எழுத்துக்கள்' அதனை நுகர்வோர் மற்றும் பண்பாட்டுச் சூழல் அடிப்படையில், ஆண்டுக்காண்டு புதிய உருவில் வளருகிறது. அழகுசாதனப் பொருட்கள் ஆண்டுக்காண்டு புதிய வியாபார உத்திகளோடு உருப்பெறுவதைப் போல் இவ்வகை எழுத்துக்களும் புதிய புதிய உருவில் சந்தைக்கு வருகின்றன. புதிய அச்சு வளர்ச்சி, விளம்பரம் மற்றும் பிற தொடர்புச் சாதன வளர்ச்சிக்கும் இதற்கும் தொடர்புண்டு. இதனை உணராமல் தமிழ்ச் சூழலில் அவ்வகை எழுத்துக்காரர்களை அங்கீகாரம் செய்து உயர்ந்த விருதுகள் வழங்குவதும், அவர் குறித்த பல்வேறு எம்.ஃபில். பிஎச்.டி. ஆய்வேடுகள் வெளிவந்திருப்பதும், மற்றும் அதனைச் செய்திருப்பவர்கள் உயர்நிலைக் கல்வி நிலையங்களில் தலைமை வகிப்பதும் தமிழ்ப் புனைகதை ஆராய்ச்சிக்கு நேர்ந்த சீர்கேடுகளைக் காட்டும் சான்றுகளாகும்.[15]

மேற்குறித்த தன்மையைப் பின்கண்ட எடுத்துக்காட்டின் மூலம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நேரடியாக மேற்கொண்ட கள ஆய்வு ஒன்றையும், பல்கலைக்கழக ஆய்வு நூல்[16] ஒன்றின் தன்மையையும் முன்வைக்க விரும்புகிறேன்.

நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர். வயது இரு பத்திரண்டு. பத்தாம் வகுப்புப் படித்துவிட்டு, தொழில் நுட்பக் கல்வி பயின்றவர். நகலச்சுக் கருவியைப் (Xerox) பழுதுபார்க்கும் தொழில் செய்து வருகிறார். மாத ஊதியம் ரூபாய் ஆயிரத்து ஐநூறு. திருமணம் இன்னும் நடைபெற வில்லை. கடந்த ஆறு மாதங்களில் அவர் படித்த 'எழுத்துக் கள்' எதிர்பாராவிதமாகக் கிடைத்தன. அவை வாசித்த வுடன் உடனுக்குடன் எடைக்குப் போடாமல் பாதுகாக்கப் பட்டதற்குக் காரணம் உண்டு. சுமார் ரூபாய் நூற்றிருபது செலவழித்து வாங்கிய சரக்கை எடைக்குப் போடுவதில் கிடைப்பதைவிட, பழைய புத்தகக் கடைகளில் சேர்த்துக் கொடுத்தால், உருப்படி ஒன்றுக்கு முப்பது பைசா வீதம் கிடைக்கும். பால் அடைக்கப்பட்டு வரும் பிளாஸ்டிக் உறை களைச் சேர்த்து விற்பதைப் போன்ற செயலே இது. முப்பது பைசாவிற்கு வாங்கியதை ரூபாய்க்கு ஒன்றாகப் பழைய புத்தக வியாபாரி விற்பனை செய்கிறார்.

ஆறு மாதத்தில் அந்த இளைஞர் வாசித்த புத்தகங்கள் வருமாறு: ராஜேஸ்குமார் — 15; பட்டுக்கோட்டை பிரபா கர் — 12; அனுராதாரமணன் — 6, சுபா — 5, சாருப்பிரபா—4, இந்துமதி, பி. வி. ஆர், உமாசந்திரன், விமலா ரமணி, ஹம்சாதனகோபால், லீலாகிருஷ்ணன் போன்றோர் தலா இரண்டு; மொத்தம் பதினெட்டு. உஷாசுப்பிரமணியன், சிவசங்கரி, கீதாபென்னட், சுஜாதா, தாமரைச் செந்தூர் பாண்டி ஆகியோர், தலா ஒன்று; மொத்தம் எட்டு. ஆக மொத்தம் அறுபத்தி எட்டு உருப்படிகளை அவர் வாசித் திருக்கிறார்.

நாள்தோறும் தனது வசிப்பிடத்திலிருந்து காலை, மாலை எண்பது நிமிடங்கள் இரயில் மற்றும் பேருந்துகளில் பய ணம் செய்பவர் இவ்விளைஞர். இவற்றை வாசிக்க இவ் விளைஞர் பயன்படுத்தும் நேரம் பயண நேரங்களே. விடு முறை நாட்களில் தொலைக்காட்சிப் பார்ப்பதால் இதற்கு நேரம் கிடைப்பதில்லை. இவர் வாசித்தபின் இவற்றைச் சேகரிக்கும் பொறுப்பு, இவருடைய அன்னையைச் சேர்ந் தது. அவரும் அவரது கணவரும் ஐம்பது வயதைக் கடந்த

வர்கள். அவர்களும் இவற்றை வாசிப்பதுண்டு. ராணிமுத்து (தினத்தந்தி நிறுவன வெளியீடு), மாலைமதி (குமுதம் நிறுவன வெளியீடு) ஆகியவற்றை இப்பெரியவர்கள் விரும்பிப் படிப்பர்.

தலபுராணங்களை இலக்கியம் என்பது போலவே, இவர்களது கண்ணோட்டத்தில் இவைகளே இலக்கியம் மற்றும் புத்தகங்கள்[17] ஆகும். இந்தச் சரக்குகளை நுகர்வோரில் மேற்குறித்த இளைஞர் ஒரு மாதிரி மட்டுமே. எழுதப்படிக்கத் தெரிந்து (5-11 வகுப்புகள் படித்தவர்கள்) வேலையற்று இருப்போர், அரைகுறை வேலை செய்வோர் (Under employed), நாட்கூலிக்குப் பணிபுரிவோர், சலிப்புத் தரும் ஒரே வேலையை வாழ்க்கை முழுதும் செய்யும் அலுவலகப் பணியாளர்கள் (இவர்களில் பெண்களின் எண்ணிக்கை அதிகம்) ஆகியோர் இவ்வகை எழுத்துக்களை வாசிக்கின்றனர்.

இந்த எழுத்துக்களை மதிப்பீடு செய்யும்போது மேற்குறித்த தகவல்களை அடிப்படையாகக் கொள்ளுதல் அவசியம். இவற்றின் மூலம் இன்றைய சமூக உற்பத்தி முறைமை, தொடர்புச் சாதனத்தின் உற்பத்தி முறைமை, பல்வேறு காரணங்களால் நெருக்கடிக்கு உள்ளாகும் பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு, அதனையே இவ்வெழுத்து உருவாக்கத்தின் அடிப்படையாகக் கொள்ளுதல் அவசியம். மேலும் இவ்வெழுத்துக்களை வாசிக்கும் நுகர்வாளரின் சமூகப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டும் இவ்வகை எழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் பல்கலைக் கழகம் நிகழ்த்திய மேற்குறித்த எழுத்துக்காரர்கள் பற்றிய ஆய்வு இவ்வகையில் அமைந்திருக்கின்றதா? என்ற வினாவை முன்வைக்கும்போது இல்லை என்றே பதில் கிடைக்கிறது. புனைகதை பற்றிய பல்கலைக் கழக ஆய்வு அமைந்திருக்கும் இத்தன்மை மூலம் புனைகதை ஆய்வுச் சிக்கலைப் புரிந்துகொள்ள முடியும்.

அனுராதாரமணன், இந்துமதி, உஷாசுப்பிரமணியன், வாஸந்தி மற்றும் கோமகள், லட்சுமி ஆகியோர் எழுத்துக்களோடு இராஜம்கிருஷ்ணன், ஜோதிர்லதாகிரிஜா ஆகியோர் படைப்புகளும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இதில்

முதல் ஐவரை ஒரு தளத்திலும் அடுத்து இருவரைக் கொஞ்சம் வேறுபடுத்தியும், இறுதி இருவரை வேறு தளத்திலும் மதிப் பீடு செய்ய வழியுண்டு. இதில் முதல் ஐவர் பற்றிய மதிப் பீட்டை இங்கு மாதிரியாகக் (Sample) கொண்டு, அவர் களது மதிப்பீட்டை, மதிப்பீடு செய்யலாம். பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், பத்திரிகை யாளர்கள் ஆகியோர் மேற்குறித்த மதிப்பீட்டைச் செய் துள்ளனர்.

இவ்வகை எழுத்துக்கள் பற்றி, அவ்வகையான எழுத்துக் காரர்களில் ஒருவரே பின்வருமாறு கூறுகிறார்.[19] "அவர் எடுத்திருக்கும் (மதிப்பீட்டுக் கட்டுரையாளர்) ஒன்பது நாவல் களில் முதல் நான்கே நாவல்கள். மீதியெல்லாம் மாத நாவல்கள் எனப்படும் நெடுங்கதைகள். ஆரம்ப காலத்தில் நான் எழுதியவை. நானே பகிஷ்காரம் செய்யக்கூடியவை. அவற்றைக் கட்டுரை வாசிக்க ஆய்வாளர் களமாக நிர்ண யித்துக் கொண்டது என்னுடைய துரதிர்ஷ்டம்".

இவை பண்பாட்டுத் தளத்தில் உருவான சிக்கலில் உருப் பெற்ற நுகர்வுப் பொருட்கள் என்று கருதாது 'படைப் பிலக்கியங்கள்' என்று கருதி மதிப்பீடு செய்யப்பட்டிருப் பதைக் காண்கிறோம். இதன்மூலம் பல்கலைக் கழக ஆய்வு களில் உருப்பெற்றிருக்கும் புனைகதை ஆய்வுகள் குறித்துப் புரிந்துகொள்ள இயலுகிறது.

பக்தி இலக்கியத்தில் ஈடுபாடு அற்றவர்கள் அவ்வகை இலக்கியத்தை ஆய்வு செய்யக்கூடாது என்று ஒரு காலத்தில் கூறப்படுவதுண்டு. ஈடுபாட்டிற்கும் ஆய்விற்குமான வேறு பாடு பற்றிய குழப்பத்தின் வெளிப்பாடாக மேற்குறித்த கருத்தை நாம் புரிந்துகொள்ள முடியும். ஏனெனில் பக்தி இலக்கியம் உருப்பெற்ற சமூகம் பற்றிய ஆழமான அறி வுடைய எவரும் அதனை ஆய்வு செய்யலாம். இந்தப் பின் னணியில் இன்றைய புனைகதை பற்றிய ஆய்வாளருக்குரிய அடிப்படைத் தகுதி என்பது சமூகம் பற்றிய ஆழமான புரிதல் என்பதாகும்.[20] தெளிவாகப் புரிந்து கொண்டவர் அதற்கான செயல்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்

வது இயல்பான ஒன்று. ஆனால் புனைகதை ஆய்வாளர்கள் இன்றைய சமூகம் பற்றிய புரிதல் இன்றியும் அதனால் அவர்களுக்கு ஏற்பட இயலாத ஈடுபாட்டின் அடிப்படையிலும் ஆய்வில் ஈடுபடுகின்றனர். இத்தன்மையால் புனைகதை என்பதைப் பழைய இலக்கியம் உருப்பெற்றதற்கான கண்ணோட்டத்தில் இவற்றையும் அணுகும் தன்மை உருப்பெறுகிறது. எனவே, இன்றைய சமூகப் பொருளாதார நடவடிக்கையின் அரசியல் கூறுகளை விளங்காதவர் புனைகதை ஆய்வில் ஈடுபடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் மேற்குறித்தவற்றின் விளைவே புனைகதை. இந்த அடிப்படையின்றி எப்படிச் செயல்பட முடியும். இதனை விளங்கிக் கொள்ளப் பின்கண்ட எடுத்துக்காட்டை முன்வைக்கலாம்.

தமிழகத்தில் திரைப்படம் என்பது பண்பாட்டுச் சூழலைத் தீர்மானிக்கும் சக்திகளில் ஆழமான ஒன்றாக இருப்பதைக் காணலாம். திரு. எம்.ஜி.இராமச்சந்திரனின் படிமம் என்பது மக்களிடத்தில் காத்தவராயன், அய்யனார் போன்ற நாட்டார் நிலை வீரராக (Folk-Hero) இருப்பதைக் காணலாம். இவ்வகை அடிப்படையின்றித் தமிழ்த் திரைப்படத்தை அணுகுவது தவறாகவே முடியும். அதன் விளைபொருளான அரசியல் போக்குகளை இன்றைய தமிழகத்தில் அனைத்து மக்கள் தொடர்புச் சாதன ஆய்விலும் கவனத்தில் கொள்வது அவசியம்.[21] இத்தன்மை புனைகதை ஆய்விற்கும் பொருந்தும்.

மேற்குறித்த தன்மைகள் அடிப்படையில் நாம் ஒரு கருத்தை முன்வைக்கலாம். புனைகதை ஆராய்ச்சியாளன் தவிர்க்க இயலாத வகையில் இன்றைய சமூகவியல் ஆராய்ச்சியாளன். சமூகம் பற்றிய அறிவு அற்ற நிலையில் அவன் ஆய்வு செய்ய இயலாது. அதற்கான முன்னரே உருவாக்கப் பட்ட சான்றாதாரங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. எனினும் சமூகம் பற்றிய ஈடுபாட்டுத் தன்மையை (அரசியல் பிரக்ஞை) அடிப்படையான தகுதியாகக் கருதவேண்டும்.

தமிழியல் ஆய்வின் அனைத்துத் துறைகளிலும் ஐரோப்பிய வழி உருப்பெற்ற ஆய்வு முறைமைகள் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது. தொடக்கச் சூழலில் இவை தவிர்க்க

இயலாதவை எனினும் இன்றைய சூழலில் தவிர்க்க வேண்டி யவை.

பல்கலைக் கழக ஆய்வுப் பட்டப் புனைகதை ஆய்வு களில் இத்தன்மை ஆழமாக இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது. அவ்விதம் பட்டம் பெற்றவர்கள் எழுதியுள்ள புனைகதை பற்றிய நூல்களிலும் இத்தன்மை இடம்பெற் றிருப்பதைக் காணலாம். தமிழகச் சூழலில் பல்கலைக் கழக ஆய்வுப்பட்டம் பெறாதவர்கள்[22] செய்துள்ள புனைகதை ஆய்வுகளில் இத்தன்மை குறைவாக இருப்பதையும் சில வேளைகளில் முற்றிலும் இல்லாமல் இருப்பதையும் காண லாம். நமது சமூகம் பற்றிய புரிந்துகொள்ளும் பயிற்சி அற்ற எந்திரப் பாங்கான ஐரோப்பிய கல்விப் பயிற்சியின் விளை வாக, இதனைக் காணலாம். இந்நிலை புனைகதை ஆராய்ச் சியில்தான் மிக அதிகமாக நிகழ்ந்துள்ளது. குறிப்பாகப் பல்கலைக் கழக ஆய்வுகளில்தான் மிகவும் அதிகம். இந் நிலையை மாற்றுவதற்கு அடிப்படையான கல்விப் பயிற்சி யில் (Academic Training) ஏற்படுத்தும் மாற்றங்களே ஒரே தீர்வு.

புனைகதை ஆராய்ச்சி பற்றிய சிக்கல் மையங்களாக (Problematics) பின்கண்டவைகளைத் தொகுத்துரைக்கலாம்.

1. தொடர்பு முறைமையில் ஏற்பட்டுள்ள மாற்றங் களால் மக்கள் தொடர்புச் சாதனங்களில் உருப் பெற்றுள்ள தன்மைகளை அடிப்படையாகக் கொள்ளாமை.
2. நுகர்ச்சி முறைமை (Consumerism) வழி உருப் பெற்றுள்ள பண்பாட்டுத் தன்மைகளைக் கவனத் தில் கொள்ளாமை.
3. பரவலாகியுள்ள தவறான கல்விமுறை, பொய் யான சனநாயகப் போக்கு இவற்றின் அடிப்படை யில் உருப்பெறும் தீய விளைவுகளான சன விருப்பு வாதம் அடிப்படையில் உருப்பெறும் எழுத்துக் களை இலக்கியமாகக் கருதும் நிலை.

4. சமூகப் பொருளாதாரக் கட்டமைவுகள் (Social Economical formation) அதன் விளைவாக உருப் பெறும் சமூக உருவாக்கம் ஆகியவற்றிற்கும் புனை கதைக்கும் உள்ள உறவு பற்றிய அடிப்படையைக் கவனத்தில் கொள்ளாமை.

5. ஐரோப்பிய முறையிலான கல்விப் பயிற்சியின் எந் திரப் பாங்குத்தன்மை ஆகியவைகளாகும்.

புனைகதை உருவாக்கம் மற்றும் ஆய்வுகளில் வங்காளம், மலையாளம், கன்னடம் மற்றும் இந்தி போன்ற மொழி களோடு ஒப்பிடும்போது தமிழ் ஐம்பது ஆண்டுகள் பின் தங்கிய சூழல் உள்ளது. இந்த நிலைமை மேற்குறித்த நமது அணுகுமுறைகளின் விளைவால் ஏற்பட்டதாகும். அதனை மாற்றும் கடமை நம்முன் உள்ளது.

இந்தியா போன்ற நாடுகளில் ஆராய்ச்சி என்பது 'பணிந்து போதல்', 'தன்னிலை இழத்தல்', 'வெகுசன நுகர்வுக்குப் பலியாதல்' போன்ற தன்மைகளைப் பெற்றிருக்கிறது. புனைகதை ஆய்விலும் இத்தன்மைகள் ஆழமாக இடம் பெற் றுள்ளன. இந்நிலையிலிருந்து மாறுவதற்கு, இந்நிலைகள் இருப்பது பற்றிய உணர்வு (Consciousness) முதன் முதலில் தேவையானதாகும்.

குறிப்புகள்

1. பார்க்க. எம்.ஏ: நுஃமான், திறனாய்வுக் கட்டுரைகள், ப. 132. 1985.

2. See. John Dixon. (Ed) Fiction in Libraries. The Library Association, London. 1986.

3. தமிழில் சிவசங்கரியின் சிறுகதைகள் 1988-89-களில் ஒலிப்பேழையில் பதிவு செய்யப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது. அண்மையில் 1990 பிப்ரவரி வைர முத்துவின் திரைப்படப் பாடல் அல்லாத பிற கவிதை கள் ஒலிப்பேழையில் பதிவு செய்யப்பட்டு விற் பனைக்கு வந்துள்ளது.

4. சங்கிலித்தொடர் பத்திரிகை நிறுவனங்களாக தினத் தந்தி (பல இதழ்கள்) இந்தியன் எக்ஸ்பிரஸ் (தமிழில் மூன்று, பிற தென்னிந்திய மொழிகளில் பல) குங்குமம் (5 இதழ்கள்) தாய் (3 இதழ்கள்) கல்கி (5 இதழ்கள்) போன்றவை செயல்படுகின்றன. இக்கம்பெனிகளிடம் மிகப்பெரும் அச்சு எந்திரங்கள் உள்ளன.

5. தமிழகத்திலும் கேரளத்திலும் படிப்பறிவுடையோர் எண்ணிக்கை ஏறக்குறைய சமம். ஆனால் அங்குத் தரமான நூல்கள் விற்பனைச் சதவீதத்தில் பத்தில் ஒரு பங்கு கூட தமிழகத்தில் இல்லை.

6. அரசு நூலக விற்பனைக்காக உருவாக்கப்படுபவை; பாட நூல்களாக உருவாக்கப்படுபவை; பாட நூல் களாக வைக்க எழுதப்படுபவை ஆகியவற்றை இவ் வகையில் அடக்கலாம்.

7. பதிப்பகங்கள் தமிழ்ச் சூழலில் வட்டிக்கடைத் தொழில் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் தன்மை நடைமுறையில் உள்ளது. சுமார் 900 முகவர்கள் தமிழகம் முழுவதும் பத்திரிகைகளை வாங்கி விற் பனை செய்வர். பெரிய நிறுவனங்களின் பத்திரிகை களை மட்டுமே வாங்கி முறையாக விற்பனை செய்து நிலுவையின்றித் தொகை அனுப்புவர். சிறு பத்திரி கைகளை வாங்கி விற்பனை செய்தாலும் பணம் அனுப்புவதும் ஏஜென்சி எடுப்பதும் குறைவு. தமிழ் நாட்டின் படிப்பு முறைகளை நடைமுறைப் படுத்து வதில் இவர்களின் செல்வாக்கைக் குறைத்து மதிப் பிடக் கூடாது.

8. இத்தன்மை பற்றி விளங்கிக்கொள்ள கீழ்க்கண்ட நூல்களைப் பார்க்க:

அ) பண்பாட்டு உருவாக்கத்தில் பத்திரிகைகளின் பங்கு, சரவணபாலு பதிப்பகம்: விழுப்புரம். 1989.

ஆ) இலக்கியமும் கருத்து நிலையும் (கா. சிவத்தம்பி) தமிழ்ப் புத்தகாலயம். சென்னை. 1982.

இ) நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் (க. கைலாசபதி) மக்கள் வெளியீடு. சென்னை 1980.

ஈ) படைப்பாளி, வாழ்க்கை, இலக்கியம் (அ. மார்க்ஸ்) இராதா பதிப்பகம். புதுவை 1986.

9. புனைகதை ஆய்வுகள்; கேரளப் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ள தொடங்கியபோது, அதனை ஏளனமாகப் பேசியதைப் பேராசிரியர் தா.வே. வீராசாமி அடிக்கடி குறிப்பிடுவார். புனைகதைகளில் ஆய்வு செய்த தமிழ்ப் பேராசிரியர் ஒருவர், தன்னைத் தமிழ் ஆய்வாளராக மதிப்பதில்லை என்ற உணர்வால், சங்க இலக்கியம் பற்றிய கட்டுரைகளை, எழுதியதாகக் கூறுவர். 'சங்க இலக்கியமே இலக்கியம் பிற, இலக்கியங்களே அன்று' என்று தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் அடிக்கடி கூறுவதாகச் சொல்வர்; போன்ற செய்திகளை இங்கு நினைவுபடுத்திப் பார்க்க ஏதுண்டு.

10. பேராசிரியர்கள் கா. சிவத்தம்பி, க. கைலாசபதி மற்றும் அ. மார்க்ஸ் ஆகியோர் எழுதிய புனைகதை பற்றிய ஆய்வுகளே அடிப்படைகளோடு செய்யப் பட்டனவாகக் கருதுகிறேன். பிறவற்றை அவ்வகையில் காண இயலவில்லை.

11. கா. சிவத்தம்பி, நாவலும் வாழ்க்கையும், என்.சி.பி.எச். சென்னை. 1988 (இரண்டாம் பதிப்பு) பக். 67-68.

12. மு.வ. வின் புதினங்களையும் இவ்வகைக் கண்ணோட்டத்தில் அணுக வேண்டிய தேவையுள்ளது. ஆனால் மு.வ.வின் புனைகதைகள் பற்றிய ஆய்வுகளில் இத்தன்மை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

13. இவ்வகை மனநிலைக்குத் தமிழ்த்திரைப் படங்களின் பங்களிப்பு ஆழமானது. தமிழில் வணிக எழுத்துக்கள் உருவாக்கத்திற்கும் திரைப் படத்திற்கும் நெருக்கமான உறவு உண்டு. இதனை விரிவாக எழுத இயலும்.

14. ஆவணங்கள் எழுதுவோரை எழுத்துக்காரர், படி எடுப்போர் என்று கூறுவர். அவ்வகையில் இவ் வெழுத்துக்களையும் கருதலாம்.

15. இவ்வகைத் தன்மை தமிழகச் சூழலில் நிலவும் அள விற்குப் பிற இந்திய மொழிகளில் மிகவும் குறைவு. வணிக எழுத்தாளரை, படைப்பாளியாக அங்கீகரிக் கும் தமிழ்நாட்டின் தனித்தன்மைக்குத் தமிழ் நாட்டுத் திரைப்படத் துறையின் செல்வாக்கும் ஓரளவு காரண மாகும். மேலும் இவ்வகை, வணிக எழுத்தாளர்கள் சாதி மற்றும் போலி அரசியல் அமைப்புகளின் அடிப் படையில் ஏற்படும் சார்புகளால் நிகழுகிறது.

16. அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் 'பெண்கள் படைப்புக்களில் பெண்கள்' என்ற நூல். பல்கலைக் கழக வெளியீடு.

17. தமிழ்ச்சூழலில் 'புத்தகங்கள்' மற்றும் 'பத்திரிகைகள்' என்று வேறுபடுத்திக் காணும் தன்மை இல்லை. உயர் படிப்புப் படித்தவர்கள் கூட குமுதத்தைப் புத்தகம் என்றே கருதுவதை, 1987-88-இல் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறை மாணவர் கள் நடத்திய 'எழுத்தறிவும் அச்சுத் தொடர்புச் சாதன மும்' என்ற கள ஆய்வு வழி அறிய முடிந்தது.

18. அசோகன் என்ற புதுமுக வகுப்பு படித்த இளைஞர் க்ரைம் நாவல்கள், பாக்கெட் நாவல்கள், செக்ஸ் லைப், ஜாப், கெய்டு லைன் போன்ற பத்திரிகை களை நடத்தி வருகிறார். அவரது கம்பெனியின் பின் புலம் பற்றிய செய்திகள், தமிழ் அச்சுச் சூழலின் தன்மையை அறிந்துகொள்ள உதவும்.

பார்க்க: வீ. அரசு. செம்மலர்: (பொங்கல் மலர் 1989) பாக்கெட் நாவல்களின் தோற்றமும் வளர்ச் சியும்.

19. பெண்கள் படைப்பில் பெண்கள். ப. 44.

20. தமிழ்க் கல்விச் சூழலில் 'சமூகம் பற்றிப் புரிதல்' என்பது கொச்சையாக, அரசியல் என்று புரிந்து கொள்ளப்படுகின்றது. ஆய்வாளர் ஒரு கருத்து நிலை (Ideology) சார்ந்து செயல்படுவதையும் கொச்சை யாகப் பார்க்கும் பாமர அணுகுமுறை நடைமுறையில் உள்ளது. நேரு பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் இத்தன்மைகள் வேரற்று இருப்பதைக் காணலாம்.

21. இது தொடர்பாக அறிந்து கொள்வதற்கு அண்மைக் காலத்தில் உருப்பெற்று வரும் Subaltern Studies என்ற துறை தொடர்பான நூல்களைப் படிப்பது அவசியம்.

22. தொ.மு.கி. ரகுநாதன்; சி.சு. செல்லப்பா, க.நா.சு. போன்றவர்கள்.

25. மருதத்திணை

வெ. தெ. மாணிக்கம்

மொழிவழி வாழ்க்கை விளக்கமே இலக்கியம். மனித வாழ்வில் பிறப்பு முதலே எண்ணற்ற துன்பங்கள் ஏற்படக் காண்கிறோம். கவலையற்ற மனிதர் எவரேனும் உண்டா? கவலையின் அடிப்படைக் காரணம் வாழ்க்கைச் சிக்கல் தானே! சிக்கல் நிறைந்த மனித வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெறும் இலக்கியத்துள் சிக்கலில்லாது போகுமா? இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மன்பதைச் சிக்கல்களை வகைப்படுத்தி, தொகைப்படுத்தி, குறிப்பிட்ட நெறிமுறையில் நின்று வழிவகை காண்பதே இலக்கிய ஆராய்ச்சியாகும். எனவே, சிக்கல் நிறைந்ததே ஆராய்ச்சி; சிக்கலை விடுவிப்பதே ஆராய்ச்சியின் நோக்கம். இச்சிக்கல் சிக்கலென்று கூறமுடியாத அளவுக்கு வலியதாகவும் இருக் கலாம்.

பட்டத்தை உயரப் பறக்கவிடும் ஆசையால் கையிலுள்ள நூற்கண்டை வேகமாக விட்டு, சிக்கலற்ற நூலில் தானே சிக்கலை உண்டாக்கி, முடிச்சவிழ்க்கத் தெரியாது (நூற் சிக்கலை எடுக்கவியலாது) நூலையும் விட்டு, பட்டத்தையும் விட்டுப் பேந்த விழிக்கின்ற அறியாச் சிறுவரைப் போலப் பெயரளவில் சிக்கலுடைய ஆய்வுகளைக் கூட அணுகு முறைப் பிழையால் மிக்க சிக்கலாக்குவோரும், ஒரிரு சிக்க லுடைய ஆய்வுகளை எடுத்துக்கொண்டு, அவற்றைத் தீர்க்க வியலாது திண்டாடி, ஆய்வையே இடையில் நிறுத்திப் பட்டம் விட்டோரும் பலர் உளர். ஆனால் உண்மையில் இலக்கியச் சிக்கல்கள் அனைத்துமே வாழ்வுச் செம்மைக்கு வழிகாட்டுவன—முறையாக அணுகி நிறைவான தீர்ப்பு கண்டால்.

ஆய்வால் கண்டுபிடிக்க முடியாத பொருள் உலகில் எதுவுமே இல்லை என்பார் டிரென்ஸ் (Trence) என்ற

மேனாட்டறிஞர். தொல்காப்பியர் குறிப்பிடும் காட்டலாகாப் பொருளைக்கூட உணர்வால் உணர்ந்தும், அறிவால் அணுகி அறிந்தும் 'ஆய்ந்து பயன்கொள்ள முடியும் என்னும் இதே கருத்தைப் பண்டைத் தமிழரும் தெரிந்து வைத்திருந்தனர். அதனாலன்றோ 'அறிவாலறிந்து உன் இருதாள் இறைஞ்சும் அடியார்' என்று அடியார்கள் இறைவனையே அறிவால் அறிந்த திறத்தை அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார்.[1] ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று இறைவனை ஆராயலாம் என்ற பொருளில், 'மிக்குச் சோதிக்க வேண்டா', 'சுடர் விட்டுளன் எங்கள் சோதி' என்பார் திருஞானசம்பந்தர்[2]. இச்சோதனையால் நான் யார்? என் உள்ளம் எது? என்ற உண்மை பெறப்படும். இதுவே மெய்யியல் ஆய்வின் பயன். இவ்வாறே கடலுப்பும் கதிரவனொளியும் போல எவ்வகை ஆய்வும் மனித சமுதாயத்திற்குப் பயன் தருவது ஆகும். காலங்காலமாக, மனித குலத்தில் ஏற்பட்ட மாசுகளைப் போக்கி, மனத்தழுக்கை நீக்கி வையத்து வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவதே ஆய்வின் நோக்கம்.

சங்க இலக்கியம், இடைக்கால இலக்கியம், பிற்கால இலக்கியம், தற்கால இலக்கியம் என்பன காலக் கண்ணோட்டத்தில் ஏற்பட்ட தமிழிலக்கியப் பாகுபாடுகளாகும். இயற்கையோடு இரண்டறக் கலந்து வாழ்ந்த மனித வாழ்வைக் காட்டுவது சங்க இலக்கியம்; வாழ்வுச் செம்மைக்குத் தேவையான குறிக்கோள்களை முன்வைத்து எழுதப்பட்டவை இடைக்கால இலக்கியம் (நீதி இலக்கியம், காப்பியம், பக்தி இலக்கியம்); மன்னர்களையும் மேட்டுக் குடியினரையும் மகிழ்விப்பதே நோக்கமாகக் கொண்டு, சிற்றின்பச் சுவை கெழும எழுதப்பெற்றவையே பிற்கால இலக்கியம் (சிற்றிலக்கியம்); அன்றாட வாழ்வு நடப்புகளை உள்ளது உள்ளவாறே படம்பிடித்துக் காட்டும் நோக்கத்தால் எழுதப் பெறுவன தற்கால இலக்கியம். இந்நால்வகைப் பாகுபாட்டுள், முன்னதும் முதலதுமாகிய சங்க இலக்கியத்தில்தான் திணை நோக்கில், பாடுபொருள் அமைந்துள்ளது. குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என ஐந்திணையாய்ப் பகுத்து, அதற்கேற்பப் பாடல்களைத் தொகுத்துத் தொகைப்

படுத்திய போக்கினது சங்க இலக்கியம் ஆகும். இத்திணைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்ட முன்னோடி பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் ஆவார்.

பொதுவாகத் திணையாய்வில் ஏற்படும் சிக்கல்களைச் சுருங்கக் காண்போம்.

1. திணை என்ற சொற்பொருள் குறித்தே சிக்கல் உள்ளது.

2. திணை ஒன்றா? ஐந்தா? ஏழா? பன்னிரண்டா? என்பதில் கருத்து வேறுபாடுகள் உள. இவற்றுள் அகத்திணை ஐந்தா? ஏழா? என்னும் சிக்கல் தலையாயது.

3. திணையடிப்படையில் தமிழிலக்கியத்துள் அமைந்துள்ள அகம், புறம் என்ற பாகுபாடு திட்ப நுட்பம் சார்ந்தது. இதனைத் தெளிவுற உணராது அகத்திணை சார்ந்த கைக்கிளை, பெருந்திணை ஆகியவற்றை அகத்தையும் புறத்தையும் கலந்து குழப்பியிருக்கிற சிக்கல் குறிப்பிடத்தக்கது.

4. ஐந்திணைப் பெயரீட்டுக்கான காரணங்கள் குறித்தும் அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துகள் உள. திணைப் பாடல்கள் யாவும் முதல், கரு, உரிப்பொருள் பற்றிய தொடர்புடையன. திணைப் பெயரீடு குறித்துக் கருத்து வேறுபாடு நிலவுவதால் சில முடிவுகளை எடுப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. சான்றாக, திணைப் பெயரீடு கருப்பொருள் அடிப்படையில் அமைந்தது எனில், ஒரு நிலத்தின்கண் எத்தனையோ கருப்பொருள்கள் இருக்க ஒன்றை மட்டும் தேர்ந்தெடுத்துப் பெயரிட்டமைக்கான காரணம் வினாவிற்குரியதாகிறது.

இவ்வாறு, பல சிக்கல்கள் நிறைந்த, களமாகத் திணையாய்வு விளங்குகின்றது.

மருதத் திணையாய்வு

திணைப் பெயரீடு :

முன்னர்ப் பொதுப்படச் சுட்டியாங்கு மருதம் என்னும் பெயர் முதல், கரு, உரி என்ற மூன்றனுள் எப்பெயர் பற்றி அமைந்தது என்பதில் சிக்கல் ஏற்படுகிறது. மருதம் என்பது ஒருவகை மரத்தின் பெயர். வளைந்து நெளிந்து வளமாகச் செல்லும் ஆற்றங்கரையோரங்களில் கண்ணைக் கவரும் செந்நிறப் பூக்களோடு பூத்துக் குலுங்கி நிற்கும் மரமே மருதமாகும். இக்கருப்பொருள் பற்றியே 'மருதம்' என்ற திணைப் பெயர் ஏற்பட்டது என்பர் ஒரு சாரார். மருதம் என்ற சொற்கு, 'சதுப்பு நிலம்' என்பது பொருளாதலின் வயல் சார்ந்த பகுதி 'மருதம்' எனப்பட்டது என்பர் பிறி தொரு சாரார். ஊடுதலாகிய உரிப்பொருளையும் மருத மென வழங்குதல் மரபாதலின், அது குறித்தே 'மருதமென'ப் பெயர் பெற்றதென்பர் மற்றொரு சாரார். இவ்வாறு கருப் பொருள் பற்றியா, முதற்பொருள் பற்றியா, உரிப்பொருள் பற்றியா மருதப் பெயரீடு நிகழ்ந்தது என்ற சிக்கல் முதற்கண் எழுகிறது. அறிஞர்களின் பல்வேறு கருத்துகளை அலசி ஆராய்கின்றபோது, மருதம் என்ற சொல் முதற்கண் கருப் பொருளாகிய மரத்தைக் குறித்துப் பின் அம்மரம் மிகுதி யாகக் காணப்பெறும் நிலத்துக்குப் பெயராகி, அதன்பின் அந்நிலவொழுக்கமாகிய ஊடலையும் குறிக்கலாயிற்று என்ற முடிவு பெறப்படுகிறது.

மேற்கண்ட முடிபு சரியெனில், வயல்வெளியில் எத் தனையோ கருப்பொருள் இருக்க, மருத மரத்தை மட்டும் தேர்ந்து பெயரிட்டமைக்கான காரணம் என்ன எனும் சிக் கல் அடுத்து எழுகிறது. இதற்குப் 'பெரும்பான்மையாகக் காணப்பெறும் மரம் மருதம்' என்று கருத்துரைப்பர் சிலர்; அதன் கண்கவர் அமைப்பே காரணம் என்பர் பிறர். இவ் விருவகைக் கருத்துமே ஒராற்றான் பொருத்தமுடையனவே. எனினும் ஆழ்ந்து காணின், இன்னொரு பொருத்தமும் ஏற்புடைத்தாகிறது. மருத உரிப்பொருள் ஊடல். ஊடல் நிமித்தம் தலைவனின் பரத்தையிற் பிரிவு. காமம் மிக்க

வனுக்குக் காலப்போக்கில் இதயம் பலவீனமாகும். சங்க காலத் தமிழர் இயற்கையை நன்கு துய்த்து வாழ்வுக்கும் பயன் கண்டவராதலின், இதயத்திற்கு வலுவூட்டவல்ல மருத மரத்தைத் தேர்ந்து பெயரிட்டனர். மேலும், பெண் தொடர் பால் ஏற்படும் வெள்ளை, வெட்டை முதலிய நோய்களைத் தீர்க்கும் ஆற்றலும் மருத மரத்திற்குள்ளது என்பது இவண் கருதத் தக்கது[3]. இதன் மூலம் மருதத்திணைப் பெயரீடு பற்றிய சிக்கலுக்கான தெளிவு பெறப்படும்.

உரிபொருட் பொருத்தம்

ஊடல் என்னும் உரிப்பொருள் மருதத்துக்கு உரியது என்பர். அதன் காரணமாக மருதம் எனப்பட்டதெனில் ஊடலொழுக்கம் மருத நிலத்தில் மட்டுந்தான் நிகழும் என்று சொல்லலாமா? கொடைக்கானலிலோ, தூத்துக்குடியிலோ, தேக்கடியிலோ, இராமநாதபுரத்திலோ வாழும் தலைவி யர்க்கு ஊடத்தெரியாது என்று கொள்ளலாமா? இச்சிக் கலைத் தீர்க்க உரையாசிரியர் தரும் காரணம், பெரும் பான்மையான ஒழுக்கம் என்பதே. நுணுகிக் காண்போ மாயின், வயல்வெளி வேளாண்மைத் தொழிலை அடிப் படையாகக் கொண்டது. உழுதல், விதைத்தல், நாற்று நடுதல், களை பறித்தல், கதிரறுத்தல், நெல்லறுத்தல் முத லாய விவசாயப் பணிகள் அனைத்திலும் ஆணும் பெண்ணு மாகக் கலந்தே செயலாற்றும் பான்மையது. இத்தகு சூழலில் உழுதுண்ணும் தலைவனோ உழுவித்துண்ணும் தலைவனோ மெல்லியலாருடன் பேசவும் பழகவும் வாய்ப்பு மிகுதியாகும். அதனால் ஒழுக்கம் தவறுவதற்கும் இடமேற்படும். இந்நிலை யில், தவறா ஒழுக்கத்தவனாயினும், தன் கணவன் பிற மகளிரொடு சிரித்துப் பேசுவதை எந்தத் தலைவியும் விரும் பாள். அதனால் ஊடல் நிகழ்வது இயல்பே. தொழிற்சூழ லால் மனைவிக்கு ஊடல் நிகழ்வது ஒரு புறமிருக்க, வள மான வாழ்வும் தலைவனுடைய புறத்தொழுக்குக்குக் காரண மாகலாம்.

நிலவளமும் நீர்வளமும் மிக்க மருதநிலத்தில் வித்திய ஒன்று நூறாக விளைதலின் ஏற்படும் செல்வச் செழிப்பு

ஒருபுறம்; வேளாண்மைக்குப் பிறகு ஆண்டின் அப்பகுதியில் ஏற்படும் மூன்று மாத ஓய்வு ஒருபுறம். எனவே, கஞ்சிக் கவலையில்லாத நிலத்தில் காலப்போக்கில் கலை வளரத் தொடங்கியது. பல்வகைக் கலை வல்லுநர்கள் அங்கே குடியேறினர். ஆடல், பாடல், அழகு இம்மூன்றும் அமையப் பெற்ற ஆரணங்குகளும் மருதநில நாகரிகத்தில் ஆதிக்கம் செலுத்தலாயினர். இவ்வாறெல்லாம் பெரும்பான்மையான ஆடவர்கள் புறத்தொழுக்கம் உடையவர்களாக வாழ்வதற்கு மருதநில இயல்பும் சூழலும் வழிவகுத்தன. இதன் காரணமாக, மெய்யாகவோ பொய்யாகவோ தலைவியர்க்குத் தலைவனுடைய ஒழுக்க நிலை பற்றி ஐயுறவு ஏற்பட வாய்ப்புண்டாதலின், உரிப்பொருளாகிய ஊடலை இந்நிலத்திற்கு ஒதுக்கினர் என்று சிக்கல் தீர்த்தலே முறையானதாகும்.

ஏனைய பிரிவுகட்கும் மருதப் பிரிவுக்கும் இடைப்பட்ட வேறுபாடு

அன்பின் ஐந்திணையுள் குறிஞ்சி மட்டுமே கூடலைக் குறிப்பது, ஏனைய யாவும் பிரிவு பற்றிப் பேசுவன. ஆழ்ந்து நோக்கின், குறிஞ்சிக்குரிய 'கூடல், கூடல்நிமித்தம்' என்னும் இரண்டு ஒழுக்க நிலையுள்ளும்கூட கூடல் நிமித்தம் என்பது பிரிவின் பாற்பட்டதாகும். இவ்வாறு பிரிவு பற்றிப் பேசும் பாக்களே பழந்தமிழிலக்கியத்தில் மிகுதியாக உள்ளன.

பிரிவு அன்பை வளர்க்கவும், ஆர்வத்தை மிகுக்கவும், இன்பத்தைப் பெருக்கவும் அடிப்படைக் காரணமாக அமைவது. இப்பிரிவு அறுவகைப்படும். ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற் பிரிவு என்னும் இவ்வாறனுள் முதலைந்தும் பாலைக்குரியன. ஆறாவது பிரிவு மட்டுமே மருதத்திற்குரியது. எனவே, பிரிவு பற்றி எழுந்த ஒரு பாடல் பாலையா, மருதமா என்று துணிவதில் ஐயம் உள்ளது. முதலன ஒழுக்கநிலை பிறழாப் பிரிவின; புகழ் சேர்ப்பன; பொதுநல நோக்கின. மருதப் பிரிவோ புறத்தொழுக்கினது; பழி கூட்டுவது; தன்னல நோக்கினது. பாலைப் பிரிவு

அன்பின் முதிர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது. தலைவி அல்லது தோழியின் இசைவு பெற்றே அப்பிரிவுகள் நிகழும். மருதப் பிரிவோ சொல்லிப் பிரியும் பிரிவன்று; சொல் லாமற் பிரியினும் ஊர் பேசும் தகைமையது. கரவொழுக்கம் கண்ணிய இப்பிரிவைத் தலைவியும் தோழியும் கடுமையாக வெறுப்பர். பாலைப் பிரிவில் பிரிந்து மீளும் தலைவனைத் தலைவி மட்டுமன்றி, ஊரே விரும்பி வரவேற்க வேணவா கொள்வர். மருதத் தலைவன் மீண்டு வரும்பொழுது ஏறு போல் பீடு நடையுமின்றி, குனிந்த தலையனாய் மறைந்து வரும் இயல்பினன். அப்படி வந்தவனை அவனுக்கு உரிமை யுள்ள வீட்டிற்குள் நுழைவதற்கே உரிமையில்லை என்று கூறி வாயில் மறுக்கும் பான்மையது இம்மருதப் பிரிவு. எனவே, இத்தகைய வேறுபாடுகளை நுணுகி அறிந்தாலன்றி மருதத்திணைப் பாக்கள்கூடச் சிலவேளை, பாலைத்திணைப் பாக்கள் போல மயக்கத்தைத் தரக்கூடும்.

''ஓரூர் வாழினும் சேரி வாரார்
சேரி வரினும் ஆர முயங்கார்
ஏதிலாளர் சுடலை போலக்
காணா கழிபமன்னே—நாண்அட்டு
நல்லறிவு இழந்த காமம்
வில்லுமிழ் கணையின் சென்றுசேண் படவே''[4]

இக்குறுந்தொகைப் பாடல், இதன்கண் இடம்பெற்றுள்ள உரிப்பொருளால் பாலைத்திணை என்பது தெளிவு. முதல் நான்கு அடிகளில் வினைமேற்கொண்ட தலைவன் ஓரூரி லேயே இருப்பினும் அடிக்கடி வீட்டுக்கு வாராமலும், வீட் டிற்கு வரினும், கருமமே கண்ணெனக் கொண்டவனாய், தலைவியை ஆரத் தழுவாமலும், வினை முடியுமட்டும் தன் உரிமை மனைவியைக் கண்டும் ஏதிலாளன் போலக் காணாது செல்லுவதும் ஆகிய அனைத்து உணர்வு நிலைகளும் பாலைத் திணைக்கே உரியவை. ஈற்றடி இரண்டில் கூறப் பெற்றுள்ள சில சொற்களைக் கொண்டே இப்பாடல் பாலைத் திணைக்குரியதன்று; மருதத்துக்கே உரியது என முடிவுகட்ட வேண்டியவர்களாகிறோம். 'நாண் அட்டு நல் லறிவு இழந்த காமம்' காரணமாக ஓரூரிலேயே இருந்தாலும்

நெடுந்தொலைவு சென்றவனாகவே தலைவனைத் தலைவி கருதுகிறாள். அவனது காமத்தின் இழிவு அதற்குக் கொடுக்கப் பட்ட அடைகளால் உணர்த்தப்பெற்ற நிலையிலேயே இது மருதமாகிறது.

பாடல் எண்ணிக்கை வரையறை

மருதத் திணையாய்வைத் திட்பநுட்பம் வாய்ந்ததாகச் செய்வதற்குப் பாடல்களின் எண்ணிக்கை சரியாகக் கணக் கிடப் பெறுதல் வேண்டும். அப்படிச் சரியாகக் கணக்கிடு வதற்கு இயலாதபடி, பல சங்கப் பாடல்கள் உள்ளன. குறிப்பாகக் குறுந்தொகையை முதலில் பதிப்பித்த காலை, திணைப்பாகுபாடு செய்து முதற்கண் பதிப்பு வெளிவர வில்லை. பின்னர் பதிப்பித்தவர்களே ஒவ்வொரு பாடலுக் கும் திணைப்பெயர் கொடுத்துப் பதிப்பித்துள்ளனர். இவ் வுண்மை பேராசிரியை டாக்டர் தி. லீலாவதி அவர்களுடைய 'குறுந்தொகை ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள்' என்ற கட்டுரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.[5] எனவே, துறைக்குறிப்பைக் கொண்டுதான் சில பாடல்களை மருத மென வேண்டியுள்ளது. வேறுசில பாடல்களில், அவற்றில் இடம்பெற்றுள்ள ஓரிரு கருப்பொருள்களைக் கொண்டே மருதமெனத் துணிகின்றனர்.

> ''முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங் காலை முறைசிறந் தனவே
> பாடலுட் பயின்றவை நாடுங் காலை''[6]

என்ற நூற்பாவில் இடம்பெற்றுள்ள 'முறை சிறந்தனவே' என்ற தொடருக்கு உரையாசிரியர்கள் தத்தம் உரைமூலம் சிக்கலை ஏற்படுத்துகின்றனர். முதற்பொருளை வைத்தே திணை பிரிக்க வேண்டும் என்றும்; கருப்பொருளை வைத் துத் திணை பிரிப்பதே சிறந்தது என்றும்; உரிப்பொருளை வைத்துத் திணை பிரிப்பதே முன்னைய இரண்டினும் சிறந் தது என்றும் மூவகைக் கருத்துகளைத் தந்துள்ளனர்.

உணர்வால் ஊடலுக்கு இடந்தரும் பாடலே ஐயமற மருதமாகும். அதை விடுத்து முதற்பொருளும் கருப்பொருளும்

பெயரளவில் சுட்டப்பெற்று வரும் பாடல்களை மருதம் என்று ஏற்பதில் சிக்கல் உள்ளது. தொல்காப்பியம் கூறும் திணை மயக்க நூற்பா இதனை மேலும் சிக்கலாக்குகிறது.[7] இதன் காரணமாக, மருதத்துக் களவு, மருதத்துக் கற்பு, முதற்பொருளால் மருதம், கருப்பொருளால் மருதம், உரிப் பொருளால் மருதம் என்றெல்லாம் உரையாளர்கள் தத்தம் மனம் போனவாறு உரையெழுதியுள்ளனர். இதனால் மருதத் திணை ஒன்றா, மேலே கூறியவாறு மருதத்திணைக்குள் ஐந்து உட்பிரிவுகள் உளவா என்றெல்லாம் பலவகை எண் ணச் சிக்கல்கள் ஏற்படுவதற்கு இடமுண்டாகிறது. இதனால் பாடலெண்ணிக்கையை வரையறுக்க முடியாதபோது, சில முடிவுகளை அறுதியிட்டுக் கூறுவதில் இடர்ப்பாடு ஏற்படு கின்றது.

எடுத்துக்காட்டாக,

''குக்கூ என்றது கோழி; அதனெதிர்
துட்கென் றன்றுஎன்தூஉ நெஞ்சம்
தோள்தோய் காதலர்ப் பிரிக்கும்
வாஅள்போல் வைகறை வந்தன்றால் எனவே''[8]

என்ற அள்ளூர் நன்முல்லையாரின் குறுந்தொகைப் பாட லில் அதிகாலை நேரத்தில் வாலாமை எய்திய தலைமகளின் நெஞ்சம் துணுக்குற்ற நிலை தெளிவாகச் சுட்டப்பட்டுள் ளது. தன் நிலை காரணமாக முந்நாள் தலைவனைப் பிரிந் திருக்க நேருமே எனக் கவலும் அவள் நெஞ்சம் சொல் லோவியமாகத் தீட்டப்பட்டுள்ளது. தம் வாழ்வு விடியுமா என்று ஏங்குவோர் பலரிருக்க, விடிந்த பொழுதுக்குக் கவலைப்படும் தலைவியை ஈண்டுக் காண்கிறோம்.

இப்பாடலில் இடம்பெற்றுள்ள வைகறைப் பொழுதைக் கருதின், அம்முதற் பொருளால் இப்பாடல் மருதமாகும். கோழி என்ற கருப்பொருளைக் கருதின் முல்லையாகும். 'துணுக்குற்ற நெஞ்சம், காதலர்ப் பிரிக்கும், எனும் வரி களை நோக்கின் பாலையாகும். 'தோள்தோய் காதலர்' என் னுந் தொடர் குறிஞ்சிக்குரிய கூடலின் முன்னிகழ்வு ஆகும். இந்நிலையில் இப்பாடலை மருதம் என்ற திணைக்குரிய

தாக்கி, குறிப்பாக மருதவழி வந்தது என்று உரையாசிரியர்கள் எழுதியிருப்பது வியப்புக்குரியது. இவ்வாறே நெய்தலுக்குரிய காமம் மிக்க கழிபடர்க் கிளவியால், தலைவியொருத்தி, துயிலெழுப்பிய சேவலைப் பிள்ளைப் பூனைக்கு இரையாகி ஒழிந்து போகுமாறு திட்டும் உணர்வமைந்த பாடலொன்றை, அதில் காலைநேரம் குறிப்பாக இடம்பெற்றுள்ளதைக் கொண்டு மருதம் என்று தலைப்பிட்டிருப்பது வியப்பினும் வியப்பே?[9]

முதலில் காட்டிய பாடலிலாவது வைகறை என்னும் சொல் இடம்பெற்றுள்ளது. இப்பாடலிலோ அச்சொல்லும் இடம்பெறவில்லை. 'துயிலெழுப்பிய சேவல்' என்ற குறிப்பைக் கொண்டே மருதத்துக்குரிய சிறுபொழுதாகிய வைகறை உணரப்படுகிறது. இக்குறிப்புப் பொருளுக்கு முதன்மை தந்துள்ளமையை விரிப்பின் வியப்புக்கு எல்லை இல்லை. வியப்பு இருக்கட்டும். இச்சிக்கலுக்கு எல்லையுண்டா?

ஆதிமந்தி பாடியதாக அமைந்துள்ள 'மள்ளர் குழீஇய விழவினானும்' எனத் தொடங்கும் குறுந்தொகையின் 31-வது பாடலும் இவண் ஒப்புநோக்கத்தக்கது.

ஊடலின் மூவகை நிலை

கணவன் மனைவியரிடையே ஏற்படும் காதற்கலாத்தைப் பொதுவாக 'ஊடல்' என்ற சொல்லாற் குறித்தல் இலக்கிய மரபாகும். ஊடலைக் குறிக்க, ஊடல், புலவி, துனி என்ற மூன்று சொற்கள் தமிழில் உள. மூன்றும் ஒருபொருட் பன்மொழியா, நுண்பொருள் வேறுபாடுடைய தனித்தனிச் சொற்களா என்பதில் சிக்கல் உள்ளது. உரையாசிரியர் சிலர் புலவி என்ற சொல்லுக்கு ஊடல் என்றும், ஊடல் என்ற சொல் வருகின்ற இடத்தில் புலவி என்றும் பொருளெழுதக் காண்கிறோம். நுணுகி நோக்கின், முச்சொற்களும் ஊடலின் ஆரம்பநிலை, வளர்ந்த நிலை, முதிர்ந்த நிலை என்னும் மூன்று நிலைகளைக் குறிப்பனவாக உள்ளன. இவ்வாறு முச்சொற்களுக்கிடையே பொருள் வேறுபாடு உண்டு எனச் சிக்கல் தீர்த்தாலும், இம்மூன்றனுள் எது முன்னது எது நடுவணது எது மூன்றாவது என்ற முறைவைப்பில்

அடுத்த சிக்கல் எழுகிறது. பெருமைக்குரிய இக்காலப் பேரா சிரியர்களும் உரையாசிரியர்களும் இதில் கருத்து வேறுபடு கின்றனர். துனியை முன்வைத்து ஒரு சாராரும் ஊடல், புலவி, துனி என்று முறைவைத்துப் பிறிதொரு சாராரும் எழுதியுள்ளனர்.[10]

துனி என்பது வெறுப்பின் மிகுதியைக் காட்டும் சொல் லாதலின், அஃது ஊடலின் ஆரம்ப நிலையாக இருக்க முடியாது. 'நும்மொடு ஊடினள் சிறுதுனி செய்து' என வரும் அகநானூற்று அடி ஊடலின் முதிர்ச்சியே துனி எனச் சுட்டுகிறது.[11] புலவி, ஊடல், துனி என்னும் முறைவைப்பே சரியானது என்பதைத் தொல்காப்பியந்தொட்டுப் பிற்கால நிகண்டுகள் வரைப் பலகாலம் ஆழ்ந்து நோக்கி வேறு பாடுணர்ந்த பிறகே சிக்கல் தீர்க்கும் அளவுக்குத் தெளிவு ஏற்பட்டது.

'புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய' என்ற தொல் காப்பியத் தொடரைக் கொண்டும்[12], 'புலப்பென் யான்', 'ஊடுவென்', 'துனிப்பென் யான்' என மருதக்கலிப் பாட லொன்றின் முத்தரவுள் முறையே அமைந்த சொல்லமைப் பைக் கொண்டும்[13], புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை எனவரும் திருக்குறள் அதிகார வைப்புமுறை நோக்கியும், முதலது புலவி எனவும், அதன் வளர்ச்சி ஊடலெனவும், அதன் முதிர்ச்சியே துனி எனவும் ஓராற்றால் வரையறை செய்தேன். எனினும் அறுதியிட்டுக் கூறுவதற்கு வள்ளுவமே வழிகாட்டியது.

> ''செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
> இல்லாளின் ஊடி விடும்''[14]

என்ற திருக்குறளில் 'புலந்து', 'ஊடிவிடும்' என ஒரே வரி யில் அடுத்தடுத்து இடம்பெற்றுள்ள தொடர், பொருட் சிறப்பும் கருத்தாழமும் உடையதாகும். பொற்குடத்துக்குப் பொட்டிட்டதுபோலப் பொருட்சிறப்புடைய இத்தொடருக் குப் பரிமேலழகர், 'தன்னுள்ளே வெறுத்துப் பின் அவ னோடு ஊடிவிடும்' என்று எழுதிய உரை மேற்கண்ட சிக் கலைத் தீர்த்து விளக்கம் தருவதாயிற்று.[15] எஞ்சிய சிறிது

ஐயப்பாட்டையும் முற்றிலும் விலக்கியது தொல்காப்பியப் பேராசிரியர் உரைவிளக்கம்.

> ''புலவி என்பது புணர்ச்சியான் வந்த மகிழ்ச்சி குறை படாமற் காலங்கருதிக் கொண்டுய்ப்பதோர் உள்ள நிகழ்ச்சி. ஊடலென்பது உள்ளத்து நிகழ்ந்ததனைக் குறிப்பு மொழியானன்றிக் கூற்றுமொழியானுரைப்பது. புலவிக் காயின் உணர்த்தல் வேண்டா. அது குளிர்ப்பக் கூறலுந் தளிர்ப்ப முயங்கலும் முதலியவற்றான் நீங்கு தலின்... அவ்வூடலிற் பிறந்த துனியும் பிரிவின்பாற் படும்''[16]

என்பதே அவ்விளக்கம். பொன்னை உரைகல்லில் பன் முறை அழுந்த உரைத்தாலன்றிப் போலிக்கும் உண்மைக்கு முள்ள மாற்றை அறியமுடியாது. அதுபோல இம்முச்சொல் குறித்துச் சங்க இலக்கியத்துள் வரும் வழக்காறுகள், சங்கம் மருவிய நூல்களில் வரும் வழக்காறுகள் ஆகியவற்றை ஒப்ப நோக்கி ஆய்ந்த பிறகே தெளிவு, முழுத்தெளிவாகி அறுதி யான முடிவு ஏற்பட்டது. அதன்படி, புலத்தலவது மனத்தள வில் வெறுத்தல்; மனத்தின்கண் நின்ற வெறுப்பை மெய்ப் பாட்டானும் சொல்லானும் வெளிப்படக் காட்டல் ஊடல்; அதன் முதிர்ச்சியே துனி ஆகும். முன்னது இரண்டும் இன்ப முதிர்ச்சிக்குத் தேவை. மூன்றாவது, இன்பக் கேட்டிற்குக் காரணமாதலின் வேண்டத் தகாதது. இவ்வாறு தெளிவு கண்ட பின்னும் இத்தெளிபொருளைக் குழப்புவது போல ஒரு குறள் அமைந்து விளங்குகின்றது.

> ''உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
> மிக்கற்றால் நீள விடல்''[17]

என்னும் இக்குறளுக்கு மேலோட்டமாகப் பொருள் காணின் புலவியை நீளவிடக் கூடாது என்றமையால், ஊடல் புலவி துனி என்ற முறைவைப்பே தக்கது என்பது போலத் தெரி யும். ஆழ்ந்த உரை காணின் அக்கருத்திலுள்ள பிழைபாடு புலனாகும். சுவை கருதி, உணவுப் பொருளின் அளவுக்குத் தக உப்பை அதிகரிப்பது இயல்பே. அதன் அளவுக்கு மிகுதி யாகக் கூட்டும்போது தான், சுவை தர வேண்டிய உப்பு,

சுவை கேட்டிற்குக் காரணமாகும் என்பது போதரும். அது போலக் காதலர் எந்த அளவுக்கு இன்பத்தைத் துய்க்க விரும்புகின்றனரோ, அந்த அளவுக்குப் புலவியை நீட்டலாம். அளவு மிகுதல் என்பது ஈண்டு ஊடலின் எல்லை கடந்து துனி ஆவதாகும். எனவே, புலவி, ஊடல், துனி என்ற முறைவைப்பே ஏற்புடைத்து.

இவ்வாறு ஊடலின் நுட்பமான வேறுபாடுகளை நுனித்து நோக்கும் பண்பு காலப்போக்கில் மறைந்த நிலையிலேயே நம்பியகப்பொருள், ''உணர்த்த உணரும் ஊடல்'', ''உணர்ந்த உணரா ஊடல்'' என்ற இரு பிரிவுகளை மட்டுமே சுட்டிச் செல்கிறது.[18]

உரிப்பொருள் வரையறை: பண்பாட்டுச் சிக்கல்

வரம்பிகா ஊடலே மருதத்திணைக்குரியது. வரம்பிகந்த புறத்தொழுக்கால் விளையும் ஊடல் பெருந்திணையே. தலைவிக்கு ஏற்படுவதே மருத ஊடல்; பரத்தையர்க்கு ஏற்படுவன மருத ஊடலாகா. அவரும் மகளிர்தானே, ஊடல் அம்மகளிர்க்கும் இயல்புதானே எனும் ஐயம் எழலாம். அவரும் மகளிர்தான்; கூடி மகிழும் ஆற்றலர்தான். எனினும் அப்பொழுது மகளிரின் கூட்டத்தைக் குறிஞ்சி எனாமை நோக்குக. எனவே, பரத்தையர்க்கு ஊடல் ஏற்படுவது உண்டெனினும், அஃது அன்பின் ஐந்திணையுள் ஒன்றான மருதத்துப் பாடுபொருளுக்கு மரபாகாது என விடுத்தலே ஏற்புடைத்து.

''எம்நலம் தந்து செல்க'' என்று பரத்தை ஊடல் கொள்வதாகவும்,[19] 'கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடிப் பாவைத் தலைவன்'' என்று பரத்தை தலைவியின் பாங்காயினார் கேட்பத் தலைவனை இயற்பழிப்பதாகவும்,[20] 'என் அழகாலும் ஒப்பனையாலும் தலைவனைக் கவர்ந்து புதுப்புனல் ஆடுகிறேன். இது பொறுக்கவில்லையெனில் தலைவி தன் சுற்றத்தாரோடு வந்து, முடிந்தால் அவனைத் தலைவனாக ஆக்கிக் கொள்க'' என்று அறைகூவல் விடுவது

போன்றும்[21] அமைந்த பாடல்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன. தலைவனுக்குப் பரத்தையரிடம் மகன் பிறந்தான் என்பதும் அம்மகனும் ஊடல் தீர்க்கும் வாயிலானான் என் பதும் இக்காலச் சுவைமிகு புதினமாகலாமேயொழிய இவை யாவும் திட்பநுட்பம் செறிந்த வரையறையுடைய ஐந்திணை மருதமாகாது என விடுக்க.

உடன்போக்கின்கண் காட்டு வழியில் விலங்குக் கோட் பட்ட தலைவன் — தலைவியரைப் பாடா அகத்திணை நெறி யருமை எண்ணுக. அதுபோன்றே, பொதுமகளிர் கூட்டத் தால் பெற்ற இன்பத்தைக் குறிஞ்சி என்னாமை போல, காமக்கிழத்தி, காதற்பரத்தை, சேரிப்பரத்தை, ஆயமகளிர் ஆகியோர்தம் ஊடலால் ஏற்படும் உணர்வுகளை 'மருதஉரி' என்னாமையே வரம்பிகவா நெறிகாத்த மாட்சிமையது என்பது போதரும்.

அன்பின் ஐந்திணைப் பாடல்கள் நயத்தக்க நாகரிக முடையவை. தலைவனின் ஒழுக்கை ஐயுறும் தலைவிபோலத் தலைவியின் ஒழுக்கத்தைத் தலைவன் ஐயுறுவதாகவோ, தோழிக்கும் தலைவனுக்கும் உறவிருப்பதாகத் தலைவி ஐயுற்ற தாகவோ அமையும் மரபு மீறல்களுக்குச் சங்க அகத்திணை யில் இடமேயில்லை. அவ்வாறே மருதப் பாடல்களில் தலைவி பொதுமகளிரை 'எங்கையர்' என உறவு முறையில் சுட்டு வதும், தலைவன் மகனைப் பரத்தை, தன் மகனாகவே கருதி உச்சி மோந்து மார்போடணைத்து மகிழ்வதும் ஆக வரும் பாடல்,கள் யாவும் சங்க காலத்துள்ளும் பிற்கால வழக்கின; நாடக வழக்கின. அகத்திணை நெறிக்கு முரணாக எழுதப் பட்டவை என்க.

தாய்மொழியும் தன் பெண்டுபிள்ளைகளுமே தனியுரி மைக்கு உரியர். இதனை இலக்கணிகள் உடைமைப் பொருள் என்பர். பிறவெல்லாம் உடைமைப் பொருள் ஆகா. மொழியை எப்படித் தனியுடைமையாகக் கூறலாம் என்ற ஐயம் ஈண்டு எழுதல் இயல்பே. 'தண்டமிழ் பொது எனப் பொறாஅன்' என்று பாண்டியன் கூற்றாக வரும் சங்கத் தொடரை நினைமின்[22] எனின், இன்று தமிழைப் பொதுத்

தமிழ், சிறப்புத்தமிழ் என்று பிரித்துள்ளது ஏற்குமா என்ற வினாவிற்குத் தமிழ்கூறு நல்லுலகமே விடையிறுக்க வேண்டும். எனவே, பரத்தையர் தனியுடைமைக்குரியரல்லர். அவர்களைப் 'பொதுமகளிர்' என்று குறிப்பிடும் வழக்காறு, அவர்கள் பொதுவுக்கே உரியர் என்பதை வலியுறுத்தும். பொதுவுக்கு உரியோரின் இன்ப நுகர்ச்சியோ ஊடலோ அன்பின் ஐந்திணை ஆகாது. தலைவன்-தலைவியாகிய ஒருவன் ஒருத்திக்கு இடைப்பட்ட கூடலும் பிரிவும் முதலான உணர்வுகளே ஐந்திணைக்குரிய உரிப்பொருள்கள்.

அகத்திணையாய்வு என்பது கத்திமீது நடப்பதைப் போன்ற தன்மையது. கத்தியில் சிறிது பிசகினும் காயம்படும்; குருதி வெளிப்படும்; காலுக்கே ஊறு நேரவும் கூடும். அதுபோல அகத்திணை நெறி வழுவின் புலவோர்தம் அருநெறி உணராப் பழிப்புக்கிடனாம்.

''தலைவன் அறியாப் பருவத்தனாய் இருக்கும் காலத்திலேயே இவன் விளையாடும் யானை குதிரை இவையிவை, அவ்வாறே இவனுக்குப் பின்னாளில் உரிமையாதற்குரியவர் இப்பொதுமகளிர் எனத் தந்தையே அவ்வண்ண மகளிரைத் தேர்ந்து இவனுக்கென வளர்த்தனர்''[23] என்றவாறு இறையனார் அகப்பொருளுரை குறிப்பிடும் காரணமெல்லாம் திணை நெறியாகா; வினை நெறி என்க. அவை, பண்பாட்டுப் போக்கின ஆகா, பண்பாட்டு நோக்கின்வே; நன்குப் பூத்துக் காய்த்துக் கனிந்த தமிழ்ப்பண்பாட்டு மரத்தில் விழுந்த கல்லெறிகளே; தூய தமிழ்மரபுக் கண்ணாடியில் விழுந்த கீறல்களே; அகத்திணை மாட்சிமை கெடப் பின்னாளில் எழுதப்பெற்ற அவல உரை விளக்கங்களே; அவை தமிழ் மரபுக்கு உரிய நல்நெறியாகா; அல்நெறி, அயல்நெறி என ஒதுக்குக. அப்போதுதான் பண்பாட்டுச் சிக்கல் தீரும்.

அண்ணன் மனைவியைத் தம்பி கூடி இன்புறுவதாகவும், மீதூர்ந்த இன்ப நாட்டத்தால் மருமகளை மாமனே வலுக்கட்டாயப்படுத்தியதாகவும் நாளும் வரும் நாளேட்டுச் செய்திகள் நாட்டு நடப்பாகலாம். ஆனால் அவை அகத்திணைப்

பாடுபொருளாகா என்ற நுட்பம் அறிந்து ஆய்தலே திணை யாய்வுச் சிறப்பாகும். சுவை கருதிப் புலவன், நெறியல்லாத புதுமரபு புகுத்தினும், உரையாளர் அதற்கு ஏற்ப அமைதி கூறினும் அவையெல்லாம் கரணம் தப்பினால் மரணம் என் றாங்குத் திணை மரபு பிழைத்த வினைமரபினவே எனக் கொள்க.

சங்க இலக்கிய மருதப் பாக்களுள், பரத்தமை காரண மாக ஏற்பட்ட ஊடலைப் பாடுவனவே மிகுதி என்பதால், அக்கால மருதத் தலைவருள் பெரும்பாலோர் ஒழுக்கக் கேடர் என்ற முடிவுக்கு வந்துவிடுதல் கூடாது. தலைமக்க ளுள் சிலர் மீதூர்ந்த காமத்தராக இருந்திருக்கக்கூடும். இருப் பினும் தலைமக்களல்லாத 'ஏவல் கூவல்' வினைஞரிடையே, ஒருவன் தன் உணர்ச்சியைத் தன் மனைவியளவில் நிறுத் தாது அவ்வெல்லை கடந்து பிறரிடத்தும் செலுத்துவதாகிய வழக்கம் அன்றுமுதல் இன்றுவரை இருந்து வருதல் கண் கூடு. அவர்கள் ஒழுக்க வரையறையை உயிரெனப் போற்று மளவுக்குப் பெரிதாகக் கருதுவதில்லை. இத்தகையோரைக் கருத்தில் கொண்டு எழுதப்பெற்றனவே மருதக்கலியுள் மிகுதியான பாடல்கள். அவற்றைக் கொண்டு, நேரிய மருதத் தலைவர்களுக்கு நெறிப் பிறழ்ச்சிப் பட்டத்தைத் தருதல் சாலாது.

முடிவாக, தலைவன் தலைவரிடையேயான தூய ஊட லைக் குறிக்கும் பாடல்களே ஐந்திணை சார்ந்த மருதத்துக் குரிய; பரத்தமை காரணமாக ஏற்படும் ஊடலைக் காட்டும் பாக்கள் யாவும் ஐந்திணையாகா; அகத்திணையுள் ஒன் றாகிய பெருந்திணைப் பாற்படுத்துவதே நெறியாகும். இந் நுட்பம் கருதியே 'மிக்க காமத்து மிகல்' என்பதை ஒல்காப் புகழ்த் தொல்காப்பியர் பெருந்திணைக்கண் வைத்தார். இக் கருத்தினடிப்படையில் நோக்கும்போது, சங்க இலக்கியத் துள், "தலைமகன் மனைக்கண் வருங்காலத்து, வாராது காலந்தாழ்ந்தவிடத்து, 'புறத்தொழுக்கம் உளதாயிற்று' எனத் தலைவி கருதுவது"[24] போன்ற தூய ஊடல் அடிப்படையில் அமைந்த பாடல்களே மருதத்திணை சார்ந்தன. வெளிப்

படையாகப் பரத்தையரைத் தலைவன் ஏறி ஊர்ந்துவந்த காமக்குதிரையாக்கித் தலைவி கூறுவது[25] போல வரும் பரத்தமை ஊடற் பாடல்கள் யாவற்றையும் பெருந்திணை யின் பாற்படுத்துவதே அகத்திணை மரபு பிறழா மாட்சிமை என்க.

இதுகாறும் கண்டவற்றால் சிக்கல் நிறைந்ததே வாழ்வு. வாழ்வு குறித்து வரையப்பட்ட இலக்கியத்துள் இடம்பெற் றுள்ள சிக்கல்களை வகை தொகை செய்து அவற்றைத் தீர்க்கும் நெறிமுறை காண்டலே ஆய்வாகும். இப்பொது நிலை மருதத்திணை ஆய்வுக்குப் புறம்பானதன்று. மருதத் திணை ஆய்வுள், திணைப் பெயரீடு, உரிப்பொருட் பொருத்தம், மருதப் பிரிவின் வேறுபாட்டியல்பு, பாடல் எண்ணிக்கை வரையறை, ஊடலின் மூவகை நிலை, பண் பாட்டுச் சிக்கல் என இன்னோரன்ன பல சிக்கல்களை எண்ணிக்கையிலும் விளக்கத்திலும் நேர அளவு கருதி இவ் வுரைக்கண் சுருங்கக் கண்டோம். அகத்திணை மரபை ஓர்ந்து, அதனுள் ஐந்திணை அமைப்பின் நுட்பம் உணர்ந்து ஆய்ந்து சிக்கல் தீர்ப்பதே திணையாய்வின் பண்பும் பயனும் ஆம்.

குறிப்புகள்

1. திருப்புகழ், பா. 136 : 4.
2. திருஞானசம்பந்தர் தேவாரம், பா. 3 : 54 : 5, அடி 1-2.
3. பதார்த்த குண விளக்கம், பக். 580-581.
4. குறுந்தொகை, பா. 231.
5. டாக்டர் தி. லீலாவதி, ''குறுந்தொகை ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள்'' (கட்டுரை), ப. 5.
6. தொல்காப்பியம், நூற்பா. 949.
7. மேற்படி, நூற்பா, 965.

8. குறுந்தொகை, பா. 157.
9. மேற்படி, பா. 107.
10. Dr. V.T. Manickam, 'Marutam An Aspect of Love in Tamil Literature', p. 10.
11. அகநானூறு, பா. 306 : 14.
12. தொல்காப்பியம், நூற்பா. 1102.
13. கலித்தொகை, பா. 67 : 8, 12, 16.
14. திருக்குறள், 1039.
15. மேற்படி மூலமும் பரிமேலழகர் உரையும், ப. 360.
16. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்பா. 449, பேராசிரியர் உரை, ப. 398.
17. திருக்குறள், 1302.
18. நம்பியகப்பொருள், நூற்பா, 205 : 7
19. அகநானூறு, பா. 396 : 19.
20. குறுந்தொகை, பா. 8.
21. மேற்படி, பா. 80.
22. புறநானூறு, பா. 51 : 5.
23. இறையனார் அகப்பொருள், சூ. 40, ப. 173.
24. ஐங்குறுநூறு, பா. 27.
25. கலித்தொகை, பா. 96 : 18.

பயன்பட்ட நூல்கள்

அ. இலக்கியம்

1. அகநானூறு, எஸ். இராஜம் (வெளி.), மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, 1958.
2. அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரலங்காரம், கந்த ரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, திருப்புகழ் முதலிய அருள் நூல்கள், சைவ சித்தாந்த மகாசமாஜம், சென்னை, முதற்பதிப்பு, 1935.
3. ஐங்குறுநூறு, எஸ். இராஜம் (வெளி.), மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, 1957.

4. கலித்தொகை, எஸ். இராஜம் (வெளி.), மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, 1957.

5. குறுந்தொகை, எஸ். இராஜம் (வெளி.), மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, 1957.

6. திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், கழக வெளியீடு, பதினேழாம் பதிப்பு, 1979.

7. பதார்த்தகுண விளக்கம், சி. கண்ணுசாமிப் பிள்ளை, பி. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ், சென்னை, பதிப்பு, ஆண்டு இல்லை.

8. புறநானூறு, எஸ். இராஜம் (வெளி.), மர்ரே அண்டு கம்பெனி, சென்னை, முதற்பதிப்பு, 1958.

ஆ. இலக்கணம்

1. இறையனார் அகப்பொருள், நக்கீரனார், கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1960.

2. தொல்காப்பியம் பொருளதிகாரம், பேராசிரியர் உரை, கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1959.

3. தொல்காப்பியம் மூலம், கழக வெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1967.

4. நாற்கவிராச நம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், கோவிந்தராச முதலியார், (ப.ஆ.), கழக வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1966.

இ. நூல் & கட்டுரை

1. Manickam, Dr., V.T., Marutam An Aspect of Love in Tamil Literature, TEMA Publishers, Karaikudi, First Edition, 1982.

2. லீலாவதி, டாக்டர். தி., ''குறுந்தொகை ஆராய்ச்சியில் எழும் சிக்கல்கள்'', தமிழ் ஆராய்ச்சிச் சிக்கல்கள், கருத்தரங்கத் தொடர் எண் — 5, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, நாள்: 10.8.1988.

புதிய வெளியீடுகள்

Mysticism of Love in Saiva Tirumurais — Dr. V. C. Sasivalli	...	50.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-2 — முனைவர் அன்னி தாமசு	...	30.00
தொல்காப்பியம்-பொருள்-களவியல் — பேரா. சிவலிங்கனார்	...	85.00
The Contributions of the Tamils to Indian Culture		
Vol. I Language and Literature — Dr. K. Subbiah Pillai	...	18.00
Vol. II Art and Architecture — Dr. K. Bhagavathi	...	30.00
Vol. III Socio Cultural Aspects — Dr. M. Valarmathi	...	90.00
Vol. IV Religion and Philosophy — Dr. V. C. Sasivalli	...	80.00
எண்பத்து மூன்றில் தமிழ் பகுதி-I — முனைவர் அன்னி தாமசு	...	47.00
சிவகிரி குமர சதகம் — திரு. மெய். சந்திரசேகரன்	...	39.00
புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை — திரு. மொ. மருதமுத்து	...	27.00
தேரையர் அந்தாதி — மருத்துவர் மா. புனிதா	...	33.00
குசலவர் சுவாமி கதை — செல்வி இரா. வசுமதி	...	36.00
குணவாகடம் — முனைவர் வே. நெடுஞ்செழியன்	...	40.00
தோட்டுக்காரி கதை — முனைவர் வ. அலமேலு	...	28.00
சங்கத்தமிழரின் மனிதநேய மணிநெறிகள் முனைவர் சாலினி இளந்திரையன்	...	24.00
உலகத்தமிழ் மாநாட்டுக் கட்டுரைகள் அடைவு முனைவர் தி. மகாலட்சுமி	...	35.00
Selected Poems of Bharathidasan — Translation:		
Tamil to English — Dr. V. Murugan	...	60.00
Tamil to Malayalam — Dr. P. P. Thambi & D. Ramakrishnan	...	60.00
Tamil to Kannada — Mr. V. Pasumalai Arasu	...	60.00
Tamil to Telugu — Dr. C. R. Sarma	...	60.00
Chieftains of the Sangam Age — Dr. K. D. Thirunavukkarasu	...	20.00
பாரெலாம் பரந்த தமிழர் — உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்	...	25.00
காண்டேகரும் கா. ஸ்ரீ. ஸ்ரீ. யும் — முனைவர் மு. வளர்மதி	...	18.00
A Comparative Study of Tamil and Japanese Dr. Pon. Kothandaraman	...	15.00
தமிழும் பிற துறைகளும் — முனைவர் ந. கடிகாசலம்	...	35.00
பெண்ணியம் — முனைவர் இரா. பிரேமா	...	25.00
விலங்கியலும் தமிழியலும் — முனைவர் ஏ. த. சோதிநாயகம்	...	10.00
தமிழும் தெலுங்கும் — முனைவர் தா. சா. மாணிக்கம்	...	15.00
தமிழ் ஆய்வுக் களங்கள் — முனைவர் ந. கடிகாசலம்	...	70.00
வ.உ.சியும் தமிழும் — முனைவர் அ. சங்கரவள்ளிநாயகம்	...	18.00
தொல்காப்பியத்தில் இசைக்குறிப்புக்கள் முனைவர் வீ. ப. கா. சுந்தரம்	...	14.00
புதுமைப்பித்தன் கதைகளில் சமுதாய விமரிசனம் முனைவர் நா. ஆறுமுகம்	...	20.00
கனகாபிஷேக மாலை — திறனாய்வு — முனைவர் பீ. டாக்டர் நசீம்தீன்	...	16.00
இருபதின் கவிதைகளில் சமூகநீதிக் கோட்பாடு முனைவர் து. சீனிச்சாமி	...	20.00
பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் முனைவர் ச. சிவகாமி	...	60.00
தொல்காப்பியம் — பொருள் — பொருளியல் பேரா. ஆ. சிவலிங்கனார்	...	32.00

விலை ரூ. 85.00